திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டர்
பெரியபுராணம்.

இது

கற்றோரும் மற்றோருமாகிய யாவருக்கும்

எளிதிலே பயன்படும்பொருட்டு,

நல்லூர்

ஆறுமுகநாவலரவர்களால்

கத்திய ரூபமாகச் செய்து,

சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலைத்தருமபரிபாலகர்

விசுவநாதபிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

கசு - ம் பதிப்பு.

அரசியலூ வைகாசிமீ.

(Copyright Registered.)

கணபதி துணை.

விநாயகவணக்கம்.

சீர்பூத்த மறைமுதற்கட் பிரணவத்தி
னரும்பொருளைச் சிவனுர் தந்த
பேர்பூத்த நிருமலசின் மயவடிவை
யானந்தப் பெருக்கை யென்றுங்
கார்பூத்த திருநெடுமா லயன்முதற்புங்
கவர்வணங்கும் கருணை வாழ்வைப்
பார்பூத்த வடியர்வினை கெடுத்தருளுங்
கற்பகத்தைப் பணிந்து வாழ்வாம்.

முகவுரை.

சுத்தசாட்குண்ணிய பரிபூரணராகிய பரமபதி சிவபெரு மானே என்று துணிந்தவர்களாய், கொலை, களவு, கள்ளுணல், புலாலுணல், பிறன்மனைவிழைதல், வரைவின்மகளிர்விழை தல், பொய்ச்சான்றுரைத்தல் முதலிய பாவங்கள் இல்லாதவர் களாய், இரக்கம், வாய்மை, கொடை முதலிய புண்ணியங்களை உடையர்களாய், குருலக்கணங் குறைவற அமைந்த சைவா சாரியரை அடைந்து சிவதீக்ஷை பெற்றுக்கொண்டவர்களாய், விபூதி ருத்திராக்ஷ தாரணம், சந்தியாவந்தனம், ஸ்ரீபஞ்சாக்ஷர ஜபம், சிவத்தியானம், சிவாலயசேவை, சிவலிங்கபூசை, குரு வாக்கியபரிபாலனம், மாகேசுபூசை முதலியனவற்றைச் சிவா கமவிதிப்படி மெய்யன்போடு செய்பவர்களாய் உள்ளவர்களை சைவர்களென்று சொல்லப்படுவார்கள்.

அந்தச்சைவர்கள் ஓதி உணர்தற்கு அத்தியாவசியக மாய் இருக்கும் நூல்கள் தேவாரம், திருவாசகம், திரு

விசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் பெரியபுராணம் என்பவைகளாம். இவைகள், சிவபிரானது திருவருளினாலே பாடப்பட்டமையால், அருட்பாவென்றுசொல்லப்படும். இவைகளுள், முன்னைய நான்கும் பதி பசு பாசமென்னுந் திரிபதார்த்தங்களின் இலக்கணத்தை உணர்த்துஞ் சைவசித்தாந்த சாத்திரத்தின் அனுபவப்பயனுகிய தோத்திரரூபமாய் இருக்கும். பின்னையதாகிய திருத்தொண்டர் பெரியபுராணம் சிவாகமங்களில் உணர்த்தப்படும் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் அநுட்டித்து முத்திபெற்ற மெய்யடியார்களுடைய அடிமைத்திறத்தை விளக்குவதாகிய சரித்திரரூபமாய் இருக்கும். ஆதலாற்றானே, இவைகளைந்தும் சைவத்துக்கும், சிவாலய நித்திய நைமித்திகங்களுக்கும், சிவபூசைக்கும், சிவதரிசனத்துக்கும், மாகேசுரபூசைக்கும் நியமமந்திரங்களாய், அந்தச் சைவர்களுக்கு இன்றியமையாப் பெருஞ் சிறப்பினவாயின.

இவற்றுள், திருத்தொண்டர் பெரியபுராணமானது, தன்னை உணர்ந்தவர்களுக்கன்றி மற்றவர்களுக்குத் தேவாரத்தின் வைலாறும் மகிமையும் ஓரோவிடங்களில் அதன் பொருளும் விளங்குதல் கூடாமையானும், தன்னை அத்தியந்த ஆசையுடன் ஓதுபவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் பத்திவைராக்கிய ஞானங்களைப் பலிப்பிக்குங் கருவியாய் இருத்தலானும், சிவஞானசித்தியார் திருக்களிற்றுப்படியார் முதலாகிய சைவசித்தாந்த நூல்களினும் உரைகளினும் சிவானுபவத்துக்குத் தான் கூறும் நாயன்மார் பலருடைய சரித்திரங்களில் உதாரணங்காட்டுதலானும், சர்வாதிகாரிகளாகிய ஆதிசைவருக்கும் பிறருக்கும் தான் அதிகரித்த தனியடியார் அறுபத்துமூவரும் தொகையடியார் ஒன்பதின்மரும் ஆகிய திருத்தொண்டர் எழுபத்திருவருடைய சரித்திரங்களையும் உணர்ந்து அவர்கள் மகிமையைத் தெளிந்தாலன்றிச் சிவாலயங்களெங்கும் முறையே அவர்களுக்குப் பிரதிட்டை பூசை திருவிழாக்கள் செய்தற்கண்ணும் அவைகளைச் சேவித்தற்கண்ணும் ஊக்கமும் அன்பும் நிகழாமையானும், யாவரும் முன்னர் முக்கியமாகக் கற்று உணரவேண்டும் நூலாம்.

இவ்வகைப்பட்ட பெருஞ்சிறப்பினதாகிய அந்நூலானது, பத்தியரூபமாய் இருத்தலால், நிகண்டு கற்று இலக்கிய வாராய்ச்சி செய்து இலக்கணநூல்களிலே பயின்ற வித்துவான்களுக்கேயன்றி மற்றவர்களுக்குச் சிறிதும் பயன்படாமையாலும், அவ்வித்துவான்களுக்கும் நோய் கவலைமுதலிய ஏதுக்களால் விவேகங்கிளராக்காலத்துப் பயன்படாமையாலும், நிறைந்த கல்வியுடைய வித்துவான்களும் குறைந்த கல்வியுடைய பிறரும் ஆகிய யாவரும் எக்காலத்தும் எளிதில் வாசித்து உணரும்பொருட்டும், கல்வியில்லாத ஆடவர்களும் பெண்களும் பிறரைக்கொண்டு வாசிப்பித்து உணரும்பொருட்டும், நாயினுங் கடையனாகிய என்னை ஒருபொருளெனக் கருதி ஆட்கொண்டருளிய கிருபாசமுத்திரமாகிய ஸ்ரீமத் குருமூர்த்தியுடைய திருவடிகளைச் சிந்தித்துத் துதித்து வணங்கி அவரது திருவருளினாலே, அதனைப் பெரும்பான்மையும் இயற்சொற்களும் சிறுபான்மை ஆவசியகமாகிய திரிசொற்கள் வடசொற்களும் பிரயோகிக்கப்படுங் கத்தியரூபமாகச் செய்து, வாசிப்பவர்களுக்கு எளிதிலே பொருள் விளங்கும்படி பெரும்பான்மையும் சந்திவிகாரங்களின்றி, அச்சிற் பதிப்பித்தேன்.

இப்புராணம் சிவபுராணமாதலால், இதனை ஓதிப் பயன் பெறக் கருதுவோர்கள், சைவாசாரியரை அடைந்து தீக்ஷை பெற்றுக்கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும். சமயப் பிரவேசஞ்செய்யாதவர்களும் தாங்கள் சைவசமயிகள் என்றே திரிகின்றார்கள். ஒருபொருளை நன்றெனக் கருதுகின்றவர்களுக்கு அதனைத் தேடிப் பெற்று அனுபவித்தாலன்றி அதனையுடையவர்களெனப் படுதலும் அதனாற் பெறப்படும் பயனும் இல்லையாம்; அதுபோலவே, சைவசமயத்தை மெய்யென்க் கருதுகின்றவர்களுக்கு, சைவாசாரியரை அடைந்து சமயப்பிரவேசஞ்செய்து அதன்வழி நின்றாலன்றி, அதனையுடையவர்களெனப்படுதலும் அதனாற் பெறப்படும் பயனும் இல்லையாம். இனி, நாஞ் சமயப்பிரவேசஞ் செய்துகொண்டேம் என்று விபூதிதாரணம் அநுட்டானம் பஞ்சாக்ஷரஜபம் சிவாலயசேவை முதலியவை செய்பவர்களுள் அநேகர் மது

மாமிசபக்ஷணஞ்செய்கின்றார்கள். ஆயினும், அவர்கள் விரதம் அநுட்டிக்கும்போதும் யாத்திரைசெய்யும்போதும் சிவபுராணங்களை நியமமாக ஓதல் கேட்டல் செய்யும்போதும் அதனை ஒழித்தலால், அது பெரும்பாதகமென்பது அவர்களுக்கும் ஒத்த துணிவேயாம். அங்ஙனமாக, அதனை எக்காலத்துமன்றே விலக்கல்வேண்டும் எனத் துணிந்து விலக்காதொழிதல் என்ன ஆச்சரியம்! அன்றியும், சகல வேதாகம புராணங்களும் உயர்வொப்பில்லாத சிவமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைப் பேசுதற்கே புகுந்தனவாகும். ஆகவே, அவற்றுள் ஒன்றுகிய சிவபுராணத்தை நியமமாக ஓதல் கேட்டல் செய்யும்போது மதுமாமிசபக்ஷணஞ் செய்தலாகாது என்று துணிந்து விலக்குவோர்கள் அவைகளெல்லாவற்றிலும் பேசப்படும் பெருஞ்சிறப்பினதாகிய அப்பஞ்சாக்ஷரத்தை ஜபிக்குங்காலங்களிலே அம்மதுமாமிச பக்ஷணத்தை விலக்குதல் அத்தியாவசியகம் எனத் துணியவேண்டும் ஆதலாலும், அப்பஞ்சாக்ஷரத்தை ஜபிக்குங்காலம் சமயப்பிரவேசந் தொடங்கித் தேகவியோக பரியந்தம் உள்ள காலமேயாகையாலும், அவர்கள் அப்பாதகத்தை எக்காலத்துஞ் செய்யலாகாது எனத் தெளிந்து விலக்கல்வேண்டும் என்பதே சித்தம். அன்றியும், அவர்கள் விபூதிதாரணம் அநுட்டானம் பஞ்சாக்ஷரஜபம் முதலியனசெய்வது சிவாகமங்கள் விதித்தமையாலன்றே, மதுமாமிச பக்ஷணத்தை விலக்குவனவும் அவைகளன்றே, அவைகளேயென உணர்ந்தும் அது செய்பவர்கள், அக்கூற்றைமாத்திரம் பொருந்தாது எனக் கருதுகின்றார்கள் போலும். அப்படியாயின், அவர்கள் அந்தப் பாதகமட்டோ, அந்தச் சிவாகமங்களை அருளிய முற்றறிவுடைய சிவபெருமானிடத்தே அறியாமை ஏற்றி, எவ்வகைப்பட்ட பிராயச்சித்தங்களாலுந் தீராத சிவநிந்தை சிவாகமநிந்தையாகிய அதிபாதகமும் எய்துவர்கள். அது நிற்க.

சிவபெருமானது மகிமையைப் பேசும் நூல்களுள் யாதொன்றை ஓத விரும்புகின்றவர்கள் சரீரசுத்தி செய்து அநுட்டானம் பண்ணிய பின்னரே சுத்தஸ்தானத்திலே

பீடம் இட்டு, அது எழுதப்பட்ட திருமுறையை அதன் மேல்வைத்து, அதனையும், அதனைப்போதிக்கும் ஆசாரியரையும் அருச்சித்து வணங்கி இருந்து, மனங்கசிந்து உருக மெய்யன்போடு ஓதல்வேண்டும். ஓதும்போது கேட்க விரும்புகின்றவர்களும் அவ்வாறே கேட்டல்வேண்டும். அப்படியே ஓதாதவர்களும் கேளாதவர்களும் அதனாலே பெறப்படும் பயனைப் பெறுர்கள் என்று சிவாகமங்களும் சிவபுராணங்களும் செப்பும். இப்பெரியபுராணமும் அந்நூல்களுள் ஒன்று ஆதலால், இதனையும் அவ்விதிப்படியே ஓதல் கேட்டல் செய்ய வேண்டும்.

கிருபாசமுத்திரமாகிய பரமசிவனைத் தியானித்துத் தோத்திரம்பண்ணி மனங்கசிந்து உருக உரோமஞ்சிலிர்ப்ப ஆனந்தவருவி சொரிய இந்தப் பெரியபுராணத்தை அத்தியந்த ஆசையுடன் ஓதுகின்றவர்களும் கேட்கின்றவர்களும் குரு லிங்க சங்கமபத்தி பிரபஞ்சவைராக்கியம் சிவஞானம் என்பவைகளைப் பெறுமாறு அறிந்து பெற்று, முத்தியை அடைவர்கள்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

நேரிசையாசிரியப்பா.

உலக மனைத்திலு முலப்பிலா தோங்கி
யிலகுபே ரொளியா யெகனுய்ச் சிவனு
யனுதி முத்தனு யதிபர மாத்தனுய்த்
தனுதி சத்தியாந் தனிவடி வினனுய்த்
திருவளர் தில்லைச் சிற்றம் பலத்திலுட்
பொருவிலா நிருத்தம் புரிந்துநின் மிருளிரு
முயர்சபா நாயக னுலகெலா மென்றெடுத்
தியலுலா மடியுரைத் தினிதருள் பூப்பச்
சிறந்தகுன் றத்தூர்ச் சேக்கிழான் மரபிற்
பிறந்தரு ளருண்மொழித் தேவனும் பெயரின
னருந்தனி யடியா ரறுபதின் மூவரும்
வருந்தொகை யடியார் மறுவிலொன் பதின்மரு
மெனப்படும் பரிசுடை யெழுபத் திருவர்த
மனப்படி மடிமை வளத்திற மதனைத்
தத்திடுந் திரைக்கடற் றண்டமிழ் நாட்டோர்
பத்திவை ராக்கியம் பழுதிலா ஞானம்
பெற்றிட விரித்துப் பிடுறப் பாடிய
பொற்புடைப் பெரிய புராணமாம் பெயர்பெறுந்
துகளறு நற்நிருத் தொண்டர் புராண
மிகலறு மிலக்கண விலக்கியப் பயிற்சியின்
வல்லோர்க் கல்லது மற்றையோ ருணர்ந்திட
வொல்லா தன்றியு முரைத்தவல் லோர்க்கு
மிடர்நோய் முதலிய வேதுவான் விவேகம்
படர்தலில் லாவழிப் பயன்படா தாதலி
னெல்லார் தமக்கு மெக்கா லத்திலு
நல்லுப யோகமா நலந்தரற் பொருட்டுத்
திப்பிய மாகுமத் திருப்புரா ணத்தைத்
தப்பிலா யுத்திகள் சால்புற வேற்றியும்
வைத்திடும் பினைத்துரை வகைபல மாற்றியுங்.

சிறப்புப்பாயிரம்.

கத்திய ரூபமாக் கருணையி னியற்றிப்
பாவலர் வியப்புற யாவரு நயப்புறப்
பூவுல கணைத்தினும் பொலிந்திட வருளினன்
பேசுதே வாரம் பெறுசிவத் தலங்களு
ளாசுதீர் திருக்கோ ணாசலங் கதிதரு
மிசைமலி திருக்கே தீச்சர மிரண்டையும்
வசையறத் தன்வயின் வைத்துமெய்ப் புகழ்பெறு
மீழமண் டலத்தினு ளினிதுறீ இ விளங்கித்
தாழ்விலா தோங்கித் தமிழ்நாட் டகத்தோர்
தன்பா லெங்கணு மன்பால் வசித்திட
வின்பா லுயர்ந்த யாழ்ப்பா ணத்தினிற்
பரம்பர னடியவர் பரம்பரை முறையாற்
பரம்பிவை குதலாற் பல்வளம் பல்கிய
நலம்பொலி பெருந்திரு நல்லூமா நகரினன்
குலம்பொலி கந்தவேள் குமாரனு யுதித்தோன்
வடமொழி யதனின் மாட்பெரும் பவுட்கரந்
திடமுற விளங்குஞ் சிவஞான போத
மாதியா கமங்களுக் ககல்வியாக் கியானமுந்
தீதிலா வுறுதிச் சித்தாந்த சிகாமணி
பிரமாண தீபிகை பிராசாத தீபிகை
யுரனுறு நற்சிவ யோகசா ரம்முதற்
பல்பெருங் கிரந்தமும் பரந்தசெந் தமிழி
னல்வரந் தருஞ்சிவ ஞானசித் திக்குச்
சீரணி யுரையுந் தெளிவுற வருளிய
பூரண சிவாது பூதிமா னுகிய
திருநெல் வேலிச் சீரு ருடையனும்
பெருமைசேர் ஞானப் பிரகாச முனிவரன்
வந்தவ தரித்த சுந்தர மரபினன்
பந்தம தகற்றும் பல்பெருந் தவத்தின
னீதியிற் பெருகிய மேதகு நிதியினன்
கோதிலாக் குசைநகர்க் கூர்மைகொண் மதியினன்
சுருக்கமி லிலக்கணத் தொகைபல விலக்கியந்
தருக்கவே தாந்தப் பெருக்கமுற் றுணர்ந்தோன்
வாதிக ளேங்கி வாய்புதைத் தோட

மேதினி யெங்கணும் வியன்புகழ் படைத்தோன்
வயம்பெறு வண்மையன் வரகுண மேரு
சயம்பெறு சைவ சபைக்குய ரதிபதி
சிவனே யாமெனச் சிவனடி யவரைப்
புவனியிற் பரிவொடும் போற்றிவாழ் புனித
னக்குமா மணிமீ றணிதிரு மேனியன்
மிக்குயர் செந்தமிழ் வேதபா ராயணன்
மேலா கியதனி விசேடச் சுருதியா
மூலா கமங்களின் முப்பொரு ளருளினல்
யுத்தியி னமைத்துணர்ந் துபரனு பூதி
சித்திபெற் றோங்கிய வித்தக சிரோமணி
யவமுறு பரமத வந்தகா ரங்கெடச்
சிவமத கமலந் திகழ்த்திடுந் திவாகரன்
மெழுதுடல் கம்பித் தழுது தொழும்புசெய்
பழுதின்மா ணாக்கர் பாங்குறச் சூழச்
சொல்வளச் சுவையாற் சுருதிகட் கினிதா
யல்கலில் லாத வரும்பொருள் வளத்தாற்
சிந்தையாஞ் செய்யுறீ இச் சிவப்பயிர் வளர்க்கு
மந்தமி லின்பத் தமுதமா மழைநிகர்
மெய்யுப தேசம் விளங்கிட விரித்துரை
செய்திடும் படிதர தேசிக சிகாமணி
மறைதிகழ் பிரணவ மன்ன
முறைதிக ழாறு முகநா வலனே.

இச்சிறப்புப்பாயிரம்

ன்னூலகம் சங்கரபண்டிதராற் செய்யப்பட்டது.

கணபதி துணை.

திருத்தொண்டர் திருவந்தாதி செய்தருளிய

நம்பியாண்டார் நம்பி சரித்திரம்.

புண்ணியபூமியாகிய பரதகண்டத்திலுள்ள பலநாடுகளுள், வடக்கின்கண் அகத்தியமகாமுனிவருக்குத் தமிழறிவுறுத்திய பரமாசாரியராகிய முருகக்கடவுளுடைய வரைப்பாகிய திருவேங்கடமும், மற்றை மூன்று திசைக்கண்ணுங் கடலும் எல்லையாகவுடைய தமிழ்நாட்டின் கண்ணே சிறந்து விளங்காநின்ற சோழமண்டலத்திலே, பிறக்க முத்திதருந் தலமாகிய திருவாரூரிலே, கல்வியறிவொழுக்கங்களாலும் குரு லிங்க சங்கமபத்தியாலும் சிறப்புற்றோங்கிய அபயகுலசேகர சோழமகாராஜாவானவர் பரமகருணாநிதியாகிய தியாகேசருடைய திருவருளினாலே வைதிகமார்க்கமுஞ் சைவமார்க்கமும் தழைத்தோங்கச் செங்கோல் நடாத்தி அரசியற்றுவாராயினர்.

அவ்வரசர் தமதவைக்களத்துக்கு எழுந்தருளிவருஞ் சிவனடியார்கள் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருநாவுக்கரசுநாயனார் சுந்தரமூர்த்திநாயனார் என்னுஞ் சமயகுரவர்கள் அருளிச்செய்த தேவாரத்திருப்பதிகங்களுள் ஒன்றொன்று ஓதக்கேட்டு, கைகளிரண்டுஞ் சிரசின்மேலேறிக் குவிய, ஆனந்தவருவி சொரிய, மெய்ம்மயிர் சிலிர்ப்ப, நெஞ்சநெக்குருக ஆனந்தபரவசராயினர். அவ்வியல்படைந்த அரசர் தேவாரத்திருமுறையை எங்குந்தேடி, அகப்படாமையால் மனத்துயரங்கொண்டிருந்தனர். அது நிற்க.

திருநாரையூரென்னுந் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையாருக்குப் பூசைசெய்யும் ஆதிசைவரொருவருக்குச் சைவசமயம் வாழும்பொருட்டு ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ் செய்தருளினர். அவர் உரிய பருவத்திலே உபாயனஞ்செய்யப்பெற்று வேதமுதலிய கலைகளை ஓதுநாளிலே, தந்தையார் ஓரூருக்குப் போய்விட, அவருடைய ஆஞ்ஞைப்படியே பொல்லாப்பிள்ளையாருக்குத் திருமஞ்சனமுதலியனவெல்லாஞ்செய்து, நைவேத்தியத்தை அவர் திருமுன் வைத்து, "எம்பெருமானே, திருவமுது செய்தருளும்" என்று பிரார்த்தித்தார். பொல்லாப்பிள்ளையார் திருவமுது செய்யாதிருப்பக் கண்டு, அப்புத்திரர் மனம் வெம்பி, "எம்பெருமானே, அடியேன் யாதாயினுந் தவறு செய்ததுண்டோ? அடியேன் நிவேதித்ததைத் திருவமுதுசெய்யாததென்னை" என்று சொல்லிக்கொண்டு, தமது தலையைக் கல்லிலே மோதப் புகுந்தார்.

உடனே பொல்லாப்பிள்ளையார் ''நம்பி போறு'' என்று தடுத்து, அர்ஜுனவேத்தியமுழுதையும் திருவமுதுசெய்தருளினர்.

அது கண்ட நம்பியாண்டார்நம்பி மனமகிழ்ந்து, ''எம்பெருமானே, இனி அடியேன் பள்ளிக்கூடத்துக்குப் போனால் ஆசிரியர் அடிப்பார். ஆதலால் வேதமுதலிய கலைகளெல்லாவற்றையும் தேவரீரே ஓதுவித்தல்வேண்டும்'' என்று பிரார்த்தித்தார். பொல்லாப்பிள்ளையார் திருவுளமிசைந்து ஓதுவிக்க, நம்பியாண்டார் நம்பி மனமகிழ்ந்து நாடோறும் ஓதுவாராகி, அப்பிள்ளையார் மேலே திருவிரட்டைமணிமாலை பாடியருளினர்.

இந்தச் சமாசார முழுதையும் அபயகுலசேகர சோழமகாராஜாவானவர் கேள்வியுற்று மனமகிழ்ந்து, பொல்லாப்பிள்ளையாருக்கு நிவேதிப்பிக்கும்பொருட்டுப் பழவர்க்கங்கள் தேன் அவல் எள்ளுண்டை முதலியவைகளெல்லாம் எடுப்பித்துக்கொண்டு, நால்வகைச் சேனைகளுஞ்சூழச் சென்று, திருநாரையூரையடைந்து, நம்பியாண்டார்நம்பியுடைய திருவடிகளை வணங்கி, ''சுவாமீ, இவைகளெல்லாவற்றையும் பொல்லாப் பிள்ளையாருக்கு இப்பொழுதே நிவேதித்தல்வேண்டும்'' என்று பிரார்த்தித்தார். நம்பியாண்டார் நம்பி பொல்லாப்பிள்ளையாரை வணங்கி, அவைகளெல்லாவற்றையும் நாற்சுத்திசெய்து படைக்க, பொல்லாப்பிள்ளையார் தமது திருக்கையை நீட்டி, அவைகளெல்லாவற்றையுந் திருவமுதுசெய்தருளினர்.

அது கண்ட சோழமகாராஜா மனமகிழ்ந்து நம்பியாண்டார் நம்பியை வணங்கி, ''சுவாமீ, சமயகுரவர் மூவர்கள் அருளிச்செய்த தமிழ்வேதமாகிய தேவாரத்திருமுறையும் திருத்தொண்டர்களுடைய சரித்திரமும் பூவுலகத்தில் விளங்கல்வேண்டும்'' என்று விண்ணப்பஞ்செய்தார். அது கேட்டலும், நம்பியாண்டார் நம்பி திருவுளமகிழ்ந்து, திருக்கோயிலினுள்ளே புகுந்து, பொல்லாப்பிள்ளையாரை வணங்கி, ''எம்பெருமானே, தேவாரத்திருமுறைகள் இருக்குமிடத்தையும் திருத்தொண்டர்களுடையசரித்திரத்தையும் அடியேனுக்கு அருளிச்செய்தல்வேண்டும்'' என்று பிரார்த்தித்தார். பொல்லாப்பிள்ளையார் ''நம்பீ, சிதம்பரத்திலே சனகசபைக்குப் புறக்கடையின் பக்கத்திலே சமயகுரவர்கள் மூவருடைய கைகளின் அடையாளத்தையுடைய அறையினுள்ளே தேவாரத் திருமுறைகள் இருக்கின்றன'' என்று அருளிச்செய்து, பின்பு திருத்தொண்டர்களுடைய சரித்திரத்தையும் திருவாய்மலர்ந்தருளினர். நம்பியாண்டார்நம்பி சோழராஜாவிடத்துக்கு வந்து அவைகளைத் தெரிவித்தார்.

சோழராஜா அந்நம்பியாண்டார் நம்பியோடு சிதம்பரத்தை அடைந்து, சிவகங்கையிலே ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனமும் சிவபூசையும் முடித்துக்கொண்டு, கனகசபையை அடைந்து, சபாநாயகரைத் தரிசித்து வணங்கினர். நம்பியாண்டார்நம்பி சபாநாயகர்மீது கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் பாடியருளினர்.

பின்பு சோழமகாராஜா தில்லைவாழந்தணர்களை நோக்கி, "பொல்லாப்பிள்ளையார் கனகசபைக்கு மேற்றிசையினுள்ள அறையிலே தேவாரத்திருமுறைகள் இருக்கின்றன என்று அருளிச்செய்தனர். அவைகளை எடுத்தல்வேண்டும்" என்றார். தில்லைவாழந்தணர்கள் "மகாராஜாவே, திருமுறைகளை வைத்தருளிய சைவத்திருநெறித்தலைவர்கள் மூவர்கள் எழுந்தருளிவந்தால் அறை திறக்கும்" என்றார்கள். சோழராஜா நடேசருக்கு விசேஷபூசை செய்வித்து சமயகுரவர் மூவரைத் திருவீதியிலே திருவுலா வருவித்துக் கனகசபையை வலஞ்செய்வித்துத் திருமுறைகள் இருக்கும் அறையினிடமே கொணர்வித்து நிறுத்திக்கொண்டு, தில்லைவாழந்தணர்களை நோக்கி, "சமயகுரவர்கள் மூவரும் எழுந்தருளிவந்துவிட்டார்கள். இனி அறை திறக்கலாமே" என்றார். தில்லைவாழந்தணர்கள் சோழராஜாவுடைய புத்தியை வியந்து, அறை திறக்க அநுமதி செய்தார்கள்.

சோழமகாராஜா சமயகுரவர் மூவருடைய கையடையாள முடைய திருக்கதவைத் திறந்து திருமுறைகளை வண்மீகமுடியிருக்கக்கண்டு, மனநொந்து, அவைகளைப் புறத்திலே கொணர்வித்து, மேலே படிந்திருந்த மண்ணைத் தள்ளிவிட்டு, செல்லுநியையும்படி எண்ணெயைச்சொரிந்து, திருவேடுகளெல்லாவற்றையும் எடுத்துப் பார்க்க அளவில்லாத திருவேடுகள் பழுதாகக் கண்டு, கண்ணீர்வாரச் சோகித்து நின்றார். அப்பொழுது எல்லாருங் கேட்கச் சிவபெருமானது திருவருளினாலே "தேவாரப்பதிகங்களிலே இக்காலத்துக்கு வேண்டுவனவற்றைமாத்திரம் வைத்துவிட்டு மற்றவைகளைச் செல்லுமண்ணுடச்செய்தோம்" என்று ஓரசரீரிவாக்கு ஆகாயத்திலே தோன்றிற்று. அது கேட்டலும், சோழமகாராஜா மனக்கவலை தீர்ந்து, திருவருளை வியந்து ஆடிப் பாடி, நம்பியாண்டார்நம்பியை வணங்கி, "சுவாமீ, தேவாரமுதலிய அருட்பாக்களெல்லாவற்றையும் திருமுறைகளாக வகுத்தருளும்" என்று பிரார்த்தித்தார்.

நம்பியாண்டார்நம்பி அதற்குடன்பட்டு, திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அருளிச்செய்த தேவாரத்திருப்பதிகங்களை மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசுநாயனர் அருளிச்செய்த தேவாரத்திருப்பதிகங்களை மூன்று திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி

நாயனார் அருளிச்செய்த தேவாரத்திருப்பதிகங்களை ஒருதிருமுறையாகவும் வகுத்தருளினர். இப்படித்தேவாரத்தை ஏழுதிருமுறைகளாக வகுத்தபின்பு, மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம் திருக்கோவையார் என்னுமிரண்டையும் எட்டாந்திருமுறையாகவும், திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், நம்பிகாடவநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதர், புருடோத்தமநம்பி, சேதிராயர் என்னும் நாயன்மார் ஒன்பதின்மர் அருளிச்செய்த திருவிசைப்பாப்பதிகங்கள் இருபத்தெட்டும், அவர்களுள்ளே சேந்தனார் அருளிச்செய்த திருப்பல்லாண்டுப்பதிகம் ஒன்றுமாகிய இருபத்தொன்பது திருப்பதிகங்களையும் ஒன்பதாந்திருமுறையாகவும், திருமூலநாயனார் அருளிச்செய்த திருமந்திரத்தைப் பத்தாந்திருமுறையாகவும், திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரமுதலிய திவ்வியப் பிரபந்தங்களைப் பதினொராந்திருமுறையாகவும் வகுத்தருளினர்.

இங்ஙனந் திருமுறைவகுப்பு முற்றியபின்பு, நம்பியாண்டார் நம்பி தமக்குப் பொல்லாப்பிள்ளையார் உபதேசித்தருளியபடியே திருத்தொண்டத்தொகையை முதனூலாகக் கொண்டு, அறுபத்து மூன்று தனியடியாரும், ஒன்பது திருக்கூட்டத்தாருமாகிய திருத்தொண்டர்களுடைய திருத்தொண்டையும் அதனால் அவர்கள் பெற்ற பேற்றையும் கலித்துறைத் திருவந்தாதியாக அருளிச்செய்தார். பின்பு திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்மீது திருவந்தாதி, திருச்சண்பைவிருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை என்னும் ஆறுபிரபந்தங்களும், திருநாவுக்கரசுநாயனார்மீது திருவேகாதசமாலையும் பாடியருளினர். தாம் அருளிச்செய்த பத்துத் திவ்வியப் பிரபந்தங்களையும் சோழமகாராஜாவுடைய வேண்டுகோளின்படி பதினொராந்திருமுறையிலே சேர்த்தருளினர்.

அதன்பின் நம்பியாண்டார்நம்பியும், சோழமகாராஜாவுந் தேவாரத்திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவு பெருமையிலுலே தில்லைவாழந்தணர்கள் மாகேசுரர்கண்முதலாயினோடும் திருவெருக்கத்தம்புலியூரை அடைந்து, திருக்கோயிலை வலஞ்செய்து சிவபெருமானை வணங்கி, "எம்பெருமானே, தேவாரத்திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவை அருளிச்செய்தல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். அப்பொழுது எல்லாருங்கேட்க ஆகாயத்தில் "அன்பர்களே, நீநீலகண்டப்பெரும்பாணன் மரபிலே பிறந்த பெண்ணொருத்திக்குப் பண்க்களை அருளிச்செய்தேம்" என்று ஓசரீரிவாக்குத் தோன்றிற்று. உடனே நம்பியாண்டார் நம்பியும், சோழமகா

ராஜாவும், அவளை அழைத்து, அவளிடத்தே பண்களைக் கேட்டு மனமகிழ்ந்தார்கள். அதன்பின் "அன்பர்களே, இவளைக் கனகசபைக்குமுன். கொண்டுபோய், தேவாரப்பதிகங்களுக்குப் பண்ணடைவு வகுக்கக்கடவீர்கள்" என்று ஓரச்சீரிவாக்கு எழுந்தது. அது கேட்டலும், நம்பியாண்டார்நம்பியும், சோழமகாராஜாவும் அவ்வாறே அவளை அழைத்துக்கொண்டு சிதம்பரத்தை அடைந்து கனகசபைக்குமுன்சென்று, தேவாரத்திருப்பதிகங்களுக்குப் பண்ணடைவு வகுத்தார்கள்.

பண்ணடைவு வகுத்தபின், சபாநாயகரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, நம்பியாண்டார்நம்பி திருநாரையூரையும், சோழமகாராஜா திருவாரூரையும் அடைந்தார்கள். நம்பியாண்டார்நம்பி சிவாநுபூதிப் பெருஞ்செல்வராய்ச் சிலகாலம் எழுந்தருளியிருந்து சிவபதம் அடைந்தார்.

அபயகுலசேகரசோழமகாராஜாவானவர் பதினெரு திருமுறைகளையும் செப்பேடு செய்து தியாகேசர் சந்நிதியில் ஏற்றுவித்து, சைவத்திருநெறி தழைக்கும்படி நெடுங்காலம் அரசியற்றிக்கொண்டிருந்து, சிவபதமடைந்தார்.

நம்பியாண்டார்நம்பியினாலும், திருமுறைகண்ட இராஜராஜ அபயகுலசேகரசோழமகாராஜாவினாலும் சைவத்திருநெறித் தமிழ்த்திருமுறை பதினெண்டும் தமிழ்நாடெங்கும் பரந்தன. அதனால் உயர்வொப்பில்லாத சற்சமயமாகிய சைவசமயம் எங்கும் தழைத்தோங்கிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஆதியில் உள்ள தேவாரத்திருப்பதிகத் தொகை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்	௧௮ ஆ
திருநாவுக்கரசு நாயனார்	௫௧ ஆ
சுந்தரமூர்த்திநாயனார்	௧௨ அ ஆ
ஆக லக்ஷத்தி ௧௨ ஆ	

இப்போது உள்ள தேவாரத்திருப்பதிகத் தொகை.

	தலப்பதிகம்.	பொதுப்பதிகம்.	இரண்டின்றொகை.
திருஞானசம்பந்தர்.	௧௨எ	எ	௧௨அ
திருநாவுக்கரசுநாயனார்.	௨எ	௧௨	௧௪உ
சுந்தரமூர்த்திநாயனார்.	௪௪	ச	௪00
	எசஅ	சஅ	எ௪

இத்தேவாரத் திருப்பதிகங்கள் எழுநூற்றுத் தொண்ணூற் றேழும் அடங்கிய திருமுறை அடங்கன் முறையெனப்படும்.

கல்வியறிவொழுக்கங்களாற் சிறப்புற்று விளங்கிய சிவாலய முனிவர் அவ்வடங்கன் முறையினது மகிமையையும் அதனை நாடோறும் விதிப்படி சிரத்தையோடு பாராயணஞ்செய்யின் முத்திசித்திக்குமென்பதனையும் அறிந்து தாம் அப்படிப் பாராயணஞ்செய்ய ஆசைகொண்டார். அது நிறைவேறுதல் கூடாமையால் வருத்தமுற்று, சிதம்பரத்தை அடைந்து, கனகசபையின்கண்ணே ஆனந்ததாண்டவஞ் செய்தருளும் சபாநாதரை வணங்கி, தமது கருத்து முற்றும்பொருட்டு நெடுங்காலம் அருந்தவஞ்செய்தார். அப்பொழுது சபாநாதருடைய திருவருளினாலே, "சிவாலயமுனிவனே, நீ போதியமலையிலிருக்கின்ற அகத்தியமுனிவனிடத்தே போவாயாயின் உன்கருத்து நிறைவேறும்" என்று ஓரசரீரிவாக்குத் தோன்றிற்று. அது கேட்ட சிவாலயமுனிவர் மனமகிழ்ந்து, சபாநாதரை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு சென்று, பொதிய மலையை அடைந்து, அகத்தியமகாமுனிவரைச்சந்தித்து, மூன்றுவருஷகாலம் அருந்தவஞ்செய்தார். அகத்தியமகாமுனிவர் அவருக்கு வெளிப்பட்டு, அடங்கன்முறை முழுதையும் அவருக்கு உபதேசித்து, அதினின்றும் இருபத்தைந்து திருப்பதிகங்களை எடுத்துத்திரட்டி, "இவைகளை நாடோறும் பாராயணஞ்செய்பவர்கள் அடங்கன்முறை முழுதையும் பாராயணஞ் செய்பவர்களாவர்கள்" என்று திருவாய்மலர்ந்து, மறைந்தருளினர். சிவாலயமுனிவர் அப்படியே அவ்விருபத்தைந்து திருப்பதிகங்களையும் நெடுங்காலம் பாராயணஞ்செய்து சிவபெருமானுடைய திருவருளைப் பெற்றார்.

திருச்சிற்றம்பலம்.

பதினொராந்திருமுறைப் பிரபந்தங்கள்.

க. திருவாலவாயுடையார்.

க. சேரமான்பெருமாணயனாருக்கு அருளிச்செய்த திருமுகப் பாசுரம்.

உ. காரைக்காலம்மையார்.

க. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இரண்டு.

உ. திருவிரட்டைமணிமாலை.

கூ. அற்புதத்திருவந்தாதி.

கூ. ஐயடிகள் காடவர்கோனயனார்.

க. திருவெண்பா.

ச. சேரமான்பெருமாணாயனார்.

க. பொன்வண்ணத்தந்தாதி.
உ. திருவாரூர்மும்மணிக்கோவை.
ங. திருக்கைலாசஞானவுலா.

ரு. நக்கீரதேவர்.

க. கைலைபாதி காளத்திபாதியந்தாதி.
உ. திருவீங்கோய்மலையெழுபது.
ங. திருவலஞ்சுழிமும்மணிக்கோவை.
ச. திருவெழுகூற்றிருக்கை.
ஞ. பெருந்தேவபாணி.
சு. கோபப்பிரசாதம்.
எ. காரெட்டு.
அ. போற்றித்திருவகவல்.
கூ. திருமுருகாற்றுப்படை.
கo. திருக்கண்ணப்பதேவர் திருமறம்.

கூ. கல்லாடனார்.

க. திருக்கண்ணப்பதேவர் திருமறம்.

எ. கபிலதேவர்.

க. மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை.
உ. சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை.
ங. சிவபெருமான் திருவந்தாதி.

அ. பரணதேவர்.

க. சிவபெருமான் திருவந்தாதி.

கூ. இளம்பெருமானடிகள்.

க. சிவபெருமான் திருமும்மணிக்கோவை.

கo. அதிராவடிகள்.

க. மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை.

கக. பட்டினத்துப்பிள்ளையார்.

க. கோயிலென்மணிமாலை.
உ. திருக்கழுமலமும்மணிக்கோவை.
ங. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.
ச. திருவேகம்பமுடையார் திருவந்தாதி.
ஞ. திருவொற்றியூர்த்தொகை.

கஉ. நம்பியாண்டார்நம்பி.

க. திருநாரையூர்ப்பொல்லாப்பிள்ளையார்திருவிரட்டைமணிமாலை.
உ. கோயிற்பண்ணியர்விருத்தம்.

நூ. திருத்தொண்டர் திருவந்தாதி.
சு. ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி.
டு. ,, திருச்சண்பைவிருத்தம்.
சூ. ,, திருமும்மணிக்கோவை.
எ. ,, திருவுலாமாலை.
அ. ,, திருக்கலம்பகம்.
கூ. ,, திருத்தொகை.
க0. திருநாவுக்கரசுதேவர் திருவேகாதசமாலை.

ஆக பிரபந்தங்கள் - ச0.

பெரியபுராணஞ்செய்தருளிய

சேக்கிழார் நாயனார் சரித்திரம்.

தொண்டைமண்டலத்திலே, குன்றத்தூரிலே, வேளாளவருணத்திலே, சேக்கிழார்மரபிலே, பரமசிவனது திருவருளினாலே, தமிழ்நாட்டில் உள்ளவர்கள் உய்யும்படி, அருண்மொழித்தேவர் பாலராயர் என்னுஞ் சற்புத்திரர் இருவர் சகோதரராய்த் திருவவதாரஞ்செய்தார்கள். அவர்களுள்ளே மூத்தவராகிய அருண்மொழித்தேவர் தாம் உதிக்கப்பெற்ற சேக்கிழார் மரபை விளக்கினமையால், அவருக்குச் சேக்கிழாரென்னும் பெயர் உண்டாயிற்று. அவருடைய கல்வியறிவொழுக்கங்களை அநபாயசோழமகாராஜாவானவர் அறிந்து, அவரைத் தமக்கு முதன்மந்திரியாராக்கி, அவருக்கு உத்தமசோழப்பல்லவனென்னும் பெயரைக் கொடுத்தார். அவர் சோழநாட்டிலுள்ள திருநாகேச்சுரமென்னுஞ் சிவஸ்தலத்தினிடத்தே தமக்கு அன்புமிகுதலால், தம்முடைய குன்றத்தூரிலே ஒரு திருக்கோயில் கட்டுவித்துப் பிரதிட்டைசெய்து, அதற்குத் திருநாகேச்சுரமெனப் பெயரிட்டு, அதிலே நித்திய நைமித்திகங்களை வழுவாது நடத்துவித்துக்கொண்டு, அநபாயசோழமகாராஜாவுடைய அரசுரிமைச் செங்கோலை ஒழுங்குபெறச் செலுத்திவந்தார்.

இப்படியொழுகுநாளிலே சைவசமயிகளிற் சிலர், பாற்கடலுட் பிறந்த மீன்கள் அப்பாலை உண்ணுது வேறுபலவற்றை உண்டல் போல, மெய்ந்நூல்களாகிய தங்கள் சைவநூல்களைக் கல்லாது பரசமயங்களுள் ஒன்றாகிய ஆருகதத்தை அநுட்டிக்குஞ் சமணர்களுடைய காப்பியமாகிய சிவகசிந்தாமணியை மெய்யெனக் கருதிக் கற்று, தங்கள் வாணாளை வீணாளாகக் கழிப்பாராயினர்கள். அநபாயசோழமகாராஜாவும் அந்தச் சிவகசிந்தாமணிக்கதையை

மெய்யென்று கருதி, மனமகிழ்ந்து, பாராட்டிக் கேட்பாராயினர். அதுகண்ட அருண்மொழித்தேவர் இராஜாவை நோக்கி, "மகாராஜாவே, நீர் சைவசமயியாயிருந்தும், இம்மை மறுமை வீடென்னும் மூன்றும் பயக்குஞ் சத்தியமாகிய சிவசரித்திரத்தைக் கேளாமல், நமது மெய்க்கடவுளாகிய சிவபெருமானே நிந்திக்கும் புறச்சமயிகளாகிய சமணர்களுடைய பொய்க்கதையாகிய இந்தச் சீவகசிந்தாமணியை மெய்யெனக்கருதிப் பாராட்டிக் கேட்டு, உமது வாழ்நாளை வீணாளாகக் கழிப்பது தகுதியன்று. இது அதிபாதகமென்றே நிச்சயித்து அறிந்துகொள்ளும்" என்று கண்டிக்க; இராஜாவானவர் மனமகிழ்ந்து, "இது அவகதையாய்ப் பயனற்ற கதையாயின், இம்மை மறுமை வீடு மூன்றும் பயக்கத்தக்க சிவசரித்திரம் யாது? அதன் வரலாறு யாது? ஐயந்திரிபறச் சொல்லும்" என்று கேட்டார். அதற்கு அருண்மொழித்தேவர் "திருவாரூரிலே சுத்தசாட்குண்ணிய பரிபூரணராகிய வன்மீகநாதர், தம்மூடைய திருத்தொண்டர்களது அடிமைத்திறத்தை ஆன்மாக்கள் உய்யும்படி பாடும் பொருட்டு அநுஞ்ஞைசெய்து, 'தில்லைவாழந்தணர்தம் அடியார்க்கு அடியேன்' என்று அடியெடுத்துக் கொடுக்க; பஞ்சபாசத்தை நீங்கிய சமயகுரவருள் ஒருவராகிய சுந்தரமூர்த்திநாயனார் பதினொருதிருப்பாட்டினாலே திருத்தொண்டத்தொகை என்று பெயர் தந்து, ஒரு திருப்பதிகம் பாடியருளினர். அந்தத் திருத்தொண்டத்தொகைக்குத் திருவாரூரிலில் எழுந்தருளியிருக்கும் பொல்லாப்பிள்ளையார் பொருள் சொல்ல, பாலியதசையிலேயே வேதசிவாகமாதி சமஸ்தசாத்திரங்களையும் அவரிடத்திலே ஓதியுணர்ந்த ஆதிசைவராகிய நம்பியாண்டார்நம்பியானவர் அதனை வகுத்துக் கட்டளைக்கலித்துறையினால் ஒரு திருவந்தாதி செய்தருளினர். அதற்கு நம்பியாண்டார்நம்பியந்தாதி என்பது பெயர். அத்திருவந்தாதியைத் திருமுறைகண்டராஜராஜ அபயகுலசேகர சோழமகாராஜா சிவாலயமுனிவர்முதலியபெரியோர்களெல்லாரும் எடுத்து இனிது பாராட்டினர்கள்" என்றார். அது கேட்டு இராஜா "அத்திருவந்தாதியை ஓதிப் பொருள் சொல்லும்" என்று சொல்ல; அருண்மொழித்தேவர் அதனை ஓதி, பொருளை விரித்து உரைத்தார். இராஜா அதைக்கேட்டு, திருத்தொண்டர்களுடைய அடிமைத்திறத்தையும் அவர்களுக்கு அருளிய பரமசிவனது திருவருட்டிறத்தையும் நினைந்துருகி, அருண்மொழித்தேவரைநோக்கி, "இந்தச்சரித்திரத்தை யாவருக்கும் தெளிவாய் விளங்கும்பொருட்டு, இலக்கணவிதிப்படி அமைந்த பெருங்காப்பியமாக விரித்துச் செய்துதாரும்" என்றார்.

அருண்மொழித்தேவர் அவ்வரசரிடத்தில் எண்ணிறந்த திரவியங்களையும் விடையையும் பெற்று, சிதம்பரதலத்தை அடைந்து,

சிவானந்தவடிவாகிய சிவகங்கையிலே ஸ்நானம்பண்ணி, சந்தியா வந்தனமுஞ் சிவபூசையும் முடித்துக்கொண்டு, கனகசபைக்கு முன்சென்று, பஞ்சகிருத்தியகிருத்தஞ் செய்தருளுஞ் சபாநாயகரைத் தரிசித்து, அழலிடைப்பட்ட வெண்ணெய்போல மனங்கசிந்துருகி, இரண்டுகைகளும் சிரசின்மேல் எறிக்குவிய, ஆனந்தவருவி சொரிய, உரோமஞ்சிலிர்ப்ப, கரையற்ற இன்பக்கடலிலே அமிழ்ந்தி நின்று, "எம்பெருமானே, அடியேன் தேவரீருடைய திருத்தொண்டர்களது அடிமைத்திறத்தைப் பெருங்காப்பியமாக விரித்துப் பாடும்பொருட்டுத் தேவரீர் அடியெடுத்துத் தந்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்து வணங்கினர். உடனே சபாநாயகரது திருவருளினாலே, "உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்" என்று ஓரசரீரிவாக்கு எழுந்தது. அதனைத் தில்லைவாழந்தணர்களும் மாகேசுரர்களும் கேட்டு, மனமுருகி நமஸ்கரித்து, சபாநாயகருக்குச் சாத்தப்பட்ட திருமாலையையும் திருநீற்றையும் திருப்பரிவட்டத்தையும் அருண்மொழித்தேவருக்குச் சாத்திக் களிகொண்டார்கள். அருண்மொழித்தேவர் சைவத்திருநெறித் தலைவர்களாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருநாவுக்கரசுநாயனார் சுந்தரமூர்த்திநாயனார் என்னும் மூவரையும் நமஸ்கரித்து, விபூதி ருத்திராக்ஷங்களை விதிப்படி தரித்து, ஆயிரக்கான்மண்டபத்திற் சென்று, சபாநாயகரது திருவருளை நினைந்து இருந்துகொண்டு, அவர் எடுத்துத்தந்த திருவாக்கை முதலாகக்கொண்டு, புராணம் பாட ஆரம்பித்து, சிலகாலத்திலே புராணத்தைப் பாடிமுடித்து, அதற்குத் திருத்தொண்டர்புராணமெனப் பெயர் தந்து, மைக்காப் புச்சாத்தி, கவளிகையில் வைத்தருளினார்.

அருண்மொழித்தேவர் புராணம் பாடுதற்குச் சிதம்பரத்தை அடைந்தபின், எத்தனைக்கதைகள் நிறைவேறின இன்னும் எத்தனைக்கதைகள் இருக்கின்றன என்று அறியும்பொருட்டுக் காலந்தோறும் அத்தியந்த ஆசையுடன் தூதர்களை அனுப்பிக்கொண்டிருந்த அபாயசோழமகாராஜாவானவர் புராணம் முற்றுப்பெற்றமையைச் சிலதூதர் சொல்ல அறிந்து, மனமகிழ்ந்து, அவர்களுக்குக் கனகமாரி பொழிந்து, சபாநாயகரையுஞ் சேக்கிழார்நாயனார் அருளிச்செய்த திருத்தொண்டர்புராணத்தையும் வணங்கி னேன்று, சுபதினத்திலே சுபமுகூர்த்தத்திலே கசரத துரக பதாதிகள் சூழ யானைமேற்கொண்டு சென்று, சிதம்பரத்துக்குச் சமீபித்தார். தில்லைவாழந்தணர்களும் மடபதிகளும் அருண்மொழித்தேவரும் மற்றைப் பெரியோர்களும் அரசருடைய வரவை அறிந்து, அவரை எதிர்கொண்டு, ஆசீர்வாதம் பண்ணினர்கள். அரசர் அருண்மொழித்தேவருடைய சிவவேடப்பொலிவைக் கண்டு மனமகிழ்ந்து

தம்மை அறியாது கைகள் சிரசின்மேல் ஏற, சபாநாயகர் அடிமை கொள்ளப்பெற்ற அவரது பெருமையை நினைந்து, அவருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்தார். பின்பு அவ்வருண்மொழித்தேவரோடுந் தில்லைவாழந்தணர்களோடும் மடபதிகளோடும் சென்று, கனகசபையிலே திருநிருத்தஞ்செய்தருளுஞ் சபாநாயகரைத் தரிசித்து, ஆனந்தவருவி சொரிய, இரண்டுகைகளுஞ் சிரசின்மேல் ஏறிக் குவிய, மனங்கசிந்துருக, உரோமஞ்சிலிர்ப்ப, உரை தடுமாற, அன்பினோடு விம்மி விம்மித் தண்டாகாரமாக விழுந்து எழுந்து நின்று, ஸ்தோத்திரம் பண்ணினார். அப்பொழுது ''சோழனே, நாம் 'உலகெலாமுணர்ந் தோதற் கரியவன்' என்று அடியெடுத்துக் கொடுக்க, சேக்கிழான் நம்மூடைய தொண்டர்களது அடிமைத்திறத்தை விரித்துப் புராணம்பாடி முடித்தான். நீ அதைக் கேள்'' என்று ஓரசரீரிவாக்கும் திருச்சிலம்பொலியும் கனகசபையிலே சமஸ்தருங்கேட்க எழுந்தன.

அநபாயசோழமகாராஜாவானவர் அதைக்கேட்டு மனமகிழ்ந்து, திருத்தொண்டர்புராணத்தைக் கேட்க வரும்பொருட்டு, எங்குமுள்ள சிவனடியார்கள் சமஸ்தருக்கும் நிருபங்கள் அனுப்பினார். அரசரது ஏவலினால் ஏவலாளர்கள் ஆலயத்தையும் திருவீதிகளையும் மிக அலங்கரித்தார்கள். திருநெறித்தமிழாகிய தேவார திருவாசகங்களிலே வல்ல பெரியோர்களும், சிவாகமவிற்பன்னர்களும், வேதவேதாங்கபண்டிதர்களும், சிவாசாரியர்களும், இலக்கணவிலக்கிய வித்துவான்களும், காவியவிற்பத்திமான்களும், பிறருமாகிய எல்லாரும் நிருபங்கண்டு மனமகிழ்ந்து, விரைந்து புறப்பட்டு, சிதம்பரஸ்தலத்தை அடைந்தார்கள்.

தில்லைவாழந்தணருள் ஒருவர், சித்திரைமாசத்திலே திருவாதிரைநடித்திரத்திலே சபாநாயகர் சந்நிதானத்திலேமெழுகி, அறுகாற்பீடமிட்டு அதன்மேற் பசும்பட்டு விரித்து, அதன்மேல் வெள்ளைப்பட்டை மடித்து இட்டு, புஷ்பங்களைத்தூவி, தூபங்கொடித்து, ஆசனங்கற்பித்து, திருத்தொண்டர் புராணத்திருமுறையை அதன்மேல்வைத்து, அருச்சித்து, வணங்கித் துதித்தார். அதன்பின், சோழராஜா முதலாகிய அடியார்களெல்லாரும் சேக்கிழார்நாயனாரை வணங்கி, ''சுவாமீ, இந்தத் திருத்தொண்டர் புராணத்தைத் தேவரீரே வாசித்துப் பொருள் அருளிச்செய்வீர்'' என்று விண்ணப்பஞ்செய்ய; அவர் அப்புராணத்தின் பொருளை விளங்க விரித்து அருளிச்செய்ய; எல்லாரும் இருந்து கேட்பாராயினர்கள். சோழமகாராஜாவானவர் அன்றுமுதலாக நாடோறும் சபாநாயகருக்கு மகாபூசை நடத்திவந்தார். தில்லைவாழந்தணர்களுக்கும் மட

பதிகளுக்கும் திருத்தொண்டர் புராணங்கேட்க வந்த எண்ணிறந்த அடியார்களுக்கும் போசனமுதலியவைகளெல்லாம் அவ்வரசாது செலவினுற்றுனே நடந்தன. எல்லாரும் அத்தியந்த ஆசையோடு கேட்க அருண்மொழித்தேவர் தினந்தோறும் புராணம் வாசித்துப் பொருள் சொல்லி, மற்றவருஷத்திலே சித்திரைமாசத்திலே திருவாதிரை நக்ஷத்திரத்திலே முடித்தருளினர்.

புராண முற்றுப்பெற்றவுடனே தில்லைவாழந்தணர் திருத்தொண்டர் புராணத்திருமுறையை விதிப்படி அருச்சனை செய்து வணங்கினர். அநபாயசோழமகாராஜா அந்தத் திருமுறையைப் பசும்பட்டினுலே சுற்றி, பொற்கலத்திலேவைத்து, அதனை எடுத்து யானையின் சிரசில் இருத்தி, சேக்கிழார்நாயனரை அவ்யானைமேல் ஏற்றி, தாமுங்கூட ஏறி, இரண்டுகைகளினுலும் வெண்சாமரம் வீசுவாராகி, சபாநாயகருடைய திருவருளை நினைந்து, "இதுவன்றே நான் செய்த தவப்பயன்" என்றார். சேக்கிழார்நாயனர், மங்கலவாத்தியங்கள் ஒலிக்க, பிராமணர்கள் வேதகோஷஞ்செய்ய, சிவனடியார்கள் ஹர ஹர என்று சொல்லும் பேரொலி தழைக்க, தில்லைவாழந்தணர்கள் வீதிகடோறுந் தூய்மைசெய்து வாழைகள் நாட்டித் தோரணங்கள் நிரைத்துப் பூமாலைகள் தூக்கிப் பூரணகும்பங்கள் வைத்துப் பொரிதூவித் திருவிளக்கேற்றி, வேதங்களை ஓதி எதிர்கொண்டு அழைக்க, அடியார்கள் தம்முடைய சிவவேடப்பொலிவையும் புத்தகக்கவளிகையையும் திருவுளம் அழியுந் தோறும் ஹர ஹர என்று சொல்லுதலையும் தமிழ்நாடு முழுதும் உய்யும்படி அருளிய பெருங்கருணையையும் கண்டு கண்ணீர் சொரிய மனம் நெக்கு நெக்குருக வணங்கித் துதித்து ஆனந்தக்கூத்தாட, திருவீதிவலஞ் செய்து, திருமுன்நிலை அடைந்து, அரசரோடு யானையினின்றும் இறங்கி, கனகசபையிலே சென்று, திருமுறையைத் திருமுன்னே வைத்தார். சோழராஜா அவ்வருண்மொழித்தேவருக்குத் "தொண்டர்சீர்பரவுவார்" என்னுந் திருநாமங்கொடுத்து, ஞானமுடிசூட்டி அவரை மண்டபத்திலே இருத்தி அவருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்தார்.

பின்பு, முற்காலத்திலே இராஜராஜ அபயகுலசேகர சோழமகாராஜா கேட்டுக்கொண்டபடி நம்பியாண்டார்நம்பியால் வகுக்கப்பட்டனவாகிய பதினெரு திருமுறைகளுடனே, அத்தத்திருத்தொண்டர் பெரியபுராணம் ஒன்று கூட்டி, அதனைப் பன்னிரண்டாந்திருமுறையென வகுத்து, அதனைச் செப்பேடுசெய்து, சரித்திரத்தில் ஏற்றுவித்தார்.

அதன்பின் "இந்நாயனாருடைய தம்பியாராகிய பாலறாவாயர் இப்பொழுது எங்கே உளர்" என்று வினவ; சமீபத்தில் நின்றவர்கள் சிலர் வணங்கிக்கொண்டு நின்று, "அவர் குன்றத்தூரிலே ஒரு திருக்குளம் அமைத்தபின், திருநாகேசுரருக்குத் திருப்பணிசெய்துகொண்டு, அவ்விடத்தில் இருக்கின்றனர்" என்றார்கள். அதுகேட்ட அரசர் அவரை அழைப்பித்து, அவருக்குத் தொண்டைமான் என்னும் பெயர்கொடுத்து, அவரைத் தமக்கு முதன்மந்திரியாராக்கினர். அருண்மொழித்தேவர் சிதம்பரத்திற்றானே சிலகாலம் எழுந்தருளியிருந்து, பின் அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூபியாகிய சபாநாயகருடைய ருஞ்சிதபாதநிழலை அடைந்தார்.

சைவசித்தாந்த சாத்திரோபதேசஞ் செய்தருளிய சந்தானாசாரியர்களுள்ளே தலைவராவார் சிவபெருமானது அருள்பெற்ற திருநந்திதேவர்; அவர்மாணாக்கர் சனற்குமாரமகாமுனிவர்; அவர் மாணாக்கர் சத்தியஞானதரிசனிகள்; அவர்மாணாக்கர் பரஞ்சோதி மகாமுனிவர்; அவர் கிருபாவசத்தினாலே திருக்கைலாசகிரியினின்றும் நீங்கித் தமிழ்நாட்டிற்கு எழுந்தருளியபோது அவரிடத்திலே ஞானோபதேசம் பெற்ற மாணாக்கர் திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியிருந்த வேளாளராகிய மெய்கண்டதேவர் என்னுங் காரணப்பெயரையுடைய சுவேதவனப்பெருமாள்; அவர்மாணாக்கர் நாற்பத்தொன்பதின்மருள்ளே தலைவர் திருத்துறையூரில் எழுந்தருளியிருந்த ஆதிசைவராகிய சகலாகமபண்டிதர் என்னுங் காரணப்பெயரையுடைய அருணந்திசிவாசாரியர்; அவர் மாணாக்கர் திருப்பெண்ணாகடத்திலே திருவவதாரஞ்செய்து சிதம்பரத்தைச் சார்ந்த திருக்களாஞ்சேரியில் எழுந்தருளியிருந்த மறைஞானசம்பந்தசிவாசாரியர்; அவர்மாணாக்கர் தில்லைவாழந்தணரில் ஒருவராய் அந்தத் திருப்பதியைச் சார்ந்த கொற்றவன்குடியில் எழுந்தருளியிருந்த உமாபதிசிவாசாரியர்; அவர் திருத்தொண்டர்புராணத்தைச் சுருக்கித் திருத்தொண்டர்புராணசாரம் எனப் பெயர்தந்து, எழுபத்தைந்து திருவிருத்தத்தால் அருளிச்செய்து, சேக்கிழார்புராணமும் பாடியருளினர்.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார்

அருளிச்செய்த

திருத்தொண்டத்தொகை.

பண் கொல்லிக்கவ்வாணம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
றிருநீல கண்டத்துக் குயவனார்க் கடியே
னில்லையே யென்னுத வியற்பகைக்கு மடியே
னினியாயன்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
மெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியே
னல்லிமென் மூல்லையந்தா ரமர்நீதிக் கடியே
னரூர னரூரி லம்மானுக் காளே. (க)

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தற் கடியே
னேனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்
கடலூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாற
னெஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியே
னலைமலிந்த புனன்மங்கை யாளையற் கடியே
னரூர னரூரி லம்மானுக் காளே. (உ)

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவாற்கு மடியேன்
றிருக்குறிப்புத் தொண்டர்தம் மடியார்க்கு மடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதையை மழுவினா லெறிந்த
வம்மையா னடிச்சண்டிப் பெருமானுக் கடியே
னரூர னரூரி லம்மானுக் காளே. (ஊ)

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைத னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கு மடியே

ஞருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியே
ஞலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியே
னருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியே
ஞரூர ஞரூரி லம்மானுக் காளே. (சு)

வம்பரு வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்ந்தற் கொன்றையா னடியலாற் பேணு
வெம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியே
னேயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியே
னம்பிரான் றிருமூல னடியார்க்கு மடியே
ஞட்டமிகு தண்டிக்கு மூர்க்கற்கு மடியே
னம்பரான் சோமாசி மாறனுக்கு மடியே
ஞரூர ஞரூரி லம்மானுக் காளே. (கி)

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியற்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவாற்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியே
னூர்கொண்ட வேற்கூற்றன் களர்தைக்கோ னடியே
ஞரூர ஞரூரி லம்மானுக் காளே. (கூ)

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியா னரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடனஞ்சை யதிபத்தற் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்காம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியே
னேயடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியே
ஞரூர ஞரூரி லம்மானுக் காளே. (எ)

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியே
னிறைக்கொண்ட சித்தையா னெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
றுறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியே
னணைக்கொண்ட வேனம்பி முனையடுவாற் கடியே
ஞரூர ஞரூரி லம்மானுக் காளே. (அ)

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனுஞ் செருத்துணைத னடியார்க்கு மடியேன்
புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியே
னடல்சூழ்ந்த வேனம்பி கோட்புலிக்கு மடியே
னூரூர னூரூரி லம்மானுக் காளே. (கூ)

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
நிருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
மூப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியே
னப்பாலு மடிச்சார்ந்த வடியார்க்கு மடியே
னூரூர னூரூரி லம்மானுக் காளே. (கo)

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாண் மானிக்கு நேசனுக்கு மடியேன்
றென்னவனு யுலகாண்ட செங்கணற் கடியேன்
நிருநீல கண்டத்துப் பாணனூர்க் கடியே
னென்னவனு மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் நிருநாவ லூர்க்கோ
னன்னவனு மாரூர னடிமைகேட் டுவப்பா
னாரூரி லம்மானுக் கன்பரா வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவாவடுதுறைச் சிவஞானசுவாமிகள்

அருளிச் செய்த

திருத்தொண்டர் திருநாமக்கோவை.

காப்பு.

மெய்யன்பர் நாமமெல்லாம் வெவ்வேறு போற்றிடவைங்
கையன் றிருவடியே காப்பு.

தில்லைவா ழந்தணர்கள் சீர்மலி கணடூ
ரில்லை யளித்த வியற்பகையார்—தொல்லை
யிளையான் குடிமாறர் மெய்ப்பொருளா ரென்று
மிளையா விறன்மிண்ட ரின்ப—மளவுமமர்
நீதி யெறிபத்தர் நீண்டபுக ழேனாதி
காதற்றிருக் கண்ணப்பர் நற்கலயர்—மேதகுசீர்
மானக்கஞ் சாறரரி வாட்டாய ராளுயர்
ஞானத் திருமூர்த்தி நாயனார்—மேன்மை
முருகர் பசுபதியார் முன்னுளைப் போவார்
தூரிசி றிருக்குறிப்புத் தொண்டர்—மருவுமறைச்
சண்டேசர் வாகீசர் தக்க குலச்சிறையார்
கொண்ட மிழலைக் குறும்பனார்—தொண்டுசெயு
நீள்காரைக் காலம்மை யப்பூதி நீலநக்கர்
மூளு நமிநந்தி மூத்தமிழை—யாளுந்
திருஞான சம்பந்தர் செய்யகலிக் காம
ரருண்மூலர் தண்டி யடிகள்—வருமூர்க்கர்
சோமாசி மாறனார் சாக்கியனார் சூழாக்கூர்
காமார் சிறப்புலியார் நற்றிருநீ—லனேமச
சிறுத்தொண்டர் சேரமான் செய்ய கணநாதர்
விறற்களந்தைக் கூற்றுவனார் விஞ்சைத்—திறத்துமிகும்
பொய்யடிமை யில்லாப் புலவர் புகழ்ச்சோழர்
மொய்ஞ்ஞா னசிங்க முனையரைய—ரையாதி
பத்தர்கலிக் கம்பர் கலியர் பகர்சத்தி
கைத்தபுல னேயடிகள் காடவர்கோன்—மொய்த்தகணம்
புல்லனார் காரிஞடு மாறர்புகழ் வாயிலார்
நல்ல முனையடுவார் நாயனார்—மல்குகழற்
சிங்க ரிடங்கழியார் தஞ்சைச் செருத்துணையார்
கொங்கார்புகழ்த்துணையார் கோட்புலியா—ரங்கணர்க்குப்

பத்தராய்த் தாழ்வார் பரமனையே பாடுவார்
சித்தஞ் சிவன்பாலே சேர்த்துள்ளார்—நித்தமு
முத்திநெறி காட்டு முதல்வர் முழுதுணர்ந்தோர்
பித்தனுறை யாரூர்ப் பிறந்தார்க—ளத்தனையே
மும்போதுந் தீண்டுவார் முழுநீறு பூசுவா
ரப்பாலு மீச னடிச்சார்ந்தார்—மெய்ப்பூசன்
மானியார் நேசனார் வாழ்செங்கட் சோழனார்
பான்மையார் நீலகண்டப் பாணனார்—மேன்மைச்
சடையரிசை ஞானியிவர் தம்மையெல்லாஞ் சேர்த்துத்
தொடையாகப் பாடியவன் ரெண்ட-- ரடியிணைகள்
சிந்தனைசெய் திந்தத் திருநாமக் கோவைதனை
மந்திரமாக் கொண்டு மயிர்சிலிர்த்து—நைந்துருகி
மெய்யன்பா லென்றும் விளம்பப் பெறுவார்கள்
கைதவமும் புல்லறிவுங் கற்பனையு—மையலுந்தீர்ந்
தத்துவிதா னந்த வகண்டபரி பூரணத்தி
னித்தியமா வாழ்வார் நிசம்.

திருச்சிற்றம்பலம்.

சமயகுரவர் நால்வர் வரலாறு.

அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூரருக்குச்
செப்பியநா லெட்டினிற் றெய்வீக—மிப்புவியிற்
சுந்தரார்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க்
கந்தம் பதினை றறி.

☞ சைவசமயிகள் நாடோறும் சூரியோதயத்துக்கு முன்னே நித்திரைவிட்டெழுந்து, இயன்ற சுத்தி செய்து விபூதி தரித்து, சிவபெருமானைத் தியானித்துத் தோத்திரஞ் செய்துகொண்டு, திருத்தொண்டத்தொகையையேனும் திருத்தொண்டர் திருநாமக் கோவையையேனும் பாராயணஞ் செய்துவருதல் உத்தமபுண்ணியமாகும்.

உண்மைநாயன்மார் மகிமை.

பெரியபுராணத்திலே சொல்லப்பட்ட அறுபத்து மூன்று நாயன்மார்கள் திருவவதாரஞ்செய்தற்கு முன்னரே அவர்களுடைய சரித்திரம் பரமேதிகாசமாகிய சிவரகசியத்திலே ஒன்பதாம் அம்சத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது. அங்ஙனஞ் சொல்லியருளினவர் எல்லாவறிவும் எல்லாமுதன்மையும் எல்லாவுருக்கிரக முழுமுடைய பரமபதியாகிய சிவபெருமானே. அதனைக்கேட்டவர் அவருடைய அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய பார்வதி தேவியாரே.

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராய்த் திருவவதாரஞ்செய்து மற்றை நாயன்மாரைத் துதித்துத் திருத்தொண்டத் தொகை பாடியருளினவர், சிவபெருமானுடைய பிரதிவிம்பமாய்த் தோன்றினவரும், பிரமவிட்டுணுக்களாலும் அணுகலாற்றுத ஆலாலவிஷத்தைத் தமது உள்ளங்கையிற் கொண்டவருமாகிய ஆலாலசுந்தரரே. அவருக்குத் திருத்தொண்டத்தொகை பாடும்பொருட்டு அடியெடுத்துக் கொடுத்தருளினவர் வன்மீகநாதராகிய சிவபெருமானே.

அச்சுந்தரமூர்த்திநாயனார் சிவபெருமானால் அனுப்பியருளப்பட்ட வெள்ளையானைமேற்கொண்டு பிரமவிட்டுணுக்கண் முதலாயினோர் சேவிப்பத் திருக்கைலாசமலையை அடையும்பொழுது அவரைத் தூரத்தே வணங்கி அவருடைய சரித்திரத்தையும் அவருடைய திருத்தொண்டத்தொகையிலே துதிக்கப்பட்ட மற்றை நாயன்மார்களுடைய சரித்திரத்தையும் இருடிகளுக்குச் சொல்லியருளினவர், சிவபெருமான் சிதம்பரத்திலே கனகசபையிலே எல்லாருக்கும் ஆனந்தநிருத்தந் தரிசிப்பித்தற்கு மூலகாரணராயுள்ள வியாக்கிரபாதமகாமுனிவருடைய திருக்குமாரரும், சிவபெருமானால் வருவித்தருளப்பட்ட திருப்பாற்கடலே உண்டவரும், கிருஷ்ணருக்குச் சிவதீக்ஷை செய்து சிவபூசையெழுந்தருளப்பண்ணிக் கொடுத்த சைவாசாரியருமாகிய உபமன்னியுமகாமுனிவரே.

அறுபத்துமூன்று நாயன்மார்களுடைய சரித்திரத்தைத் திருவந்தாதியாகப் பாடும்பொருட்டு நம்பியாண்டார்நம்பிக்குத் திருத்தொண்டத்தொகையின் பொருளே அருளிச்செய்தவர் திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் விநாயகக்கடவுளே.

அறுபத்துமூன்று நாயன்மார்களுடைய சரித்திரத்தைப் பெரியபுராணமாகச் செய்யும்பொருட்டு, தில்லைவாழந்தணர் மூவாயிரவரும், எழுநூறு திருமடத்து முதலிகளும், மாகேசுரர் நாற்பத்

தெண்ணூயிரவரும், திருக்கோயிற்றிருத்தொண்டு செய்யுந் திருவடியார் ஏழாயிரத்துத் தொளாயிரவருங் கேட்கும்படி, கனகசபையிலே சேக்கிழார் நாயனாருக்கு அடியெடுத்துக் கொடுத்தருளினவர் சபாநாயகரே. அப்பெரியபுராணத்தைக் கேட்கும்பொருட்டு அரபாயசோழமகாராசாவுக்கு எல்லாருங்கேட்க ஆர்ஞாபித்தருளினவரும் அச்சபாநாயகரே.

பெரியபுராணஞ் செய்தருளிய சேக்கிழார்நாயனார்மீது புராணஞ்செய்தருளினவரும், பெரியபுராணத்தைச் சுருக்கித் திருத்தொண்டர்புராணசாரஞ் செய்தருளினவரும், தில்லைவாழந்தணர்களுள் ஒருவராயும். சபாநாயகர் விதித்தருளிய "அடியார்க் கெளியனீசிற் றாமிலவர் கோற்றா— துடியாற் கோடியைகைச் சீட்டுப் - படியின்மிசைப்—பெற்றான் சாம்பாறுத்துப் பேதமறத் தீக்கைசெய்து—முத்தி கொடுக்க முறை" என்னுந் திருமுகத்தைப் பெற்றுக்கொண்டு பெற்றான் சாம்பானுக்கு உடனே முத்திகொடுத்தருளினவராயும், அப்பெற்றான் சாம்பானுடைய மனைவியும் அரசன் முதலாயினோருங்காண அதனுண்மையை வெளிப்படுத்தி அவர்களாயத்தை ஒழித்தற்பொருட்டு முள்ளிச்செடிக்கு முத்திகொடுத்தருளினவராயும் உள்ள உமாபதிசிவாசாரியரே.

இவைகளெல்லாம் இப்படியிருக்க, இக்காலத்து ஸ்மார்த்தப் பிராமணருள்ளே பலர் அவ்வறுபத்துமூன்று நாயன்மாரை வழிபடக் கூசுகின்றார்கள், அவர்களுடைய உற்சவங்களிலே வேதபாராயணஞ்செய்யாது மறுக்கின்றார்கள்; அவர்களுடைய அருமை பெருமைகளைச் சிறிதும் சிந்தியாது அவர்களை வேண்டியவாறே நிந்திக்கின்றார்கள். ஐயையோ இது எவ்வளவு அதிபாதகம! அரபாய சோழமகாராஜா பெரியபுராணஞ் செய்தருளிய சேக்கிழார்நாயனாரை யானைமீதேற்றித் தாமே வெண்சாமரம் வீசி கர்வலஞ்செய்வித்தபொழுது தில்லைவாழந்தணர்கள் வேதபாராயணஞ் செய்துகொண்டுவந்தார்கள் என்று உமாபதிசிவாசாரியர் சேக்கிழார்புராணத்திற் கூறியிருக்கின்றாரே. அங்ஙனமாகவும், அப்பெரியபுராணத்திற் கூறப்பட்ட அறுபத்துமூன்று நாயன்மார்களுடைய உற்சவங்களிலே வேதபாராயணஞ் செய்யலாகாதென்று சிறிதும் பழி பாவங்கட்கு அஞ்சாது பிதற்றுதல் எவ்வளவோரறியாமை!

மல்லியத்தைத் தரித்துக்கொண்டு தங்கள் தங்கள் நாயகருக்குத் தூரோகஞ்செய்து, இல்லொழுக்கிறந்த பெண்டிர்கள்போல, விபூதிருத்திராக்ஷங்களைத் தரித்துக்கொண்டு அச்சின்னங்களுக்குரிய சிவபெருமானுடைய பகக்தோச்சமமெனக்கூறியும் சிவாக்கிரமிய சிவாகமங்களை நிந்தித்தும் அச்சிவபெருமானுக்குத் தூரோகஞ

நாய் ஒழுகும் இவர்கள் மற்றை எப்பாதகந்தான் செய்யக்கூசுவர் ளுள்! ஐயையோ! இச்சிவத்துரோகிகளே நம்முடைய சைவசமயிகள் ணங்குதலும், இவர்களிடத்தே புசித்தலும், இவர்களே விவாகம் ரோத்தமுதலிய கருமங்களிலே தானபாத்திரமாகக் கொண்டு, தாம் கருந்தித்தேடிய பொருள்களைப் பாழுக்கிறைத்து எரிவாய் நரகத்துக்கு இரையாதலும் எவ்வளவு அறியாமை!

ஓ சைவசமயிகளே சைவசமயிகளே, உங்களெதிரே அறு பத்துமூன்று நாயன்மார்களே நிற்கிற்கும் ஸ்மார்த்தர்களைக் காணுந் தோறும் இந்த ஐந்து வினாக்களைக் கேட்டு, அவர்களைத் தலைகுனி யித்து அவர்கள் வாயை அடக்குங்கள். அவ்வினாக்கள் இவை

க. ஓ ஸ்மார்த்தர்களே, உங்கள் மத தாபகராகிய ஆசாரியர் சங்கராசாரியரோ அன்றோ?

உ. சௌந்தரியலகரியும் சிவானந்தலகரியும் சிவபுசங்களும் உங்கள் சங்கராசாரியர் செய்த நிரந்தங்களோ அன்றோ?

ங. அறுபத்துமூன்று நாயன்மார்களுள்ளே திருஞான சம் பந்தமூர்த்திநாயனாரைச் சௌந்தரியலகரியினும், கண்ணப்பநாய னாரைச் சிவானந்தலகரியினும், இயற்பகைநாயனாரையும் சிறுத் தொண்டநாயனாரையும் சண்டேசுரநாயனாரையும் சிவபுசங்கத்தி னும் உங்கள் சங்கராசாரியர் நிந்தித்திருக்கின்றாரோ அன்றோ?

ச. உங்கள் குருவாகிய சங்கராசாரியராலே நிந்திக்கப்பட்ட நாயன்மார்களே நீங்கள் நிந்தித்தலினாலே, அச்சங்கராசாரியரிடத்தி லே அறியாமையையேற்றிக் குருநிந்தகர்களானீர்களோ அன்றோ?

ஞ. அறுபத்துமூன்றுநாயன்மார்களே வணங்கும் பிராமணர் கள் பதிதர்களாவரெனச் சொல்லும் நீங்கள் அவர்களைத் துதிக் கும் சங்கராசாரியரைப் பதிதரெனச் சொல்லாது சொல்லி, அவரை நீங்கள் வணங்குதலாற் பதிதரிற் பதிதர்களாயினீர்களோ அன்றோ?

சைவசமயிகளே, நீங்கள் பெறுஞ் சமயதீக்ஷை முதலிய தீக்ஷைகளையும் நீங்கள் அநுட்டிக்குஞ் சந்தியாவந்தனம் சிவபூசை முதலிய கிரியைகளையும் உங்களுள் இறந்தவர்கள் பொருட்டுச் செய்யப்படும் அந்தியேட்டி முதலிய கிரியைகளையும் நீங்கள் சேவிக் குந் தேவாலயங்களிற் கிரியைகளாகிய கர்வாணாதிப் பிரதிஷ்டா நந்தம் பிரதிஷ்டாதிபுற்சவாந்தம் உற்சவாதிப் பிராயச்சித்தாந்தம் என்னும் பரார்த்தக்கிரியைகளையும் விதித்த நூல்கள் சிவாகமங் களே. அச்சிவாகமங்களினுயர்ச்சியும் அவைகளில் விதிக்கப்பட்ட

சிவதீக்ஷை, சைவாஹுட்டான முதலியவைகளின் உயர்ச்சியும் ஸ்மார்த்தர்களாலே உண்மைநூல்களெனக் கொள்ளப்படும் புராணமுதலிய நூல்களிலே பலவிடங்களிலும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இவ்வுண்மையை அறியாமையினாலும், அறிந்தவழியும் தங்களுக்கு முனிவர்களாலே கிடைத்த சாபத்தினாலும், அச்சிவாகமங்களையும் சைவசமய தாபகர்களாய்ச் சிவமாந்தன்மைப் பெரும்பேறு பெற்ற உண்மைநாயன்மார்களையும் அவர்கள் உலகமுய்யும் பொருட்டு அருளிச்செய்த தமிழ்வேத முதலியவற்றையும் நிந்திக்கும் ஸ்மார்த்தர்களே, அச்சிவாகமங்கள் உண்மைநூல்களெனக் கொண்டு அவற்றின் வழி ஒழுகப் புகுந்த நீங்கள், யாவர்களாகக் கொண்டு ஒழுகல்வேண்டும். இதனை நன்றாக ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள்.

சாதியினும் சமயமே அதிகம். சமயத்தினும் சாதி அதிகமெனக் கொள்வது சுருதி யுத்தி அநுபவமூன்றுக்கும் முழுமையும் விரோதம். உலகத்துச் சாதிபேதம்போலச் சற்சமயமாகிய சைவசமயத்தினும் முதற்சாதி இரண்டாஞ்சாதி மூன்றாஞ்சாதி நாலாஞ்சாதி சீசசாதியெனச் சமயநடை பற்றி ஐந்துசாதி கொள்ளப்படும். சிவாகமத்தில் விதிக்கப்பட்ட நான்கு பாதமுறைப்படி வழுவாமற நடந்து சிவானந்தப் பெரும்பேறு பெற்ற சீவன்முத்தர் சிவமேயாவர். இனிச் சிவஞானிகள் முதற்சாதி; சிவயோகிகள் இரண்டாஞ்சாதி; சிவக்கிரியாவான்கள் மூன்றாஞ்சாதி; சிவசரியாவான்கள் நாலாஞ்சாதி; இக்நெறிகளில் வாராதவர்களும், இவர்களையும் இகழ்கள் சாத்திரமுதலியவற்றையும் நிந்திப்பவர்களும், இந்நெறிகளிலே முறை பிறழ்ந்து நடக்கின்றவர்களும், இந்த நடைகளை விட்ட பதிதர்களும், சதாசூதகளாகிய பஞ்சமசாதி. சிவசரியை கிரியை முதலியவைகளினாலே பொருள் தேடி உடம்பை வளர்ப்பவர்களும், அப்பொருளைப் பாசத்தாருக்குக் கொடுத்து இன்புறுவோர்களும், கோயிலதிகாரிகளாய்த் தேவத்திரவியத்தைப் புசிப்பவர்களும், விருத்திப்பொருட்டு ஆசாரியாபிஷேக முதலியன செய்தடையோர்களும், விருத்திப்பொருட்டுச் சிவவேடந்தரித்தவர்களும், விருத்திப்பொருட்டுத் துறவறம் பூண்டோர்களும், சிவஞானநூல்களைச் சொல்லிப் பொருள் வாங்கி வயிறு வளர்ப்பவர்களும், பிறரும் பதிதர்களுள் அடங்குவர்கள்.

இங்கே சொல்லிய முறையன்றி, சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள்செய்யும்பொருட்டுத் தமக்குத் திருமேனியாகக் கொண்டருளிய குருலிங்கசங்கமமென்னும் மூன்றினிடத்தும் ஆசை

யும் பணியும் வழிபாடும் கொடையும் அடிமைத்திறமும் உரிமையு முடையவர்கள் எந்தக் கருமஞ்செய்தாலும் முதற்சாதியெனக் கொள்ளப்படுவர்கள். அத்துவசுத்தி செய்யப்பட்டுச் சிவஞான நூல்களாகிய சைவசித்தாந்த சாத்திரங்களே ஓதி அவைகளின் பொருளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த உயிரிலே சிவாசனமூர்த்திமுதலியன நியசித்து அபிடேகம் பண்ணப்பட்டவரே சற்குரு. தேகாதிப்பிரபஞ்சத்தை விடுத்துச் சிவசம்பந்தமுற்றவரே சங்கமம். சிவஞானிகள் பாவனையுற்றதே சிவலிங்கம்.

யாவரும் தமக்கு மேன்மேற் சமயிகளைத் தரிசித்து வணங்கிப் பணிசெய்தலும், கீழ்க்கீழ்ச்சமயிகளை நோக்கி இவர்களிவ்வளவில் வந்தார்களே என்று இரங்கி விதித்தன சொல்லி விலக்கியன ஒழிவித்தலுமே நீதி. இப்படியன்றி ஒருவருக்கொருவர் கலாம் விளைத்தல் நீதிகேடு. தத்துவாதீதசொரூப சிவப்பேறுடையவரை ஈச சதாசிவ சாந்த பதப்பேறுடையவர் வணங்கி வழிபடல்வேண்டும். இவ்விருதிறத்தாரையும் கந்த சண்ட கணேச பதப்பேறுடையவர் வணங்கி வழிபடல்வேண்டும். இம்மூன்று திறத்தாரையும் வசுருத்திராதித்த பதப்பேறுடையவர் வணங்கி வழிபடல்வேண்டும். இந்நான்கு திறத்தாரையும் இவரிற்றாழ்ந்த பிராகிருதர் வணங்கி வழிபடல்வேண்டும். மேலோர்களாயுள்ள ஈச சதாசிவ சாந்த பதப்பேறுடையவர்களும் கந்த சண்ட கணேச பதப்பேறுடையவர்களுமாகிய சைவர்கள் கீழோர்களாகிய வசுருத்திராதித்த பதப்பேறுடையவர்களாகிய ஸ்மார்த்தங்களே வணங்குதலும் அவர்களைச் சிராத்த முதலியவற்றில் வரித்துப்பூசித்தலும் நீதியா! இதைச் சிந்தியுங்கள்.

சைவசமயிகளே, நீங்கள் இவ்வுண்மைகளெல்லாவற்றையும் நன்றாக ஆராய்ந்தறிந்து, சிவபெருமானிடத்தும் உண்மைநாயன்மாரிடத்தும் சிவாகமவிதிப்படி பத்திசெய்தாழுகக்கடவீர்கள். இவ்வுண்மைநிலைக்கு மறுதலைப்பட்டவர்களைக் கண்டால் அவர்கள் பொருட்டிரங்கி அவர்களுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தக்கடவீர்கள். அது கூடாதாயின், அவர்கள் செய்யும் சிவாகமநிந்தை குருநிந்தை சங்கமநிந்தை முதலியவற்றைக் கேட்டு எரிவாய் நரகத்துக்கு இரையாகாவண்ணம் அவர்கள் கூட்டத்தை ஒழித்துவிடக்கடவீர்கள். இப்படிச்செய்யாது மதிமயங்கி அவ்வதிபாதகர்களைப் பெரியோர்களெனக் கொண்டு வழிபட்டொழுகுவது பாவம் பாவம்!

திருச்சிற்றம்பலம்.

குருபூசை

சிவபெருமானே முழுமுதற்கடவுள் என்றும், வேதமுஞ் சிவாகமமுமே அவர் அருளிச்செய்த முதனூல்கள் என்றும், அவற்றுள் வேதம் பொதுநூல் சிவாகமம் சிறப்புநூல் என்றும், விபூதி ருத்திராக்கங்களே சிவசின்னங்கள் என்றும், ஸ்ரீ பஞ்சாக்ஷரமே சிவமூலமந்திரம் என்றும், சிவலிங்கோபாசனையே சிவபிரானுக்குச் செயப்படும் மிகமேலாகிய வழிபாடு என்றும், விபூதி ருத்திராக்ஷ தாரணமும் ஸ்ரீபஞ்சாக்ஷரஜபமும் சிவலிங்கோபாசனையும் வேதத்தில் விதிக்கப்படினும் சிவாகமத்தில் விதித்தபடி சிவதீக்ஷை பெற்றுக்கொண்டு அநுட்டிக்கப்பட்டாலன்றி முத்தி சித்தியாது என்றும் விசுவசித்து, அங்ஙனம் விசுவசித்தபடியே ஒழுகும் மார்க்கம் சைவசமயமெனப்படும்.

அறுபத்துமூன்று நாயன்மார்களாலும், மாணிக்கவாசகசுவாமிகளாலும், பெரியபுராணஞ் செய்தருளிய சேக்கிழார்நாயனாராலும் சைவசித்தாந்த சாத்திரோபதேசஞ்செய்தருளிய திருக்கைலாசபரம்பரைச் சந்தானகுரவர்களாகிய மெய்கண்டதேவர், அருணந்திசிவாசாரியர், மறைஞானசம்பந்தசிவாசாரியர், உமாபதிசிவாசாரியர் என்னு நால்வர்களாலுமே தமிழ்நாடெங்கும் சைவசமயந் தழைத்தோங்கியது.

ஆதலினாலே, சைவசமயிகள் யாவரும் அவ்வுண்மைநாயன்மார்களுக்கு விதிப்படி சிரத்தையோடு குருபூசை நடத்தல் வேண்டும்.

அந்நாயன்மார்களெல்லாருக்கும் குருபூசை செய்யச் சத்தியில்லாதவர்கள், அவர்களுள்ளே திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகசுவாமிகள் என்னுஞ் சமயகுரவர்கள் நால்வரும், சேக்கிழார்நாயனாரும், மெய்கண்டதேவர் முதலிய சந்தானகுரவர்கள் நால்வருமாகிய ஒன்பதின்மருக்குமாத்திரமாயினும் குருபூசை செய்வது அத்தியாவசியகம்.

குருபூசை செய்தற்குப் பொருளில்லாதவர்கள் தங்களாலியன்ற பதார்த்தம் யாதாயினுங் கொண்டுபோய்க் குருபூசை நடத்

ஞ்தானத்திற் சேர்த்தல்வேண்டும். அதுவுங் கூடாதாயிற் கறிதிரு
த்துதல் முதலிய கைத்தொண்கெளேனுஞ் செய்தல்வேண்டும்.

இனிக் குருபூசைக் கிரமமாமாறு:—

அந்த அந்த நாயனாருக்கு, அவரவர் முத்திபெற்ற திருநக்ஷத்
திரத்திலே, திருக்கோயிலிலே விசேஷபூசையும் வேதபாராயண
தேவாரபாராயணங்களோடு உற்சவமும் செய்வித்தல்வேண்டும்.
திருமடத்திலாயினும், தங்கள் தங்கள் வீடுகளிலாயினும், சமய
தீக்ஷிதர், விசேஷதீக்ஷிதர், நிர்வாணதீக்ஷிதர், ஆசாரியர் என்னு
நால்வகை மாகேசுரர்களாயும் நாளத்தே கண்டவுடனே சிரசின்மீது
அஞ்சலிசெய்து விரைந்தெதிர்கொண்டு அழைத்து வந்து, அவர்க
ளுடைய திருவடிகளைத் தீர்த்தத்தினால் விளக்கி அத்தீர்த்தத்தைச்
சிரமேற்றெளித்து, அவர்களைப் பந்தியாக இருத்தி, ஒருவார்கள்
தேவாரம் ஓத, அன்னங் கறிமுதலியவற்றைப் படைத்து, அவ்வடி
யார்களை அத்திருநக்ஷத்திரத்திலே முத்தி பெற்ற நாயனாராகப்
பாவித்து, பத்திரபுஷ்பங்களால் அருச்சனை செய்து, தூபதீபங்
கொடுத்து, கர்ப்பூராராத்திரிகம் பணிமாறப்பண்ணி, மூன்றுதரமா
யினும் ஐந்துதரமாயினும் நமஸ்கரித்து, திருவமுதுசெய்வித்தல்
வேண்டும்.

குருபூசை செய்பவர்களும், செய்விப்பவர்களும், குருபூசை
யிலே அருச்சனையேற்று அமுது செய்யப்புகும் மகேசுரர்களும்,
அத்தினத்திலே குருபூசைக்கு முன்னே யாதொன்றும் புசிக்கலா
காது. அன்றிரவிலே பசித்ததாயின், அன்னம் புசியாது, பால்பழ
முதலியவற்றில் இயன்றது உட்கொண்டு சுத்தர்களாகிச் சிவபெரு
மானையே சிந்தித்துக்கொண்டு நித்திரை செய்தல்வேண்டும்.

வைதிகப்பிராமணர் ஆயிரம்பேருக்கு அன்னதானஞ் செய்த
பலமும் சமயதீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானஞ்செய்த பலமும்
ஒக்கும். வைதிகப்பிராமணர் பதினாயிரம் பேருக்கு அன்னதானஞ்
செய்த பலமும் விசேஷதீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதானஞ்செய்த
பலமும் ஒக்கும். வைதிகப்பிராமணர் லக்ஷம்பேருக்கு அன்ன
தானஞ்செய்த பலமும் நிருவாணதீக்ஷிதர் ஒருவருக்கு அன்னதா
னஞ் செய்த பலமும் ஒக்கும். வைதிகப்பிராமணர் கோடிபேரு
க்கு அன்னதானஞ் செய்த பலமும் சைவாசாரியர் ஒருவருக்கு
அன்னதானஞ் செய்த பலமும் ஒக்கும். வேதாந்தமகாவாக்கிய
த்தை அறிந்த கோடி வைதிகப்பிராமணசந்தியாகென் கூடினும்,
நிருவாணதீக்ஷை பெற்றுக்கொண்டு சைவசித்தாந்த நூல்களாகிய
சிவஞான நூல்களை ஓதிப் பதிபசுபாசமென்னும் திரிபதார்த்தம்

களின் இலக்கணத்தை அறிந்த ஒரு சைவருக்குச் சமமாகார்கள்.
* இது சிவவாக்காகிய சிவாகமநூற்றுணிவு.

வாயுசங்கிதை:—"சைவநூலிற் கூறப்பட்டதும் பாசமூன்றையுந் தவிர்ப்பதும் மேலானதுமாகிய நீசையைத் தவிர வேறு யாதொரு ஆச்சிரமமும் இவ்வுலகத்திலே மனிதருக்கு மேன்மையன்று; ஆதலால் நீசையினூற்றான் மோக்ஷம்: ஆச்சிரமங்களினாலும் மற்றைக் கருமங்களினாலும் மோக்ஷமில்லை. அத்துவசுத்தியின்றி முத்தியை விரும்பும் மனிதர் கோவின்றி நடக்கத் தொடங்கிய குருடர்போல்வர்; தோணியின்றிக் கடலைக்கடக்க விரும்பினவர்போல்வர்."

காந்தம், பிருகுசாபப்பிரகரணம்:—"இங்கே மூப்பாசத்தை அகற்றவதும் மேலானதுஞ் சிவசம்பந்தமுடையதுமாகிய நீசையாலன்றி ஆண்மாக்களுக்கு ஆச்சிரமத்தாற்செய்யப்பட்ட உயர்ச்சியொன்றுமில்லை. ஆதலிற் நீசையாலே முத்தி. ஆச்சிரமங்களாலும் பிறகருமங்களாலும் முத்தியில்லை."

இவ்வுண்மையைச் சிறிதும் நோக்காது சைவசமயிகளுள் அநேகர் ஆதிசைவர் முதலிய சைவர்களை அவமதித்துத் தள்ளிவிட்டு, அதிகேஷிதர்களாய்ச் சிவாகமவிந்தகர்களாய்ச் சைவசமயதாபகரிந்தகர்களாய்த் தமிழ்வேதவித்தகர்களாய் அன்னியமதத்தர்களாயுள்ள ஸ்மார்த்தப் பிராமணர்களையே சற்பாத்திரமென நன்குமதித்து அவர்களுக்கு அன்னதான முதலியன செய்தலே புண்ணியமென்று மயங்குகின்றார்களே, ஐயையோ இஃதெவ்வளவு பெருங்கொடும் பாவம்!!!

* சிவாகமத்தின் ஞானகாண்டத்தை அறிந்தவனே வேதாகத மகாவாக்கியத்தின் உண்மைப்பொருளை அறிய வல்லவர். மற்றவர் அறியமாட்டாது மயங்கி வேறுபொருள் கொள்வர்.

சித்திரை மீ.

பரணி	சிறுத்தொண்டநாயனார்.
உரோகிணி	மங்கையர்க்கரசியார்.
திருவாதிரை	விறன்மிண்டநாயனார்.
அத்தம்	உமாபதிசிவாசாரியர்.
சித்திரை	இசைஞானியார்.
சுவாதி	திருக்குறிப்புத்தொண்டநாயனார்.
சதயம்	திருநாவுக்கரசுநாயனார்.

வைகாசிமீ.

பரணி	கழற்சிங்கநாயனார்.
பூசம்	நமிநந்தியடிகணாயனார்.
,,	சேக்கிழார்நாயனார்.
ஆயிலியம்	சோமாசிமாறநாயனார்.
மூலம்	திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.
,,	முருகநாயனார்.
,,	திருநீலநக்கநாயனார்.
,,	திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார்.

ஆ குருபூசை - அ.

ஆனிமீ.

மகம்	மாணிக்கவாசகசுவாமிகள்.
பூரம்	அமர்நீதிநாயனார்.
இரேவதி	கலிக்காமநாயனார்.

ஆ குருபூசை - கூ.

ஆடிமீ.

கார்த்திகை	மூர்த்திநாயனார்.
,,	புகழ்ச்சோழநாயனார்.
திருவாதிரை	கூற்றுவநாயனார்.
சித்திரை	பெருமிழலைக்குறும்பநாயனார்.
சுவாதி	சுந்தரமூர்த்திநாயனார்.
,,	சேரமான்பெருமாணயனார்.
கேட்டை	கலியநாயனார்.
,,	கோட்புலிநாயனார்.

ஆ குருபூசை - அ.

ஆவணிமீ.

பூசம்	செருத்துணைநாயனார்.
ஆயிலியம்	புகழ்த்துணைநாயனார்.
,,	அதிபத்தநாயனார்.
மகம்	இளையான்குடிமாறநாயனார்.
உத்திரம்	மணஞ்ஞானசம்பந்தசிவாசாரியர்.

அநுடம்	குலச்சிறைநாயனார்.
மூலம்	குங்குலியக்கலயநாயனார்.

ஆவணி குருபூசை - எ.

புரட்டாதிமீ.

அச்சுவினி	உருத்திரபசுபதிநாயனார்.
உரோகிணி	திருநாளைப்போவார்நாயனார்.
பூரம்	அருணந்திசிவாசாரியர்.
சதயம்	நரசிங்கமுனையரையநாயனார்
உத்தராடம்	எறிபத்தநாயனார்.

ஆவணி குருபூசை - ஙி.

ஐப்பசிமீ.

அச்சுவினி	திருமூலநாயனார்.
பரணி	மெய்ம்மாறநாயனார்.
கார்த்திகை	இடங்கழிநாயனார்.
பூசம்	சத்திநாயனார்.
சுவாதி	மெய்கண்டதேவர்.
அநுடம்	பூசலார்நாயனார்.
மூலம்	ஐயடிகள்காடவர்கோனய

ஆவணி குருபூசை - எ.

கார்த்திகைமீ.

கார்த்திகை	கணம்புல்லநாயனார்.
உத்திரம்	மெய்ப்பொருணயனார்.
அத்தம்	ஆனயாயனார்.
மூலம்	மூர்க்கநாயனார்.
பூராடம்	சிறப்புலிநாயனார்.

ஆவணி குருபூசை - ஙி.

மார்கழிமீ.

திருவாதிரை	சடையநாயனார்.
உத்திரம்	இயற்பகைநாயனார்.
சுவாதி	மானக்கஞ்சாறநாயனார்.

பூராடம்	சாக்கியநாயனர்.
இரேவதி	வாயிலார்நாயனர்.

ஆ குருபூசை - இ

தை மீ.

மிருகசிரிடம்	கண்ணப்பநாயனர்.
திருவாதிரை	அரிவாட்டாயநாயனர்.
உத்திரம்	சண்டேசுரநாயனர்.
விசாகம்	திருநீலகண்டநாயனர்.
சதயம்	அப்பூதியடிகளையனர்.
இரேவதி	கலிக்கம்பநாயனர்.

ஆ குருபூசை - சு.

மாசி மீ.

அத்தம்	எறிபத்தநாயனர்.
பூராடம்	காரிநாயனர்.
சதயம்	கோச்செங்கட்சோழநாயனர்

ஆ குருபூசை - கூ.

பங்குனிமீ.

உரோகிணி	நேசநாயனர்.
திருவாதிரை	கணநாதநாயனர்.
பூசம்	முனையடுவார்நாயனர்.
சுவாதி	காரைக்காலம்மையார்.
சதயம்	தண்டியடிகளையனர்.

ஆ குருபூசை - ஙி.

பாடிய சம்பந்தர் வைகாசி மூலம் பயிலுமப்பர்
கீடிய சித்திரை மாதச் சதய நிறைவன்றொண்ட
ராடியிற் சோதி திருவாத வூரர்நல் லானிமகத்
தேடிய சேக்கிழார் வைகாசிப் பூசஞ் சிறந்தனரே.

சித்திரை யத்த மும்மாபதி யாவணித் திங்கடனி
லுத்திரஞ் சிற்கொண் மறைஞான சம்பந்த ரோதுசன்னி
சுத்தமெய்ப் பூர மருணந்தி யைப்பசிச் சோதிதனில்
வித்தக மெய்கண்ட தேவர் விசாதி மேவினரே.

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டர் வருணம்.

தனியடியார் அறுபத்துமூவர்.

ஆதியிரவர் நால்வர்:—சுந்தரமூர்த்திநாயனர், புகழ்த்துணை நாயனர், சடையநாயனர், இசைஞானியார்.

பிராமணர் பன்னிருவர்:—குங்குலியக்கலயநாயனர், முருகநாயனர், உருத்திரபசுபதிநாயனர், சண்டேசுரநாயனர், அப்பூதியடிகளையனர், திருநீலநக்கநாயனர், நமிநந்தியடிகளையனர், திருஞானசம்பந்தமூர்த்திநாயனர், சோமாசிமாறநாயனர், சிறப்புலிநாயனர், கணநாதநாயனர், பூசலார்நாயனர்.

மாமாத்திரப்பிராமணர்:—சிறுத்தொண்டநாயனர்.

க்ஷத்திரியர் அறுவர்.—சேரமான்பெருமாணயனர், புகழ்ச்சோழநாயனர், கெடிமாறநாயனர், இடங்கழிநாயனர், மங்கையர்க்கரசியார், கோச்செங்கட்சோழநாயனர்.

தூயநீலமன்னர் ஐவர்:—மெய்ப்பொருணயனர், கூற்றுவநாயனர், நரசிங்கமுனையரையநாயனர், ஐயடிகள் காடவர்கோனயனர், கழற்சிங்கநாயனர்.

வைசியர் ஐவர்: இயற்பகைநாயனர், அமர்நீதிநாயனர், மூர்த்திநாயனர், காரைக்காலம்மையார், கலிக்கம்பநாயனர்.

வேளாளர் பதின்மூவர்:—இளையான்குடிமாறநாயனர், விறன்மிண்டநாயனர், மானக்கஞ்சாறநாயனர், அரிவாட்டாயநாயனர், திருநாவுக்கரசுநாயனர், எயர்கோன்கலிக்காமநாயனர், மூர்க்கநாயனர், சாக்கியநாயனர், சத்திநாயனர், வாயிலார்நாயனர், முனையடுவார்நாயனர், செருத்துணைநாயனர், கோட்புலிநாயனர்.

இடையர் இருவர்:—திருமூலநாயனர், ஆனாயநாயனர்.

தயவர்:—திருநீலகண்டநாயனர்.

பாணர்:—திருநீலகண்டயாழ்ப்பாணநாயனர்.

பரதவர்:—அதிபத்தநாயனர்

வேடர்:—கண்ணப்பநாயனர்.

சான்றோர்:—ஏனாதிநாதநாயனர்.

சாலியர்:—சேரமாயனர்.

சேக்கார்:—கலியநாயனர்.

ஏகாலியர்:—திருக்குறிப்புத்தொண்டநாயனர்.

புலையர்:—திருநாளைப்போவார்நாயனர்.

மாபறியாதவர் அறுவர்:—எறிபத்தநாயனர், குலச்சிறைநாயனர், பெருமிழலைக்குறும்பநாயனர், தண்டியடிகளையனர், கணம்புல்லநாயனர், காரிநாயனர்.

திருக்கூட்டத்தார் ஒன்பதின்மர்.

ஆதிசைவர்—முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார்.
பிராமணர்—தில்லைவாழ்ந்தணர்.

மாபறியாதவர் எழுவர்:—பொய்யடிமையில்லாதபுலவர், பத்தராய்ப்பணிவார், பரமனேயேபாடுவார், சித்தத்தைச்சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப்பிறந்தார், முழுநீறுபூசியமுனிவர், அப்பாலுமடிச்சார்ந்தார்.

குருலிங்கசங்கமங்களான் முத்திபெற்றவர்.

குருவருளான் முத்திபெற்றவர் பன்னிருவர்:—சுந்தரமூர்த்திநாயனர், திருநாவுக்கரசுநாயனர், குலச்சிறைநாயனர், பெருமிழலைக்குறும்பநாயனர், அப்பூதியடிகணாயனர், திருஞானசம்பந்தமூர்த்திநாயனர், திருமூலநாயனர், சோமாசிமாறநாயனர், கணநாதநாயனர், நெடுமாறநாயனர், மங்கையர்க்கரசியார், திருநீலகண்டயாழ்ப்பாணநாயனர்.

சிவலிங்கத்தான் முத்திபெற்றவர் முப்பதின்மர்:—எறிபத்தநாயனர், கண்ணப்பநாயனர், குங்குலியக்கலயநாயனர், அரிவாட்டாயநாயனர், ஆனாயநாயனர், மூர்த்திநாயனர், முருகநாயனர், உருத்திரபசுபதிநாயனர், திருநாளைப்போவார்நாயனர், சண்டேசுரநாயனர், திருநீலநக்கநாயனர், நமிநந்தியடிகணாயனர், ஏயர்கோன்கலிக்காமநாயனர், தண்டியடிகணாயனர், சாக்கியநாயனர், சிறப்புலிநாயனர், சேரமான்பெருமாணாயனர், கூற்றுவநாயனர், அதிபத்தநாயனர், கலியநாயனர், ஐயடிகள்காடவர்கோனாயனர், கணம்புல்லநாயனர், காரிநாயனர், வாயிலார்நாயனர், கழற்சிங்கநாயனர், செருத்துணைநாயனர், புகழ்த்துணைநாயனர், கோட்புலிநாயனர், பூசலார்நாயனர், கோச்செங்கட்சோழநாயனர்.

சிவனடியாரை வழிபட்டு முத்தி பெற்றவர் பத்தொன்பதின்மர்:—திருநீலகண்டநாயனர், இயற்பகைநாயனர், இளையான்குடிமாறநாயனர், மெய்ப்பொருணாயனர், விறன்மிண்டநாயனர், அமர்நீதிநாயனர், எறிதாதநாயனர், மானக்கஞ்சாறநாயனர், திருக்குறிப்புத்தொண்டநாயனர், காரைக்காலம்மையார், மூர்க்கநாயனர், சிறுத்தொண்டநாயனர், புகழ்ச்சோழநாயனர், நரசிங்கமுனையரையநாயனர், கலிக்கம்பநாயனர், சத்திநாயனர், முனையடுவார்நாயனர், இடங்கழிநாயனர், சேரநாயனர்.

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிக்கோவை.

இப்போதுள்ள தேவாரத்திருப்பதிகங்களை உடையனவாயிருக்கின்ற சிவஸ்தலங்கள் இருநூற்றெழுபத்துநான்கு. அவை வருமாறு:—

சோழநாட்டிலே காவேரிக்கு வடகரையில் உள்ள தலங்கள்.

க. கோயில். எண்பது சிதம்பரம்.
உ. திருவேட்களம்.
ங. திருநெல்வாயில். எ - து சிவபுரி.
ச. திருக்கழிப்பாலை.
ஞ. திருநல்லூர்ப் பெருமணம் எ - து. ஆச்சாபுரம்.
ட. திருமயேந்திரப்பள்ளி.
ண. திருமூல்லைவாயில்.
த. திருக்கலிக்காமூர்
ந. திருச்சாய்க்காடு
ப. காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம்
ம. திருவெண்காடு.
ய. திருக்காட்டுப்பள்ளி.
ர. திருக்குருகாவூர்.
ல. சீர்காழி.
வ. திருக்கோலக்கா.
ழ. புள்ளிருக்குவேளூர் வைத்தீசுரன்கோயில்.
ள. திருக்கண்ணார்கோயில்.
ற. திருக்கடைமுடி.
ன. திருவின்றியூர்.
க0. திருப்புன்கூர்.
உ0. திருநீடூர்.
உக. அன்னியூர்.
உங. வேள்விக்குடி.
உச. எதிர்கொள்பாடி.
உஞ. திருமணஞ்சேரி.
உட. திருக்குறுக்கை.
உண. கருப்பறியலூர்.
உத. குரக்குக்கா.
உந. வாஞ்சியம்.

ந0. மண்ணிப்படிக்கரை.
நக. ஓமாம்புலியூர்.
நஉ. காழிப்பிள்ளூர்.
நங. திருவாரையூர்.
நச. கடம்பூர்.
நஞ. பந்தணைநல்லூர்.
நட. கஞ்சனூர்.
நண. திருக்கோடிகா.
நத. திருமங்கலக்குடி.
நந. திருப்பனந்தாள்.
ச0 திருவாப்பாடி.
சக. திருச்சேய்ஞலூர்.
சஉ. திருத்தேவன்குடி.
சங. திருவியலூர்.
சச. கொட்டையூர்.
சஞ. திருவின்னம்பர்.
சட. திருப்புறம்பயம்.
சண. திருவிசயமங்கை.
சத. திருவைகாவூர்.
வடகுரங்காடுதுறை.
ஞ0. திருப்பழனம்.
ஞக. திருவையாறு.
ஞங. திருநெய்த்தானம்.
ஞச. பெரும்புலியூர்.
ஞஞ. திருமழபாடி.
திருப்பழனூர்.
ஞட. திருக்காளூர்.
ஞண. அன்பிலாலந்துறை.
ஞத. திருமாந்துறை
ஞந. திருப்பாற்றுறை.
ட0. திருவானைக்கா.
டக. திருப்பைஞ்ஞீலி
டங. திருப்பாச்சிலாச்சிராமம்.
டச. சுக்கோய்மலை.

காவேரிக்குத் தென்கரையிலுள்ள தலங்கள்.

க1 வாட்போக்கி. எ-து. இர
உ. கடம்பந்துறை.
ஙு. திருப்பராய்த்துறை.
ச. கற்குடி.
ஞ. மூக்கீச்சரம் எ-து. உறை யூர்.
சு. திருச்சிராப்பள்ளி.
எ. எறும்பியூர்
அ. நெடுங்களம்.
கூ. மேலைக்காட்டுப்பள்ளி.
க0. ஆலம்பொழில்.
கக. திருப்பூந்துருத்தி.
கஉ. திருக்கண்டியூர்.
கங. சோற்றுத்துறை.
கச. திருவேதிகுடி.
கஞ. தென்குடித்திட்டை.
கசு. திருப்புள்ளமங்கை.
கஎ. சக்கரப்பள்ளி.
கஅ.
கஙு. திருப்பாலைத்துறை.
உ0. திருநல்லூர்.
உக. திருவாவூர்ப்பசுபதீச்சரம்
உஉ. திருச்சத்திமுற்றம்.
உங. திருப்பட்டீச்சரம்
உச. திருப்பழையாறை.
உஞ. வடதளி.
உசு. திருவலஞ்சுழி.
உஎ. குடமூக்கு. எ-து. கும்ப கோணம்.
உஅ. திருக்குடந்தைக் கீழ்க் கோட்டம்.
உக. திருக்குடந்தைக் காரோ ணம்.
கூ0. திருநாகேச்சரம்.
கூக. திருவிடைமருதூர்.
கூஉ. தென்குரங்காடுதுறை.
கூங திருநீலக்குடி.
கூச. வைகன்மாடக்கோயில்.
கூஞ. திருநல்லம்.
கூசு. திக்கோழம்பம்.
கூஎ. திருவாவடுதுறை.
கூஅ. திருத்துருத்தி. எ-து. கும்.
கூக. திருவழுந்தூர்.
சூ0. திருமயிலாடுதுறை. எ-து மாயூரம்.
சக. திருவிளநகர்.
சஉ. திருப்பறியலூர்.
சங. திருச்செம்பொன்பள்ளி.
சச. திருநனிபள்ளி.
சஞ. திருவலம்புரம்.
சசு. தலைச்சங்காடு.
சஎ. திருவாக்கூர்த் தான்றோன்றிமாடம்.
சஅ. திருக்கடவூர்.
சகு. திருக்கடவூர்மயானம்.
ஞ0. திருவேட்டக்குடி.
ஞக. திருத்தெளிச்சேரி.
ஞஉ. தருமபுரம்.
ஞங. திருநள்ளாறு.
ஞச. கோட்டாறு.
ஞஞ. திருவம்பர்ப்பெருந் திருக்கோயில்.
ஞசு. திருவம்பர்மாகாளம்.
ஞஎ. மீயச்சூரிளங்கோயில்.
ஞஅ. திலதைப்பதி.
ஞகு. திருப்பாம்புரம்
சு0. சிறுகுடி.
சுக. திருவீழிமிழலை.
சுஉ. வன்னியூர்.
சுங. கருவிலி.
சுச. பேணுபெருந்துறை.
சுஞ. நறையூர்ச்சித்தீச்சரம்.
சுசு. அரிசிறகரைப்புத்தூர்.
சுஎ. சிவபுரம்.
சுஅ. கலயநல்லூர்.
சுகு. கருக்குடி.
எ0. திருவாஞ்சியம்.
எக. திருநன்னிலத்துப் பெருங்கோயில்.
எஉ. திருக்கொண்டீச்சரம்.
எங. திருப்பனையூர்.
எச. திருவிற்குடி.

எடு. திருப்புகலூர்.
எசு. திருப்புகலூர் வர்த்தமானீச்சரம்.
எள. இராமனதீச்சரம்.
எஅ. திருப்பயற்றூர்.
எக. திருச்செங்காட்டங்குடி.
அ0. திருமருகல்.
அக. திருச்சாத்தமங்கை.
அஉ. நாகைக்காரோணம்.
அங. சிக்கல்.
அச. கீழ்வேளூர்.
அடு. தேவூர்.
அசு. பள்ளியின்முக்கூடல்.
அள. திருவாஞ்சியம்.
அஅ. திருவாஞ்சியமெனறி.
அக. திருவாஞ்சிப் பரவையுண் மண்டளி.
கூ0. திருவிளமர்.
கூக. கரவீரம்.
கூஉ. பெருவேளூர்.
கூங. தலைபாலங்காடு.
கூச. குடவாயில்.
கூடு. திருச்சேறை
கூசு. நாலூர்மயானம்.
கூள. கடவாய்க்கரைப்புத்தூர்.
கூஅ. இரும்பூளை.
கூக அரதைப்பெரும்பாழி.
கஅ0 அவளிவணல்லூர்.

கoக. பரிதியியமம்.
கoஉ. வெண்ணியூர்.
கoங. பூவனூர்.
கoச. பாதாளீச்சரம்.
கoடு. திருக்களர்.
கoசு. சிற்றேமம்.
கoள. திருவுசாத்தானம்.
கoஅ. இடும்பாவனம்.
கoக. கடிக்குளம்.
ககo. தண்டலைநீணெறி.
ககக. கோட்டூர்.
ககஉ. வெண்டுறை
ககங. கொள்ளம்பூதூர்.
ககச. பேரெயில்.
ககடு. கொள்ளிக்காடு.
ககசு. தெங்கூர்.
ககள. நெல்வெக்கா.
ககஅ. நாட்டியத்தான்குடி.
ககக. காரோணம்.
கஉo. கன்றாப்பூர்.
கஉக. வலிவலம்.
கஉஉ. கைச்சினம்.
கஉங. கோளிலி.
கஉச. திருவாய்மூர்.
கஉடு. திருமறைக்காடு. எ - து வேதாரணியம்.
கஉசு. அகத்தியான்பள்ளி.
கஉள. கோடிக்குழகர்.

ஏழுநாட்டிலுள்ள தலங்கள்.

க. திருக்கோணமலை. | உ. திருக்கேதீச்சரம்.

பாண்டிநாட்டிலுள்ள தலங்கள்.

திருவாலவாய். எ - து மதுரை.
உ. திருவாப்பனூர்.
ஊ. திருப்பரங்குன்றம்.
ச. திருவேடகம்.
டு. கொடுங்குன்றம்.
சு. திருப்புத்தூர்.
எ. திருப்புனவாயில்.

அ இராமேச்சுரம்.
க திருவாடானை.
கo. திருக்கானப்பேர். எ-து காளையார்கோயில்.
கக. திருப்பூவணம்.
கஉ. திருச்சுழியல்.
கஊ. திருக்குற்றாலம்.
கச. திருநெல்வேலி.

மலைநாட்டிலுள்ள தலம்.

க. திருவஞ்சைக்களம்.

கொங்கநாட்டிலுள்ள தலங்கள்.

க. அவிநாசி.
உ. திருமுருகன்பூண்டி.
ங. திருநணு. எ - து. பவானிகூடல்.
ச. கொடிமாடச் செங்குன்றூர். எ - து. திருச்செங்கோடு.
ஞ. வெஞ்சமாக்கூடல்.
ரு. திருப்பாண்டிக் கொடுமுடி.
எ. கருவூரானிலை. [டி.

நடுநாட்டிலுள்ள தலங்கள்.

க. திருநெல்வாயிலரத்துறை
உ. திருப்பெண்ணாகடம் - தாங்காணமாடம்.
ங. கூடலையாற்றூர்.
ச. திருவெருக்கத்தம்புலியூர்
ஞ. திருத்தினைநகர்.
ரு. திருச்சோபுரம்.
எ. திருவதிகை.
அ. திருவாவடுதுறை.
கூ. திருமுதுகுன்றம். எ-து. விருத்தாசலம்.
கo. திருநெல்வெண்ணெய்.
கக. திருக்கோவலூர்.
கஉ. அரையணிநல்லூர்.
கங. இடையாறு.
கச. திருவெண்ணெய்நல்லூர்
கஞ. துறையூர்.
கரு வடுகூர்.
கஎ. திருமாணிகுழி.
கஅ. திருப்பாதிரிப்புலியூர்.
கக. முண்டீச்சரம்.
உo. புறவார்பனங்காட்டூர்.
உக. ஆமாத்தூர்.
உஉ. திருவண்ணாமலை.

தொண்டைநாட்டிலுள்ள தலங்கள்.

க. திருக்கச்சியேகம்பம்.
உ. திருக்கச்சிமேற்றளி.
ங. திருவோணகாந்தன்றளி
ச. கச்சியனேகதங்காவதம்.
ஞ. கச்சிநெறிக்காரைக்காடு.
ரு. குரங்கணின்முட்டம்.
எ. திருமாகறல்.
அ. திருவோத்தூர்.
கூ. பனங்காட்டூர்.
கo. வல்லம்.
கக. திருமாற்பேறு.
கஉ. திருஊறல். எ - து. தக்கோலம்.
கங. இலம்பையங்கோட்டூர்.
கச. திருவிற்கோலம். எ-து. கூவம்.
கஞ. திருவாலங்காடு.
கரு. திருப்பாசூர்.
கஎ. திருவெண்பாக்கம்.
கஅ. திருக்கள்ளில்.
கக திருக்காளத்தி.
உo. திருவொற்றியூர்.
உக. வலிதாயம். எ-து. பாடி.
உஉ. திருமுல்லைவாயில்.
உங. திருவேற்காடு.
உச. திருமயிலாப்பூர்.
உஞ. திருவான்மியூர். [ல்.
உரு. திருக்கச்சூராலக் கோயி
உஎ. திருவிடைச்சுரம்.
உஅ. திருக்கழுக்குன்றம்.
உக. அச்சிறுபாக்கம்.
கo திருவக்கரை.
கக. அரசிலி.
கஉ. இரும்பைமாகாளம்.

தொண்டைநாட்டிலுள்ள தலம்.

க. திருக்கோகர்ணம்.

வடநாட்டிலுள்ள தலங்கள்.

க	திருப்பருப்பதம். எ-து ஸ்ரீசைலம் அல்லது மல்லிகார்ச்சுனம்.	கூ.	அனேகதங்காவதம்.
		சு.	திருக்கேதாரம்.
		ஙி.	கொடித்தான்மலை. எ-து ஸ்ரீகைலாசமலை.
உ.	இந்திரநீலபருப்பதம்.		

அட்டவீரட்டம்.

பூமன் சிரங்கண்டி யர்தகன் கோவல் புரமதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
காமன் குறுக்கை யமன்கட வூரிற்தக் காசினியிற்
றேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன் சேவகமே.

க. திருக்கண்டியூர் - பிரமனதுசிரங்கொய்த தலம்.
உ. திருக்கோவலூர் - அந்தகாசுரனைக் கொன்ற தலம்.
கூ. திருவதிகை - திரிபுரத்தையெரித்த தலம்.
சு. திருப்பறியலூர் - தக்கன்சிரசைத் தடிந்த தலம்.
ஙி. திருவிற்குடி - சலந்தரனைத் தலையரிந்த தலம்.
ஞ. திருவழுவூர் - யானையையுரித்த தலம்.
எ. திருக்குறுக்கை - மன்மதனையெரித்த தலம்.
அ. திருக்கடவூர் - இயமனையுதைத்த தலம்.

புராணவகராதி.

புராணப்பெயர்.	பக்கம்.
அதிபத்தநாயனார் புராணம்.	உசக
அப்பாலுமடிச்சார்ந்தார் புராணம்.	உஅஉ
அப்பூதியடிகணாயனார் புராணம்.	கடுக
அமர்நீதிநாயனார் புராணம்.	எடு
அரிவாட்டாயநாயனார் புராணம்.	க0ஙூ
ஆனாயநாயனார் புராணம்.	க0ச
இசைஞானியார் புராணம்.	உஅஅ
இடங்கழிநாயனார் புராணம்.	உஎடு
இயற்பகைநாயனார் புராணம்.	சுச
இளையான்குடிமாறநாயனார் புராணம்.	சுஅ
உருத்திரபசுபதிநாயனார் புராணம்.	கக0
எறிபத்தநாயனார் புராணம்.	அ0
ஏயர்கோன்கலிக்காமநாயனார் புராணம்.	உசூஉ
ஏனாதிநாதநாயனார் புராணம்.	அச
ஐயடிகள்காடவர்கோனாயனார் புராணம்.	உஎ0
கணநாதநாயனார் புராணம்.	உசக
கணம்புல்லநாயனார் புராணம்.	உஎக
கண்ணப்பநாயனார் புராணம்.	அசு
கலிக்கம்பநாயனார் புராணம்.	உசஎ
கலியநாயனார் புராணம்.	உசுஅ
கழற்சிங்கநாயனார் புராணம்.	உஎச
காரிநாயனார் புராணம்.	உஎக
காரைக்காலம்மையார் புராணம்.	கடுக
குங்குலியக்கலயநாயனார் புராணம்.	கூஅ
குலச்சிறைநாயனார் புராணம்.	கசகூ
கூற்றுவநாயனார் புராணம்.	உசுக
கோச்செங்கட்சோழநாயனார் புராணம்.	உஅடு
கோட்புலிநாயனார் புராணம்.	உஎஎ
சடையநாயனார் புராணம்.	உஅஅ
சண்டேசுரநாயனார் புராணம்.	கஙடு
சத்திநாயனார் புராணம்.	உசுக
சாக்கியநாயனார் புராணம்.	உசஙூ
சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார் புராணம்.	உஅ0
சிறப்புலிநாயனார் புராணம்.	உசடு
சிறுத்தொண்டநாயனார் புராணம்.	உசடு
சுந்தரமூர்த்திநாயனார் புராணம்.	க
செருத்துணைநாயனார் புராணம்.	உஎசு

புராணப்பெயர்.	பக்கம்.
சேரமான்பெருமாணையனார் புராணம்.	உஙிஉ
சோமாசிமாறநாயனார் புராணம்.	உசக
தண்டியடிகணையனார் புரா ம்.	உகஎ
திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணம்.	ககங
திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம்.	கசசு
திருநாவுக்கரசுநாயனார் புராணம்.	கஉக
திருநாளைப்போவார்நாயனார் புராணம்.	ககக
திருநீலகண்டநாயனார் புராணம்.	ஙிக
திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் புராணம்.	உஅள
திருநீலநக்கநாயனார் புராணம்.	கசு0
திருமூலநாயனார் புராணம்.	உங்ஙி
திருவாரூர்ச்சிறப்பு.	ச
திருவாரூர்ப்பிறந்தார் புராணம்.	உஅக
தில்லைவாழந்தணர் புராணம்.	ஙிள
நமிநந்தியடிகணையனார் புராணம்.	ககசுங
நரசிங்கமுனையரையநாயனார் புராணம்.	உசுஙி
நெடுமாறநாயனார் புராணம்.	உஎஉ
நேசநாயனார் புராணம்.	உஅஙி
பத்தராய்ப்பணிவார் புராணம்.	உஎக
பரமனேயபாடுவார் புராணம்.	உஎசு
புகழ்ச்சோழநாயனார் புராணம்.	உசுங
புகழ்த்துணைநாயனார் புராணம்.	உஎச
புராணவரலாறு.	க
பூசலார்நாயனார் புராணம்.	உஅங
பெருமிழலைக்குறும்பநாயனார் புராணம்.	கஙி0
பொய்யடிமையில்லாதபுலவர் புராணம்.	உசங
மங்கையர்க்கரசியார் புராணம்.	உஅச
மானக்கஞ்சாறநாயனார் புராணம்.	க0க
மூப்பொழுதுத்திருமேனிதீண்டுவார் புராணம்.	உஅக
முருகநாயனார் புராணம்.	கக()
முழுநீறுபூசியமுனிவர் புராணம்.	உஅஉ
முனையடுவார்நாயனார் புராணம்.	உஎக
மூர்க்கநாயனார் புராணம்.	உசo
மூர்த்திநாயனார் புராணம்.	க0எ
மெய்ப்பொருணாயனார் புராணம்.	எக
வாயிலார்நாயனார் புராணம்.	உஎஉ
விறன்மிண்டநாயனார் புராணம்.	எச

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணம்

என்று வழங்குகிற

திருத்தொண்டர்புராணம்.

கடவுள் வணக்கம்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்.

புராணவரலாறு.

அநாதிமலமுத்தராய், நித்தியராய், வியாபகராய், எல்லா வறிவும் எல்லாமுதன்மையும் எல்லாவநுக்கிரகமு முடைய ராய், ஆன்மாக்களிடத்தே பதிந்தகைம்மாறற்ற பெருங்கருணை யினலே படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையும் இயற்றுதியற்றும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான், ஒரு திருமுகமும், சந்திரன் சூரி யன் அக்கினி என்னும் முச்சுடர்களாகிய மூன்று திருக்கண் களும், கங்கையையும் பிறையையும் கொன்றைமாலையையுஞ் சூடிய சடாமுடியும், சங்கக்குண்டலத்தையும் தோட்டையும் அணிந்த திருச்செவிகளும், காளகண்டமும், மான் மழு அப யம் வரதம் என்பவைகளோடு கூடிய நான்கு திருக்கரங்களும்,

விபூதியினுலே உத்தூளிக்கப்பட்ட செம்பவளத்திருமேனி யும், வெள்ளைப்பூணூலையும் எண்ணிறந்த பிரம விட்டுணுக்க ளுடைய என்புமாலைகளையும் பிரம கபாலங்களையும் அணிந்த திருமார்பும், புலித்தோலையுடுத்து உடைவாளுடனே கச்சை யுடைத்தாய் விளங்குந் திருவரையும், வீரக்கழலும் சிலம்பும் ஒலிக்கும் செந்தாமரைமலர்போலுந் திருவடிகளும் உடைய ஸ்ரீகண்டசரியாய், பலவிரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட வெள்ளிமயமாகிய நாலுவித சிகரங்களோடு கூடிய திருக்கை லாசமலையிலே, செம்பொற்றிருக்கோயிலிலே, பூதர்களுட்பலர் நாலுவித வாத்தியங்களை முழக்க, பலர் இருபுறத்தும் வெண் சாமரம்வீச, வேறுபலர் ஆலவட்டம் அசைப்ப, தும்புரு நார தர்களும் விஞ்சையர்களும் இசைபாட, கணநாதர்கள் என்புக ளெல்லாம் அழலிடைப்பட்ட வெண்ணெய்போலக் கரைந்து நெக்குநெக்குருகவும், சரீரநடுங்கவும், உரோமஞ் சிலிர்ப்பவும், மதகினிற் புறப்படுஞ் சலம்போல ஆனந்தவருவி சொரியவும், பேரானந்தப்பெருங்கடலுட்டிளைத்து ஆடிப்பாட, முனிவர் கள் தங்கள் கைகளைச் சிரசின்மீது குவித்து வேதசிரசுகளா கிய உபநிடதங்களை எடுத்தோத, பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்கள் திருநந்திதேவருடைய வேத்திரப்படை யினுலே பலமுறை விலக்கப்பட்டும் அடிக்கப்பட்டும் ஒதுக்கப் பட்டும் ஆடையை ஒதுக்கி வாய்புதைத்து நின்று தத்தங் குறைகளைக்கூற, அநந்தகோடி சூரியர்களது ஒளியைப்போ லும் பேரொளியையுடைய திவ்விய சிங்காசனத்தின்மேலே, தமது அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய பார்ப்பதிதேவி யார் தமது இடப்பாகத்தின் மேவ, வீற்றிருந்தருளுவர்.

அத் திருக்கைலாசமலையின் அடிவாரத்தின் கண்ணே, வியாக்கிரபாதமகாமுனிவருடைய திருக்குமாரரும், சிதம்ப ரத்திலே சிவபெருமானல் வருவித்தருளப்பட்ட திருப்பாற்க டலிலுண்ட மெய்யடியாரும், கிருஷ்ணரைச் சிவதீக்ஷைசெய்து தடுத்தாட்கொண்டருளிய சைவாசாரியருமாகிய உபமன்னியு மகாமுனிவர் எண்ணில்லாத முனிவர்கள் கூட்டஞ்சூழ எழுந் தருளியிருந்தார். அப்பொழுது அவ்விடத்தில் அவரெதிரே ஒரு பேரொளி ஆயிரஞ் சூரியருடைய ஒளிபோலத் தோன்

றிற்று. அதுகண்ட முனிவர்களெல்லாரும் "இஃது என்ன யாச்சரியம்" என்றார்கள். உடனே உபமன்னியுமகாமுனிவர் உயிர்க்குயிராய் நின்று உணர்த்துஞ் சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்து, அவரது திருவருளினாலே, திருக்கைலாசத்தினின்றும் நீங்கித் தக்கிணபூமியிலே திருவவதாரஞ்செய்தருளிய சுந்தரமூர்த்திநாயனார் எழுந்தருளிவருகின்றார் என்பதனை உணர்ந்து, விரைந்தெழுந்து, இரண்டுகைகளுஞ் சிரசின்மீதேறிக் குவிய ஆனந்தவருவி திருமேனியெங்கும் பெருக, அந்தத் திக்கை நோக்கி நடந்தார். அப்பொழுது முனிவர்கள் "முனிவர்பெருமானே, சிவபெருமானையன்றிப் பிறரொருவரையும் வணங்கா இயல்பினராகிய நீர் இங்கே வணங்கிய காரணம் யாது" என்று வினவ, உபமன்னியுமகாமுனிவர் "முனிவர்களே, கேளுங்கள். ஆதிகாலத்திலே திருக்கைலாசபதியாகிய சிவபெருமான் தமது திருவுருவத்தைக் கண்ணுடியிலே பார்த்து அழைத்தருளலும், கோடி சூரியர்கள் ஒருங்கு திரண்டாற்போலுந் திருமேனிப்பிரகாசத்தோடுந் தோன்றினார். அவர் பெயர் சுந்தரர். அவர் திருப்பாற்கடலினின்றுந் தோன்றிவிட்டனவு முதலிய தேவர்களெல்லாரையும் அஞ்சியோட்டெடுப்பித்த ஆலாகலவிஷத்தைச் சிவபெருமான் திருவமுது செய்தருளும்பொருட்டுத் தமது உள்ளங்கையினுள்ளே அடக்கிக்கொண்டுபோய்க் கொடுத்தார். அதனால் அவர்பெயர் ஆலாலசுந்தரர் என்றுபெற்று. அவர் சிவபெருமானுக்குப் புஷ்பமாலை தொடுத்துச் சாத்துதலும் விபூதிபாத்திரந் தாங்குதலுமாகிய திருத்தொண்டுபூண்டவர். அவர் சிவபெருமானது ஆஞ்ஞையினாலே திருக்கைலாசமலையினின்றும் நீங்கித் தக்ஷிணபூமியிலே திருவவதாரஞ்செய்து, ஆன்மாக்களெல்லாம் உய்யும்பொருட்டுத் தமிழ்வேதமாகிய தேவாரத்தை அருளிச்செய்து, இப்போது தேவர்கள் சூழ வெள்ளையானைமேற்கொண்டு திருக்கைலாசத்துக்கு எழுந்தருளி வருகின்றார். அவர் எம்மாலும் எவராலும் வணங்கப்படும் பெருந்தகைமையையுடையவர்" என்று சொல்லியருளினர்.

அதுகேட்ட முனிவர்கள் உபமன்னியுமகாமுனிவரை வணங்கி, "சுவாமீ, இத்துணைப்பெருஞ்சிறப்பினையுடைய நாய

ரது சரித்திரத்தைக்கேட்கப்போகைகொண்டோம், அடியேங்களுக்கு அருளிச்செய்யும்" என்று விண்ணப்பஞ்செய்ய, உபமன்னியுமகாமுனிவர் "முனிவர்களே, சுந்தரமூர்த்திநாயனருடைய சரித்திரத்தையும், அவர் திருவாரூரிலே வன்மீகநாதர் அடியெடுத்துக்கொடுக்க அருளிச்செய்த திருத்தொண்டத்தொகை என்னுந் திருப்பதிகத்திற் சொல்லப்பட்ட திருத்தொண்டர்களுடைய சரித்திரத்தையும், சர்வான்மாக்களும் உய்யும்பொருட்டு, உங்களுக்குச் சொல்லுவாம், கேளுங்கள்" என்று திருவாய்மலர்ந்தருள்வாராயினர்.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்ச்சிறப்பு.



தேவியை தேசமாகிய தமிழ்நாடு, சிதம்பரம் காஞ்சிபுரமுதலிய எண்ணில்லாத சிவதலங்களையுடைமையால், மற்றை எத்தேசங்களினுஞ் சிறப்புற்றது. அதனுள்ளும் சோழமண்டலம் மிகச் சிறப்புற்றது. அது அகத்திய மகாமுனிவருடைய கமண்டலத்தை விநாயகக்கடவுள் காக வடிவாய்ச் சென்று கவிழ்ப்ப, அதனுலே பொழியப்பட்டுச் சையகிரியினின்றுந் தோன்றிப் பெருகுந் தெவ்விய தீர்த்தமாகிய காவேரிநதியையுடையது.

அச்சோழமண்டலத்திலே, சூரியகுலத்தர்களாகிய சோழராஜாக்களுக்கு உரிய இராசதானிகள் ஐந்தவுள் *ஒன்றுகியும், காவற்கடவுளாகிய விட்டுணுவினுடைய மஹேஷியாகிய இலக்குமியினுலே பூசிக்கப்பட்டதாகியும், பிரமாவின் சரீரமாகிய பிரமாண்டத்துக்கு மூலாதாரஸ்தலமாகியும் உள்ளது திருவாரூர். அத்திருவாரூரின்கண் இருந்து அரசியற்றிய சோழராஜாக்களுள்ளே மனுநீதிகண்டசோழரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் உயிர்களுக்கெல்லாங் கண்ணும் உயிரும் போன்றவர். வன்மீகநாதராகிய சிவபெருமானுக்கு நிபந்தம்

* சோழராஜாக்களுக்குரிய ராஜதானிகள் ஐந்தாவன காவிரிப்பூம்பட்டினம், கருவூர், திருவாரூர், உறையூர், திருச்சேய்ஞலூர் என்பனவாகும்.

அமைத்து, பூசை முதலியவைகளைச் சிவாகமவிதிப்படி வழுவாது சிரத்தையோடு நடத்துவிப்பவர்.

அவர் செங்கோனடாத்தி அரசியற்று நாளிலே, அவர் செய்த சிவபுண்ணியபலத்தினாலே, அவருக்கு ஒருபுத்திரன் அவதரித்தான். அவன் பல கலைகளையுங் கசடறக் கற்று வல்லனாகி, அறிவொழுக்கங்களிற் சிறந்து, இளவரசாதற்குத் தக்க பருவத்தையுடையனாய் வாழுநாளிலே, ஒருநாள், இராசமாளிகையினின்றும் புறப்பட்டு, இராசகுமாரர்களுஞ் சேனைகளுஞ் சூழத் தேரிலேறி வீதியிற் சென்றான். செல்லும்பொழுது வீதியிலே ஒருபசுக்கன்று துள்ளிக்கொண்டு போய், அத்தேர்க் காலினடியில் அகப்பட்டிறந்தது. அதுகண்ட தாய்ப்பசுச் சுழன்று ஓடிவந்து, அலறிச் சோர்ந்து, நடுங்கி விழுந்தது. சோழபுத்திரன் அதுகண்டு, "அபாயம் வந்ததே" என்று திடுமாறி, மனத்துயரங்கொண்டு, அறிவழிந்து, தேரினின்றும் வீழ்ந்தான்; அலறுகின்ற தாய்ப்பசுவைப் பார்த்து உயிர் பதைத்துச் சோர்வான்; இறந்து கிடக்கின்ற கன்றைப் பார்த்துப் பெருமூச்செறிந்து இரங்குவான்; "நானொருவன் பிறந்தது என்னுடைய தந்தையாருக்கு இப்படி வந்தெய்துதற்கோ" என்பான். "எனக்கு அபுத்திபூர்வமாக வந்த இப்பாவத்திற்குப் பிராயச்சித்தம் உளதாயின், என்னுடைய தந்தையார் அறியுமுன்னமே பிராமணர் விதிக்கும் பிரகாரஞ் செய்துகொள்ளல் வேண்டும்" என்று சிந்தித்துப் பிராமணரிடத்தே சென்றான்.

தன்கன்றை இழந்த பசு அத்துயரத்தைச் சகிக்கமாட்டாது பெருமூச்செறிந்து, கண்ணீர் வாரச் சென்று, இராசமாளிகைவாயிலிற் கட்டிய ஆராய்ச்சிமணியைத் தன் கொம்பினால் அடித்தது. அதுகேட்ட மனுநீதிகண்டசோழர் சிங்காசனத்தினின்றும் இறங்கி, விரைந்துபோந்து, வாயிலை அடைய; வாயிற் காவலாளர்கள் எதிர்வந்து வணங்கி, "மகாராஜாவே, இங்கே ஒருபசு வந்து ஆராய்ச்சிமணியைத் தன்கொம்பினால் அடித்தது" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். மனுநீதிகண்ட சோழர் அதுகேட்டு, வருத்தமுறுகின்ற பசுவைப் பார்த்து, "இப்பசுவுக்கு யாது இடையூறு நிகழ்ந்தது" என்று மந்திரி

கனைக் கோபித்துப்பார்க்க, அம்மந்திரிகளுள் ஒருவன் வணங்கி நின்று, "மகாராஜாவே, உம்முடைய புத்திரன் தேர்மேலேறி வீதியிற் போம்பொழுது, ஒரு பசுக்கன்று அத்தேர்க்காலில் அகப்பட்டிறந்தது. அதன்றாயாகிய இப்பசு இங்கு வந்து ஆராய்ச்சிமணியை அடித்தது" என்று விண்ணப்பஞ்செய்தான். அதுகேட்ட மனுநீதிகண்டசோழர் பெருந்துயரங் கொண்டு இரங்கி ஏங்கி, "என் செங்கோன்முறைமை நன்று நன்று" என்பார்; இது யாது செய்தாற்றீரும்" என்பார்; கன்றையிழந்த தாய்ப்பசுவின் முகத்தைப் பார்த்துச் சோர்வார். மந்திரிகள் அது கண்டு அச்சோழருடைய பாதங்களை வணங்கி நின்று "மகாராஜாவே, மனந்தளர்ந்தருளுவது இதற்குப் பரிகாரமாகாது. உம்முடைய புத்திரனைக்கொண்டு கோவதைக்குத் தருமநூல்களில் விதிக்கப்பட்ட பிராயச்சித்தத்தைச் செய்வித்தலே தருமம்" என்றார்கள். அதற்கு மனுநீதிகண்டசோழர் "நீங்கள்கூறும் பிராயச்சித்தம் கன்றையிழந்தலறும் இப்பசுவினது நோய்க்கு மருந்தாகுமா? நான் ஏகபுத்திரனை இழக்கின்றேன் என்று கருதி நீங்கள் எல்லீருஞ் சொல்லிய இவ்வார்த்தைக்கு நான் இசைந்தேனையின், நடுவுநிலைமை தவறுதா! உயிர்களுக்குத் தன்னாலும், தன் பரிவாரத்தாலும், பகைவராலும், கள்வராலும், உயிர்களாலும் எய்தற்பாலனவாகிய ஐந்து பயத்தையும் நீக்கி அவைகளைக் காப்பவனன்றே அரசனெனப்படுவான். நான் என்புத்திரன் செய்த பாவத்தின்பொருட்டுப் பிராயச்சித்தஞ்செய்தற்கு உடன்பட்டுப் பிறனொருவன் செய்த பாவத்தின்பொருட்டு அவனைக் கொல்வேனையின், ஆதிகாலத்திருந்த மனுவினாலே செய்யப்பட்ட தருமநூல்விதி இப்பொழுது மனுவென்னும் ஒரு சோழனால் நீக்கப்பட்டது என்னும் பழிமொழி உலகத்திலே நிலைபெறுதா" என்றார். அப்பொழுது மந்திரிகள் "மகாராஜாவே, இப்பூமியின்கண்ணே இதுபோல முன்னும் நடந்திருக்கின்றதே. இக்குற்றத்தின் பொருட்டு உம்முடைய புத்திரனைக் கொல்லல் முறையன்று. தருமநூலில் விதிக்கப்பட்ட பிராயச்சித்தஞ் செய்வதே பண்டுதொட்டு ஆன்றோர் வழங்கிய வழக்கு" என்றார்கள். அதற்கு மனுநீதிகண்டசோழர் "நீங்கள் தருமநெறியின் உண்மையைச் சிறிதும் சிந்தியாது பேசுகின்றீர்கள். எந்தலோகத்

திலே எந்தப்பசு கன்றையிழந்த துன்பத்தினால் ஆராய்ச்சி மணியை அடித்தது! சொல்லுங்கள். அன்றியும் சிவபெரு மான் எழுந்தருளியிருக்குந் திருவாரூரிலே பிறந்த உயிரைக் கொன்றனே. ஆதலால் அவனைக் கொல்வதே தண்டபொருள் என்று சிந்தியுங்கள். நான் இப்பசுவினது துயரத்தை நீக்க வல் லனல்லேன். ஆதலால் இப்பசுத் தன்கன்றையிழந்து துயரு றுதல்போல நானும் என்புத்திரனை யிழந்து துயருறுதலே நீதி'' என்று சொல்லி, எவ்விடத்தும் எக்காலத்தும் எவரா லுஞ் செயற்கரிய செய்கையைச் செய்யத்துணிந்தார். உடனே மந்திரிகள் அஞ்சி, அவ்விடத்தினின்று நீங்கினார்கள்.

மனுநீதிகண்டசோழர் தம்முடைய புத்திரனை அங்கு வரவழைத்து, ஒருமந்திரியைப் பார்த்து, ''நீ இந்தப்பிள் ளையை வீதியிலே தேர்க்காலின்கீழே கிடத்தித் தேரை நடத் தக்கடவாய்'' என்றார். அம்மந்திரி போய், அவ்வாறு செய் யாது தன்னுயிரை விடுத்தான். அதனையுணர்ந்த மனுநீதி கண்டசோழர் தம்முடைய புத்திரனைத் தாமேகொண்டு வீதி யிற் சென்று, தம்முடைய குலத்துக்கு ஒருபுத்திரனே உளன் என்பதைச் சிந்தியாது, தருமவழி நடத்தலொன்றையே சிந் தித்து, அவனைக்கீழே கிடத்தி, அவன் மார்பிலே உருளை அழுந்தும்படி தேரை நடத்தினார்.

மனுநீதிகண்டசோழர் செய்த இச்செயற்கருஞ் செய்கை யைக் கண்டு, மனிதர்கள் தரியாது கண்மழை பொழிந்தார்கள். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். சர்வலோகைக நாயகரா கிய தியாகேசர் இடபவாகனமேற்கொண்டு, தேவர்களும் பூதர் களும் புடைசூழ எழுந்தருளிவந்து முன்னின்றார். மனுநீதி கண்டசோழர் அவரைத் தரிசித்து வணங்கிப் பேரானந்தப் பெருங்கடலின் மூழ்கினர். அப்பொழுதே பசுக்கன்றும் இரா ஜகுமாரனும் மந்திரியும் உயிர்பெற்றெழுதலும், அதுகண்ட சோழர் தாம் இத்தன்மையினரென்றறியாதவராயினர். அவர் தமது பாதத்தில் வந்து வணங்கிய புத்திரனைத் தழுவி மன மகிழ்ந்தார். பசுத் தன்னையணைந்த தன்கன்று உண்ணும்வண் ணம் பாலைப் பொழிந்து தனக்குண்டாகிய துன்பநீங்கிற்று.

தியாகேசர் மனுநீதிகண்டசோழருக்குத் திருவருள் செய்து மறைந்தருளினர்.

இப்படியே தருமநெறியில் வழுவாதொழுகும் எண்ணில்லாத மெய்யன்பர்களுக்குப் பரமப்பிரசாதஞ் செய்துகொண்டு சருவசீவதயாபரராகிய தியாகேசர் எழுந்தருளியிருக்குந் திருவாரூரினது மகிமை நம்மாலே சொல்லற்பாலதன்று. அத்திருவாரூருக்கு வன்மீகநாதக்கடவுளுடைய திருக்கோயில் இருதய கமலம்போலும். அத்திருக்கோயிலிலே தேவாசிரயனெனப் பெயர் பெற்ற ஆயிரக்கான் மண்டபமொன்றுண்டு. தியாகேசரைச் சேவிக்கும்பொருட்டு இத்தலத்தென்று அளவிடப்படாத பேராசையோடு வந்து கூடும் விட்டுணு பிரமா இந்திரன் முதலிய தேவர்களெல்லாரும் அம்மண்டபத்திலே நிறைந்திருப்பார்கள். விபூதி உருத்திராக்கம் என்னும் சிவசின்னங்களைத் தரித்தவர்களும், திருவைந்தெழுத்தை உச்சரிப்பவர்களும், ஓமும் பொன்னும் ஒப்ப நோக்குபவர்களும், நல்வினையால் வரும் இன்பத்தினும் தீவினையால் வரும் துன்பத்தினும் சமபுத்தியுள்ளவர்களும், பசுபதியாகிய சிவபெருமானுடைய திருவடிக்கன்னைதாகிய மெய்யன்பொன்றையே உயிர்வாழ்வில்லாத பெருஞ்செல்வமெனக் கொண்டு இடையறாதொழுகுந் தலைதாளை போலும் இயற்கைத்தாகிய அவ்வன்பால் விழுங்கப்பட்டவர்களும், சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் விட்டுநெறி நான்கின்வழியே நிற்பவர்களுமாகிய திருத்தொண்டர்களுடைய திருக்கூட்டம் அத்தேவாசிரய மண்டபமெங்கும் நிறைந்திருக்கும். அம் மெய்யடியார்களுடைய பெருமையை ஒன்றுக்கும் பற்றுத நாம் எங்ஙனமறிந்து எங்ஙனஞ்சொல்லுவோம்.

இனி எம்பெருமானுகிய ஆலாலசுந்தரர் தென்னாட்டிலே திருவவதாரஞ்செய்து, இந்தத் திருத்தொண்டர் திருக்கூட்டத்தைத் தரிசித்து, திருத்தொண்டத்தொகை செய்தருளிய சரித்திரத்தைச் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்திநாயனார் புராணம்.

திருக்கைலாசமலையிலே பிரமவிட்டுணுமுதலிய ஆன்மாக்களுக்கு நிக்கிரகாநுக்கிரகங்கள் செய்யும்பொருட்டுத் தமது சத்தியாகிய உமாதேவியாரோடும் எழுந்தருளியிருக்கின்ற அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமானுடைய அடியார் கூட்டத்துள் ஒருவராகிய ஆலாலசுந்தரர், ஒருநாள், பத்தர்கள் செய்யும் அருச்சனையை அவர்கள் முத்திபெற்று உய்யும்பொருட்டுக் கொண்டருளுகின்ற அக்கடவுளுக்குத் தரிக்கும்பொருட்டு, புஷ்பங்களைக் கொய்வதற்குத் திருநந்தனவனத்துக்குப் போனார். போனபோது, பார்வதிதேவியாருக்குத் தரிக்கும்பொருட்டு அந்தத் திருநந்தனவனத்திலே புஷ்பங்கொய்துகொண்டு நின்ற அவருடைய சேடியர்களாகிய அனிந்திதை கமலினி என்னும் பெயர்களையுடைய பெண்களிருவரையுங்கண்டு, அவர்கண்மேல் ஆசை வைத்தார். அவர்களும் ஆலாலசுந்தரரைக்கண்டு அவர்மேல் ஆசைகொண்டார்கள். பின்பு ஒருபிரகாரம் மனசைத் திருப்பி, புஷ்பங்களைக்கொய்துகொண்டு, ஆலாலசுந்தரர் சிவசந்நிதானத்துக்கும், சேடியர்கள் தேவி சந்நிதானத்துக்கும், திரும்பிவிட்டார்கள். அப்போழுது, சர்வான்மாக்களிடத்திலும் வியாபித்திருந்து அந்த அந்த ஆன்மாக்கள் மனம் வாக்குக்காயங்களினாலே செய்கின்ற கர்மங்களை அறிந்து அந்த அந்தக் கர்மங்களுக்கு ஏற்ற பலங்களை ஊட்டி அக்கர்மங்களைத் தொலைப்பிக்கின்ற காருண்ணியஸ்வரூபியாகிய கடவுளானவர் ஆலாலசுந்தரரை நோக்கி, "நீ பெண்கள்மேல் இச்சைகொண்டபடியால், தக்ஷிணபூமியிலே மானுடதேகம் எடுத்துப் பிறந்து அந்தப்பெண்களோடு புணர்ந்து இன்பம் அனுபவிப்பாய்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அதைக்கேட்ட ஆலாலசுந்தரர் மனங்கலங்கி, சந்நிதானத்திலே சாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணி, எழுந்து நின்று, அஞ்சலியஸ்தராகி, "எம்பெருமானே, தேவரீருடைய அருமைத் திருவடிகளைப் பிரிதற்கு ஏதுவாகிய கொடும்பாவத்தைச் செய்தவனாகிய சிறியேன் மயக்கம் பொருந்திய மனிதப் பிறப்பை எடுத்து, செய்யவேண்டியது இன்னது என்றும் நீக்கவேண்டியது இன்னது என்றும் அறியாது, பிரபஞ்ச வாழ்க்கையிலே மயங்கும்போது, தேவரீர் வெளிப்பட்டு வந்து அடி

யேனைத் தடுத்து ஆட்கொண்டருளவேண்டும்" என்று பிரார்த்திக்க; வேண்டுவார் வேண்டியவைகளை ஈந்தருளுங் கடவுளும் அவ்வேண்டுகோளுக்கு இசைந்தருளினர்.

பின்பு ஆலாலசுந்தர், பூமியிலே புண்ணியபூமியாகிய பரதகண்டத்திலே, தமிழ்வழங்கும் நிலமாகிய தென்னாட்டைச்சேர்ந்த திருமுனைப்பாடிநாட்டிலே, திருநாவலூரென்னுந் திருப்பதியிலே, ஆதிசைவரென்னுஞ் சிவப்பிராமணகுலத்திலே, சடையனாரென்னுஞ் சிவாசாரியருக்கு அவருடைய மனைவியாராகிய கற்பிலே சிறந்த இசைஞானியார் என்பவரிடத்திலே, ஆன்மாக்கள் சைவசமயமே சற்சமயமென்று உணர்ந்து அதன்வழி ஒழுகி உய்யும்பொருட்டு, திருவவதாரஞ்செய்தருளினர். திருவவதாரஞ்செய்த அப்பிள்ளையாருக்கு நம்பியாரூரர் என்று நாமகரணஞ் செய்தார்கள். அப்பிள்ளையார் ஒருநாள் வீதியிலே சிறுதேர் உருட்டி விளையாடும் போது, அந்தத் திருமுனைப்பாடிநாட்டுக்கு அரசராகிய நரசிங்கமுனையரென்பவர் அப்பிள்ளையாரைக்கண்டு, அவர்மேல் ஆசைமிகுந்து, அவருடைய தந்தையாராகிய சடையனரிடத்துப் போய், "இந்தப் பிள்ளையை எனக்குத் தாரும்" என்று கேட்கப் பெற்றுக்கொண்டு போய், அவரை அபிமானபுத்திரராகப் பாவித்து வளர்த்தார். அந்தப்பிள்ளையார் அரசரால் வளர்க்கப்படினும், தமது பிராமண வருணத்திற்கு உரிய ஒழுக்கத்தையே உடையவராய் வளர்ந்து, உரிய காலத்திலே உபநயனஞ் செய்யப்பெற்று, வேதங்களை அத்தியயனஞ் செய்து சகல கலைகளிலும் மகா பாண்டித்தியமுடையவராய், விவாகஞ் செய்தற்கு உரிய பருவத்தை அடைந்தார்.

அதுகண்டு, தந்தையாராகிய சடையனர், ஆதிசைவகுலத்திலே தம்முடைய கொள்வகைக்கு ஏற்பப் பத்துவாய்ப் புத்தூரில் இருக்கின்ற சடங்கவி சிவாசாரியரிடத்திலே, அவருடைய புத்திரிக்கும் தம்முடைய புத்திரருக்கும் விவாகம் பேசிவரும்பொருட்டு, சில முதியோர்களை அனுப்பினர். அவர்கள் சடங்கவி சிவாசாரியரிடத்திற் போய்ப் பேசி, அவர் உடன்பட்டது கண்டு, சடையனரிடத்துக்குத் திரும்பிப் போய்த்

தெரிவித்தார்கள். அப்பொழுது சடையனார் மகிழ்ச்சி கொண்டு, விவாகத்துக்குச் சுபதினமுஞ் சுபமுகூர்த்தமும் நிச்சயித்து, தம்முடைய ஞாதிகள் சிநேகர்கள் யாவரையும் விவாகபத்திரம் அனுப்பி அழைப்பித்தார். பின்பு நம்பியாரூராகிய சுந்தரமூர்த்திநாயனார் விவாக தினத்துக்கு முதற் றினத்திலே சமாவர்த்தனம் பண்ணி, ரக்ஷாபந்தனஞ்செய்து, மற்றநாள் நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு, திருமணக் கோலங்கொண்டு, குதிரைமேல் ஏறி, மகாலங்காரத்தோடு புத்தூரிலே சடங்கவி சிவாசாரியர் வீட்டிலே திருக்கல்யா ணப்பந்தருக்கு முன் சென்று, குதிரையினின்றும் இறங்கி, உள்ளேபோய், ஆசனத்தில் இருந்தார்.

அப்பொழுது, ஊரும் பேரும் உருவும் இல்லாதவராயி னும் ஆன்மாக்களுக்கு வினையத்தால் வந்த ஊரையும் பேரை யும் உருவையும் இருவினையொப்பாகிய பக்குவகாலத்திலே ஒழிக்கும்பொருட்டு அருள்வயத்தால் ஊரும் பேரும் உருவுங் கொண்டருளுகின்ற சிவபெருமான், தாந் திருக்கைலாசத்திலே சுந்தரமூர்த்திக்கு வாக்குத்தத்தம் பண்ணிய பிரகாரம் அவ ரைப் பிரபஞ்ச வாழ்க்கையிலே மயங்கவிடாமல் தடுத்து ஆட் கொண்டருளும்பொருட்டு, ஒரு வயோதிகப்பிராமண வடிவங் கொண்டு, அவ்விடத்திலே எழுந்தருளிவந்து நின்று, "இவ்வி டத்தில் இருக்கின்ற எல்லோர்களும் நான்சொல்லும் இவ்வார்த் தையைக் கேளுங்கள்" என்று சொல்லியருளினர். அப்படிச் சொல்லிய அந்த ஐயரை விவாகஞ்செய்யத் தொடங்கும் நம்பி யாரூரரும் அங்கிருக்கின்ற மற்றப்பிராமணர்களும் பார்த்து, "இவ்விடத்திலே நீர் சொல்லவிரும்பியதைச்சொல்லும்" என் றார்கள். அதைக்கேட்ட ஐயர் நம்பியாரூரரை நோக்கி, "எனக் கும் உனக்கும் ஒருவழக்கு இருக்கின்றது. அதை முடித்துக் கொண்டு உன்னுடைய விவாகத்தை நடத்து" என்று அருளிச் செய்தார். நம்பியாரூரர் "உமக்கும் எனக்கும் ஒருவழக்கு உளதாயின், அதை முடித்தன்றி நான் விவாகஞ்செய்யேன். நீர் அவ்வழக்கு இன்னதெனத் தெரியும்படி சொல்லும்" என்று கேட்க; அந்த ஐயர் பிராமணர்களைப் பார்த்து, "இத் தத்திருநாவலூராகிய நம்பியாரூரன் எனக்கு அடியவன்"

என்று சொல்லியருளினார். அதைக்கேட்ட நம்பியாரூரர் "இந்த ஐயர் சொன்ன வார்த்தை நன்றாயிருக்கின்றது" என்று இகழ்ச்சியாகச் சொல்லிச் சிரிக்க; பிராமணவேடங்கொண்ட கடவுள் அவருக்குச் சமீபத்திலே போய், "அக்காலத்திலே உன்னுடைய பாட்டன் எனக்கு எழுதித்தந்த அடிமையோலை இதுவே. அப்படியிருக்க, இந்தக்காரியத்தைக் குறித்து நீ பரிகாசம்பண்ணியது என்ன" என்றார். உடனே நம்பியாரூரர் ஐயரைப் பார்த்து, "பிராமணருக்குப் பிராமணர் அடிமையாதல் இன்றைக்கு நீயே சொல்லக் கேட்டோம். நீ பித்தனே" என்று சொல்ல; ஐயர் "நான் பித்தனுமாகுக. பேயனுமாகுக. நீ இப்போது எத்தனை வசைமொழிகளைச் சொன்னாய். அவைகளினால் நான் சிறிதாயினும் வெட்கம் அடையேன். நீ என்னைச் சிறிதும் அறிந்தில்லை. இப்படி நின்று விளையாட்டுமொழிகள் பேசவேண்டாம். அடிமைத்தொழில் செய்ய வா" என்றார். அப்பொழுது நம்பியாரூரர் "இவர் அடிமையோலை ஒன்று உண்டென்றாரே. அதின் உண்மையை அறியவேண்டும்" என்று நினைந்து, "ஐயரே, உம்முடைய ஓலையைக் காட்டும்" என்று சொல்ல; ஐயர் "நீ இந்த ஓலையைப் பார்த்து நிச்சயிக்கத்தக்கவனோ? நான் இந்தச் சபையாருக்கு ஓலையைக் காட்டி மெய்யென்று அங்கீகாரஞ்செய்வித்த பின், எனக்கு ஊழியஞ் செய்தற்கு மாத்திரம் தக்கவன்" என்றார். அதுகேட்ட நம்பியாரூரர் கோபங்கொண்டு, அவர்கையில் இருக்கும் ஓலையைப் பறிக்கும்படி அவருக்கு எதிரே விரைந்துசென்றபோது, அவர் ஓடத் தாமும் ஓடி, அவரைப் பின்னோடர்ந்து பிடித்து, ஓலையைப் பறித்து, "பிராமணர்கள் அடிமையாய் ஊழியஞ்செய்தல் என்னமுறை" என்று சொல்லிக் கிழிக்க; ஐயர் சுந்தரமூர்த்தியைப் பிடித்துக்கொண்டு, ஒருதரம் "இது முறையோ" என்று சத்தமிட, சமீபத்தில் நின்றவர்கள் அவ்விருவரையும் விலக்கி, "உலகத்திலே ஒருகாலமும் கடந்திராத வற்பாட்டைக்கொண்டு வழக்காடுகின்ற பிராமணரே, நீர் எங்கே இருக்கின்றவர்? சொல்லும்" என்றார்கள். அதற்கு ஐயர் "நான் இந்தத் திருவெண்ணெய்நல்லூரில் இருக்கிறவன். அது நிற்க. இந்த நம்பியாரூரன் தரும வழிக்கு விரோதமாக வலாற்காரம்பண்ணி என்னையிற் ஓலை

யைப் பறித்துக் கிழித்தலினாலே, தான் எனக்கு அடியவன் என்றதை ஸ்திரப்படுத்தினான்" என்றார். அப்பொழுது சுந்தரமூர்த்திநாயனார் "நீர் திருவெண்ணெய்நல்லூரில் இருக்கிறவராகில், இந்தவழக்கை அங்கேதானே பேசித் தீர்ப்புச்செய்யவாரும்" என்று சொல்ல; ஐயர் அதைக்கேட்டு, "திருவெண்ணெய் நல்லூரில் இருக்கின்ற பிராமணர்களுக்கு முன்னே ஆதியில் எழுதப்பட்ட மூலவோலையைக் காட்டி நீ எனக்கு அடிமை என்பதைச் சாதிப்பேன்" என்று சொல்லி, தண்டை ஊன்றிக்கொண்டு முன்னே நடந்தார். சுந்தரமூர்த்தியும் மற்றப் பிராமணர்களும் பின்னேபோனார்கள்.

ஐயர் தமக்குப் பின்வந்த சுந்தரமூர்த்தியோடும் மற்றப் பிராமணர்களோடும் திருவெண்ணெய் நல்லூரை அடைந்து, அங்கு இருக்கின்ற பிராமணர்களுடைய சபையிலேபோய், அவர்களை நோக்கி, "அறிவால் அமைந்த பெரியோர்களே, திருநாவலூரில் இருக்கின்ற ஆரூரனவன் நான் நீ எனக்கு அடிமையென்று காண்பித்த ஓலையைக் கிழித்துவிட்டு உங்களிடத்துக்கு வந்திருக்கிறான்" என்றுசொல்லி முறைப்பாடு செய்தார். அந்த அபியோகத்தைக்கேட்ட பிராமணர்கள் அவரைப் பார்த்து, "பிராமணர்கள் அடிமையாதல் இவ் வுலகத்திலே இதுவரையிலும் இல்லை. ஐயோ, நீர் என்ன தப்புவார்த்தை சொன்னீர்" என்று சொல்ல; ஐயர் "நான் பொய்வழக்குக் கொண்டுவரவில்லை. மெய்வழக்கே கொண்டுவந்தேன். இவன் பறித்துக் கிழித்த ஓலை இவன் பாட்டன் தானும் தன் மரபினரும் எனக்கு அடிமையென்று எழுதித் தந்த அடிமையோலை" என்றார். உடனே பிராமணர்கள் சுந்தரமூர்த்தியை நோக்கி, "இவர் உம்முடைய பாட்டன் அடிமைசெய்தற்கு இசைந்து எழுதிக்கொடுத்த ஓலையைக் காட்டினாராகில், நீர் அதைப் பறித்துக் கிழித்ததனால் உம்முடைய பக்கம் ஜயம்பெறுமோ! இவர் தம்முடைய வழக்கையாவரும் அங்கீகரிக்கும்படி சொன்னார். இனி உம்முடைய எண்ணம் யாது" என்றார்கள். அதற்குச் சுந்தரமூர்த்தி "வேதாகமம் முதலாகியசமஸ்தசாஸ்திரங்களையும் உணர்ந்த மகான்களே, நான் ஆதிசைவன் என்பது உங்கள் எல்லாருக்குந் தெரியும். அப்படியிருக்க, இந்தப் பிரா

மணர் தமக்கு என்னை அடிமையென்று சாதித்தாராகில், இது மனசினுல் அறிதல் கூடாத ஒருமாயையென்று நினைக்கவேண்டும். இதைக்குறித்து நான் யாது சொல்வேன்! இது என்னுல் அறியப்படுதல் கூடாது" என்று சொல்ல; பிராமணர்கள் கேட்டு, அந்த ஐயரைப்பார்த்து, "நீர் இவரை உம்முடைய அடிமை என்று சொல்லுகின்ற விவகாரத்தை எங்களுக்கு முன் உறுதிப்படுத்தல் வேண்டும். ஒரு விவகாரத்தை உண்மையென்று நிச்சயிப்பதற்கு, அனுபவம் லிகிதம் சாக்ஷியென்கின்ற மூன்றும் வேண்டும். ஆயினும், இந்த ஆரூரர் உமக்கு அடிமையென்பதற்கு அம்மூன்றில் ஒன்றுயினும் காட்டும்" என்றார்கள். அப்பொழுது ஐயர் "இவன் கிழித்த ஓலை மூலவோலையைப் பார்த்து எழுதிய படியோலை. மூலவோலையோ என்னிடத்தில் இருக்கின்றது" என்று சொன்னர். உடனே பிராமணர்கள் "அதை எங்களுக்குக்காட்டும்" என்று சொல்ல; ஐயர் "ஆரூரன் அதையும் பறித்துக் கிழியாதபடி செய்வீர்களாயின், அதைக் காட்டுவேன்" என்றார். அதற்குப் பிராமணர்கள் "நாங்கள் கிழிக்க விடோம்" என்றுசொல்ல; ஐயர் மூலவோலையைக் கையில் எடுத்தார். அப்பொழுது சபையாருடைய கட்டளையினுல் ஒரு கரணன் அவரைக்கும்பிட்டு அந்த ஓலையை வாங்கி, சுருளாயிருக்கின்ற மடிப்பை நீக்கி விரித்து, சபையார்கேட்கும்படி, "திருநாவலூரில் இருக்கின்ற ஆதிசைவகுலிய ஆரூரன் என்கின்ற நான் திருவெண்ணெய் நல்லூரில் இருக்கின்ற பித்தனுக்கு நானும் என் சந்ததியாரும் வழித்தொண்டு செய்வதற்கு உள்ளம் புறமும் ஒப்ப உடன்பட்டு எழுதிக்கொடுத்தேன். இப்படிக்கு ஆரூரன்" என்று வாசித்தான். பின்பு அந்த ஓலையிலே சாட்சிகளாகக் கையெழுத்து இட்டவர்கள் தங்கள் கையெழுத்தென்றே ஒத்துக்கொண்டார்கள். அதைக்கண்ட பிராமணர்கள் சுந்தரமூர்த்தியை நோக்கி, "இது உம்முடைய பாட்டனுடைய எழுத்தோ! பாரும்" என்று சொல்ல; ஐயர் அவர்களைப்பார்த்து, "இந்தச் சிறுவன் அடிமை யோலையில் எழுதப் பட்டிருக்கின்ற தன் பாட்டன் கையெழுத்தைக் கண்டறியச் சக்தியுள்ளவனே? இவன் பாட்டன் எழுதிய வேறு கைச்சாத்து உண்டாகில், வருவித்து இதனுடன் ஒத்துப்பார்த்து, உங்கள் மனசிலே தோன்றிய தீர்க்

பைச் சொல்லுங்கள்'' என்றார். அதைக்கேட்ட பிராமணர்கள், தூங்தேகங்தெளியும்படி, சுந்தரமூர்த்திசமுகத்திலே அவர்பாட்டனார் எழுதிய கைச்சாத்து ஒன்று அழைப்பித்து, அதின் எழுத்தையும் அடிமை யோலையின் எழுத்தையும் ஒத்துப் பார்த்து, ''இவ்விரண்டும் ஒத்திருக்கின்றன. இனி நீர் தப்ப வழி இல்லை. நீர் இந்தப் பிராமணருக்குத் தோற்றுப்போனீர். ஆதலால், அவர் கருத்தின்படி அவருக்கு ஏவல் செய்வதே கடன்'' என்று சொல்ல; சுந்தரமூர்த்தி ''விதிமுறை இதுவே யானால், நான் இதற்கு உடன்படாதிருத்தல் கூடுமோ'' என்று சொல்லி நின்றார். அப்பொழுது பிராமணர்கள் அந்த ஐயரைப் பார்த்து, ''நீர் காட்டிய அடிமையோலையிலே எங்கள் ஊரே உம்முடைய ஊராக எழுதப்பட்டிருக்கின்றது. ஆதலால் உமக்கு இவ்வூரிலே தலைமுறையாக இருக்கின்ற வீடும் நிலமும் காட்டும்'' என்று சொல்ல; பிராமண வடிவங்கொண்ட கடவுள் ''இத்தனை விருத்தர்களில் ஒருவரும் என்னுடைய வீடுமுதலியவற்றை அறியாதிருப்பார்களால், காட்டுகிறேன். வாருங்கள்'' என்று சொல்லி, சுந்தரமூர்த்தியும் பிராமணர் களும் பின்னே வர, தாம் அவ்வூரிலிருக்கின்ற திருவருட் டுறை என்னும் சிவாலயத்தினுள்ளே போனார். பின்பு சபை யார் அவரைக் காணாது திகைத்து நின்றார்கள்.

அப்பொழுது சுந்தரமூர்த்திநாயனர் ''என்னை அடிமை கொண்ட பிராமணர் நமது கடவுளாகிய சிவபெருமான் வீற்றி ருக்குந் திருக்கோயிலினுள்ளே புகுந்தது என்ன ஆச்சரியம்'' என்று நினைத்து, அத்தியந்த ஆசையோடும் தனியே அவரைத் தொடர்ந்துபோய்க் கூப்பிட; சிவபெருமான் தருமவடிவாகிய இடபவாகனத்தின்மேலே பார்வதி சமேதராய் வெளிப்பட்டு, சுந்தரமூர்த்திக்கு, ''நீ முன்னே நமக்குத் தொண்டனாய் இருந் தாய். நீ பெண்கண்மேல் இச்சை வைத்ததினால் நம்முடைய ஆஞ்ஞையினாலே பூமியிலே பிறந்தாய். இப்பொழுது துன்பத் தைத் தருகின்ற சமுசார பந்தமானது உன்னைத் தொடராத படி, நாமே வலியவந்து உன்னைத்தடுத்து ஆட்கொண்டோம்'' என்று திருவாய்மலர்ந்தருளினார். இந்தப்பிரகாரமாக எழுந்த அருணமந்திருவாக்கைக்கேட்டு, சுந்தரமூர்த்தியானவர் தன்னை

ன்ற பசுவினது குரலைக்கேட்ட கன்றுபோல அலறி, சரீர முழுதும் உரோமப்புளகங்கொள்ள, இரண்டு கண்ணினின்றும் ஆனந்தவருளி பொழிய, அடியற்ற மரம்போல நிலத்திலே விழுந்து நமஸ்கரித்து, எழுந்து நின்று, இரண்டு கைகளையும் சிரசின்மேல் ஏறக் குவித்து, "கனகசபையிலே படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்கிற ஐந்தொழிலாகிய திருநடனத்தைச் செய்தருளுகின்ற சுவாமீ, தேவரீர் ஒன்றுக்கும்பற்றுத சிறியேனை மார்ச்சாரசம்பந்தம்போல வலியவந்து தடுத்தாட்கொண்ட காருண்ணிய மகிமை இருந்தபடி என்னென்று சொல்லுவேன்" என்றார். அப்பொழுது, தம்மாற்செய்யப்படுகிற தொழில்களுள் ஒவ்வொன்றையும் தம்பெருங் கருதாது பிறர் பயன் கருதியே செய்கின்ற பரமசிவனெனவர், தமிழ்நாட்டில் உள்ளவர்கள் தாமேமெய்ப்பொருளென்றுணர்ந்து தம்மைவழிபட்டு மும்மலத் தடைகளையும் நீங்கிப்பேரின்பம் பெற்று அனுபவிக்கவேண்டும் என்று தமது திருவுளத்திலே முகிழ்த்த பெருங்கருணையினாலே, சுந்தரமூர்த்திநாயனாரை நோக்கி, "நீ நம்மோடு என்சொற்களைச் சொல்லி வன்றொண்டன் என்கிற பெயரைப்பெற்றாய். நமக்கு அன்பிலேனுஞ் செய்யத்தக்க அருச்சனையாவது பாடலேயாம். ஆதலால், நம்மேலே தமிழ்ப்பாட்டுக்களைப் பாடு" என்று அருளிச்செய்ய; சுந்தரமூர்த்திநாயனார் அந்தசமயத்தாகி, "தேவரீர் பிராமணவடிவங்கொண்டு தமியேனை வழக்கினால் வெல்லுதற்கு எழுந்தருளி வந்தமையை அறியாத சிறியேனுக்குப் பழைய அறிவைத் தந்து உலகவாழ்க்கையிலே மயங்காமல் உய்யும்படி செய்தருளிய கடவுளே, அடியேன் தேவரீருடைய அநந்த குணங்களில் எதையறிவேன்? என்ன சொல்லிப் பாடுவேன்" என்றார். அதற்குக் கடவுள் "நீ முன்னே என்னைப்பித்தனென்றுசொன்னாய். ஆகையால் என்பெயர் பித்தனென்றே பாடு" என்று சொல்லியருள; சுந்தரமூர்த்தியானவர் தம்மை ஆண்டருளிய பரமசிவன்மேல் "பித்தா பிறை சூடி" என்னுஞ் சொற்றொடரை முதலாகக்கொண்ட திருப்பதிகத்தைப் பாடியருளினார். அதன்பின் கடவுளானவர் சுந்தரமூர்த்திநாயனாரை நோக்கி, "தொண்டனே, நீ இன்னும் நம்முடைய புகழைக்குறித்துப் பலவகையாகப் பாடு" என்று அருளிச்செய்து, அந்தர்த்தான

மாயினர். அது நிற்க. புத்தூரிலிருக்கின்ற சடங்கவி சிவாசாரியருடைய புத்திரியாரோவெனில், கலியாணந் தவிர்ந்ததினாலே சுந்தரமூர்த்திநாயனாரையே தியானஞ் செய்துகொண்டிருந்து, சிலகாலத்தின்பின் சிவலோகப் பிராப்தியானர்.

சுந்தரமூர்த்தி நாயனர், திருவெண்ணெய் நல்லூரில் உள்ள திருவருட்டுறையென்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற கடவுளானவர் தம்மை ஆட்கொண்டபின்பு, திருநாவலூருக்கும் திருத்துறையூருக்கும் போய்த் திருப்பதிகம்பாடி, சிதம்பரத்திலே திருநடனஞ் செய்கின்ற சபாநாயகரைத் தரிசிக்க விரும்பி, பெண்ணை நதியைக் கடந்து, அஸ்தமயனகாலத்திலே திருவதிகையென்னுந் தலத்தினெல்லையிலேபோய், "திருநாவுக்காசு நாயனர் உழவாரத்தினாலே நமது சிவபெருமானுக்குக் கைத்தொண்டு செய்த இந்த ஸ்தலத்திலே கான்மிதிக்க அஞ்சுகின்றேன்" என்று சொல்லி, அதற்கு உள்ளேபோகாமல் சமீபத்திலிருந்த சித்தவடமடத்திற்குப்போய், திருவதிகை வீரட்டானத்தில் வீற்றிருக்கும் கடவுளுடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டு நித்திரைசெய்தார். நித்திரை செய்யும்பொழுது, வீரட்டானேசுரர் ஒரு விருத்தப்பிராமணராகி அம்மடத்தினுள்ளே புகுந்து, சுந்தரமூர்த்தி நாயனருடைய சிரசின்மேலே பாதங்களை வைத்து, நித்திரைசெய்பவர் போலக் காட்டியருளினர். அப்பொழுது சுந்தரமூர்த்தி விழித்து, "ஐயோ, என் உம்முடைய பாதத்தை என் சிரசின் மேல்வைத்தீர்" என்று சொல்ல; ஐயர் "என்னுடைய மூப்பினாலே நீர் தலைவைத்திருக்கும் திசையை அறியாமல் அப்படிச் செய்து போட்டேன்" என்றார். சுந்தரமூர்த்திநாயனர் அதற்கு ஒத்துக்கொண்டு, தம்முடைய சிரசை வேறொருதிக்கில் வைத்துக்கொண்டு நித்திரை செய்தார். எம்பெருமான் அவ்விடத்திலும் சென்று சுந்தரமூர்த்தியுடைய சிரசின் மேலே பின்னும் தம்முடைய பாதத்தை நீட்ட; சுந்தரமூர்த்தி "இங்கே என்னைப் பலமுறை மிதித்த நீர் யாவர்" என்று கேட்டார். உடனே சிவபெருமான் "என்னை நீ அறியாயா" என்றுசொல்லி மறைந்தருளினர். அது கண்டு சுந்தரமூர்த்தி நாயனர் தம்மை மிதித்தவர் கடவுளென்று அறிந்து, "தமி

யேன் இறுமாப்படைந்து ஆண்டவரை அறியாமல்என்ன செய்தேன்'' என்றுசொல்லி வீரட்டானேசுரர்மேல் ''தம்மானை யறியாத சாதியாருளரே'' என்னும் திருப்பதிகம் பாடினார்.

பின்பு அத்திருவதிகைக்குத் தென்புறத்தில் இருக்கும் திருக்கெடிலநதியிலே ஸ்நானஞ்செய்து, அந்த நதியின் தென்கரையிற் சென்று, திருமாணிக்குழியை அடைந்து தரிசித்துக்கொண்டு, திருத்தினைநகருக்குப்போய்த்திருப்பதிகம்பாடி, சிதம்பரத்தின் எல்லையை அடைந்து, அவ்வெல்லையைவணங்கி, ஊரிலுள்ளேபோய், ஸ்தூலலிங்கமாகிய கோபுரத்தைக்கண்டு, நிலத்திலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, எழுந்து, இரண்டு திருக்கரங்களையும் சிரமீது குவித்துக்கொண்டு திருக்கோயிலிலுள்ளேபோய், கனகசபையிலே ஆனந்ததாண்டவஞ் செய்தருளுகின்றசபாநாயகரைத்தரிசித்து, அக்கினியிற்புட்ட மெழுகுபோலக் நெகிழ்ந்துருகி, ஆனந்தபாஷ்பஞ்சொரிய விழுந்து நமஸ்காரஞ் செய்து, எழுந்து நின்று, எல்லையில்லாத பேரின்பசாகரத்திலே அமிழ்ந்தி, இரண்டு கைகளையும் சிரசின் மேலே குவித்து, திருப்பதிகம் பாடித் துதித்தார்.

அதன்பின், சபாநாயகருடைய திருவருளினால், ''நீ திருவாரூரிலே நம்மிடத்துக்கு வா'' என்று ஆகாயத்தில் எழுந்த அசரீரிவாக்கைக் கேட்டு, அநந்தகோட்டிசிவனைச் சிரசின்மேல் வகித்து, கனகசபையைப் பிரதக்ஷிணஞ் செய்து வணங்கிச் சென்று, கோபுரத்தைக் கடந்து, புறத்திலே நின்று அக்கோபுரத்தை நமஸ்கரித்து, திருவீதியைத் தொழுது, தெற்குவாயிலைக் கடந்து, அப்புறஞ் சென்று, அந்த ஸ்தலத்தின் எல்லையை வணங்கி, கொள்ளிடம் என்கின்ற திருநதியைத் தாண்டி, சீர்காழிக்குச் சமீபித்தார். அந்தச் சீர்காழி திருஞான சம்பந்தமூர்த்திநாயனர் திருவவதாரஞ் செய்தருளிய ஸ்தலமாதலால் அதனுள்ளே மிதிக்கலாகாதென்று நினைத்து, அதின் புறவெல்லையை வணங்கிப் பிரதக்ஷிணஞ் செய்யும்பொழுது, பரமசிவன், காட்சிகொடுத்தருள; அதுகண்டு, ''சாதலும் பிறத்தலுந் தவிர்த்து'' என்று திருப்பதிகம் எடுத்துத்திருப்பாட்டினிறுதிதோறும் ''கழுமல வளநகர்க் கண்டு கொண்டேனே'' என்று பாடினார். அதன்பின் திருக்கோலக்

காவுக்கும் திருப்புன்கூருக்கும் போய்த் திருப்பதிகம்பாடி, காவேரிநதியின் கரையை அடைந்து, அதில் ஸ்நானம்பண்ணி, மாயூரத்துக்கும், அம்பர்மாகாளத்துக்கும், திருப்புகலூருக்கும் போய்த் தரிசனஞ் செய்துகொண்டு, பின் திருவாரூருக்குச் சமீபித்தார்.

உடனே வன்மீகநாதர் திருவாரூரில் வாழ்பவர்களெல்லாருக்கும் "நம்முடைய அடியானுகிய நம்பியாரூரன் நாம் அழைக்க வருகின்றன். நீங்கள் அவனை எதிர்கொள்ளக்கடவீர்கள்" என்று பணித்தருள; அவர்களெல்லாரும் ஆச்சரியங்கொண்டு மனமகிழ்ந்து, வீதிகளெல்லாவற்றையும்மிகவலங்கரித்து, நானவித வாத்தியங்கள் ஒலிக்க, திருமதில் வாயிற் புறத்து வந்து, சுந்தரமூர்த்திநாயனரை எதிர்கொண்டு வணங்கினர்கள். சுந்தரமூர்த்திநாயனர் அவர்களெதிரே அஞ்சலிகூப்பி வந்து, திருவீதியிற் செல்லும்பொழுது அவர்களை நோக்கி "கரையுங் கடலும்" என்றெடுத்து "எந்தையிருப்பது மாருரவ ரேம்மையு மாள்வரோ கேளீர்" என்னுந் திருப்பதிகத்தைப்பாடிக்கொண்டு, திருக்கோயிற் றிருவாயிலை அணுகினர். அணுகியவுடனே திருவாயிலை நமஸ்கரித்து எழுந்து சென்று, தேவாசிரிய மண்டபத்தை வணங்கி, சிரசின்மீது குவித்தகைகளோடும் திருமூலட்டானத்தைச் சூழ்ந்த திருமாளிகைவாயிலிற் புகுந்து, வன்மீகநாதரை வணங்கிப் பேரானந்தப் பெருங்கடலின் மூழ்கிநின்று, திருப்பதிகம்பாடினர். அப்பொழுது, சுந்தரமூர்த்திநாயனர் கேட்கும்படி, வன்மீகநாதருடைய திருவருளினாலே, "நாம் உனக்குத் தோழராகிலும் முன்னே நாம் உன்னை ஆட்கொண்ட விவாககாலத்திலே நீ கொண்ட மணக்கோலத்தை எப்பொழுதும்கொண்டு பூமியின்மேல் வினோயாடுவாய்" என்று ஒரு அசரீரிவாக்கு எழுந்தது. அதுகேட்ட சுந்தரமூர்த்திநாயனர் வன்மீகநாதரை வணங்கித் துதித்து, "அடியேனைத் தடுத்தாட்கொண்டருளிய பரமகருணாநிதியே, திருவாரூரமர்ந்த அருமணியே, நாயினேனைப் பொருளாகக் கொண்டு இங்ஙனந் திருவாய்மலர்ந்தருளியது உமது பெருங்கருணையன்றே" என்று விண்ணப்பஞ்செய்து, பலமுறை வணங்கி, உள்ளக் களிப்பினோடும் நடந்து, தியாகே

சர் சந்நிதியை அடைந்து, வணங்கித் துதித்துத் திருமாளிகையை வலஞ்செய்து கொண்டு, வெளியேபோனர். அன்று முதற்கொண்டு அடியார்கள் எல்லாரும் சுந்தரமூர்த்திநாயனாரைத் தம்பிரான்றோழர் என்று சொல்லிக்கொண்டார்கள். சுந்தரமூர்த்திநாயனர் மகாலங்காரம் பொருந்திய திருக்கோலத்தையுடையவராய், வன்மீகநாதரைத் தினந்தோறும்போய்த் தரிசித்து வந்தார்.

இதற்கு முன்னே, திருக்கைலாசகிரியில் இருந்த பார்வதிதேவியாருடைய சேடியர்கள் இருவருள் ஒருவராகிய கமலினி என்பவர், அந்தத் திருவாரூரிலே, உருத்திர கணிகையர் குலத்திலே பிறந்து, பரவையார் என்னும் பெயரைப் பெற்று, மங்கைப் பருவம் அடைந்திருந்தார். அவரும் தினந்தோறும் பாங்கிமாரோடு திருக்கோயிலுக்குப்போய், சுவாமி தரிசனம் பண்ணிவருவார்.

அந்தப் பரவையார் ஒருநாள் சுவாமிதரிசனம் பண்ணப் போம்போது, அப்படியே சுவாமிதரிசனம்பண்ணும்பொருட்டுப் பரிசனங்களோடு சென்ற சுந்தரமூர்த்தி நாயனர், திருவருள் கூட்ட, அந்தப் பரவையாரைக் கண்டு மோகைகொண்டு நின்றார். பரவையாரும் சுந்தரமூர்த்தி நாயனரைக் கண்டு மோகைகொண்டு, பின் சுவாமிதரிசனம் பண்ணவேண்டும் என்னும் விருப்பமானது தம்மை அவ்வாசையினின்றும் நீக்கித் தன்வசமாக்கிக்கொண்டு திருக்கோயிலின் உள்ளே செலுத்தச் சென்றார். சுந்தரமூர்த்தி நாயனர் அது கண்டு, "என் மனசைக் கவர்ந்து சென்ற அதிசௌந்தரியமுள்ள இந்தப் பெண்ணார்" என்று நினைவு; அங்கு நின்றவர்கள் "இவர் உருத்திரகணிகையரில் ஒருவர், இவர்பெயர் பரவையார்" என்றார்கள். அதைக் கேட்ட சுந்தரமூர்த்தி நாயனரோ திருக்கோயிலினுள்ளேபோனர். அதற்குமுன் பரவையார் பிரதக்ஷிணஞ் செய்து சுவாமியை நமஸ்காரம் பண்ணித் துதித்துக்கொண்டு சந்நிதியினின்றும்புறப்பட்டார். சுந்தரமூர்த்திநாயனர் சுவாமி சந்நிதானத்திற் சென்று, பரவையார்மேல் வைத்த பேராசையால் அவரைச் சேரவேண்டிச் சுவாமியினது திருவடிகளை வணங்கிக் கொண்டு, புறப்பட்டு, பரவையாரைத்தேடி, தேவா

சிரயன் என்னும் பெயரையுடைய ஆயிரக்கான் மண்டபத்தை அடைந்து, "வன்மீகநாதர் பரவையாரை எனக்குத் தந்தருளுவார்" என்று நினைத்துக்கொண்டு, அங்கு இருக்க; சூரியன் அஸ்தமயனமாயிற்று. அது நிற்க.

முன்னே சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு புறப்பட்ட பரவையார், சுந்தரமூர்த்தியிடத்தில் தனியே சென்ற தமது மனசை ஒருவகையாக வலிந்து தம்வசப்படுத்தி, அதிக மயக்கத்தோடு தமது மாளிகையை அடைந்து, பூவணையில் இருந்து, தம்மருகிருந்த பாங்கியை நோக்கி, "நாம் சுவாமிதரிசனம் செய்யப்போனபோது வழியில் எதிராக வந்தவர் யாவர்" என்று கேட்க; அவள் "அவர் பிரமவிஷ்ணுக்களும் தேடியறியாத சமாஜதிதராகிய கடவுளே வலியவந்து ஆட்கொள்ளப் பெற்ற ஆதிசைவராகிய சுந்தரமூர்த்தி நாயனார்" என்றாள். அது கேட்ட பரவையார் "நமது ஆண்டவருக்கு உரிய அடியவரோ" என்று சொல்லி, சுந்தரமூர்த்தி நாயனர்மேல் முன் வைத்த ஆசை மென்மேலும் வளர, சயனத்தின்மேல் விழுந்து புலம்பினர். அப்பொழுது கடவுளானவர், பரவையாரைச் சுந்தரமூர்த்தி நாயனருக்கு விவாகஞ்செய்து கொடுக்கும்படி அடியார்களுக்குக் கட்டளையிட்டு, சுந்தரமூர்த்தி நாயனரிடத்திற் சென்று, உனக்குப் பரவையை விவாகம் செய்து தரும்படி நம்முடைய அடியார்களுக்கு ஆஞ்ஞாபித்தோம்" என்று அருளிச்செய்து, பரவையாரிடத்திலும் போய், "உனக்கும் சுந்தரனுக்கும் விவாகம் நடக்கும்" என்று சொல்லியருளினர். மற்ற நாள் உதயகாலத்திலே சிவபத்தர்கள் எல்லாரும் கூடிவந்து, சுந்தரமூர்த்தி நாயனருக்குப் பரவையாரை விதிப்படி விவாகஞ் செய்து கொடுத்தார்கள்.

சுந்தரமூர்த்தி நாயனர் பரவையாரோடு கூடி வாழ்ந்திருக்குங் காலத்தில், ஒருநாள் திருக்கோயிலே அடைந்தபோது தேவாசிரிய மண்டபத்திலே சிவனடியார்கள் கூடியிருந்ததைக்கண்டு, அவர்கண்மேலே பத்தி மிகுந்து, "இவர்களுக்கு நான் அடியனாகும் நாள் எந்நாள்" என்று நினைத்துக்கொண்டு, சுவாமிதரிசனஞ் செய்வதற்குத் திருக்கோயிலினுள்ளே போனார். அப்பொழுது அடியார்க்கு அடியனாகவேண்டு

மென்று அவர் விரும்பிய வரத்தைக் கொடுக்கும்பொருட்டு, சுவாமி அவருக்குக் காட்சிகொடுத்தருளி, "நீ நம்முடைய அடியார்களை வணங்கி அவர்கண்மேலே பதிகம் பாடு" என் றருளிச்செய்ய; சுந்தரமூர்த்திநாயனார் வணங்கி நின்று, "சுவாமீ, அடியார்களுடைய வரலாறு இன்னது என்றும் அவர்கள் தன்மை இப்படிப்பட்டது என்றும் அறியாத தமி யேன் எப்படிப் பாடுவேன்? அவர்களைக் குறித்துப் பாடுஞ் சக்தியைச் சிவஞ்ஞானத்துவம் உடைய தேவரீரே அடியே னுக்கு அருளிச்செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தார். சுவாமி அதற்கிசைந்து, அடியார்களுடைய வழித்தோண்டு, அவருக்குத் தெரியும்படி செய்து, உலகத்தார் உய்யும்வண் ணம் வேதாகமங்களை அருளிச்செய்த தமது அருமைத் திரு வாக்கிலேலே "தில்லைவா ழந்தணர்த மடி பார்க்கு மடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்து மறைந்தருளினர். அது கண்டு, சுந்தரமூர்த்திநாயனார் புறப்பட்டுத் தேவாசிரிய மண் டபத்தை அடைந்து, அடியார் திருக்கூட்டத்தைப் பலமுறை வணங்கி, எந்த அடியார்கள் யாவர்க்கும் வெவ்வேறாக அடி யேன் அடியேன் என்று திருத்தொண்டத்தொகை என்னும் திருப்பதிகம்பாடி அவர்களை வணங்கினர்.

சுந்தரமூர்த்திநாயனார் திருவாரூரிலே தினந்தோறும் திரிகாலத்திலும் அன்பினோடு சுவாமிதரிசனஞ் செய்து கொண்டு, பரவையாரோடு வாழ்ந்திருக்குங் காலத்திலே, கோளாளராகிய குண்டையூர்கிழவர் என்பவர் அவருடைய மகிமையைக் கேள்வியுற்று, அவருடைய திருவடிகளை அடை ந்து, அன்பினோடு வழிபடுவாராயினர். அவர் சுந்தரமூர்த்தி நாயனார் பொருட்டுப் பரவையாருடைய வீட்டுக்கு நெல்லும் பருப்பும் பிற பதார்த்தங்களும் நெடுங்காலம் தவறாமல் அனு ப்பிவந்தார். அப்படி அனுப்பிவருங்காலத்திலே, மழையில் லாமையால் வளம் சுருங்க, ஒருகாள் குண்டையூர்கிழவர் நெல்லனுப்பாதமை கண்டு, வருத்தமுற்று, "சுந்தரமூர்த்தி நாயனார் திருமாளிகைக்கு அனுப்புவதற்கு இன்றைக்கு நெல்லனுப்பாதாதே! ஐயோ! இதற்கு என்னசெய்வேன்" என்று நினைந்து, பெருங்கவலைகொண்டு, போசனம்பண்ணுதல்

அன்றிரவு நித்திரைகொண்டார். அப்பொழுது சிவபெருமான் அவருக்குச் சொப்பனவத்தையிலே தோன்றி, "சுந்தரனுக்கு அணுப்பும்படி உனக்கு நெல்லுத் தந்தோம்" என்று சொல்லியருளி, பின் குபேரனுக்கு ஆஞ்ஞாபிக்க, அந்தக் குண்டையூர் முழுதிலும் நென்மலையானது ஆகாயமும் மறையும் வண்ணம் நிறைந்து ஓங்கியது. அன்றிரவு விடியும்போது குண்டையூர்க் கிழவர் விழித்தெழுந்து அந்த நென்மலையைக் கண்டு, அதிசயித்து, பரமசிவனுடைய திருவருளைத் துதித்து "சுந்தரமூர்த்தி நாயனருக்கு அனுப்பும்படி பரமசிவன் தந்தருளிய இந்த நெல்லை யாவரெடுக்க வல்லவர்கள்? இந்தச் சமாசாரத்தை அவருக்கு விண்ணப்பஞ் செய்யும்படி போவேன்" என்று திருவாரூருக்குப் போக; நிகழ்ந்த சமாசாரத்தைப் பரமசிவனால் அறிந்து சுந்தரமூர்த்திநாயனரும் எதிரே எழுந்தருளி வந்தார். அதுகண்ட குண்டையூர்கிழவர் அந்நாயனரை விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று, "சுவாமீ, நெடுங்காலமாக அடியேன் தேவரீருக்குச் செய்துவந்த திருத்தொண்டுக்கு இந்நாளிலே முட்டு வந்தது. அதுகண்டு சிவபெருமானே நென்மலையைத் தந்தருளினர். அந்த நென்மலை மனிதரால் எடுக்கப்படும் அளவினையுடையதன்று. இனி இது என்னைச் செய்யப்படக்கூடிய தொண்டன்று" என்று விண்ணப்பஞ் செய்ய; சுந்தரமூர்த்திநாயனர் அதைக் கேட்டு, அவரோடு கூடிக்கொண்டு குண்டையூர்க்குப் போய், ஆகாயத்தை அளாவிய நென்மலையைக் கண்டு அதிசயித்து, திருவருள் வியந்து, "பரவையார் வீட்டுக்கு இந்நெல்லை எடுக்க ஆளும் சிவபெருமானே தந்தருளினன்றி, முடியாது" என்று திருவுளங்கொண்டு, சபீபத்திலுள்ள திருக்கோளிலி யென்னும் ஸ்தலத்தி லிருக்கின்ற சிவாலயத்தை அடைந்து சிவபெருமானை வணங்கி, "நீள நினைந் தடியே னுமை நித்த லுங் கைதொழுவேன்—வாளன கண்மடவா ளஞ்சி வாடி வருந்தாமே –கோளிலி யெம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப் பெற்றேன்—ஆளிலை யெம்பெருமா னையை யட்டித் தரப்பணியே." என்னுந் திருப்பதிகம் பாடினர். அப்பொழுது பரமசிவனுடைய திருவருளினாலே, "இன்று பகற்காலம் நீங்கியபின் நம்முடைய பூதங்கள் பரவைவீடுமாத்திரமன்

றித் திருவாரூர் முழுதும் நிறையும்படி நென்மலையைக் கொண்டுவந்து தரும்" என்று ஆகாயத்தினின்றும் ஓரசரீரி வாக்குத் தோன்றியது. சுந்தரமூர்த்தி நாயனார் அதைக கேட்டுத் திருவருளைத் துதித்து வணங்கி, திருவாரூருக்குத் திரும்பிப்போய், திருக்கோயிலை அடைந்து, வன்மீகநாதரைத் தரிசனஞ் செய்துகொண்டு, பரவையார் திருமாளிகையிலே சேர்ந்து, அவர் மகிழும்படி நிகழ்ந்த சமாசாரத்தைச் சொல்லி அங்கிருந்தார். அதன்பின் சிவாஞ்ஞையினாலே பூதங்கள் குண்டையூரிலே யிருந்த நென்மலையை எடுத்துக் கொண்டுபோய்ப் பரவையார் திருமாளிகையை நிறைவித்து, திருவாரூர் முழுதிலும் நென்மலையாக்கின. அன்றிரவு கழிந்த பின், பரவையார் அவ்வூர்ச் சனங்களெல்லாரும் தங்கள் தங்கள் வீட்டின் எல்லையைச் சேர்ந்த நென்மலையை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லிப் பறையறைவித்தார்.

சிலநாட் சென்றபின்பு, திருநாட்டியத்தான்குடியில் வசிக்கின்ற கோட்புலி நாயனார் சுந்தரமூர்த்தி நாயனரிடத்திலே சென்று, அவரை வணங்கி, தம்முடைய ஊருக்கு எழுந்தருளி வரும்படி அவரைப் பிரார்த்தித்து, அவர் அதற்கு இசைந்தது கண்டு, தமது ஊருக்குத் திரும்பிவிட்டார். அதன்பின், சுந்தரமூர்த்திநாயனார் வன்மீகநாதரை வணங்கி அனுமதி பெற்றுக்கொண்டு, திருநாட்டியத்தான்குடியை அடைந்தபோது, அங்கிருந்த கோட்புலிநாயனார் வீதிகளெல்லாம் அலங்கரித்து, நானவித வாத்தியமுழக்கத்தோடு எதிர்கொண்டு வணங்கி, தம்முடைய வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய், ஆசனத்தில் இருத்தி, விதிப்படி அருச்சனை செய்து, திருவமுது செய்வித்து, அவரை வணங்கி ஸ்தோத்திரம்பண்ணி, சிங்கடியார் வனப்பகையார் என்கின்ற தமது புத்திரிகள் இருவரையும் கொண்டுவந்து, அவரை நமஸ்கரிப்பித்து, தாமும் வணங்கி, "சுவாமீ, அடியேன் பெற்ற இத்தப்பெண்கள் இருவரையும் அடிமையாகக் கொண்டருள வேண்டும்" என்று பிரார்த்திக்க; சுந்தரமூர்த்திநாயனார் "இப்பெண்கள் இருவரும் எனக்குப் புத்திரிகள்" என்று சொல்லி, அவர்களைத் தம்முடைய திருத்தொண்டுபின்மே

விருத்தி, மனக்கசிவுடனே அணைத்து உச்சிமோந்து, அவர் தாள் விரும்பியவைகளைக் கொடுத்தருளி, பரமசிவன் வீற் றிருக்கும் ஆலயத்தை அடைந்து, அவரைவணங்கி, "பூணு ணைவதோ ரரவம்" என்னும் திருப்பதிகம் பாடினர். அந்தப் பதிகத்தின் திருக்கடைக்காப்பிலே கோட்புலிநாயனாரைச் சிறப்பித்து, சிங்கடியாருக்குப் பிதாவாகத் தம்மை நிணைத்த படியினல் தம்மைச் "சிங்கடியப்பன்" என்று வைத்தருளி னர். பின், அவ்விடத்தினின்றும் எழுந்தருளி, திருவலி வலத் துக்குப் போய்ச் சிவபெருமானை வணங்கி, "வலிவலந் தன் னில் வந்து கண்டேனே" என்னும் பதிகம்பாடி., மீண்டும் திருவாரூரை அடைந்து, வன்மீகநாதரை வணங்கிக்கொண்டு பரவையார் வீட்டிலிருந்தார். இருக்கும்பொழுது, பங்குனி உத்திரத்திருநாள் சமீபித்தலும், பரவையார் திருவிழாச் செலவிற்குக் கொடுப்பதற்குப் பொன்கொண்டு வரும் பொரு ட்டு, திருப்புகலூரை அடைந்து கோயிலிற் சென்று, சுவா மியை வணங்கித் திருப்பதிகம்பாடி., சமீபத்தில் இருக்கின்ற திருமடத்துக்குப் போகத் திருவுளங்கொண்டு புறப்பட்டு வந்து, கோயிற்றிருமுன்றிலின் ஒருபக்கத்திலே அடியார்க ளோடும் இருந்தருளினர். அப்பொழுது சிவபிரானது திருவ ருளினுலே நித்திரை வந்தது; உடனே அங்கே திருப்பணிக் காகச் சுடப்பட்ட செங்கற்கள் பலவற்றை வருவித்து உய ரம்பண்ணி,, அதனையே தலையணையாகக் கொண்டு, உத்தரீய த்தை விரித்து நித்திரைசெய்தார். பின் விழித்தெழுந்த போது, அந்தச் செங்கற்கள் எல்லாம் பொற்கல்லாய் இருக் கக்கண்டு, திருவருளைத் துதித்து, திருக்கோயிலினுள்ளே போய்த் "தம்மையே புகழ்ந் தீச்சை பேசினும்" என்னுந் திருப்பதிகம்பாடி, பொற்குவையையுங்கொண்டு அவ்விடத்தி னின்றும்புறப்பட்டு, திருப்பணையூருக்குப் புறத்தேபோனர். அப்பொழுது சிவபெருமான் திருக்கூத்தோடுங் காட்சி கொடுத்தருள, சுந்தரமூர்த்திநாயனர் எதிர்சென்று வணங்கி, "மாடமாளிகை" என்று திருப்பதிகம் எடுத்து, "அரங்கிலாட வல்லாரவரே யழகியரே" என்று பாடி, திருவாரூரை அடைந்து, பரவையார் வீட்டில் எழுந்தருளி யிருந்தார்.

பின் அவ்விடத்தை விட்டு, திருநன்னிலம், திருவீழி மிழலை, திருவாஞ்சியம், திருநறையூர், அரிசிற் கரைப்புத்தூர், திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேச்சுரம், சிவபுரம், திருக்கலயநல்லூர், கும்பகோணம், திருவலஞ்சுழி, திருநல்லூர், திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருவையாறு, திருப்பூந்திருத்தி என்னுந் தலங்களுக்கு யாத்திரைசெய்து, திருவாலம்பொழிலை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்து, அன்றிரவு நித்திரை செய்தார். சுவாமி அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "மழபாடிக்கு வருதற்கு மறந்தாயோ" என்று சொல்லியருளினர். சுந்தரமூர்த்தி நாயனர் விழித்தெழுந்து, காவேரிநதியைக் கடந்து, அதன் வடபக்கத்திற்சேர்ந்து, திருமழபாடிக்குப்போய், சுவாமிதரிசனஞ் செய்து "பொன்னார் மேனியனே" என்னும் திருப்பதிகம் பாடி, சிலநாள் அங்கிருந்து, காவேரிநதியின் இருபக்கத்திலு முள்ள ஸ்தலங்களை வணங்கி, மேற்குத்திக்குக்கு யாத்திரை செய்ய நினைந்து, திருவானைக்காவுக்குப்போய், சிவபெருமானை வணங்கி, "மறைகளாயின நான்கும்" என்னும் திருப்பதிகம் பாடினர். உறையூர்ச் சோழமகாராஜா பதக்கஞ் சாத்திக்கொண்டு காவேரியிலே ஸ்நானஞ்செய்தலும், அது வழுவிப்போக, அவர் "சிவபெருமானே கொண்டருளும்" என்று பிரார்த்திக்க, அது திருமஞ்சனக்குடத்துள்ளே புக, அபிஷேகஞ் செய்யப் படும்பொழுது அதனைச் சிவபெருமான் அணிந்து அவருக்கு அருள்புரிந்த தன்மையைச் சுந்தரமூர்த்தி நாயனர் அத்திருப்பதிகத்திலே சிறப்பித்தருளினர்.

பின்பு திருப்பாச்சிலாச்சிராமத்தை அடைந்து, சிவபெருமானை வணங்கி, அவர் தமக்குப் பொன்னளித் தருளாமையினாலே திருவுளம் புழுங்கி, "வைத்தனன் றனக்கே தலையுமெனவும்" என்று திருப்பதிகம் எடுத்து, திருப்பாட்டினிறுதிதோறும் "இவரல்லா தில்லையோ பிரானார்" என்று பாடிப் பொற்குவை பெற்று, சிலநாள் அங்கிருந்து, பின் புறப்பட்டு, திருப்பைஞ்ஞீலி, திருவிற்கோய்மலை என்னும் ஸ்தலங்களுக்குப்போய், வணங்கிக்கொண்டு, கொங்கதேசத்தை அடைந்து, அவ்விடத்திலே காவேரிக்குத் தென்

கரையிலிருக்கும் திருப்பாண்டிக் கொடுமுடிக்குப் போய் "மற்றுப் பற்றெனக்கின்றி" என்னும் நமச்சிவாயப் பதிகம் பாடி, திருப்பேரூரை அடைந்து, அங்கே பரமசிவன் கனக சபையிலே நடனஞ்செய்யும் திருக்கோலத்தைத் தமக்குக் காட்டக் கண்டு, வணங்கிப் பேரானந்தப் பெருங்கடலின் மூழ்கி, சிதம்பரத்துக்கு மீண்டெழுந்தருளுதற்குத் திருவுளங்கொண்டு புறப்பட்டு, திருவெஞ்சமாக்கூடலிலும் வணங்கி, சோழமண்டலத்துக்குத் திரும்பி, திருக்கற்குடிமலை, திருவாறைமேற்றளி, திருவின்னம்பர், திருப்புறம்பயம் என்னும் ஸ்தலங்களுக்கு யாத்திரைபண்ணி, திருக்கூடலையாற்றூருக்குச் சமீபித்தும், அதற்குப் போகாமல் திருமுதுகுன்றை நோக்கிச்சென்றார். செல்லும் வழியிலே, பரமசிவன் ஒரு பிராமணராகி, சுந்தரமூர்த்தி நாயனருக்கு முன்னின்றார். நின்ற அந்தப் பிராமணரைச் சுந்தரமூர்த்தி நாயனர் பார்த்து, "ஐயரே, திருமுதுகுன்றுக்குப் போம்வழி எது? சொல்லும்" என்று கேட்க; ஐயர் "இது கூடலையாற்றூருக்குப் போம்வழி" என்று சொல்லி, வழிகாட்டிக்கொண்டு, முன்னே சென்றார். சுந்தரமூர்த்திநாயனர் அவரைத் தொடர்ந்து சென்று, பின் அவரைக் காணாதவராய், "வடிவுடை மழுவேந்தி" என்றெடுத்து, "அடிகளிவ் வழிபோந்த அதிசயமறியேனே" என்னுந் திருப்பதிகத்தைப் பாடி, கூடலையாற்றூரை அடைந்து, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு, திருமுதுகுன்றுக்குப் போனார். அந்த ஸ்தலத்திலே சுவாமி தரிசனஞ் செய்து திருப்பதிகங்கள் பாடியபோது, சுவாமி பன்னீராயிரம் பொன் கொடுத்தருள; சுந்தரமூர்த்திநாயனர் வணங்கி நின்று, "சுவாமீ, தேவரீர் தந்தருளிய இந்தப் பொன்னெல்லாம் திருவாரூரிலே உள்ளவர்கள் அதிசயிக்கும்படி அங்கே வரச்செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தார். அப்பொழுது, சுவாமியுடைய திருவருளினாலே, "சுந்தரனே, நீ இந்தப் பொன்னெல்லாவற்றையும் மணிமுத்தாநதியிலே இட்டுத் திருவாரூர்க்குளத்திலேபோய் எடுத்துக்கொள்" என்று ஓரசரீரிவாக்கு எழுந்தது. அதைக்கேட்ட சுந்தரமூர்த்தி நாயனர் மச்சம்விட்டிவைத்துக்கொண்டு, பொன்முழுதையும் மணிமுத்தாநதியிலே புகவிட்டு, "அன்று என்னை வலிந்

தாட்கொண்ட திருவருளே இதிலே அறிவேன்'' என்று சொல்லி, சிதம்பரத்துக்குப்போக நினைந்து வழிக்கொண்டு, இடையிலே திருக்கடம்பூரை வணங்கி, சிதம்பரத்தை அடைந்து, சபாநாயகரை நமஸ்கரித்து, "மடித்தாடு மடிமைக்களன்றியே" என்னுந் திருப்பதிகம் பாடினார். தாம் சபாநாயகரைத் திருப்பேருரிலே கண்ட நிலையைச் சிறப்பித்து, அத்திருப்பதிகத்திலே "மீகோங்கிலணி காஞ்சிவாய்ப் பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்ற மன்றே'' என்று அருளிச் செய்தார். பின்பு அங்கு நின்றும் புறப்பட்டு, திருக்கருப்பறியலூர் திருமண்ணிப்படிக்கரை, திருவாளொளிபுற்றூர், திருக்காளட்டி முள்ளூர், திருவெதிர்கொள்பாடி, திருவேள்விக்குடி என்னும் ஸ்தலங்களை வணங்கி, திருவாரூரை அடைந்தார்.

அங்கே சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, பரவையாரோடு கூடியிருக்கும் நாளில்; ஒருநாள் பரவையாரை நோக்கி, "எனக்குத் திருமுதுகுன்றர் தந்தருளிய பொன்னை மணிமுத்தநதியிலே புகவிட்டுவந்தேன். இப்போது இந்த ஸ்தலத்திலே இருக்கின்ற திருக்கோயிலுக்கு மேற்றிசையிலுள்ள குளத்திலேபோய் அவருடைய அருளினாலே எடுத்துக்கொண்டு வருவோம், வா'' என்றார். பரவையார் அதைக் கேட்டு, "இது என்ன அதிசயம்'' என்று சொல்லி, புன்னகை செய்ய; சுந்தரமூர்த்திநாயனார் "பெண்ணே நமது கடவுளுடைய திருவருளினாலே பொன்முழுதும் குளத்திலே எடுத்து உனக்குத் தருவேன், இது சத்தியம்'' என்று சொல்லி, பரவையாரும் கூடவர, கோயிலிலே பிரவேசித்து, வன்மீகநாதரை வணங்கிக்கொண்டு, கோயில வலம் வந்து, மேற்றிசையி லிருக்கின்ற திருக்குளத்தை அடைந்து, அதன் வடகிழக்கரையிலேபோய், பரவையாரை நிறுத்தி, சுவாமியை வணங்கி, குளத்திலே இறங்கி, அங்கே தடவினார். அப்பொழுது பரமசிவன், சுந்தரமூர்த்தி நாயனாரைக் கொண்டு திருப்பதிகம் பாடுவிக்கவேண்டும் என்னும் திருவிளையாட்டினாலே, பொன்னை அக்குளத்திலே வருவியா தொழிந்தருள, பரவையார் "ஆற்றிலே இட்டுக் குளத்திலே

தேடுகிறீரா" என்றார். அதுகேட்ட சுந்தரமூர்த்தி நாயனார் "சுவாமீ, தேவரீர் முன் அருளிச்செய்தபடியே பரவையார் கையாதபடி பொன்னைத்தாரும்" என்று திருமுது குன்றர் மேல் "போன் செய்தமேனியினீர்" என்னுந் திருப்பதிகம் பாடி, பரமசிவனுடைய திருவருளினால் வந்தெழுந்த பொற் றிரளை எடுத்து, கரையிலேற்றி, அந்தப்பொன்னையும் முன் கொண்டுவந்த மச்சத்தையும் உரைப்பித்து, மச்சத்திலும் பார்க்க இது உரை தாழ்ந்தது கண்டு, பின்னும் கடவுளைப் பாடினார். பாடியபோது, கடவுளானவர் உரை தாழாது அருள்செய்ய, சுந்தரமூர்த்திநாயனார் மனமகிழ்ந்து, பொற்கு வைகளை ஆட்களிற் சுமத்தி, பரவையாரோடு வீட்டுக்கு அனுப்பி, தாம் திருக்கோயிலிலேபோய்ச் சுவாமியைவண ங்கி, வீட்டுக்குப்போய், பரவையாருடன் இன்புற்று வாழ்ந் திருந்தார்.

அப்படி வாழ்ந்திருக்குங்காலத்தில், சிவஸ்தல யாத திரைசெய்ய விரும்பி, திருநள்ளாறு, திருக்கடவூர் வீரட்டம், திருக்கடவூர்மயானம், திருவலம்புரம், திருச்சாய்க்காடு, திரு வெண்காடு, திருநனிபள்ளி, திருச்செம்பொன்பள்ளி, திரு நின்றியூர், திருநீர், திருப்புன்கூர், திருக்கோலக்கா என் னும் ஸ்தலங்களை வணங்கி, பதிகம்பாடிப்போய், சீர்காழியி னெல்லையை வலங்கொண்டு வணங்கி, திருஞானசம்பந்தமூர் த்தி நாயனருடைய திருவடிகளைத் துதித்து, திருக்குருகா வூருக்குப் போம்படி வழிக்கொண்டார். வழியிலே, சுவாமி, அவர் பசியினையும் தாகத்தினையும் வருத்துதலை அறிந்து, தண்ணீரும் பொதிசோறும் கொண்டுவந்து, வெய்யில் வெப் பத்தைத் தணிக்கும்பொருட்டு ஒருபக்கத்திலே ஒருபந்தலை யுண்டாக்கி, அங்கே பிராமண வேடங்கொண்டு, சுந்தரமூர் த்திநாயனரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுது சுந்தரமூர்த்தி நாயனர் திருத்தொண்டர்களுடனே அவ் விடத்திலே வந்து, பந்தரின்கீழேபோய், அந்தப் பிராமணர் சமீபத்திலே பஞ்சாக்ஷரத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார். பிராமணர் அவரைப்பார்த்து, "நீர் மிகப் பசிகொண்டிருக் கின்றீர். இந்தப் பொதிசோற்றை உண்டு இந்தத் தண்ணீ

கைக்குடித்து இளைப்பாறும்" என்று சொல்லியருள, சுந்தர மூர்த்திநாயனார் அதற்கு இசைந்து, அந்தப் பொதிசோற்றைவாங்கி, திருத்தொண்டருடன் அமுது செய்து, அளவில்லாத பரிசனங்களெல்லாரும் அமுதுசெய்யப் பண்ணினார். பண்ணிய பின்னும், அந்தப் பொதிசோறு அவ்விடத்திலே பரித்துவந்த பிறரும் உண்ணும்படி குறையாது பொலிந்தது. சுந்தரமூர்த்திநாயனார் போசனம் பண்ணிய பின் சலபானம்பண்ணி, அந்த ஐயரைப் புகழ்ந்து, அவர் சமீபத்திலே பரிசனங்களோடு நித்திரைசெய்ய; ஐயர் பந்த ருடனே மறைந்தருளினார். சுந்தரமூர்த்திநாயனார் விழித்து எழுந்து, ஐயரைக்காணுமையால் அதிசயங்கொண்டு, "இத்த னையா மாற்ற மறிந்திலேன்" என்னும் திருப்பதிகம்பாடி, திருச்சுருகாவூரை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்து கொண்டு, அங்கே இருந்தார். பின் அவ்விடத்தை விட்டுப் போய், திருக்கழிப்பாலையை வணங்கி, சிதம்பரத்தை அடைந்து, சபாநாயகரைத் தரிசனஞ்செய்துகொண்டு, திருத்தினை நகரை வணங்கி, திருநாவலூரை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, சிலநாள் அங்கிருந்தார்.

பின் தொண்டைமண்டலத்தில் இருக்கின்ற ஸ்தலங்க ளுக்கு யாத்திரைசெய்ய விரும்பி, அவ்விடத்தினின்றும் பிர ஸ்தானமாகி, திருக்கழுக்குன்றிற் சென்று சுவாமி தரிசனஞ் செய்து, திருப்பதிகம்பாடி, திருக்கச்சூரிலேபோய், ஆலக் கோயிலுள்ளே பிரவேசித்துச் சுவாமியை வணங்கிக்கொண்டு, புறத்திலே வந்து, அமுதுசெய்யும் பொழுதாகியும், பாகம் பண்ணிக்கொடுக்கும் பரிசனங்கள் வாராமையால் மிகுந்த பசி வருத்தத்தினாலே மதிற்புறத்தில் இருந்தார். அப்பொழுது பரமசிவனனவர் ஒரு பிராமணராகி, ஓர் ஓட்டை எந்திக் கொண்டு, அங்கேசென்று, அவருடைய முகத்தைப் பார்த்து, "நீர் பசியினால் மிக வருந்தி இளைப்புற்றிருக்கின்றீர். நான் இப்பொழுது உமக்கு அன்னம் யாசித்துக்கொண்டு வரு வேன். நீர் அப்புறம் போகாமல் சிறிதுபொழுது இங்கே இரும்" என்று சொல்லி, அந்தத் திருக்கச்சூரிலே இருக் கின்ற பிராமணவீடுகள் எல்லும்போய், அன்னமும் கறியும்

யாசித்துக்கொண்டு, சுந்தரமூர்த்தி நாயனரிடத்திற் சென்று, "பசிதீர இதை உண்ணும்" என்று சொல்லிக் கொடுக்க; நாயனர் அவ்வையருடைய அன்பைப் புகழ்ந்து, மிகுந்த மகிழ்ச்சியோடு அஞ்சலி செய்து வாங்கி, தம்மோடுவந்த தொண்டர்களுடனே அமுது செய்தார். உடனே அவ்வையார் மறைந்தருளினர். அதுகண்டு, சுந்தரமூர்த்தி நாயனர் அவர் பரமசிவனென்று உணர்ந்து, "இந்தப் பெரும்பகலிலே திருவடிவருந்தத் திருமேனிகொண்டு அடியேன் பொருட்டு எழுந்தருளிவந்த பெருங்கருணை இருந்தபடி என்ன" என்று மனங்கசிந்துருகி உரோமாஞ்சங்கொள்ள, கண்ணினின்றும் ஆனந்தவருவி சொரிய, முதுவாயோரி கதற" என்னும் திருப்பதிகம் பாடி, சுவாமியை வணங்கிக்கொண்டு, அவ்விடத்தைவிட்டு நீங்கி, காஞ்சிபுரத்தைச் சமீபித்து, அவ்விடத்தினின்று தமது மகிமையையும் வரவையுங் கேள்வியுற்று வந்து எதிர்கொண்டு வணங்கிய பத்தர்களைத் தாமும் வணங்கி, அவர்களோடு திருநகரத்தினுள்ளே சென்று திருவேகாம்பரத்தை அடைந்து உலகமாதாவாகிய காமாட்சியம்மையால் அருஞ்சிக்கப்பட்ட ஏகாம்பரநாதசுவாமியைத் தரிசித்து, பரவசமாய் அடியற்றமரம்போல விழுந்து, எழுந்து, விம்மி, ஆனந்தபாஷ்பஞ் சொரிய, அஞ்சலியஸ்தராகி, மெய்யன்பினோடு திருப்பதிகம்பாடி, புறத்தே போந்து, திருத்தொண்டர்களோடு அக்காஞ்சிபுரத்திலே சிலநாள் வசித்தார். வசிக்கும் நாட்களிலே, அந்நகரத்தில் இருந்தின்ற காமக்கோட்டத்திற் சென்று அங்கே எழுந்தருளியிருக்கும் காமாக்ஷியம்மையை வணங்கி, திருமேற்றளியை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகம்பாடி, திருவோணகாந்தன்றளியை அடைந்து "கெய்யும்பாலும்" என்னும் திருப்பதிகம்பாடிப் பொன்பெற்று, ஏகதங்காவதத்தை அடைந்து திருப்பதிகம் பாடினர். பின் திருப்பனங்காட்டூர், திருமாற்பேறு, திருவல்லம் முதலிய ஸ்தலங்களுக்குப்போய் வணங்கிக்கொண்டு, திருக்காளத்திமலையை அடைந்து, அதனைப் பிரதக்ஷிணஞ் செய்து நமஸ்கரித்து, மேலே ஏறி, காளத்தியப்பர் சந்நிதானத்திற் சென்று, அவரைவணங்கி, அவருக்கு வலப்பக்கத்தில் நிற்கின்ற அன்பிலே தமக்கு வேறொப்பில்லாத கண்

ணப்பநாயனாருடைய திருவடித்தாமரைகளை வணங்கி, கீழே இறங்கி, திருத்தொண்டர்களுடனே சிலநாள் அந்த ஸ்தலத்தில் இருந்தார். இருக்கும் நாட்களிலே, உத்தரபூமியில் இருக்கின்ற ஸ்ரீபருப்பதம் திருக்கேதாரமலை முதலாகிய சிவஸ்தலங்களை அங்கிருந்தே வணங்கி, அவைகளின்மேலே திருப்பதிகம் பாடியருளினார். அதன்பின், அவ்விடத்தை விட்டு, நீங்கி, சமுத்திரதீரத்தில் இருக்கின்ற திருவொற்றியூரிற் சென்று திருப்பதிகம் பாடி, திரிகாலங்களிலும் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு அங்கே இருந்தார்.

இதற்கு முன், திருக்கைலாச மலையிலே சுந்தரமூர்த்திநாயனார்மேல் ஆசைவைத்த சேடியர்கள் இருவருள் அனிந்திதையார் என்பவர் ஞாயிறு என்னும் ஊரிலே இருக்கும் வேளாளரிற் சிறந்தோங்கிய ஞாயிறுகிழவர் என்பவருக்குப் புத்திரியாய்த் திருவவதாரஞ்செய்து, சங்கிலியார் என்னும் பெயரைப் பெற்று, உமாதேவியாருடைய திருவடிகளிலே மிகுந்த பத்தியுடையவராய் இருந்தார். அவர் பெதும்பைப் பருவமடைந்தது கண்டு, தந்தையாராகிய ஞாயிறுகிழவர் தம்முடைய மனைவியாரை நோக்கி, "நம்முடைய புத்திரி இப்பூவுலகத்துப் பெண்களெல்லாரிலும் பார்க்க அதிக சௌந்தரியமும் நற்குணமும் உடையவளாய் இருக்கின்றாள். அவளுக்கு விவாகஞ்செய்து கொடுக்குங் காலமாயிற்று. இதற்கு யாது செய்வோம்" என்று சொல்ல; மனைவியார் "அவளுடைய சௌந்தரியத்துக்கும் குணத்துக்கும் இசைய ஒரு புருஷனைத் தெரிந்து விவாகஞ்செய்து கொடும்" என்றார். அதைக் கேட்டுக்கொண்டிருந்த சங்கிலியார் "இவர்கள் பேசும் வார்த்தை எனக்குப் பொருந்தும் வார்த்தையன்று. நானே நமது கடவுளாகிய பரமசிவனுடைய திருவருளைப்பெற்ற ஒருவருக்கு மனைவியாதற்கு உரியேன். இப்படியன்றி மற்றெப்படி விதியுமோ தெரியேன்" என்று நினைந்து, அச்சங்கொண்டு, அதிக மயங்கி மிகச்சோகித்து, நிலத்திலே விழுந்தார்: சமீபத்தில் நின்ற தந்தையாரும் தாயாரும் அதைக்கண்டு, பதைபதைத்து அவரை யெடுத்து, ஏங்கிய மனத்தையுடையவர்களாகி, "இவளுக்கு நிகழ்ந்தது யாதோ" என்று மயங்கி, தாம்

இப் பனிநீர் தெளித்துத் தடவி, அவருக்குச் சோகம் நீங்கிய பின்; அவரைப் பார்த்து, "மகளே, உனக்கு நிகழ்ந்தது யாது? சொல்" என்று கேட்க; சங்கிலியார் "இப்பொழுது என்னைக்குறித்து நீங்கள் பேசியது எனக்கு இசையாது, நானே பரமசிவனது திருவருளைப்பெற்ற ஒருவருக்கு மனைவியாதற்கு உரியேன். நான் இனிமேல் திருவொற்றியூரை அடைந்து திருவருளிற் செல்லுவேன்" என்றார். அதைக் கேட்ட தந்தைதாயார் இருவரும் சோகமும் அச்சமும் அதிசயமும் உடையவர்களாகி, அந்தச்சங்கிலியார் சொல்லிய வார்த்தையை மறைத்து ஒழுகினர்கள். ஒழுகும் நாட்களில் அவர்களுடைய குலத்துக்கு ஒப்பாகிய குலத்தில் உள்ள ஒருவன், நிகழ்ந்த அந்தச் சங்கதியை அறியாதவனாகி, சங்கிலியார்மேல் விருப்பங்கொண்டு, அவருடைய தந்தையாரிடத்திலே கலியாணம் பேசும்பொருட்டுச் சிலரை அனுப்பினன். அனுப்பப்பட்ட அவர்கள் அத்தந்தையாரிடத்திற் சென்று பேச, அதுகேட்டுத் தந்தையார், நிகழ்ந்த சங்கதியைச் சொல்லுதல் தகுதியன்று என்று நினைந்து வேறோர் உபாயத்தினால் அனுப்பிவிட்டார். அவர்கள் திரும்பிப்போய்ச் சேர்ந்தவுடனே, அவர்களை அனுப்பினவன் அவர்களோடு இறந்து போயினன். அதைச் சங்கிலியாருடைய தந்தை தாயார் கேள்வியுற்று மனமயங்கி, உய்யவேண்டும் என்கின்ற நினைவுடையவர்கள் சங்கிலியார் பகுதத்திலே பேசத் தகாதவார்த்தையைப் பேசார்கள் என்பதை உலகம் அறியும்படிசெய்த திருவருளைக்கண்டு, அதனை யாவர்க்கும் உள்ளபடி சொல்லி, மிகப்பயந்து, "இனி நாங்கள் இவரெண்ணத்தின்படியே இவரைச் சிவபுண்ணியஞ் செய்து கொண்டு இருக்கும்பொருட்டுத் திருவொற்றியூரிலே கொண்டு போய் விடவேண்டும்" என்று துணிந்து, தங்கள் ஞாதிகளோடும் சங்கிலியாரைப் பார்த்து, "நீர் திருவொற்றியூரை அடைந்து கன்னிமாடத்தில் இருந்து பரமசிவனுடைய திருவருளை முன்னிட்டுத் தவஞ்செய்யும்" என்று சொல்லி, மிகுந்த செல்வத்தோடும் அவரைத் திருவொற்றியூருக்குக் கொண்டுபோய், கோயிலிலே பிரவேசித்து, சுவாமியை வணங்கிக்கொண்டு, சமீபத்திலே ஒரு கன்னிமாடஞ் செய்வித்து, அதிலே அவரையிருத்தி, அவ

ருக்கு வேண்டும் திரவியங்களையும் அமைத்து, அவரை வணங்கி நின்று, "நீர் இந்தக் கன்னிமாடத்திலே பரமசிவனுக்குத் திருத்தொண்டு செய்துகொண்டு இரும்" என்று சொல்லி, அவரைப் பிரிதலினாலே இரண்டு கண்ணினின்றும் சோகபாஷ்பஞ்சொரிய, அனுமதி பெற்றுக்கொண்டு தங்கள் ஊருக்குத் திரும்பிவிட்டார்கள். சங்கிலியார் அந்தக் கன்னிமாடத்தில் இருந்து, தினந்தோறும் திரிகாலங்களிலும் திருக்கோயிலிலேபோய், சுவாமிதரிசனஞ்செய்து, பூக்கட்டுமண்டபத்திலே திரை இட்டு இருக்கின்ற ஓரிடத்திற் போயிருந்து, புஷ்பமாலைகட்டி, சுவாமிக்குச் சாத்தும்படி கொடுத்துக் கொண்டு வருவார்.

இப்படி நிகழுங்காலத்திலே, ஒருநாள் சுந்தரமூர்த்திநாயனார் திருக்கோயிலிலே போய்ச் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு புறப்பட்டு, அடியார்கள் செய்கின்ற பலவகைத் திருத்தொண்டையும் பார்த்தவராகி, புஷ்பமண்டபத்தினுள்ளே போனார். போனபொழுது முன்போலத் திரையை நீக்கிப் பரமசிவனுக்குச் சாத்தும்படி தாம் கட்டிய பூமாலைகளைக் கொடுத்து விட்டு மின்போல மறைந்த சங்கிலியாரை விரைந்து கூட்டக்கண்டு, அவர்மேல் ஆசைகொண்டு, புறத்திலே போய், "புஷ்பமண்டபத்தினுள்ளே ஒருபக்கத்திலே திரைக்குள்ளே நின்று ஒரு பெண் என்னுடைய மனதைக் கவர்ந்து கொண்டாள். அவள் யார்" என்றார். சமீபத்திலே நின்றவர்கள் "அவர் பரமசிவனுக்கு மிகுந்த பத்திபோடு திருத்தொண்டு செய்கின்ற கன்னிகையாகிய சங்கிலியார்" என்றார்கள். அதைக்கேட்ட சுந்தரமூர்த்திநாயனார் திருக்கோயிலினுள்ளே போய், சுவாமியை வணங்கி நின்று, சங்கிலியாரைத் தமக்குத் தந்தருளும்படி பிரார்த்தித்துக்கொண்டு, திருக்கோயிலின் புறத்திலே போய், ஓரிடத்திலேயிருக்க: சூரியன் அஸ்தமயனமாயிற்று. அப்பொழுது பரமசிவன் சுந்தரமூர்த்திநாயனாரிடத்திலே போய், "இவ்வுலகத்தில் உள்ளவர்கள் யாவராலுஞ் செய்யப்படுதல் கூடாதபெருந்தவத்தைச் செய்கின்ற உத்தமியாகிய சங்கிலியை உனக்குத் தருவோம். நீ கொண்ட கவலையை ஒழி" என்று திருவாய் மலர்ந்தருளி, அத்தியாமத்

திலே கன்னிமாடத்திலே நித்திரை செய்கின்ற சங்கிலியாருக்குச் சொப்பனத்திலே தோன்றினார். தோன்றியபொழுது, சங்கிலியார் பரவசமாய் விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று, "சுவாமி, அடியேன் உய்யும்படி தேவரீர் அடியேனிடத்திலே எழுந்தருளிவரும்பொருட்டுப் பூர்வ ஜன்மத்திலே என்ன தவஞ் செய்தேன்" என்று சொல்ல; பரமசிவன் "சங்கிலியே, நம்மேலே மிகுந்த பத்தியுடையவனும் திருவெண்ணெய்நல்லூரிலே சமஸ்தரும் அறியும்படி கம்மாலே தடுத்தாட்கொள்ளப்பட்டவனும் நமக்குத் தோழனும் ஆகிய சுந்தரன் தனக்கு மனைவியாக உன்னைத் தரும்பொருட்டு என்னைப் பிரார்த்தித்தான். நீ மகிழ்ச்சியோடும் அதற்கு உடன்படு" என்று சொல்லியருளினார். அதற்குச் சங்கிலியார் "சுவாமி, அடியேன் தேவரீருடைய ஆஞ்ஞையைத் தலைமேற் கொண்டேன். தேவரீர் சொல்லிய நெறிய நாயனாருக்கே மனைவியாதற்கு உரியேன். ஆயின், அவர் திருவாரூரினிடத்தே மிகுந்த சங்கோசத்தோடு வசிக்கின்றவர் என்பதைத் தேவரீர் நியமங்கொண்டருளும்" என்று விண்ணப்பஞ்செய்தார். அதுகேட்ட கடவுள் "பெண்ணே, அந்தச் சுந்தரன் உன்னைப் பிரிந்து போகேன் என்று ஒரு சபதஞ் செய்துதருவான்" என்று சொல்லியருளி, சுந்தரமூர்த்திநாயனரிடத்திற்சென்று, "நாம் சங்கிலியிடத்திலே போய் உன்னெண்ணத்தைத் தெரிவித்தோம். நான் உன்னைப் பிரிந்து செல்லேன் என்று நீ அவளுக்குச் சபதஞ் செய்து கொடுத்தால், அவள் உடன்படுவாள். இனி உனக்கு நாம் என்ன செய்யவேண்டும்" என்று அருளிச்செய்ய; சுந்தரமூர்த்திநாயனர் "இக்கடவுளுடைய பிற தலங்களையும் சென்றுவணங்க விரும்புகின்ற அடியேனுக்கு இது விலக்காகும்" என்று நினைத்து, அவரை வணங்கி, "சுவாமி, சங்கிலிக்கு நான் உன்னைப் பிரியேன் என்று சபதஞ்செய்து கொடுக்கும்பொருட்டு அடியேன் அவளோடு தேவரீருடைய ஆலயத்துக்கு வந்தால், அப்பொழுது தேவரீர் அவ்வாலயத்தை விட்டுத் திருமகிழின்கீழ் இருந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார். அதற்குக்கடவுள் இசைந்தருளி, சங்கிலியாரிடத்திலே முன்போலப் போய், "பெண்ணே, சுந்தரன் உனக்குச் சபதஞ்செய்து தருதற்கு உடன்பட்டிருக்கிறான். அவன்

நம்முடைய ஆலயத்திலே சபதஞ்செய்துதருதற்கு வந்தால், நீ அதற்கு உடன்படாமல் மகிழின்கீழே சபதஞ்செய்துதரும்படி கேள்'' என்று சொல்லி மறைந்தருளினர். சங்கிலியார் விழித்தெழுந்து, அதிசயித்து, அவ்விரவிலே பரமசிவனுடைய திருவருளே நினைந்து நினைந்து, நித்திரைசெய்யாதவராகி, சமீபத்திலே நித்திரை செய்கின்ற தம்முடைய சேடியர்களை எழுப்பி, தமக்குக் கனவிலே பரமசிவன் அருளிச்செய்த எல்லாவற்றையும் அவர்களுக்குத் தெரிவிக்க; அவர்கள் அச்சம் அதிசயம் ஆனந்தம் மூன்றும் அடைந்து, சங்கிலியாரை வணங்கினார்கள். திருப்பள்ளியெழுச்சிக்குப் புஷ்பந் தொடுக்கும்பொழுது ஆயினமைகண்டு, சங்கிலியார் சேடியர்களோடு திருக்கோயிலுக்குச் செல்ல: அவருக்குச் சபதஞ் செய்துகொடுக்கும்பொருட்டு, அதற்குமுன் அவ்விடத்தில் வந்து அவருடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டு நின்ற சுந்தரமூர்த்திநாயனர், தமக்கு எதிரே வந்த அவர் சமீபத்திற் சென்று, தமக்குப் பரமசிவன் அருளிச்செய்ததைச் சொன்னர். அதற்குச் சங்கிலியார் எதிர்வார்த்தை ஒன்றும் சொல்லாமல் நாணங்கொண்டு, சேடியர்களோடும் திருக்கோயிலினுள்ளே புகுந்தார். சுந்தரமூர்த்திநாயனர் அவர் பின்னே போய், ''பெண்ணே, நான் உம்மைப்பிரியேன் என்று சபதஞ்செய்யும் பொருட்டுச் சுவாமி சந்நிதானத்துக்கு வாரும்'' என்று சொல்ல; சங்கிலியார் கண்ட கனவைக் கேட்டறிந்த சேடியர்கள் ''சுவாமி, இதன்பொருட்டுத் தேவரீர் சிவசந்நிதானத்திலே சபதஞ்செய்வது தகாது'' என்றார்கள். அப்பொழுது சுந்தரமூர்த்திநாயனர் பரமசிவனுடைய செய்கையை அறியாமல், ''பெண்களே, நான் வேறெங்கே சபதஞ்செய்து தரவேண்டும்'' என்று கேட்க: சேடியர்கள் ''மகிழின்கீழே சபதஞ்செய்துகொடும்'' என்றார்கள். அதைக் கேட்ட நாயனர் மனமருண்டு, ''இவர்கள் சொல்லியதை மறுக்கில், விவாகத் தவறினுந் தவறும்: ஆதலால், இதற்கு உடன்படவேண்டும்'' என்று துணிந்து, ''அப்படியே செய்யலாம் வாருங்கள்'' என்று சொல்லி, அவர்களோடு மகிழின்கீழே போய்ச்சேர்ந்து, சங்கிலியார் காணும்படி அந்தமகிழை மூன்று தரம் வலஞ்செய்து, ''உன்னை நான்பிரியேன்'' என்று சபதஞ்

செய்துகொடுத்தார். அதுகண்டு சங்கிலியார் மனங்கலங்கி "கடவுளுடைய ஆஞ்ஞையினுலே பாவியேன் இதைக் கண் டேனே" என்று துக்கித்துக்கொண்டு, ஒரு பக்கத்திலேமறை ந்து நின்றார். சுந்தரமூர்த்திநாயனர் சபதமுடித்தபின், ஆல யத்தினுள்ளே போய்க் கடவுளை வணங்கி ஸ்தோத்திரஞ்செய் துகொண்டு திரும்பிவிட்டார். அதற்குப்பின், சங்கிலியார் புஷ் பமண்டபத்திலே போய்த் தம்முடைய பணியை முடித்து, பர மசிவன் தமக்கு அருள்செய்ததை நினைந்து, அவரை வணங் கிக்கொண்டு, விடியும்பொழுது கன்னிமாடத்துக்குத் திரும்பி விட்டார். அவ்விரவிற்றானே பரமசிவன் திருவொற்றியூரிலே இருக்கின்ற தம்முடைய தொண்டர்களுக்குச் சொப்பனத் திலே தோன்றி, நம்முடைய அடியானுகிய சுந்தரனுக்குச் சங் கிலி யென்னும் கன்னிகையை விவாகஞ்செய்து கொடுங்கள்" என்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளினர். அவர்கள் அவ்வாஞ் ஞையைத் தலைமேற்கொண்டு, மற்றநாளிலே அவ்வூரில் இருக் கின்ற சபஸ்தசனங்களோடுங் கூடி, மிகுந்த மகிழ்ச்சியோடும் மகாலங்காரத்தோடும் சங்கிலியாரைச் சுந்தரமூர்த்திநாயனருக்கு விவாகஞ்செய்து கொடுத்தார்கள்.

விவாகஞ்செய்த சுந்தரமூர்த்திநாயனர் சங்கிலியாரோடு கூடி அவ்வூரிலே வாழ்ந்திருந்தார். இருக்கும் நாளிலே, ஒரு நாள் திருவாரூரிலிருக்கின்ற வீதிவிடங்கப்பெருமானுடைய வசந்தோற்சவகாலம் சமீபித்ததை அறிந்து, "வன்மீகநாதரை இவ்வளவுகாலமும் மறந்திருந்தேனே" என்று துக்கித்து, அவர்மேலே "பத்திமையுமடிமையையுங்கைவிடுவோன் பாவி யேன்" என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினர். பின்னொ ருநாளிலே அவரை மிகநினைந்து, திருவாரூருக்குப்போகக் கருதி, ஆலயத்திலே புகுந்து சுவாமிதரிசனஞ் செய்து கொண்டு திருவொற்றியூரை நீங்கினர். நீங்கியபொழுது, சுந் தரமூர்த்திநாயனருக்கு, அவர் சபதந்தவறினமையால், இர ண்டு கண்களும் மறைந்தன. அப்பொழுது நாயனர் திகைத்து மெய்தளர்ந்து, "சபதந்தவறினமையால், எனக்கு இது நிகழ்ந்தது" என்று நினைந்து, "இந்தக் கொடுந்துயரத்தை நீக் கும்பொருட்டு நமதுகடவுளைப் பாடுவேன்" என்று துணிந்து,

"அழுக்கு மெய்கொடேன் றிருவடி யடைந்தேன்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடினர். பாடியும், கடவுள் அத்துயரத்தை நீக்கினரில்லை. ஆயினும் திருவாரூருக்குச் செல்ல வேண்டுமென்கின்ற பேரவாவினால் சிலர் முன்னே வழிகாட்டிக்கொண்டு செல்ல, திருமுல்லைவாயிலுக்குப்போய், சுவாமியை வணங்கி "விண்பணிந் தேத்தும் வேதியா" என்னுந் திருப்பதிகத்தைப்பாடி, திருவெண்பாக்கத்தை அடைந்து சிவபெருமானை வணங்கி, "திருக்கோயிலுள்ளீரே" என்று விண்ணப்பஞ்செய்ய; சிவபெருமான் அவருக்கு ஊன்றுகோல் கொடுத்து, "உள்ளோம் போகீர்" என்று சொல்லியருளினர். சுந்தரமூர்த்திநாயனார் "பிழையுளான பொறுத்திடுவோ" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு, பழையனூரிலே போய், காரைக்காலம்மையார் திருத்தலையாலே பிரதக்ஷிணஞ்செய்த திருவாலங்காட்டுக்குச் சமீபத்திலே நின்று அதனை வணங்கி, "முத்தா முத்தித்தரவல்ல" என்னுந் திருப்பதிகம்பாடி, திருவூறலிற் சென்று வணங்கி, காஞ்சீபுரத்தை அடைந்தார். அங்கே முன் காமக்கோட்டத்திற்சென்று, தருமத்தை வளர்க்கின்ற பெருங்கருணையையுடைய உலகமாதாவாகிய காமாக்ஷியம்மையை வணங்கித் துதித்துக்கொண்டு, திருவேகம்பத்தை அடைந்து, ஏகாம்பரநாதசுவாமியை வணங்கி, "ஆதிகாலத்திலே திருப்பாற்கடலினின்று எழுந்து தேவர்களை வருத்தத் தொடங்கிய ஆலாகலவிஷத்தைத் திருமிடற்றிலடைத்து அவர்கள் அமுதுண்ண அருள்செய்த கருணைநிதியே, சிறியேன் செய்த பிழையைப்பொறுத்துச் சிறியேனுக்குத் தேவரீரைத் தரிசிக்கும்பொருட்டுக் கண்ணைத் தந்தருளும்" என்று பிரார்த்தித்தார். அப்பொழுது கடவுள் இடக்கண்ணை மாத்திரம் கொடுத்து, தமது திருக்கோலத்தைக்காட்ட; சுந்தரமூர்த்திநாயனர் கண்டு பரவசமாகி அடியற்ற மரம்போல வீழ்ந்து எழுந்து, "ஆலந் தானுகந் தமுது செய்தானை" என்னுந் திருப்பதிகத்தைப்பாடி, அந்தஸ்தலத்திலே சிலநாள் இருந்து, பின் அந்தஸ்தலத்தை நீங்கி, வழியிலே "அந்தியுண்பகலும்" என்றெடுத்து, "தென்திரு வாரூர்புக் கேந்தைபிரானரை யேன்றுகொலேய்ந்துவதே" என்னுந் திருப்பதிகத்தைப்பாடிக் கொண்டு, தொண்டைமண்டலத்தைக் கடந்து, திருவாமாத்

தூரிற் சென்று பதிகம்பாடி, திருவாத்துறையை வணங்கிப் பதிகம் பாடிக்கொண்டு, சோழமண்டலத்தை அடைந்தார்.

அந்நாட்டிலே திருவாவடுதுறையிற்சேர்ந்து, சுவாமியை வணங்கி, ஒரு கண்ணில்லாமையைக் குறித்து மனங்கவன்று "கங்கைவார்சடையாய்" என்னுந் திருப்பதிகம்பாடி, திருத்துருத்திக்குப் போய்ச் சுவாமியை வணங்கி, அடியேனுடைய சரீரத்தின்மேலே பொருந்திய நோயை நீக்கியருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார். அதற்குக் கடவுள் "நீ இக்கோயிலுக்கு வடபுறத்தில் இருக்கின்ற குளத்திலே ஸ்நானம் பண்ணுவாயாகில், இந்நோய் நீங்கிவிடும்" என்று திருவாய்மலர்ந்தருளினர். அதுகேட்டுச் சுந்தரமூர்த்திநாயனர் கைதொழுது புறப்பட்டு, அந்தத் தீர்த்தத்தை அடைந்து, சுவாமியை வணங்கிக்கொண்டு, அவருடைய திருவடிகளிலே அன்போடு பதிந்த இருதயத்துடனே அத்தீர்த்தத்திலே ஸ்நானம்பண்ணினர். உடனே அவருடைய திருமேனி நோய் நீங்கிப் பிரகாசம் அடைந்தது. அவர் கண்டவர்கள் அதிசயிக்கும்படி கரையேறி, வஸ்திரந் தரித்துக்கொண்டு, திருக்கோயிலிலே போய், சுவாமியை வணங்கி, "மின்னுமாமேகங்கள்" என்னுந் திருப்பதிகம்பாடி, அத்திருப்பதியை நீங்கி, திருவாரூரிற் சென்று, மாலைக்காலத்திலே முன்னே தூவாயரை வணங்கும்படி அடியார்களோடு பரவையுண்மண்டளி என்னுந் திருக்கோயிலிலே பிரவேசித்து வணங்கிக் கண் தந்தருளும்படி, திருப்பதிகம்பாடி, வெளியேபோய், ஓரிடத்தில் இருந்து, பின் அடியார்களோடு திருமூலட்டானத்திலே திருவத்தியாமத்திலே சுவாமிதரிசனஞ் செய்வதற்கு எழுந்து வழிக்கொண்டு, வழியிலே அடியார்கள் தமக்கெதிரே வர அவர்கள் முகத்தைப் பார்த்து, கைக்கிளையிலே "குருகுபாய" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு போய், தேவாசிரியமண்டபத்தை முன்னே நமஸ்கரித்து, கோபுரத்தையும் வணங்கி, உள்ளே புகுந்து, சுவாமி சன்னிதானத்திலே போய் விழுந்து நமஸ்கரித்து, எழுந்து நின்று, சுவாமியைத் தரிசனஞ்செய்தற்கு ஒருகண் போதாமையால் அதிக துக்கங்கொண்டு, "சுவாமீ, அடியேனுக்கு வலக்கண்ணையுந் தந்து அடியேனை

இத்துக்கசாகரத்தினின்றும் கரையேற்றியருளல் வேண்டும்'' என்று பிரார்த்தித்து, ''மீளா வடிமை யுமக்கேயாளாய்'' என்னுந் திருப்பதிகம் பாடினர். அப்பொழுது வன்மீகநாதர் திருவுளமிரங்கி, அவருக்கு வலக்கண்ணையுங் கொடுத்தருளினர். உடனே சுந்தரமூர்த்திநாயனர் பரவசமாய்ப் பல முறை விழுந்தும், எழுந்தும், மிகுந்த களிப்பினால் ஆடியும் பாடியும் ஆனந்தசாகரத்தில் அமிழ்ந்தி, வன்மீகநாதருடைய திருக்கோலத்தை இரண்டு கண்களினாலும் தரிசனஞ்செய்து வணங்கித் துதித்துக்கொண்டு புறப்பட்டு தேவாசிரியமண்டபத்திலே போய், அங்கெழுந்தருளியிருந்தார்.

முன் சுந்தரமூர்த்திநாயனர் திருக்கோயிலுக்குப் போம் போது அவருடைய பரிசனங்களிற் சிலர் பரவையார்வீட்டுக் குப்போக நினைந்து, அவர்வாயிலிலேபோய், அப்பரவையார் தம்மைப் பிரிந்து சென்ற சுந்தரமூர்த்திநாயனர் திருவொற்றியூரிலே சங்கிலியாரை விவாகஞ்செய்துகொண்டிருந்த சங்கதியைக்கேள்வியுற்று அதிக துக்கமும் கோபமுங்கொண்டிருந்தமையால், உள்ளே போகப் பெறாமல், திரும்பி, தேவாசிரியமண்டபத்திலிருந்த சுந்தரமூர்த்திநாயனரை அடைந்து, ''சுவாமீ, பரவையார் தேவரீர் திருவொற்றியூரிலே சங்கிலியாரை விவாகஞ்செய்த சமாசாரம் முற்றுங் கேள்வியுற்றமையால், இப்பொழுது அவர்வீட்டுப்புறத்தும் செல்லப்பெறாமல் திரும்பிவிட்டோம்'' என்றார்கள். அதைக்கேட்ட நாயனர் மனங்கலங்கி, ''இனி இதற்கு யாது செய்வோம்'' என்று ஆலோசித்து, லௌகிகவிஷயத்திலே வல்ல சில மனிதர்களை, பரவையார் கொண்ட கோபத்தை நீக்கிக்கொண்டு வரும்பொருட்டு, அவரிடத்திற்கு அனுப்பினர். அனுப்பப்பட்ட அவர்கள் பரவையார் முன் சென்று, அவருக்குப் பல நியாயங்களையும் எடுத்துச்சொல்லி, ''சுந்தரமூர்த்திநாயனரோடு முன்போலக் கூடியிருக்கவேண்டும்'' என்று பிரார்த்தித்தார்கள். அதற்குப் பரவையார் இசையாதவராகி, கோபம் அதிகரித்து, ''எனக்குக் குற்றஞ்செய்த அவர் பக்கத்தில் இன்னும் இப்படிப் பேசுவீர்களாகில், நான் பிராணத்தியாகம் பண்ணிப் போடுவேன்'' என்றார். அவர்கள் அதைக்கேட்டு மிகுபயத்து,

சுந்தரமூர்த்திநாயனரிடத்திற் சென்று, நிகழ்ந்த சங்கதி ஓய்த் தெரிவித்தார்கள். அதைக் கேட்ட நாயனர் மிகுந்த துக்கசாகரத்தில் அமிழ்ந்தி, சமீபத்தில் இருந்தவர்கள் எல்லாரும் நித்திரை செய்யும்பொழுது, அத்தயாமத்திலே தனியே வருந்தி, பரமசிவனுடைய திருவடிகளைத் தியானித்து, "ஆன்மாக்கள்செய்த கன்மங்களைத் தொலைக்கும் பொருட்டு அவைகளின் பலன்களைப் புசிப்பித்தருளுகின்ற கடவுளே, அடியேன் பூர்வத்திலே செய்த கர்மத்தினாலே அடியேனுக்குத் தேவரீராலே கூட்டப்பட்ட பரவையினுடைய ஊடலைத் தேவரீரே இந்த அத்தயாமத்தில் எழுந்தருளிவந்து தீர்த்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார். அப்பொழுது, தனுகரணங்களையானென்றும் புவனபோகங்களை எனதென்றும் அபிமானிக்கின்ற அகங்கார மமகாரங்களை ஒழிந்து தம்மை உணர்ந்து தமது திருவருள் வழிநிற்கும் மெய்ஞ்ஞானிகளுக்குப் பிராரத்தமாத்திரம் புசிப்பித்து அவர்கள் அது புசிக்கும்போது மனம் வாக்குக்காயம் என்னுந் திரிகரணங்களாற்செய்யுஞ் செயல்கள் அவர்களுக்கு ஆகாமியமாய் எழுது அவைகளைத் தஞ்செயலாகக் கொண்டருளும் சிவபெருமான், சுந்தரமூர்த்திநாயனருக்குப் பிராரத்த முற்றும் புசிப்பித்துத் தொலைப்பிக்கும்பொருட்டும், தாம் அப்படிச் செய்தல் அவன் அவள் அது முன்னிலையாயாம் ஆயினும், அம்முன்னிலையாய் அது செய்பவர் தாமே என்பது நம்மனோர்க்கும் தெளிவுறப் புலப்படும்பொருட்டும், விஷ்ணுமூர்த்தியாலும் தேடிக் காணப்படாத அருமைத்திருவடிகள் பூமியிலே தீண்டும்படி அந்நாயனருக்கு வெளிப்பட எழுந்தருளி வந்தார். அதுகண்ட நாயனர் எழுந்து, தாங்கற்கரிய ஆனந்தமேலீட்டினாலே சரீரம் நடுங்க, உரோமஞ் சிலிர்க்க, இரண்டுகைகளும் சிரசின்மேல் ஏறிக் குவிய, கடவுளுடைய திருவடியிணைக்கீழ் விழுந்து, எழுந்து, ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு நின்றார். கடவுள் அவரைநோக்கி, "உனக்கு நிகழ்ந்தது யாது" என்று கேட்டருளா; அவர் "தேவரீருடைய திருவருள்கூட்ட அடியேன் திருவொற்றியூரிலே சங்கிலியை விவாகஞ்செய்த சமாசாரமுழுதும் பரவையானவள் கேள்வியுற்று அறிந்து, தன்னிடத்திலே நான் வரில் தான்

பிராணத்தியாகம் பண்ணுதல் தவறுது என்று சொல்லிக் கொண்டிருக்கின்றாள். சிறியேன் தேவரீருக்கு அடியானும் தேவரீர் சிறியேனுக்குத் தோழனும் ஆண்டவருமாயிருத்தல் மெய்யானால், சிறியேன் படுந் துன்பத்தைப் பார்த்துத் தேவரீரே இவ்விரவில் பரவையின்மீட்டுக்குச் சென்று அவளுடைய ஊடலைத் தீர்த்தருளல்வேண்டும்'' என்று விண்ணப்பஞ்செய்தார். அதைக்கேட்ட கடவுள் ''தோழனே, நான் இப்பொழுது உனக்கு ஒரு தூதனைப் பரவையின்மீட்டுக்குப் போகின்றேன். நீ உன் துன்பத்தை ஒழி'' என்று திருவாய்மலர்ந்தருளி, தேவர் முனிவர் பூதர்கள் முதலாகிய சமஸ்தரும் ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு புறத்திலே சூழும்படி, பரவையார் வீட்டை நோக்கி நடந்து, அவ்வீட்டுவாயிலை அடைந்து, தம்மோடுவந்த கணங்கள் புறத்திலேநிற்க, தாம் தமக்கு அருச்சனைசெய்கின்ற ஒரு ஆதிசைவர் வடிவங்கொண்டு உள்ளே தனியேசென்று, கதவுபூட்டியிருத்தலால் அதற்கு முன்னின்று, ''பரவையே, கதவைத்திற'' என்று அழைத்தார். நித்திரையின்றித் துக்கத்தோடிருந்த பரவையார் அதைக்கேட்டு, தம்மை அழைத்தவர் சுவாமிக்கு அருச்சனை செய்கின்ற ஆதிசைவரென்றுணர்ந்து, ''சுவாமிக்கு அருச்சனை செய்யும் பெரியவர் இந்த அர்த்தயாமத்திலே இங்கே வந்தது யாதுகாரணம் பற்றியோ'' என்று பயந்து பதைபதைத்துப்போய், கதவைத்திறந்து, அவரைக் கண்டு, ''சுவாமீ, தேவரீர் இப்பொழுது இங்கே எழுந்தருளிவந்த காரணம் யாது'' என்றுகேட்டார். அதற்குக் கடவுள் ''நான் சொல்வதை நீ மறுது செய்வாயாகில், சொல்லுவேன்'' என்று சொல்ல; பரவையார் ''நீர் அதைச் சொல்லும். அது என்னால் இயலுமாகில், செய்வேன்'' என்றார். கடவுள் ''சுந்தரமூர்த்தி இங்கேவருதற்கு நீ உடன்படல்வேண்டும்'' என்று சொல்ல பரவையார் ''உம்முடைய பெருமை நன்றாய் இருக்கின்றது. என்னைப் பிரிந்துசென்று திருவொற்றியூரிலே சேர்ந்து அங்கே சங்கிலியினாலே பிணிப்புண்டவருக்கு இங்கே ஒரு சார்பு உண்டாகுமோ'' என்றார். சுவாமி அதைக்கேட்டு, நீ ''உனக்குச் சுந்தரமூர்த்திசெய்த குற்றங்களை மனதிலே கொள்ளாமல் கோபநீங்கி அவரை இங்கே

வருவிக்கும்பொருட்டு, உன்னை நான் வேண்டிக்கொண்டேன். நீ ஏறுப்பது தகுதியன்று'' என்று அருளிச்செய்ய, பரவையார் ''நீர் இந்தக் காரியத்தின்பொருட்டு இந்த வீட்டுக்கு வருதல் உம்முடைய பெருமைக்குத் தகுதியன்று. அவர் இங்கே வருதற்கு நான் இசையமாட்டேன். நீர் போய்விடும்'' என்றார்.

அதைக் கேட்ட கடவுள் உள்ளே நகைத்துக்கொண்டு, தம்முடைய திருவுருவத்தைப் பரவையாருக்குக் காட்டாமல், சுந்தரமூர்த்திநாயனரிடத்திற்குத் திரும்பிச் சென்றார். சென்ற கடவுளைச் சுந்தரமூர்த்திநாயனர் மகிழ்ச்சியோடு எதிர்கொண்டு நமஸ்கரித்து, அவருடைய திருமுகத்திலே தோன்றிய சிரிப்பைக் கண்டு, அவருடைய திருவுள்ளக்கருத்தை அறியாமல், தாம் நினைத்த கருத்தை முடித்து வந்தனர் என்று துணிந்து, ''தேவரீர் அன்றைக்குச் சிறியேனை ஆட்கொண்டதற்கு இசைய இன்றைக்குப் பரவையுடைய கோபம் முழுதையும் தீர்த்து வந்தருளினீர்'' என்றார். கடவுள் அதைக்கேட்டு, ''உன் வேண்டுகோளின்படி நாம் பரவை வீட்டுக்குப்போய் அவளிடத்திலே பேசினேம். அவள் இசையவில்லை'' என்றார். உடனே நாயனர் நடுக்கங்கொண்டு வணங்கி, ''தேவரீர் அருளிச்செய்ததை அடியாளாகிய பரவையா மறுப்பாள்? தேவரீர் தமியேனுடைய அடிமைத்தன்மையை வேண்டுவதில்லையாகில், அன்றைக்குத் தமியேனை வலிய ஆட்கொண்டதேது? தமியேன் படுந் துக்கத்தைக் கண்டீர். இன்றைக்குத் தமியேன் அவளிடத்திலே போவதற்கு அருள்செய்யீராகில், என்னுயிர் நீங்கிவிடும்'' என்று சொல்லி விழுந்தார். அதுகண்டு கடவுள் ''நாம் இன்னும் பரவையிடத்திலே போய், இப்போதே நீ அவளிடத்திற் செல்லும்படி பண்ணுவோம். நீ துக்கிக்கவேண்டாம்'' என்று அருளிச்செய்து, கணங்களோடு பரவையார்வீட்டை அடைந்தார். அதற்குமுன், பரவையார், தம்மிடத்தில்வந்த ஆதிசைவர் போனபின்பு, அவ்வாதிசைவராய் வந்தவர் பரமசிவன் என்றே பல அதிசயத்தோற்றத்தால் அறிந்து பயங்கொண்டு, ''ஐயோ! கெட்டேன். எங்கள் சுவாமி திருவாக்

குக்கு எதிர்வாக்குச் சொல்லி மறுத்தேனே'' என்று புலம்பி, நித்திரைசெய்யாதவராகி, ''தம்முடையதோழருக்காக அருச்சகர் வடிவங்கொண்டுவந்த கடவுளைப் பாவியேன் மதித்தேனில்லை'' என்று வாயிலையே பார்த்துக்கொண்டிருந்தார். சிவபெருமான், தாமாந்தன்மையை அறிதற்கு ஏற்ற திருக்கோலத்தோடும், தேவர் முனிவர் முதலாகிய சமஸ்த கணங்களும் சூழும்படி, பரவையார் வீட்டினுள்ளே பிரவேசித்தார். அது கண்ட பரவையார், அதிசீக்கிரம் எழுந்துபோய்க் கடவுளுடைய திருவடியிலே விழுந்து நமஸ்கரிக்க, கடவுள் அவரை நோக்கி, ''பரவையே நாம் சுந்தரன் அனுப்பத் திரும்பவும் உன்னிடத்தில் வந்தோம். நீ இன்னும் முன் போல மருமல் மாடலினால் வருந்துகின்ற அவன் உன்னிடத்தில் வருதற்கு உடன்படல்வேண்டும்'' என்று திருவாய்மலர்ந்தருளினார். அதற்குப் பரவையார் ''தேவரீர் பிராமணவடிவங்கொண்டு முன் இங்கே எழுந்தருளிவந்தீர். பின் உண்மையாகிய இந்தத் திருக்கோலத்தோடு இப்பொழுது எழுந்தருளிவந்தீர். அடியேன் பூர்வசன்மத்திலே செய்த தவப்பயன் இதுவோ'' என்று விண்ணப்பஞ்செய்து வியந்து, பின்பு ''பிரமவிஷ்ணுக்களாலும் அறியப்படாத தேவரீர் அன்பர் பொருட்டு இரவிலே மாருமல் அங்கும் இங்கும் திரிந்து எளியவராவீராகில், சிறியேன் இதற்கு உடன்படாமல் யாது செய்வேன்'' என்றார். கடவுள் அதைக்கேட்டு, ''நன்று சொன்னாய்'' என்று திருவாய்மலர்ந்தருளி, புறப்பட்டு, சுந்தரமூர்த்திநாயனரிடத்திற்போனார். சுந்தரமூர்த்திநாயனர் அவரைக் கண்டு எதிர்கொண்டு, நமஸ்கரித்து, ''சுவாமி யாது சொல்வாரோ'' என்று அறியாதவராகி, ''சுவாமீ, அடியேனுடைய உயிரைக் காவாமல் இடஞ்செய்கின்ற பரவையிடத்தினின்றும் என்ன உத்தரம் கொண்டுவந்தீர்'' என்று கேட்க; கடவுள் ''உன்மேலே பரவைகொண்ட கோபத்தைத் தணிவித்தோம். நீ இனி அவளிடத்திற் போகலாம்'' என்று திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்ட நாயனர் மனமிலே களிப்படைந்து, ''சுவாமீ, போகமோக்ஷம் இரண்டையும் கொடுத்தருளுகின்றவர் தேவரீரே என்பதை யாவர்க்கும் புலப்படுத்தியருளினீர். இனி அடியேனுக்கு இடர் ஏது''

என்று சொல்லித் திருவடியிலே விழுந்தார். உடனே சிவ பெருமான் மறைந்தருளினர். விழுந்த நாயனர் எழுந்து, பரவையார் வீட்டுக்குப் போகத்தொடங்கினர். அப்பொழுது அவருடைய பரிசனங்களெல்லாம் விழித்து எழுந்தன. நாயனர், அப்பரிசனங்கள் பக்கத்திலே சூழ, தேவர்கள் புஷ்ப மாரிபொழிந்து துதிக்க, சென்று பரவையார் வீட்டை அடைந்தார். அதற்கு முன் மிகுந்த விருப்பத்தோடும் தம் முடைய வீடு முழுதையும் அலங்கரிப்பித்துத் தீபதூபங் களும் நிறைகுடமும் நிரைத்துத் தோழியர்களோடு வாயி லிலே வரவுபார்த்து நின்ற பரவையார், அங்கே எழுந்தருளி வந்த நாயனரைக் கண்டு, மகாசந்தோஷங்கொண்டு, அவரை நமஸ்கரிக்க; அவர் கையினுலே பரவையாரைப் பிடித்துக் கொண்டு, உள்ளேபோய்ச் சேர்ந்தார். அவ்விருவரும் பரம சிவனுடைய திருவருளின் மகிமையைப் புகழ்ந்துகொண்டு முன்போல ஐக்கியமாகக் கூடியிருந்தார்கள்.

சுந்தரமூர்த்திநாயனர் தாம் தினந்தோறும் சுவாமிதரி சனஞ்செய்து திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு திருவாரூரில் வசிக்குங்காலத்திலே; தாம் பரமசிவனைத் தூதனுப்பிய சமா சாரத்தைத் திருப்பெருமங்கலத்திலிருந்த ஏயர்கோன் கலிக் காமநாயனர் கேள்வியுற்று அது தகுதி அன்று என்று தம் மேலேகோபங்கொண்டிருத்தலை அறிந்து, அதைக்குறித்துப் பராசிவனுக்கு விண்ணப்பஞ் செய்தார். பரமசிவன் அக் கலிக்காமநாயனரைச் சூலநோயினல் வருத்தி, அவரிடத்தில் எழுந்தருளி, "சுந்தரனலன்றி இந்நோய் நீராது" என்று அருளிச்செய்து, அவர் சுந்தரமூர்த்திநாயனரைக்கொண்டு அந்நோயைத் தீர்ப்பித்தற்கு உடன்படாமையைக்கண்டு, சுந் தரமூர்த்திநாயனரிடத்திற்சென்று, "நம்முடைய ஏவலாலே கலிக்காமனை வருத்துகின்ற சூலையை நீ போய்த் தீர்ப்பாய்" என்றார். சுந்தரமூர்த்திநாயனர் அதைக்கேட்டு மனமகிழ்ந்து, அவரிடத்திற்குப் போம்படி பிரஸ்தானமாகி, சூலைதீர்க்கும் படி தாம் வருஞ்சமாசாரத்தை அவருக்குத் தெரிவித்தற்கு ஆளனுப்பினர். அவ்வாளினுலே அவர் வரவை அறிந்த கலிக்காமநாயனர் உடைவாளினுலே தம் வயிற்றைக் கிழித்

துக்கொண்டு இறந்துபோனர். சுந்தரமூர்த்திநாயனர் அங்கே சென்றபோது, கலிக்காமநாயனர் இறந்துகிடத்தலைக் கண்டு, "நானும் இவர்போலே இறந்துபோவேன்" என்று சொல்லி உடைவாளை எடுத்தார். உடனே பரமசிவனுடைய திருவருளினால் கலிக்காமநாயனர் உயிர்த்து எழுந்து, அவர் கையில் வாளைப் பிடித்துக்கொள்ள; அவர் விழுந்து நமஸ்கரித்தார். கலிக்காமநாயனரும் சுந்தரமூர்த்திநாயனரை நமஸ்கரித்தார். பின்பு இருவரும் எழுந்து ஒருவரையொருவர் தழுவி அதிக ஆனந்தமுள்ளவர்களானார்கள். பின் சுந்தரமூர்த்திநாயனர் கலிக்காமநாயனரோடு திருப்புன்கூருக்குப்போய், சுவாமிதரிசனஞ் செய்து, "அந்தணாளனின் னடைக்கலம்" என்னுந் திருப்பதிகம்பாடி, சிலநாட் சென்றபின்பு திருவாரூரை அடைந்தார். அவ்விடத்திலே சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு கலிக்காமநாயனர் தம்முடைய ஊருக்குத் திரும்பிவிட; சுந்தரமூர்த்திநாயனர் சிலநாள் அங்கிருந்து, பின் திருநாகைக்காரோணத்துக்குப்போய், சுவாமி தரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடி, பொன்னும் நவரத்தினங்களும் ஆபரணங்களும் வஸ்திரங்களும் குதிரைகளும் உடைவாளும் பிறவும் பெற்று, பிற ஸ்தலங்களையும் வணங்கிக்கொண்டு, மீண்டு அத்திருவாரூரில் சேர்ந்து எழுந்தருளியிருந்தார்.

அப்பொழுது சேரமண்டலத்திலுள்ள கொடுங்கோளூரிலிருந்த சேரமான்பெருமாணையனர் சுந்தரமூர்த்திநாயனருடைய பத்திமகிமையைப் பரமசிவத்தினால் அறிந்து, அவரைத் தரிசிக்க விரும்பி, திருவாரூரை அடைந்தார். சுந்தரமூர்த்திநாயனர் மகிழ்ச்சியோடு அவரை எதிர்கொள்ள; அவர் சுந்தரமூர்த்திநாயனரை நமஸ்கரித்தார். உடனே சுந்தரமூர்த்திநாயனரும் அவரை நமஸ்கரித்து, அவரை எடுத்துத் தழுவ; அவரும் தழுவினர். இப்படி இவர்கள் நண்பு கலக்தமையால், சுந்தரமூர்த்திநாயனருக்குச் சேரமான்நாயனர் என்னும் பெயர் உண்டாயிற்று. சுந்தரமூர்த்திநாயனர் சேரமான்பெருமாணையனரைக் கையிலே பிடித்துக்கொண்டு, திருக்கோயிலிலே பிரவேசித்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, பரவையார் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய், அவருக்-

கும் அவரோடுவந்த சமஸ்த சனங்களுக்கும் விருந்துசெய்து, சிலநாள் அவரோடு அங்கிருந்து, பின் பாண்டிநாட்டிலிருக்கின்ற மதுரை முதலாகிய சிவஸ்தலங்களுக்கு யாத்திரை செய்ய விரும்பி, வன்மீகநாதரை வணங்கிக்கொண்டு திருவாரூரை நீங்கி, கிழ்வேளூரை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, திருநாகைக்காரோணத்துக்குச் சென்று திருப்பதிகம்பாடி, சிலநாள் அங்கிருந்து, வேதாரணியத்திற்குப்போய்த் திருக்கோயிலிலே சென்று, திருநாவுக்கரசு நாயனாலும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாலும் முறையே திறத்தற்கும் அடைத்தற்கும் திருப்பதிகம் பாடப் பெற்ற திருவாயிலை அடைந்து ஆனந்தபாஷ்பம் சொரிந்து, அந்நாயன்மார்களை நினைந்து வணங்கி, வேதங்களால் அருச்சிக்கப்பட்ட கடவுளை நமஸ்கரித்து, "யாழைப்பழித்து" என்னுந் திருப்பதிகம்பாடிப் புறப்பட்டு, சிலநாள் அங்கிருந்து, அகத்தியான்பள்ளிக்குப் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்து குழகர்கோடிக்குப் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்து "கடிதாய்க் கடற்காற்று" என்னுந் திருப்பதிகம்பாடி, சோழநாட்டைக் கடந்து, பாண்டிநாட்டை அடைந்தார்.

அந்நாட்டிலே திருப்புத்தூரை வணங்கி, மதுரைக்குச் சமீபித்து, அம்மதுரையினின்று வந்து தங்களை எதிர்கொண்ட பாண்டியராசாவோடும் பாண்டியராசாவுடைய புத்திரியை விவாகஞ்செய்துகொண்டு அங்கிருந்த சோழராசாவோடும் திருக்கோயிலிலேபோய், சோமசுந்தரக்கடவுளை வணங்கித் திருப்பதிகம்பாடிப் புறப்பட்டார். பாண்டியர் அவர்களை ஓரிரத்தினமாளிகைக்கு அழைத்துக்கொண்டுபோய் அங்கே யிருத்தினர். சுந்தரமூர்த்திநாயனரும் சேரமான் பெருமாணாயனரும் சிலநாள் அங்கே இருந்துகொண்டு, தினந்தோறும் சுவாமிதரிசனஞ் செய்து வந்தார்கள். பின் சுந்தரமூர்த்திநாயனர் அவ்வரசர் மூவரோடும் மதுரையை நீங்கி, திருப்பூவணத்துக்குச் சமீபித்து, பக்கத்திலே வருந் திருத்தொண்டர்கள் அந்தத் தலத்தைக்காட்ட, அதன்மேல் "திருவுடையார்" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு ஸ்தலத்திலேபோய், திருக்கோயிலிலே பிரவேசித்து, ஸ்வாமிதரிசனஞ்

செய்துகொண்டு, அந்தத்தலத்தில் இருந்தார். சிலநாளாயின பின், அவ்வரசர் மூவரோடும் திருப்பூவணத்தை நீங்கி, மதுரையிற்சென்று, தினந்தோறும் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு சிலநாள் அங்கிருந்தார். அந்நாட்களிலே திருவாப்பனூர் திருவேடகம் முதலாகிய சிவஸ்தலங்களுக்கும்போய்த் தரிசனஞ்செய்துகொண்டு, திரும்பி மதுரையில் வந்திருந்தார். அதற்குப் பின், அரசர் மூவரோடும் திருப்பரங்குன்றுக்குப் போய், சுவாமிதரிசனஞ்செய்து, பரமசிவனுடைய திருவடிகளுக்குத் தொண்டுசெய்யும் அருமையை நினைந்தஞ்சும் என்று "கோத்திட்டையுங் கோவலும்" என்னுந் திருப்பதிகம் பாடினர். அவ்வருமையை அரசர் மூவருங் கேட்டு அஞ்சி, சுந்தரமூர்த்திநாயனரை வணங்கினர்கள். அதன்பின் சுந்தரமூர்த்திநாயனர், பாண்டியராசாவும் சோழராசாவும் அனுமதி பெற்றுக்கொண்டு மதுரைக்குத் திரும்பிவிட, சேரமான்பெருமாணாயனரோடும் அந்தஸ்தலத்தை நீங்கி வழிக்கொண்டு, திருக்குற்றாலம், திருக்குறும்பலா, திருநெல்வேலி முதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, இராமேச்சரத்துக்குப்போய், சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடிக்கொண்டு சிலநாள் அங்கிருந்தார். ஈழமண்டலத்தில் இருக்கின்ற மாதோட்டத்துத் திருக்கேதீச்சரத்தை அவ்விராமேச்சரத்திலிருந்துகொண்டே வணங்கி அதன்மேலே பதிகம் பாடினர். இராமேச்சரத்தை நீங்கித் திருச்சுழியலிலே போய்ச் சுவாமிதரிசனஞ் செய்து, பதிகம் பாடிக்கொண்டு, அங்கே இருக்க; சுவாமி அவருக்குச் சொப்பனத்திலே காளி வடிவங்கொண்டு கையிலே பொற்செண்டும் முடியின்மேல் சுழியமும் உடையவராகித் தோன்றி, "கம்முடைய வாசஸ்தானம் கானப்பேர்" என்றுசொல்லி மறைத்தருளினர். சுந்தரமூர்த்திநாயனர் விழித்தெழுந்து, திருவருளை வியந்து, தாங்கண்ட சொப்பனத்தைச் சேரமான்பெருமாணயனருக்குத் தெரிவித்து, திருச்சுழியலை நீங்கி, "தோண்டாடித் தொழலும்" என்று எடுத்து, "கண்டு தொழப்பெறுவ தென்று கொலோ வடியேன் கார்வயல் சூழ் கானப்பேருறை காளையையே" என்று திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு திருக்காளப்பேருக்குப்போய், சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதி

கம்பாடி, அங்கே சிலநாள் இருந்து, அதனை நீங்கி, திருப்புன வாயிலை அடைந்து, பதிகம்பாடி, பாண்டிநாட்டைக் கடந்து, சோழமண்டலத்தை அடைந்து, பாதாளீச்சரத்தைவணங்கி, திருவாரூரிலே சேர்ந்து, வன்மீகநாதரை வணங்கிப் பதிகம் பாடி, அரசரோடும் பரவையார் வீட்டுக்குப்போய் எழுந் தருளியிருந்தார்.

பலநாட் சென்றபின், சேரமான்பெருமாணயனார் சுந்தர மூர்த்திநாயனரை வணங்கி, தம்முடைய ஊருக்கு எழுந் தருளிவரும்படி பிரார்த்திக்க; சுந்தரமூர்த்திநாயனர் அதற்கு இசைந்து, சேரமான்பெருமாணயனரோடும் எழுந்துபோய், வன்மீகநாதரை வணங்கிக்கொண்டு, திருவாரூரை நீங்கி, மேற்றிசையைநோக்கிக் காவேரிநதியின் தென்கரைவழியே சென்று, திருக்கண்டியூரை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு புறப்பட்டார். அப்பொழுது வடகரையி லிருக்கின்ற திருவையாறு எதிரேதோன்ற; சேரமான்பெரு மாணயனர் கண்டு வணங்கி, சுந்தரமூர்த்திநாயனரைப் பார் த்து, "சுவாமீ, அடியேன் மனம் திருவையாற்றை வணங்க விரும்புகின்றது. நாங்கள் இந்நதியைக் கடந்துபோய் வணங் குவோம்" என்றார். அதைக்கேட்ட சுந்தரமூர்த்திநாயனர், அக்காவேரிநதி இருகரையையும் அழித்து ஓடங்கள் செல் லாதபடி பெருகுதலைக் கண்டு, "பரவும் பரிசோன் றழியே னென்" என்று திருப்பதிகந்தொடங்கி, திருப்பாட்டினிறுதி தோறும் "ஐயாறுடைய வடிகளோ" என்றுசொல்லி அழைத் துப் பாடினர். அப்பொழுது கடவுள், கன்று அழைத்தலைக் கேட்டுக் கதறிக் கணைக்கின்ற பசுப்போல, சராசரங்களெல் லாம் கேட்கும்படி, "ஓலம்" என்று சொல்லியருளினர். உடனே காவேரிநதி பிரிந்து வழி காட்டியது. மேற்றிசை யினீர் பளிங்குமலைபோல நிற்க, கீழ்த்திசையினீர் வடிந்த நடுவழி மணற்பரப்பாய் இருந்தது. அதனைக் கண்ட அடி யார்களெல்லாரும், உரோமாஞ்சங்கொள்ள, ஆனந்தபாஷ்பஞ் சொரிய, அஞ்சலி செய்தார்கள். சேரமான்பெருமாணயனர் சுந்தரமூர்த்திநாயனருடைய திருவடிகளை நமஸ்கரிக்க, சுந்தரமூர்த்திநாயனரும் அவரை வணங்கி, "கடவுள் உமக்கரு

ளியதன்றே'' என்று சொல்லிக் கடவுளைத் துதித்துக் கொண்டு, அவரோடும் பரிசனங்களோடும் நதியின் மத்தியி லிருக்கின்ற மணல்வழியே போய், திருவையாற்றை அடை ந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, திரும்பிக் காவேரி நதியின் முன் சென்றபடியே நடுவழியே வந்து தென்கரையி லேறினர். உடனே பிரிந்து மலைபோல நின்ற நீர் தொடர்ந்து பாய்ந்தது. அதைக்கண்டு சுந்தரமூர்த்திநாயனரும் சேர மான்பெருமாணயனரும் அதிசயித்து, திருவருளைத் துதித் துக்கொண்டு, மேற்றிசையை நோக்கி வழிக்கொண்டு கொங்க நாட்டை அடைந்து, அதைக் கடந்து, மலைநாட்டிற் சென்று, அங்குள்ளார்களெல்லாரும் வந்து எதிர்கொள்ளக் கொடுங் கோளூரிலே போனர்கள். போனபின்பு சேரமான்பெருமா ணயனர் சுந்தரமூர்த்தி நாயனரைத் திருவஞ்சைக்களத் துக்கு அழைத்துக்கொண்டு போனர். அங்கே சுந்தரமூர்த்தி நாயனர் சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடி, புறப் பட்டார். சேரமான்பெருமாணயனர் யானையின்மேலே முன் னே அவரை எற்றி, பின் தாமும் ஏறி, வெண்சாமரம் வீசிக் கொண்டு சென்று, தம்முடைய மாளிகையின் வாயிலிலே புகுந்து, யானையினின்றும் இறங்கி, அந்நாயனரை இறக்கி, மாளிகையினுள்ளே கொண்டுபோய், சிங்காசனத்திலிருத்தி, அவருக்கு அருச்சனை பண்ணி, விருந்துசெய்தார்.

சுந்தரமூர்த்திநாயனர் சேரமான்பெருமாணயனரோடும் அந்தக் கொடுங்கோளூரிலே சிலநாள் இருந்தார். ஒருநாள் திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்ற வன்மீகநாதருடைய திருவடிகளை நினைந்து, ''பொன்னு மெய்ப்பொருளும்'' என்று திருப்பதிகம் எடுத்துத் திருப்பாட்டிறுதிதோறும் ''ஆரூ ரானை மறக்கலுமாமே'' என்று பாடி, திருவாரூருக்குச் செல் லும்பொருட்டு அடியார்களோடு எழுந்து வழிக்கொண்டு சென்றார். செல்லும்பொழுது, சேரமான்பெருமாணயனர் பிரிவாற்றாதவராகி, எழுந்து அவரைப் பின்தொடர்ந்து, போகாதபடி தடுத்து, அதற்கு அவர் உடன்படாமைகண்டு, மந்திரிகளை அழைத்து தம்முடைய நகரத்திலிருக்கின்ற னைஞ்செத்திலுள்ள பொன் இரத்தினம் ஆபரணம் வஸ்திரம்

சுகந்தவர்க்கம் முதலிய திரவியங்களெல்லாம் பல ஆட்களின் மேலில் சுமத்தி அனுப்பும்படி ஆஞ்ஞாபிக்க; அவர்கள் அப்படியே செய்தார்கள். சேரமான்பெருமாணாயனர் அந்தச் சுமையாட்களைச் சுந்தரமூர்த்திநாயனருடைய பரிசனத்துக்கு முன் செல்லும்படி அனுப்பி, அவரை விழுந்து நமஸ்கரிக்க; அவர் அவரைத் தழுவி விடைகொடுத்து, மலைநாட்டை நீங்கி, சுரங்களையும் கான்யாறுகளையும் வனங்களையும் கடந்து, திருமுருகன்பூண்டி வழியே செல்லுதற்குத் திருவுளங் கொண்டு போனார். அதற்கு அயலிலே போம்பொழுது, பரமசிவன் தம்முடைய பூதகணங்களை நோக்கி, "நீங்கள் வேடவடிவங்கொண்டு சென்று சுந்தரனுடைய பண்டாரங்களைக் கவருங்கள்" என்று ஆஞ்ஞாபிக்க, அவைகள் சுந்தரமூர்த்திநாயனருடைய சுமையாட்கள் வரும் வழியிலே வேடுவர்களாகிப்போய், வில்லை வளைத்து நாண்பூட்டி அம்புகளைத் தொடுத்து, "நாங்கள் உங்களைக் கொன்றுபோடுவோம்; இத் திரவியங்களெல்லாவற்றையும் போட்டுவிட்டுப் போங்கள்" என்று சொல்லி, கோபத்தினாலே குத்தி அந்தத் திரவியங்களெல்லாவற்றையுங் கவர்ந்துகொண்டனர். அவர்கள் துன்பத்துடனே ஓடிப்போய், சுந்தரமூர்த்திநாயனர் பக்கத்திலே சேர்ந்தார்கள். அவ்வேடுவர்களோ சிவாஜ்ஞையினாலே சுந்தரமூர்த்திநாயனர் பக்கத்திலே செல்லாமல் நீங்கினர்; சுந்தரமூர்த்திநாயனர் திருமுருகன்பூண்டியிலே சென்று திருக்கோயிலிலே பிரவேசித்து, சுவாமியை வணங்கி, "கோடு வெஞ்சிலை வடுகவேடுவர்" என்று திருப்பதிகமெடுத்துத் திருப்பாட்டினுதலாகும் "எத்துக்கிங் கிருந்தீ ரேம்பிரானீரே" என்று பாடியருளினார். உடனே கடவுளுடைய திருவருளினால், அவ்வேடுவர்கள் தாங்கள் பறித்த திரவியங்களெல்லாவற்றையும் அந்தத் திருக்கோயில் வாயிலிலே கொண்டுபோய்க் குவித்தார்கள். சுந்தரமூர்த்திநாயனர் அதுகண்டு, சுவாமியை வணங்கி, அவைகளை எடுத்துக்கொண்டு முன்னே செல்லும்படி சுமையாட்களை ஏவி, அவ்விடத்தை நீங்கி, கொங்குதேசத்தைக் கடந்துபோய், திருவாரூரை அடைந்து, அங்கே சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்தார்.

சிலநாட்சென்றபின் சுந்தரமூர்த்திநாயனார் சோமான பெருமாணையனரை நினைந்து அவரிடத்திற்குப் போம்படி கருதி, சோழமண்டலத்தைக் கடந்து, கொங்கதேசத்தைச் அடைந்து, திருப்புக்கொளியூரிற்சென்று, அங்கே ஒருவீதியிலே இரண்டு வீடுகளில் ஒன்றிலே மங்கலவொலியும் மற்றதிலே அழுகையொலியும் எழுதலைக் கேட்டு, அங்கே இருந்த பிராமணர்களை நோக்கி, "இவ்விரண்டொலியும் ஒருங்கு நிகழ்வது என்னை" என்று வினவினார்: அதுகேட்ட பிராமணர்கள் வணங்கி, "ஐந்துவயதுடைய இரண்டு புதல்வர்கள் குளத்திலே குளித்தபொழுது ஒரு புதல்வனை முதலை விழுங்கிற்று; மற்றப்புதல்வன் பிழைத்துக்கொண்டான், இந்த வீட்டில் ஒலி பிழைத்த புதல்வனுக்கு உபநயனஞ்செய்யும் ஒலி; இந்த வீட்டில் ஒலி இறந்த புதல்வனைக்குறித்து அழும் ஒலி" என்று சொன்னார்கள். அதைக்கேட்டுத் திருவுளமிரங்கி நின்ற சுந்தரமூர்த்திநாயனரை, புதல்வனை இழந்த பிராமணனும் மனைவியுங்கண்டு, ஓடிவந்து, முகமலர்ச்சியோடு அவருடைய திருவடிகளை நமஸ்கரித்தார்கள். சுந்தரமூர்த்திநாயனர் அவர்களுடைய முகத்தைநோக்கி, "புதல்வனை இழந்தவர்கள் நீங்களா" என்று சொல்லியருளா: அவர்கள் பின்னும் வணங்கி, "சுவாமீ, அது முன்னை நிகழ்ந்து போயிற்று. அது நிற்க, அடியேங்கள் தேவரை வணங்குதற்கு நெடுங்காலமாக அவாவியிருந்தோம். அவ்வன்பு பழுதாகாமல் தேவரீர் இங்கே எழுந்தருளப் பெற்றோம்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அதைக் கேட்ட நாயனர் "இந்தப் பிராமணனும் மனைவியும் தங்கள் புதல்வனை இழந்த துன்பத்தை மறந்து நாம் வந்ததற்காக மனம் மகிழ்கின்றார்கள். ஆகையால், நாம் இவர்கள் புதல்வனை அம்முதலை வாயினின்றும் அழைத்துக் கொடுத்து, அவர்களில் வீற்றிருக்கின்ற நமது கடவுளை வணங்குவேம்" என்று அருளிச்செய்து, "அத்தப்புதல்வனை முதலை விழுங்கிய வாவி எங்கே" என்று வினவி, அதன் கரையிலே எழுந்தருளி, அம்முதலை தான் விழுங்கிய புதல்வனைக் கொண்டுவரும் பொருட்டுத் திருப்பதிகம் பாடத்தொடங்கினர். "உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியா —யரைக்கா டரவா வாதியு மக்

தமு . மாயினுய்—புரைக்காடு சோலைப் புக்கொளியூரவி நாசியே—கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே'' என்னும் நான்காந்திருப்பாட்டு முடிதற்குமுன், இயமன் அந்தப் புதல்வனுடைய உயிரைக் கொண்டுவந்து, அவ்வாவியிலுள்ள முதலைவயிற்றினுள்ளே மூந்தின தேகத் தைச் சென்ற ஆண்டுகளின் வளர்ச்சியையும் உடையதாகத் தோற்றுவித்து, அதனுள்ளே புகுத்திவிட்டான். உடனே முதலை அந்தப் புதல்வனைக் கரையிலே கொண்டுபோய் உமிழ்ந் :தது. அப்பொழுது மாதாவானவள் ஓடிப்போய், அப்புதல் வனை எடுத்துக்கொண்டுவந்து, நாயகனோடு சுந்தரமூர்த்தி நாயனருடைய திருவடியிலே விழுந்து நமஸ்கரித்தாள். இவ் வற்புதத்தைக்கண்ட தேவர்கள் ஆகாயத்தினின்று நாயனர் மேல் புஷ்பமாரி பொழிந்தார்கள். பிராமணர்களெல்லாரும் உத்தரீயங்களை ஆகாயத்திலே வீசி ஆரவாரித்தார்கள். சுந்தர மூர்த்திநாயனர் அந்தப் புதல்வனையும் அழைத்துக்கொண்டு, அவிநாசிக்குப் போய், சுவாமிதரிசனஞ்செய்து, திருப்பதிகம் பாடிக்கொண்டு திருப்பி, அப்புதல்வன் வீட்டிற்சென்று, அவனுக்கு உபநயனஞ் செய்வித்து, கொங்குதேசத்தைக் கடந்து, மலைநாட்டை அடைந்தார்.

அதனையறிந்த மலைநாட்டின்கணுள்ள சிவனடியார்கள் விரைந்தோடிப் போய்ச் சேரமான்பெருமாணையனார் திருமுன் சென்று, ''மகாராஜாவே, சுந்தரமூர்த்திநாயனர் திருப்புக் கொளியூரிலே முதலைவாய்ப் பிள்ளையை மீட்டு, எழுந்தருளி வருகின்றார்'' என்று விஞ்ஞாபித்தார்கள். அது கேட்ட சேர மான்பெருமாணையனார் பேரானந்தப்பெருங்கடலின் மூழ்கி, அவர்களுக்குப் பொற்கிழிகளையும் இரத்தினபரணங்களையும் வஸ்திரங்களையுங் கொடுத்தார். கொடுத்தபின், திருவாரூரிற் சைவசிகாமணியார் எழுந்தருளிவருகின்றார்; நம்மையாண்டரு ளும் சுந்தரமூர்த்திநாயனர் எழுந்தருளி வருகின்றார்; நமக்கு உயிர்த்துணைவராகிய தலைவர் எழுந்தருளிவருகின்றார்; உலக மெல்லாம் உய்யும்பொருட்டுத் திருவவதாரஞ் செய்தருளிய பரமாசாரியர் எழுந்தருளிவருகின்றார்'' என்று முரசறை வித்து, தமது திருநகரமெங்கும் மிக அலங்கரிப்பித்து, யானை

மேற்கொண்டு, மந்திரிமார்களும் சேனைகளும் சூழப்புறப் பட்டுச் சென்று, தூரத்தே சுந்தரமூர்த்திநாயனாரைக் கண்ட வுடனே யானையினின்றும் இறங்கி, விரைந்தோடிப்போய், அவருடைய திருவடிகளை நமஸ்கரித்தார். சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான்பெருமாணயனாரை வணங்கித் தழு வினர். அது கண்ட இருபக்கத்தாரும் ஆனந்தசாகரத்தின் மூழ்கி ஆரவாரித்தார்கள். சேரமான்பெருமாணயனார் சுந்த மூர்த்திநாயனாரை யானைமேலேற்றித் தாம் பின்னே அவ ருக்கு வெள்ளைக் குடை பிடித்துக்கொண்டு, நானவித வாத்தி யங்கள் ஒலிக்கச் சென்று, தமது திருநகரத்திற் புகுந்து, தமது திருமாளிகை வாயிலை அடைந்து, அந்நாயனாரை யானையினின்றும் இறக்கி, உள்ளே அழைத்துக்கொண்டு போய்ச் சிங்காசனத்தில் இருத்திப் பூசித்து வணங்கினார். சுந்தரமூர்த்திநாயனார் அங்கே எழுந்தருளியிருந்தார். இருந்த நாட்களிலே அம்மலைநாட்டிலிருக்கின்ற சிவஸ்தலங்கள் பல வற்றிற்கும் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, மகோதைநகரத்தை அடைந்தார்.

இப்படிப் பலநாட்சென்றபின், ஒருநாள், சேரமான் பெருமாணயனார் ஸ்நானம்பண்ணும்பொழுது, சுந்தரமூர்த்தி நாயனார் திருவஞ்சைக்களத்துக்கு எழுந்தருளி, அங்கிருக் கின்ற சிவாலயத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து, உள்ளே புகுந்து சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து, எழுந்து நின்று, அக்கினியிற்பட்ட மெழுகுபோல மனங்கசிந்துருக, இரண்டு கண்ணினின்றும் ஆனந்தவருவி சொரிய, சரீரத்திலே உரோ மாஞ்சங்கொள்ள, இரண்டு கைகளும் சிரசின்மேல் வந்திக் குவிய, அடியேனை இப்பிரபஞ்சவாழ்க்கையினின்றும் நீக்கித் தேவரீருடைய திருவடியிலே சேர்த்தருள்வேண்டுமென் னுங் குறிப்போடு "தலைக்குத் தலைமாலை" என்னுந் திருப் பதிகம் பாடினார். அப்பொழுது திருக்கைலாசகிரியிலே விச்சுவாதிகரும் விச்சுவதேவியருமாகிய சிவபெருமான் விட் ணு பிரமன் முதலிய தேவர்களை நோக்கி "நீங்கள் போய் நம்முடைய தோழனாகிய சுந்தரனை வெள்ளையானையின்மே லேற்றிக்கொண்டு வாருங்கள்" என்று ஆஞ்ஞாபித்தருளி

னார். அதைக்கேட்ட தேவர்கள் சுவாமியை நமஸ்கரித்து ஆநுமதி பெற்று, வெள்ளையானையையுங் கொண்டு, திருவஞ் சைக்களத்தை அடைந்து, திருக்கோயிலை வலஞ்செய்து, திருவாயிலிலே போய், உள்ளே நின்று எழுந்தருளிவந்த சுந் தரமூர்த்திநாயனரை எதிர்கொண்டு, சிவபெருமானுடைய ஆஞ்ஞையைத் தெரிவித்தார்கள். அப்பொழுது சுந்தர மூர்த்திநாயனார் சுவாமியை நினைந்து நமஸ்கரித்து, எழுந்து, தேவர்களுக்கு எதிரேபோனார். தேவர்கள் அவரைப் பிர தக்ஷிணஞ் செய்து வெள்ளையானையின்மேலேற்ற; அவர் பஞ்ச வாத்தியங்கள் ஆரவாரிக்கவும், தேவர்களெல்லாரும் ஸ்தோத் திரஞ்செய்து புஷ்பமாரி பொழியவும், தம்முடைய தோழ ராகிய சேரமான்பெருமாணாயனாரைத் திருவுளத்திலே நினைத் துக்கொண்டு சென்றார்.

சேரமான்பெருமாணாயனார் சுந்தரமூர்த்தி நாயனரு டைய செயலை அறிந்து, அந்தகரணமே அருகில் நின்ற ஒரு குதிரையின்மேல் ஏறிக்கொண்டு, திருவஞ்சைக்களத்துக்குப் போய், வெள்ளையானையின்மேல் ஏறிக்கொண்டு ஆகாயத்திற் செல்லும் சுந்தரமூர்த்திநாயனரைக் கண்டு, தாமேறிய குதி ரையின் செவியிலே ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதியருளினார். உடனே அந்தக் குதிரையானது ஆகாயத்திலே பாய்ந்து, சுந்தரமூர்த்திநாயனருடைய வெள்ளையானையை அடைந்து, அதனை வலஞ்செய்து, அதற்கு முன்னுகச் சென்றது. சேர மான்பெருமாணாயனருடைய படைவீரர்கள் குதிரையிற்செல் லும் அந்நாயனரைத் தங்கள் கண்ணுக்குப் புலப்படுமெல்லை வரைக்கும் ஆகாயத்திலே கண்டு, பின் நாணமையால் மிருந்த திடபத்தியினாலே உருவிய உடைவாட்களினால் தங்கள் தங் கள் தேகத்தைச் சேதித்து, வீரயாக்கையைப் பெற்றுப் போய், சேரமான்பெருமாணாயனருக்கு முற்பட்டு, அவரைச் சேவித்துக்கொண்டு சென்றார்கள். சேரமான்பெருமாண நார் முன் செல்லப் பின் சென்ற சுந்தரமூர்த்திநாயனர் "தானேமே முன்படைத்தான்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு; திருக்கைலாசமலையின் தெற்குவாயிலுக்கு முன் போனார். போனவுடனே இருவரும் யானையினின்றும்

குதிரையினின்றும் இறங்கி, பல வாயில்களையுங் கடந்து, திருவணுக்கன் திருவாயிலை அடைந்தார்கள். அங்கே சேரமான்பெருமாணையனார் தடைப்பட்டு நிற்க; சுந்தரமூர்த்திநாயனர் உள்ளே போய், சுவாமி சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து, எழுந்து ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு நின்றார். சுவாமி அவரை நோக்கி, "சுந்தரா, வந்தாயோ" என்று திருவாய்மலர்ந்தருளினார். அதைக்கேட்ட சுந்தரமூர்த்திநாயனர் "சுவாமீ, அடியேன் செய்தபிழையைப் பொறுத்து அடியேனைப் பந்தத்தினின்றும் நீக்கி அடியேனுக்குத் திருவடி தந்தருளிய பெருங்கருணை அடியேன் மறக்கலாமோ" என்று சொல்லி, பலமுறை நமஸ்காரஞ்செய்து, சிவானந்தவெள்ளத்தில் அமிழ்ந்தி நின்றார். பின்பு "சுவாமீ, தேவரீருடைய திருவடிகளை அடையும்பொருட்டுச் சேரமான் பெருமாள் திருவணுக்கன்திருவாயிலின் புறத்திலே வந்து நிற்கின்றார்" என்று விண்ணப்பஞ்செய்ய; சிவபிரான் அவரை உள்ளே அழைப்பித்து, "நீயும் ஆலாலசுந்தரனும் நம்முடைய கணங்களெல்லாவற்றிற்குந் தலைவராயிருங்கள்" என்று அருளிச்செய்தார். அதைக்கேட்டுத் திருக்கைலாசபதியை நமஸ்கரித்து எழுந்து, அவருடைய திருவருளைத் தலைமேற்கொண்டு, சுந்தரமூர்த்திநாயனர் ஆலாலசுந்தரராகி முன்னே தாஞ்செய்த திருத்தொண்டைச் செய்பவரும், சேரமான் பெருமாணையனார் கணநாதராகி அவர் செய்யுந்தொழிலைச் செய்பவருமாயினார்கள்.

முன்னே பூமியில் அவதரித்த பரவையாரும் சங்கிலியாரும் முறையே கமலினியாரும் அநிந்திதையாருமாகி, பார்வதிதேவியாருக்குத் தாங்கள் முன்செய்த திருத்தொண்டைச் செய்துவந்தார்கள். சுந்தரமூர்த்திநாயனர் தாம் வழியிலே அருளிச்செய்த திருப்பதிகத்தைத் தென்னாபூமியிலே ஏற்றும் பொருட்டுச் சமுத்திரராஜனிடத்திலே கொடுத்தருள; அவன் அதைத் திருவஞ்சைக்களத்திலே உய்த்துத் தெரிவித்தான்.

திருச்சிற்றம்பலம்.

முதலாவது

தில்லைவாழந்தணர்சருக்கம்.

தில்லைவாழந்தணர் புராணம்.

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

சற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து ணின்று
பொற்புட னடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி

தாவரமாகிய அண்டமும் சங்கமமாகிய பிண்டமும் ரம மாமாதலால், பிண்டமாகிய சரீரத்தில் இடைக்கும் பிங்கலைக் கும் நடுவிலுள்ள சுழுமுனைநாடியும், பிரமாண்டத்திலுள்ள பரதகண்டத்தில் இலங்கைக்கும் இமயமலைக்கும் நடுவிலுள்ள தில்லைவனமும், சமமாகும்.

சாந்தோக்கியோபநிடதத்திலே பிரமபுரத்திலுள்ள தகர மாகிய புண்டரீக வீட்டினுள்ளே இருக்கும் ஆகாசமத்தியில் விளங்கும் அதிசூக்குமசித்தை அறிதல்வேண்டுமென்று தகர வித்தை சொல்லப்பட்டது. இங்கே பிரமபுரமென்றது இச் சரீரத்தையும், புண்டரீகவீடென்றது இருதயகமலத்தையும், ஆகாசமென்றது பராசத்தியையும், அதிசூக்குமசித்தென் றது பரப்பிரமமாகிய சிவத்தையு மென்றறிக. புறத்தும், இப்படியே இப்பிரமாண்டம் பிரமபுரமெனவும், இப்பிரமாண் டத்தினுள்ளே இருக்கும் தில்லைவனம் புண்டரீகவீடெனவும், தில்லைவனத்திலிருக்கும் ஆகாசம் பராசத்தியாகிய திருச்சிற் றம்பலமெனவும், அத்திருச்சிற்றம்பலத்திலே நிருத்தஞ்செய் யும் பரப்பிரமசிவம் அதிசூக்குமசித்தெனவும் சொல்லப்படும்.

இவ்வாகாசம் பூதாகாசம்போற் சடமாகாது சித்தேயாகி ஆதலால், சிதம்பரமெனப்படும். இச்சிதம்பரம் எந்நாளும் நீக்கமின்றி விளங்குந்தானமாதலால், திருவெனமும் சிதம்பரமெனப் பெயர்பெறும்.

இத்துணைப் பெருஞ்சிறப்பினதாகிய அந்தத் திருவெனத்தின்கண்ணே முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாகிய சிவபெருமான் சர்வான்மாக்களுக்கும் அருள்செய்யும் பொருட்டுத் திருமூலத்தானமாகிய சிவலிங்க வடிவமாய் எழுந்தருளியிருப்பார். அந்தத் திருமூலத்தானத்துக்குத் தெற்குத்திக்கிலே திருவருள் வடிவாகிய கனகசபை இருக்கின்றது. அதனைக் கனகசபையின்கண்ணே பரமகாருண்ணிய சமுத்திரமாகிய சிவபிரான் தாமது அருட்சத்தியாகிய சிவகாமியம்மையார் காண அனவரதமும் ஆனந்ததாண்டவஞ் செய்தருளுவர்.

திருமூலத்தான லிங்கத்துக்கும் சபாநாதருக்கும் வேத சிவாகமவிதிப்படி பூசை முதலியவை செய்யும் பிராமணர்கள் திருவாழுந்தனார் என்று சொல்லப்படுவர்கள். அவர்கள் மூவாயிரர். அவர்கள் குற்றமில்லாத வரிசத்தில் உதித்தவர்கள். பாவமென்பது சிறிதுமில்லாதவர்கள்; புண்ணியங்களெல்லாம் திரண்டு வடிவெடுத்தாற் போன்றவர்கள். திருநீற்றுச் சாதனத்தில் ஓழுகுகின்றவர்கள். இருக்கு யசுர் சாமம் அதர்வம் என்னு நான்குவேதங்களையும், சிக்ஷை வியாகரணம் சந்தோவிசிதி நிருத்தம் சோதிடம் கற்பம் என்னும் ஆறு வேதாங்கங்களையும், மீமாஞ்சை நியாயம் புராணம் தரு்தி என்னு நான்கு உபாங்கங்களையும் ஓதியுணர்ந்தவர்கள். ஆகவனீயம் தக்ஷிணாக்கினி காருகபத்தியம் என்னும் மூன்றக்கினிகளையும் விதிப்படி வளர்க்கின்றவர்கள். ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் அறுதொழிலினாலும் கலியை நீக்கினவர்கள். விபூதி உருத்திராக்ஷம் என்னுஞ் சிவசின்னங்களை விதிப்படி சரீரத்தையோடு தரிக்கின்றவர்கள். சிவபெருமானுடைய திருவடிக்கண்ணே இடையறாது பதிந்த அன்பே தங்களுக்குச் செல்வமெனக் கொண்டின்றவர்கள்.

அவர்கள் சமயதீக்ஷை விசேஷதீக்ஷை நிருவாண தீக்ஷை ஆசாரியாபிஷேகம் என்னு நான்கும் பெற்றவர்கள். காமிகமுதல் வாதுளமிறுதியாகிய சைவாகமங்கள் இருபத் தெட்டையும் ஓதியுணர்ந்தவர்கள். அச்சைவாகமங்களால் வீட்டுநெறிகள் இவையென உணர்த்தப்படுஞ் சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்குபாதங்களையும் வழுவாவண்ணம் அநுட்டிக்கின்றவர்கள்.

அவர்கள் ரபாநாயகர் "இவ்விருடிகளில் நாம் ஒருவர்" என்று அருளிச்செயப்பெற்ற பெருமையையுடையவர்கள். அதுமட்டோ, தியாகேசர் சுந்தமூர்த்திநாயனுக்குத் திருத்தொண்டத்தொகை பாடும்படி அருளிச்செய்தபோது "தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்" என்று அவர்களைத் தமது அருமைத்திருவாக்கினுலே எடுத்துச் சொல்லியருளினர். இங்ஙனமாயின், அவர்களுடைய அளவிறந்த மகிமையை நாமா சொல்லவல்லம்.

திருச்சிற்றம்பலம்.

திருநீலகண்டநாயனர் புராணம்.

சிதம்பரத்திலே, குயவர்குலத்திலே, பொய்சொல்லல் சிறிதுமின்றித் தருமநெறியிலே வாழ்கின்றவரும், இல்லறத்திலே நிற்பவரும், சிவபத்தி அடியார்பத்திகளிலே சிறந்தவருமாகிய தொண்டர் ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய குலத்துக்கு ஏற்ப மட்கலங்களை வனைந்து விற்றுச் சிவனஞ் செய்தும், திருவோடுகளைச் சிவனடியார்களுக்குக் கொடுத்தும் வந்தார். அவர் "ஆதிகாலத்திலே பரமசிவன் திருப்பாற்கடலினின்றும் எழுந்த ஆலாகலவிஷத்தை உலகம் உய்யும்பொருட்டு உண்டபொழுது, அவருடைய கண்டமானது, அவர் தம்மை அடைந்தவர்களுக்கு வரும் இடையூறுகளை நீக்கியருளுவார் என்பதை நாமெல்லாம் அறிந்துகொள்ளும்படி ஓரறிகுறியாய் விளங்கும்பொருட்டு, அதனை உள்ளே புகவொட்டாமல் தடுத்துத் தானே தரித்துக்கொண்டது" என்று நினைந்து, அக்கடவுளுடைய கண்டத்தைத் திருநீல

கண்டம் என்று எப்பொழுதும் சிறப்பித்துச் சொல்லுவார். அதனால் அவருக்குத் திருநீலகண்டநாயனார் என்னும் பெயர் உண்டாயிற்று.

ஒருநாள் அவர் அவ்வூரிலே ஒரு வேசியிடத்துச் சென்று வீட்டுக்குத் திரும்ப; கற்பிலே சிறந்த அவர் மனைவியார் அதை அறிந்து, அதைக்குறித்துத் தம்முடைய மனசிலே தோன்றிய கோபத்தை அடக்கிக்கொண்டு, இல்வாழ்க்கைக் குரிய மற்றப்பணிகளெல்லாஞ் செய்தும், புணர்ச்சிக்குமாத் திரம் இசையாதவரானார். நாயகர் தம்முடைய மனைவியார் கொண்ட புலவியைத் தீர்க்கும்பொருட்டு அவர் சமீபத்திலே போய், வேண்டிய இரப்புரைகளைச்சொல்லி, அவரைத் தீண் டும்படி சென்றார். அப்பொழுதும்மனைவியார் "நீர் எம்மைத் தீண்டுவீராகில் திருநீலகண்டம்" என்று ஆணையிட்டார். அதைக்கேட்ட நாயகர், பரமசிவனுடைய திருநீலகண்டத் திலே தாம் வைத்த பத்தி குன்றுவண்ணம், அம்மனைவியா ரைத் தொடாமல் நீங்கி, "இவர் 'எம்மை' என்று பன்மை யாகச் சொன்னதனால் இவரைமாத்திரமன்றி மற்றப்பெண் களையும் நான் மனசினால் தீண்டாதலுஞ் செய்யேன்" என்று உறுதிகொண்டார். அவர்கள் இருவரும் தங்கள் வீட்டினின் றும் புறப்படாதொழிந்து, அவ்வீட்டிலேதானே இருந்து, இல்லறத்திற்குரிய பிறசெய்கைகளெல்லாம் செய்துகொண்டு, புணர்ச்சியின்மையைப் பிறரறியாதபடி வாழ்ந்தார்கள். இள மைப்பருவத்தையுடைய இருவரும் அவ்வாணையைப் பேணிக் கொண்டு, பலவருஷங்கள் செல்ல, யௌவனம் நீங்கி, வயோ திகர்களாகி, வருத்தமுற்றார்கள். உற்றும், சிவபத்தி சிறிதும் குறையாதவர்களாகி இருந்தார்கள்.

இப்படியிருக்கும் காலத்திலே, காருண்ணிய ஸ்வரூபி யாகிய பரமசிவன், அவ்வடியாருடைய மகிமையை உலகத் தவர்கள் ஐயந்திரிபற அறிந்து அவருடைய தொண்டை அநுசரித்து உய்யும்பொருட்டு, ஒரு சிவயோகி வடிவங் கொண்டு, அவ்வடியார் வீட்டுக்குச் சென்றார். அவ்வடியார் அவரைக்கண்டு எதிர்கொண்டு வீட்டினுள்ளே அழைத்துக் கொண்டுபோய், ஆசனத்தில் இருத்தி அவருக்கு விதிப்படி

அன்பினோடு பூசைசெய்து, நமஸ்கரித்து, எழுந்து அஞ்சலி செய்து நின்று, "சுவாமீ, அடியேன் தேவரீருக்குச் செய்ய வேண்டிய குற்றேவல் யாது" என்று விளவ; சிவயோகியார் "இந்தத் திருவோட்டை வைத்திருந்து, நாம் கேட்கும் போது தா. இந்த ஓடு தனக்கு வேறுரு்பில்லாதது; தன்னிடத்திலே சேர்ந்த பொருள்களெல்லாவற்றையும் சுத்தி செய்வது; பொன்னிலும் இரத்தினத்திலும் பார்க்கக் காப்பாற்றப்படத்தக்கது. இப்படிப்பட்ட மேன்மையுள்ளதாகிய இந்த ஓட்டை நீ வாங்கி வைத்திரு" என்று அருளிச்செய்தார். அதைக் கேட்ட அடியவர் அவரை வந்தனஞ் செய்து, அவ்வோட்டை வாங்கிக்கொண்டு, வீட்டிலே ஒரு பங்கத்தில் சேமித்துவைத்துவிட்டு, திரும்பிவந்து, போம்படி எழுந்த சிவயோகியாருக்குப் பின் சிறிது தூரஞ்சென்று, அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, வீட்டுக்குத் திரும்பினர்.

நெடுநாட்கள் கழிந்தபின், ஒருநாள் பரமசிவன் தாம் வைக்கக்கொடுத்த திருவோட்டை வைக்கப்பட்ட இடத்தில் இல்லாதொழியும்படி செய்து, அவ்வடியாருடைய உண்மை நிலையைப் பிறர்க்குப் புலப்படுத்தும்பொருட்டு முன்போலச் சிவயோகிவடிவங்கொண்டு, அவர் வீட்டுக்கு எழுந்தருளினர். அவர் சிவயோகியாரை முன்போல வழிபட்டு, "சுவாமீ, தேவரீர் இவ்வீட்டிற்கு எழுந்தருளிவந்தது அடியேங்கள் பூர்வ சன்மத்திற் செய்த தவத்தினற்போலும்" என்று விண்ணப்பஞ்செய்து நிற்க; சிவயோகியார் "நாம் முன்னாளிலே உன்னிடத்திலே தந்த திருவோட்டை இப்பொழுது தா" என்றார். அடியவர் அதைக் கொண்டுவந்து கொடுக்கும்பொருட்டு உள்ளேபோய்ப் பார்த்துக் காணுமையாலே திகைத்து, அங்கு நின்றவர்களிடத்திலே கேட்டும் பிறவிடங்களிலே தேடியும் காணாதவராகி, சிவயோகியாருக்கு உத்தரம் சொல்வதற்கு ஒன்றுமின்றி அங்கே நின்றார். சிவயோகியார் உள்ளே நின்ற அடியார் கேட்கும்படி, "நொடிப்பொழுதில் வருவேன் என்று போன நீ ஏன் இவ்வளவு நேரம் தாழ்த்து நிற்கின்றாய்" என்று கேட்க; அடியவர் வந்து சிவயோகியாரை வணங்கி, "சுவாமீ, தேவரீர் தந்த திருவோட்டை வைத்த

இடத்திலும் பிறவிடங்களிலும் தேடிக்காணேன். பழையதாகிய அந்தத் திருவோட்டைப் பார்க்கிலும் புதிதாகிய வேறொரு திருவோடு தருவேன். அதை ஏற்றுக்கொண்டு, அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளல்வேண்டும்'' என்று சொல்லிப் பிரார்த்தித்து நின்றார். உடனே சிவயோகியார் அவரைக் கோபித்துப்பார்த்து, ''நீ யாது சொன்னாய்? நான் வைத்த மண்ணோட்டையேயன்றிப் பொன்னோட்டைத் தந்தாயாயினும் நான் வாங்கேன். நான் முன்னே உன்னிடத்தில் தந்த ஓட்டையே கொண்டுவா'' என்று திருவாய்மலர்ந்தருள; அடியவர் ''சுவாமீ, தேவரீர் தந்த ஓட்டைத் தேடியுங்காணேன். வேறே நல்ல ஓடு தருகின்றேன் என்று சொல்ல; அதற்கு உடன்படாமல், என்னோட்டையே கொண்டுவா என்று சொல்லுகிறீர். இந்தச் சொல்லு என் ஞானவுமுழுதையும் ஒழித்துவிட்டது'' என்றார். அதற்குச் சிவயோகியார் ''நான் உன்னிடத்திலே வைத்த அடைக்கலப் பொருளை நீ கவர்ந்துகொண்டு, பாலத்துக்குச் சிறிதும் அஞ்சாமல், பல பாவகங்கள் செய்கின்றாய். சகலரும் அறியும்படி உன்னைத் தப்பவொட்டாமல் மறித்து என்னோட்டை வாங்கிக்கொண்டேயன்றி நான் போகேன்'' என்று சொல்ல; அடியவர் ''சுவாமீ, தேவரீர் தந்த ஓட்டை நான் கவர்ந்தவனல்லன். அடியேனிடத்தே களவில்லாமையை எப்படித் தெரிவிப்பேன்? சொல்லும்'' என்றார். சிவயோகியார் ''உன் புத்திரனைக் கையிலே பிடித்துக்கொண்டு குளத்திலே முழுகி, நான் கவரவில்லை என்று சத்தியம்பண்ணித்தா'' என்று சொல்ல; அடியவர் ''அப்படிச் செய்தற்கு எனக்குப் புத்திரன் இல்லையே! யாது செய்வேன். சொல்லும்'' என்றார். சிவயோகியார் ''உன்மனைவியைக் கைப்பிடித்து முழுகிச் சத்தியம் பண்ணித்தா'' என்று சொல்ல; அடியவர் ''நானும் என்மனைவியும் எங்களிடத்தண்டாயிருக்கும் ஒரு சபதத்தினாலே ஒருங்கு முழுகுதல் கூடாது. நான்மாத்திரம் குளத்திலே முழுகிச் சத்தியம்பண்ணித் தருகிறேன். வாரும்'' என்றார். அதற்குச் சிவயோகியார் ''நான் முன்னே தந்த ஓட்டைத் தாராமலும், அதைக் கவர்ந்துகொள்ளவில்லை

யெனின் உன்மனைவியைக் கைப்பிடித்துச் சத்தியஞ்செய்து தாமலும், மனம் வலித்திருக்கின்றாய். திலகவாழ்நாளர் கள் கூடியிருக்கும் பெரிய சபையிலே இவ்விஷயத்தைக் குறித்துப் பேசப்போகின்றேன்'' என்று சொல்லி, அந்தச் சபைக்குப் போக; திருநீலகண்டநாயனரும் அவருக்குப் பின்னே போனர். சிவயோகியார் அந்தப் பிராமணர்களைப் பார்த்து, ''இந்தக் குயவன் தன்னிடத்திலே நான் வைத் திருக்கும்படி கொடுத்த ஓட்டைத் தருகின்றானில்லை. அதனை இழந்தானுடன், தன்மனைவியைக் கைப்பிடித்துக் குளத்திலே முழுகிச் சத்தியம்பண்ணித் தருகின்றானுமில்லை'' என்றார். உடனே பிராமணர்கள் அடியவரை நோக்கி, ''திருநீலகண் டரே, நடந்த சமாசாரத்தை நீர் சொல்லும்'' என்று கேட்க; அவர் ''சுவாமிகாள், இவர் தந்த திருவோடு நான் வைத்த இடத்தினின்றும் மறைந்துபோய்விட்டது. நான் தேடிப் பார்த்துங் காணேன். இதுவே நடந்த சமாசாரம்'' என்றார். அதற்குப் பிராமணர்கள் ''இவர் தந்த ஓட்டை நீர் இழந்தீ ராகில், இவர் கேள்விப்படி உம்முடைய மனைவியைக் கைப் பிடித்துக் குளத்திலே முழுகிச் சத்தியஞ்செய்து கொடுத் தலே நீதி'' என்றார்கள். அடியவர் அதைக் கேட்டு, தாம் அம்மனைவியாரைத் தீண்டாதிருத்தலைக் குறித்துப் பேசமாட் டாதவராகி, ''தகுந்தபடி குளத்திலே முழுகிச் சத்தியஞ் செய்து தருகிறேன், வாரும்'' என்றுசொல்லி, சிவயோகியா ரோடு தம்முடைய வீட்டுக்குப் போய், மனைவியாரையும் அழைத்துக்கொண்டு, திருப்புலீச்சரத்துக்கு முன்னிருக் கின்ற திருக்குளத்திலே போய், ஒரு மூங்கிற் றண்டை ஒரு புறத்திலே மனைவியார் பிடிக்க, மற்றப்புறத்திலே தாம் பிடித் துக்கொண்டு, இறங்கினர். அதைக் கண்ட சிவயோகியார் ''உன் மனைவியைக் கைப்பிடித்துக்கொண்டு மூழ்கு'' என்று சொல்ல; திருநீலகண்டநாயனர், அப்படிச்செய்யக் கூடா மையை உலகத்தார் அறியும்படி, முன்னாலே தாஞ்செய்த வேகிகமனமும் அதனாலுண்டாகிய சபதமும் அந்தப்பிரகாரம் தவறாமல் நடத்திவருதலும் சொல்லி, முழுகினர். முழுகிக் கரையிலேறிய திருநீலகண்டநாயனரும் மனைவியாரும் மூப் புப்பருவம்நீங்கி, இளமைப்பருவம் உடையவர்களாய்ப் பிர

காசித்தார்கள் * உடனே தேவர்களும் முனிவர்களும் அந்நாயனார் மீது ஆகாயத்தினின்றும் புஷ்பமாரி பொழிந்து, அவரது பெருமையை எடுத்துத் துதித்தார்கள். அவ்வதிசயத்தைக் கண்ட சமஸ்தரும் அங்கு நின்ற சிவயோகியாரைக் காணுதவர்களாய், மயங்கி நின்றார்கள். சிவபெருமான் பார்வதி தேவியாரோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருளினார். அப்பொழுது திருநீலகண்டநாயனாரும் மனைவியாரும் பூமியிலே விழுந்து அவரை நமஸ்கரித்து, எழுந்து ஸ்தோத்திரஞ்செய்துகொண்டு நின்றார்கள். சிவபிரான் அவர்களை நோக்கி, "ஐம்புலங்களை வென்றதனாலே மேன்மையடைந்த அன்பர்களே, எக்காலத்தும் இவ்விளமை நீங்காமல் நம்மிடத்தில் இருங்கள்" என்றுசொல்லி மறைந்தருளினார். பத்திவிளிமையையுடைய திருநீலகண்டநாயனாரும் மனையியாரும் யாவராலும் செய்தற்கரிய பெருஞ்செய்கையைச் செய்து, சிவலோகத்தை அடைந்து, பேரின்பத்தை அனுபவித்து வாழ்ந்திருந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

இயற்பகைநாயனார் புராணம்.

சோழமண்டலத்திலே, காவேரிநதி சமுத்திரத்தோடு கலத்தலால் காவேரிசங்கமம் எனப் பெயர்கொண்ட விசேட தீர்த்தம் பொருந்திய காவிரிப்பூம்பட்டினத்திலே, வைசியர் குலத்திலே, குருலிங்க சங்கமபத்திகளிற் சிறந்தவரும் ஔதார்யம் உள்ளவரும் ஆகிய இயற்பகையாரென்பவர் ஒருவர் இருந்தார்.

அவர் இல்லறத்தில் இருந்து, விபூதி உருத்திராக்ஷம் தரித்த சிவபத்தர்களுக்கு அவர்கள் விரும்பிய எல்லாவற்றையும் மகிழ்ச்சியோடு கொடுத்துக்கொண்டு வருங்காலத்தில், ஒருநாள், திருக்கைலாசபதியானவர், அவ்வியற்பகையார் அடியார்கள் விரும்பியவை பாலையேனும் அவற்றை மறுத

* இவ்வூர் இப்பொழுது இளமையாளர் ஔ எனப் பெயர்பெற்றது.

கொடுத்தலைச் சகலருக்கும் புலப்படுத்தும்பொருட்டு, ஒரு பிராமணவடிவங்கொண்டு, விபூதி திருமேனியிலே பிரகாசிக்க, தூர்த்தவேடமுந்தோன்ற, அவர் வீட்டிற்கு எழுந்தருளினார். இயற்பகைநாயனர் அன்பினோடு அவரை எதிர்கொண்டு நமஸ்கரித்து, அழைத்துக்கொண்டு போய், விதிப்படி அருச்சித்து, "சுவாமீ, தேவரீர் இங்கே எழுந்தருளியது பூர்வசன்மத்தில் அடியேன் செய்த தவத்தினும் போலும்" என்றார். அதுகேட்ட ஐயர் இயற்பகைநாயனரை நோக்கி, "சிவனடியார்கள் விரும்பிக் கேட்பன யாவையெனினும் நீர் அவைகளை மருமல் மகிழ்ச்சியோடு கொடுத்தலை நான் கேள்வியுற்று, உம்மிடத்திலுள்ள ஒருபொருளை விரும்பி இன்றைக்கு இங்கே வந்தேன். நீர் தருதற்கு இசைவீராயில், அந்தப் பொருள் இன்னது என்று சொல்லுவேன்" என்றார். அதற்கு இயற்பகைநாயனர் "நான் படிப்பட்ட பொருளாயினும் என்னிடத்தில் இருக்குமாயின், அந்தப் பொருள் நமது கடவுளாகிய பரமசிவனுடைய அடியார்களுக்கு உரிய பொருளேயாம். இதைக் குறித்துத் தேவரீர் சந்தேகிக்க வேண்டுவதில்லை. திருவுள்ளம் விரும்பியதை இன்னது என்று சொல்லியருளும்" என்று சொல்ல; ஐயர் "உம்முடைய மனைவியை விரும்பி வந்தேன்" என்றார். அப்பொழுது இயற்பகைநாயனர் முன்னிலும் பார்க்க மிக மகிழ்ந்து வணங்கி நின்று, "சுவாமீ, தேவரீர் அடியேனிடத்தில் உள்ள பொருளையே விரும்பிக் கேட்டது அடியேனுடைய பாக்கியம்" என்று சொல்லி, சிக்கிரம் உள்ளே போய், கற்பிலே சிறந்த தம்முடைய மனைவியாரை நோக்கி, "நான் இன்றைக்கு உன்னை இத்தச் சிவனடியாருக்குக் கொடுத்துவிட்டேன்" என்றார். உடனே மனைவியார் மனங்கலங்கிப் பின்னே தெளிந்து, "பிராணநாயகரே, நீர் கட்டளையிட்டது எதுவோ அதையே நான்செய்வேன். அதையன்றிச் செய்தற்கு உரிய காரியம் எனக்கு வேறொன்று உண்டோ? இல்லை" என்று சொல்லி, அவரை வணங்க; அவர் தமது மனைவியாரை, அங்கு வந்த சிவனடியாருக்கு மனைவியாகைபற்றி, வணங்கினார். மனைவியார் போய், அவ்வையருடைய பாதங்களிலே விழுந்து நமஸ்கரித்து, எழுந்து நின்றார். அதுகண்ட இயற்

பகைநாயனர் மனமகிழ்ந்து அவ்வையரை வணங்கி, "இன்னும் அடியேன் செய்யவேண்டிய பணி யாது" என்று வினவ; ஐயர் "இந்தப்பெண்ணை நான் தனியே கொண்டு போகையால், உங்கண்மேலே பற்றுள்ள பந்துக்களையும் ஊரவர்களையும் கடக்கும்வரைக்கும் அவர்களால் எனக்கு ஓரிடையூறும் உண்டாகாதிருக்கும்படி, நீர் துணையாக வரவேண்டும்" என்றார். இயற்பகைநாயனர் அதைக் கேட்டு "இவர் கட்டளையிடுமுன் நானே நினைந்து செய்யவேண்டிய இக்குற்றேவலைச் செய்யாமல், இவர் சொல்லும்வரைக்கும் தாழ்த்து நின்றது குற்றம்" என்று நினைத்துத் துக்கித்து, ஆயுதசாலையிலேபோய், போர்க்கோலங் கொண்டு, வாளும் பரிசையும் எடுத்துக்கொண்டு, ஐயரிடத்திற்கு வந்து, அவரை வணங்கி, அவரையும் மனைவியாரையும் முன்போம்படி செய்து, தாம் பின்னே போனார்.

அப்பொழுது இயற்பகைநாயனருடைய சுற்றத்தவர்களும் அவர்மனைவியாருடையசுற்றத்தவர்களும் "இயற்பகையைத்தியத்தினாலே தன் மனைவியைக் கொடுத்தானாயினும், அவளை ஒருவன் கொண்டுபோவது நீதியா" என்று தங்கள் மரபுக்கு வரும் பெரும்பழியை நீக்கிக்கொள்ளுமாபோலே அவர்களைத் தொடர்ந்தருகி, வேல் வில் வாள் முதலிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, சண்டமாருதம்போலத் தீவிரமாக கடந்து, நகருக்குப் புறத்திலே போய், ஐயருக்கு இருபக்கத்திலும் நெருங்கி, ஆரவாரித்து, ஓ "துட்டனே, எங்களுக்குப் பழி வராதபடி எங்கள் குலப்பெண்ணை விட்டுப் போ" என்று சொல்லி, அவரை வளைத்துக்கொண்டார்கள். ஐயர் அதைக் கண்டு, அஞ்சினவர்போல இயற்பகைநாயனருடைய மனைவியாரைப் பார்க்க; அம்மனைவியார் "சுவாமீ, நீர் பயப்படவேண்டாம். இயற்பகைநாயனர் அவர்களை வெல்லுவார்" என்றார். இயற்பகைநாயனர் அதைக்கேட்டு, "அடியேன் அவர்கள் எல்லாரையும் இப்போது கொன்றுபோடுகிறேன். தேவீர் அஞ்சவேண்டாம்" என்று சொல்லி, அங்கு வந்த சுற்றத்தவர்களைப் பார்த்து, "நீங்கள் என் வாளுக்கு இரையாவீர்கள். ஒருவரும் எனக்கு எதிர் நில்லா

மல் ஓடிப் பிழையுங்கள்'' என்று கூற; அவர்கள் ''ஏடா இயற்பகை! நீ என்னகாரியஞ் செய்தாய்? ஊரவர்கள் பேசும் பழிமொழிக்கும் நம்முடைய சுத்துருக்கள் நகைக்கும் நகைக்புக்கும் நீ சற்றுயினும் வெட்கப்படவில்லை. மனைவியைப் பிராமணனுக்குக் கொடுத்தோ நீ சாமர்த்தியம் பேசுவது. நாமெல்லாம் ஒருங்கே மடிவதன்றி இந்தப்பெண்ணைப் பிராமணனுக்குக் கொடுக்கவிடோம்'' என்றார்கள். உடனே இயற்பகைநாயனார் அதிக கோபங்கொண்டு, ''உங்கள் சரீரங்களைத் துண்டம் துண்டமாக்கி உங்களுயிரைச் சுவர்க்கத்துக்கேற்றி ஐயரைத் தடையின்றிப் போகவிடுவேன்'' என்று சொல்லி எதிர்க்க; அவர்கள் அந்நாயனாரோடியுத்தஞ்செய்யத் தொடங்காமல், அவர் மனைவியாரைக் கொண்டுசெல்கின்ற ஐயருக்கு முற்பட்டு, அதிக கோபத்தோடும் அவரைத் தடுத்தார்கள். அது கண்ட நாயனார் கோபங்கொண்டு, வாளினாலே, இடசாரி வலசாரியாக மாறி மாறிச் சுற்றி வந்து, அவர்களுடைய தோள்களையும் கால்களையும் நாலகளையும் துணித்து விழுத்தி, பின் ஒவ்வொருவராய் வந்து எதிர்த்தவர்களையும் கொன்று, மேல் எதிர்ப்பவர் ஒருவருமின்றி யுத்தகளத்திலே உலாவினார். பின் இந்தச் செயற்கருஞ் செய்கையைச் செய்த நாயனார் ஐயரை நோக்கி, ''சுவாமீ, தேவரீர் அஞ்சாவல்லாம் இந்தக் காட்டைக்கடக்கும் வரைக்கும் வருகிறேன்'' என்று சொல்லி அவரோடு போனார். திருச்சாய்க்காடு என்னுஞ் சிவஸ்தலத்துக்குச் சமீபத்திலே போனபொழுது, ஐயர் இயற்பகைநாயனாரை நோக்கி, ''இனி நீர் திரும்பிப் போகலாம்'' என்று சொல்ல; நாயனார் அவருடைய திருவடிகளை வணங்கி அஞ்சலிசெய்து ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு திரும்பினார். அப்பொழுது ஐயர் ''இயற்பகையே! இங்கேவா'' என்று சொல்லி ஓலமிட்டார். நாயனார் அந்த ஓசையைக் கேட்டு, ''அடியேன் வந்துவிட்டேன் வந்துவிட்டேன். இன்னும் இடையூறு செய்பவர்கள் உண்டாயில், கொன்றுபோடுவேன்'' என்று சொல்லிக்கொண்டு வர; ஐயர் மறைந்தருளினார். வந்த நாயனார் அவ்வையரைக் காணாமல் மனையியாரைமாத்திரங் கண்டார். பின்பு ஆகாயத்திலே பார்வதி சமேதராகி இடபவாகனத்தில் எழுந்தருளி வந்த திருக்கைலாசபதியைக்

கண்டார், ஆராமையினாலே உடனே விழுந்தார்; எழுந்து ஸ்தோத்திரம் பண்ணினார். சுவாமி அவரை நோக்கி, "நம் மேலும் நம்முடைய அடியார்கண்மேலும் நிஷ்களங்கமாகிய அன்புவைத்த இயற்பகையே நீ, உன் மனைவியோடும் நம்மு டனே வா" என்று திருவாய்மலர்ந்து, அந்தர்த்தானமாயி னார். இயற்பகைநாயனாரும் மனைவியாரும் சிவலோகத்தை அடைந்து, போகின்பத்தை அனுபவித்து வாழ்ந்திருந்தார் கள். யுத்தத்திலே இறந்த அவர்கள் பந்துக்களும் வானுல கத்தை அடைந்து இன்பமனுபவித்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

இளையான்குடிமாறநாயனார் புராணம்.

இளையான்குடியென்னும் ஊரிலே, வேளாளர் குலத் திலே, எத்தொழிலினும் சிறந்த வேளாண்மையால் வரும் குற்றமற்ற ஐஸ்வரியத்தையும் சிவனடியார்கண் மேலே முழுமையும் பதிந்த அன்பு கொண்ட சிந்தையையும் உடையவராகிய மாறனார் என்பவர் ஒருவரிருந்தார். அவர், தம்முடைய திருகத்துக்கு வரும் சிவபத்தர்கள் எந்த வரு ணத்தாராயினும், மெய்யன்போடு அவர்களை எதிர்கொண்டு அஞ்சலி செய்து, இன்சொற்களைச் சொல்லி, வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்து, கரகநீர் கொண்டு அவர்கள் திரு வடிகளை விளக்கி, அத்தீர்த்தத்தைச் சிரமேற்றெளித்து, உள்ளும்பருகி, அத்திருவடிகளை மெல்லிய வஸ்திரத்தினு லொற்றி, ஆசனத்திலிருத்தி, சைவாகம விதிப்படி அருச் சித்து நமஸ்கரித்து, பின்பு கைப்பு, புளிப்பு, கிக்திப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு என்னும் அறுவகைச் சுவையை யுடையனவாய், உண்ணப்படுவது, தின்னப்படுவது, சுக்கப் படுவது, பருகப்படுவது என நால்வகைப்படும் உணவுகளை அவரவர் பிரியப்படி திருவமுது செய்விப்பார். இப்படித் தினந்தோறும் மாகேசுரபூசை பண்ணுதலாகிய சிவபுண்ணி யத்தினாலே செல்வம் அபிவிருத்தியாக, அவர் குபேரனை ஒத்து வாழ்ந்திருந்தார். அப்படி இருக்கும் காலத்திலே,

சிவபெருமான், அவ்விளையான்குடிமாறநாயனர் இந்தச் செய்கையைச் செல்வம்வந்த காலத்திலன்றி வறுமை வந்தகாலத்திலும் தளராது செய்ய வல்லவர் என்பதையும், தாம் நல்லோர்களுக்கு வறுமையைக் கொடுத்தல் அவர்கள் நயத்தின் பொருட்டே என்பதையும், அந்நயம் இறுதியிலேயே பலிக்கும் என்பதையும், அக்கருத்தறியாது அதற்குள்ளே புண்ணியஞ் செய்த நமக்குக் கடவுள் துடர் செய்தாரே என்று தம்மை நோதல் பழுதாம் என்பதையும், பிறர்க்குத் தெரிவித்து உய்விக்கும்பொருட்டுத் திருவுளங்கொண்டு, அந்நாயனரிடத்தில் உள்ள செல்வமெல்லாம் நாடோறும் சுருங்கி வறுமையெய்தும்படி அருள் செய்தார். அப்படிச் செல்வம் சுருங்கவும், நாயனர் மாகேசுரபூசையிலே பதிந்த தம்முடைய மனம் சிறிதும் சுருங்குதலின்றி, தம்மிடத்துள்ள நிலங்கள் முதலியவற்றை விற்றும், தம்மைக் கூட விற்று இறுக்கத் தக்க அவ்வளவு கடன்களை வாங்கியும் முன்போலவே தாஞ் செய்யும் திருப்பணியை விடாது செய்து வந்தார்.

அவர், மழைக்காலத்திலே மழைபெய்யும் ஒருநாள் இரவில் நெடுநேரம் எதிர்பார்த்திருந்தும், ஒருவருடைய உதவியும் இல்லாமல், பகன்முழுதும் போசனஞ்செய்யாமையால் பசி அதிகப்பட்டு, வீட்டுக்கதவைப் பூட்டிய பின்பு; திருக்கைலாசபதியானவர் சைவவேடங் கொண்டு எழுந்தருளி வந்து, கதவைத்தட்டி அழைக்க; நாயனர் கதவைத் திறந்து, அவரை உள்ளே அழைத்துக்கொண்டுபோய், மழையினால் நனைந்த அவருடைய திருமேனியை வஸ்திரங்கொண்டு துடைத்து, இருத்தற்கு இடங்கொடுத்து, அவருக்கு அமுதூட்டல் வேண்டும் என்னும் ஆசையிருதியால் தம்முடைய மனைவியாரை நோக்கி, "இந்தச் சைவர் மிகப்பசிகொண்டு வந்திருக்கின்றார். நமக்கு முன்னமே போசனத்துக்கு ஒன்றுமில்லை. ஆயினும், இவருக்கு எப்படியும் அன்னங்கொடுக்க வேண்டுமே. இதற்கு யாது செய்வோம்" என்றார். அதற்கு மனைவியார் "வீட்டிலே ஒரு பதார்த்தமுமில்லை. அயலவர் எவரும் இனி உதவமாட்டார்கள். நெடுநேரம் ஆயிற்று. அரிசிக்கடன் கேட்கப்போவதற்கு வேறிடமும் இல்லை. பாவி

யாகிய நான் இதற்கு யாது செய்வேன்'' என்று சொல்லி, பின்பு ''இன்று பகற்காலத்திலே வயலில் விதைக்கப்பட்ட ஈரத்தால் முன்னமே முளைகொண்டிருக்கின்ற நெல்லை வாரிக் கொண்டு வந்தால், இயன்றபடி அன்னஞ் சமைக்கலாம். இதுவேயன்றி வேறொரு வழியும் அறியேன்'' என்று சொல்லித் துக்கித்தார். இந்த வார்த்தை செவிப் புலப்படுதற்கு முன், இளையான்குடிமாறநாயனார் மிக மனமகிழ்ந்து, அதற்கு உடன்பட்டு, மிக மழைபொழிகின்ற மகா அந்தகாரமயமாகிய அத்தராத்திரியிலே ஒரு பெரிய இறைகூடையைத் தலையிலே கவிழ்த்துக்கொண்டு, காலினாலே தடவிக் குறிவழியே தம் முடைய வயலிற்சென்று, அதிலே அதிக மழைநீரால் நீர் மேலே மிதக்கின்ற நெல்முளைகளைக் கையினாலே கோலிவாரி, இறைகூடை நிறைய இட்டு, தலையிலே வைத்துச் சுமந்து கொண்டு, சீக்கிரம் திரும்பி வந்தார். அவரை எதிர்பார்த்துக் கொண்டு வாயிலிலே நின்ற மனைவியார் மனமகிழ்ச்சியோடு அந்த நெல்முளையை வாங்கி, சேறு போம்படி நீரினாலே கழுவியூற்றி, பின்பு தம்முடைய பிராணநாயகரை நோக்கி, ''அடுப்பிலே நெருப்பு மூட்டுதற்கு விறகு இல்லையே'' என்று சொல்ல; அவர் கிலமாயிருக்கின்ற வீட்டின் மேற்கூரையிலுள்ள வரிச்சுக்களை அறுத்து விழுத்தினர். மனைவியார் அவைகளை முறித்து அடுப்பிலே மாட்டி, நெல்முளையை ஈரம் போய்ப் பதமாகும்படி வறுத்து, பின் அரிசியாக்கி, நீர் வார்த்துக் காய்ந்திருக்கிற உலையில் அதையிட்டு, சோறாக்கி, தம்முடைய நாயகரைப் பார்த்து, ''இனிக் கறிக்கு யாது செய்வோம்'' என்றார். உடனே நாயனர் புறக்கடைத்தோட்டத்திற்குச் சென்று, குழியினின்றும் மேற்படாத சிறுபயிர்களைக் கையினாலே தடவிப் பிடுங்கிக்கொண்டு வந்து, கறி சமைக்கும்படி கொடுக்க, மனைவியார் அவைகளை வாங்கி ஆய்ந்து, நீரினாலே கழுவி, தமது சாமர்த்தியத்தினால் வெவ்வேறு கறியமுதுகள் செய்தமுடித்து, நாயகருக்கு அமுதும் கறியும் பாகம்பண்ணப்பட்டமையைத் தெரிவித்து, ''சிவனை அமுது செய்விப்போம்'' என்று சொன்னர். நாயகர், நித்திரைசெய்பவர்போலக் காட்டிய ஐயருக்குச் சமீபத்திற் சென்று, ''சுவாமீ, அமுதுசெய்ய எழுந்தருளும்''

என்று சொல்லி அழைக்க; அவர் ஒரு சோதி வடிவமாய் எழுந்து தோன்றினர். அதைக் கண்ட இளையான்குடிமாற நாயனாரும் மனைவியாரும் திகைத்து நின்றார்கள். பின்பு பரமசிவன் பார்வதி தேவியாரோடும் இடபாரூடராய்த் தோன்றி, இளையான் குடிமாறநாயனாரை நோக்கி, "அன்பனே, நம்முடைய அடியார்களை அமுதுசெய்வித்த நீ உன் மனைவியோடும் நம்முடைய பதத்தை அடைந்து, பேரின் பத்தை அனுபவித்துக்கொண்டிரு" என்று திருவாய்மலர்ந் தருளி, அந்தர்த்தானமாயினர்.

திருச்சிற்றம்பலம்.

மெய்ப்பொருணையனார் புராணம்.

சேதிநாட்டிலே, திருக்கோவலூரிலே, மலையமானாட்டாருக்கு அரசரும், வேதாகமங்களின் உண்மையை அறிந்தவரும், சிவனடியார்களுடைய திருவேடத்தையே மெய்ப்பொருளெனச் சிந்தை செய்பவருமாகிய மெய்ப்பொருணையனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய இராச்சியத்தைத் தருமநெறி தவறாமல் நடத்தியும், தம்மை எதிர்த்த பகைவர்களை ஜயங்கொண்டும், சிவாலயங்களெங்கும் நித்திய நைமித்திகங்களைச் சிறப்பாக நடத்தியும், சிவபத்தர்கள் வந்த பொழுது மனமகிழ்ச்சியோடும் வேண்டிய திரவியங்களைப் பூர்த்தியாகக் கொடுத்தும், வந்தார்.

இப்படி நடக்குங் காலத்திலே, முத்தநாதன் என்கின்ற ஓரரசனவன் அவரை வெல்லுதற்கு விரும்பி, யுத்தசன்னத்தனாகி, அவரோடு பொருது, யானை குதிரை தேர் காலாள் என்னுஞ் சேனைகளைப் பலமுறை இழந்து, தோற்று, அவமானப்பட்டுப் போனன். பின்பு அவன் யுத்தத்தினாலே அவரை ஜயிக்கமாட்டாதவனாகி, அவரிடத்திலே இருக்கின்ற அடியார் பத்தியை அறிந்து, விபூதி தரிக்கின்ற அவ்வடியார் வேடங் கொண்டு அவரைக் கபடத்தினால் வெல்ல நினைந்து, சரீரமுழுதிலும் விபூதி தரித்து, சடைகளைச் சேர்த்துக்கட்டி, புத்தகக் கவளிபோலத் தோன்றுகின்ற ஆயுதத்தை மறைத்து

வைத்திருக்கின்ற ஒரு கவளிகையை எடுத்துக்கொண்டு, திருக்கோவலூரிற் சென்று, மெய்ப்பொருணயனருடைய திருமாளிகைவாயிலை அடைந்தான். அப்பொழுது வாயிற் காவலாளர் அவனை அஞ்சலிசெய்து, "சுவாமீ, உள்ளே எழுந் தருளும்" என்று சொல்ல; அம்முத்திநாதன் உள்ளே போய், மற்ற வாயில்களையும் அப்படியே கடந்து சென்று, இறுதி வாயிலை அடைந்தபொழுது, அவ்வாயிற் காவலாளனாகிய தத்தனென்பவன் "இப்பொழுது இராசா நித்திரை செய் கின்றார். நீர் சமயமறிந்து போகவேண்டும்" என்றான். அதைக்கேட்ட முத்திநாதன் "நான் அவருக்குச் சாஸ்தி ரோபதேசஞ் செய்யப்போகின்றபடியால், நீ என்னைத் தடுக்க லாகாது" என்று சொல்லி, உள்ளே புகுந்து, மெய்ப்பொரு ணயனர் கட்டிலிலே நித்திரைசெய்ய அவர் மனைவியார் பக் கத்திலிருக்கக் கண்டும், சமீபத்திலே சென்றான்.

அப்பொழுது, மனைவியார் சீக்கிரம் எழுந்து, மெய்ப் பொருணயனரை எழுப்ப; அவர் விழித்தெழுந்து, அவனை எதிர்கொண்டு வணங்கி நின்று, "சுவாமீ, தேவரீர் இங்கே எழுந்தருளுதற்குக் காரணம் யாது" என்று வினவினர். அதற்கு முத்திநாதன் "உங்கள் கடவுளாகிய பரமசிவன் ஆதிகாலத்திலே அருளிச்செய்த சைவாகமங்களுள் எவ்விடத் தும் காணப்படாத ஓராகமத்தை உமக்குப் போதிக்கும்படி கொண்டுவந்தேன்" என்றான். மெய்ப்பொருணயனர் அதைக் கேட்டு "இதைப்பார்க்கிலும் உயர்ந்த பேறு அடியேனுக்கு உண்டோ? அந்தச் சைவாகமத்தை வாசித்து அடியேனுக்கு அதன் பொருளை அருளிச்செய்யவேண்டும்" என்று பிரார்த் திக்க; முத்திநாதன் "பட்டத்தரசி இல்லாமல் நீரும் நானும் வேறிடத்திருக்கவேண்டும்" என்றான். உடனே மெய்ப்பொரு ணயனர் தம்முடைய மனைவியாரை அந்தப்புரத்துக்குப் போம்படி செய்து, பொய்வேடங்கொண்ட முத்திநாதனை ஆசனத்தின்மேல் இருத்தி, தாம் கீழே இருந்துகொண்டு, "இனி அருளிச்செய்யும்" என்றார். முத்திநாதன் தன் கையில் இருந்த வஞ்சகக் கவளிகையை மடியின்மேலே வைத்து, புத்தகம் அவிழ்ப்பவன்போல அவிழ்த்து, மெய்ப்

பொருணாயனார் வணங்கும்போது, அக்கவளிகையில் மறைத்து வைத்த உடைவாளை எடுத்து, அவரைக் குத்த; அவர் சிவவேடமே மெய்ப்பொருளென்று, அவனை வணங்கினர். அம்முத்திநாதன் உள்ளே புகுந்தபொழுதே, "இராசாவுக்கு என்ன அபாயம் சம்பவிக்குமோ" என்று மனசை அங்கேயே செலுத்திக் கொண்டிருந்த தத்தனென்பவன் நொடியளவிலே உள்ளே புகுந்து, தன்கைவாளினால் அப்பகைவனை வெட்டப் போனன். அதற்குமுன் உடைவாளினாலே குத்தப்பட்டு இரத்தஞ்சொரிய விழப்போகின்ற மெய்ப்பொருணாயனர், விழும்பொழுது "தத்தனே, இவர் சிவனடியாராதலால் இவருக்கு ஓரிடையூறும் செய்யாதே" என்று கையினாலே தடுத்து விழுந்தார். அப்பொழுது தத்தன் மெய்ப்பொருணாயனாரைத் தலையினால் வணங்கி, அவரைத் தாங்கி, "அடியேன் செய்ய வேண்டிய குற்றேவல் யாது" என்று கேட்க; மெய்ப்பொருணாயனர் "வழியிலே இவருக்கு யாவரொருவரும் இடையூறு செய்யாதபடி இவரை அழைத்துக்கொண்டுபோய் விடு" என்று சொன்னர். அப்படியே தத்தன் முத்திநாதனை அழைத்துக்கொண்டு போம்பொழுது அம்முத்திநாதன் இராசாவைக் குத்தினசங்கதியை அறிந்தவர்களெல்லாரும் அவனைக் கொல்லும்படி வந்து சூழச்சூழ, அவர்களெல்லாரையும், "இந்தச் சிவபத்தருக்கு ஒருவரும் இடையூறு செய்யாதபடி இவரை அழைத்துக்கொண்டுபோய் விடும்பொருட்டு இராசாவே எனக்கு ஆஞ்ஞாபித்தார்" என்று சொல்லி, தடுத்தான். அவர்களெல்லாரும் அதைக் கேட்டவுடனே பயந்து நீங்கிவிட; தத்தன் அவனை அழைத்துக்கொண்டு நகரத்தைக் கடந்து சென்று, அவனுக்குரிய நாட்டுவழியிலே அவனை விட்டு, நகரத்துக்குத் திரும்பி, சிவவேடங்கொண்ட முத்திநாதனை யாதொரு இடையூறு வராமல் அழைத்துக்கொண்டு போய் விட்ட சமாசாரத்தைக் கேட்பதற்கு விரும்பி முன்னேயே நீங்கிவிடக்கூடிய உயிரைத் தாங்கிக்கொண்டிருக்கும் மெய்ப்பொருணாயனருக்கு முன் சென்று, வணங்கி நின்று, "சிவபத்தரை இடையூறு ஒன்றும் வராதபடி கொண்டுபோய் விட்டேன்" என்று சொன்னன். அதைக்கேட்ட மெய்ப்பொருணாயனர் "இன்றைக்கு நீ எனக்குச்செய்த உபகா

ரத்தை வேறார் செய்ய வல்லவர்'' என்று சொல்லி, பின்பு தமக்குப் பின் அரசாளுதற்குரிய குமாரர்களையும் மந்திரிமுதலானவர்களையும் நோக்கி, சைவாகமவிதிப்படி விபூதிமேல் வைத்த அன்பைப் பாதுகாக்கும்படி போதித்து, கனகசபையிலே ஆனந்ததாண்டவம் செய்தருளுகின்ற சபாநாதரைத் தியானம் பண்ணினர். அப்பொழுது சபாநாதர் மெய்ப்பொருணயனாருக்குத் தோன்றி, அவரைத் தம்முடைய திருவடியிலே சேர்த்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

விறன்மிண்டநாயனார் புராணம்.

மலைநாட்டிலே, செங்குன்றூரிலே, வேளாளர்குலத்திலே, பரமசிவனுடைய திருவடிகளை மனசில் இருத்தி உட்பற்றுப் புறப்பற்றுக்களை அறுத்தவரும், அடியார் பத்தியிலே உயர்வொப்பில்லாதவருமாகிய விறன்மிண்டநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர், சிவஸ்தலங்களுக்குப் போன பொழுதெல்லாம், முன் அடியார் திருக்கூட்டங்களுக்கு எதிரே போய், அவர்களை வணங்கிக்கொண்டே பின் சிவபெருமானை வணங்குகின்றவர். அவர் தாம் வசிக்கின்ற மலைநாட்டை நீங்கி, பல தலங்களிலும் சஞ்சரித்து, சிவனடியார்கள் ஒழுகும் ஒழுக்கத்தை அனுசரித்து, திருவாரூரை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்தார்.

ஒருகால் சுந்தரமூர்த்திநாயனார் தேவாசிரியமண்டபத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவனடியார்களை அடைந்து வணங்காமல் ஒருபிரகாரம் ஓதுங்கிச் சென்றதை அவ்விறன்மிண்டநாயனார் கண்டு, ''அடியார்களை வணங்காமற் செல்கின்ற வன்மைண்டன் அவ்வடியார்களுக்குப் புறகு; அவனை வலியாட்கொண்ட பரமசிவனும் புறகு'' என்றார். சுந்தரமூர்த்திநாயனார் அவ்விறன்மிண்டநாயனாரிடத்திலுள்ள சங்கமபத்திவலிமையைக் கண்டு, அவ்வடியார்கண்மேலே திருத்தொண்டத்தொகை என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார். அதைக் கேட்ட விறன்மிண்டநாயனார் மிக மகிழ்ந்து, ''இவ்வன்

ருண்டருடைய மனம் அடியாரிடத்திலே பதிந்திருக்கின்றது" என்று அருளிச்செய்தார். இந்தச் சங்கமபத்தி வலிமை பைக்கண்ட பரமசிவனார் அவ்விறன்மிண்டநாயனாரைத் தம்மைச் சேவிக்கின்ற கணங்களுக்குத் தலைவராக்கியருளினார்.

திருச்சிற்றம்பலம்.

அமர்நீதிநாயனார் புராணம்.

சோழநாட்டிலே, பழையாறை என்னும் ஊரிலே, வைசியர்குலத்திலே, பெருஞ்செல்வமுடையவரும், சிவனடியார்களைத் திருவமுது செய்வித்து அவரவர் குறிப்பறிந்து கந்தை கீள் கோவணம் என்பனவைகளைக் கொடுப்பவருமாகிய அமர்நீதிநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருக்கல்லார் என்னுஞ் சிவஸ்தலத்திலே மகோற்சவதரிசனஞ் செய்ய வருஞ் சிவனடியார்கள் திருவமுது செய்யும்பொருட்டு ஒரு திருமடம் கட்டுவித்துக்கொண்டு, தம்முடைய சுற்றத்தார்களோடும் அவ்விடத்திற் போய்ச் சேர்ந்து, மகோற்சவதரிசனஞ்செய்து, தம்முடைய மடத்திலே சிவனடியார்களைத் திருவமுது செய்வித்துக் கொண்டு, மனமகிழ்ச்சியோடும் இருந்தார்.

இருக்கும் நாட்களிலே, ஒருநாள், சிவபெருமான் பிராமணவருணத்துப் பிரமசாரிவடிவங்கொண்டு, இரண்டு கௌபீனங்களையும் விபூதிப்பையையும் கட்டியிருக்கின்ற ஒரு தண்டைக் கையிலே பிடித்துக்கொண்டு, அந்தத் திருமடத்திற்கு எழுந்தருளிவந்தார். அது கண்ட அமர்நீதிநாயனார் மனமகிழ்ச்சியோடும் முகமலர்ச்சியோடும் அவரை எதிர்கொண்டு வணங்கி, "சுவாமீ, தேவரீர் இங்கே எழுந்தருளிவருதற்கு அடியேன் பூர்வத்தில் யாதுதவஞ்செய்தேனோ" என்று இன்சொற்சொல்ல; பிரமசாரியானவர் அவரை நோக்கி, "நீர் அடியார்களைத் திருவமுதுசெய்வித்து அவர்களுக்கு வஸ்திரங்களும் கந்தைகளும் கீள் கௌபீனங்களும் கொடுக்கின்றீர் என்பதைக் கேள்வியுற்று, உம்மைக் காணுதற்கு விரும்பி வந்தோம்" என்றார். அதுகேட்ட அமர்நீதிநாயனார் "இத்தச்

திருமடத்திலே பிராமணர்கள் போசனம் பண்ணும்பொருட்டுப் பிராமணர்கள் பாகம்பண்ணுவதும் உண்டு. தேவரீரும் இங்கே திருவமுதுசெய்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார். பிரமசாரியானவர் அதற்கு உடன்பட்டு, "நாம் காவேரியிலே ஸ்நானம் பண்ணிக்கொண்டு வருவோம். ஒரு போது மழை வரினும் தரித்துக்கொள்ளும்பொருட்டு நீர் இந்த உலர்ந்த கௌபீனத்தை வைத்திருந்து தாரும்" என்று சொல்லி, தண்டிலே கட்டப்பட்டிருக்கின்ற இரண்டு கௌபீனங்களில் ஒன்றை அவிழ்த்து, "இந்தக் கௌபீனத்தின் மகிமையை உமக்கு நான் சொல்லவேண்டுவதில்லை. நான் ஸ்நானம்பண்ணிக்கொண்டு வரும்வரைக்கும் நீர் இதை வைத்திருந்து தாரும்" என்று அவர்கையிலே கொடுத்துவிட்டு, காவேரியிலே ஸ்நானம்பண்ணுதற்குப் போக; அமர்நீதிநாயனார் அந்தக் கௌபீனத்தை ஒரு தகுந்த இடத்திலே சேமித்துவைத்தார்.

ஸ்நானம்பண்ணப் போன பிரமசாரியானவர் அமர்நீதிநாயனார் சேமித்து வைத்த கௌபீனத்தை அது வைக்கப்பட்ட ஸ்தானத்திலின்றும் நீங்கும்படி செய்து, ஸ்நானஞ் செய்துகொண்டு, மழை பொழிய நனைந்து திருமடத்தை அடைந்தார். அமர்நீதிநாயனார் அது கண்டு எதிர்கொண்டு, "சமையலாயிற்று" என்று சொல்லி வணங்க; பிரமசாரியார், இனி அந்நாயனருடைய அன்பாகிய ஜலத்திலே முழுக வேண்டி, அவரை நோக்கி, "சரம் மாற்றவேண்டும். தண்டிலே கட்டப்பட்டிருக்கின்ற கௌபீனமோ சரமாயிருக்கின்றது. உம்மிடத்திலே தந்த கௌபீனத்தைக் கொண்டு வாரும்" என்றார். அமர்நீதிநாயனார் சிக்கிரம் உள்ளே போய்ப் பார்த்து கௌபீனத்தைக் காணாதவராகி, திகைத்து, மற்றை யிடங்களிலுந் தேடிக் காணுமையால் மிகுந்த துக்கங்கொண்டு, வேறொரு கௌபீனத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டு, பிரமசாரியார் முன்சென்று, "சுவாமீ தேவரீர் தந்த கௌபீனத்தை வைத்த இடத்திலும் பிறவிடங்களிலுந் தேடிக் கண்டிலேன். அது போன விதம் இன்னதென்று அறியேன். வேறொரு நல்ல கௌபீனம் கொண்டுவந்தேன். இது மிழிக்

கப்பட்ட கோவணமன்று, நெய்யப்பட்ட கோவணமே. தேவ
ரீர் நுணைந்த கௌபீனத்தைக் கழற்று, இந்தக் கௌபீனத்
தைச் சாத்தி, அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்தரு
ளும்'' என்று பிரார்த்தித்தார். அதைக்கேட்ட பிரமசாரி
யார் மிகக் கோபித்து, ''உம்முடைய நிலைமை நன்றுயிருக்
கின்றது. நெடுநாட்கழிந்ததுமன்று; இன்றைக்கே நான் உம்
மிடத்தில் வைத்த கௌபீனத்தைக் கவர்ந்துகொண்டு, அதற்
குப் பிரதியாக வேறொரு கௌபீனத்தை ஏற்றுக்கொள்ளு
மென்று நீர் சொல்வது என்னை! சிவனடியார்களுக்கு நல்ல
கௌபீனம் கொடுப்பேன் என்று நீர் ஊரிலே பரவச்செய்தது
என்னுடைய கௌபீனத்தைக் கவர்தற்கோ! நீர் செய்கின்ற
இவ்வாணிகம் நன்றுயிருக்கின்றது'' என்று சொல்ல; அமர்
நீதிநாயனார் பயந்து முகம் வாடி நடுநடுங்கி, ''சுவாமீ, அடி
யேன் இக்குற்றத்தை அறிந்து செய்தேனல்லேன். இதைப்
பொறுத்தருளும். தேவரீருக்குச் செய்யவேண்டிய பணி
விடைகளெல்லாம் செய்கின்றேன். இந்தக் கோவணமன்றி
வேறு பொன்களையும் பட்டாடைகளையும் இரத்தினங்களையும்
தருகிறேன், வற்றுக்கொள்ளும்'' என்றார். அதற்குப் பிரம
சாரியார் கோபந்தணிந்தவர்போலத் தோன்றி, ''பொன்
களும் பட்டாடைகளும் இரத்தினங்களும் எனக்கு ஏன்!
நான் தரிப்பதற்கு உடமையாகியாகிய கௌபீனத்துக்கு ஒத்த
நிறையுள்ள கௌபீனம் தந்தாற்போதும்'' என்று சொல்ல;
அமர்நீதிநாயனார் மனமகிழ்ந்து, ''எதனுடைய நிறைக்குச்
சமமாகிய கௌபீனத்தைத் தரல்வேண்டும்'' என்று கேட்
டார். பிரமசாரியார் ''நீர் இழந்த கௌபீனத்தின் நிறைக்கு
ஒத்த நிறையையுடைய கௌபீனம் இது'' என்று சொல்லி,
தமது தண்டிலே கட்டப்பட்டிருந்த கௌபீனத்தை அவிழ்
த்து, ''இதற்கு ஒத்த நிறையுள்ளதாகக் கௌபீனத்தை
நிறுத்துத்தாரும்'' என்றார். அமர்நீதிநாயனார் ''மிகநன்று''
என்று சொல்லி, ஒரு தராசைக் கொண்டுவந்து நாட்ட; பிரம
சாரியார் அந்தக் கௌபீனத்தை ஒரு தட்டிலே வைத்தார்.
அமர்நீதிநாயனார் தம்முடைய கையிலிருந்த நெய்யப்பட்ட
கௌபீனத்தை மற்றத்தட்டிலே வைத்தார். அது ஒத்த
நிறையிலே நில்லாமல் மேலெழுந்தது. அதைக் கண்டு, அடி

யார்களுக்குக் கொடுக்கும்படி தாம் வைத்திருந்த கோவணங்க ளெல்லாவற்றையும் கொண்டுவந்து ஒவ்வொன்றாக இட இட; பின்னும் தூக்கிக்கொண்டு எழும்பியது. அதைப்பார்த்து, ஆச்சரியம் அடைந்து, பல வஸ்திரங்களையும் பட்டுக்களையும் கொண்டுவந்து இட இட; பின்னும் உயர்ந்தது. அது கண்டு அநேக வஸ்திரப்பொதிகளைக் கொண்டுவந்து இட்டார். இட்டும், அத்தட்டு மேலே எழும்ப; கௌரீனத்தட்டுக் கீழே தாழ்ந்தது. அமர்நீதிநாயனார் அதைக் கண்டு மிக அஞ்சி, பிரமசாரியாரை வணங்கி, "எண்ணிறந்த வஸ்திரப்பொதி களையும் நூற்கட்டுக்களையும் குவிக்கவும், தட்டு உயர்கின்றது. தமியேனுடைய மற்றத்திரவியங்களையும் இத்தட்டிலே இடு தற்கு அனுமதி தந்தருளும்" என்றார். அதற்குப் பிரமசாரி யார் "இனி நாம் வேறென்ன சொல்லுவோம்! மற்றத்திரவி யங்களையும் இட்டுப்பாரும். எப்படியும் நம்முடைய கோவ ணத்துக்கு ஒத்த நிறையில் நிற்கவேண்டும்" என்றார். அமர் நீதிநாயனார் நவரத்தினங்களையும் பொன் வெள்ளி முதலிய உலோகங்களையும் சுமைசுமையாக எடுத்து வந்து இட இட; தட்டு எழுந்தபடியே மேலே நின்றது. அமர்நீதிநாயனார் அதைக்கண்டு பிரமசாரியாரை வணங்கி, "என்னுடைய திர வியங்களில் ஒன்றும் சேஷியாமல் இந்தத் தட்டிலே இட் டேன். நானும் என் மனைவியும் புத்திரனும் மாத்திரம் சேஷித்து நிற்கின்றோம். தேவரீருக்குப் பிரியமாகில், இனி அடியேங்களும் இத்தட்டில் ஏறுவதற்கு அனுமதி தந்தரு ளும்" என்றார். பிரமசாரியாரும் அதற்கு உடன்பட்டார்.

அது கண்டு, அமர்நீதிநாயனார் மனமகிழ்ந்து, பிரமசாரி யாரை வணங்கி, தம்முடைய மனைவியாரோடும் புத்திர ரோடும் தராசை வலஞ்செய்து, "சிவனடியார்களுக்குச் செய் யுந் திருத்தொண்டிலே அடியேங்கள் தவறாமல் இருந்தோ மாகில், அடியேங்கள் ஏறினமாத்திரத்தே இத்தத்தட்டு மற் றத்தட்டுக்கு ஒத்து நிற்கக்கடவது" என்று சொல்லி, திரு கல்லாரில் வீற்றிருக்கின்ற பரமசிவனை வணங்கி, ஸ்ரீபஞ்சா க்ஷரத்தை ஓதிக்கொண்டு, மனம்மகிழ்ந்து தட்டிலே ஏறினார். ஏறினவுடனே, பரமசிவனுடைய திருவாயிலே சாத்தப்

படும் கௌபீனமும் பத்தியிலே சிறிதுங் குறைவில்லாத அமர்நீதிநாயனருடைய அடிமைத்திறமும் பெருமையில் ஒத்திருந்தபடியால், துலாக்கோலின் இரண்டு தட்டுக்களும் ஒத்து நின்றன. அவ்வற்புதத்தைக் கண்டவர்களெல்லாரும் அமர்நீதிநாயனரை வணங்கி ஸ்தோத்திரஞ் செய்தார்கள். தேவர்கள் ஆகாயத்தினின்றும் கற்பகவிருக்ஷங்களின் புஷ்பங்களை மழைபோலப் பொழிந்தார்கள். திருக்கைலாசபதி தாங்கொண்டுவந்த பிரமசாரி வடிவத்தை ஒழித்து; ஆகாயத்திலே பார்வதிதேவியாரோடு இடபாரூடராய்த் தோன்றி, தம்மைத் தரிசித்து அந்தத் தராசுத்தட்டிலேதானே நின்றுகொண்டு ஸ்தோத்திரஞ்செய்கின்ற அமர்நீதிநாயனர் அவர் மனைவியார் புத்திரர் என்னு மூவர்மேலும் திருவருளைக் கஞ்செய்து, "நீங்கள் மூவிரும் நம்முடைய அருளாற் பெற்று, நம்முடைய சந்நிதானத்திலே நம்மை வணங்கிக்கொண்டிருங்கள்" என்று அருளிச்செய்து, மறைந்தருளினார். அமர்நீதிநாயனரும், அவர் மனைவியாரும், புத்திரரும், அக்கடவுளுடைய திருவருளினால் அந்தத் தராசுதானே தேவவிமானமாகி மேலே செல்ல, அவரோடு சிவலோகத்தை அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர்சருக்க மூற்றுப்பெற்றது.

இரண்டாவது

இலைமலிந்தசருக்கம்.

எறிபத்தநாயனார் புராணம்.

கொங்கதேசத்திலே, இராஜதானியாகிய கருவூரிலே, ஆனிலை என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற பரமசிவனை வழிபடுகின்றவரும், அவருடைய அடியார்களுக்குத் திருத்தொண்டு செய்கின்றவரும், அவ்வடியார்களுக்கு ஆபத்து வந்தகாலத்தில் வெளிப்பட்டு அவ்வாபத்துக்குக் காரணராயிருந்தவர்களை மழுவினால் வெட்டுகின்றவருமாகிய எறிபத்தநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார்.

அவர்காலத்திலே சிவகாமியாண்டார் என்கின்ற ஒரு பெரியவர் தினந்தோறும் புஷ்பங்கொய்து, திருமாலைகட்டி, அவ்வானிலையில் வீற்றிருக்கும் கடவுளுக்குச் சாத்திவந்தார். ஒருநாள் முன்போல வைகறையிலே எழுந்திருப்பாய், ஸ்நானஞ் செய்து, வாயை வஸ்திரத்தினாலே கட்டி, திருநந்தனவனத்துக்குப் போய், புஷ்பங்களை அலருஞ்சமயத்திலே கொய்து, திருப்பூங்கூடையை நிறைத்து, கையிலே தண்டை வந்தி, சுவாமிக்குத் திருப்பள்ளித்தாமக்கட்டிச் சாத்தும் பொருட்டு அந்தச் சிவாலயத்தை நோக்கிச் சிக்கிரம் நடந்தார். நடக்கும்பொழுது, அந்தகரிலிருக்கின்ற அரசராகிய புகழ்ச்சோழராயனுடைய பட்டவர்த்தன யானையானது, மதகவடியின் முதலனாகிய அங்காளியிலே, காவேரியிலே முழுகி மிக அலங்கரிக்கப்பட்டு, குத்துக்கோற்காரர் முன்னே ஓட, தன்மேலேறிப் பாகர்களோடும் ஒருவீதியிலே விரைவாகச் சென்று, தனக்குமுன்னே செல்லும் சிவகாமியாண்டாரைப் பின்தொடர்ந்தோடி, அவர் கையிலே தாங்கிய தண்டிலே தூங்குகின்ற திருப்பூங்கூடையைப் பறித்துச் சிதறியது. அந்த யானையின்மேல் இருக்கின்ற பாகரின் அதைக்

கண்டு, சிக்கிரம் அதைச் செலுத்திக்கொண்டுபோக; சிவ காமியாண்டார் பதைபதைத்துக் கோபித்து, அந்த யானை யைத் தண்டிஞல் அடிக்கும்படி அதற்குப் பின்னேபோஞர். யானை அவர் சமீபிக்கவொட்டாத மகா கதிகொண்டு சென் றது. சிவகாமியாண்டார் வயோதிகானபடியால், அந்த யானைக்குப்பின் விரைந்து செல்லச் சத்தியில்லாதவராகி, தவறி விழுந்து, நிலத்திலே கைகளை மோதி எழுந்து நின்று, அதிதுக்கங்கொண்டு, "தேவிருக்குச் சாத்தும்படி கொண்டு வந்த பூவை யானையா சிந்துகின்றது! சிவதா சிவதா" என்று சொல்லி ஓலமிட்டார். அதை எதிரே வந்த எறிபத்தநாய னர் கேட்டு, மிகக்கோபித்து, மழுவை எடுத்துக்கொண்டு ஓடி வந்து, சிவகாமியாண்டாரைக் கண்டு வணங்கி, "உமக்கு இந்தத் துன்பத்தைச்செய்த யானை எங்கே போய்விட்டது" என்று கேட்க; அவர் சுவாமிக்குச் சாத்தும்படி நான் கொண்டுவந்த பூவைப்பறித்துச் சிந்திவிட்டு இந்தத் தெரு வழியேதான் போகின்றது" என்ஞர். உடனே எறிபத்த நாயனர் அதிக கோபங்கொண்டு அதிசிக்கிரம் ஓடிப்போய், யானையைச் சம்பித்து, மழுவை வீசி அதன்மேலே பாய்ந் தார். பாயவும் யானை கோபித்து எறிபத்தநாயனர்மேலே திரும்ப; எறிபத்தநாயனர் சற்றும் அஞ்சாமல் அதைத் தடுத்து, அதினுடைய துதிக்கையைத் துணித்தார். அப் பொழுது யானை கதறிக் கீழே விழுந்து புரண்டது. பின்பு எறிபத்தநாயனர் அதற்கு முன்னேயும் குத்துக்கோற்காரர் மூவரும் அதன்மேல் எறியிருந்த பாகர்கள் இருவரும் ஆகிய ஐவரைக்கொன்று நின்ஞர்.

அந்த ஐவரை ஒழிந்த மற்றவர்கள் ஓடிப்போய், புகழ்ச் சோழநாயனருடைய வாயிற்காவலாளரை நோக்கி "பட்ட வர்த்தனயானையையும் பாகர்கள் சிலரையும் சிலர் கொன்று போட்டார்கள். இதை மகாராஜாவுக்கு விண்ணப்பஞ் செய் யுங்கள்" என்று சொன்னர்கள். உடனே வாயிற் காவலாளர் கள் அரசரிடத்திலே போய், அவரை வணங்கி, அந்தச் சமா சாரத்தைத் தெரிவித்தார்கள். அரசர் அதைக் கேட்டமாத் திரத்தே அளவிறந்த கோபங்கொண்டு புறப்பட்டு, குதிரை

யில் ஏறி, சதுரங்கசேனைகளோடும் விரைந்துசென்று, யானையும் பாகரும் இறந்த போர்க்களத்தை அடைந்து, அங்கே நின்ற சிவவேடந்தரித்த எறிபத்தநாயனரை மாத்திரம் கண்டு, யானையைக் கொன்றவர் அவர் என்பதை அறியாதவராகி, "யானையைக் கொன்றவர் யாவர்" என்று கேட்டார். பாகர்கள் சமீபத்திலே போய் வணங்கி நின்று, "மழுவைத் தரித்துக்கொண்டு இவ்விடத்தில் நிற்கின்றவரே யானையைக் கொன்றவர்" என்றார்கள். அப்பொழுது புகழ்ச்சோழநாயனர் "இவர் சிவபத்தராகையால் அந்த யானை குற்றஞ் செய்தாலன்றி அதைக் கொல்லார். அது யாதோ குற்றஞ் செய்ததுபோலும்" என்று நினைந்து, தம்முடைய சேனைகளை அவ்விடத்துக்கு வரவொட்டாமல் நிறுத்தி, குதிரையினின்றும் இறங்கி, "இந்த அடியவர் யானைக்கு எதிரே போன பொழுது அதினாலே இவருக்கு யாதொரு அபாயமும் சம்பவியாமல் இருக்கும்படி பூர்வசன்மத்திலே தவஞ்செய்திருந்தேன். இந்தப் பெரியவர் இவ்வளவு கோபங்கொள்ளும்படி என்ன பிழை உண்டாயிற்றோ" என்று சொல்லி பயந்து, எறிபத்தநாயனர் திருமுன்னே சென்று, அவரை வணங்கி நின்று, "சுவாமீ, தேவரீர் இந்த யானையைக் கொன்றதென்பதைத் தடியேன் முன்னமறிந்திலேன். அது நிற்க, இந்த யானை செய்த குற்றத்தினாலொருட்டி இதனைப் பாகரோடு கொன்றதுமாத்திரம் போதுமா? சொல்லியருளும்" என்றார். எறிபத்தநாயனர் புகழ்ச்சோழநாயனரை நோக்கி, "சிவகாமியாண்டார் சுவாமிக்குச் சாத்தும்படி கொண்டுவந்த பூவை இந்த யானை பறித்துச் சிந்தினதினால், நான் இதைக் கொன்றேன். யானை நீங்குசெய்தபொழுது குத்துக்கோற்காரரும் பாகர்களும் அதை விலக்காதபடியால், அவர்களையுங் கொன்றேன். இதுவே இங்கு நிகழ்ந்த சமாசாரம்" என்றார். புகழ்ச்சோழநாயனர் அதைக் கேட்டுப் பயந்து, எறிபத்தநாயனரை வணங்கி, "சிவனடியாருக்குச் செய்த அபராதத்திற்கு இந்த யானையையும் பாகரையும் குத்துக்கோற்காரரையும் கொன்றது மாத்திரம் போதாது. அடியேனையும் கொல்ல வேண்டும். பெரும்பாவியாகிய சிறியேனைத் தேவரீருடைய திருக்கரத்திலிருக்கின்ற மங்கலம்பொருந்திய மழுவாயுதத்தி

னுலே கொல்வது நீதியன்று" என்று சொல்லி, உடைவாளை உறையினின்றும் உருவி, "இதினுலே கொன்றருளும்" என்று நீட்டினர். எறிபத்தநாயனர் அதைக்கண்டு, அவருடைய அளவிறந்த அன்பைக்குறித்து ஆச்சரியம் அடைந்து, அவர் நீட்டிய வாளை வாங்காமல் சிறிது பொழுது தாழ்த்து நின்று, பின்பு அவர்கையிலே வாள் இருந்தால் தம்மைத் தாமே மாய்த்துக்கொள்வார் என்று நினைந்து அஞ்சி, அதை வாங்கினர். வாங்கிய எறிபத்தநாயனரைப் புகழ்ச்சோழநாயனர் வணங்கி நின்று, "இந்தச் சிவபத்தர் தமியேனை வாளினுலே கொன்று என் குற்றத்தைத் தீர்க்கும்படி பெற்றேன்" என்றார். எறிபத்தநாயனர் அதைக் கேட்டு, மிக அஞ்சி, பட்டவர்த்தனையானையும் பாகரும் இறந்துபோகவும் அதைக்குறித்துச் சிறிதும் தூக்கியாமல் உடைவாளைத் தந்து தம்மையும் கொல்லும்படி கேட்கின்ற புகழ்ச்சோழராசாவுக்குத் தீங்கு நினைத்தேனே" என்று எண்ணி, "முன்னே என்னுயிரைக் கொன்று முடிப்படதே தீர்ப்பு" என்று நினைத்து, அந்த வாளைத் தம்முடைய கழுத்திலே பூட்டி அறுக்கத்தொடங்கினர். அதுகண்ட புகழ்ச்சோழநாயனர் பயந்து நடுநடுங்கி, சிக்கிரம் எதிரே போய், அவருடைய கையையும் வாளையும் பிடித்துங்கொள்ள; அவர் தம்முடைய எண்ணம் நிறைவேறுமையால் வருந்தி நின்றார்.

அப்பொழுது அளவிறந்த அன்பினுலே அவ்விருவருக்கும் உண்டாகிய இத்துக்கத்தை நீக்கும்பொருட்டு, பரமசிவனுடைய திருவருளினுலே, "அடியார்களுடைய தொண்டை உலகத்திலே வெளிப்படுத்தும்பொருட்டு இன்றைக்கு யானை புஷ்பத்தைச் சிதறும்படி பரமசிவன் அருள்செய்தார்" என்று ஓரசரீரிவாக்கு ஆகாயத்திலே எழுந்தது. உடனே யானையும் பாகர்களோடு எழுந்தது. அப்பொழுது எறிபத்தநாயனர் கழுத்திற்பூட்டிய வாளைவிட்டுப் புகழ்ச்சோழநாயனருடைய பாதத்திலே விழுந்து நமஸ்கரித்தார். புகழ்ச்சோழநாயனரும் அந்த வாளை எறிந்துவிட்டு, எறிபத்தநாயனருடைய பாதத்திலே விழுந்து நமஸ்கரித்தார். பின் இருவரும் எழுந்து அசரீரிவாக்கைத் துதித்தார்கள். பரமசிவ

படும் கௌபீனமும் பத்தியிலே சிறிதுங் குறைவில்லாத அமர்நீதிநாயனருடைய அடிமைத்திறமும் பெருமையில் ஒத்திருந்தபடியால், துலாக்கோலின் இரண்டு தட்டுக்களும் ஒத்து நின்றன. அவ்வற்புதத்தைக் கண்டவர்களெல்லாரும் அமர்நீதிநாயனரை வணங்கி ஸ்தோத்திரஞ் செய்தார்கள். தேவர்கள் ஆகாயத்தினின்றும் கற்பகவிருக்ஷங்களின் புஷ்பங்களை மழைபோலப் பொழிந்தார்கள். திருக்கைலாசபதி தாங்கொண்டுவந்த பிரமசாரி வடிவத்தை ஒழித்து; ஆகாயத்திலே பார்வதிதேவியாரோடு இடபாரூடராய்த் தோன்றி, தம்மைத் தரிசித்து அந்தத் தராசுத்தட்டிலேதானே நின்றுகொண்டு ஸ்தோத்திரஞ்செய்கின்ற அமர்நீதிநாயனர் அவர் மனைவியார் புத்திரர் என்னு மூவர்மேலும் திருவருளைக் கஞ்செய்து, "நீங்கள் மூவிரும் நம்முடைய அருளாற் பெற்று, நம்முடைய சந்நிதானத்திலே நம்மை வணங்கிக்கொண்டிருங்கள்" என்று அருளிச்செய்து, மறைந்தருளினார். அமர்நீதிநாயனரும், அவர் மனைவியாரும், புத்திரரும், அக்கடவுளுடைய திருவருளினால் அந்தத் தராசுதானே தேவவிமானமாகி மேலே செல்ல, அவரோடு சிவலோகத்தை அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர்சருக்க மூற்றுப்பெற்றது.

தர்களாகிய அவர் பந்துக்களும் அதைக் கேள்வியுற்று, விரைந்து வந்து, அவருக்கு இரண்டுபக்கத்திலும் சூழ்ந்தார்

போருக்கு அறை கூவிய அதிசூரன் எனதிநாதநாயனரை நோக்கி, "நாம் இருவரும் இதற்குச் சமீபமாகிய வெளியிலே சேனைகளை அணிவகுத்து யுத்தஞ்செய்வோம். யுத்தத்தில் வெற்றிகொள்பவர் எவரோ அவரே வாள்வித்தை பயிற்றும் உரிமையைப் பெறல்வேண்டும்" என்று சொல்ல; எனதிநாதநாயனரும் அதற்கு உடன்பட்டார். இருவரும் தங்கள் தங்கள் சேனைகளோடு அவ்வெளியிலேபோய், கலந்து யுத்தஞ்செய்தார்கள். யுத்தத்திலே அதிசூரன் எனதிநாதநாயனருக்குத் தோற்று, எஞ்சிய சில சேனைகளோடும் புறங்காட்டி யோடினன்.

அன்றிரவு முழுதும் அவன் தன்னுடைய தெளர்பலியத்தை நினைந்து, நித்திரையின்றித் துக்கித்துக்கொண்டிருந்து, எனதிநாதநாயனரை வெல்லுதற்கேற்ற உபாயத்தை ஆலோசித்து, வஞ்சனையினாலே ஜயிக்கும்படி துணிந்து, விடியற்காலத்திலே "நமக்கு உதவியாக நம்முடைய மூவர்களை அழைத்துக் கொல்லாமல் நாம் இருவரும் வெளிநிலத்திலே போர்செய்வோம், வாரும்" என்று எனதிநாதநாயனருக்குத் தெரிவிக்கும்படி ஒருவனை அனுப்பினன். எனதிநாதநாயனர் அதைக் கேட்டு, அதற்கு உடன்பட்டுத் தம்முடைய சுற்றத்தவர்கள் ஒருவரும் அறியாதபடி வாளையும் பரிசையையும் எடுத்துக்கொண்டு, தனியே புறப்பட்டு, அவ்வதிசூரன் குறித்த யுத்தகளத்திலே சென்று, அவனுடைய வரவை எதிர்பார்த்து நின்றார். முன்னொருபொழுதும் விபூதி தரியாத அதிசூரன், விபூதிதரித்தவர்களுக்கு எனதிநாதநாயனர் எவ்விடத்திலும் துன்பஞ்செய்யார் என்பதை அறிந்து, நெற்றியிலே விபூதியைப் பூசி, வாளையும் பரிசையையும் எடுத்துக்கொண்டு, தான் குறித்த யுத்தகளத்திற் சென்று, அங்கு நின்ற எனதிநாதநாயனரைக் கண்டு, அவர் சமீபத்திலே போம்வரைக்கும் நெற்றியைப் பரிசையினால் மறைத்துக்கொண்டு, அவருக்கு முன்னே முடுகி நடந்தான். எனதிநாதநாயனர் அவ்வதிசூரனைக் கொல்லுதற்குச் சமயந்தெரிந்து

கொண்டு அடிபெயர்த்தார். அப்பொழுது அதிசூரன் தன் முகத்தை மறைத்துக்கொண்டிருந்த பரிசையைப் புறத்திலே எடுக்க; ஏனாதிநாதநாயனார் அவனுடைய நெற்றியிலே தீக்கப்பட்ட விபூதியைக் கண்டார். கண்டபொழுதே "ஆ கெட்டேன்! முன் ஒருபொழுதும் இவர் நெற்றியிலே காணுத விபூதியை இன்றைக்குக் கண்டேன். இனி வேறென்ன ஆலோசனை! இவர் பரமசிவனுக்கு அடியவராய்விட்டார். ஆதலால் இவருடைய உள்ளக்குறிப்பின் வழியே நிற்பேன்" என்று திருவுள்ளத்திலே நினைந்து, வாளையும் பரிசையையும் விடக் கருதி, பின்பு "நிராயுதரைக் கொன்ற தோஷம் இவரை அடையாதிருக்கவேண்டும்" என்று எண்ணி, அவைகளை விடாமல் எதிர்ப்பவர்போல நேராக நிற்க; பாதகனாகிய அதிசூரன் அவனைக் கொன்றான். அப்பொழுது பரமசிவன் அவருக்குத்தோன்றி, அவரைத் தம்முடைய திருவடியிலே சேர்த்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

கண்ணப்பநாயனார் புராணம்.

தொண்டைநாட்டிலே, உடுப்பூரிலே, வேடர்களுக்கு அரசனாகிய நாகன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி பெயர் தத்தை. அவ்விருவரும் நெடுங்காலம் புத்திர பாக்கியம் இல்லாமையால் அதிதுக்கங்கொண்டு, குறிஞ்சி நிலத்திற்குக் கடவுளாகிய சுப்பிரமணிய சுவாமியுடைய சந்நிதானத்திலே சேவற்கோழிகளையும் மயில்களையும் விட்டு, அவரை வழிபட்டுவந்தார்கள். சுப்பிரமணிய சுவாமியுடைய திருவருளினாலே தத்தையானவள் கருப்பவதியாகி, ஒரு புத்திரனைப் பெற்றாள். அப்பிள்ளையை நாகன் தன்கையிலே எடுத்தபொழுது திண்ணனைவாயிருந்தபடியால், அதற்குத் திண்ணன் என்று பெயரிட்டான். அத்திண்ணனார் வளர்ந்து, உரிய பருவத்திலே வில்வித்தை கற்கத் தொடங்கி, அதிலே மகா சமர்த்தராயினர். நாகன் வயோதிகனானபடியால், வேட்டைமுயற்சியிலே இளைத்தவனாகி, தன்னதிகாரத்தைத் தன் புத்திரராகிய திண்ணனாருக்குக் கொடுத்தான்.

அந்தத் திண்ணனார் வேட்டைக் கோலங்கொண்டு வேடர்களோடும் வனத்திலே சென்று வேட்டையாடினார். வேட்டையாடும்பொழுது, ஒரு பன்றியானது வேடராலே கட்டப்பட்ட வலையறும்படி எழுந்து, மிகுந்த விசையுடனே ஓடியது. அதைக் கண்ட திண்ணனார் அதைக் கொல்ல நினைந்து, அதைத் தொடர்ந்து பிடிக்கத்தக்க விசையுடனே அது செல்லும் அடிவழியே சென்றார். நாணன் காடன் என்கின்ற இரண்டு வேடர்கண்மாத்திரம் அவருக்குப் பின் ஓடினர்கள். அந்தப்பன்றி நெடுந்தூரம் ஓடிப்போய், இலைப்பினலே மலைச்சாரலிலே ஒருமரத்தின் நிழலிலே நின்றது. திண்ணனார் அதைக் கண்டு அதனைச் சமீபித்து, உடைவாளையுருவி அதனை இருதுண்டாகும்படி குத்தினார். நாணனும் காடனும் இறந்து கிடந்த அந்தப் பன்றியைக் கண்டு, திண்ணனை வியந்து வணங்கி, "நெடுந்தூரம் நடந்து வந்தபடியால் பசி நம்மை மிக வருத்துகின்றது. நாம் இந்தப்பன்றியை நெருப்பிலே காய்ச்சித் தின்று, தண்ணீர் குடித்துக்கொண்டு, வேட்டைக்காட்டுக்கு மெல்லப் போவோம்" என்றார்கள். திண்ணனார் அவர்களை நோக்கி, "இவ்வனத்திலே தண்ணீர் எங்கே இருக்கின்றது" என்று கேட்க; நாணன் "அந்தத் தெக்கமலத்துக்கு அப்புறம் போனால், மலைப்பக்கத்திலே பொன்முகலியாறு ஓடுகின்றது" என்றான். அதைக் கேட்ட திண்ணனார் "இந்தப் பன்றியை எடுத்துக்கொண்டுவாருங்கள். நாம் அங்கேதானே போவோம்" என்று சொல்லி, அதை நோக்கி நடந்து, அரைக்காதவழி தூரத்துக்கு அப்பால் இருக்கின்ற திருக்காளத்திமலையைக்கண்டு, நாணனை நோக்கி, நமக்கு முன்னதாகத் தோன்றுகின்ற மலைக்குப் போவோம்" என்று சொல்ல; நாணன் "இந்தமலையிலே குடுமித்தேவர் இருக்கிறார். நாம் போனால் கும்பிடலாம்" என்றான்.

திண்ணனார் "இந்த மலையைக் கண்டு இதை அணுக அணுக என்மேல் வற்றப்பட்ட பெரிய பாரம் குறைகின்றது போலும். இனி உண்டாவது யாதோ! அறியேன்" என்று சொல்லி, அதிதீவிரமாகிய விருப்பத்தோடும் விரைந்து

சென்று, பொன்முகலியாற்றை அடைந்து, அதன் கரையிலிருக்கின்ற மாந்தழலிலே, கொண்டுவந்த பன்றியை இடுவித்து, காடனைநோக்கி, "தீக்கடைகோல் செய்து நெருப்பை உண்டாக்கு. நாங்கள் இம்மலையிலே ஏறி, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு வந்து சேருவோம்" என்று சொல்லி, நாணை நீடும் அந்தப் பொன்முகலிநதியைக் கடந்து, மலர்ச்சாரலை அடைந்து, மலையிலே நாணன் முன்னே ஏற, தாமும் அளவில்லாத பேராசையோடும் ஏறிச்சென்று, சிவலிங்கம்பெருமான் எழுந்தருளியிருத்தலைக் கண்டார். கண்டமாத்திரத்திலே, பரமசிவனுடைய திருவருட்பார்வையைப் பெற்று, இரும்பானது தரிசனவேதியினாலே உருவம் மாறிப் பொன்மயமானதைப்போல முன்னுள்ள குணங்கள் மாறிச் சிவபெருமானிடத்தில் வைத்த அன்புருவமானார். நெடுங்காலம் பிரிந்திருந்த தன் குழந்தையைக் கண்ட மாதாவைப்போலத் தாழாமல் விரைந்தோடி, தோள்கள் நெகுமுங்கும்படி அக்கடவுளைத் தழுவி, மோந்து முத்தமிட்டார். நெடுநேரம் பெருமூச்செறிந்துகொண்டு நின்று சரீரம் முழுதிலும் ஊரோமாஞ்சங் கொள்ள, இரண்டு கண்ணினின்றும் கண்ணீர் சொரிய, வெயிலிடைப்பட்ட மெழுகுபோல மனங்கசிந்துருக, "இந்தச் சுவாமி அடியேனுக்கு அகப்பட்டது என்ன ஆச்சரியம்" என்று சொல்லி ஆனந்தங்கொண்டார். "ஐயையோ! இங்கம் யானை புலி கரடி முதலிய துட்டமிருகங்கள் சஞ்சரிக்கின்ற காட்டிலே நீர் யாதொரு துணையுமின்றி வேடர்போலத் தனியே இருப்பது ஏது" என்று சொல்லித் தடுத்து, தம்முடைய கையில் இருந்த வில்லுக் கீழே விழுந்ததையும் அறியாதவராகிப் பரவசமடைந்தார். பின் ஒருவாறு தெளிந்து, "இவருடைய முடியிலே நீரை வார்த்துப் பச்சிலையையும் பூவையும் இட்டவர் யாரோ" என்றார். அப்பொழுது சமீபத்திலே நின்ற நாணன் "நான் முற்காலத்திலே உம்முடைய பிதாவுடனே வேட்டையாடிக்கொண்டு இம்மலையிலே வந்தபொழுது, ஒரு பிராமணன் இவர் முடியிலே நீரை வார்த்து, இலையையும் பூவையும் சூட்டி, உணவை ஊட்டி, சில வார்த்தைகள் பேசினதைக் கண்டிருக்கின்றேன். இன்றைக்கும் அவனே இப்படிச் செய்தான்போலும்" என்

ருன். அதைக்கேட்ட திண்ணனார் அந்தச் செய்கைகளே திருக்காளத்தியப்பருக்குப் பிரீதியாகிய செய்கைகளென்று கடைப்பிடித்தார். பின்பு "ஐயோ! இவருக்கு அமுதுசெய் தற்கு இறைச்சி கொடுப்பார் ஒருவரும் இல்லை. இவர் இங்கே தனியே இருக்கின்றார். இறைச்சி கொண்டுவரும் பொருட்டு இவரைப் பிரியவோ மனமில்லை. இதற்கு யாது செய்வேன்? எப்படியும் இறைச்சிகொண்டு வரவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு, சுவாமியைப் பிரிந்து சிறிதுதூரம் போவார். கன்றை விட்டுப் பிரிகின்ற தலையீற்றுப் பசுப் போல அவரிடத்திற்குத் திரும்பி வருவார். கட்டி அணைத் துக்கொள்வார். மீளப்போவார். சிறிதுதூரம் போய் அத்தி யந்த ஆசையோடு சுவாமியைத் திரும்பிப் பார்த்து நிற்பார். "சுவாமீ, நீர் உண்பதற்கு மிருதுவாகிய நல்ல இறைச்சியை நானே குற்றமறத் தெரிந்துகொண்டு வருவேன்" என்பார். நீர் யாதொரு துணையுமின்றி இங்கே தனியே இருக்கிறபடி யால் நான் உம்மைப் பிரியமாட்டேன். உமக்குப் பசி மிகுந்த படியால் இங்கே நிற்கவுமாட்டேன். ஐயையோ! நான் யாது செய்வேன்" என்று சொல்லிக்கொண்டு கண்ணீர் இடை விடாது பொழிய நிற்பார். பின்பு ஒருபிரகாரம் போய் வரத் துணிந்து, வில்லை எடுத்துக்கொண்டு, கையிலுலே கும்பிட்டு, சுவாமி சந்திதானத்தை அருமையாக நீங்கி, மலையினின்றும் இறங்கி, நாணன்பின்னே வர, பிறவிஷயங்களிலே உண்டா கும் ஆசை பரமாணுப்பிரமாணமாயினும் இன்றி, அன்புமய மாகி, பொன்முகலியாற்றைக் கடந்து கரை ஏறி, அங்குள்ள சோலையிலே புகுந்தார்.

அது கண்டு காடன் எதிரே போய்க் கும்பிட்டு, "நெருப்புக் கடைந்து வைத்திருக்கின்றேன். பன்றியின் அவயவங்களெல்லாவற்றையும் உம்முடைய அடையாளப்படி பார்த்துக்கொள்ளும். திரும்பிப் போதற்கு வெகுநேரம் சென்று போயிற்று. நீர் இவ்வளவுநேரமும் தாழ்த்தது என்னை" என்றான். நாணன் அதைக் கேட்டு "இவர் மலை யிலே சுவாமியைக் கண்டு அவரைத் தழுவிக்கொண்டு மரப் பொந்தைப் பற்றிவிடாத உடும்பைப்போல அவரை நீங்க

மாட்டாதவராய் நின்றார். இங்கேயும் அந்தச்சுவாமி உண்ணுதற்கு இறைச்சி கொண்டுபோம்பொருட்டு வந்திருக்கிறார். எங்கள் குலத்தலைமையை விட்டுவிட்டார். அந்தச்சுவாமி வசமாய் விட்டார்'' என்றான். உடனே காடன் ''திண்ணனே, நீர் என்ன செய்தீர்? என்ன பைத்தியங்கொண்டீர்'' என்று சொல்ல; திண்ணனார் அவன் முகத்தைப் பாராமல், பன்றியை நெருப்பிலே வதக்கி, அதினுடைய இனிய தசைகளை அம்பினாலே வெவ்வேறாகக் கிழித்து, அம்பிலே கோத்து நெருப்பிலே காய்ச்சி, பதமாக வெந்தவுடனே, சுவைபார்க்கும்படி அவைகளைத் தம்முடைய வாயிலே இட்டுப் பல்லினாலே மெல்ல மெல்லப் பலமுறை அதுக்கிப் பார்த்து, மிக இனியனவாகிய இறைச்சிகளெல்லாவற்றையும் தேக்கிலையினாலே தைக்கப்பட்ட கல்லியிலேவைத்து, இனியனவல்லாத இறைச்சிகள் எல்லாவற்றையும் புறத்திலே உமிழ்ந்தார். அதைக்கண்ட நாணன் காடன் இருவரும், ''இவர் மிகப் பைத்தியங்கொண்டிருக்கின்றார். பேறுதற்கரிய இறைச்சியைக் காய்ச்சிப் பல்லினால் அதுக்கி வில்லுக உமிழுகின்றார். மற்றை யிறைச்சியைப் புறத்திலே எறிந்து விடுகின்றார். தாம் மிகப் பசியுடையராயிருந்தும், அதனை உண்கின்றாரில்லை. எங்களுக்குத் தருகின்றாருமில்லை. இவர் தெய்வம் பைத்தியங்கொண்டிருக்கின்றார். இதனைத் தீர்க்கத்தக்கவர் ஒன்றையும் அறியோம். தேவராட்டியையும் நாகனையும் அழைத்துக்கொண்டுவந்து இதைத் தீர்க்கவேண்டும். வேட்டைக்காட்டிலே நிற்கின்ற பலவானையும் கொண்டு நாங்கள் போவோம்'' என்று நினைத்துக்கொண்டு போனார்கள்.

திண்ணனார் அவ்விருவரும் போனதை அறியாதவராகி, சிவலிங்கம் கல்லியிலே மாமிசத்தை வைத்துக்கொண்டு, திருமஞ்சனமாட்டும் பொருட்டு ஆற்றில் நீரை வாயினால் முகந்து, பூக்களைக் கொய்து தலையிலிலே செருகி, ஒரு கையிலே வில்லையும் அம்பையும் மற்றக் கையிலே இறைச்சி வைத்த தேக்கிலைக்கல்லியையும் எடுத்துக்கொண்டு, ''ஐயோ! என் உயிர்த்துணையாகிய சுவாமி மிருந்த பசியினால் இன்னதாரோ'' என்று நினைந்து இரங்கிப் பதைபதைத்து ஏங்கி,

தன் குஞ்சுக்கு இரை அருத்துதற்குத் தாழாதோடுகின்ற பறவைபோல மரீஞைதியும் பின்னிட ஓடிப்போய்க் கடவுளை அடைந்தார். அடைந்து, அவருடைய திருமுடிமேல் இருந்த பூக்களைத் தம்முடைய காற்செருப்பால் மாற்றி, தம்முடைய வாயில் இருக்கின்ற திருமஞ்சனநீரைத் தம்முடைய மனசில் உள்ள அன்பை உமிழ்பவர்போலத் திருமுடியின்மேல் உமிழ்ந்து, தம்முடைய தலையில் இருந்த பூக்களை எடுத்துத் திருமுடியின்மேலே சாத்தி, தேக்கிலையிலே படைத்த இறைச்சியைத் திருமுன்னே வைத்து, "சுவாமீ, கொழுமையாகிய இறைச்சிக ளெல்லாவற்றையும் தெரிந்து, அம்பினாலே கோத்து நெருப்பிலே பதத்தோடு காய்ச்சிப் பல்லினால் அதுக்கி நாவினாலே சுவைபார்த்துப் படைத்தேன். இவ் விறைச்சி மிக நன்றாயிருக்கின்றது. எம்பெருமானே, இதை அமுது செய்தருளும்" என்று சொல்லி, வணங்கித்தார். பின்பு சூரியன் அஸ்தமனமாயிற்று. நிண்ணனார் அவ்விட மிலே துஷ்டமிருகங்கள் சுவாமிக்குத் தீங்குசெய்தல் கூடு மென்று அஞ்சி, அம்பு தொடுக்கப்பட்ட வில்லைக் கையிலே பிடித்துக்கொண்டு, மூன்றும் கண்ணிமையாமல் சுவாமிக்குப் பக்கத்திலே விழித்துக்கொண்டு நின்றார். அப்படி நின்ற நிண்ணனார் வைகறையிலே சுவாமிக்கு இறைச்சி கொண்டு வரும் பொருட்டு, வேட்டையாடுதற்கு மலைச்சாரலுக்குப் போனார். அது நிற்க.

அறிவு அருள் அடக்கம் தவம் சிவபத்தி முதலியவை களெல்லாம் திரண்டொருவடிவம் எடுத்தாற்போன்றவரும், கல்வினை தீவினைகளால் வரும் ஆக்கக்கேடுகளிலே சமபுத்தி பண்ணுகின்றவரும், யாவரையும் மோகிப்பிக்கவல்ல மகா சௌந்தரியமுள்ள பெண்கள் வலிய வந்து தம்மைத் தழுவினும் பரமாணுப்பரிமாணமாயினும் சித்தசலனமில்லாமல் அவர் களைத் தாயென மதிக்கும் மகாமுனிவரும், திருக்காளத்தி யப்பரைத் தினந்தோறும் சைவாகமவிதிப்படி அருச்சிப்ப வருமாகிய சிவகோசரியார் என்பவர், பிராம முகூர்த்தத் திலே எழுந்து போய், பொன்முகலியாற்றிலே ஸ்நானம் பண்ணி, சுவாமியை அருச்சிக்கும் பொருட்டுத் திருமஞ்சன

மும் பத்தி புஷ்பமும் எடுத்து, சிவநாமத்தை உச்சரித்துக் கொண்டு, சுவாமி சந்நிதானத்திலே போனார். போம் பொழுது, அங்கே வெந்த இறைச்சியும் எலும்பும் கிடக்கக் கண்டு, நடுநடுங்கி, குதித்துப் பக்கத்திலே ஓடினார். ஓடி நின்று, "தேவாதிதேவரே, தேவரீருடைய சந்நிதானத்தை அடைதற்கு அருசாத துஷ்டராகிய வேட்டுவப்புலையர்களே இந்த அநுசிதத்தைச் செய்தார்கள்போலும். அவர்கள் இப் படிச் செய்தபோதற்குத் தேவரீர் திருவுளம் இசைந்தீரோ" என்று சொல்லி, பதறி அழுது விழுந்து புரண்டார். பின்பு "சுவாமிக்கு அருச்சனை செய்யாமல் தாழ்த்தலால் பயன் யாது" என்று நினைந்து, அங்கே கிடந்த இறைச்சியையும் எலும்பையும் கல்லையும் திருவலகினால் மாற்றி, சம்புரோ க்ஷணஞ் செய்து, மீளப் பொன்முகலியாற்றிலே ஸ்நானஞ் செய்து திரும்பி வந்து, வேதமந்திரத்தினாலே சுத்திசெய்து, உருத்திரசமக நமகத்தினால் சுவாமிக்கு அபிஷேகம்பண்ணி, பத்திரபுஷ்பங்களால் அருச்சனை செய்தார். செய்து, திரு முன்னே நின்று, இரண்டு கைகளையும் சிரசின்மேலே குவித்து, இரண்டு கண்களினின்றும் ஆனந்தபாஷ்பஞ்சொரிய, திரு மேனியெங்கும் மயிர்பொடிப்ப, அக்கினியில் அகப்பட்ட மெழுகுபோல மனம் மிக உருகி இளக, நாத்தழும்ப, கீத நடையுள்ளதாகிய சாமவேதம் பாடினார். பாடியபின் பல முறை பிரதக்ஷிணஞ்செய்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, அருமையாக நீங்கிப்போய், தம்போவனத்தை அடைந்தார். அது நிற்க.

முன்னே வேட்டையாடுதற்கு மலைச்சாரலிலே சென்ற திண்ணனார் பன்றி மான் கரி மரை கடமை என்னு மிருகங் களைக் கொன்று, அவைகளின் இறைச்சியை முன்போலப் பக்குவப்படுத்தி, தேக்கிலையில் வைத்து, கோற்றேனைப் பிழிந்து அதனோடு கலந்து, முன்போலத் திருமஞ்சனமும் புஷ்பமுங் கொண்டு, மலையிலே ஏறி, சுவாமி சந்நிதானத்தை அடைந்து, முன்போலப் பூசைசெய்து, இறைச்சிக் கல்லை யைத் திருமுன்னே வைத்து, "இந்த இறைச்சி முன் கொண்டு வந்ததுபோலன்று. இவை பன்றி மான் கரி மரை கடமை என்கின்ற மிருகங்களின் இறைச்சி. இவைகளை யடியேனும்

சுவைத்துப் பார்த்திருக்கின்றேன். தேனும் கலந்திருக்கின்றது. தித்திக்கும்" என்று சொல்லி, உண்பித்து, அவருக்குப் பக்கத்திலே பிரியாமல் நின்றார். அப்பொழுது முதலுண்ட போன ஞானனும் காடனும் ஆகிய இருவராலும் தன் புத்திரராகிய திண்ணனுருடைய செய்கைகளை அறிந்த நாகன் ஊனனும் உறக்கமுறின்றித் தேவாட்டியையுங் கொண்டு வந்து, திண்ணனாரைப் பற்பல நிறத்திலே வசிக்கவும், அவர் வசமாகாமையைக் கண்டு, சிந்தை நொந்து, "இனி யாதுசெய்வோம்" என்று சொல்லிக்கொண்டு, அவரை விட்டுத் திரும்பிப் போய்விட்டான்.

சிவபெருமானேனும் ஏற்றுமைப்பட்டி அவ்விறைபணியின் வழுவாது நிற்குந் திண்ணனார், பகற்காலத்திலே மிருகங்களைக் கொன்று சுவாமிக்கு இறைச்சியை ஊட்டியும், இராக்காலத்திலே நித்திரைசெய்யாமல் சுவாமிக்கு அருகே நின்றும், இப்படித் தொண்டுசெய்து வந்தார். சிவகோசரியாரும் தினந்தோறும் வந்து, சந்நிதானத்திலே இறைச்சி கிடத்தலைக் கண்டு, இரங்கிச் சுத்திசெய்து, சைவாகமவிதிப்படி அருச்சித்துக்கொண்டு, "இந்த அநுசிதம் நிகழாமல் அருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்து வந்தார். திருக்காளத்தியப்பர் அந்தச் சிவகோசரியாருடைய மனத்துயரத்தை நீக்கும்பொருட்டு, ஐந்தாநாள் இராத்திரியில் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே, அவனை வேடுவன் என்று நீ நினையாதே. அவனுடைய செய்கைகளைச் சொல்லவோம், கேள். அவனுடைய உருவமுழுதும் நம்மேல் வைக்கப்பட்ட அன்புருவமே. அவனுடைய அறிவுமுழுதும் நம்மை அறியும் அறிவே. அவனுடைய செய்கைகள் எல்லாம் நமக்கு இதமாகிய செய்கைகளே. நம்முடைய முடியின்மேல் உன்னாலே சாத்தப்பட்ட பூக்களை நீக்கும்படி அவன் வைக்கின்ற செருப்படி நம்முடைய குமாரனாகிய சுப்பிரமணியனுடைய காலினும்பார்க்க நமக்கு மிகுந்த ஆனந்தத்தைத் தருகின்றது. அவன் தன் வாயினால் நம்மேல் உமிழ்கின்ற ஜலமானது, அன்புமயமாகிய அவனுடைய தேகமென்னும் சொர்க்கத்தினின்றும் ஒழுகுகின்றபடியால், கங்கை

முதலாகிய புண்ணியதீர்த்தங்களைப் பார்க்கினும் நமக்குப் பரிசுத்தமுள்ளதாய் இருக்கின்றது. அவன் தன்னுடைய தலை மயிரிலே செருகிக்கொண்டு வந்து நமக்குச் சாத்துகின்ற புஷ்பங்கள், அவனுடைய மெய்யன்பானது விரிந்து விழுதல் போல விழுதலால், பிரம விஷ்ணு முதலாகிய தேவர்கள் நமக்குச் சாத்தும் புஷ்பங்களும் அவைகளுக்குச் சற்றேனும் சமானமாகாவாம். அவன் நமக்குப் படைக்கின்ற மாமிசம், பதமாக வெந்திருக்கின்றதோ என்று அன்பினால் உருகி இளகிய மனசினோடும் மென்று சுவைபார்த்துப் படைக்கப்பட்ட படியால், வேதவிதிப்படி யாகம் செய்கின்றவர்கள் தரும் அவியிலும் பார்க்க நமக்கு அதிக மதுரமாயிருக்கின்றது. அவன் நம்முடைய சந்நிதானத்தில் நின்று சொல்லும் சொற்கள், நிஷ்களங்கமாகிய அன்பினோடும் நம்மையன்றி மற்றொருவரையும் அறியாது வெளிப்படுதலால், வேதங்களும் மகாமுனிவர்கள் மகிழ்ந்து செய்கின்ற ஸ்தோத்திரங்களும் ஆகிய எல்லாவற்றிலும் பார்க்க நமக்கு மிக இனியனவாயிருக்கின்றன. அவனுடைய அன்பினால் ஆகிய செய்கைகளை உனக்குக் காட்டுவோம், நீ நாளைக்கு நமக்குப் பிற்பக்கத்திலே ஒளித்திருந்து பார்" என்று சொல்லி மறைந்தருளினர். சிவகோசரியார் சொப்பனவுலகத்தையும் நீங்கிச் சாக்கிராவத்தையை அடைந்து, பரமசிவன் தமக்கு அருளிச்செய்த திருவார்த்தைகளை நினைந்து நினைந்து, "அறியாமையே நிறைந்துள்ள இழிவாகிய வேடுவர் குலத்திலே பிறந்த அவருக்கு வேதாகமாதி சாஸ்திரங்களிலே மகா பாண்டித்தியமுடைய மாமுனிவர்கள் தேவர்களிடத்திலும் காணப்படாத உயர்வொப்பில்லாத இவ்வளவு பேரன்பு வந்தது, ஐயையோ! எவ்வளவு அருமை அருமை" என்று ஆச்சரியமும், "இப்படிப்பட்ட பேரன்பர் செய்த அன்பின் செய்கைகளைப் புழுத்த நாயினும் கடையனாகிய பாவியேன் அநுசிதம் என்று நினைந்தேனே! ஐயையோ! இது என்ன கொடுமை" என்று அச்சமும் அடைந்து, வைகறையிலே போய்ப் பொன்முகலியாற்றிலே ஸ்நானம்பண்ணி மகியில் வந்து, முன்போலச் சுவாமியை அருச்சித்து, அவருக்குப் பிற்பக்கத்திலே ஒளித்திருந்தார்.

சிவகோசரியார் வருதற்கு முன்னே வேட்டையாடுதற்குச் சென்ற திண்ணனார் வேட்டையாடி, இறைச்சியும் திருமஞ்சனமும் புஷ்பமும் முன்போல அமைத்துக்கொண்டு, அதிசீக்கிரந் திரும்பினார். திரும்பி வரும்பொழுது, பலபல துர்ச்சகுனங்களைக் கண்டு, "இந்தச் சகுனங்களெல்லாம் உதிரங் காட்டுகின்றன. ஐ கெட்டேன்! என் கண்மணிபோன்ற சுவாமிக்கு என்ன அபாயம் சம்பவித்ததோ! அறியேனே" என்று மனங்கலங்கி, அதிசீக்கிரம் நடந்தார். அடியார்களுடைய பத்திவலையில் அகப்படுகின்ற அருட்கடலாகிய பரமசிவன் திண்ணனாருடைய அன்புமுழுமையையும் சிவகோசரியாருக்குக் காட்டும்பொருட்டுத் திருவுளங்கொண்டு, தம்முடைய வலக்கண்ணினின்றும் இரத்தம் சொரியப்பண்ணினார். திண்ணனார் தூரத்திலே கண்டு விரைந்தோடி வந்தார். வந்தவுடனே, இரத்தஞ்சொரிதலைக் கண்டார். காண்டலும், வாயிலுள்ள திருமஞ்சனம் சிந்த, கையில் இருந்த இறைச்சி சிதற, அம்பும் வில்லும் விழ, தலைமயிரிலே செருகப்பட்ட புஷ்பங்கள் அலைந்து சோர, ஆர்க்கின்ற கயிறு அற்றபொழுது வீழ்கின்ற நாடகப்பாவைபோலச் சிக்கென்று பதைபதைத்து நிலத்திலே விழுந்தார். விழுந்தவர் எழுந்து போய், இரத்தத்தைப் பலமுறை கையினாலே துடைக்க; அது காலுதல் சுவாமையைக் கண்டு, அதற்கு இன்னது செய்வோம் என்று அறியாதவராகி, பெருமூச்செறிந்து, திரும்பிப்போய் விழுந்தார். நெடும்பொழுது உள்ளுயிர்த்தலின்றி இறந்தவர்கள் போலக் கிடந்தார். பின் ஒருவாறு தெளிந்து, "இப்படிச் செய்தவர்கள் யாவர்" என்று சொல்லிக்கொண்டு எழுந்தார். எங்கும் பார்த்தார். வில்லையெடுத்து அம்புகளைத் தெரிந்துகொண்டு, "என்னுடைய சுவாமிக்கு இத்தீங்கு வந்தது எனக்குப் பகைவர்களாகிய வேடுவர்களாலோ? இந்த வனத்திற் சஞ்சரிக்கின்ற துஷ்டமிருகங்களாலோ? யாதென்று தெரியவில்லையே" என்று சொல்லி, மலைப்பக்கங்களிலே நெடுந்தூரமட்டும் தேடிப்போனார். வேடர்களையேனும் விலங்குகளையேனும் காணாதவராகி, திரும்பிவந்து, குறைவில்லாத தன் பத்தினிலே மனம் விழுங்கப்பட்டு, சுவாமியைக் கட்டிக்கொண்டு, இடிபேறுண்ட சிங்கேறுபோல வாய்விட்டுக் கண்

ணீர்சொரிய அழுதார். "என்னுயிரினும் சிறந்தவரும் அடைந்தவர்கள் அன்பினுலே பிரியமாட்டாதவரும் ஆகிய சுவாமிக்கு எப்படி இந்தத் துன்பம் சம்பவித்ததோ! இதைத்தீர்ப்பதற்கு மருந்தொன்றை அறியேனே! ஐயையோ! இதற்கு என்னசெய்வேன்" என்றார். "இந்த உதிரம் என்னசெய்தால் நிற்குமோ? இந்தத் தீங்கைச் செய்தவர்களைக் காணேன். வேடர்கள் அம்பினுலாகிய புண்ணைத்தீர்க்கின்ற பச்சிலை மருந்துகளை மலையடிவாரத்திலே பிடுங்கிக்கொண்டு வருவேன்" என்று சொல்லிக் கொண்டு போனர். தன்னினத்தைப் பிரிந்துவந்த இடபம் போலச் சுவாமியைப் பிரிந்து வந்ததினல் வெருட்கொண்டு, வனங்களெங்குந் திரிந்து, பலவகையாகிய பச்சிலைகளைப் பிடுங்கிக்கொண்டு, சுவாமிமேல் வைத்த மனசிலும் பார்க்க விரைந்து வந்து, அம்மருந்துகளைப் பிழிந்து அவர் கண்ணிலே வார்த்தார். அதினல் அக்கண்ணிலிரத்தம் தடைப்படாமையைக் கண்டு, ஆவி சோர்ந்து, "இனி நான் இதற்கு என்ன செய்வேன்" என்று ஆலோசித்துக்கொண்டு நின்றார். நிற்க, "ஊனுக்கு ஊனிடல் வேண்டும்" என்னும் பழமொழி அவருடைய ஆத்தியானத்திலே வந்தது. உடனே, "இனி என்னுடைய கண்ணை அம்பினுலே இடந்து அப்பினல் சுவாமியுடைய கண்ணினின்று பாயும் இரத்தம் தடைப்படும்" என்று நிச்சயித்துக்கொண்டு, மனமகிழ்ச்சியோடும் திருமுன்னே இருந்து, அம்பை யெடுத்துத் தம்முடைய கண்ணைத் தோண்டிச் சுவாமியுடைய கண்ணிலே அப்பினர். அப்பினமாத்திரத்திலே இரத்தம் தடைப்பட்டதைக் கண்டார். உடனே அடங்குதற்கரிய சந்தோஷமாகிய கடலிலே அமிழ்ந்திக் குதித்துப் பாய்ந்தார். மகிழ்போலப் பருத்த புயங்களிலே கைகளினுலே கொட்டி ஆரவாரித்தார், கூத்தாடினர். "நான் செய்த செய்கை நன்று நன்று" என்றுசொல்லி வியந்து, அத்தியந்த ஆனந்தத்தினுலே உன்மத்தர்போலாயினர். இப்படிச் சந்தோஷசாகரத்திலே உலாவும்பொழுது, திருக்காளத்திநாதர் அந்தத் திண்ணனுருடைய பேரன்பைச் சிவகோசரியாருக்குப் பின்னும் காட்டுதற்குத் திருவுளங்கொண்டு, தம்முடைய மற்றையிடக்கண்ணிலும் இரத்தஞ்சொரியப் பண்ணினர். அது திண்ணனுருடைய அளவில்லாத சந்தோஷ

ரூகாரத்தை உறிஞ்சியது. அக்கினிநிரயத்துள்ளே விழுந்து நெடுங்காலம் துன்பமுற்று அதனை நீங்கிச் சுவர்க்கத்தை அடைந்து இன்பமுற்றேறெனருவன் பின்னும் அந்நிரயத்திலே வீழ்ந்தாற்போல, திண்ணனார் உருவகை மாறி, கரையில்லாத துன்பக்கடலிலே அழுந்தி ஏங்கி, பின்னர் ஒருவாறு தெளிந்து, "இதற்கு நான் அஞ்சேன். மருந்து கைகண்டு கொண்டேன். இன்னும் ஒரு கண்ணிருக்கின்றதே! அதைத் தோண்டி அப்பி இந்நோயைத் தீர்ப்பேன்" என்று துணிந்து, தம்முடைய கண்ணைத் தோண்டியபொழுது சுவாமியுடைய கண் இவ்விடத்திலிருக்கின்றது என்று தெரியும்பொருட்டு, ஒரு செருப்புக்காலை அவர் கண்ணின் அருகிலே ஊன்றிக் கொண்டு, பின்னே மனசிலே பூர்த்தியாகிய விருப்பத்தோடும் தம்முடைய கண்ணைத் தோண்டும்படி அம்பை வைத்தார். தயாநிதியாகிய கடவுள் அதைச் சகிக்கலாற்றுதவராகி, வேதாகமங்கள் தோன்றிய தம்முடைய அருமைத்திருவாய் மலரைத் திறந்து, "நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப என்னன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப" என்று அருளிச்செய்து, அவருடைய கண்ணைத் தோண்டும் கையைத் தமது வியத்திஸ்தானமாகிய இலிங்கத்திற்றோன்றிய திருக்காத்தினாலே பிடித்துக்கொண்டார். உடனே பிரமாதி தேவர்கள் சமஸ்தரும் வேதகோஷத்தோடும் நிலம் புதையக் கற்பகப்பூமாரி பெய்தார்கள். மகாஞானியாகிய சிவகோசரியார் இந்தச் சமாசாரம் முழுதையும் கண்டு, அந்தியந்த ஆச்சரிய மடைந்து, சுவாமியை வணங்கினார். அற்றை நாள் முதலாகப் பெரியோர்கள் சுவாமி சொல்லியபடியே அவருக்குக் கண்ணப்பர் என்னும் பெயரையே வழங்குகிறார்கள். நெடுங்காலமாக உஷ்ணமாகிய அக்கினி மத்தியில் நின்று ஜம்புலன் வழியே செல்லாதபடி மனசை ஒடுக்கி அருந்தவஞ் செய்கின்றவர்களுக்கும் கிட்டாத பரம்பொருளாகிய கடவுள், ஆறு நாளுக்குள்ளே பெருகிய அன்புமேலீட்டினாலே, தம்முடைய திருநயனத்தில் இரத்தத்தைக் கண்டு அஞ்சித் தம்முடைய

கண்ணை இடந்து அத்திருநயனத்தில் அப்புந் திண்ணனு ருடைய கையைத் தமது அருமைத்திருக்கரத்தினாலே பிடித் துக்கொண்டு, "நிஷ்களங்க பத்தியையுடைய கண்ணப்பா, நீ நமக்கு வலப்பக்கத்திலே நில்" என்று திருவருள்புரிந்தார். இதைப் பார்க்கிலும் பெறவேண்டிய பெரும்பேறு யாது?

திருச்சிற்றம்பலம்.

குங்குலியக்கலயநாயனர் புராணம்.

சோழமண்டலத்திலே, திருக்கடவூரிலே, பிராமண குலத்திலே, சிவபத்தியிற்சிறந்த கலயர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் அந்தத் திருப்பதியிலே திருவீரட்டான மென்னுந் திருக்கோயிலில் வீற்றிருக்கின்ற பரமசிவனுக்குத் தினந்தோறும் குங்குலியத்தூபம் இட்டுவந்தார். இட்டுவருங் காலத்திலே, பரமசிவனுடைய திருவருளினாலே அவருக்கு வறுமையுண்டாயிற்று. உண்டாகியும், அவர் தாஞ்செய்யுந் திருப்பணியைத் தவறாமல் நடத்திவந்தார். வறுமை மிகுதி யினாலே நிலங்களோ விற்றும், அடிமைகளோ விற்றும், செல வழித்தார். இப்படி எல்லாம் செலவானமையால், அவ ருடைய மக்களும் சுற்றத்தாரும் வருந்தினர்கள்.

ஒருநாள் அவர் மனைவியார், அரிசி முதலியன வாங்கு தற்கு ஒன்றும் இல்லாமையால் இரண்டுநாளாகப் பட்டினி யிருந்து வருந்துகின்ற புதல்வரையும் சுற்றத்தாரையும் பார் த்து இரங்கி, தம்முடைய தாலியை அக்கணவர்கையிலே கொடுத்து, "இதற்கு நெல்வாங்கிக்கொண்டுவாரும்" என்றார். குங்குலியக்கலயநாயனர் அந்தத் தாலியை வாங்கிக்கொண்டு, கொல்லுக் கொள்ளும்படி போனார். போம்பொழுது, வழி யிலே ஒரு வணிகன் குங்குலியப்பொதி கொண்டு தமக்கு எதிரே வரக்கண்டு, மனமகிழ்ந்து, "சுவாமிக்குத் தூபம் இடும்படி குங்குலியத்தைப் பெற்றுக்கொண்டேன். இனி

லும் பார்க்க மேலாகிய பேறு உண்டோ'' என்று சொல்லி, தம்முடைய கையில் இருந்த தாலியைக் கொடுத்து, அந்தக் குங்குலியப்பொதியை வாங்கிக்கொண்டு, ஆலயத்துக்கு விரைந்து சென்று, அங்குள்ள பண்டாரத்திலே அக்குங்குலியத்தை வைத்துவிட்டு, சுவாமியைத் துதித்துக்கொண்டு அங்கே இருந்தார். அவர் அங்கே இருக்க, வீட்டிலே அவர் மனைவியாரும் மக்களும் பசியினாலே வாடி, அன்றிராத்திரியிலே இளைப்புற்று நித்திரை செய்யும்பொழுது: கருணைகூர்ந்த கடவுள் அவ்வீடெழுதுகிலும், பொற்குவியலும் நெற்குவியலும் அரிசிக்குவியலும் பிறவளங்களும் நிறைந்து கிடக்கும்படி அருள்செய்து, அம்மனைவியாருக்குச் சொப்பனத்திலே தோன்றி, அருக்கி கந்து செய்தார். உடனே அவர் விழித்தெழுந்து, அங்கே இருக்கின்ற செல்வத்தைக் கண்டு, பரமசிவனுடைய திருவருளை வியந்து ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு, தம்முடைய நாயகராகிய குங்குலியக்கலயநாயனாருக்குத் திருவமுது பாகம்பண்ணப் பிரயத்தனஞ் செய்தார். திருபாதியாகிய பரமசிவன் குங்குலியக்கலயநாயனாருக்குத் தோன்றி, ''நீ மிகப்பசிகொண்டிருக்கின்றாய். உன் வீட்டுக்குப் போய்ப் பாலும் அன்னமும் உண்டு துன்பத்தை ஒழி'' என்று திருவாய்மலர்ந்தருளினார். குங்குலியக்கலயநாயனார் அதைக் கேட்டுக் கைகூப்பி வணங்கி, அவருடைய ஆஞ்ஞையை மறுத்து இருந்தற்கு அஞ்சி, அதனைச் சிரசின் மேலே வகித்து, திருக்கோயிலினின்றும் நீங்கிப் போய்த் தம்முடைய வீட்டினுள்ளே புகுந்தார். புகுந்த நாயனார் அவ்வீடெங்கும் நிறைந்திருக்கின்ற நிதிக்குவைகளைக் கண்டு, மனைவியாரை நோக்கி, ''இந்தச் சம்பத்துக்கள் எல்லாம் எப்படி வந்தன என்று கேட்க; அவர் எம்பெருமானுடைய திருவருளினால் வந்தன'' என்றார். அது கேட்ட நாயனார் ''ஒன்றுக்கும் பற்றுத சிறியேனையும் ஆட்கொள்ளும் பொருட்டு நமது கடவுளுடைய கருணை இருந்தபடி இப்படியோ'' என்று கடவுளை வணங்கினார். மனைவியார் விரைவிலே கண

வரையும் சிவனடியார்களையும் விதிப்படி தூபதீபங்களால் ஆராதனை செய்து, திருவமுது செய்வித்தார். குங்குலியக் கலயநாயனர் பரமசிவனுடைய திருவருளினாலே பெருஞ் செல்வமுடையவராகி, சிவனடியார்களைத் தயிர் நெய் பாலோடு திருவமுது செய்வித்து வந்தார்.

இப்படி நடக்குங் காலத்திலே, திருப்பனந்தாளென்னும் திருப்பதியில் வீற்றிருக்கின்ற சிவலிங்கம் சாய்ந்திருக்கின்ற மையால், அதனை நிமிரப்பண்ணிக் கும்பிடுதற்கு விரும்பி, இராஜாவானவர் தம்முடைய யானைகளெல்லாவற்றையும் ஏட்டி இழுப்பித்தார். இழுப்பித்தும், அது நிமிராமையால் அகோராத்திரம் நீராத கவலையுற்றிருந்தார். குங்குலியக் கலயநாயனர் அந்தச் சமாசாரத்தைக் கேள்வியுற்று, சுவாமி தரிசனஞ் செய்யும்பொருட்டுத் திருப்பனந்தாளை அடைந்தார். அங்கே சிவலிங்கத்தை நிமிரப்பண்ணவேண்டுமென்கின்ற ஆசையால் இராஜா வருத்தமுறுதலையும், சேனைகள் யானைகளோடு சிவலிங்கத்தை இழுத்துத் தங்கள் கருத்து முற்றுமையால் பூமியின்மேலே வலி குறைந்து விழுந்து இளைத்தலையும் கண்டு, மனதிலே துன்பங்கொண்டு, "அடியேனும் இளைப்பைத் தருகின்ற இந்தத் திருப்பணியைச் செய்ய வேண்டும்" என்று விரும்பி, சிவலிங்கத்திலே கட்டப்பட்ட கயிற்றைத் தம்முடைய கழுத்திலே கட்டிக்கொண்டு இழுத்தார். உடனே சிவலிங்கம் நிமிர்ந்தது. அப்படி நிமிர்ந்தது அவர் புறத்திலே கட்டி இழுத்த அக்கயிற்றினாலோ, அன்று; அகத்திலே கட்டி இழுத்த அன்புக்கயிற்றினாலேயாம். அது கண்டு, இராஜாவும் சேனைகளும் மிகுந்த களிப்பையடைந்தார்கள். இராஜா குங்குலியக்கலயநாயனரை நமஸ்கரித்து விபரீதஸ்தோத்திரம் பண்ணி, சுவாமிக்கு வேண்டிய திருப்பணிகள் பலவற்றை நிறைவேற்றிக்கொண்டு, தம்முடைய நகரத்துக்குப் போய்விட்டார்.

குங்குலியக்கலயநாயனர் சிலகாள் சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு அங்கே இருந்து, பின் தமது வாசஸ்தானமாகிய திருக்கடவூருக்குப் போய், தாஞ்செய்யுந் திருப்பணியைத் செய்துகொண்டிருந்தார். இருக்குநாளிலே, அந்த ஸ்தலத்

திற்கு எழுந்தருளிவந்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரையும் திருநாவுக்கரசுநாயனாரையும் எதிர்கொண்டு, தமது வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய், திருவமுது செய்வித்து, அவர்களுடைய திருவருளையும் பரமசிவனுடைய திருவருளையும் பெற்றார். பின்னுஞ் சிலகாலம் அன்பு மேன்மேலும் பெருகப் பல திருப்பணிகளையும் செய்துகொண்டிருந்து, சிவபதமடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

மானக்கஞ்சாறநாயனார் புராணம்.

கஞ்சாறூரிலே, வேளாளர்குலத்திலே, அரசர்களிடத்திற் பரம்பரையாகச் சேனாபதி உத்தியோகத்தில் இருக்கின்ற குடியிலே, சிவபத்தி அடியார்பத்திகளிற் சிறந்த மானக்கஞ்சாறநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிலகாலம் பிள்ளைப்பேறின்மையால் அதிதுக்கங்கொண்டு, பிள்ளைப்பேற்றின் பொருட்டுப் பரமசிவனை உபாசனை பண்ணி, அவருடைய திருவருளினால் ஒரு பெண்குழந்தையைப்பெற்றார். அந்தப்பெண் வளர்ந்து மணப்பருவம் அடைய; ஏயர்கோன் கலிக்காமநாயனார் சில முதியோர்களை மானக்கஞ்சாறநாயனிடத்தில் அனுப்பி, அந்தப்பெண்ணைத் தமக்கு விவாகஞ் செய்து தரும்படி பேசுவித்து, அவர் அதற்கு உடன்பட்டமையை அறிந்து, சோதிடர்களாலே நிச்சயிக்கப்பட்ட சுபதினத்திலே மணக்கோலங்கொண்டு, சுற்றத்தார்களோடும் கஞ்சாறூருக்குச் செல்லும்படி பிரஸ்தானமானார்.

அவர் கஞ்சாறூருக்கு வருதற்குமுன்னே, கருணைநிதியாகிய பரமசிவன் ஒரு மகாவிரதிவடிவங்கொண்டு, மானக்கஞ்சாறநாயனார் வீட்டுக்குச் சென்றார். அந்நாயனார் அவரைக் கண்டு எதிர்கொண்டு, உபசாரவார்த்தைகளைச் சொல்லி, வணங்கினார். மகாவிரதியார் அந்நாயனரைநோக்கி, "இங்கே என்ன மங்கலநித்தியம் நடக்கப்போகின்றது" என்றருளினார்; நாயனார் "அடியேனுடைய புத்திரியின் விவாகம் நடக்கப்போகின்றது" என்றார். மகாவிரதியார் "உமக்குச்

சோபனம் உண்டாகுக" என்று ஆசீர்வதித்தார். நாயனார் உள்ளே போய், மணக்கோலங் கொண்டிருந்த தமது புத்திரியை அழைத்துவந்து, மகாவிரதியாரை வணங்கும்படி செய்தார். மகாவிரதியார் தம்மை வணங்கி எழுந்த பெண்ணினுடைய கூந்தலைப் பார்த்து, மானக்கஞ்சாறநாயனாரை நோக்கி, "இந்தப் பெண்ணினுடைய தலைமயிர் நமக்குப் பஞ்சவடிக்கு * உதவும்" என்றார். உடனே நாயனார் தம் முடைய உடைவாளை உருவி, "இவர் இது கேட்டதற்குச் சிறியேன் என்ன புண்ணியஞ் செய்தேனோ" என்று, அந்தப் பெண்ணினுடைய கூந்தலை அடியிலே அரிந்து, அம்மகாவிரதியார்கையிலே கொடுத்தார்; கடவுள் தாங்கொண்டுவந்த மகாவிரதிவடிவத்தை ஒழித்து, ஆகாயத்திலே உமாதேவியாரோடும் இடபாரூடராய்த் தோன்றினார். அது கண்டு, மானக்கஞ்சாறநாயனார் பரவசமாகி, அடியற்ற மரம்போலவிழுந்து நமஸ்கரித்து எழுந்து, அஞ்சலியஸ்தராகி நின்றார். சிவபெருமான் அம்மானக்கஞ்சாறநாயனாருக்குத் தம்முடைய சந்நிதானத்திலே தம்முடைய பெருங்கருணைத்திறத்தைப் புகழ்ந்துகொண்டிருக்கும் பெரும்பேற்றைக் கொடுத்து அந்தர்த்தானமாயினார்.

கலிக்காமநாயனார் கஞ்சாறபுரிலே வந்துசேர்ந்து, அங்கே நிகழ்ந்த சமாசாரத்தைக் கேள்வியுற்று, மனமகிழ்ந்து, திருவருளைத் துதித்து, "முன்டிதஸ்திரியை விவாகம்பண்ணுதல் சாஸ்திரவிரோதமன்றே" என்று மனந்தளர்ந்து, அதற்குச் சிவபெருமான் "கலிக்காமா, நீ மனந்தளரவேண்டாம். இந்தப் பெண்ணுக்குக் கூந்தலை மீளக் கொடுத்தருள்கின்றோம்" என்று அருளிச்செய்த திருவாக்கைக் கேட்டு, மனந்தளர்ச்சி நீங்கி, முன்போலக் கூந்தலைப் பெற்ற அப்பெண்ணை விவாகஞ் செய்து கொண்டு, தம்முடைய ஊருக்குப் போய்விட்டார்.

திருச்சிற்றம்பலம்.

* பஞ்சவடியாவது மயிரினாலே அலையாகச் செய்யப்பட்டு மார்பிலே பூணுவதாகத் தரிக்கப்படும் வடமாம். பஞ்சம் - மயிர். வடி - வடம்.

அரிவாட்டாயநாயனார் புராணம்.

சோழமண்டலத்திலே, கலைமங்கலம் என்கின்ற ஊரிலே, வேளாளர்குலத்திலே, சிவபத்தியிற் சிறந்தவரும், இல்லறத்தை ஒழுங்காக நடத்துகின்றவரும், மிகுந்த செல்வமுள்ளவருமாகிய தாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனுக்குச் செந்நெலரிசியும் செங்கீரையும் மாவடுவும் தினந்தோறுங் கொண்டுபோய், திருவமுது செய்வித்து வருவார். இப்படி நிகழுங்காலத்திலே, கடவுளுடைய திருவருளினால் அவருக்கு வறுமை உண்டாயிற்று. உண்டாகியும், அவர் கூலிக்கு நெல் அறுப்பவராகி, தாங்கூலியாகப் பெற்ற செந்நெலெல்லாம் சுவாமிக்குத் திருவமுது செய்வித்து, கார்நெல்லிக் கொண்டு தாஞ்சீவனஞ்செய்து வந்தார். செய்யுநாளிலே, பரமசிவன் அவ்வூரிலிருக்கின்ற வயல்களிலுள்ள நெல்லெல்லாம் செந்நெல்லாகும்படி அருள்செய்ய: தாயனார் மனமகிழ்ந்து, தினந்தோறும் வயல்களுக்குப்போய் நெல்லறுத்து, கூலி வாங்கி, "இப்படிக் கிடைத்தது அடியேன் செய்த புண்ணியத்தால்" என்று சுவாமிக்கு மிகத் திருவமுது செய்வித்தாராயினர்.

இப்படி நடக்கின்றபடியால், நாடோறும் உலைவில்லாமை பற்றி, மனைவியார் வீட்டின் பின்புறத்திலுள்ள தோட்டத்திற்குப் போய், இலைக்கறி கொய்து சமைத்துவைக்க; தாயனார் அதையுண்டு முன்போலத் தாம்செய்யுந் திருப்பணியைச் செய்தார். செய்யுநாளிலே, தோட்டத்திலுள்ள இலைக்கறியெல்லாம் அற்றுப்போக, மனைவியார் தண்ணீர் வார்க்க, அதனைப் பானம் பண்ணி, திருப்பணியைச் செய்துவந்தார். இப்படிச் செய்துவருநாளிலே ஒருநாள், முன்போலச் சுவாமிக்குத் திருவமுது செய்விக்கும் பொருட்டுச் செந்நெலரிசியும் செங்கீரையும் மாவடுவும் கூடையில் வைத்துச் சுமந்துகொண்டு போக; மனைவியார் பஞ்சகவ்வியங்கொண்டு அவருக்குப் பின்னே நடந்தார். முன் செல்கின்ற தாயனார் பசியினாலே கால் தள்ளாடித் தவறி விழ, மனைவியார் பஞ்சகவ்வியக் கலயத்தை மூடியிருந்த கையினால் அவரை அணைத்தார். அணைத்தும், எல்லாம் கமரிலே சிந்திப்போகக் கண்டு, தாயனார், "இனித்

திருக்கோயிலுக்குப் போவதினாற் பயன் யாது'' என்று துக்கித்து, ''இங்கே சிந்திய செந்நெல்லரிசியையும் செங்கீரையையும் மாவடுவையும் கடவுள் திருவமுதுசெய்தருளும் பேற்றைப் பெற்றேனில்லையே'' என்று அரிவாளினாலே தம்முடைய வயிற்றியை அரியத்தொடங்கினார். அப்பொழுது அவ்வடியார் தம்முடைய கழுத்தை அரிகின்ற கையைத் தடுக்கும் பொருட்டுச் சிதசித்துப் பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கின்ற பரமசிவன் உயரரீட்டிய திருக்கரமும் மாவடுவைக் கடித்தலால் உண்டாகுகின்ற விடேல்விடேல் என்னும் ஓசையும், கமினின்றும் ஒக்க எழுந்தன. நாயனார், பரமசிவனுடைய திருக்கரம் வெளியில் வந்து அரிவாள் பிடித்த தம்முடைய கையைப் பிடித்தபொழுது, பயங்கொண்டு, முந்திய துன்பம் நீங்கி, மனம் மிக மகிழ்ந்து, அவர் தமக்குச் செய்த திருவருளே வியந்து அஞ்சலி செய்து ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டு நின்றார். சிவபெருமான் இடபாரூடராய்த் தோன்றி, ''நீ நம்மேல் வைத்த அன்பினாலே செய்த செய்கை நன்றாயிருக்கின்றது. நீ உன் மனைவியோடு வந்து நமது சிவலோகத்தில் வாழ்ந்திரு'' என்று சொல்லி, அவர்கள் உடன்சென்ற, போயருளினார். அந்தத் தாயரென்பவர் ''இங்கே சிந்திய வைகறைப் பரமசிவன் திருவமுது செய்யப் பெற்றேனில்லையே'' என்று துக்கித்து, அரிவாளினாலே தமது கழுத்தை அரிதலுற்றபடியால், அவருடைய பெயர் அரிவாட்டாயநாயனார் என்றுபெற்று.

திருச்சிற்றம்பலம்.

ஆனாயநாயனார் புராணம்.

மழநாட்டிலே, மங்கலவூரிலே, ஆயர்குலத்திலே, சிவபத்தியிற் சிறந்த ஆனாயர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய ஏவலாளராகிய மற்றை இடையர்களோடும் பசுநிரைகளைக் காட்டுக்குக் கொண்டுபோய் மேய்த்துக்கொண்டும் காந்தருவவேதத்திலே சொல்லியபடி செய்யப்பட்ட வேய்ங்குழலினாலே ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் சத்தசுரம் பொருந்த

வாசித்து ஆன்மாக்களுக்குத் தம்முடைய இசையமுதத்தைச் செவித்துவாரத்தினாலே புகட்டிக்கொண்டும் வருவார்.

கார்காலத்திலே ஒருநாள், இடையர்கள் பசுநிரைகளைச் சூழ்ந்துகொண்டு செல்ல, அவ்வாயர்பாடியர் கையிலே கோலும் வேய்ங்குழலும் கொண்டு நிரை காக்கும்படி காட்டுக்குச் சென்றபொழுது; அவ்விடத்திலே மாலையைப்போல மீண்ட பூங்கொத்துக்களைத் தாங்கிக்கொண்டு புறத்திலே தாழ்கின்ற சடையினையுடைய பரமசிவனைப்போல நிற்கின்ற ஒரு கொன்றைமரத்துக்குச் சமீபத்திலே போய், அதைப் பார்த்துக்கொண்டு நின்று, அன்பினாலே உருகி இளகிய மனசையுடையவராகி, வேய்ங்குழலினாலே இசைநூலிலே விதித்தபடி ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை வாசித்தார். அவர் பஞ்சாக்ஷரத்தை ஆலாபித்து வாசிக்கின்ற அநிமதுரமாகிய இசைவெள்ளமானது எவ்வகைப்பட்ட உயிர்களின் செவியிலும் தேவதருவின் பூந்தேனைத் தேவாமிர்தத்தோடு கலந்து வார்த்தாற்போலப் புகுந்தது. புற்களை மேய்ந்த பசுக்கூட்டங்கள் அசைவிடாமல் அவரை அடைந்து, உருக்கத்தினாலே மெய்ம்மறந்து நின்றன; பால் குடித்துக்கொண்டு நின்ற கன்றுகளெல்லாம் குடித்தலை மறந்துவிட்டு, இசை கேட்டுக்கொண்டு நின்றன; எருதுகளும் மான் முதலாகிய காட்டுமிருகங்களும் மயிர் சிலிர்த்துக்கொண்டு அவர் சமீபத்தில் வந்தன; ஆடுகின்ற மயிற்கூட்டங்கள் ஆடுதலொழிந்து அவர்பக்கத்தை அடைந்தன; மற்றைப் பலவகைப்பட்சிகளும் தங்கள் செவித்துவாரத்தினாலே புகுந்த கீதம் நிறைந்த அகத்தோடும் அவரருகிலே வந்து உருகி நின்றன; மாடு மேய்த்துக்கொண்டு நின்ற இடையர்களெல்லாரும் தங்கள் தொழிலை மறந்து கானத்தைக் கேட்டுக்கொண்டு நின்றார்கள்; விஞ்சையர்களும் சாரணர்களும் கின்னரர்களும் தேவர்களும் மெய்ம்மறந்து விமானங்களிலேறிக் கொண்டு வந்தார்கள்; வருத்துகின்ற உயிர்களும் வருத்தப்படுகின்ற உயிர்களும் அவ்விசையைக்கேட்டு அதன்வசமானபடியால், பாம்புகள் மயங்கிப் பயமின்றி மயில்களின்மேலே விழும்; சிங்கமும் யானையும் ஒருங்கே கூடி வரும்; மான்கள் புலிகளின் பக்கத்திலே செல்லும்;

மரக்கொம்புகள்தாமும் சலியாதிருந்தன. இப்படியே சரம் அசரம் என்னும் ஆன்ம வர்க்கங்களெல்லாம் ஆனயநாயனருடைய வேய்ங்குழல் வாசனையைக்கேட்டு இசைமயமாயின. அவ்விசையைப் பொய்யன்புக்கப்படாத பரமசிவன் கேட்டு, பார்வதி தேவியாரோடும் இடபாரூடராய் ஆகாயமார்க்கத்தில் எழுந்தருளி வந்து நின்று, அவ்வானயநாயனர் மீது திருவருணோக்கஞ் செய்து, "மெய்யன்பினே, நம்முடைய அடியார்கள் உன்னுடைய வேய்ங்குழலிசையைக் கேட்கும்பொருட்டு, நீ இப்பொழுது இவ்விடத்தில் நின்றபடியே நம்மிடத்துக்கு வருவாய்" என்று திருவாய்மலர்ந்தருளி, அவ்வானயநாயனர் வேய்ங்குழல் வாசித்துக்கொண்டு பக்கத்திலே செல்லத் திருக்கைலாசத்தை அடைந்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

இலைமலிந்தசருக்க முற்றுப்பெற்றது.

மூன்றாவது

மும்மையாலுலகாண்டசருக்கம்.

மூர்த்திநாயனாரிருபாலணம்.

பாண்டிநாட்டிலே, மதுராபுரியிலே, வைசியர் குலத்திலே, சிவபத்தியே ஒரு வடிவெடுத்தாற்போலும் மூர்த்தி நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் அந்தஸ்தலத்திலே வீற்றிருக்கின்ற சோமசுந்தரக்கடவுளுக்குத் தரிக்கும் பொருட்டுத் தினந்தோறும் சந்தனக்காப்புக் கொடுத்து வருங் காலத்திலே; கருணைமிதசத்தாசல் சதுரங்கசேனைகளோடும் அம்மதுரைக்கு வந்து, பாண்டியனோடு யுத்தஞ்செய்து அவனை வென்று, அந்நகருக்கு அரசனாயினன். அவன் புறச்சமயிகளாகிய சமணர்களுடைய போதனைசத்தியினாலே ஆருகதமதத்திற் பிரவேசித்து, சிவனடியார்களுக்கு இடுக்கண் செய்வானாயினன். ஆயினும், மூர்த்திநாயனார் தாஞ் செய்யுந் திருப்பணியைத் தவறாது செய்துவந்தார்.

அது கண்டு, அரசன் அவரை ஆருகதமதத்திலே பிரவேசிப்பித்தற்கு உத்தேசித்து, அவருக்குப் பல கொடுஞ் செய்கைகளைச் செய்தான். செய்தும், அவர் தம்முடைய திருப்பணியினின்றும் சிறிதும் வழுவாதவராயினர். அது பற்றி அவ்வரசன் அவர் சந்தனக்கட்டை வாங்குமிடங்களிலெல்லாம் அவருக்குக் கொடுக்கவொட்டாமற் றடுத்தான். அதனால் அவர் மனநொந்து, "இப்பாண்டிநாடு துர்ச்சமயமாகிய ஆருகதசமயத்திலே பிரவேசித்துச் சிவபுண்ணியத்துக்கு இடையூறு செய்கின்ற அதிபாதகனாகிய இவ்வரசன் இறக்க, சற்சமயமாகிய சைவசமயத்தை வளர்க்கின்ற அரசரைச் சாருங்காலம் எக்காலம்" என்று நினைந்து துக்கித்து, பகற்காலமுழுதும் சந்தனக்கட்டை தேடித் திரிந்து, எங்கும்

பெருமையால் ஆலயத்துக்கு வந்து, "சுவாமிக்குத் தரிப்பதற்குத் தேய்த்துக்கொடுக்கும் பொருட்டுச் சந்தனக்கட்டைக்கு இன்றைக்கு முட்டி வந்தாலும், அக்கட்டைபோலத் தேய்க்கத்தக்க கைக்கு ஒருமுட்டும் இல்லை" என்று ஒரு சந்தனக்கல்லிலே தம்முடைய முழங்கையை வைத்து, தோலும் நரம்பும் எலும்பும் தேய்ந்து குறையும்படி தேய்த்தார். தேய்த்தலும், உதிரம் ஒழுகி நாற்புறத்திலும் பெருகி, எலும்பினுள்ளே இருக்கும் துவாரந்திறந்து மூளை வெளியிலே வந்தது. அப்பொழுது "அன்பனே, நீ பத்தியினது உறுதிப்பாட்டினால் இப்படிப்பட்ட செய்கையைச் செய்யாதே. உனக்கு இடுக்கண்செய்த கொடுங்கோலரசன் பெற்ற இந்த நாடு முழுதையும் நீயே கைக்கொண்டு, இதற்குமுன் இவ்விடத்திலே அவனாலுண்டாகிய கொடுமைகள் யாவற்றையும் நீக்கி, பரிபாலனஞ் செய்து, உன்னுடைய பணியை நடப்பித்து, பின்பு நம்முடைய சிவலோகத்தை அடைகி" என்று ஒரு அசரீரிவாக்கு எழுந்தது. மூர்த்திநாயனார் அதைக் கேட்டு, அஞ்சி, கையைத் தேய்த்தலை ஒழித்து எழுந்தார். உடனே அவர் கையானது தேய்ந்ததனாலாகிய ஊறு நீங்கி முன்போலாயிற்று.

அவ்விரவிலே அந்தக் கருணாகரராஜன் இறந்து, சிவனடியார்களுக்கு வருத்தஞ்செய்த அதிபாதகத்தினாலேகொடுமையாகிய நரகத்திலே விழுந்தான். மற்றநாள் பிராதக்காலத்திலே மந்திரிமார்கள் கூடி, தகனசமஸ்காரஞ் செய்து, பின்னர்த் தங்கள் அரசனுக்குப் புத்திரர் இல்லாமையால் வேறொருவரை அரசாக நியோகித்தற்கு உபாயத்தை ஆலோசித்து, "யானையைக் கண்கட்டி விடுவோம்! அந்த யானை எவரை எடுத்துக்கொண்டு வருமோ அவரே இந்நாட்டுக்கு அரசராவார்" என்று நிச்சயித்துக்கொண்டு, யானையை விதிப்படி அருச்சித்து, "நீ இந்த நாட்டை ஆளுதற்கு வல்ல ஒருவரை யெடுத்துக் கொண்டு வா" என்று சொல்லி, அதை வஸ்திரம் கொண்டு கண்ணைக் கட்டி விட்டார்கள். அந்த யானை அந்தப் பட்டணத்து வீதிகளிலே திரிந்து சென்று, சொக்காத சுவாமியுடைய ஆலயத்தின் கோபுரத்துக்கு

முன்னே போயிற்று. மூர்த்திநாயனர் இரவிலே தமக்குச் செவிப்புலப்பட்ட அசரீரிவாக்கினால் மனத்துயரம் நீங்கி, "நமது கடவுளாகிய பரமசிவனுக்குத் திருவுளமாகில் அடியேன் இந்தநாட்டை ஆளுதற்கு உடன்படுவேன்" என்று நினைத்துக்கொண்டு, திருக்கோயிற் புறத்திலே நின்றார். யானையானது அவர் திருமுன்னே சென்று தாழ்ந்து, அவரை எடுத்து, முதுகின்மேல் வைத்துக்கொண்டது. அது கண்ட மந்திரிமார்கள் அவரை நமஸ்கரித்து, யானையின் முதுகினின்றும் இறக்கி, முடிசூட்டுமண்டபத்திலே கொண்டுபோய், ஒரு சிங்காசனத்தின்மேல் இருத்தி, முடி சூட்டுக்கு வேண்டும் மங்கலகிருத்தியங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள். மூர்த்திநாயனர் அவர்களை நோக்கி, "ஆருகதமதம் நீங்கிச் சைவசமயம் விருத்தியாயின் நான் இந்நாட்டை ஆளுதற்கு உடன்படுவேன்" என்றார். அதைக்கேட்ட மந்திரிமார்களும் சாஸ்திரபரிசயமுள்ள பிறரும் அவரை வணங்கி நின்று, "சுவாமீ, தேவரீருடைய ஆஞ்ஞையின்படியே யன்றி அதற்கு மாறுகயாவர் செய்வார்கள்" என்று சொன்னார்கள். பின்பு மூர்த்திநாயனர் "நான் அரசாள்வேனாகில், எனக்கு விபூதியே அபிஷேகத்திரவியமும், உருத்திராக்கமே ஆபரணமும், சடாமுடியே கிரீடமும் ஆகுக" என்றார். அவர்கள் "தேவரீர் அருளிச்செய்தபடியே ஆகுக" என்று சொல்லி, மகுடாபிஷேகத்துக்கு வேண்டிய செய்கைகளைச் செய்து நிறைவேற்றினார்கள்.

மூர்த்திநாயனர் சடைமுடி தரித்து ஆலயத்திற்சென்று சோமசுந்தரக்கடவுளை வணங்கிக்கொண்டு, யானையின்மேல் ஏறி, இராசமாளிகையைச் சேர்ந்தார். அங்கே அத்தாணிமண்டபத்திலே இரத்தின சிங்காசனத்தின்மேலே தவளச்சத்திர நிழலிலே வீற்றிருந்துகொண்டு, பொய்ச்சமயமாகிய ஆருகதம் நீங்கவும் மெய்ச்சமயமாகிய சைவசமயமே எங்கும் விளங்கவும், பெண்ணைசை சிறிதுமின்றி, நெடுங்காலம் விபூதி உருத்திராக்கம் சடைமுடி என்கின்ற மூன்றினையும் அணிந்து, பின் வெகுதப் பிரசப்தியானர்.

திருச்சிற்றம்பலம்.

முருகநாயனர் புராணம்.

சோழமண்டலத்திலே, திருப்புகலூரிலே, பிராமண குலத்திலே, சிவபத்தியிற் சிறந்தவராகிய முருகநாயனர் என் பவர் ஒருவர் இருந்தார். அவர் தினந்தோறும் சூரியோதயத் துக்குமுன் எழுந்து ஸ்நானம்பண்ணிச் சந்தியாவந்தனம் முடித்துக்கொண்டு போய், கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூ நிலப்பூ என்கின்ற நால்வகைப் பூக்களில் உரிய பூக்களைக் கொய்து திருப்பூங்கூடைகளிலே இட்டுக்கொண்டு வந்து, தனியிடத்திலிருந்து, பலவகைப்பட்ட திருமாலைகள் செய்து, அந்த ஸ்தலத்திலுள்ள வர்த்தமானீச்சரம் என்னும் ஆலயத் தில் விற்றிருக்கின்ற பரமசிவனுக்குச் சாத்தி அருச்சனை செய்தும், திவ்விய மந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் செபித் தும் வருவார்.

இப்படிச் செய்துவருங்காலத்திலே, திருஞானசம்பந்த மூர்த்தி நாயனருக்குச் சிநேகராகிய பெருமையையும் பெற் றார். பெற்ற அம்முருகநாயனர் அந்தத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனருடைய திருமணத்திலே தம்முடைய சிவ புண்ணியத்தினாலே போய், பரமசிவனுடைய திருவடிநிழலை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

உருத்திரபசுபதிநாயனர் புராணம்.

சோழநாட்டிலே, திருத்தலையூரிலே, பிராமணகுலத் திலே, பரமசிவனுடைய திருவடிகளிலே, பதிந்த அன்பே தமக்குச் செல்வமெனக் கொண்ட பசுபதி என்பவர் ஒருவர் இருந்தார். அவர் தாமரைத்தடாகத்திலே அகோராத்திரம் கழுத்தளவினதாகிய தண்ணீரிலே நின்றுகொண்டு, இரண்டு கைகளையும் சென்னிமேலேறக் குவித்து, பரமசிவனுடைய திருவடிகளை மறவாத சிந்தனைபோடு வேதபுருஷனுக்குக் கண்ணிய ஸ்ரீருத்திரத்தை ஓதி, சிலநாட்சென்றபின் சிவ

பதத்தை அடைந்தார். அதனல் அவர்பெயர் உருத்திர பசுபதிநாயனர் என்றுயிற்று.

திருச்சிற்றம்பலம்.

திருநாளைப்போவார்நாயனர் புராணம்.

சோழமண்டலத்திலே, கொள்ளிடநதியின் பக்கத்துள்ள மேற்காநாட்டிலே, ஆதனூரிலே, புலையர்குலத்திலே, நந்தனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனுடைய திருவடி களேயே யன்றி மற்றொன்றையும் மறந்தும் நினையாதவர்; அவ்வூரிலே தமக்கு வெட்டிமைக்காக விடப்பட்டிருக்கின்ற மானியமாகிய நிலத்தின் விளைவிலே சிவனஞ்செய்து கொண்டு, தாஞ்செய்யவேண்டிய தொழிலே நடத்துகின்றவர்; சிவாலயங்களோறும், பேரிகைமுதலாகிய ஒருமுகக்கருவிகளுக்கும் மத்தளமுதலாகிய இருமுகக் கருவிகளுக்கும் தோலும் வாரும், வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், அருச்சனைக்குக் கோரோசனையும் கொடுக்கின்றவர்; ஆலயங்களின் திருவாயிற்புறத்தில் நின்றுகொண்டு அன்பின்மேலீட்டினல் கூத்தாடிப் பாடுகின்றவர்.

அவர் ஒருநாள் திருப்புன்கூரிலே போய்ச் சுவாமிதரிசனம் பண்ணித் திருப்பணி செய்தற்கு விரும்பி, அங்கே சென்று திருக்கோயில் வாயிலிலே நின்றுகொண்டு, சுவாமியை நேரே தரிசித்துக் கும்பிடவேண்டும் என்று நினைத்தார். சுவாமி அவருடைய விருப்பத்தின்படியே தமக்கு முன்னிருக்கின்ற இடபதேவரை விலகும்படி செய்து, அவருக்குக் காட்சிகொடுத்தருளினர். நந்தனர் அந்த ஸ்தலத்திலே ஒரு பள்ளத்தைக் கண்டு, பெரியகுளமாக வெட்டித் தம்முடைய ஊருக்குத் திரும்பினர்.

அவர் இப்படியே பல ஸ்தலங்களுக்கும் போய் வணங்கித் திருப்பணி செய்து வந்தார். ஒருநாள், சிதம்பரஸ்தலத்திற்குப் போகவேண்டும் என்று ஆசைகொண்டு, அவ்வாசை மிகுதியினலே அன்றிரவுமுழுதும் நித்திரைசெய்யாதவராய்,

விடிந்தபின் "நான் சிதம்பரஸ்தலத்திற்குப் போனால் திருக் கோயிலினுள்ளே பிரவேசிக்கும் யோக்கியதை என் சாதிக்கு இல்லையே" என்று துக்கித்து, "இதுவும் சுவாமியுடைய அருள்தான்" என்று சொல்லிப் போகாதொழிந்தார். பின்னும் ஆசை வளர்தலால் "நாளைக்குப் போவேன்" என்றார். இப்படியே "நாளைக்குப் போவேன் நாளைக்குப் போவேன்" என்று அநேகநாட்கள் கழித்தார். அதனால் அவருக்குத் திருநாளைப்போவார் என்னும் பெயர் உண்டாயிற்று.

ஒருநாள் அவர் சிதம்பரதரிசனம் பண்ணவேண்டும் என்னும் ஆசை பிடித்துந்துதலால் தம்முடைய ஊரினின்றும் பிரஸ்தானமாகி, சிதம்பரத்தின் எல்லையை அடைந்தார். அத்திருப்பதியைச் சுற்றியதிருமதில் வாயிலிலே, புகுந்து அங்குள்ள பிராமணர்களுடைய வீடுகளிலே ஓமஞ் செய்யுமிடத்திலே கண்டு, உள்ளே போதற்கு அஞ்சி, அங்கே நமஸ்கரித்து அத்திருவெல்லையை வலஞ்செய்துகொண்டுபோவார். இப்படி. இராப்பகல் வலஞ்செய்து, உள்ளே போகக்கூடாமையை நினைந்து வருந்துகின்ற திருநாளைப்போவார் "சபாநாயகரை எப்படித் தரிசிக்கலாம்? இந்த இழிந்தபிறப்பு இதற்குத் தடைசெய்கின்றதே" என்று துக்கத்தோடும் நித்திரை செய்தார். சபாநாதர் அவருடைய வருத்தத்தை நீக்கி அவருக்கு அருள்செய்யத் திருவுளங்கொண்டு, அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "நீ இந்தப்பிறப்பு நீங்கும்படி நெருப்பிலே மூழ்கி எழுந்து, பிராமணர்களோடும் நம்முடைய சந்நிதானத்தில் வருவாய்" என்று அருளிச்செய்து, தில்லைவாழந்தணர்களுக்கும் சொப்பனத்திலே தோன்றி, அந்தத் திருநாளைப்போவார் பொருட்டு நெருப்பை வளர்க்கும்படி ஆஞ்ஞாபித்து, மறைந்தருளினார். தில்லைவாழந்தணர்கள் எல்லாரும் விழித்தெழுந்து, திருக்கோயில் வாயிலிலே வந்து கூடி, "சபாநாயகர் ஆஞ்ஞாபித்தபடி செய்வோம்" என்றுசொல்லி, திருநாளைப்போவாரிடத்திலே சென்று, "ஐயரே, சபாநாயகருடைய ஆஞ்ஞையினாலே இப்பொழுது உம்பொருட்டு நெருப்பு வளர்க்கும்படி வந்தோம்" என்றார்கள். அதைக் கேட்ட திருநாளைப்போவார் "அடியேன் உய்ந்தேன்" என்று

சொல்லி வணங்கினர். பிராமணர்கள் தெண்மதிற்புறத்திலே கோபுரவாயிலுக்கு முன்னே ஒரு குழியிலே நெருப்பு வளர்த்து, அதைத் திருநாளைப்போவாருக்குப் போய்த் தெரிவித்தார்கள். திருநாளைப்போவார் அந்நெருப்புக்குழியை அடைந்து, சபாநாயகருடைய திருவடிகளை மனசிலே தியானம் பண்ணி, அதனை வலஞ்செய்து கும்பிட்டுக் கொண்டு, அதனுள்ளே புகுந்தார். புகுந்த நாயனார் அந்தத் தேகத்தை ஒழித்து, புண்ணியமயமாகிய பிராமணமுனி வடிவங்கொண்டு உபவீதத்தோடும் சடைமுடியோடும் எழுந்தார். அதுகண்டு நில்லைவாழந்தணர்களும் மற்றைச் சிவபத்தர்களும் அஞ்சலி செய்து களிப்படைந்தார்கள். திருநாளைப்போவார், அவர்கள் உடன்செல்லச் சென்று, கோபுரத்தை அணுகி, அதனை நமஸ்கரித்து எழுந்து, உள்ளேபோய்க் கனகசபையை அடைந்தார். பின் அவரை அங்கு நின்ற பிராமணர் முதலியோர் யாவரும் காணுமையால் ஆச்சரியங் கொண்டு ஸ்தோத்திரஞ் செய்தார்கள். சபாநாயகர் திருநாளைப்போவாருக்குத் தம்முடைய ஸ்ரீபாதங்களைக் கொடுத்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணம்.

தொண்டைமண்டலத்திலே, காஞ்சிபுரத்திலே, வகாலியர்குலத்திலே, சிவனடியார்களுடைய திருக்குறிப்பையறிந்து அவர்களுக்குத் தொண்டுசெய்கின்றமையால் திருக்குறிப்புத்தொண்டர் எனப் பெயர் பெற்ற ஒரு பெரியவர் இருந்தார். அவர் மிகுந்த திருப்பத்தோடு சிவபத்தர்களுக்கு வஸ்திரம் ஒளித்துக்கொடுத்து வருங்காலத்திலே, ஏகாம்பரநாதசுவாமி குளிர்காலத்திலே ஒரு சிவபத்தர்வேடங்கொண்டு மெலிந்தசரீரத்தையுடைய ஒருவறியவர்போலாகி, அழுக்கடைந்த கந்தையுடன் அவரிடத்திற் சென்றார். திருக்குறிப்புத் தொண்டநாயனர் அவரைக் கண்டு எதிர்கொண்டு வணங்கி, பல உபசாரவார்த்தைகளைச் சொல்லி, அவருடைய குறிப்பையறிந்து, "உந்தக் கந்தையைத் தந்தருளும்; ஒளித்துத் தருகின்றேன்"

என்றார். சிவபத்தர் வேடங்கொண்ட கடவுள் "இந்தக் கந்தை அழுக்கு அதிகமாக ஏறப்பெற்றுத் தரிக்கப்படுதற்குத் தகுதியில்லாததாயிருந்தாலும், குளிர்மிகுதியினால் வருத்தமுறுகின்றபடியால் கையிடுதல் கூடாது. அஸ்தமயனத்திற்கு முன் தருவீராகில், கொண்டுபோய்ச் சீக்கிரம் ஒலித்துக்கொண்டு வாரும்" என்றார். திருக்குறிப்புத்தொண்டநாயனார் "அடியேன் தாழ்க்காமல் ஒலித்து அஸ்தமயனத்துக்குமுன் கொண்டுவந்து தருகின்றேன்; தந்தருளும்" என்று சொல்ல; சுவாமி "விரைவிலே ஒலித்து உலர்த்திக்தராதொழிவீராயில் இந்தத் தேகத்துக்குத் துன்பஞ்செய்தீர்" என்று சொல்லி, அக்கந்தையை அவர்கையிற் கொடுத்தார்.

திருக்குறிப்புத்தொண்டநாயனார் அதைவாங்கிக்கொண்டு ஒரு குளத்திற்சென்று, முன் சிறிதழுக்குப் போக்கி வெள்ளாவியில் வைத்து, பின் ஒலிக்கப் புகுந்தார். அப்பொழுது பரமசிவனுடைய திருவருளினால் நண்பகலொழிந்து பின்பகல் போலத் தோன்றும்படி மேகங்கள் இருண்டு ஆகாயவெளியெல்லாம் மறைத்து மழைபெய்தன. அதுகண்டு, திருக்குறிப்புத்தொண்டர் சிவபத்தருக்குத் தாம் வாக்குச்செய்ததை நினைந்து, "இனி நான் யாதுசெய்வேன்" என்று கவலையுற்று, விரைவிலே மழைவிடவுங் கூடுமென்று அங்கேதானே நின்றார். அது விடவில்லை. பின் இராக்காலம் வர, திருக்குறிப்புத்தொண்டர் "குளிரினாலே திருமேனி நடுங்குகின்ற சிவபத்தருக்கு நான் செய்ய விரும்பிய பணிவிடை ஐயையோ! தவறிப்போயிற்றே" என்று கீழே விழுந்தார். "மழை விடாது, சிவபத்தர் சுட்டிய காலமோ நீங்கிற்று. முன்னேயே ஒலித்து வீட்டிலே காற்றினால் உலரும்படி கட்டிவிட்டேனுமில்லை. சிவபத்தரது திருமேனி குளிரினால் வருந்தும்படி நீங்கு செய்த சிறியேனுக்கு இனி யாதுவே செயல்" என்று எழுந்தார். "வல்லரக்கரைப் படைக்கின்ற கற்பாறையிலே எனது தலையைச் சிந்தும்படி மோதுவேன்" என்று போய்க் கற்பாறையிலே தமது சிரசை மோத; சர்வவியாபகராகிய பரமசிவனுடைய திருக்கரம் அந்தக் கற்பாறையின் பக்கத்திலே தோன்றி, அவரைப்பிடித்துக்கொண்டது. ஆகாயத்தினின்று

சொரிந்த நீர்மழை நீங்கிப் பூமழைபொழிந்தது. பரம சிவன் உமாதேவியாரோடும் இடபாரூடராய்க் காட்சி கொடுத்தருளினர். திருக்குறிப்புத்தொண்டநாயனர் மிகுந்த அன்பினோடு விழுந்து நமஸ்கரித்து எழுந்து, அஞ்சலிசெய்து கொண்டு நின்றார். பரமசிவன் அவரை நோக்கி, "உனது பத்திவலிமையை மூவுலகத்தார்களுக்குந் தெரிவித்தோம். இனி நீ நம்முடைய உலகத்தையடைந்து போரின்பம் பெற்று வாழ்ந்திரு" என்று திருவருள் புரிந்து சென்றருளினர்.

திருச்சிற்றம்பலம்.

சண்டேசுரநாயனார் புராணம்.

சோழமண்டலத்திலே, திருச்சேய்ஞலூரிலே, பிராமணகுலத்திலே, காசிகோத்திரத்திலே, எச்சதத்தன் என்பவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு அவன்மனைவியாகிய பவித்திரை வயிற்றிலே, விசாரசருமர் என்பவர் திருவவதாரஞ் செய்தார். அவருக்கு, ஐந்துவயதிலே, வேதங்களையும், வேதாங்கங்களையும் சைவாகமங்களையும் பூர்வசன்மத்து அறிவுத்தொடர்ச்சியினாலே கற்பிப்பார் இன்றித் தாமே அறியுமறிவு உண்டாயிற்று. தந்தை தாயார்கள் அவருக்கு ஏழுவயதிலே உபநயனச் சடங்கு செய்து, தகுந்த ஆசாரியர்களைக்கொண்டு வேதாத்தியயனஞ் செய்விப்பிக்கத் தொடங்கினர்கள். அவ்வாசாரியர்கள் வேதங்களையும் பிறகலைகளையும் ஓதுவித்தற்கு முன்னமே அவ்விசாரசருமருக்குத் தாமே அறிந்துகொள்ளும்படி அமைந்திருக்கின்ற புத்தியின்றிறத்தைக் கண்டு, ஆச்சரியம் அடைந்தார்கள்.

பாலியதசையிலே சான்றோர்க்கு உரிய குணத்தை அடைந்திருக்கின்ற அவ்விசாரசருமர், ஆன்மாக்களாகிய நாமெல்லாம் அநாதிமலபந்தர் என்பதும், நமக்கு அம்மல சத்தியைக் கெடித்து நித்தியமாகிய பேரின்பத்தைத் தரும் பொருட்டுச் சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகம் என்கின்ற பஞ்சகிருத்தியங்களையும் செய்வாராகிய ஒரு பதி உண்டு என்பதும், அப்பதிக்குத் தம்வயத்தராதல், தூய

வுடம்பினராதல், இயற்கையுணர்வினராதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்னும் எட்டுக்குணங்களும் இன்றியமையாதன என்பதும், அக்குணங்களெல்லாம் உடைய பதி சிவபெருமானே என்பதும், அவர் அத்தொழில் இயற்றுதல் தம்மோடொற்றுமையுடைய சிவசத்தியாலாகும் என்பதும், அதுபற்றி அவ்விருவருமே நமக்குப் பரமபிதாமாதாக்கள் என்பதும், அதனால் அவர்களிடத்தேயே நாம் அன்பு செய்யவேண்டும் என்பதும், அவ்வன்பை மற்றோர் பிறவியில் செய்குவமெனின் அதற்குக் கருவியாய்ச் சிறந்துள்ள இம்மானுடப்பிறவி பெறுதற்கரியது என்பதும், அப்படியாகில் இப்பிறவியிற்றானே இன்னுஞ் சில நாட்சென்றபின் செய்குவமெனின் இப்பிறவி நீங்குமவதி அறிதற்கரியது என்பதும், அங்ஙனமாகையால் அவ்வன்பு செய்தற்கேயன்றி மற்றொன்றிற்கும் சமயமில்லை என்பதும், அது செய்யுமிடத்தும் நமக்கு ஒரு சாமர்த்தியமுளதெனக் கருதி அதனை முன்னிடாது திருவருளையே முன்னிட்டு நின்று செய்யவேண்டும் என்பதுமே வேதாகம முதலிய நூல்களெல்லாவற்றினும் துணியப்படும் மெய்ப்பொருள் என்று சந்தேகவிபரீதமறத் துணிந்துகொண்டார். அந்த யதார்த்தமாகிய துணிவு தோன்றவே, அவருக்குச் சிவபெருமானிடத்தே மெய்யன்பு கலிதோறும் வளர்வதாயிற்று.

ஒருநாள் அவர் தம்மோடு அத்தியயனஞ் செய்கின்ற பிள்ளைகளோடும் அவ்வூரவர்களுடைய பசுநிரைகளுடன் கூடிச் சென்றபொழுது, ஓரிற்றுப்பசு ஒன்று மேய்ப்பானுடைய இடையனைக் குத்தப்போயிற்று. அவ்விடையன் சிறிதும் பாவத்துக்கு அஞ்சாமல் அப்பசுவைக் கோலினால் அடித்தான். மெய்யறிவுடைய அவ்விசாரசருமர் அதுகண்டு மிகுந்த பதைபதைப்போடும் அவன் சமீபத்திற் சென்று, மகா கோபங்கொண்டு பின்னும் அடியாதபடி அவனைத் தடுத்து நின்று, பசுக்கள் சிவலோகத்தினின்றும் பூமியில் வந்த வரலாற்றையும், அவைகளின் உறுப்புக்களிலே தேவர்களும் முனிவர்களும் தீர்த்தங்களும் இருத்தலையும், அவை தரும்

பஞ்சகவ்வியங்கள் சிவபிரானுக்கு அபிஷேகத் திரவியமாத லாலும், சிவசின்னமாகிய விபூதிக்கு மூலம் அவற்றின் சாண மாதலாலும், சிந்தித்து, அந்தப் பசுக்களைத் தாமே மேய்க் கும்படி விரும்பி, அவ்விடையரை நோக்கி, "இப்பசுநிரையை இனி நீ மேய்க்கவேண்டியதில்லை. நானே மேய்ப்பேன்" என்றார். இடையன் அதைக் கேட்டுப் பயந்து கும்பிட்டுக் கொண்டு போய்விட்டான்.

விசாரசருமர் பசுக்களை அவ்வவற்றிற்குரிய பிராமணர் களின் சம்மதி பெற்று, தினந்தோறும் மண்ணியாற்றங்கரை யில் இருக்கின்ற காடுகளிலும், வயலோரங்களிலும், புல்லு நிறைந்திருக்கும் இடத்திற்கொண்டுபோய், வேண்டுமட்டும் மேயவிட்டும், தண்ணீருட்டியும், வெய்யிலெறிக்கும் பொழுது நிழலிருக்குமிடங்களிலே செலுத்தியும், நன்றாகக் காப்பாற்றி, சமித்துக்கள் ஒடித்துக்கொண்டு, அஸ்தமயனத்துக்குமுன் அவ்வப்பசுக்களை அவரவர் வீட்டுக்கு ஓட்டிக்கொண்டுபோய் விட்டு, தம்முடைய வீட்டுக்குப் போவார்.

இப்படிச் செய்யுங்காலத்திலே, பசுநிரைகளெல்லாம் அழுகோடு மிகப்பெருகி, போசனபானங்களிலே குறைவில்லா மைபால், மகிழ்ச்சியடைந்து, இராப்பகல் மடி சுரந்து பாலை மிகப்பொழிந்தன. பிராமணர்கள் நித்திய ஹோமாகுதியின்பொ ருட்டு விட்டிருக்கின்ற தங்கள் பசுக்கள் விசாரசருமர் மேய்க் கத் தொடங்கியபின் முன்னிலும் அதிகமாகக் கறக்கக் காண் கையால் மிகுந்த சந்தோஷத்தை அடைந்தார்கள். பசுக்கள் எல்லாவகை உபசரிப்பினாலும் அளவிறந்த களிப்பை அடை ந்து, வீட்டிலே கட்டப்பட்டிருக்கின்ற தங்கள் கன்றுகள் பிரிந்தாலும் சிறிதும் வருத்தமுறுதலைகளாகி, மிகுந்த அன் போடு தங்களை மேய்க்கின்ற விசாரசருமர் சற்றுயினும் பிரிவா ராகில் அப்பிரிவாற்றாமல் தாய்போல உருகி, அவர் சமீபத் திலே சென்று நின்று, மடி சுரந்து ஒருவர் கறக்காமல் தாமே பால்பொழியும். அது கண்ட விசாரசருமர் அப்பால் பரமசிவனுக்குத் திருமஞ்சனமாகத் தகுதியுடைமையை நினைந் தார். நினையவே, அவருக்குச் சிவார்ச்சனையினிடத்தே பேராசை தலைப்பட்டது. உடனே அவர் மண்ணியாற்றின்

கரையிலிருக்கின்ற ஒரு மணற்றிட்டையிலே திருவாத்திமரத் தின்கீழே மணலினாலே ஒரு சிவலிங்கம் குவித்து, திருக்கோயிலும் கோபுரமும் மதிலும் வகுத்து, திருவாத்திப்பூ முதலிய புஷ்பங்களும் பத்திரங்களும் பறித்துத் திருப்பூங்கூடையிலிட்டுக்கொண்டு வந்து வைத்துவிட்டு, புதிய குடங்களைத் தேடி வாங்கிக்கொண்டு வந்து, கறவைப்பசுக்கள் ஒவ்வொன்றினிடத்திலும் சென்று, முலையைத் தீண்டினர். அவைகள் கனைத்துப் பாலைப்பொழிந்தன. பாலினாலே நிறைவுற்ற அக்குடங்களைக் கொண்டுபோய் ஆலயத்திலே வைத்துப் பத்திரபுஷ்பங்களால் சுவாமியை அருச்சித்து, பாலினால் அபிஷேகஞ் செய்தார். பரமசிவன் அவ்விலிங்கத்தினின்று அவ்விசாரசருமர் அன்போடு செய்யும் அருச்சனையைக் கொண்டருளினர். விசாரசருமர் சிவபூசைக்கு அங்கமாகிய திருமஞ்சனம் முதலிய பொருள்களுள், கிடையாதவைகளை மானசமாகக் கிடைத்தனவாகக் கொண்டு நிறைவுசெய்து, விதிப்படி அருச்சித்து வணங்கி வந்தார். பசுக்கள் அபிஷேகத்தின்பொருட்டு இவ்விசாரசருமர் கொண்டுவரும் குடங்கள் நிறையப் பாலைச்சொரிந்தும், பிராமணர்க்கும் முன்போலக் குறைவுதீரப் பாலைக் கொடுத்து வந்தன.

இப்படி நெடுநாளாகப் பார்ப்பவர்களுக்கு விளையாட்டுப் போலத் தோன்றுகின்ற சிவார்ச்சனையைச் செய்து வரும் பொழுது, அதைக்கண்ட ஒருவன் அதின் உண்மையை அறியாதவனாகி, அதை அவ்வூர்ப் பிராமணர்களுக்குத் தெரிவித்தான். அவர்கள் அதைச் சபையாருக்குத் தெரிவிக்க, சபையார் எச்சதத்தனை அழைத்து, "பிராமணர்கள் யாகுதியின் பொருட்டுப் பால் கறக்கும் பசுக்களையெல்லாம் உம்முடைய புத்திரனாகிய விசாரசருமன் அன்புடனே மேய்ப்பவன்போலக் கொண்டுபோய்ப் பாலைக் கறந்து விருதாவாக மணலிலே சொரிந்து விளையாடுகின்றான்" என்றார்கள். எச்சதத்தன் அதைக் கேட்டுப் பயந்து, "சிறுபிள்ளையாகிய விசாரசருமன் செய்கின்ற இத்தச்செய்கையை இதற்குமுன் நான் சிறிதாயினும் அறிந்திலேன், அக்குற்றத்தை நீங்கள் பொறுத்துக் கொள்ளவேண்டும்" என்று குறையிரந்து வணங்கி, "இனி

அவன் அப்படிச் செய்வானையின், அக்குற்றம் என்மேலதாகும்" என்று சொல்லி அச்சபையாரிடத்திலே அநுமதி பெற்றுக்கொண்டு, வீட்டுக்குப் போய்விட்டான்.

மற்றநாட்காலையில் அந்தச் சமாசாரத்தைச் சோதித்தறிய விரும்பி விசாரசருமர் பசு மேய்க்கப்போன பின்பு, அவர் அறியாதபடி அவர்பின்னே சென்றான். விசாரசருமர் பசுக்களை ஓட்டி மண்ணியாற்றின் மணற்றிட்டையிலே கொண்டுபோவதைக் கண்டு, எச்சதத்தன் அருகில் இருந்த ஒரு குராமரத்தில் ஏறி, அங்கே நிகழ்வதை அறியும்படி ஒளிந்திருந்தான். விசாரசருமர் ஸ்நானம்பண்ணி முன்போல மணலினாலே திருக்கோயிலுஞ் சிவலிங்கமுஞ்செய்து, பத்திரபுஷ்பங்கள் பறித்துக்கொண்டு வந்து வைத்து, பின்பு பாற்குடங்களைக் கொண்டுவந்து, நாயித்து, அருச்சனைக்கு வேண்டிய பிறவற்றையும் அமைத்து, மிகுந்த அன்பினோடு பூசைக்கு ஆரம்பித்து, சிவலிங்கத்துக்குப் பத்திரபுஷ்பங்களைச் சாத்தி, பாற்குடங்களை வைத்து அபிஷேகம் பண்ணினார். குராமரத்தில் ஏறியிருந்த எச்சதத்தன் அதைக்கண்டு, மிகுந்த கோபங்கொண்டு, சிக்கிரம் இறங்கிப்போய்த் தன் கையிலிருந்த தண்டினால் அவ்விசாரசருமருடைய திருமுதுகிலே அடித்துக் கொடுஞ்சொற்களைச் சொல்ல; அவருடைய மனம் பூசையிலேயே முழுவதும் பதிந்து கிடந்தமைபால், அது அவருக்குப் புலப்படவில்லை. பின்னும் எச்சதத்தன் கோபங்கொண்டு பலமுறையடிக்க; விசாரசருமர் அவ்வடியாலாகிய வருத்தந் தோன்றப் பெருதவராகி, அபிஷேகத் திருத்தொண்டினின்றுந் தவறாதிருந்தார். அவருடைய உள்ளன்பை அறியாத எச்சதத்தன் மிகக் கோபித்துத் திருமஞ்சனப் பாற்குடத்தைக் காலினால் இடறிச் சிந்தினன். உடனே விசாரசருமர் அதைக்கண்டு அது செய்தவன் பிதாவும் பிராமணனும் குருவுமாகிய எச்சதத்தனென்பதை அறிந்தும், அவன் செய்தது அதிபாதகமாகிய சிவாபராதமாதலால், அவன்காலைத் துணிக்கக் கருதித் தமக்குமுன், கிடந்த ஒரு கோலை எடுக்க, அது மழுவாயிற்று. அதினாலே அவன்கால் தனை வெட்டினர். சிவபூசைக்கு வந்த அவ்விடரை நீக்கினவ

ராகிய விசாரசருமர் முன்போல அருச்சனை செய்ய; சிவபெருமான் உமாதேவியாரோடும் இடபாரூடராய்த் தோன்றியருளினர். விசாரசருமர் அதுகண்டு மனங்களித்து விழுந்து நமஸ்கரித்தார். பரமசிவன் அவரைத் தம்முடைய திருக்கரங்களினல் எடுத்து, "நீ நம்பொருட்டு உன்னைப் பெற்ற பிதாவை வெட்டினாய். இனி உனக்கு நாமே பிதா" என்று அருளிச் செய்து, அவரை அணைத்து, அவருடைய திருமேனியைத் தடவி உச்சிமோந்தருளினர். சிவபிரானுடைய திருக்கரத்தினலே தீண்டப்பட்ட அவ்விசாரசருமருடைய திருமேனி சிவமயமாகித் திவ்வியப்பிரகாசத்தோடு விளங்கிற்று. பரமசிவன் அவரைநோக்கி, "நாம் நம்முடைய தொண்டர்களுக்கெல்லாம் உன்னைத் தலைவனாக்கி, நாம் ஏற்றுக்கொண்ட அமுதும் பரிவட்டமும் புஷ்பமும் உனக்கே கிடைக்கும்படி சண்டேசுரபதத்தைத் தந்தோம்" என்று திருவாய்மலர்ந்து, தம்முடைய சடையிலே தரித்திருக்கின்ற கொன்றைமாலையை எடுத்து அவருக்குச் சூட்டியருளினர். அவ்விசாரசருமர், சமஸ்தரும் ஆரவாரிக்கவும், எவ்விடத்தும் புஷ்பமழை பொழியவும், சிவகணங்கள் பாடியாடிக் களிகூரவும், வேதங்கள் கோஷிக்கவும், நானுபேதவாத்தியங்கள் முழங்கவும், சைவசமயம் நிலைபெறும்படி பரமசிவனைக் கும்பிட்டு, அவராலே தரப்பட்ட சண்டேசுரபதத்தை அடைந்தார். எச்சதத்தன் சிவத்துரோகஞ்செய்ததும், சண்டேசுரநாயனாலே தண்டிக்கப்பட்டமையால், அக்குற்றம் நீங்கிச் சுற்றத்துடன் சிவலோகத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

மும்மையா லுலகாண்டசருக்க முற்றுப்பெற்றது.

திருநின்றசருக்கம்.

திருநாவுக்கரசுநாயனார் புராணம்.

திருமுனைப்பாடி நாட்டிலே, திருவாமூரிலே, வேளாளர் குலத்திலே, குறுக்கையர் குடியிலே, புகழனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் பெயர் மாதினியார். அம்மாதினியார் வயிற்றிலே திலகவதியார் என்கின்ற புத்திரியார் பிறந்தார். அவர் பிறந்து சிலவருஷஞ் சென்றபின், சைவசமயம் அபிவிருத்தியாகும்படி மருணீக்கியார் என்கின்ற புத்திரர் அவதரித்தார். அவருக்குத் தந்தையார் உரிய பருவத்திலே வித்தியாப்பியாசஞ் செய்வித்தார். மருணீக்கியார், தந்தையாருக்குப் பெருமகிழ்ச்சியுண்டாகும்படி, பல கலைகளையுங் கிரமமாகக் கற்று வல்லவராயினர்.

திலகவதியாருக்குப் பன்னிரண்டு வயது பூனபொழுது, அப்புகழனார் மரபிற்கு ஒத்த மரபினையுடையவரும், சிவபக்தியிலே சிறந்தவரும், இராஜாவிடத்திலே சேனாதிபதியாயுள்ளவருமாகிய கலிப்பகையார் என்பவர், அப்புகழனாரிடத்திலே சில முதியோர்களை அனுப்பி, திலகவதியாருக்குந் தமக்கும் மணம் பேசுவித்தார். புகழனார் அதற்கு இசைந்தமை கண்டு, அம்முதியோர்கள் மீண்டு சென்று, கலிப்பகையாருக்குத் தெரிவித்தார்கள். கலிப்பகையார் தாம் விவாகஞ் செய்தற்குமுன், தம்முடைய அரசனது ஆஞ்ஞையினாலே சேனைகளோடும் சில காலிலே அவன் பகைஞராகிய வடதேசத்தரசரிருக்குமிடத்தைச்சேர்ந்து, அவர்களோடு நெடுநாள் யுத்தஞ் செய்தார். அங்கே அப்படி நெடுங்காலத்திலே, இங்கே புகழனார் தேகவியோகம் அடைந்தார். அப்பொழுது அவர் மனைவியாராகிய மாதினியார் சககமனஞ்செய்தார். அவர்கள் பிள்ளைகளாகிய திலகவதியாரும் மருணீக்கியாரும், சுற்றத்

தார்களோடு மிக மனக்கவலையுற்று, சுற்றத்தாருள் அறிவால் அமைந்த பெரியோர்கள் ஒருவாறு தேற்றத்தேறி, தந்தை தாயர்களுக்குச் செய்யவேண்டும் அந்தியகருமங்களை முடித்தார்கள்.

இங்கே இப்படி நிகழ, அங்கே கலிப்பகையார் யுத்தகளத்திலே தம்முடைய பூதவுடம்பை விட்டுப் புகழுடம்பைப் பெற்றுக்கொண்டார். அந்தச் சமாசாரந் திலகவதியாருக்குச் செவிப்புலப்பட அவர் "என்னுடைய பிதாமாதாக்கள் என்னை அவருக்கு மணஞ்செய்துகொடுக்க உடன்பட்டிருந்தமையால், இவ்வுயிர் அவருக்கே உரியது. ஆதலால் இவ்வுயிரை அவருயிரோடும் இசைவிப்பேன்" என்று சாவத்துணிந்தார். அது கண்ட மருணீக்கியார் வந்து, அத்திலகவதியாருடைய இரண்டு பாதங்களிலும் விழுந்து அழுது, "அடியேன் நம்முடைய பிதாமாதாக்கள் இறந்தபின்னும் உம்மையே அவர்களாகப் பாவித்துப் பூசிக்கலாம் என்றன்றே உயிர்வைத்துக் கொண்டிருக்கின்றேன். அடியேனைத் தனியே கைவிட்டிறப்பீராயின், அடியேன் உமக்கு முன்னமே இறந்து விடுவேன்" என்றார். திலகவதியார் அதைக்கேட்டு, தம்பியார் உயிரோடு இருக்கவேண்டும் என்னும் ஆசையால் தமது கருத்தைத் தடுத்து உயிர்தாங்கி, வேறொருவரையும் விவாகஞ்செய்து கொள்ளாமல், சிவகாருண்ணியம் உள்ளவராகி, வீட்டிலே தவஞ்செய்துகொண்டிருந்தார்.

மருணீக்கியார் யாக்கை நிலையாமையையும் செல்வ நிலையாமையையும் நினைந்து தருமஞ்செய்ய விரும்பி, அன்புடனே திரவியங்களைச் செலவழித்து, அறச்சாலைகளையும் தண்ணீர்ப்பந்தர்களையும் அமைத்தார்; சோலைகளை வைப்பித்தார்; குளங்களைத் தோண்டுவித்தார்; விருந்தினரை உபசரித்தார்; புலவர்களுக்குக் கனகமாரி பொழிந்தார். பிரபஞ்ச வாழ்வினது அநித்தியத்துவத்தை அறிந்து இல்வாழ்க்கையிலே புகாமல் எல்லாவற்றையும் துறந்தார். எல்லாச்சமயங்களுள்ளும் சற்சமயம் இது என்று அறியுமறிவு அவருக்குத் தலைப்பட வில்லை. அவர் பாடலிபுத்திரம் என்னும் நகரத்திற் சென்று, சமணர்களுடைய பள்ளியையடைந்து, அங்குள்ள சமணர்க

ளுடைய போதனைசத்தியினாலே அவர்கள் அநுட்டிக்கின்ற ஆருகதசமயமே முத்தியை அடைதற்குத் தகுந்த நெறி யென்று துணிந்து, அந்தச்சமயத்திலே பிரவேசித்தார். பிரவேசித்த அம்மருணீக்கியார் அந்தச் சமணசமயநூல்களெல்லாவற்றையும் கற்று, அவைகளிலே மகாபாண்டித்தியம் உடையவராயினர். அதுகண்ட சமணர்கள் அவருக்குத் தருமசேனர் என்று பெயரிட்டு, அவரைத் தங்கள் மதாசாரியராகக்கொண்டு வழிபட்டார்கள். அவர் தமது வித்தியாசாமர்த்தியத்தினாலே பௌத்தர்களை வாதிலே வென்று புகழ் பெற்று, ஆருகதசமயாசாரியர்களுக்குள்ளே சிரேஷ்டராய் இருந்தார். அது நிற்க.

திருவாமூரிலே இருந்த திலகவதியார் சிவபெருமானிடத்திலே பத்தி மிகுந்து, சிவபுண்ணியங்கள் செய்யவிரும்பி, கெடிலநதிக்கு வடகரையில் இருக்கின்ற திருவதிகைவீரட்டானம் என்னுந் திருப்பதியிற் சென்று பரமசிவனை வணங்கி, சிவசின்னங்களைத் தரித்து, தினந்தோறும் சூரியோதயத்துக்கு முன்னே திருக்கோயிலின் உள்ளும் புறமும் திருவலகிடுதல், கோமயத்தினாலே மெழுகுதல், திருநந்தனவனங்களிற் சென்று புஷ்பங்களைப் பறித்துக்கொண்டுவந்து திருமாலை தொடுத்துச் சுவாமிக்குச் சாத்தக்கொடுத்தல் முதலாகிய சிவபுண்ணியங்களைச் செய்துவந்தார். செய்துவருநாளிலே, தம்முடைய தம்பியாராகிய மருணீக்கியார் கபடமார்க்கமாகிய ஆருகதத்திலே பிரவேசித்தமையை நினைந்து, துக்கசாகரத்தில் அமிழ்ந்தி, வீரட்டானேசுரரை வணங்கி, "சர்வாபீஷ்டவரதரே, தேவரீர் அடியேனை ஆட்கொள்பவர் என்பது சத்தியமாயின், தவமென்று சொல்லிப் பாயை இடுக்கித் தலைமயிரைப் பறித்தெறிந்துவிட்டு நின்றுகொண்டே உண்கின்ற சமணர்களுடைய கபடமார்க்கமாகிய படுகுழியிலே விழுந்த தமியேனுடைய தம்பியை அதினின்றும் தூக்கிக் காப்பாற்றியருளல்வேண்டும்" என்று பலமுறை விண்ணப்பஞ் செய்தார். பரமசிவன் திலகவதியாருக்குச் சொப்பனத்திலே தோன்றி, 'தபோதனியே, நீ உன் மனக்கவலையை ஒழி. உன்னுடைய தம்பி துறவியாகி நம்மை அடையும்பொருட்டுப் பூர்வசன்

மத்திலே தவஞ்செய்திருக்கின்றான். அந்தத் தவத்திற் சிறிது வழுவுற்றதினாலே அந்நியமதத்திலே பிரவேசித்தான். இனி அவனைச் சூலைநோயினால் வருத்தி ஆட்கொள்வோம்" என்று சொல்லி மறைந்தருளினார்.

பரமசிவன் திருவாய்மலர்ந்தருளியபடியே, அவருடைய திருவருளினாலே, தருமசேனருடைய வயிற்றிலே கொடிய சூலைநோய் உண்டாகிக் குடலைக் குடைதலுற்றது. அதனால் அவர் வருந்தி நடுக்கமுற்று, சமண்பாழியறையில் விழுந்தார். தமக்குக் கைவந்த சமணசமய மந்திரோச்சாரணத்தால் தடுக்கவும், அச்சூலைநோய் தடைப்படாமல் மேற்கொண்டது. மேற்கொள்ளவே, சர்ப்பவிஷந் தலைக்கொண்டாற்போல மயங்கி மூர்ச்சை அடைந்தார். அது கண்ட சமணர் பலர் வந்து கூடி, "இந்தச் சூலைநோய்போலக் கொடிய நோய் முன்னொரு போதும் கண்டறியோம். இதற்கு யாது செய்வோம்" என்று துக்கமுற்று, பின் கமண்டலத்தில் இருக்கின்ற ஜலத்தை அபிமந்திரித்துக் குடிப்பித்தார்கள். அதனாலே தணியாமையால், மயிற்பீலிகொண்டு காலளவும் தடவினார்கள். அதினாலுந் தணியாமல், சூலைநோய் முன்னிலும் அதிகப்பட; தருமசேனர் அதைச் சகிக்கலாற்றுதவராய்த் துன்பப்பட்டார். சமணர்கள் அதுகண்டு, "ஐயோ! இதற்கு நாம் யாது செய்வோம்" என்று மனங்கலங்கி, "இந்நோயை நீக்குதற்கு நாம் வல்லமல்லேம்" என்று சொல்லிக்கொண்டு, அவரைக் கைவிட்டுப் போயினார்கள். பின் தருமசேனர் தம்முடைய சகோதரியாகிய திலகவதியாரை நினைந்து அவரே தமக்கு உதவி செய்யவல்லர் எனத் துணிந்து தம்முடைய சமாசாரத்தை அவருக்கு உணர்த்தும்பொருட்டு, தம்முடைய பாகுகனை அவ்விடத்துக்கு அனுப்பினார். அப்பாகுகன் திருவதிகையிற் சென்று, அத்திலகவதியாரை ஒரு திருநந்தனவனத்துக்குச் சமீபத்திலே கண்டு வணங்கி, "நான் உம்முடைய தம்பியார் ஏவினால் இவ்விடத்துக்கு வந்தேன்" என்று சொல்ல; திலகவதியார் "தம்பியாருக்கு யாதாயினும் தீங்கு உண்டா" என்றார். அதற்கு அவன் "ஆம், அவர் கொடிய சூலைநோயினால் மிக வருந்துகின்றார். சமணர்களெல்லாரும் அந்நோ

யைத் தீர்த்தற்கு வன்மையின்மையால், அவரைக் கைவிட்டு விட்டார்கள். அவர் அது கண்டு, என்னை நோக்கி அந்தச் சமாசாரத்தைச் சகோதரியாராகிய உமக்குத் தெரிவித்து, தாம் உய்யும் நெறியைக் கேட்டுக்கொண்டு இரவிலே தம்மிடத்துக்கு வரும்பொருட்டு என்னை ஏவினர்'' என்றான். திலகவதியார் ''பதிதராகிய சமணர்களுடைய பள்ளிக்கு நான் வரேன். இதைத் தம்பிக்குச் சொல்லு'' என்றார். அது கேட்ட பாலகன் மீண்டு தருமசேனரிடத்திற் சென்று, அதைத் தெரிவிக்க; தருமசேனர் ''இனி இதற்கு யாது செய்வேன்'' என்று சோகித்தார்.

அப்பொழுது சிவபெருமானுடைய திருவருள் கூடுதலால், மருணீக்கியார் ''இந்தத் துர்ச்சமயமாகிய ஆருகதமார்க்கப் பிரவேசத்தால் என்னை வருத்தும் இந்நோய் நீங்கும்படி, சற்சமயமாகிய சைவசமயத்தை அநுட்டிக்கின்ற திலகவதியாருடைய திருவடிகளை அடைவேன்'' என்று கருதினர். அக் கருத்துப் பிடித்தெழுப்ப எழுந்து, சமணர்களுடைய ஸ்தானத்தைக் கடந்து, உடுத்த பாயையும் உறியில் உற்ற கமண்டலத்தையும் மயிற்பீலியையும் நீக்கி வஸ்திரந்தரித்து, தமக்குப் பற்றுக்கோடாகக் கைதந்து வருகின்றவர்களைப் பற்றிக் கொண்டு, ஒருவருங் காணுதபடி இரவிலே ஆருகதமார்க்கப் பிரவேசத்தால் தமக்குக் கிடைத்தவைகளில் சூலைநோய் ஒன்றுமாத்திரம் உடன்றொடர, திருவதிகைபிற் சென்று, திலகவதியாருடைய திருமடத்தை அடைந்து, அவருடைய திருவடிகளை நமஸ்கரித்து, ''நமதுகுலத்தார் செய்த தவப்பயனெல்லாம் திரண்டு ஒரு வடிவெடுத்தாற்போலும் அம்மே, அடியேன் கொடிய சூலைநோயைச் சகிக்கலாற்றுமையால், உம்மையே கதியென்று அடைந்தேன். இனித் தமியேன் உய்ந்து கரையேறும் வழியை அருளிச்செய்யும்'' என்று விண்ணப்பஞ்செய்து, பாதத்திலே விழுந்து அயர்ந்தார். திலகவதியார் தம்பியாரை நோக்கி, தமக்குச் சொப்பனத்திலே பரமசிவன் அருளிச்செய்தபடி முடித்ததை நினைந்து, மனங் கசிந்துருகிக் கடவுளை அஞ்சலிசெய்துகொண்டு, ''அறியாமையினாலே பரசமயப் படுகுழியில் விழுந்து கொடுந்துய

ரத்தை அனுபவிக்கின்ற தம்பியாரே எழுந்திரும்" என்றார். தம்பியார் சூலநோயுடனே நடுக்கமுற்று எழுந்து, அஞ்சலி செய்தார். திலகவதியார் "இது பரமசிவனுடைய திருவருளே, தம்முடைய திருவடிகளே யடைந்த மெய்யன்பர்களுக்கு இன்னருள்புரியும் அக்கடவுளையே வணங்கி அவருக்கே திருத்தொண்டு செய்யும்" என உபதேசித்தார். உடனே மருணீக்கியார் அவ்வுபதேசத்தை ஏற்றுக்கொண்டு, வணங்கி நிற்க; திலகவதியார் திருவருளே நினைந்து, அவருக்கு விபூதியை ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதிக் கொடுத்தார். மருணீக்கியார் மிகுந்த ஆசையோடு வணங்கி அவ்விபூதியை வாங்கி, சரீரமுழுதிலும் அணிந்துகொண்டார்.

திலகவதியார் திருப்பள்ளியெழுச்சியிலே, திருவலகும் திருமெழுக்கும் தொண்டியும் எடுத்துக்கொண்டு, திருக்கோயிலுக்குத் தம்பியாரை அழைத்துக்கொண்டு போனார். மருணீக்கியார் வீரட்டானேசுரரைப் பிரதக்ஷிணஞ் செய்து, சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று, அவருடைய திருவருளினாலே தமிழ்ச்செய்யுள்பாடுஞ் சக்தி உண்டாகப்பெற்று, தம்முடைய சூலநோய் நீங்கும்பொருட்டும், பிற்காலத்திலே அன்போடு ஓதுகின்ற யாவருடைய துன்பமும் நீங்கும்பொருட்டும், சிவபெருமான்மேல் "கூற்றாயின வாறு விலக்ககிலீர்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். உடனே சூலநோய் நீங்கிற்று. அப்பொழுது மருணீக்கியார் தமக்கு உயிரையுந்தந்து முத்திநெறியையுந்தந்த சிவபெருமானுடைய திருவருளாகிய கடலில் அமிழ்ந்தி, திருமேனிமுழுதிலும் உரோமாஞ்சங்கொள்ள, இரண்டு கண்ணினின்றும் ஆனந்தபாஷ்பஞ்சொரிய, நிலத்திலே விழுந்து, புரண்டு, "சமணசமயப் படுகுழியிலே விழுந்து எழுமாறு அறியாது மயங்கிய பாவியேன் சிவபெருமானுடைய திருவடியை அடைதலாகிய இந்தப் பேரின்பவாழ்வைப் பெறும்படி செய்த சூலநோய்க்கு என்ன பிரதியுபகாரஞ் செய்வேன்" என்றார். இப்படி நிகழும்பொழுது, வீரட்டானேசுரருடைய திருவருளினால், "நீ அற்புத சின்மய மதுரமாகிய தேவாரப் பதிகத்தைப் பாடினபடியால், உனக்கு நாவுக்கரசு என்னும் பெயரே

சத்தலோகங்களினும் வழங்குக'' என்று சமஸ்தருக்கும் ஒரு வியப்புத் தோன்றும்படி ஓர் அசரீரிவாக்கு ஆகாயத்திலே தோன்றிற்று. அதைக் கேட்ட திருநாவுக்கரசுநாயனார் ''சிவ பெருமான் இத்தனை நெடுங்காலமாகத் தம்மை நிந்தித்த சிறி யேனுக்கு இந்தப் பெருவாழ்வைத் தந்தருளினரே'' என்று களிகூர்ந்து, அத்தன்மையனாகிய இராவணனுக்கு அருளிய கருணையின் மெய்த்தன்மையை அறிந்து துதிப்பதையே மேற்கொண்டு வணங்கினர். ''திருநாவுக்கரசுநாயனர் சமண சமயம் பொய்மார்க்கம் என்பது யாவருக்கும் புலப்படும்படி சைவசமயத்திலே பிரவேசித்து அருள்பெற்றபடியால் உல கம் உய்ந்தது உய்ந்தது'' என்று சொல்லி, திருவதிகையி லுள்ள சமஸ்த சனங்களுங் களிப்புற்றார்கள். திருநாவுக்கரசு நாயனார், மனம் வாக்குக் காயம் என்னுந் திரிகரணங்களாலும் திருத்தொண்டு செய்யவேண்டும் என்னும் ஆசை மிகுதலால், சிவசின்னங்களைத் தரித்துக்கொண்டு, தியானமருவுணர்வும் தடையின்றி யெழுகின்ற துதிரூபமாகிய வாசகமும் உழவா ரப் பணிவிடையும் உடையவராயினர். திலகவதியார் தம் முடைய வேண்டுகோளின்படி சிவபெருமான் தம்முடைய தம்பியாரை ஆட்கொண்ட பெருங்கருணைத்திறத்தை நினை ந்து மகிழ்ந்து வணங்கினர்.

இந்தச் சமாசாரத்தைப் பாடலிபுத்திரத்தில் இருக் கின்ற சமணர்கள் கேள்வியுற்று, பொறுமைகொண்டு, ''மாறு பட்ட பல சமயங்களையும் வாதில் வென்று நமது சமயத்தை ஸ்தாபித்த தருமசேனர் தமக்கு வந்த சூலைநோய் இங்கே ஒருவராலும் நீங்காமையால் உய்யும் நெறியை நாடித் திரு வதிகையிற் சென்று, முன்போலச் சைவத்திலே பிரவேசித்து, அந்நோய் நீங்கி உய்ந்துவிட்டார். இனி நமது சமயம் அழிந் தது அழிந்தது'' என்று துக்கித்து, தலையும் பீலியுந் தாழ ஓரிடத்திலே ஒருங்கு கூடினர்கள். கூடிய சமணர்கள் ''தரும சேனருக்கு வந்த சூலைநோய் நம்மொருவராலும் நீங்காமல் சைவசமயப்பிரவேசத்தால் நீங்கிவிட்ட உண்மையை நம்மு டைய அரசன் அறிந்தானுகில், நம்மேற் கோபங்கொண்டு, தானுஞ் சைவனுகி, நம்முடைய விருத்தியையும் தவிர்ப்பான்

இனி இதற்கு யாது செய்வோம்'' என்று சொல்லித் தங்க ளுள்ளே ஆலோசித்து, வஞ்சனையாகிய ஒருபாயத்தைத் தெரிந்துகொண்டு, பல்லவராஜனுடைய நகரத்திற் சென்று, அரமனையினுள்ளே புகுந்து, அவ்வரசனை நோக்கி, ''மகா ராஜாவே, எங்களெல்லாருக்குந் தலைவராய் இருந்த தரும சேனர், தம்முடைய சகோதரியாராகிய திலகவதியார் சைவ சமயத்திலே நிற்கின்றபடியால், தாமும் அவர்போலாக விரு ம்பி, தமக்குச் சூலைநோய்வந்ததாகக் காட்டி, அது நம்மாலே தீர்ந்திலது என்று அவரிடத்திற் சென்று, முன்போலச் சைவசமயத்திலே பிரவேசித்து, நம்முடைய கடவுளை நிந்தை செய்தனர்'' என்று சொன்னார்கள். உடனே பல்லவராஜன் கோபங்கொண்டு, ''இதற்கு யாதுசெய்யலாம்'' என்றான். அது கேட்ட சமணர்கள் ''உத்தமமாகிய நமது சமய மகிமை யைக் கெடுத்து உம்முடைய ஆஞ்ஞையையுங் கடந்த அந்தத் தருமசேனரை நீர் அழைப்பித்துத் தண்டிக்கவேண்டும்'' என்றார்கள். அப்பொழுது அரசன் மந்திரிமாரை நோக்கி, ''இம்முனிவர்களாற் சுட்டப்பட்ட தீயோனைப் பிடித்துக் கொண்டு வாருங்கள்'' என்று ஆஞ்ஞாபித்தான்.

உடனே மந்திரிமார் சேனைகளோடு போய், திருவதி கையை அடைந்து, திருநாவுக்கரசுநாயனரிடத்திற் சென்று, ''எங்கள் அரசன் இன்றைக்கு உம்மை அழைத்துக்கொண்டு வரும்படி எங்களை அனுப்பினன் வாரும்'' என்றார்கள். அது கேட்ட திருநாவுக்கரசுநாயனர் ''நாமார்க்குங் குடியல்லோம்'' என்னும் மறுமாற்றத்திருத்தாண்டகத்தைப் பாடி, ''நாம் நீங்கள் அழைத்தபடியே வரக்கடவேமல்லேம்'' என்றார். அது கேட்ட மந்திரிமார்கள் அவரை வணங்கிப் பிரார்த் தித்து அழைக்க; ''அவர் அடியேனுக்கு வரும் அபாயங் களுக்கெல்லாம் சிவபெருமான் இருக்கின்றார்'' என்று போத தற்கு உடன்பட்டார். அவர்கள் அழைத்துக்கொண்டுபோய், அரசனெதிர் சென்று அறிவித்தார்கள். அரசன் அதைக் கேட்டு, பக்கத்திலிருந்த சமணர்களை நோக்கி, ''இனி இவ னுக்கு யாதுசெய்வோம்'' என்று கேட்க; சமணர்கள் ''நீற்ற றையில் இடல்வேண்டும்'' என்றார்கள். அரசனது சமீபத்தில்

நின்ற ஏவலாளர்களை நோக்கி, "இவனை இவர்கள் சொல்லிய படியே செய்யுங்கள்" என்று ஆஞ்ஞாபிக்க; அவர்கள் அந் நாயனாரைச் சூட்டினையுடைய நீற்றறையினுள்ளே விட்டுக் கதவைப் பூட்டினர்கள். திருநாவுக்கரசுநாயனர் பரமசிவ னுடைய திருவடி நிழலைத் தலைக்கொண்டு, "சிவனடியார் களுக்கு இவ்வுலகத்திலே துன்பம் வருவதுண்டோ" என்று அக்கடவுளைத் தியானித்து, "மாசில் வீணையு மாலை மதிய மும்" என்னுந் திருக்குறுந்தொகையைப் பாடித் தொழுது கொண்டு, அந்த நீற்றறையினுள்ளே எழுந்தருளியிருந்தார். அந்நாயனர் சிவபெருமானுடைய திருவடி நிழலாகப் பாவித்த அந்நீற்றறை, வீணகானமும் சந்திரனும் தென்றலும் இள வேனிலும் பொய்கையும்போலக் குளிர்ந்தது.

ஏழுநாட் சென்றபின், பல்லவராஜன் சமணர்களை அழைத்து, "நீற்றறையைத் திறந்து பாருங்கள்" என்று சொல்ல; அவர்கள் நீற்றறையைத்திறந்து, நாயனர் யாதொரு ஊனமும் இன்றிக் களிப்புற்றிருத்தலைக் கண்டு, ஆச்சரிய மடைந்து, அரசனிடத்திற் சென்று, "அவன் முன்னே நம் முடைய சமயத்தில் இருந்து செய்த மந்திரசாதகத்தினாலே வேவாமற் பிழைத்துக்கொண்டான். இனி அவனுக்கு நஞ்சு ஊட்டுவதே தகும்" என்றார்கள். அரசன் "அப்படியே செய் யுங்கள்" என்று சொல்ல; அவர்கள் நாயனாருக்கு நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்ணக் கொடுத்தார்கள். நாயனர் அவர்களுடைய வஞ்சனையை அறிந்து, "நஞ்சை அமுதாகக் கொண்ட கடவுளுடைய அடியார்களுக்கு நஞ்சும் அமுதாம்" என்று நஞ்சு கலந்த அந்தப் பாற்சோற்றை உண்டு இருந் தார். சமணர்கள் அதைக்கண்டு, "இவனுக்கு நஞ்சும் அமுத மாயிற்று. இவ்விடத்திலே இவன் பிழைப்பானையில் நமக் கெல்லாம் நாசமுண்டாகும்" என்று பயந்து, அரசனிடத்திற் சென்று, "நாம் நஞ்சைச் சோற்றிலே கலந்து உண்பித்தும், நம்முடைய சமயநூல்களிலே கற்றுக்கொண்ட மந்திர வலியி னாலே பிழைத்துவிட்டான். அவன் இறவாதிருப்பானாகில், எங்கள் உயிரும் உம்முடைய அரசாட்சியும் நீங்குவது திடம்" என்றார்கள்.

அரசன் அதைக்கேட்டு, "இனி அவனைக் கொல்லுதற்கு உபாயம் யாது" என்று கேட்க, சமணர்கள் 'உம்முடைய யானையை அவனுக்கு எதிரே விடுவதே உபாயம்" என்றார்கள். அரசனும் அப்படிச் செய்யும்பொருட்டு ஆஞ்ஞாபிக்க; துஷ்டர்களாகிய சைனர்கள் நாயனருக்கு எதிரே யானையைக் கொண்டுவந்து விட்டார்கள். நாயனர் சிறிதும் பயமின்றி, சிவபெருமானுடைய திருவடிகளைச் சிந்தித்து, அவ்யானையை நோக்கி, "சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ்" என்று திருப்பதிகமெடுத்து, திருப்பாட்டிறுதிதோறும், "கெடிலப்புனலு முடையா ரொருவர் தமர்நா—மஞ்சுவ தியா தொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை" என்று பாடியருளினர். யானையானது அந்நாயனரை வலஞ்செய்து, எதிராக நிலத்திலே தாழ்ந்து இறைஞ்சி எழுந்து அப்புறம் போக; அதின்மேலிருந்த பாகர்கள் அதனை அங்குசத்தினாலே குத்தித் திருப்பி அவரைக் கொல்லவேண்டும் என்கின்ற குறிப்பைக் காட்டினர்கள். அது அப்படிச் செய்யாமல், துதிக்கையினால் அவர்களை எடுத்து வீசிக் கொன்றுவிட்டு, வெவ்வேறிடங்களிலுள்ள சமணர்களைத் தேடித் தேடி ஓடி, அவர்களைத் தள்ளி மிதித்துக் கிழித்தெறிந்து கொன்று, அந்நகரத்தில் உள்ளவர்களெல்லாரும் கலங்கும்படி அரசனுக்கு ஆகுலத்தை விளைவித்தது.

அவ்யானைக்குத் தப்பிய சமணர்களெல்லாரும் மானமழிந்து மயங்கி மனம் வருந்தி, அரசனையடைந்து, "தருமசேனன் நம்முடைய சமயநூல்களிலே கற்றுக்கொண்ட மந்திரத்தின் பலத்தினாலே நாங்கள் விட்ட யானையைக் கொண்டே எங்கள் வலிமையைச் சிதைத்தான்" என்று சொல்லிப் புலம்பினர்கள். அரசன் கோபங்கொண்டு, "இனி அவனுக்கு யாது செய்யவேண்டும்" என்று கேட்க; சமணர்கள் "அவனைக் கல்லோடு சேர்த்துக் கயிற்றினாலே கட்டிக் கடலிலே தள்ளவேண்டும்" என்றார்கள். அரசன் கொலைத்தொழில் செய்வோரை நோக்கி, "தருமசேனனைக் காவலோடுகொண்டு போய், ஒரு கல்லோடு சேர்த்துக் கயிற்றினாலே கட்டி ஒரு படகில் ஏற்றி, சமுத்திரத்திலே விழும்படி தள்ளிவிடுங்கள்"

என்று ஆஞ்ஞாபித்தான். கொலைத்தொழில் செய்வோர் அதைக்கேட்டு, சமணர்களும் உடன்செல்ல, அச்சஞ் சிறிது மில்லாத திருநாவுக்கரசுநாயனரைக் கொண்டுபோய், அரசன் சொல்லியபடியே கடலிலே தள்ளிவிட்டுத் திரும்பினர்கள்.

சமுத்திரத்திலே தள்ளிவிடப்பட்ட திருநாவுக்கரசுநாயனர் "அடியேனுக்கு யாது நிகழினும் நிகழுக. அடியேன் எம் பெருமானைத் தோத்திரம் பண்ணுவேன்" என்று நினைந்து, "சொற்றுணை வேதியன்" என்னு நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாட; சமுத்திரத்திலே கல்லானது நாயனர் மேற்பக்கத்திலிருக்கத் தெப்பமாய் மிதந்தது. கட்டிய கயிறோ அறுந்து போயிற்று. வருணபகவான் கல்லே சிவிகையாக அந்நாயனரைத் தாங்கிக்கொண்டு திருப்பாதிரிப்புலியூர் என்னுஞ் சிவஸ்தலத்தின் பக்கத்திலே சேர்த்தான். நாயனர், அந்தத் திருப்பதியினின்றும் அரசுவென்னுமோசையுடன் தம்மை எதிர்கொண்ட சிவனடியார்களோடு, ஆலயத்திற் சென்று, சுவாமியை வணங்கி, "என்றுளுமாய்" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு, அங்கே சிலநாள் எழுந்தருளியிருந்தார்.

பின் திருவதிகைவீரட்டானேசுரரைத் தரிசிக்கவேண்டும் என்னும் பேராசையினால் அவ்விடத்தினின்றும் பிரஸ்தானமாகி, திருமாணிகுழியையும் திருத்தினைநகரையும் வணங்கிக்கொண்டு, திருக்கெடில நதியைக் கடந்து சென்றார். அந்நாயனர் சமணர்கள் செய்த இடர்களனைத்தையும் ஜயித்து வருதலைக் கேள்வியுற்ற திருவதிகைவாசிகள் சமஸ்தரும் அவ்வூரை மிக அலங்கரித்து, மங்கலவாத்தியங்கள் முழங்க அவரை எதிர்கொண்டு நமஸ்கரித்தார்கள். விபூதியை உத்தூளனஞ்செய்த திருமேனியையும் தாழ்வடத்தையும் சிவனுடைய திருவடிகளே மறவாத சிந்தையையும் ஆனந்தபாஷ்பம் பொழிகின்ற கண்களையும் திருப்பதிகங்கள் தோன்றுகின்ற திருவாயையுமுடைய நாயனர், தம்மை எதிர்கொண்ட சனங்களோடு ஆலயத்திற்சென்று, சுவாமியை வணங்கி "வேறிலிரவு கூவிளம்" என்னும் ஏழைத்திருத்தாண்டகத்தை எடுத்து "ஏழையேனெனும் பண்டிகழ்ந்தவாறே" என்று பாடினர்.

நாயனர் வீரட்டானேசுரர்மேலே பின்னும் பல திருப்பதிகங்களைப் பாடிப் பணிசெய்துகொண்டிருக்குநாளிலே, சமணர்களுடைய தூர்ப்போதனைக்கு இசைந்து தீங்கு செய்துகொண்டிருந்த பல்லவராஜன் அத்திருவதிகையிலே வந்து, நாயனரை வணங்கி, சைவசமயத்திலே பிரவேசித்தான். சமணசமயம் பொய்யென்றும் சைவசமயமே மெய்யென்றும் அறிந்துகொண்ட காடவனென்பவனும் பாடலிபுத்திரத்திலிருந்த சமணருடைய பள்ளிகளையும் பாழிகளையும் இடித்து, அவைகளின் கற்களைத் திருவதிகையிலே கொண்டுவந்து, பரமசிவனுக்குக் குணதரவீச்சரம் என்னுங் கோயிலைக் கட்டினன்.

அந்நாட்களிலே திருநாவுக்கரசுநாயனர் சிவஸ்தலங்கள் பலவற்றிற்குஞ் சென்று சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகம் பாட விரும்பி, அவ்விடத்தினின்றும் நீங்கி, திருவெண்ணெய்நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலிய திருப்பதிகளை வணங்கிப் பதிகம் பாடிக்கொண்டு, பெண்ணாகடத்திற்சென்று, திருத்தூங்கானைமாடமென்னும் ஆலயத்திற்பிரவேசித்து, சுவாமியை வணங்கி, "சுவாமீ, அடியேன் இழிவினையுடைய சமணசமயத் தொடக்குண்டு வருந்திய இத்தேகத்துடனே உயிர்வாழ்தற்குத் தரியேன். அடியேன் றரிக்கும் பொருட்டுத் தேவரீருடைய இலச்சினை * யாகிய சூலத்தையும் இடபத்தையும் அடியேன்மேற் பொறித்தருளவேண்டும்" என்னுங் கருத்தால் "பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்" என்னுந் திருப்பதிகம் பாடினர். உடனே பரமசிவனுடைய திருவருளினால் ஒரு சிவபூதம் மற்றொருவருக்கும் தெரியாதபடி அவ்வாகீசருடைய திருத்தோளிலே சூலக்குறியையும் இடபக்குறியையும் பொறித்தது. நாயனர் தம்முடைய திருத்தோளிலே பொறிக்கப்பட்ட இலச்சினைகளைக் கண்டு மனமகிழ்ந்து, திருவருளை நினைந்து கண்ணீர்சொரிய விழுந்து நமஸ்கரித்து எழுந்தார். அவர் அந்த ஸ்தலத்தில் இருக்கின்ற நாளிலே, திருவரத்துறைக்கும் திருமுதுகுன்றுக்கும் போய், சுவாமிதரிசனஞ் செய்து

* இலச்சினை - முத்திரை.

திருப்பதிகம் பாடி, கிழக்கே நிவாக்கரையின் வழியாக நடந்து சிதம்பரத்திலே சென்று, கனகசபையிலே ஆனந்ததாண்டவஞ் செய்தருளுகின்ற சபாநாயகரைத் தரிசித்து விழுந்து நமஸ்கரித்து எழுந்து, இரண்டு கைகளும் சிரசின்மேலேறிக் குவிய, இரண்டு கண்ணினின்றும் ஆனந்த பாஷ்பஞ்சொரிய, அக்கினியிற்பட்ட வெண்ணெய்போல மனங்கசிந்துருக, என்று வந்தாய் என்னுந் திருக்குறிப்போடு நிருத்தஞ்செய்கின்ற சுவாமியுடைய திருநயனத்தினின்றும் பொழிகின்ற திருவருளாலாகிய ஆனந்தமேலீட்டினாலே "கருநட்டகண்டனே" என்னுந் திருவிருத்தமும் "பத்தனாய்ப் பாடமாட்டேன்" என்னுந் திருநேரிசையும் பாடினர். அவர் சுவாமி தரிசனம் பண்ணி, திருக்கோயிற்றிருமுற்றத்தினும் திருவீதிகளினும் உழவாரப் பணிசெய்துகொண்டு சிலநாள் அங்கே எழுந்தருளியிருந்தார். அப்பொழுது "அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்" என்னுந் திருக்குறுந்தொகை பாடினர். பின் திருவேட்களத்துக்குச் சென்று, சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடி, திருக்கழிப்பாலையை அடைந்து சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு, சிலநாள் அங்கே இருந்தார். பின் அவ்விடத்தினின்றும் நீங்கி, வழியிலே "பனைக்கை மும்மத வேழ முரித்தவன்" என்று எடுத்து "அம்பலக் கூத்தனை—தினைத்தனைப்பொழுதும்மறந் துய்வனே" என்னுந் திருக்குறுந்தொகை பாடிக்கொண்டு, சிதம்பரத்தை அடைந்து, "அரியானை யந்தணர் தஞ் சிந்தை யானை" என்னும் பெரிய திருத்தாண்டகம் பாடிக்கொண்டு திருக்கோயிலிற் சென்று, சபாநாதரைத் தரிசித்து வணங்கி, "செஞ்சடைக் கற்றை முற்றத் தளிநிலா வெறிக்கும்" என்னுந் திருநேரிசை பாடினர்.

திருநாவுக்கரசுநாயனர் அங்கே பாடற்றொண்டும் உழவாரத் தொண்டுஞ் செய்துகொண்டிருக்குநாளில், ஒருநாள், சீர்காழியிலே பரமசிவனது திருவருளினால் உமாதேவியார் ஞானப்பாலை ஊட்ட உண்டு வேதார்த்தங்களைத் தமிழிலே தேவாரமாகப் பாடியருளுகின்ற திருஞானசம்பந்தமூர்த்தி நாயனருடைய மகிமையை அடியார்கள் சொல்லக்கேள்வி

யுற்று, அவருடைய திருவடிகளே வணங்கல்வேண்டும் என்னும் ஆசைமிகுதியினால், சபாநாயகரைத் தொழுது அநுமதி பெற்றுக்கொண்டு புறப்பட்டு, திருவீதியிலே அங்கப்பிரதக்ஷிணஞ்செய்து, அத்திருப்பதியின் எல்லையைக் கடந்து, திருநாரையூரைப் பணிந்து பாடி, சீர்காழிக்குச் சமீபித்தார். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் சீர்காழிக்குத் திருநாவுக்கரசுநாயனர் வருதலைக் கேள்வியுற்று, அத்தியந்த ஆசையோடு அடியார்கள் பக்கத்திலே சூழ அவரை எதிர்கொண்டார். திருநாவுக்கரசுநாயனர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரிக்க; அவர் தம்முடைய திருக்கரங்களினால் இவருடைய திருக்கரங்களைப் பிடித்து எடுத்து, தாமும் அஞ்சலிசெய்து, "அப்பரே" என்றார். அதற்குத் திருநாவுக்கரசுநாயனர் "அடியேன்" என்றார். அவ்விருவரும் தாங்கள் ஒருவரை ஒருவர் காணப்பெற்றதனால் மிகமனமகிழ்ந்து, ஆலயத்திற்சென்று, சுவாமியை வலங்கொண்டு நமஸ்கரித்து எழுந்தார்கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அப்பமூர்த்தியைநோக்கி, "அப்பரே உம்முடைய சுவாமியைப்பாடும்" என்று சொல்ல இவர் திருப்பதிகம் பாடி, திருஞானசம்பந்தமூர்த்திநாயனருடைய திருமடத்திற் சென்று, அவரோடு அளவளாவிப் பலநாள் இருந்தார்.

ஒருநாள் திருநாவுக்கரசுநாயனர் சோழமண்டலத்திலுள்ள சிவஸ்தலங்களெல்லாவற்றையும் வணங்கவேண்டும் என்று தமது திருவுள்ளத்தே தோன்றிய ஆசையைத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனருக்கு விண்ணப்பஞ்செய்து, அவரோடும் திருக்கோலக்காவிற்குச் சென்று, சுவாமிதரிசனம் பண்ணினர். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அவ்விடத்தினின்றும் மீண்டருளினர். அப்பமூர்த்தி, திருக்கருப்பறியலூர், திருப்புன்கூர், திருநீடூர், திருக்குறுக்கை, திருநின்றியூர், திருநனிபள்ளி முதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, காவேரியாற்றின் இருகரைவழியாகவுஞ் சென்று, திருச்செம்பொன்பள்ளி, திருமயிலாடுதுறை, திருத்துருத்தி, திருவேள்விக்குடி, திருவெதிர்கொள்பாடி, திருக்கோடிகா, திருவாவடு

துறை, திருவிடைமருதூர், திருநாகேச்சரம், திருப்பழை யாறை என்கின்ற ஸ்தலங்களைப் பணிந்து பாடி, திருச்சத்தி முற்றத்தை அடைந்தார். அங்கே சுவாமிதரிசனஞ்செய்து "கோவாய் முடுகி யடித்திறற் கூற்றங் குமைப்ப தன்முன்— பூவா ரடிச்சுவடென்மேற் பொறித்துவை" என்னுந் திருப்பதி கம் பாடவும்; பரமசிவன் "நல்லூருக்கு வா வா" என்று அருளிச்செய்தார். அப்பமூர்த்தி திருநல்லூரிலே சென்று, சுவாமியை வணங்கி எழுந்தார். எழும்பொழுது, சுவாமி "உன்னுடைய நினைப்பை முடிக்கின்றோம்" என்று சொல்லி, தம்முடைய திருவடிகளை அவர் சிரசின்மேலே சூட்டியருளி னர். அப்பமூர்த்தி "நினைந்துருகு மடியாரை" என்று திருத் தாண்டகமெடுத்து, திருப்பாட்டிறுதிதோறும் "திருவடி. யென்றலைமேல் வைத்தார் நல்லூரேம் பேருமானூர் நல்ல வாறே" என்று பாடியருளினர். இன்னுந் திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு, சிலநாள் அங்கிருந்தார். இருக்குநாட்களிலே, திருக்கருகாவூர், திருவாவூர், திருப்பாலைத்துறை முதலாகிய ஸ்தலங்களுக்குப் போய், சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, திருநல்லூருக்குத் திரும்பி விடுவார்.

சிலநாட் சென்றபின், அப்பமூர்த்தி திருநல்லூரினின் றும் நீங்கி, திருப்பழனத்தை வணங்கிக்கொண்டு, திங்க ளூரின் வழியாகச் சென்றார். செல்லும்பொழுது, அவ்வூ ரிலே அப்பூதியடிகளையர் என்பவர் தம்முடைய புத்திரர் களுக்குத் திருநாவுக்கரசு என்னும் பெயரைத் தரித்தும், தம்முடைய அன்னசத்திரம் கிணறு குளம் தண்ணீர்ப்பந் தல் முதலியவற்றிலும் தனித்தனியே "இது திருநாவுக்கரசு நாயனருடையது" என்று தீட்டியுமிருத்தலைக் கேள்வியுற்று, அவருடைய வீட்டுக்கு எழுந்தருளினர். அப்பூதிநாயனர் அப்பமூர்த்தியைத் தம்முடைய மனைவியார் புத்திரர் முத லாயினோரோடும் வணங்கி, அங்கே திருவமுது செய்யும்படி பிரார்த்தித்தது, அதற்கு அந்நாயனர் உடன்பட்டது கண்டு, அப்பூ வழுப்பித்து, தமது புத்திராகிய மூத்ததிருநாவுக் கரசை நோக்கி, அரிந்துகொண்டு வா" என்னிற் சென்று வாழைக்குருத்து, னர். அவர்

விரைந்து வாழைக்குருத்து அரியப் புகுந்தபொழுது, ஒரு பாம்பு அவரைத் தீண்டிற்று. அதை அவர் பேணுமல், அப்பமூர்த்தி திருவமுது செய்யும்படி குருத்தை அரிந்து கொண்டு, விரைவிலே திரும்பிவந்து, விஷந் தலைக்கொள்கை யால் மயக்கமடைந்து, வாழைக்குருத்தைத் தம்முடைய தாயார் கையிலே கொடுத்துவிட்டு, கீழே விழுந்து இறந்தார். அது கண்டு அப்பூதி நாயனரும், அவர் மனைவியாரும், "ஐயோ! இனி நாயனார் திருவமுது செய்யாரே" என்று துக்கித்து, சவத்தை மறைத்து வைத்து, சிறிதுந் தடுமாற்ற மின்றி அப்பமூர்த்தியிடத்திற் சென்று, "சுவாமீ, எழுந்து வந்து திருவமுது செய்தருளல்வேண்டும்" என்று பிரார்த் தித்தார்கள். அப்பமூர்த்தி அங்கு நிகழ்ந்த உண்மையைத் திருவருளினால் அறிந்துகொண்டு, அவர்களுடைய அன்பை நினைந்து திருவருள் சுரந்து, சவத்தைச் சிவாலயத்தின்முன் கொணர்வித்து, "ஒன்றுகோலா மவர்சிந்தை" என்னுந் திருப் பதிகத்தைப் பாடியருளினர். உடனே அப்புத்திரர் உணர்வு பெற்று எழுந்தார். அப்பூதிநாயனர் தம்முடைய புத்திரர் பிழைத்ததைக் கண்டும், அதைக்குறித்துச் சந்தோஷியா மல், அப்பமூர்த்தி திருவமுதுசெய்யாதிருந்தமையைக் குறித் துத் துக்கித்து வருந்தினர். அவ்வருத்தத்தை நீக்கும்பொ ருட்டு, அப்பமூர்த்தி அவருடைய வீட்டிற் சென்று, திரு வமுது செய்து, அங்கே எழுந்தருளி யிருந்தார். சிலநாட் சென்றபின், திங்களூரினின்றும் நீங்கி, திருப்பழனத்திற்குப் போய், சுவாமிதரிசனஞ் செய்து, "சொன்மாலைபயில்கின்ற" என்னுந் திருப்பதிகம் பாடினர். அத்திருப்பதிகத்திலே அப்பூதிநாயனரை "அழலோம்பு மப்பூதி குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய்" எனச் சிறப்பித்தருளினர். அங்கே எழுந்தருளியிருக்கு நாளிலே, திருச்சோற்றுத்துறை முத லாகிய ஸ்தலங்களுக்கும் போய் வருவார்.

வெகுநாட்சென்றபின் அப்பமூர்த்தி திருநல்லூருக்குச் சென்று, சிலநாள் அங்கே வசித்து, பின் திருவாரூருக்குப் போகக் கருதி, அதனை நீங்கி, பழையாறை வடதளி, [illegible]லஞ்சுழி, கும்பகோணம், நாலூர், மே-

திருநறையூர், திருவாஞ்சியம், பெருவேளூர், திருவிளமர் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு, திருவாரூரை அடைந்து சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகங்கள் பாடிக்கொண்டிருந்தார். ஒரு திருப்பதிகத்திலே, நமிநந்தியடிகள் நீரினுல் விளக்கேற்றினமையைச் சிறப்பித்துப் பாடினர். அந்தத் திருப்பதியில் இருக்கின்ற அரனெறியென்னும் ஆலயத்தையும் வணங்கித் திருப்பதிகம் பாடினர். அங்கிருக்குநாட்களிலே, திருவலிவலம், கீழ்வேளூர், கன்றுப்பூர் என்னும் ஸ்தலங்களுக்கும் போய், திருப்பதிகம் பாடிக்கொண்டு, அவ்விடத்திற்குத் திரும்பிவிட்டார். திருவாதிரைநக்ஷத்திரத்திலே வீதிவிடங்கப்பெருமானுடைய திருவிழாவை அடியார்களுடன் சேவித்து, மகிழ்ந்து இருந்தார். அந்நாட்களிலே திருப்புகலூருக்குப் போம்படி கருதி, திருவாரூரினின்றும் நீங்கி, பல தலங்களையும் பணிந்து சென்றார். அந்நாளிலே திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் திருப்புகலூருக்கு வந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு முருகநாயனருடைய திருமடத்தில் எழுந்தருளியிருந்தார். ஒருநாள் அப்பமூர்த்தி திருவாரூரினின்றும் திருப்புகலூரை நோக்கி எழுந்தருளி வருகின்றார் என்று கேள்வியுற்று, அடியார் கூட்டத்தோடுஞ் சென்று, அவரை எதிர்கொண்டார். அப்பமூர்த்தி திருஞானசம்பந்தமூர்த்திநாயனரை வணங்க; திருஞானசம்பந்தமூர்த்திநாயனரும் அப்பமூர்த்தியை வணங்கி, "அப்பரே, நீர் வரும் நாளிலே திருவாரூரிலே நடந்த பெருமையைச் சொல்லும்" என்றார். அப்பமூர்த்தி திருவாதிரைச்சிறப்பை "முத்துவிதான மணிப்போற்கவரி" என்னுந் திருப்பதிகத்தினுலே சொல்லியருளினர். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அதைக் கேட்டு, "நான் திருவாரூருக்குப் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு இவ்விடத்திற்கு வருவேன்" என்று சொல்லித் திருவாரூருக்கு எழுந்தருள; அப்பமூர்த்தி திருப்புகலூருக்கு வந்து சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடிக்கொண்டிருந்தார். திருச்செங்காட்டங்குடி, திருநள்ளாறு, சாத்தமங்கை, திருமருகல் என்னுந் தலங்களுக்கும் போய்த் தரிசனஞ்செய்துகொண்டு, திருப்புகலூருக்குத் திரும்பினர். சிலநாட் சென்றபின், திருஞானசம்பந்தமூர்த்தி

நாயனார் திருவாரூரினின்றும் நீங்கி, திருப்புகலூருக்கு எழுந்தருளிவந்தார். அப்பமூர்த்தி அவரை எதிர்கொண்டு அழைத்துவந்து, முருகநாயனருடைய திருமடத்தில் அவரோடும் எழுந்தருளியிருந்தார். இருக்குநாளிலே, சிறுத்தொண்டநாயனரும், திருநீலநக்கநாயனரும், அவர்களிடத்திற்கு வந்து, அவர்களோடு இருந்தார்கள்.

சிலநாளாயினபின், திருஞானசம்பந்தமூர்த்திநாயனரும் அப்பமூர்த்தியும் திருப்புகலூரினின்றும் நீங்கி, திருநீலநக்கநாயனரும் சிறுத்தொண்டநாயனரும் முருகநாயனரும் மற்றையடியார்களும் அநுமதி பெற்றுக்கொண்டு போய்விட, திருவம்பர் என்னுந் தலத்தை அடைந்து வணங்கி, திருக்கடவூரிற் சென்று வீரட்டானேசுரரைப் பணிந்து, குங்குலியக்கலயநாயனரால் அவருடைய திருமடத்திலே திருவமுது செய்விக்கப்பட்டு, திருக்கடவூர்மயானத்தையும் வணங்கி, திருவாக்கூர் முதலிய திருப்பதிகளைத் தரிசித்து, திருவீழிமிழலையை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு அங்கே எழுந்தருளியிருந்தார்கள். சிலநாட்சென்றபின், மழையின்மையாலும் காவேரிப்பெருக்கு இன்மையாலும் பஞ்சம் உண்டாக; அதனால் உயிர்களெல்லாம் வருத்தமுற்றன. அக்காலத்திலே பரமசிவன் திருஞானசம்பந்தமூர்த்திநாயனருக்கும் திருநாவுக்கரசுநாயனருக்குந் தோன்றி, "காலபேதத்தினாலே நீங்கள் மனவாட்டம் அடையீர்களாயினும், உங்களை வழிபடுகின்ற அடியார்களுக்குக் கொடுக்கும்பொருட்டு, நாம் உங்களுக்குப் படிக்காசு தருகின்றோம்" என்று திருவாய்மலர்ந்து, திருக்கோயிலின் கிழக்குப்பீடத்திலும் மேற்குப்பீடத்திலும், தினந்தோறும் படிக்காசு வைத்தருளினர். அவ்வடியார்களிருவரும் தாங்கள் பெற்ற படிக்காசுகளை அனுப்பிப் பண்டங்கள் வாங்குவித்து, அமுது சமைப்பித்து, "சிவனடியார்கள் எல்லாரும் வந்து போசனம் பண்ணக்கடவர்கள்" என்று இரண்டு காலங்களிலும் பறைசாற்றித் தெரிவித்து, அன்னமிட்டார்கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் தாம் பரமசிவனுக்குக் குமாரராகையாலும் பாடற்றொண்டுமாத்திரஞ் செய்கையாலும் தாம் பெற்ற படிக்காசை

வட்டங்கொடுத்து மாற்றப்பெற்றார். அப்பமூர்த்தியோ, தாம் அக்கட்வளுக்கு அடியாராகையாலும், பாடற்றெண்டோடும் கைத்தொண்டுஞ்செய்கையாலும், தாம் பெற்ற படிக்காசை வட்டங்கொடாது மாற்றப்பெற்றார். இருவருடைய திருமடங்களினும், நாடோறுஞ் சிவனடியார்கள் போசனம்பண்ணி மகிழ்ந்திருக்குங்காலத்திலே எங்கும் மழைபெய்து, தானிய முதலியவைகள் மிக விளைந்தமையால், பஞ்சம் நீங்கிற்று.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனரும் திருநாவுக்கரசுநாயனரும் திருவீழிமிழலையினின்றும் நீங்கி, திருவாஞ்சிய முதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, வேதாரணியத்தை அடைந்து, ஆலயத்திலே பிரவேசித்து வலஞ்செய்து, வேதங்கள் அருச்சித்துத் திருக்காப்புச்செய்த அந்நாண்முதல் இந்நாள்வரைக்கும் அடைக்கப்பட்டே யிருக்கின்ற திருக்கதவுக்குமுன் வந்து, வேதங்களாலே திருக்காப்புச் செய்யப்பட்ட அத்திருக்கதவை அடியார்கள் நீக்கப்பெறுமையினால் வேறோர்பக்கத்திலே ஒரு வாயில்விட்டு அதன்வழியே செல்கின்றார்கள் என்பதைக் கேட்டறிந்தார்கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அப்பமூர்த்தியை நோக்கி, "அப்பரே, நாம் எப்படியும் சுவாமியை அபிமுகத்திருவாயில் வழியே சென்று தரிசிக்கவேண்டும். ஆதலால் இந்தத் திருக்கதவு திறக்கப்படும்பொருட்டு நீரே திருப்பதிகம் பாடும்" என்றார். அப்பமூர்த்தி "பண்ணினேர் மொழியாள்" என்னுந் திருப்பதிகத்தைக் கதவு திறக்கப்படும்பொருட்டுப் பாட; அது திறக்கப்படாமல் தாழ்த்தது. அது கண்டு "இரக்கமோன்றிலீர்" என்று திருக்கடைக்காப்பிலே பாடி வணங்கினார். உடனே வேதாரணியேசுரருடைய திருவருளினாலே திருக்கதவு திறக்கப்பட்டது. அப்பொழுது நாயன்மாரிருவரும் விழுந்து நமஸ்கரித்தார்கள். அடியார்களெல்லாரும் ஆனந்தகோஷஞ் செய்தார்கள். நாயன்மாரிருவரும் பேரின்பவெள்ளத்தில் அமிழ்ந்தி எழுந்து, உள்ளே புகுந்து, சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகங்கள் பாடி, அரிதில் வெளியே வந்தார்கள். அப்போது திருநாவுக்கரசுநாயனர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனரை நோக்கி, "சுவாமியுடைய திரு

வருளினாலே இந்தத் திருக்கதவு திறக்கப்பட்டும் அடைக்கப்பட்டும் என்றும் வழங்கும்பொருட்டு, தேவரீர் இது அடைக்கப்படும்படி திருப்பதிகம் பாடியருளும்'' என்றார். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருப்பதிகத்திலே முதற் பாட்டுப் பாடிய மாத்திரத்திலே திருக்கதவு அடைக்கப்பட்டது. அது கண்டு, நாயன்மாரிருவரும், திருவருளே வியந்து களிப்புற்று வணங்கினார்கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தாம் எடுத்த திருப்பதிகத்தை முடித்தருளினார். அன்று தொடுத்து அந்தத் திருக்கதவு திறத்தலும் அடைத்தலுமாகிய வழக்கம் என்றும் நிகழ்ந்தது. அங்கே நிகழ்ந்த அற்புதத்தைக் கண்ட அடியார்களெல்லாரும் ஆச்சரியங்கொண்டு, உரோமாஞ்சங்கொள்ள, கண்ணீர் சொரிய நாயன்மாரிருவருடைய திருவடிகளிலும் விழுந்து நமஸ்கரித்தார்கள்.

நாயன்மாரிருவரும் திருமடத்தை அடைந்தபின், திருநாவுக்கரசுநாயனார், தாம் திருப்பதிகம் முழுதும் பாடிய பின்னே திருக்கதவு திறந்த அருமையையும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதற்பாட்டைப் பாடினவுடனே கதவு அடைத்த எளிமையையும் நினைந்து, ''சுவாமியுடைய திருவுள்ளம் இதுவென்று அறியமாட்டாமல் அயர்கின்றேன்'' என்று கவன்று, மிக அஞ்சி, திருமடத்தில் ஒருபக்கத்திலே போய், வேதாரணியேசுரருடைய திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டு அருந்தினை செய்தார். அப்பொழுது பரமசிவன் அவரிடத்திற் சென்று, ''நாம் வாய்மூரில் இருப்போம். அவ்விடத்திற்குத் தொடர்ந்து வா'' என்று அருளிச்செய்தார். அப்பமூர்த்தி, ''எங்கே யென்னை யிருந்திடந் தேடிக்கொண்—டங்கே வந்தடையாள மருளினர்—தெங்கே தோன்றுந் திருவாய்மூர்ச் செல்வனை —ரங்கே வாவென்று போனரை தென்கோலோ'' என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு எழுந்து, வேதாரணியத்தினின்றும் புறப்பட்டு விரைந்துபோக; சுவாமி அவருக்கு முன்னாகத் தாம் அவருக்குமுன் காட்டியருளிய திருக்கோலத்தோடும் நடந்தருளினர். நெடும்பொழுது பரமசிவனுக்குப் பின்னாகச் செல்கின்ற அப்பமூர்த்தி அவரைச் சமீபிக்கப்பெற்றிலர். சுவாமி சமீபத்திலே காட்சி கொடுப்

பவர்போல ஒரு திருக்கோயிலை எதிரே காண்பித்து, அதனுள்ளே புகுந்தருள; அப்பமூர்த்தியும் அவ்விடத்திலே விரைந்து தொடர்ந்தார். திருஞானசம்பந்தமூர்த்திநாயனரும் அப்பமூர்த்தி திருவாய்மூருக்குப் போகின்றார் என்று கேள்வியுற்று, வந்து சேர்ந்தார். அப்பமூர்த்தி சுவாமி மறைந்தமையைக் குறித்துத் துக்கித்து, "அடியார்களிற் சிறந்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனரே திறக்கவேண்டும் என்பதை நினையாமல் திறந்து குற்றஞ்செய்த சிறியேனுக்கு ஒளிக்கலாம். ஒரு திருப்பதிகத்தின் முதற் பாட்டாலேயே திருக்கதவை அடைப்பித்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் இங்கே வந்திருக்கின்றார். அவருக்கு எப்படி ஒளிக்கலாம்" என்றார். உடனே பரமசிவன் திருஞானசம்பந்தமூர்த்திநாயனருக்குக் காட்சி கொடுத்தருளினர். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் தரிசித்து ஸ்தோத்திரம்பண்ணி, அப்பமூர்த்தியுங் காணும்படி காட்ட; அப்பமூர்த்தியும் தரிசித்து, "பாடவடியார் பரவக்கண்டேன்" என்னுந் திருப்பதிகம் பாடினார். சுவாமி அத்திருப்பதிகத்தை ஏற்றுக்கொண்டு எழுந்தருள; நாயன்மாரிருவரும் திருவாய்மூரை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, சிலநாள் அங்கிருந்து, பின் வேதாரணியத்துக்குத் திரும்பிவந்து, அங்கே சுவாமி தரிசனஞ் செய்துகொண்டிருந்தார்கள்.

இருக்குநாளிலே, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், மதுரையில் இருக்கின்ற பாண்டியனுடைய மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரும் மந்திரியாராகிய குலச்சிறைநாயனாரும் அனுப்பிய தூதர்களாலே பாண்டிநாட்டிலே, ஆருகதசமயம் பரம்பச் சைவம் குன்றிய சமாசாரத்தைக் கேள்வியுற்று, சமணர்களை வென்று சைவஸ்தாபனஞ் செய்யும்பொருட்டு அவ்விடத்திற்குச் செல்ல எழுந்தார். அப்பொழுது திருநாவுக்கரசுநாயனார் சமணர்களுடைய கொடுமையை நினைந்து, மதுரைக்குப் போகாதிருக்கும்படி திருஞானசம்பந்தமூர்த்திநாயனரைத் தடுத்த; திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அதற்கு இசையாமல் பாண்டிநாட்டுக்கு எழுந்தருளினர்.

திருநாவுக்கரசுநாயனார் வேதாரணியத்திலே சிலநாள் இருந்து, பின் அதனை நீங்கி, திருநாகைக்காரோணம் முதலிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருவீழிமிழலையை அடைந்து, சிலநாள் அங்கிருந்து, பின் திருவாவடுதுறையிற் சென்று, சுவாமிதரிசனம் பண்ணி, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்கு ஒரு திருப்பதிகத்தின் பொருட்டு ஆயிரஞ்செம் பொன் கொடுத்தருளிய திறத்தை "மாயிருஞால மெல்லாம்" என்னுந் திருப்பதிகத்தினாலே புகழ்ந்து பாடி, பழையாறையிற் சென்றார். அங்கே வடதளி என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற சிவலிங்கப்பெருமானைச் சமணர்கள் மறைத்திருத்தலைக் கேள்வியுற்று, சமீபமாகிய ஓரிடத்திற்சென்று, திருவமுது செய்யாமல் சுவாமியைத் தியானித்து, "சுவாமீ, அடியேன் தேவரீருடைய திருவுருவைக்கண்டு வணங்கியன்றிப் போகேன். அந்தத் திருவுருவை மறைத்த சமணர்களுடைய செய்கையைக் கெடுத்தருளும்" என்று சொல்லிக் கொண்டிருந்தார். சிவபெருமான் அரசனுக்குச் சொப்பனத்திலே தோன்றி, "நாம் சமணர்களால் மறைக்கப்பட்டிருக்கின்றோம். நாவுக்கரசன் நம்மை வெளிப்படக்கண்டு கும்பிட வேண்டும் என்று சிந்தித்துக்கொண்டிருக்கின்றான். நீ அந்தச் சமணர்களை அழித்து நமக்கு ஆலயஞ்செய்யவேண்டும்" என்று அருளிச்செய்து, தாம் இருக்கின்ற இடத்தின் அடையாளங்களைத் தெரிவித்து, மறைந்தருளினார். அரசன் விழித்தெழுந்து ஆச்சரியமடைந்து, மந்திரிமாரோடும் விரைவிலே திருக்கோயிலிற் சென்று, சுவாமி அருளிச்செய்த அடையாளத்தின் வழி கண்டு, சமணர்கள் செய்த வஞ்சனையை உணர்ந்து, அப்பமூர்த்தியை வணங்கி, அந்தச் சமணர்களை யானைகளாலே மிதிப்பித்துக் கொன்று, பரமசிவனுக்கு விமானஞ் செய்து, நிபந்தங்கள் அமைத்தான். அப்பமூர்த்தி உள்ளே புகுந்து, சுவாமியைத் தரிசித்து, "தலையெலாம்பறிக் குஞ்சமண் கையரு—ணிலையி னன்மறைத் தான்மறைக் கொண்ணுமே—யலையு னர்பொழி லாறை வடதளி—நிலையு ணுனடி யேநினைந் துய்ம்மினே" என்னுந் திருப்பதிகம் பாடி, சிலநாள் அங்கிருந்தார்.

பின் அவ்விடத்தினின்றும் நீங்கி, திருவாலீக்கா, எறும்பியூர், திருச்சிராப்பள்ளி, கற்குடி, திருப்பராய்த்துறை என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு, திருப்பைஞ்ஞீலியை நோக்கிச் சென்றார். செல்லும் வழியிலே, பசியினாலும் தாகத்தினாலும் மிக வருந்தி இளைத்தார். இளைத்தும் சித்தமலையாமல் நடக்க; பரமசிவன் அவருடைய வருத்தத்தை நீக்கும்பொருட்டு வழியிலே ஒரு சோலையையும் குளத்தையும் உண்டாக்கி, ஒரு பிராமணவடிவங் கொண்டு பொதிசோறு வைத்துக்கொண்டிருந்தார். திருநாவுக்கரசுநாயனார் தமக்குச் சமீபத்தில் வந்தவுடனே ஐயர், அவரை நோக்கி, "நீர் வழிநடந்து மிக இளைத்துப்போனீர். என்னிடத்திலே பொதிசோறு இருக்கின்றது. புசித்து இந்தக்குளத்திலே சலபானம் பண்ணி இளைப்பு நீக்கிக்கொண்டு போம்" என்று சொல்லி, பொதிசோற்றைக் கொடுத்தார். அப்பமூர்த்தி அதை வாங்கிப் புசித்துச் சலபானம் பண்ணிக்கொண்டு, இளைப்பு நீங்கி இருந்தார். சுவாமி அவரை நோக்கி, "நீர் எங்கே போகின்றீர்" என்று கேட்க; வாகீசர் "நான் திருப்பைஞ்ஞீலிக்குப் போகின்றேன்" என்று சொல்லிப்போனார். சிவபிரான் "நானும் அங்கேதான் போகின்றேன்" என்று சொல்லி, அவருடனே கூடிச்சென்று, திருப்பைஞ்ஞீலியைச் சமீபித்தவுடனே மறைந்தருளினார். அப்பமூர்த்தி அது கண்டு திருவருளை வியந்து, கண்ணீர் பொழிந்தழுது, விழுந்து, நமஸ்கரித்து எழுந்து, ஆலயத்திற்சென்று சுவாமியை வணங்கித் திருப்பதிகம் பாடி, கைத்தொண்டு செய்து கொண்டிருந்தார். சிலநாளாயினபின், அவ்விடத்தினின்றும் நீங்கி, திருவண்ணுமலைக்குச் சென்று சுவாமிதரிசனஞ்செய்து கொண்டு, தொண்டைநாட்டை அடைந்து திருவோத்தூரை வணங்கிக்கொண்டு, காஞ்சிபுரத்திற் சென்று, திருவேகம்பம், திருக்கச்சிமயானம், திருமேற்றளி, திருமாற்பேறு என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு, சிலநாள் அங்கிருந்தார். பின் அங்கு நின்றும் புறப்பட்டு, திருக்கழுக்குன்று, திருவான்மியூர், திருமயிலாப்பூர், திருவொற்றியூர், திருப்பாசூர், திருவாலங்காடு, திருக்காரிகரை என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு, தென்கைலாசமாகிய திருக்காளத்திமலையை அடைந்தார். அங்கே

பொன்முகலியிலே ஸ்நானஞ்செய்துகொண்டு, மலையின் மேல் ஏறி, சுவாமியை வணங்கித் திருப்பதிகம்பாடி, அவருடைய வலப்பக்கத்திலே நிற்கின்ற கண்ணப்பநாயனருடைய திருவடிகளை வணங்கி, சிலநாள் அந்தஸ்தலத்திலே வசித்தார்.

பின் உத்தரகைலாசத்திலே பரமசிவன் வீற்றிருக்கின்ற திருக்கோலத்தைத் தரிசிக்க விரும்பி, திருக்காளத்திமலையினின்றும் நீங்கி, உத்தரதிசையிலிருக்கின்ற திருப்பருப்பதத்தை அடைந்து வணங்கி, திருப்பதிகம் பாடிச் சென்று, காசியை வணங்கிக் கொண்டு, அதற்கு அப்பால் இருக்கின்ற கற்சுரத்திலே சாகமூலபலங்கள் புசித்தலையும் ஒழிந்து, திருக்கைலாச தரிசனஞ் செய்யல்வேண்டுமென்னும் பேராசையால் இராப்பகல் விடாது நடந்தார். அதனல் அவருடைய பாதங்கள் பரடுவரைக்குந் தேய்ந்தன. தேய்ந்தும், ஆசை மேலீட்டினல் தம்முடைய இரண்டு கைகளையும் ஆதரவாகக்கொண்டு தாவிச்சென்றார். அந்தக் கைகளும் மணிக்கட்டு அசைந்து கரைந்து சிதைந்தன. பின்னும் ஆசை சிறிதுங் குன்றுதலின்றி மேலிடுதலால், கொடிய நெருப்பையொத்த வெவ்விய பருக்கைக்கற்கள் பொருந்திய மார்க்கத்தில் மார்பினல் நகர்ந்துபோயினர். மார்பும் தசை கைந்து சிந்த, எலும்புகளும் முறியலுற்றன. பின் புரண்டு புரண்டு போயினர். அதனல் தேகமுழுதும் அரைய, நாயனர் திருக்கைலாசகிரியினிடத்தே பதிந்த அன்பின் உறுதியினல் மெல்ல நகருதற்கு முயன்றும், கூடாமையால் வழியிலே கிடந்தார். அப்பொழுது பரமசிவன், அப்பமூர்த்தியை மீளவும் தமிழ்நாட்டிற் செலுத்தி அந்நாட்டினுள்ளோர் உய்யும் பொருட்டுத் தமிழ் வேதமாகிய தேவாரம் பாடுவித்தற்கும், அவ்வப்பமூர்த்தியுடைய கருத்தையும் மாறின்றி முடித்தற்கும், திருவுளங்கொண்டு, அவ்விடத்தில் ஒரு தடாகத்தை உண்டாக்கி, ஒரு முனிவர் வடிவங்கொண்டு, அந்நாயனருக்கு முன்வந்து நின்று, "நீர் அங்கங்கள் எல்லாம் அழிந்துபோக வருத்தத்தோடும் இந்தக் கொடிய காட்டில் எதன்பொருட்டு வந்தீர்" என்று கேட்டார். அப்பமூர்த்தி மரவுரியாடையையும் யஞ்ஞோபவீதத்தையும் சடைமுடியையும் விபூதிதாரணத்தையுமுடைய

அந்த முனிவரைக் கண்டபொழுதே பேசுதற்கு அற்பசத்தி யுண்டாக, அவரை நோக்கி, "முனிவரே, நமது கடவுளாகிய பரமசிவன் உத்தரகைலாசத்திலே உமாதேவிசமேதராய் வீற் றிருக்கின்ற திருக்கோலத்தைத் தரிசித்து வணங்கும்பொ ருட்டு விரும்பி வந்தேன்" என்றார். அதற்கு முனிவர் "தேவர்களாலும் அடையப்படுதற்கு அரியதாகிய திருக் கைலாசகிரி மனிதர்களால் அடையப்படுதற்கு எளிதா! நீர் இந்தக் கொடுஞ்சுரத்திலே வந்து என்செய்தீர்! இனித் திரு ம்பிவிடுதலே உத்தமம்" என்றார். உடனே அப்பமூர்த்தி "திருக்கைலாசகிரியில் இருக்கின்ற சிவபெருமானுடைய திருக்கோலத்தைத் தரிசித்தன்றி அநித்தியமாகிய இந்தத் தேகத்தைக் கொண்டு திரும்பேன்" என்று மறுத்தார். சுவாமி அவருடைய துணிவைக் கண்டு மறைந்தருளி ஆகா யத்தில் அசரீரியாகி நின்று, "நாவுக்கரசனே, எழுந்திரு" என்றார். உடனே அப்பமூர்த்தி அழிந்த உறுப்புக்களெல் லாம் முன்போல நிரம்பப் பெற்றுச் சிறந்த திருமேனியோ டும் எழுந்து, "சுவாமீ, தேவரீர் திருக்கைலாசகிரியில் எழுந் தருளியிருக்கின்ற திருக்கோலத்தை அடியேன் தரிசித்து வணங்கும்பொருட்டு அருள்செய்யும்" என்று பிரார்த்தித்து, நமஸ்காரம் பண்ணினார். அப்பொழுது பரமசிவன் "நீ இந் தத் தடாகத்திலே முழுகித் திருவையாற்றை அடைந்து, நம்மைக் கைலாசகிரியில் வீற்றிருந்தபடி அந்த ஸ்தலத்திலே தரிசித்து வணங்கு" என்று பணித்தருளினார்.

அப்பமூர்த்தி அப்பணியைச் சிரமேற்கொண்டு, ஸ்ரீ பஞ் சாக்ஷரத்தை ஓதி, தடாகத்திலே முழுகி, திருவையாற்றி லிருக்கின்ற ஒரு வாவியின்மேலே தோன்றிக் கரையிலேறி, வழியிலே அந்தத் திருப்பதியிலுள்ள சராசரங்கள் தங்கள் தங்கள் துணையோடும் பொலிதலைக் கண்டு, அவைகளைச் சிவ மும் சத்தியுமாகப் பார்த்து வணங்கிக்கொண்டு, ஆலயத்து க்கு முன்னே சென்றார். அவ்வாலயம் திருக்கைலாசகிரியாக, அதனிடத்தே, வேதங்களும் சிவாகமங்களும் இருபக்கத் திலும் வாழ்த்தவும், தும்புரு நாரதரென்னும் இருவரும் யாழ்வாசிக்கவும், பிரமவிஷ்ணுக்களிருவரும் வஸ்திரத்தை

ஒதுக்கி வாயைக் கையினாலே, பொத்திக்கொண்டு, ஒதுங்கி நின்று தத்தங் குறைகளைச் சொல்லவும், பூதகணங்கள் கடைதோறும் காக்கவும், தேவர் சித்தர் அசுரர் சாரணர் காந்தருவர் கின்னரர் இயக்கர் விஞ்சையர் முதலாகிய கணத்தவர்கள் துதிக்கவும், திருநந்திதேவர் கையிலே பிரம்பைத் தரித்துக் கொண்டு பணிசெய்யவும், காருண்ணிய ஸ்வரூபியாகிய சிவபெருமான் ஒரு திவ்வியாசனத்தின்மேலே அநந்தகோடி சூரியப்பிரகாசத்தோடும் பார்வதி சமேதராய் வீற்றிருந்தருளினார். அப்படியிருக்கலே அப்பமூர்த்தி கண்டமாத்திரத்திலே விழுந்து நமஸ்கரித்து, உரை தடுமாற, உரோமஞ் சிலிர்ப்ப, ஆனந்த வருவி சொரிய, கரையிறந்த அருட்பெருங்கடலிலே அன்புநதி ஈர்த்துச் செல்ல, மிதந்துபோய், தெவிட்டுதலில்லாத அளவிறந்த சிவானந்தாமிர்தத்தைப் பருகி, சந்நிதானத்திலே ஆனந்தக்கூத்தாடித் திருத்தாண்டகங்கள் பாடினார். திருக்கைலாசபதியாகிய கடவுள் தம்முடைய திருக்கோலத்தை இப்படி அப்பமூர்த்திக்குத் தரிசிப்பித்து, பின் மறைந்தருள; அவ்வப்பமூர்த்தி மனம் வருந்தி, பின் ஒருவாறு தெளிந்து, திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு அந்தத் திருப்பதியில் இருந்தார்.

சிலநாட்சென்றபின், திருவையாற்றினின்றும் நீங்கி, நெய்த்தானம், மழபாடி முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு, திருப்பூந்துருத்தியை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகங்கள் பாடி, அங்கே ஒரு திருமடங்கட்டுவித்து, பல்வகைத்தாண்டகம், தனித் திருத்தாண்டகம், அடைவுதிருத்தாண்டகம், திருவங்கமாலை முதலிய திருப்பதிகங்களைப் பாடிக்கொண்டிருந்தார். இருக்கும்பொழுது, பாண்டிநாட்டிற்சென்று சமணர்களை வாதில் வென்று சைவஸ்தாபனம் பண்ணிப் பாண்டியராஜனுடைய கூன நிமிர்த்தருளிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அந்நாட்டினின்று நீங்கி, சோழமண்டலத்தை அடைந்து, அப்பமூர்த்தி திருப்பூந்துருத்தியிலிருக்கலைக் கேள்வியுற்று, அதற்குச் சமீபத்திலே வந்தருளினார். அதை அப்பமூர்த்தி அறிந்து மனமகிழ்ந்து, அவரை எதிர்கொண்டு வணங்கும்படி சென்று, அவர் வரும் எல்

லையை அடைந்து, திருச்சின்னத்தின் ஓசையைக் கேட்டு, அவரைத் தரிசிக்கும்படி சூழ்ந்த அடியார்களுடைய நெருக்கத்திலேலே, தம்மை ஒருவரும் இன்னாரென்று அறியாதபடி உட்புகுந்து, அவர் ஏறிவரும் முத்துச்சிவிகையைத் தாங்குகின்றவர்களோடு தாமும் ஒருவராய்த் தாங்கிக்கொண்டு வந்தார். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் திருப்பூந்துருத்திக்கு மிகச் சமீபித்தவுடனே, "அப்பர் எங்குற்றார்" என்று வினவ, அதைக் கேட்ட அப்பமூர்த்தி "அடியேன் தேவரீரைத் தாங்கிவரும் பெருவாழ்வைப் பெற்று இங்குற்றேன்" என்றார். உடனே திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அதிசீக்கிரஞ் சிவிகையினின்றும் இறங்கி, மனப்பதைப்போடி அப்பமூர்த்தியை வணங்க; இவரும் தம்மை அவர் வணங்குதற்கு முன் தாம் அவரை வணங்க; அதுகண்ட அடியார்களெல்லாரும் வணங்கி, ஆனந்தகோஷஞ் செய்தார்கள். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் வாகீசரோடும் திருப்பூந்துருத்தியிற் சென்று, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்தார். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் தாம் பாண்டிநாட்டிற்சென்று சமணர்களை வாதில் வென்றதையும், பாண்டியனுடைய கூனை நிமிர்த்ததையும், அந்நாடெங்கும் விபூதியை வளர்த்ததையும், பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியார் மந்திரியாராகிய குலச்சிறைநாயனர் என்கின்ற இருவருடைய பெருமையையும், வாகீசருக்குச் சொல்லியருளினர். வாகீசர் தாம் தொண்டைநாட்டுக்குச் சென்று அங்குள்ள சிவஸ்தலங்களை வணங்கியதைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனருக்குச் சொல்லியருளினர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் தொண்டைநாட்டுக்கு யாத்திரைசெய்ய விரும்பித் திருப்பூந்துருத்தியினின்றும் புறப்பட; வாகீசர் பாண்டிநாட்டுக்கு யாத்திரைசெய்ய விரும்பிப் புறப்பட்டு, அப்பாண்டிநாட்டை அடைந்து, திருப்புத்தூரை வணங்கிக்கொண்டு, மதுரையிற்சென்று சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடி, பாண்டிமாதேவியாரும் கூனிமிர்ந்த பாண்டியரும் குலச்சிறைநாயனரும் வணங்கித் துதிக்கச் சிலநாள் அங்கிருந்தார். பின் மதுரையை நீங்கி,

திருப்பூவணம், இராமேச்சரம், திருநெல்வேலி, திருக்கானப் பேர் முதலாகிய ஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, சோழமண்டலத்துக்குத் திரும்பி வந்து, திருப்புகலூரை அடைந்தார்.

திருப்புகலூரிலே தினந்தோறும் சுவாமி தரிசனம்பண்ணி திருமுன்றிலிலே கைத்தொண்டு செய்துகொண்டிருந்தார். இருக்குநாட்களிலே, நின்றதிருத்தாண்டகம், தனித் திருத்தாண்டகம், க்ஷேத்திரக்கோவை, குறைந்த திருநேரிசை, தனித்திருநேரிசை, நினைந்ததிருநேரிசை, ஆருயிர்த் திருவிருத்தம், தசபுராணத்தடைவு, பாவநாசப்பதிகம், சாக்கறைத் திருவிருத்தம் முதலிய திருப்பதிகங்களைப் பாடினார். பரமசிவன் அந்நாயனருடைய வைராக்கியத்தை யாவருக்கும் காட்டுதற்குத் திருவுளங்கொண்டு, அவர் திருமுன்றிலிலே கைத்தொண்டு செய்யும்பொழுது உழவாரம் நுழைந்தவிடங்களெங்கும் பொன்னும் நவரத்தினங்களும் பிரகாசித்துக் கிடக்கும்படி அருள் செய்தார். நாயனர் அவைகளைக் கண்டு, அவைகளை அங்கே கிடக்கின்ற பருக்கைக்கற்களோடு சமமாக எண்ணி உழவாரத்தில் எந்திக் குளத்திலே விழ எறிந்துவிட்டார்.

பின்பு கடவுளுடைய திருவருளினால் அரம்பையர்கள் சுவர்க்கத்தினின்றும் இறங்கி வந்து, நாயனர் திருமுன்னின்று, இசைபாடியும், கூத்தாடியும், அவர்மேற் பூக்களைப் பொழிந்தும், அவரை அணைபவர்கள் போலச் சமீபித்தும், அளசம் அவிழ இடைநுடங்க ஓடியும், திரும்பியும், வஸ்திரம் அசைய நின்றும், இப்படி அவரை மோகிப்பித்தற்கு யத்தினஞ் செய்தார்கள். செய்தும், சிவபிரானுடைய திருவருளையே முன்னிட்டு ஒழுகுகின்ற வாகீசர் தம்முடைய சித்தநிலை சிறிதும் வேறுபடாதபடி, தாஞ்செய்யுந் திருப்பணியிலே உறுதிகொண்டு, இருவினை முதலியவைகளை முன்னிலைப்படுத்தி "நான் திருவாரூரில் வீற்றிருக்கின்ற சுவாமிக்கு ஆளானேன். உங்களாலே நான் ஆட்டுண்ணேன். நீங்கள் என்னை அலையன்மின்" என்னுங் கருத்தால், "போய்ம்மாயப் பெருங்கடலில்" என்னுந் திருத்தாண்டகத்தைப் பாடினார். அரம்பையர்கள் தங்கள் கருத்து முற்றுமையால்,

அவரை நமஸ்கரித்துக்கொண்டு போய்விட்டார்கள். இந்த நிலைமையைச் சமஸ்த லோகத்தார்களும் அறிந்து துதிக்க லுற்றார்கள்.

வாகீசர் புகலூரர் என்னை இனிச் சேவடிக்கீழிருத்திடும் என்று எழுகின்ற ஞானத்தினால் திருவிருத்தங்கள் பலவற் றைப் பாடி, ஒரு சித்திரை மாசத்திலே சதயநக்ஷத்திரத் திலே "எண்ணுகே னென்சொல்லி யெண்ணு கேனே" என்று திருத்தாண்டகமெடுத்துத் திருப்பாட்டிறுதிதோறும் "உன்னடிக்கே போது கின்றேன் பூம்புகலூர் மேவியபுண் ணியனே" என்று பாடி, சிவபெருமானுடைய திருவடியை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

குலச்சிறைநாயனார் புராணம்.

பாண்டிநாட்டிலே, மணமேற்குடியிலே, குலச்சிறை நாயனார் என்பவரொருவர் இருந்தார். அவர் விபூதி உருத்தி ராக்ஷந் தரிக்கின்றவர்களும் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதுகின்ற வர்களுமாகிய சிவனடியார்களை, உயர்குலம் இழிகுலங்களும் நற்குணம் தீக்குணங்களும் பாராமல், வணங்கித் துதிக்கின்ற வர். அவ்வடியார்கள் பலர் கூடி வரினும், ஒருவர் வரினும், அன்பினோடு எதிர்கொண்டு அழைத்துத் திருவமுதுசெய் விக்கின்றவர். பரமசிவனுடைய திருவடிகளை அநுதினமுஞ் சிந்தித்துத் துதித்து வணங்குகின்றவர். நெடுமாறர் என்னும் பெயரையுடைய பாண்டியருக்கு முதன்மந்திரியாராயினவர். அந்தப் பாண்டியருடைய மாதேவியாராகிய மங்கையர்க்கரசி யார் செய்கின்ற திருத்தொண்டுக்குத் துணைசெய்கின்றவர். கீழ்மக்களாகிய சமணர்களுடைய பொய்ச்சமயத்தைக் கெடு த்து, பாண்டிநாடெங்கும் திருநீற்றை வளர்க்கும்பொருட்டு, பரசமயகோளரியாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனரு டைய திருவடிகளை வணங்கிய சிறப்பினையுடையவர். வாதிலே அந்நாயனருக்குத் தோற்ற சமணர்களைக் கழுவிலே ஏற்று

வித்தவர். சுந்தரமூர்த்தி நாயனாலே, திருத்தொண்டத் தொகையிலே "டெருநம்பி" என்று வியந்துரைக்கப்பட்டவர்.

திருச்சிற்றம்பலம்.

பெருமிழலைக்குறும்பநாயனர் புராணம்.

மிழலைநாட்டிலே, பெருமிழலையென்னும் ஊரிலே, சிவபத்தி அடியார் பத்திகளிற் சிறந்த பெருமிழலைக் குறும்ப நாயனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவனடியார்களைக் காணுந்தோறும் விரைந்தெதிர்கொண்டு வணங்கி, அவர்களுக்குக் குறிப்பறிந்து தொண்டு செய்பவர். அவர்களை நாடோறும் திருவமுது செய்வித்து, அவர்க்குக் வேண்டுந் திரவியங்களைக் கொடுப்பவர். அவர் சுந்தரமூர்த்தி நாயனருடைய பெருமையை அறிந்து, அவருடைய திருவடிகளை மனம் வாக்குக் காயங்களினாலே சிந்தித்துத் துதித்து வணங்குதலே பரமசிவனுடைய திருவடிகளை அடைதற்கு உரிய நெறியென்று அப்படிச் செய்து வந்தார். அதனால் அவர், அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அஷ்டமகாசித்திகளையும் அடைந்தார். அடைந்து, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஜபித்து வந்தார்.

இப்படி நிகழுங்காலத்திலே, திருவஞ்சைக்களத்திற் சென்று திருப்பதிகம் பாடுஞ் சுந்தரமூர்த்திநாயனருக்குப் பரமசிவனுடைய திருவருளினாலே உத்தரகைலாசத்தை அடையும் வாழ்வு கிடைப்பதைத் தம்முடைய ஊரிலிருந்து கொண்டே யோகப்பிரத்தியக்ஷத்தால் அறிந்து, "சுந்தரமூர்த்திநாயனர் உத்தரகைலாசத்தை நாளைக்கு அடைய நான் பிரிந்து இங்கே வாழமாட்டேன்" என்று நினைந்து, "இன்றைக்கு யோகத்தினாலே சிவபிரானுடைய திருவடியை அடைவேன்" என்று துணிந்து, யோக முயற்சியினாலே

பிரமரந்திரந்தினிற்பப உடலினின்றும் பிரிந்து, திருக்கைலாசத்தில் வீற்றிருக்கின்ற சிவபெருமானுடைய திருவடியை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

காரைக்காலம்மையார் புராணம்.

சோழமண்டலத்திலே, காரைக்காலிலே, வைசியர் குலத்திலே, தனதத்தன் என்பவன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் புனிதவதியார் என்கின்ற ஒரு புத்திரியார் பிறந்தார். அத்தனதத்தன் அப்புத்திரியாரை நாகபட்டணத்தில் இருக்கின்ற நிதிபதி என்பவனுடைய புத்திரனுகிய பரமதத்தனுக்கு விவாகஞ்செய்துகொடுத்து, தனக்கு வேறு பிள்ளையின்மையால் அவரை நாகபட்டணத்திற்குப் போக விடாமல், தன்னுடைய வீட்டுக்கு அருகிலே ஒரு வீடு கட்டுவித்து, அளவிறந்த திரவியங்களையும் கொடுத்து, கணவனோடும் அதிலிருத்தினன். பரமதத்தன் அந்தச் செல்வத்தை விருத்திசெய்து இல்லறத்தை ஒழுங்குபெற நடத்திவந்தான். அவன் மனைவியாராகிய புனிதவதியார், பரமசிவனுடைய திருவடிகளிலே அன்பு மேன்மேலும் பெருக, இல்லறத்திற்கு வேண்டுவனவற்றை வழுவாது செய்வாராயினர். தம்முடைய வீட்டுக்குச் சிவனடியார்கள் வரின், அவர்களைத் திருவமுது செய்வித்து, அவரவர் வேண்டியபடி பொன் இரத்தினம் வஸ்திரம் முதலாயின உதவுவார்.

இப்படி நிகழுங்காலத்தில், ஒருநாள், பரமதத்தனிடத்திற் காரியமூலமாக வந்தவர்கள் சிலர் அவனுக்கு இரண்டு மாம்பழங் கொடுக்க, அவன் அவைகளை வாங்கிக்கொண்டு அவர்கள் கருத்தை முடித்து, அவைகளை மனைவியாரிடத்திற்கு அனுப்பிவிட்டான். மனைவியார் அவைகளை வாங்கி வைத்த பின்பு; சிவனடியார் ஒருவர் பசியினால் வருந்தி, அவர் வீட்டிற்சென்றார். புனிதவதியார் அவ்வடியவருடைய நிலையைக் கண்டு, கலத்தைவைத்துச் சோறு படைத்து, அந்நேரத்திலே தூயமுது பாகம்பண்ணப்படாமையால், "சிவ

னடியவரே பெறுதற்கு அரிய விருந்தினராய் வந்தபொழுதே இதைப்பார்க்கிலும் பெறவேண்டிய பேறு நமக்கு ஒன்றும் இல்லை'' என்று நினைந்து, தம்முடைய கணவன் அனுப்பிய மாம்பழங்கள் இரண்டினுள் ஒன்றை எடுத்துக்கொண்டுவந்து படைத்து, அவ்வடியவரைத் திருவமுது செய்வித்தார். அடியவர் சோற்றை மாங்கனியோடு உண்டு, புனிதவதியாருடைய செய்கையை உவந்து போயினர்.

போயபின், பரமதத்தன் நடுப்பகலிலே வீட்டுக்குவந்து போசனம் பண்ணும்பொழுது, மனைவியார் எஞ்சியிருந்த மாங்கனியைக் கொண்டுவந்து, கலத்திலே வைத்தார். பரமதத்தன் மிக இனிய அந்தக் கனியை உண்டு அதன் இனிய சுவையிலேலே திருத்தியடையாமல் மனைவியாரை நோக்கி, ''மற்றக் கனியையுங் கொண்டுவந்து வை'' என்றான். மனைவியார் கொண்டுவரச் செல்பவர்போலப்போய் நின்றுகொண்டு, சோகித்து, தம்மை விசுவசிக்கின்ற மெய்யன்பர்களுக்கு உற்றவிடத்து உதவும் பரமசிவனுடைய திருவடிகளைத் தியானித்தார். உடனே, அக்கடவுளுடைய கருணையினால், அதி மதுரமாகிய ஒரு மாங்கனி அவர்கையில் வந்திருந்தது. அவர் அதைக் கொண்டுவந்து, கணவனுடைய கலத்திலே படைக்க; அவன் அதனை உண்டு, அதன் சுவை தேவாமிர்தத்தைப் பார்க்கிலும் சிறந்தமையால் ''இது முன் நான் தந்த மாங்கனியன்று. இது மூவுலகங்களிலும் பெறுதற்கு அரியது. இதனை நீ எங்கே பெற்றாய்'' என்றான். மனைவியார் அதைக் கேட்டு, தமக்குத் திருவருள் உதவிய திறத்தை வெளிப்படுத்துவது தகுதியன்று என்று நினைந்தமையால் நிகழ்ந்ததைச் சொல்லமாட்டாதவரும், கணவனுக்கு உண்மையை மறைத்துக் கூறுதலும் தகுதியன்று என்று நினைந்தமையால் அதனைச் சொல்லாது விடமாட்டாதவருமாய், வருந்தி நின்று, பின் நிகழ்ந்தபடி சொல்வதே கடன் என்று துணிந்து, ''நீர் தந்த கனிகளில் ஒன்றை ஓடியாருக்குக் கொடுத்துவிட்டமையால், அதற்கு நான் யாதுசெய்வேன் என்று கவன்று, பரமசிவனைத் தியானித்துக்கொண்டு நின்றேன். அவருடைய திருவருளினால் இந்தக்கனி என்கையில் வந்திருந்தது'' என்

ரூர். பரமதத்தன் அதை நம்பாதவனாகி, மனைவியாரை நோக்கி, "இந்தக்கனி சிவபிரானுடைய திருவருளினாலே கிடைத்ததாயின், இன்னும் ஒரு கனி அவருடைய திருவருளினாலே அழைத்துத்தா" என்றான். புனிதவதியார் அவ்விடத்தை விட்டுப்போய், பரமசிவனைத் துதித்து, "இன்னும் ஒருகனி தந்தருளீராகில், அடியேனுடைய வார்த்தை பொய்யாய்விடும்" என்று விண்ணப்பஞ் செய்ய; சுவாமியுடைய திருவருளினாலே ஒரு மாங்கனி அவர்கையில் வந்திருந்தது. அவர் அதைக் கொண்டுவந்து, கணவன் கையிற் கொடுக்க; அவன் ஆச்சரியமடைந்து வாங்கினான். வாங்கிய பழத்தைப் பின் காணாதவனாகி, மிகுந்த பயங்கொண்டு, மனந்தடுமாறி, அப்புனிதவதியாரைத் தெய்வமென நினைந்து, அவரைப் பிரிந்து வாழவேண்டும் என்று துணிந்து, தன் கருத்தைப் பிறருக்கு வெளிப்படுத்தாமல் அவரோடு, தொடர்பின்றி ஒழுகினான்.

ஒழுகு நாளிலே, ஒரு மரக்கலஞ் செய்வித்து, தான் செல்ல விரும்பிய தேசத்திலே விரும்பப்படுகின்ற அரும் பண்டங்களை அதனிடத்து நிறைய ஏற்றி, சுபதினத்திலே சமுத்திரராஜனாகிய வருணனைத் தொழுதுகொண்டு, மாலுமி முதலியோரோடும் ஏறி, அத்தேசத்தை அடைந்து, வாணிகஞ்செய்து, சிலநாளாயினபின், மீண்டும் அம்மரக்கலத்தில் ஏறி, பாண்டிநாட்டிலுள்ள ஒரு நகரத்தை அடைந்து, அங்குள்ள ஒரு வைசியனுடைய மகளை விவாகஞ் செய்து கொண்டு, பெருஞ் செல்வத்தோடும் வாழ்ந்திருந்தான். அவனுக்கு அம்மனைவி வயிற்றிலே ஒரு பெண்குழந்தை பிறந்தது. அவன் தான் கூடி வாழ்தற்கு அஞ்சி நீங்கிய மனைவியாரைத் தான் வணங்கும் தெய்வமாகக்கொண்டு, அவருடைய புனிதவதியார் என்னும் பெயரையே அந்தப்பெண்ணிற்கு இட்டான்.

பரமதத்தன் இப்படியே இங்கே இருக்க; புனிதவதியார் காரைக்காலிலே கற்பினோடு இல்லறத்தை வழுவாது நடத்திக்கொண்டு வந்தார். அவருடைய சுற்றத்தார்கள், வாணிகத்தின்பொருட்டுச் சென்ற பரமதத்தன் பாண்டிநாட்

டிலே ஒரு நகரத்திலே செல்வத்தை விருத்திசெய்துகொண்டு வாசஞ்செய்கின்றான் என்று கேள்வியுற்று, அவனிடத்திற் சிலரை அனுப்பி, அவனுடைய நிலையை உணர்ந்து, மிகவும் கூர்ந்து, புனிதவதியாரைத் தாமே அவனிடத்திற்குக் கொண்டுபோய் விடவேண்டும் என்று நினைந்து, சிவிகையில் ஏற்றிக்கொண்டு சென்று, அவனிருக்கின்ற நகரத்திற்குச் சமீபித்து, தாம் புனிதவதியாரைக் கொண்டுவந்தமையை அவனுக்கு ஆள் அனுப்பித் தெரிவித்தார்கள். அவன் அதனை அறிந்து அச்சங்கொண்டு, தன்னுடைய இரண்டாம் மனைவியோடும் மகளோடும் புனிதவதியாரிடத்திற்கு வந்து, "அடியேன் உம்முடைய கருணையினாலே வாழ்கின்றேன். இந்தப் பெண்ணுக்கு உம்முடைய பெயரையே இட்டேன்" என்று சொல்லிக்கொண்டு, அவருடைய பாதங்களிலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். உடனே புனிதவதியார் தம்முடைய சுற்றத்தார்களிடத்திலே அச்சத்தோடும் ஒதுங்கி நிற்க; அவர்கள் வெள்கி, பரமதத்தனை நோக்கி "நீ உன்னுடைய மனைவியை வணங்குவதென்னை" என்றார்கள். அதற்குப் பரமதத்தன் "நான் இவரிடத்திலே ஒரு பெரிய அற்புதத்தைக் கண்டபடியால், இவர் தெய்வப்பெண்ணையன்றி மானுடப் பெண்ணல்லர் என்று துணிந்து, இவரைப் பிரிந்தேன். இவரை நான் தொழுந் தெய்வம் என்று கொண்டமையால், நான் பெற்ற இந்தக்குழந்தைக்கு இவர் பெயரைத் தரித்தேன். அதுபற்றியே இவருடைய திருவடியையும் வணங்கினேன். நீங்களும் இவரை வணங்குங்கள்" என்றான். அது கேட்ட சுற்றத்தார்கள் "இது என்ன ஆச்சரியம்" என்று திகைத்து நின்றார்கள். புனிதவதியார் கணவன் சொல்லிய வார்த்தையைக் கேட்டு, பரமசிவனுடைய திருவடிகளைச் சிந்தித்து, "சுவாமீ, இவனுடைய கொள்கை இது. இனி இவன்பொருட்டுத் தாங்கிய அழகு தங்கிய தசைப் பொதியை நீக்கி, தேவரீரைச் சூழ்ந்து நின்று துதிக்கின்ற பேய்வடிவை அடியேனுக்குத் தந்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார். அந்தக்கணத்தே, அக்கடவுளுடைய திருவருளினாலே, மாமிசம் முழுதையும் உதறி, எற்புடம்பாக, மண்ணுலகமும் விண்ணுலகமும் வணங்கும் பேய்வடிவமாயி

னர். அப்பொழுது தேவர்கள் பூமாரி பொழிந்தாகள. மீதவ துந்துபிகள் ஒலித்தன. அதுகண்ட சுற்றத்தார்களெல்லாரும் அஞ்சி, அவரை நமஸ்கரித்துக்கொண்டு போய்விட்டார்கள்.

புனிதவதியார் தமக்குச் சிவபெருமானுடைய திருவரு ளினுலே கிடைத்த ஞானத்தைக்கொண்டு, அற்புதத் திரு வந்தாதியும் திருவிரட்டைமணிமாலையும் பாடி., திருக்கைலாச கிரிக்குப் போக விரும்பி, மனசிலும் பார்க்க மிகுந்த வேகத் தோடு சென்று, அந்தத் திருக்கைலாசகிரியின் பக்கத்தை அண்டந்து, அங்கே காலினுல் நடத்தல் தகுதியன்றென்று ஒழிந்து, தலையினுலே நடந்து போய் மலையிலேறினர். ஏறும் பொழுது, உமாதேவியார் அதைக்கண்டு, எம்போலிகள் புனிதவதியாருடைய திடபத்தியைக் குறித்து உலகமாதா வாகிய உமாதேவியாரே ஆச்சரியம் அடைந்தாராயின், நாம் எவ்வளவு ஆச்சரியம் அடைதல் வேண்டுமென்று சிந்திக்கச் செய்யும் பொருட்டுத் தாம் ஆச்சரியமுடையவராகி, அவரது பத்திமகிமையை உயர்வொப்பில்லாத பரமசிவனுடைய திரு வாக்கினுலேயே நமக்கு உணர்த்துவித்து நம்மை உய்விக்கத் திருவுளங்கொண்டு, அக்கடவுளை வணங்கி நின்று, "சுவாமீ, இங்கே தலையினுல் நடந்து ஏறிவருகின்ற எற்புடம்பையுடை யவரது அன்பின் மகிமை இருந்தபடி என்னை" என்று விண் ணப்பஞ்செய்ய; பரமசிவன் "இங்கே வருகின்றவள் நம்மைத் துதிக்கின்ற அம்மை என்றறி. இந்தப் பெருமைபொருந்திய வடிவத்தையும் வேண்டிப்பெற்றுள்" என்றார். பின் புனித வதியார் சமீபத்தில் வந்தவுடனே, உலகமெல்லாம் உய்யும் பொருட்டு, அவரை நோக்கி, "அம்மையே" என்று அழைத் தார். அது கேட்ட புனிதவதியார் "அப்பா" என்று சொல் லிக்கொண்டு, அவருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ் கரித்து எழுந்தார். சுவாமி அவரை நோக்கி, "உனக்கு வேண்டும் வரம் யாது" என்று வினவ; புனிதவதியார் வணங்கி நின்று, "சுவாமீ, அடியேனுக்கு இறவாத பேரின்ப மயமாகிய அன்பு வேண்டும்; இனிப் பிறவாமை வேண்டும்; பிறக்கினும் தேவரீரை ஒருகாலமும் மறவாமை வேண்டும்; இன்னும் தேவரீர் திருநிருத்தஞ் செய்யும்பொழுது தேவரீ

நுடைய திருவடியின் கீழே சிவானந்தத்தை உடையேனுகி, தேவாரைப் பாடிக்கொண்டிருத்தல்வேண்டும்'' என்று விண்ணப்பஞ் செய்தார். சுவாமி அவரை நோக்கி, ''நீ நிதன் றிசையிலுள்ள ஆலங்காட்டிலே நம்முடைய நடனத்தைத் தரிசித்து, பேரானந்தத்தோடு நம்மைப் பாடிக் கொண்டிரு'' என்று அருளிச்செய்தார். அதுகேட்ட காரைக்காலம்மையார் சுவாமியை நமஸ்கரித்து அநுமதி பெற்றுக்கொண்டு, திருவாலங்காட்டுக்குத் தலையினல் நடந்து சென்று, சுவாமியுடைய திருநடனத்தைத் தரிசித்து, ''கோங்கைதிரங்கி'' என்னும் மூத்ததிருப்பதிகத்தையும், ''எட்டியிலவமீகை'' என்னுந் திருப்பதிகத்தையும் பாடினர். அவர் சுவாமியுடைய தூக்கிய திருவடியின்கீழே சிவானந்தத்தை அனுபவித்துக்கொண்டு எக்காலமும் இருக்கின்றார்.

திருச்சிற்றம்பலம்.

அப்பூதியடிகணயனர் புராணம்.

சோழமண்டலத்திலே, திங்களூரிலே, பிராமணகுலத திலே, பாவங்கள் என்று சொல்லப்பட்டவைகள் எல்லாவற் றையும் நீங்கின்வரும், புண்ணியங்களென்று சொல்லப்பட்ட வைகளெல்லாவற்றையும் தாங்கினவரும், நிருகஸ்தாச்சிரமத் தையுடையவரும், சிவபத்தி அடியார்பத்திகளிற் சிறந்தவரு மாகிய அப்பூதியடிகணயனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவானுபூதிமானுகிய திருநாவுக்கரசுநாயனருடைய மகிமையைக் கேள்வியுற்று, அவர்மேலே மிக அன்புகூர்ந்து, தம் முடைய ஸ்ட்டினுள்ள அளவைகள் தராசுகள் பிள்ளைகள் பசுக்கள் எருமைகள் முதலிய எல்லாவற்றிற்கும் அந்நாயனரு டைய பெயரையே சொல்லிவருவார். இன்னும் அவர்மேலா சையினுலே, திருமடங்கள் தண்ணீர்ப்பந்தர்கள் குளங்கள் திருநந்தனவனங்கள் முதலியனவற்றை அந்நாயனர் பெயரி னற்செய்துகொண்டிருந்தார்.

இருக்குநாளிலே, அத்திருநாவுக்கரசுநாயனர் திருப் பழனமென்னும் ஸ்தலத்தை வணங்கிக்கொண்டு, பிற தலம்

களையும் வணங்கும்பொருட்டு, அந்தத் திங்களூருக்குச் சமீப மாகிய வழியே செல்லும்பொழுது, ஒரு தண்ணீர்ப்பந்தரை அடைந்து திருநாவுக்கரசுநாயனர் என்னும் பெயர் எங்கும் எழுதப்பட்டிருத்தலைக் கண்டு, அங்கு நின்றவர்கள் சிலரை நோக்கி, "இந்தத் தண்ணீர்ப்பந்தரை இப்பெயரிட்டுச் செய் தவர் யாவர்" என்று வினவ; அவர்கள், "இப்பந்தரைமாத்திர மன்று, இவ்விடத்தெங்கும் உள்ள அறச்சாலைகள் குளங்கள் திருநந்தனவனங்களெல்லாவற்றையும் அப்பூதியடிகணயனு ரென்பவர் இத்திருநாவுக்கரசுநாயனர் என்னும் பெயரா லேயே செய்தனர்" என்றார்கள். அதைத் திருநாவுக்கரசுநாய னர் கேட்டு, "இங்ஙனஞ் செய்தற்குக் காரணம் யாதோ" என்று நினைந்து, அவர்களை நோக்கி, "அவர் எவ்விடத்தில் இருக்கின்றவர்" என்று வினவ, "அவர் இவ்வூரவரே. இப் பொழுதுதான் வீட்டுக்குப் போகின்றார். அவ்வீடும் தூர மன்று, சமீபமே" என்றார்கள். உடனே திருநாவுக்கரசுநாய னர் அப்பூதியடிகணயனருடைய வீட்டுத் தலைக்கடைவாயி லிற் செல்ல; உள்ளிருந்த அப்பூதிநாயனர் "சிவனடியார் ஒரு வர் வாயிலில் வந்து நிற்கின்றார்" என்று கேள்வியுற்று விரை ந்து சென்று, அவருடைய திருவடிகளிலே நமஸ்கரிக்க; அவ ரும் வணங்கினர். அப்பூதிநாயனர் "சுவாமீ, தேவரீர் இவ் விடத்திற்கு எதுபற்றி எழுந்தருளினீர்" என்று வினவ; திரு நாவுக்கரசுநாயனர் "நாம் திருப்பழனத்தை வணங்கிக்கொ ண்டு வரும்பொழுது, வழியிலே நீர் வைத்த தண்ணீர்ப்பந்த ரைக் கண்டும், அப்படியே நீர் செய்திருக்கின்ற பிறதருமங்க ளைக் கேட்டும், உம்மைக் காணவிரும்பி இங்கே வந்தோம்" என்று சொல்லி, பின்பு, "சிவனடியார்கள்பொருட்டு நீர் வைத்த தண்ணீர்ப்பந்தரிலே உம்முடைய பெயரை எழுதாது வேறொருபெயரை எழுதியதற்குக் காரணம் யாது" என்று வினவ; அப்பூதிநாயனர் "நீர் நல்லவார்த்தை அருளிச்செய்தி ரீர். பாதகர்களாகிய சமணர்களோடு கூடிப் பல்லவராஜன் செய்த விக்கினங்களைச் சிவபத்தி வலிமையினாலே ஜயித்த பெருந்தொண்டரது திருப்பெயரோ வேறொருபெயர்" என்று மொழித்து, பின்னும், "பரமசிவனுக்குத் திருத்தொண்டு செய்தலாலே இம்மையினும் மேலைக்கலாம் என்பதை எல்

போலும் அறிவிலிகளும் தெளியும்பொருட்டு அருள்புரிந்த திருநாவுக்கரசுநாயனருடைய திருப்பெயரை நான் எழுத, நீர் இந்தக் கொடுஞ்சொல்லை நான் கேட்கும்படி சொன்னீர். கற்றூணியைக் கொண்டு கடல் கடந்த அந்தநாயனருடைய மகிமையை இவ்வுலகத்திலே அறியாதார் யாருளர்! நீர் சிவவே டத்தோடு நின்று இவ்வார்த்தைபேசினீர். நீர் எங்கே இருக் கிறவர்! சொல்லும்'' என்றார்.

திருநாவுக்கரசுநாயனர் அவ்வப்பூதியடிகளுடைய அன் பை அறிந்து, ஆருகதசமயப்படுகுழியினின்றும் வறும்பொ ருட்டுப் பரமசிவன் சூலநோயை வருவித்து ஆட்கொள்ளப் பெற்ற உணர்வில்லாத சிறுமையேன் யான்'' என்று அருளிச் செய்தார். உடனே அப்பூதிநாயனர், இரண்டு கைகளும் சிர சின்மேலே குவிய, கண்ணீர் சொரிய, உரை தடுமாற, உரோ மஞ்சிலிர்ப்ப, பூமியிலே விழுந்து திருநாவுக்கரசுநாயனரு டைய ஸ்ரீபாதாரவிந்தங்களைப் பூண்டார். திருநாவுக்கரசுநாய னர் அப்பூதியடிகளை எதிர்வணங்கி எடுத்தருள; அப்பூதியடி கள் மிகக்களிப்படைந்து கூத்தாடினர்; பாடினர்; சந்தோஷ மேலீட்டினால் செய்வது இன்னது என்று அறியாமல், வீட்டி னுள்ளே சென்று, மனைவியாருக்கும் பிள்ளைகளுக்கும் பிற சுற்றத்தார்களுக்கும் திருநாவுக்கரசுநாயனர் எழுந்தருளி வந்த சந்தோஷ சமாசாரத்தைச் சொல்லி, அவர்களை அழைத் துக்கொண்டு வந்து, நாயனரை வணங்கும்படி செய்து, அவரை உள்ளே எழுந்தருளுவித்து, பாதப்பிரக்ஷாளனஞ் செய்தார். அங்ஙனஞ்செய்த தீர்த்தத்தை அவர்களெல்லாரும் தங்கண்மேலே தெளித்து, உள்ளும் பூரித்தார்கள். நாய னரை ஆசனத்தில் இருத்தி, விதிப்படி அருச்சனைசெய்து, ''சுவாமீ, தேவரீர் இங்கே திருவமுது செய்தருளல்வேண் டும்'' என்று பிரார்த்திக்க, அவரும் அதற்கு உடன்பட்டரு ளினர். அப்பூதிநாயனர் திருவமுது சமைப்பித்து, தங்கள் புத்திராகிய மூத்த திருநாவுக்கரசை வாழைக்குருத்து அரி ந்துகொண்டு வரும்பொருட்டு அனுப்ப; அவர் விரைந்து தோட்டத்திற் சென்று, வாழைக்குருத்து அரியும்பொழுது, ஒருபாம்பு அவருடைய கையிலே கீண்டது. அதனைக் கண்டு

கொண்டது. அவர் அதை உதறி வீழ்த்து, பதைப்புடனே அது பற்றிய வேகத்தினாலே வீழுமுன், கொய்த குருத்தை வேகத்தோடு கொண்டோடிவந்து, விஷம் முறையே ஏறித் தலைக்கொண்ட ஏழாம்வேகத்தினாலே பல்லும் கண்ணும் சரீரமும் கருகித் தீய்ந்து, உரை குழறி மயங்கி, குருத்தைத் தாயார் கையில் நீட்டி, கீழே விழுந்து இறந்தார். அது கண்டு, தந்தையாரும் தாயாரும் "ஐயோ! இது தெரிந்தால் இனி நாயனார் திருவமுதுசெய்யாரே" என்று துக்கித்து, சவத்தை வீட்டுப்புறத்து முற்றத்தின் ஒரு பக்கத்திலே பாயினால் மறைத்து வைத்துவிட்டு, அப்பமூர்த்தியிடத்திற் சென்று, "சுவாமீ, எழுந்துவந்து திருவமுதுசெய்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். அப்பமூர்த்தி எழுந்து, கைகால் சுத்திசெய்துகொண்டு, வேறோராசனத்தில் இருந்து, விபூதி தரித்து, அப்பூதிநாயனாருக்கும் அவர் மனைவியாருக்கும் விபூதி கொடுத்து, புதல்வர்களுக்கும் கொடுக்கும்போது, அப்பூதிநாயனாரை நோக்கி, "நாம் இவர்களுக்கு முன்னே விபூதி சாத்தும்படி உம்முடைய சேட்ட புத்திரரை வருவியும்" என்றார். அப்பூதிநாயனார் "இப்போது அவன் இங்கே உதவான்" என்றார். அப்பமூர்த்தி அதைக் கேட்டவுடனே சிவபிரானுடைய திருவருளினாலே தம்முடைய திருவுள்ளத்திலே ஒரு சடுமாற்றந்தோன்ற, அப்பூதிநாயனாரை நோக்கி, "அவன் என்செய்தான்? உண்மை சொல்லும்" என்றார். அப்பூதிநாயனார் அஞ்சி நடுக்குற்று, வணங்கி நின்று, நிகழ்ந்த சமாசாரத்தை விண்ணப்பஞ்செய்தார். அப்பமூர்த்தி அதைக்கேட்டு, "நீர் செய்தது நன்றாயிருக்கின்றது; இப்படி வேறியார் செய்தார்" என்று சொல்லிக்கொண்டு எழுந்து, சிவாலயத்துக்குமுன் சென்று, சவத்தை அங்கே கொணர்வித்து, விஷத்தை நீக்கியருளும் பொருட்டுப் பரமசிவன்மேலே திருப்பதிகம் பாடினார். உடனே அப்புத்திரர் உயிர்பெற்று எழுந்து, அப்பமூர்த்தியுடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரிக்க; அப்பமூர்த்தி விபூதி கொடுத்தருளினார் அப்பூதிநாயனாரும் மனைவியாரும் தங்கள் புத்திரர் பிழைத்தமையைக் கண்டும் அதைக்குறித்து மகிழ்ச்சிதோன்றியாமல், நாயனார் திருவமுது செய்யாதிருந்

மையைக் குறித்துச் சிந்தை நொந்தார்கள். அப்பமூர்த்தி அதனை அறிந்து, அவர்களோடும் வீட்டிற்சென்று, அப்பூதி நாயனாரோடும் அவர் புத்திரர்களோடும் ஒருங்கிருந்து திருவமுது செய்தருளினார். அப்படியே சிலநாள் அங்கிருந்து, பின் திருப்பழனத்திற்குப் போயினர்.

அப்பூதியடிகள் சைவசமயாசாரியராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடிகளைத் துதித்தலே தமக்குப் பெருஞ் செல்வமெனக்கொண்டு வாழ்ந்திருந்து, சிலகாலஞ் சென்ற பின் பரமசிவனுடைய திருவடிகளை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

திருநீலநக்கநாயனார் புராணம்.

சோழமண்டலத்திலே, சாத்தமங்கையிலே, பிராமண குலத்திலே, திருநீலநக்கநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் வேதத்தின் உள்ளுறையாவது பரமசிவனையும் அவருடைய அடியார்களையும் அன்பினோடு அருச்சித்து வணங்குதலே என்று துணிந்து, தினந்தோறுஞ் சைவாகம விதிப்படி சிவார்ச்சனை பண்ணி, சிவபத்தர்களுக்குத் திருவமுது செய்வித்தல் முதலாகிய பலவகைப்பட்ட பணிகளையுஞ் செய்வார்.

அப்படிச் செய்யுநாளிலே, ஒரு திருவாதிரை நக்ஷத்திரத்திலே, சிவபூசையை முடித்துக்கொண்டு, அந்த ஸ்தலத்திலுள்ள அயவந்தி என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற சுவாமியையும் அருச்சிக்க விரும்பி, தம்முடைய மனைவியார் பூசைக்கு வேண்டும் உபகரணங்களைக் குறைவறக் கொண்டு வர, அவ்வாலயத்திற் சென்று, பூசைபண்ணிப் பிரதக்ஷிணஞ் செய்து, சந்நிதானத்திலே நமஸ்கரித்து, இருந்துகொண்டு, வேதாகமாதி சமஸ்த சாஸ்திரங்களின் உண்மைப்பொருளாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஜபித்தார். ஜபிக்கும்பொழுது, ஒரு சிலம்பி மேலே நின்று, வழுவி, சிவலிங்கத்தின்மேல் விழுந்தது. அதைச் சமீபத்திலே நின்ற மனைவியார் கண்டு, அச்சமடைந்து, விரைந்து, குழந்தைமேல் விழுஞ் சிலம்பி

நீங்கும்படி ஊதித் துமிபவர்போல அன்பு மிகுதியினலே அந் தச்சிலம்பி நீங்கும்படி ஊதித் துமிந்தார். திருநீலநக்கநாய னர் அதைக் கண்டு, தம்முடைய கண்ணைப் புதைத்து, "அறிவில்லாதவளே, நீ இப்படிச் செய்ததென்னை" என்று சொல்ல; மனைவியார் "சிலம்பி விழுந்தபடியால் ஊதித் துமிந் தேன்" என்றார். நாயனர் மனைவியாருடைய அன்பின் செய் கையை நன்குமதியாமல், அது, அநுசிதம் என்று நினைந்து, அவரை நோக்கி, "நீ சிவலிங்கத்தின்மேலே விழுந்த சிலம் பிலை வேறொரு பரிசினலே நீக்காமல், முற்பட்டுவந்து, ஊதித் துமிந்தாய். இந்த அநுசிதத்தைச் செய்த உன்னை நான் இனித் துறந்தேன்; நீங்கிவிடு" என்றார். அப்பொழுது சூரியாஸ்தமயனமாயிற்று. மனைவியார் நாயகருடைய ஏவலி னலே ஒருவழி நீங்க; நாயகர் பூசையை முடித்துக்கொண்டு, வீட்டிற்குத் திரும்பிவிட்டார். மனைவியார் அஞ்சுகின்ற உள் ளத்தோடும், அவரிடத்திற் செல்லமாட்டாதவராகி, ஆலயத் தில் இருந்தார். நாயனர் நித்திரை செய்யும்பொழுது, பரம சிவன் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, தம்முடைய திருமேனியைக் காட்டி, "உன் மனைவி மனம்வைத்து ஊதித் துமிந்த இடமொழிய, இப்புறம் சிலம்பியின் கொப்புளம்" என்று சொல்லியருளினர். நாயனர் அச்சத்துடனே அஞ் சலிசெய்துகொண்டு விழித்து எழுந்து, கூத்தாடினர்; பாடி னர்; சிவபிரானுடைய திருவருளே வியந்து நின்று அழுதார். விடிந்தபின், ஆலயத்துக்குப்போய், சுவாமியை நமஸ்கரித்து, ஸ்தோத்திரஞ் செய்து, மனைவியாரையும் அழைத்துக் கொண்டு, வீட்டுக்குத் திரும்பினர். அதற்குப் பின், முன்னி லும் பார்க்க மிகுந்த மகிழ்ச்சியோடு, சிவார்ச்சனையையும் மாகேசுர பூசையையுஞ் செய்துகொண்டிருந்தார்.

அப்படியிருக்குநாளிலே, பரமாசாரியராகிய திருஞான சம்பந்தமூர்த்திநாயனருடைய மகிமையைக் கேள்வியுற்று, அவருடைய ஸ்ரீ பாதாரவிந்தங்களைத் தரிசிக்கவேண்டும் என் னும் அத்தியந்த ஆசையையுடையராயினர். அப்படியிருக் கும்பொழுது, திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அயவந்தி நாதரை வணங்கும்பொருட்டுத் திருக்கூட்டத்தோடும் சாத்த

மங்கைக்கு எழுந்தருளி வர; திருநீலநக்கநாயனர் கேள்வியுற்று, மிகுந்த மகிழ்ச்சியோடும் நடைப்பந்தரிட்டு, வாழைகளையும் கமுகுகளையும் நாட்டி, தோரணங்கள் கட்டி, நிறைகுடங்களும் தூபதீபங்களும் வைத்து, தம்முடைய சுற்றத்தார்கள் சமஸ்தரோடும் அவரை எதிர்கொண்டு நமஸ்கரித்து, தம்முடைய வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய், திருவமுது செய்வித்தார். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் அன்றிரவிலும் அங்கே தானே திருவமுதுசெய்து, திருநீலநக்கநாயனரை அழைத்து, "திருநீலகண்டப் பெரும்பாணருக்கும் விறலியாருக்கும் இன்று தங்குதற்கு ஓரிடங்கொடும்" என்று சொல்லியருள; திருநீலநக்கநாயனர் வீட்டுக்கு நடுவிலிருக்கின்ற வேதிகையின் பக்கத்திலே அவர்களுக்கு இடங்கொடுத்தார். பெரும்பாணர், அவ்விடத்திலே, வேதிகையிலுள்ள நித்தியாக்கினி வலஞ்சுழித்து ஓங்கி புன்னையிலுஞ் சிறந்து பிரகாசித்து, வருணமன்று பத்தியே மகிமை தருவது என்பதை விளக்கவும், அதுகண்ட திருநீலநக்கநாயனர் மகிழ்ச்சியடையவும், விறலியாரோடு நித்திரைசெய்தார்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர், விடிந்தபின், அயவந்தியிற் சென்று சுவாமிமேலே திருநீலநக்கநாயனரைச் சிறப்பித்துத் திருப்பதிகம்பாடி, சிலநாள் அங்கிருந்து, பின் திருநீலநக்கநாயனருக்கு விடைகொடுத்து, அந்தத் திருப்பதியினின்றும் நீங்கியருளினர். திருநீலநக்கநாயனர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்மேலே பதிந்த அன்பும் அவருடைய கேண்மையும் அவருக்குப் பின் செல்லும்படி தம்மை வலிந்தனவாயினும், தாம் அவருடைய ஆஞ்ஞையை வலியமாட்டாமையால், அந்தத் திருப்பதியிலே அவருடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டிருந்தார். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் செல்லுந் தலங்களிலே இடைநாட்களிற் சென்று அவரோடிருந்து, பின் திரும்பிவிடுவார். இப்படி நெடுகாட் சென்றபின், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனருடைய திருமணத்தைச் சேவித்துச் சிவபதமடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

நமிநந்தியடிகணயனார் புராணம்.

சோழமண்டலத்திலே, ஏமப்பேறூரிலே, பிராமண குலத்திலே, பரமசிவனுடைய திருவடிகளே மிகுந்த அன்போடும் ஒழியாதே அகோராத்திரம் வழிபடுதலே இன்பமெனக் கொண்ட நமிநந்தியடிகள் என்பவர் ஒருவர் இருந்தார்.

அவர் பலநாளுந் திருவாரூருக்குப் போய் வன்மீகநாதரை வணங்கினர். ஒருநாள் வணங்கிக்கொண்டு, புறப்பட்டுத் திருமுன்றிலை அடைந்து பக்கத்தில் இருக்கின்ற அரநெறி என்னும் ஆலயத்துட்புகுந்து, சுவாமியை நமஸ்கரித்து, அங்கே செய்யவேண்டிய பல தொண்டுகளைச் செய்து, இரவிலே அங்கே எண்ணில்லாத தீபமேற்றுதற்கு விரும்பி, எழுந்தார். எழுந்தபொழுது, மாலைக்காலமாதலைக் கண்டு, அப்பாற் செல்லிற் பொழுது செல்லும் என்று நினைந்து, சமீபத்திலே ஒரு வீட்டில், அது சமணர்வீடென்று அறியாமையினாலே புகுந்து, "சிவாலயத்தில் விளக்கேற்றுதற்கு நெய் தாருங்கள்" என்று கேட்டார். அதற்கு அவர்கள் "கையிலே சுவாலிக்கின்ற அக்கினியையுடைய பரமசிவனுக்கு விளக்கு மிகையன்றே? இங்கே நெய்யில்லை. விளக்கெரிப்பீராகில், நீரைமுகந்து எரியும்" என்றார்கள். நமிநந்தியடிகணயனார் அந்தச் சொல்லைப் பொருதவராகி, அப்பொழுதே மிகுந்த மனவருத்தத்தோடும் திரும்பிப்போய், சுவாமி சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்தார். அப்பொழுது ஆகாயத்திலே "நமிநந்தியே, நீ உன்னுடைய கவலையை நீக்கு. இதற்குச் சமீபத்தில் இருக்கின்ற குளத்தில் நீரை முகந்து கொண்டு வந்து விளக்கேற்று" என்று ஒரு அசரீரி வாக்குத் தோன்றிற்று. நமிநந்தியடிகணயனார் அதைக் கேட்டு, மனமகிழ்ந்து திருவாரூரை வியந்துகொண்டு எழுந்து போய், குளத்தில் இறங்கி, சிவநாமத்தை உச்சரித்து, நீரை முகந்துகொண்டு, திருக்கோயிலிலே வந்து, அகலிலே முறுக்கிய திரியின்மேலே அந்நீரை வார்த்து, விளக்கேற்றினார். அது சுடர்விட்டெழுந்தது. அது கண்டு, அவ்வாலயம் முழுதிலும் சமணர்களெதிரே மிகுந்த களிப்புடனே நாடறிய நீரினாலே திருவிளக்கெரித்தார். திருவிளக்கு விடியுமளவும் நின்று எரியும்படி, குறைகின்ற தகழிகளுக்கெல்லாம் நீர்

வார்த்து இரவிலேதானே தம்முடைய ஊருக்குப்போய், சிவார்ச்சனை பண்ணி, திருவமுதுசெய்து, நித்திரை கொள்வார். உதயகாலத்திலே பூசையை முடித்துக்கொண்டு, திருவாரூரை அடைந்து, அரநெறி என்னும் ஆலயத்திற் சென்று, சுவாமிதரிசனம் பண்ணி, பகன்முழுதினும் திருத்தொண்டுகள் செய்து இரவிலே எங்கும் விளக்கேற்றுவார்.

இப்படி நிகழுங்காலத்திலே, தண்டியடிகளாலே சமணர்கள் கலக்கம் விளைந்து நாசமடைய; திருவாரூர் பெருமையடைந்து விளங்கியது. சோழமகாராஜா, நமிநந்தியடிகணயனரே அத்தியக்ஷராக, வன்மீகநாதருக்கு வேண்டும் நிபந்தங்கள் பலவற்றையும் வேதாகமவிதி விளங்க அமைத்தார். நமிநந்தியடிகள் வீதிவிடங்கப் பெருமாளுக்குப் பங்குனிமாசத்திலே மகோற்சவம் நடத்துவித்தார். நடத்துவிக்கும்பொழுது, சுவாமி ஒருநாள் திருமணலிக்கு எழுந்தருள; சகல சாதியார்களும் ஒருங்கு சேவித்துப் போனார்கள். நமிநந்தியடிகணயனரும் சேவித்துப்போய், அங்கே சுவாமியுடைய திருவோலக்கத்தைக் கண்டு களிப்படைந்தார். பொழுதுபட, சுவாமி திரும்பித் திருக்கோயிலிலே புக, நமிநந்தியடிகள் வணங்கிக்கொண்டு, தம்முடைய ஊரை அடைந்து, வீட்டினுள்ளே புகாமல்; புறக்கடையிலே படுக்க, மனைவியார் வந்து, "உள்ளே எழுந்தருளிச் சிவார்ச்சனையையும் அக்கினிகாரியத்தையும் முடித்துக்கொண்டு பள்ளிகொள்ளும்" என்றார். நமிநந்தியடிகள் "இன்றைக்குச் சுவாமி திருமணலிக்கு எழுந்தருளியபோது நானும் சேவித்துப்போனேன். சகல சாதியும் கலந்துவந்தபடியால், தீட்டுண்டாயிற்று. ஆதலால் ஸ்நானம்பண்ணிப் பிராயச்சித்தஞ் செய்துகொண்டே உள்ளே புகுந்து சிவார்ச்சனையைத் தொடங்கல் வேண்டும் அதற்கு நீ ஜலமுதலாயின கொண்டுவா" என்று சொல்ல; மனைவியாருங் கொண்டுவரும்பொருட்டு விரைந்து சென்றார். அப்பொழுது நமிநந்தியடிகணயனர் சிறிதுறக்கம் வர, நித்திரை செய்தார். செய்யும்பொழுது வீதிவிடங்கப்பெருமாள் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "திருவாரூரிலே பிறந்தவர்களெல்லாரும் நம்முடைய கணங்கள். அதை நீ காண்பாய்" என்று

படும் கௌபீனமும் பத்தியிலே சிறிதுங் குறைவில்லாத அமர்நீதிநாயனருடைய அடிமைத்திறமும் பெருமையில் ஒத்திருந்தபடியால், துலாக்கோலின் இரண்டு தட்டுக்களும் ஒத்து நின்றன. அவ்வற்புதத்தைக் கண்டவர்களெல்லாரும் அமர்நீதிநாயனரை வணங்கி ஸ்தோத்திரஞ் செய்தார்கள். தேவர்கள் ஆகாயத்தினின்றும் கற்பகவிருக்ஷங்களின் புஷ்பங்களை மழைபோலப் பொழிந்தார்கள். திருக்கைலாசபதி தாங்கொண்டுவந்த பிரமசாரி வடிவத்தை ஒழித்து; ஆகாயத்திலே பார்வதிதேவியாரோடு இடபாரூடராய்த் தோன்றி, தம்மைத் தரிசித்து அந்தத் தராசுத்தட்டிலேதானே நின்றுகொண்டு ஸ்தோத்திரஞ்செய்கின்ற அமர்நீதிநாயனர் அவர் மனைவியார் புத்திரர் என்னு மூவர்மேலும் திருவருளைக் கஞ்செய்து, "நீங்கள் மூவிரும் நம்முடைய அருளாற் பெற்று, நம்முடைய சந்நிதானத்திலே நம்மை வணங்கிக்கொண்டிருங்கள்" என்று அருளிச்செய்து, மறைந்தருளினார். அமர்நீதிநாயனரும், அவர் மனைவியாரும், புத்திரரும், அக்கடவுளுடைய திருவருளினால் அந்தத் தராசுதானே தேவவிமானமாகி மேலே செல்ல, அவரோடு சிவலோகத்தை அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர்சருக்க மூற்றுப்பெற்றது.

ஐந்தாவது

வம்பறாவரிவண்டுச்சருக்கம்

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம்.

சோழமண்டலத்திலே, பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்னும் பன்னிரண்டு திருப்பெயரையுடைய சிவஸ்தலத்திலே, பிராமணகுலத்திலே, வேதங்களிலே மகாபாண்டித்தியமுடைய கௌணியர் கோத்திரத்திலே, சிவபாதவிருதயரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் கற்பிலே தமக்கு உயர்வொப்பில்லாத பகவதியாரென்பவர். அவ்விருவருடைய தாய்மரபு தந்தைமரபு என்னும் இருமரபுஞ் சைவநெறி வழிவந்தனவேயாம். அவர்கள், அநாதிமலமுத்தபதியாகிய பரமசிவனேயன்றி, அவிவேகிகளாலே பதிகளெனத் திரித்துணரப்பட்ட பசுக்களைத் தெய்வமென்று கருதாத மெய்யறிவினையும், உண்மாசை நீக்கும்பெருமையையுடையதென்று வேதசிரசுகளாகிய உடநிடதங்களினாலே உணர்த்தப்பட்ட அருமருந்தாகிய விபூதி மேல் வைத்த பேரன்பைப் பரிபாலிக்குந் தன்மையையும் உடையர்களாகி, இல்லறத்திலே சிறந்து வாழ்ந்திருந்தார்கள்.

அப்படியிருக்கும்பொழுது, சிவகாருண்ணியமே திரண்டு ஒரு வடிவெடுத்தாற்போல விளங்குகின்ற சிவபாதவிருதயர், தமிழ்நாடெங்கும் சமணரும் பௌத்தருமாகிய இவ்விருவகைப்பதிதர்கள் போதிக்குந் தூர்ப்போதனையினாலே அவர்கள் அநுட்டிக்கின்ற கபடமார்க்கமாகிய ஆருகதமும் பௌத்தமுமே பெருக, அதிபரமாப்தராகிய சிவபெருமான் அருளிச்செய்த வேதசிவாகமங்களால் உணர்த்தப்படுஞ் சற்சமயமாகிய சைவசமயம் அருகி, விபூதிசாதன விளக்கங் குன்றுதலைக் கண்டு, கவலிகொண்டு, நிகழ்காலத்தும் எதிர்காலத்துமுள்ள

சருவான்மாக்களும் உய்தல்வேண்டு மென்பதைத் திருவுளத் தடைத்து, ஒரு திவ்விய புத்திரரைப் பெறல்வேண்டுமென் னும் பேராசையினாலே, இல்லறத்திலிருந்துகொண்டே சர் வாபீஷ்டவரதராகிய தோணியப்பரையும் பெரியநாயகியாரை யும் நோக்கி, பரசமயநிராகரணம் பண்ணிச் சைவசமயஸ் தாபனஞ்செய்ய வல்ல உயர்வொப்பில்லாத ஒரு சற்புத்திர ரைப் பெறும்பொருட்டு, மிகுந்த அன்பினோடு தவஞ்செய் தார். அங்ஙனஞ்செய்த தபோபலம்பற்றி, தோணியப்பரு டைய பெருங்கருணையினாலே, உலகமெல்லாம் உய்யும்படி, பகவதியாருடைய அருமைத் திருவயிற்றிலே, கர்ப்போற் பத்தியாகிய பெரும்பேறு உளதாயிற்று. சிவபாதவிருதயர் அதனை உணர்ந்து, திருவருளைத் துதித்து, மூளுகின்ற மகிழ் ச்சியோடு, தங்கள் வேதவிதிப்படி செய்யவேண்டுஞ் சடங்கு களைப் பத்துமாசங்களினும் சுற்றத்தார்களோடு சிறக்கச் செய்து, பேரின்பத்தை நல்கருநாளிலே; சூரியன் முதலிய கிரகங்கள் உச்சங்களிலே மிக்கவலியுடன் நிற்க; திவ்விய லக்கினம் எழ, திருவாதிரை நக்ஷத்திரத்திலே, பரசமயத் தருக்கு நீங்கவும், வைதிகமார்க்கமும் சைவமார்க்கமுந் தழைத்தோங்கவும், பிராமணர்களுடைய ஆகுதிகள் பெருக வும், எம்மொழிகளினுந் தமிழ்மொழியே உயர்ச்சியடையவும், பலவுலகங்களுள்ளும் பூலோகமும் அப்பூலோகத்துள்ள பல நாடுகளுள்ளுந் தமிழ்நாடுமே சிறக்கவும், பிள்ளையார் திருவவ தாரஞ்செய்தருளினார். அவருக்குச் சாதகர்மம், நாமகரணம், அன்னப்பிராசனம் சௌளம் என்கின்ற கருமங்கள் உரிய காலங்களிலே மிகுந்த சிறப்போடு செய்யப்பட்டன.

பிள்ளையார், மூன்றும் ஆண்டிலே, தம்முடைய தந்தை யாராகிய சிவபெருமான் தம்மைச் சிவபாதவிருதயருக்குப் புத் திரராகக் கொடுக்க அவரைப் பிரிந்ததமையால், ஓரோர்கால் அப் பிரிவு உள்ளத்திற்றோன்ற வெருக்கொண்டாற்போலக் குறிப் பயலாய் அழுவர். இங்ஙன நிகழுநாளிலே, வேறொருநாள்; தந் தையாராகிய சிவபாதவிருதயர் ஸ்நானம்பண்ணுதற்குப்போம் பொழுது, பிள்ளையார், பரமசிவனுடைய திருவருள் கூட, அவ ரைத் தொடர்ந்து அழுதுகொண்டு பின் சென்றார். பின்சென்ற

பிள்ளையாரைத் தந்தையார் திரும்பிப்பார்த்து, கோபமுடை யவர்போல விலக்குதலும், பிள்ளையார் கால்கொட்டி மீளா ராக; தந்தையார் "உன்செய்கை இதுவாயில் வா" என்று, கொண்டு சென்று, ஆலயத்தினுள்ளிருக்கின்ற தீர்த்தத்தை அடைந்து, அப்பிள்ளையாரைக் கரையிலே வைத்துவிட்டு, தாந் தீர்த்தத்தினுள்ளே இறங்கி, நீன்றுகொண்டு சங்கற்பம் அகமருஷ்ண சூக்த படனமுதலியன செய்தார். அப்பொ ழுது பிள்ளையார் பார்த்துக்கொண்டிருந்தார். பின்பு தந்தை யார் ஸ்நானம்பண்ணும்பொழுது, பிள்ளையார் அவரைக் காணுது இறையளவாயினுந் தரியார் என்னும் நிலைமை தலைக்கிடாக, பரமசிவனுடைய திருவடிகளை வழிபட்ட முன்னுணர்ச்சி மூள, கரையினின்று கண்களைக் கண்ணீர் ததும்பும்படி கைகளினாலே பிசைந்து அதரந் துடிக்க, எவ் வுலகங்களும் குழுகலிக்க, பொருமி அழுதார். தம்முடைய முற்சார்பை அறிந்தோ, பிள்ளைமையாலோ, சுவாமியுடைய திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து, "அம்மே அப்பா" என்று அழைத்தழைத்து அழுதார். அப்பொழுது சுத்த சாட்குண்ணிய பரிபூரணராகிய தோணியப்பர் அவருடைய முற்றிருத்தொண்டை நினைந்து, அவருக்கு அருள்செய்தற் குத் திருவுளங்கொண்டு, பார்வதிதேவியாரோடும் இடபா ரூடராய் எழுந்தருளி, தீர்த்தக்கரையை அடைந்து, உலக மாதாவாகிய உமாதேவியாரை நோக்கி, "உன்னுடைய முலைப் பாலைப் பொன்வள்ளத்திலே கறந்து இவனுக்கு ஊட்டு" என்று அருளிச்செய்தார். பரிபக்குவர்களாகிய ஆன்மாக்க ளிடத்திலே சகசமாயுள்ள மலத்தை நீக்கி அவர்களைச் சிவத் தோடு இரண்டறக் கலப்பித்தருளும் பராசத்தியாகிய உமா தேவியார் சென்றணைந்து, தம்முடைய திருமுலைப்பாலைப் பொன்வள்ளத்திலே கறந்து, சிவஞானத்தைக் குழைத்து, பிள்ளையாருடைய கண்ணீரைத் துடைத்து, கையிலே கொடு த்து ஊட்ட, சிவபெருமான் அழுகைதீர்த்து அநுக்கிரகஞ் செய்தருளினார். அப்பிள்ளையார் சர்வான்மாக்களுக்கும் பரம பிதாமாதாக்களாகிய சிவன் சத்தி இருவராலும் ஊளப்பட்ட மையினாலே ஆளுடைய பிள்ளையார் என்னும் பெயரும், அரி பிரமேந்திராதி தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் எட்டாத

சிவஞானத்தோடு சம்பந்தஞ்செய்தலினாலே திருஞானசம்பந்தமூர்த்தி என்னும் பெயரும் உடையராயினர்.

சிவபாதவிருதயர் சிறிதுபொழுதிலே தம்முடைய நியமங்களை முடித்துக்கொண்டு கரையிலேறி, பரஞானக் கண்ணினாலே சிவத்தைத் தரிசித்து அதில் அதீதப்பட்டு நின்ற ஆளுடையபிள்ளையாரை நோக்கி, "நீ யார் தந்த பாலை உண்டாய்" என்று கோபித்து, "எச்சில் மயங்க உனக்கு இதனைத் தந்தவரைக் காட்டு" என்று சொல்லி, கையில் எடுத்த ஒரு சிறிய மாறுகொண்டோச்ச; பிள்ளையார் ஆனந்தபாஷ்பஞ் சொரிய உச்சியின்மேல் எடுத்தருளிய ஒரு திருக்கை விரலினாலே சுட்டி, ஆகாயத்திலே இடபாரூடராகி உமாதேவியாரோடு நின்றருளிய பரமசிவனைக் காட்டி, உள்ளே நிறைந்து எழுந்த சத்தியஞானத் திருமொழியினாலே, எல்லையில்லாத வேதத்தினுட்சிறந்த தாற்பரியங்களெல்லாவற்றையும் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டுத் தமிழினாலே திருவாய் மலர்ந்தருளுதற்குத் திருவுளங்கொண்டு, அவ்வேதத்திற்கு ஆதியாகிய அக்ஷரத்தை மெய்யோடு புணர்த்தி, தம்முடைய பாடல் சிவபெருமானுடைய திருச்செவியில் ஏறும்பொருட்டு முன்னர் அத்திருச்செவியையே சிறப்பித்து, "தோடுடை யசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்—காடுடை யசுடலைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வ—னேடுடை யமலரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த—பீடுடை யபிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே" என்று பாடத்தொடங்கியருளினர். சிவபெருமான் தமக்குப் பிழை செய்த ஆன்மாக்களும் பின் தம்மை வந்தடையின் அவர்களுக்கு அநுக்கிரகஞ் செய்வாரென்பதை விளக்கும்பொருட்டு, தம்மை மதியாமல் தாம் வீற்றிருக்கின்ற திருக்கைலாசத்தை எடுத்துத் தன் வலியிழந்த இராவணன் பின் தம்மேல் இசைபாட அவனுக்கு அருள்புரிந்த திறத்தை எட்டாந்திருப்பாட்டிலும், எவ்வகைப்பட்ட சிறப்பினரும் சிவபெருமானை அன்போடு வழிபடினன்றி அவரை அடையார்களென்பதை விளக்கும்பொருட்டு, சிவபெருமான் தம்மை வணங்குகின்றவர்களுக்கே அருள்செய்வரென நினைந்து

அவரை வணங்காது வழுவாகிய மானத்தை மேற்கொண்டு மயங்கிய பிரமவிட்டுணுக்கள் இழிவாகிய பன்றியும் அன்னமுமாய்த் தேடியும் அடையாதவர்களாகிப் பின்பு திருவைவந் தெழுத்தைத் துதித்தே உய்ந்த திறத்தை ஒன்பதாந் திருப்பாட்டிலும், வேதகாரணராகிய கடவுளே அடையுநெறியை அறிந்து உய்யாத சமணரும் புத்தருமாகிய கையர்களுடைய சமயங்கள் கபடமார்க்கங்கள் என்னுந் திறத்தைப் பத்தாந் திருப்பாட்டிலும், அமைத்துப் பாடியருளினர். இங்ஙனந் திருப்பதிகத்தை நிறைவித்து, திருக்கடைக்காப்புச் சாத்தித் தொழுதுகொண்டு நின்றார். சிவபெருமானுடைய பெருங்கருணையைக் கண்டு ஆகாயத்திலே தேவர்களெல்லாரும் புஷ்பமழை பொழிந்தார்கள். சிவபெருமான் தேவதுந்துபிகள் முழங்க, கந்தருவர்களும் கின்னரர்களும் கீதவொலி செய்ய, அரிபிரமேந்திராதி தேவர்களெல்லாரும் தோத்திரம்பண்ண, சிவகணநாதர்கள் ஹரஹர என்று சொல்லும் ஓசை தழைக்க, முனிவர்கள் வேதகோஷத்தோடு பக்கத்திலே சூழ, பார்வதியாரோடு திருத்தோணிக்கு எழுந்தருளினர். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அதைக் கண்டு, அவரைத் தொடர்ந்து எழுகின்ற அன்புமேலீட்டினாலே, தம்முடைய கண்வழியே சென்ற கருத்து நீங்காமற் கலந்து செல்ல, சிவபிரான் எழுந்தருளிய திருக்கோயிலினுள்ளே பிரவேசித்தார். அநந்தகோடி சிவபுண்ணியங்களைச் செய்து அப்பிள்ளையாருக்குப் பிதாவாயிருக்கப் பெற்றுக்கொண்ட சிவபாதவிருதயர் கைகுவித்து ஆனந்தக்கூத்தாடி, வெருட்சியும் வியப்பும் விருப்பும் அடைந்து, அவர் திருவாய்மலர்ந்தருளிய திருநெறித் தமிழின்பொருளை உணர்ந்தார். பரமசிவனைத் தனியே கண்டு தொடர்ந்த பிள்ளையாரைப்போலக் காணப்பெற்றிலராயினும், அங்கு நிகழ்ந்த அற்புதத்தைக் கண்டு, அது தோணியப்பருடைய திருவருளினைத் துணிந்து, பேரானந்தத்தோடும் முன்சென்ற பிள்ளையாருக்குப் பின் சென்றார். அப்பொழுது அங்கே நிகழ்ந்ததைக் கேள்வியுற்ற பிராமணர்களெல்லாரும் உரோமப் புளகங்கொண்டு, "இதற்கு ஒப்பாகிய அற்புதம் எங்கே நிகழ்ந்தது" என்று சொல்லிக்கொண்டு திருக்கோயில் வாயிற்புறத்திலே வந்து சூழ்ந்தார்கள். பிள்ளையார் திருக்

தோணியில் வீற்றிருந்தருளிய சிவபிரானே அடைந்து திருப்பதிகப் பாடி, திருக்கோயிலினின்றும் புறப்பட்டார். அதுகண்டோ பிராமணர்களும் மற்றையோர்களும் எதிர்கொண்டு வந்து நின்று, தோத்திரம்பண்ணி, பூமியிலே விழுந்து அவருடைய திருவடிகளை நமஸ்கரித்து எழுந்தார்கள். சிவபாதவிருதயர் பிள்ளையாரை எடுத்து, தோளின்மேலே வைத்துக்கொண்டு, மங்கலவாத்தியங்கள் ஒலிக்க, பிராமணர்கள் வேதகோஷஞ்செய்ய, சிவனடியார்களெல்லாரும் ஸ்தோத்திரம்பண்ண, சீர்காழியை வலஞ்செய்துகொண்டு, தம்முடைய திருமாளிகையை அடைந்தார்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார், மற்றைநாள், பிராதக்காலத்திலே, ஆலயத்திற் சென்று, தம்முடைய பிதாமாதாக்களாகிய பரமசிவனையும் பார்வதியாரையும் வணங்கித்துதித்து, அருள் பெற்று, திருக்கோலக்காவென்னுந் திருப்பதியை அடைந்து, திருக்கோயிலை வலஞ்செய்து முன்னின்று, கையினாலே ஒத்தறுத்துத் திருப்பதிகம் பாடத்தொடங்கினார். பாடும்பொழுது, சிவபெருமானுடைய திருவருளினாலே ஸ்ரீ பஞ்சாக்ஷரம் எழுதப்பட்டிருக்கின்ற பொற்றாளம் உலகமெல்லாம் உய்யும்படி பிள்ளையாருடைய திருக்கரத்தே வந்திருந்தது. பிள்ளையார் அதைக் கண்டு, திருவருளை வியந்து, களிகூர்ந்து, வழிசையும் தழைத்தோங்க, திருப்பதிகத்தைப் பாடி முடித்து, திருக்கடைக்காப்புச் சாத்தி நின்றார். அவர் பாடும்பொழுது, விண்ணுலகமும் அதிசயிக்கும்படி ஓங்கிய அதிமதுரநாதத்தை நோக்கித் தும்புரு நாரதர் முதலாகிய சங்கீதவித்துவான்கள் ஸ்தோத்திரஞ்செய்து, புஷ்பமாரி பொழிந்தார்கள். வேதசிவாகமங்கள் வாழும்படி திருவவதாரஞ் செய்தருளிய பிள்ளையார் மீண்டு சீர்காழிக்குப் போம்படி நடந்தார். நடக்கும்பொழுது, சிவபாதவிருதயர் தரிக்சலாற்றுமையால் தோளின்மேலே தரித்துக்கொள்ள, பிள்ளையார் அத்தோளின்மேல் எழுந்தருளி, சீர்காழியிலிருக்கின்ற திருக்கோயிலை அடைந்து, வலஞ்செய்து, சந்நிதானத்திலே நின்று திருப்பதிகம்பாடி வணங்கிக்கொண்டு, தம்முடைய திருமாளிகையை அடைந்து, அந்தச்

சீர்காழியில் வாழுகின்றவர்களெல்லாரும் வாழும்பொருட்டு, தம்முடைய இளந்திருக்கோலக் காட்சியைக் கொடுத்து வீற்றிருந்தருளினர். அப்படியிருக்கும்பொழுது, அவருடைய தாயாராகிய பகவதியார் பிறந்த திருநனிபள்ளியில் இருக்கின்ற பிராமணர்கள் எல்லாரும் பெருமகிழ்ச்சியோடு அவ்விடத்திற்கு வந்து சேர்ந்து, அவரை வணங்கப்பெற்று இருந்தார்கள். பிள்ளையார் உலகமெல்லாம் உய்யும்படி சிவஞானம் பெற்ற பெருவார்த்தையைக் கேள்வியுற்று, சமீப ஸ்தலங்களிலிருக்கின்ற பிராமணர்களும் திருத்தொண்டர்களும் மற்றையனைவரும் அதிசயித்துத் திரண்டு வந்து, பிள்ளையாரை வணங்கி உய்ந்தார்கள்.

இங்ஙன நிகழுநாளிலே, திருநனிபள்ளியிற் பிராமணர்கள் பிள்ளையாரை வணங்கி, "அடியேங்களெல்லாரும் உய்யும்படி திருவவதாரஞ் செய்தருளிய பரமகிருபாலுவாகிய சுவாமீ, அடியேங்களுடைய வாசஸ்தானமாகிய திருநனிபள்ளியில் வீற்றிருக்குஞ் சிவபெருமானை வணங்கும்பொருட்டு அவ்விடத்திற்கு எழுந்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். சிவானுபூதிப் பெருவாழ்வாகிய பிள்ளையார் அதற்கு இசைந்து, தோணியப்பரை வணங்கி அருள்பெற்று, பிற தலங்களையும் வணங்கச் சென்றார். செந்தாமரைமலரினுஞ் சிறந்த அருமைத் திருவடிகள் தரையின்மேற் செல்வதையும் பிறரொருவர் தாங்குவதையும் பொறாத அன்பினையுடைய சிவபாதவிருதயர் வந்து எடுத்துத் தோளின்மேலே வைத்துக்கொண்டு சென்றார். திருநனிபள்ளிக்குச் சமீபித்த பொழுது, பிள்ளையார் "அந்தச் சோலை தோன்றும் பதியாது" என்று விளம்பியருள; தந்தையார் "திருநனிபள்ளி" என்றார். அது கேட்டு, திருப்பதிகம் பாடிக்கொண்டு, திருக்கோயிலை அடைந்து, சுவாமியை வணங்கிக்கொண்டு, அந்த ஸ்தலத்தில் இருந்தார். பின் அவ்விடத்தினின்று நீங்கி, தலைச்சங்காடு, திருவலம்புரம், பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருமுல்லைவாயில் என்னுந் தலங்களுக்குப் போய் சுவாமிதரிசனஞ்செய்து, திருப்பதிகம் பாடிக்கொண்டு, மீண்டு சீர்காழியை அடைந்து, சுவாமிதரிசனஞ்

செய்துகொண்டிருந்தார். இருக்குநாளிலே, திருமயேந்திரப் பள்ளி, திருக்குருகாவூர் முதலாகிய ஸ்தலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடினர்.

இப்படி நிகழுங்காலத்திலே, திருநீலகண்டப்பெரும்பாணர் ஆளுடைய பிள்ளையாரைத் தரிசிக்கும்பொருட்டு, விறலியாரோடு யாழ்கொண்டு, சீர்காழியிலே வந்து சேர்ந்தார். பிள்ளையார் அவருடைய வரவை அறிந்து, அவரை எதிர்கொள்ள; அவர் பிள்ளையாருடைய திருவடிகளை நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ் செய்தார். பிள்ளையார் அவரை அழைத்துக்கொண்டு திருக்கோயிற்புறமுன்றிலிலே சென்று, கும்பிடுவித்து, அவரை நோக்கி, "நீர் இங்கே சுவாமிக்கு யாழ் வாசியும்" என்றார். திருநீலகண்டப் பெரும்பாணர் பிள்ளையாரை வணங்கிக்கொண்டு பரமசிவன்மேலதாகிய பாணியை விறலியாரோடும் பாடி, யாழ் வாசிக்க; பிள்ளையார் மகிழ்ச்சியடைந்தார். திருநீலகண்டப்பெரும்பாணர் யாழ் வாசித்தபின், பிள்ளையார் அவரைக் கொண்டுபோய், அவருக்கு உறைவிடங் கொடுத்து, விருந்துசெய்தார். திருநீலகண்டப்பெரும்பாணர் சுவாமிமேலே பிள்ளையார்பாடிய திருப்பதிகங்களைக் கேட்டு பெருமகிழ்ச்சிகொண்டு, அவைகளின் இசைகளை யாழிலே இட்டு வாசித்தார். பின் பிள்ளையாரை நோக்கி, "சுவாமீ இன்னுந் தேவரீர் அருளிச்செய்யுந் திருப்பதிகங்களின் இசையை அடியேன் யாழிலே இட்டு வாசித்துக்கொண்டு தேவரீரைப் பிரிவின்றிச் சேவிக்கப் பெறவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்து தொழுதார். பிள்ளையார் திருவுளமகிழ்ந்து அதற்கிசைந்தருளினர். திருநீலகண்டப்பெரும்பாணர் அற்றைநாட்டொடங்கிப் பிள்ளையார் பாடுந் திருப்பதிகத்தினிசைகளை யாழிலே இட்டு வாசித்துக்கொண்டு என்றுமகலாத நண்புடனிருந்தார்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார் பூமிக்குச் சுழுமுனைநாடியாகிய தில்லையில் விளங்குகின்ற திருச்சிற்றம்பலத்திலே திருநிருத்தஞ்செய்தருளும் சபாநாயகரைத் தரிசனஞ்செய்தற்கு விரும்பி, தந்தையாரோடும், திருநீலகண்டப்பெரும்பாணரோடும் அடியார்கள் பக்கத்திலே சூழ, சீர்காழியைக் கடந்து

சென்று, சிதம்பரத்தினது திருவெல்லையை அடைந்து நமஸ்கரித்துக்கொண்டு, அந்தத் திருப்பதியைச் சூழ்ந்த திருமதிலினது தெற்குவாயிலை அடைந்து, தில்லைவாழந்தணர்களும் மற்றையடியார்களும் மகா அலங்காரத்தோடும் எதிர்கொள்ளப் போய், திருவீதியைத் தொழுது, தூலலிங்கமாகிய கோபுரத்தை நமஸ்கரித்து, எழுந்து உள்ளே புகுந்து, திருமாளிகையை வலஞ்செய்து, பேரம்பலத்தை வணங்கிக் கொண்டு, கனகசபையை அடைந்தார். ஆயிரம் ஆதித்தப் பிரகாசம் கூடிய மண்டலம்போலக் குறைவற நிறைந்த ஞான சபையிலே, திருவருளே திருமேனியாகக்கொண்டு ஆனந்த தாண்டவஞ் செய்தருளுகின்ற சபாநாயகரைத் தரிசனம் பண்ணினார். உடனே, அவயவத்திலே யாதொரு சேட்டையுமின்றி, வாதனையினுலே திருக்கரங்கள் சிரசின்மேலேறிக் குளிய; உரோமாஞ்சங்கொள்ள, நாத்தழும்ப, விழிநீர்த்தாரை கொள்ள, சிவானந்தசாகரத்தில் அமிழ்ந்தி நின்று, "கற்றுங் கெரி" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். பின்பு திருமாளிகையை வலஞ்செய்து புறப்பட்டு, திருமுன்றிலிலே நமஸ்கரித்து எழுந்து, கோபுரவாயிலைக்கடந்து வணிந்து, நான்கு திருவீதிகளையுந் தொழுது, அங்கே எழுந்தருளியிருத்தற்கு அஞ்சி, திருவேட்களத்தை அடைந்து சுவாமி தரிசனஞ்செய்து, திருப்பதிகம் பாடிக்கொண்டு அவ்விடத்தில் எழுந்தருளியிருந்தார். அங்கெழுந்தருளியிருந்துகொண்டே, சிதம்பரத்துக்கும் வந்து சபாநாயகரைத் தரிசிப்பார். அப்படி யிருக்குநாளிலே, திருக்கழிப்பாலைக்குப்போய், சுவாமிதரிசனஞ் செய்து, திருப்பதிகம் பாடினார். அவர் பாடுந் திருப்பதிகவிசைகளை யாழ்ப்பாணரும் யாழிலிட்டு வாசிப்பாராயினர். ஒருநாள் பிள்ளையார் திருவேட்களத்தைக் கடந்து சிதம்பரத்தை அடைந்தபொழுது, சபாநாயகருடைய திருவருளினுலே தில்லைவாழந்தணர் மூவாயிரரும் சிவகணநாதராய்த் தோன்றக்கண்டு, அத்தன்மையைத் திருநீலகண்டப்பெரும்பாணருக்குங் காட்டினர். தில்லைவாழந்தணர்கள் பிள்ளையாரைக் கண்டவுடனே வணங்க; பிள்ளையார் அவர்கள் வணங்குமுன் தாமும் வணங்கி, திருக்கோயிலிற் பிரவேசித்து, சபாநாயகரை வணங்கி, "ஆடினுய் நறுநெய்யோடு

பாறுயிர்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடினார். அந்தத் திருப்பதிகத்திலே "நீலத்தார் கரியமிடற்றர்" என்னுந் திருப்பாட்டிலே தில்லைவாழந்தணரைத் தாங்கண்டபடி கூறி, அவர்கள் "தொழுதேத்து சிற்றம்பலம்" என்று அருளிச்செய்தார். பின்பு திருக்கோயிலினின்றும் புறப்பட்டபொழுது திருநீலகண்டப்பெரும்பாணர் பிள்ளையாருடைய திருவடிகளை வணங்கி நின்று, "சுவாமீ, அடியேனுடைய ஜன்மஸ்தல மாகிய திருவெருக்கத்தம்புலியூர் முதலாக நிவாவென்னும் நதிக்கரையில் இருக்கின்ற தலங்களை வணங்குதற்கு எழுந் தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

ஆளுடையபிள்ளையார் அதற்கிசைந்தருளி, தந்தையார் முதலிய சமஸ்தரோடும், திருநீலகண்டப்பெரும்பாணர் திரு வவதாரஞ்செய்த திருவெருக்கத்தம்புலியூருக்கும் திருமுது குன்றுக்கும் போய், சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, பெண்ணாகடத்தை அடைந்தார். அங்கே திருத்தூங்கானை மாடம் என்னும் ஆலயத்தில் வீற்றிருக்கின்ற சுவாமியைத் தரிசனஞ் செய்துகொண்டு, திருநெல்வாயிலரத்துறைக்குப் போக விரும்பி, தந்தையாருடைய தோண்மேலிருத்தலை ஒழிந்து, அவர் மனம் வருந்தும்படி, பிராமணர் முதலியோர் சூழ்ந்து செல்ல, திருவடித்தாமரை நோவ, பையப்பைய நடந்து, மாறன்பாடி என்னும் பதி வந்தவுடனே, வழிச் சென்ற வருத்தத்தினாலே ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டு, அப்பதியிற் சென்றார். அப்பொழுது சூரியன் அஸ்தமயனமாயிற்று.

அன்றிரவு பிள்ளையார் அடியார்களோடும் அந்தப்பதி யிலேயே தங்கினார். திருவரத்துறையில் வீற்றிருக்கின்ற கடவுள் தம்முடைய திருக்குமாரராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனருடைய வழிவருத்தத்தைத் திருவுளத்தடைத்து; அவர் ஏறுதற்கு முத்துச்சிவிகையும், அவருக்கு நிழற்றுதற்கு முத்துக்குடையும், ஊதுதற்கு முத்துச்சின்னங்களும் கொடுத்தருளத் திருவுளங்கொண்டு, அந்த ஸ்தலத்திலிருக்கின்ற பிராமணர்களெல்லாருக்கும் தனித்தனியே சொப்பனத்திலே தோன்றி, "ஞானசம்பந்தன் நம்மிடத்

துக்கு வருகின்றான். நீங்கள் முத்துச்சிவிகையும் முத்துக்குடையும் முத்துச்சின்னங்களும் நம்மிடத்தில் எடுத்து அவனிடத்திற்குக் கொண்டுபோய்க் கொடுங்கள்'' என்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளினார். உடனே பிராமணர்கள் விழித்தெழுந்து, மகிழ்ந்து, அற்புதமெய்திய சிந்தையோடும் ஆலயத்திலே வந்து கூடி, திருப்பள்ளியெழுச்சிக்காலம் வர, திருக்காப்பை நீக்கி, முத்துச்சிவிகையையும் முத்துக்குடையையும் முத்துச்சின்னங்களையும் கண்டு, ஆனந்தங்கொண்டு, துந்துபிமுதலிய வாத்தியங்கள் ஒலிப்ப, சிவனடியார்களோடு, அந்தச் சிவிகை முதலாயினவற்றைத் தாங்கிக்கொண்டு, ஆளுடைய பிள்ளையாரிடத்திற்குப் போனார்கள். அதற்கு முன் பரமசிவன் ஆளுடைய பிள்ளையாருக்கும் சொப்பனத்திலே தோன்றி, ''நாம் உனக்கு முத்துச்சிவிகையும் முத்துக்குடையும் முத்துச்சின்னங்களும் அனுப்புகின்றோம். நீ அவைகளை ஏற்றுக்கொள்'' என்று திருவாய்மலர்ந்தருளினார். பிள்ளையார் விழித்தெழுந்து, தாங்கண்ட சொப்பனத்தைத் தந்தையாருக்கும் அடியார்களுக்கும் அருளிச்செய்து, வைகறையிலே விபூதி தரித்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு எழுந்தருளினார். சூரியோதயகாலத்திலே பிராமணர்கள் சிவனடியார்களோடு ஹர ஹர என்னும் ஓசையுடனே முத்துச்சிவிகைமுதலியனவற்றைக் கொண்டு எதிரே வந்து, பிள்ளையாரை வணங்கி நின்று, ''இவை திருவரத்துறையில் வீற்றிருக்கின்ற கடவுள் தந்த பொருள்கள், ஏற்றருளும்'' என்றார்கள். பிள்ளையார் அதைக்கேட்டு, அக்கடவுளுடைய திருவருளே ''எந்தையீசனேம்பெருமான்'' என்னுந் திருப்பதிகத்தினாலே பாடி, திருவருள்வடிவாகிய முத்துச்சிவிகையை வலஞ்செய்து, பூமியிலே விழுந்து, நமஸ்கரித்து எழுந்து, ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு, உலகமெல்லாம் உய்யும்படி, அதில் ஏறியருளினார். அப்பொழுது சிவனடியார்களெல்லாரும் ஆரவாரித்தார்கள். பிராமணர்கள் சமஸ்தரும் வேதகோஷஞ் செய்தார்கள். இந்திராதிதேவர்கள் ஆரவாரித்துப் புஷ்பமாரி பொழிந்தார்கள். பலவகைப்பட்ட மங்கலவாத்தியங்கள் ஒலித்தன. முத்துச்சிவிகையிலே ஏறியருளிய பரம கருணாநிதியாகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார், மேலே முத்துக்குடை

நிழற்றவும், சிவனடியார்களும் பிராமணர்களும் நெருங்கி ஆனந்தமேலீட்டினாலே கூத்தாடித் தங்கள் கண்களினின்றும் பொழிகின்ற ஆனந்த வெள்ளத்தினுள்ளே குளிக்கவும், முத்துச்சின்னங்கள் "சமஸ்தலோகங்களும் சிவனடியார்களும் வேதங்களும் உய்யும்படி சைவசிகாமணி வந்தார்; சிதசித்துப் பிரபஞ்சங்களெங்கும் வியாபித்திருக்கின்ற உமாதேவியார் ஞானப்பாலூட்ட உண்ட திருஞானசம்பந்தமூர்த்தி வந்தார்; வேதாகமாதி சமஸ்தசாத்திரங்களையும் ஓதாதுணர்ந்த முத்தமிழ் விரகர் வந்தார்" என்று ஊதவும், சென்று, திருவரத்துறையை அடைந்து, கோபுரவாயிலுக்குத் தூரத்திலே முத்துச்சிவிகையினின்றும் இறங்கி, நமஸ்கரித்து எழுந்து, திருக்கோயிலினுள்ளே பிரவேசித்து, வலஞ்செய்து சந்நிதானத்திலே நமஸ்கரித்து, திருப்பதிகம் பாடி, சிலநாள் அந்தஸ்தல்த்தில் எழுந்தருளியிருந்தார். இருக்குநாளிலே, திருநெல்வெண்ணெய் முதலிய தலங்களுக்குப் போய், சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு திரும்பினர்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனர், சிலநாளாயினபின், சீர்காழிக்குத் திரும்பும்படி திருவுளங்கொண்டு, அத்திருவரத்துறையில் வீற்றிருக்கும் கடவுளை வணங்கி விடைபெற்று, முத்துச்சிவிகையில் ஏறிச் சென்று, திருப்பழனூர், திருவிசயமங்கை, திருவைகா, திருப்புறம்பயம் என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு, திருச்சேய்ஞலூரின் எல்லையை அடைந்து, அது சண்டேசுரநாயனர் திருவவதாரஞ்செய்த திருப்பதியாதலால் முத்துச்சிவிகையினின்றும் இறங்கி, அத்திருப்பதியினுள்ளே நடந்து போய், ஆலயத்திலே பிரவேசித்து, சுவாமிதரிசனஞ்செய்து "பிரமடைந்தபாலதாட்ட" என்னுந் திருப்பதிகம் பாடினர். பின்பு, திருப்பனந்தாள், திருப்பந்தணைநல்லூர், திருவேமாம்புலியூர், திருவாளொளிபுத்தூர், திருக்கடம்பூர், திருநாரையூர், திருக்கருப்பறியலூர் என்னுந் தலங்களை வணங்கிக் கொண்டு, சீர்காழிக்குச் சமீபத்திலே போனர். போம்பொழுது, சீர்காழியிலிருக்கின்ற பிராமணர்களெல்லாரும் அவருடைய வரவைக் கேள்வியுற்று, மிகுந்த மகிழ்ச்சிகொண்டு, திருவீதிகளை அலங்கரித்து, எதிர்கொள்

ளும்படி திரண்டு சென்று, திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரை, முத்துச் சிவிகையின்மேலே, முத்துக்குடை நிழலின் கீழே, தரிசித்தார்கள். தரிசித்தவுடனே, கைகள் சிரசின் மேலேறிக் குவிய, கண்ணும் மனமுங்களிக்க, அவரைச் சூழ்ந்து ஸ்தோத்திரம்பண்ணினார்கள். பிள்ளையார் முத்துச் சிவிகையினின்றும் இறங்கி, அவர்களோடு கூடச் சென்று, திருக்கோயிலை அடைந்து, சுவாமிதரிசனஞ்செய்து, திருப்பதிகம் பாடிக்கொண்டு, புறப்பட்டுச்சென்றார். செல்லும் பொழுது, திருநீலகண்டப்பெரும்பாணர் பின்னே வர, அவருக்கு வீட்டுக்குப்போம்படி விடைகொடுத்து, தாம் தம்முடைய திருமாளிகைக்கு எழுந்தருளினார். எழுந்தருளும் பொழுது, பார்ப்பனிகள் நெருங்கி, நிறைகுடம் தீபம் முதலாயின ஏந்த, தாயாராகிய பகவதியார் வந்து, திருநீற்றுக் காப்புச்சாத்தி, வணங்கித் துதிக்க; பிள்ளையார் அவருக்கு அருள்செய்து, திருமாளிகையினுள்ளே பிரவேசித்தார்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார் தினந்தோறும் தோணியப்பரைத் தரிசனஞ்செய்து, திருப்பதிகம் பாடிக்கொண்டிருக்குநாளிலே; உபநயனப்பருவம் வர, பிராமணர்கள் வேதவிதிப்படி உபநயனச்சடங்கு செய்ய, சிவானுபூதிப்பெருஞ் செல்வராகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார், தமக்கு அது வேண்டுவதன்றாயினும், உலகத்திலே வைதிகசுமார்த்தை நாட்டல்வேண்டுமெனத் தமது திருவுளத்திலே முகிழ்த்த பெருங் கருணையினாலே, அதற்சிசைந்து, யஜ்ஞோபவீததாரணஞ் செய்தருளினார். பின்பு பிராமணர்கள் "உமக்கு நான்கு வேதத்திற்கும் அதிகாரந்தந்தோம்" என்று சொல்லி, மந்திரோபதேசஞ்செய்யப் புகும்பொழுது, பிள்ளையார் எண்ணிறந்த வேதங்களை ஓதி, அவற்றிற்கு அங்கமாகிய பலகலைகளையும் எடுத்துச் சொல்லியருளினார். பிராமணர்கள் அவர் பரமசிவனுடைய திருவருள் பெற்றமையை நினைந்து, வியந்து, அவரை நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ்செய்து, தாங்கள் முன்பயின்ற வேதங்களை அவரிடத்திற்கேட்டு, ஐயந்திரிபற உணர்ந்தார்கள். பரமாசாரியராகிய ஆளுடையபிள்ளையார் அந்தப் பிராமணருடைய சந்தேகந்தீரும்படி எல்லாவற்றையும் அரு

ளிச்செய்து, பின் சகலமந்திரங்களுக்கும் வித்து ஸ்ரீபஞ்சாக்ஷரம் என்பதை அவர்களுக்கும் மற்றையாவருக்கும் விளக்கும் பொருட்டு, "துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும்" என்னும் பஞ்சாக்ஷரத்திருப்பதிகத்தைப் பாடியருளினர். அந்தத் திருப்பதிகத்திலே "வேதியர்க்—கந்தியுண் மந்திர மஞ்செழுத்துமே" என்றருளிச்செய்தார். பிராமணர்கள் அதைக் கேட்டு மனமகிழ்ந்து, அவருடைய திருவருளைத் தலைமேற் கொண்டு, வணங்கித்துதித்து உய்ந்தார்கள்.

: ஆளுடையபிள்ளையார் தினந்தோறும் தோணியப்பரை வணங்கித் திருப்பதிகம் பாடிக்கொண்டு, அடியார்களோடும் இருக்குநாளிலே; திருநாவுக்கரசுநாயனர் அவருடைய மகிமையைக் கேள்வியுற்று, அவரை வணங்குதற்கு நினைந்து, சீர்காழிக்குச் சமீபத்திலே வந்தருளினர். பிள்ளையார் அதைக் கேட்டுத் திருவுளமகிழ்ந்து, அடியார் கூட்டத்தோடும் அவரை எதிர்கொள்ளப் போனர். எதிரேவந்த திருநாவுக்கரசுநாயனர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனரை வணங்க; திருஞானசம்பந்தமூர்த்திநாயனரும் அவரை வணங்கித் திருகோபுரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், சுவாமிதரிசனஞ் செய்வித்து, தம்முடைய திருமாளிகையிற்கொண்டு சென்று, திருவமுது செய்வித்தார். சிலநாளாயினபின், திருநாவுக்கரசுநாயனர் பிறதலங்களை வணங்கும்படி செல்ல; திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் திருக்கோலக்காவரைக்கும் அவரோடு சென்று, சீர்காழிக்குத் திரும்பிவிட்டார். அங்கே தோணியப்பர்மேலே பலவகைப்பட்ட திருப்பதிகங்களைப் பாடிக்கொண்டிருந்தார். அவைகளெல்லாவற்றையும் திருநீலகண்டப்பெரும்பாணர் விறலியாரோடும் பாடி, யாழில் இட்டு வாசித்துக்கொண்டு, பிள்ளையாரோடு சீர்காழியில் இருந்தார்.

சிலநாட்சென்றபின், திருஞானசம்பந்தப்பிள்ளையார் தந்தையாரையும் மற்றைப் பிராமணர்களையும் நோக்கி, "இந்தத் தமிழ்நாட்டிலுள்ள சிவஸ்தலங்களெங்குஞ் சென்று சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடிக்கொண்டு இங்கே வருவேன்" என்றார். தந்தையார் "நான் அருமையாக உட்மைப் பெற்றமையால் உம்மைப் பிரிந்திருக்கமாட்டேன்.

இருமைக்கும் இன்பம் பயக்கும் யாகமும் நான் செய்யவேண்டும். இன்னுஞ் சிலநாள் உம்முடன் யாத்திரை செய்வேன்'' என்றார். பிள்ளையார் அதற்கு இசைந்து, தோணியப்பரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, தந்தையார் பின் வர, முத்துச்சிவிகை மேற்கொண்டு முத்துக்குடை நிழற்ற, திருநீலகண்டப்பெரும்பாணரோடும் மற்றையடியார்களோடுஞ் சென்று, திருக்கண்ணார்கோயிலை வணங்கிக்கொண்டு, காவேரிக்கு வடபாலிலே மேற்றிசைநோக்கிப்போய், திருப்புள்ளிருக்குவேளூர், திருநின்றியூர், திருநீடூர், திருப்புன்கூர், திருமண்ணிப்படிக்கரை, திருக்குறுக்கை, திருவன்னியூர், திருப்பந்தணைநல்லூர், திருமணஞ்சேரி, திருவெதிர்கொள்பாடி, திருவேள்விக்குடி, திருக்கோடிகா, கஞ்சனூர், திருமங்கலக்குடி, திருவியலூர், திருந்துதேவன்குடி, திருவின்னம்பூர், வடகுரங்காடுதுறை, திருப்பழனம், திருவையாறு, திருப்பெரும்புலியூர், திருநெய்த்தானம், திருமழபாடி, திருக்காளூர், திருவன்பிலாலந்துறை, திருமாந்துறை என்னுந் தலங்களேறும் போய், சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடினார்.

பின் மழநாட்டிலே காவேரி வடகரையே சென்று, திருப்பாச்சிலாச்சிராமத்துக்குச் சமீபிக்குமுன்; அந்நகரத்திலே கொல்லிமழவன், தன்னுடைய புத்திரி முயலகனென்னும் நோயினால் வருந்துதலைக் கண்டு, கவலையுற்று வேறொரு பரிசனாலும் நீங்காமை கண்டு, தான் சைவபரம்பரையோனதலால் அவளைத் திருக்கோயிலினுள்ளே கொண்டுபோய், சுவாமி சந்நிதானத்திலே இட்டுவைத்தான். ஆளுடையபிள்ளையார் அந்நகரத்திற்குச் சமீபிக்கும்பொழுது, ''திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் எழுந்தருளிவந்தார்'' என்று ஊதுகின்ற திருச்சின்னத்தின் ஓசையைக்கேட்டு, கொல்லிமழவன் புத்திரியைவிட்டு, விரைந்து சென்று, அந்நகரத்தை மிக அலங்கரிப்பித்து, பிள்ளையாரை எதிர்கொண்டு, ஆனந்தபாஷ்பஞ்சொரிய, முத்துச்சிவிகைக்கு முன்னே அடியற்ற மரம்போல விழுந்தான். அது கண்டு, பிள்ளையார் ''எழுக'' என்று அருளிச்செய்ய; கொல்லிமழவன் எழுந்து மனமகிழ்ந்து, சிரசின்மேலே கைகுவித்துக்கொண்டு பிள்ளையாருடன்

சென்றான். பிள்ளையார் திருக்கோயிற்கோபுரத்துக்குச் சமீபித்தவுடனே, முத்துச்சிவிகையினின்றும் இறங்கி, உள்ளே பிரவேசித்து, வலஞ் செய்துகொண்டு, சந்நிதானத்திலே போனார். போனபொழுது, அறிவு கெட்டு நிலத்திலே கிடக்கின்ற கன்னியைக் கண்டு, "ஐஃதென்னே" என்று வினவ; மழவன் வணங்கி நின்று; "இவள் அடியேனுடைய புத்திரி. இவள் மூயலகனென்னும் நோயினால் மிகவருந்துகின்றமையால் இவளைச் சுவாமி சந்நிதானத்திலே கொணர்வித்தேன்" என்று விண்ணப்பஞ்செய்தான். திருஞானசம்பந்தப் பிள்ளையார் அதைக் கேட்டு, அருள் சுரந்து, அவ்விடத்தில் நின்றே சுவாமியை நமஸ்கரித்து, அவளுடைய நோயை நீக்கும் பொருட்டு, "துணிவளர் திங்கள்" என்றெடுத்து, "மணிவளர் கண்டரோ மங்கையைவாட மயல்செய்வ தோவிவர் மாண்பே" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். அப்பொழுது அந்தக்கன்னி நோய் நீங்கி, எழுந்து ஓல்கிவந்து, தந்தையின் பக்கத்தை அடைந்தாள். அதுகண்ட மழவன் மிகுந்த மகிழ்ச்சிகொண்டு, அவளோடும் பிள்ளையாரை விழுந்து நமஸ்கரித்தான். பிள்ளையார் அங்கே சுவாமிதரிசனஞ் செய்து கொண்டு, சிலநாள் எழுந்தருளியிருந்தார்.

அதன்பின் பிள்ளையார் திருப்பைஞ்ஞீலியையும் திருவீங்கோய்மலையையும் வணங்கிக்கொண்டு கொங்கதேசத்திலே காவேரிக்குத் தென்கரையிற் சென்று, திருக்கொடிமாடச்செங்குன்றூரை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்தார். இருக்குநாளிலே, திருநணாவிற்கும் போய்த் திருப்பதிகம்பாடி, திருக்கொடிமாடச் செங்குன்றூருக்குத் திரும்பிவிட்டார். அங்கே எழுந்தருளியிருக்கும்பொழுது, மழைக்காலம் நீங்கிப் பனிக்காலம் வர, குளிர்மிகுந்தது. அப்பொழுது பிள்ளையாருடைய பரிசனங்கள் நவிர்சுரத்தினூல் வருத்தமுற்றுப் பிள்ளையாரை வணங்கி, அவருக்கு விண்ணப்பஞ் செய்தார்கள். பிள்ளையார் "அவ்வினைக்கிவ்வினை" என்னும் திருநீலகண்டப்பதிகத்தைப் பாடியருளினார். உடனே அந்நகரவாசிகளுக்குமாத்திரமேயன்றி, அந்நாளிலே பனிப்பிணி அந்நாடுமுழுதுந் தீர்ந்தது. பிள்ளையார் சிலநாள் அங்கெழுந்

திருளியிருந்து, பின் அவ்விடத்தை நீங்கி, திருப்பாண்டிக் கொடுமுடி, திருவெஞ்சமாக்கூடல், திருக்கருவூர் என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு கொங்கநாட்டைக் கடந்து, சோழநாட்டை அடைந்தருளினார்.

சோழமண்டலத்திலே திருப்பராய்த்துறை, திருக்கற்குடிமலை, திருமூக்கீச்சரம், திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா, திருப்பாற்றுறை, திருவெறும்பியூர், திருநெடுங்களம், மேலைத் திருக்காட்டுப்பள்ளி, திருவாலம்பொழில், திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருவெண்ணி, திருச்சக்கரப்பள்ளி, திருப்புள்ளமங்கை, திருநல்லூர், திருக்கருகாவூர், திருவவளிவணல்லூர், திருப்பரிதியப்பம், திருப்பூவனூர், திருவாவூர் என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு, திருவலஞ்சுழியை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்தார். இருக்குநாளிலே, முதிர்வேனிற் காலம்வந்தது. அம்முதிர்வேனிற்காலத்திலே பிள்ளையார் திருவலஞ் சுழியினின்றும் நீங்கி, திருப்பழையாறைக்குப் போதற்கு அடியார்கள் உடன் செல்லச் சென்றருளி, திருவாறைமேற்றளியை அடைந்து வணங்கி, திருச்சத்திமுற்றத்திற் சென்று, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு திருப்பட்டீச்சரத்துக்குப் போகப் புறப்பட்டார். அப்பொழுது, வெய்யில் வெப்பத்தைத் தணிக்கும்பொருட்டு, பிள்ளையாருடைய திருமுடியின்மேலே, சிவபூதம் முத்துப்பந்தரை எடுத்து, "பட்டீசர் எம்மை விடுத்தருளினார்" என்று சொல்லிற்று. அந்தச்சொல்லும் முத்துப்பந்தரும் ஆகாயத்திலே தோன்ற; பிள்ளையார் திருவருளைத் துதித்து, பூமியிலே, விழுந்து நமஸ்கரித்தார். பிள்ளையாருடைய பரிசனங்கள் அந்த முத்துப்பந்தரைக் காம்பிலே பிடித்தார்கள். பிள்ளையார் அந்த முத்துப்பந்தர் நிழற்றச் சென்று, திருப்பட்டீச்சரத்தை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்தார். பின் அவ்விடத்தினின்றும் நீங்கி, திருவாற்றவடதளி, திருவிரும்பூளை, திருவரதைப்பெரும்பாழி, திருச்சேறை, திருநாலூர்மயானம், திருக்குடவாயில், திருநறையூர், அரிசிற்கரைப்புத்தூர், திருச்சிவபுரம், திருக்குடமூக்கு, திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம், திருக்குடந்

தைக்காரோணம், திருநாகேச்சரம், திருவிடைமருதூர், திருக்குரங்காடுதுறை என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு, திருவாவடுதுறையை அடைந்தார்.

திருவாவடுதுறையிலே சுவாமிதரிசனஞ்செய்துகொண் டிருக்குநாளிலே, சிவபாதவிருதயர் பிள்ளையாரைநோக்கி, "நான் யாகஞ்செய்தற்கு ஆகுங்காலஞ் சமீபித்தது. அது செய்யும்படி போதற்குப் பொருள் தரல்வேண்டும்" என்றார். பிள்ளையார் அதைக்கேட்டு, திருக்கோயிலிற் சென்று, வண ங்கி, "இடரினுந்தளரினும்" என்னுந் திருப்பதிகம் பாடினர். அப்பொழுது பரமசிவனுடைய திருவருளினாலே, ஒரு பூதம் விரைந்து வந்து, பீடத்தின்மேலே ஆயிரம் பொன் பொருந் திய கிழியொன்றுவைத்து, முன்னே நின்று, "இந்தக்கிழி பொன்னுலவாக்கிழி. இது பரமசிவனால் உமக்கு அருளிச் செய்யப்பட்டது" என்று சொல்ல; பிள்ளையார் திருவருளை நினைந்து, நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு, பீடத்தின்மேலே வைக்கப்பட்ட பொற்கிழியைச் சிரமேற்கொண்டு, தந்தையார் கையிற் கொடுத்து, பரமசிவனையே தலைவராக நினைந்து வேத விதிப்படி செய்யப்படும் யாகத்தை நீருஞ் சீர்காழியிலே இருக்கின்ற மற்றப் பிராமணர்கள் சமஸ்தரும் செய்ய, இக் கிழி குறையாது மிகும்" என்று சொல்லி, சீர்காழிக்குப் போம்படி அவருக்கு விடைகொடுத்து அனுப்பி, தாந் திரு வாவடுதுறையில் எழுந்தருளியிருந்தார்.

சிலநாட்சென்றபின் அவ்விடத்தை அகன்று, திருக் கோழம்பம், திருவைகன்மாடக்கோயில், திருநல்லம், திருவ ழுந்தூர், திருத்துருத்தி, மாயூரம், திருச்செம்பொன்பள்ளி, திருவிளநகர், திருப்பறியலூர், திருவேட்டக்குடி என்னுந் தலங்களைத் தரிசித்துக்கொண்டு, தருமபுரத்தை அடைந்தார். அந்தத் தருமபுரம் திருநீலகண்டப்பெரும்பாணருடைய தாயார் பிறந்த தலமாதலால், அங்குள்ள அவருடைய சுற் றத்தார்கள் வந்து எதிர்கொண்டு வணங்கித் துதித்தார்கள். அதுகண்டு, திருநீலகண்டப்பெரும்பாணர் பிள்ளையார் அரு ளிச்செய்த அருமையாகிய திருப்பதிகங்களின் இசையைத்

தாம் யாழில் இட்டு வாசிக்கப்பெற்ற பெரும்பேற்றை அவர்களுக்கு அருளிச்செய்தார். அவர்கள் அதைக் கேட்டு, "நீர் திருப்பதிகவிசையை அளவுபெற யாழிலே அமைத்து வாசித்தலினாலே உலகமுழுதிலும் இசை விளங்குக" என்றார்கள். உடனே பெரும்பாணர் மனமடங்கி, பிள்ளையாருடைய திருவடிகளை வணங்கி நின்று, "சுவாமீ, திருப்பதிகவிசை அளவுபடாத தன்மையை இவர்களேயன்றி உலகத்திலுள்ள மற்றை யாவரும் அறிந்து உண்மையை உணர்ந்து உய்யும்பொருட்டுத் தேவரீர் ஒரு திருப்பதிகம் பாடியருளுவீராகில், அடியேன் அதனிசை யாழிலே அடங்காமையைக் காட்டப்பெறுவேன்" என்றார். அப்பொழுது பிள்ளையார் பரமசிவனை வணங்கிக்கொண்டு, திருப்பதிகத்தின் உண்மை பூமியிலுள்ளோருடைய கண்டத்திலும் யாழிலும் இசைநூலிற் கூறப்பட்ட இசைமுயற்சிகளினால் அடங்காமையைக் காட்டும்பொருட்டு, "மாதர்மடப்பிடி" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். திருநீலகண்டப் பெரும்பாணர் அத்திருப்பதிகவிசையைத் தம்முடைய யாழ்நரம்பிலே முன்போல இட்டு வாசிக்கப் புக; அது அதனிடத்தே அடங்கிற்றில்லை. அப்பொழுது திருநீலகண்டப்பெரும்பாணர் அதனைவிட்டு அச்சங்கொண்டு பிள்ளையாருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து, "சுவாமி அருளிச்செய்த திருப்பதிகத்தினிசையை யாழிலே ஏற்பேன் என்று சொல்லப்பண்ணியது இந்த யாழன்றே" என்று அதனை உடைக்கும்படி ஓங்கினார். உடனே பிள்ளையார் தடுத்தருளி, "ஐயரே, நீர் இந்த யாழைத்தாரும்" என்று வாங்கிக்கொண்டு, "ஐயரே, நீர் இந்த யாழை முரிப்பது என்னை! பரமசிவனும் பார்வதியம்மையாரும் அருளிச்செய்த திருவருளின் பெருமையெல்லாம் இந்தக்கருவியில் அளவுபடுமா! மனசினாலும் அளவுபடாத் இசைப்பெருமை செய்கையினால் அளவுபடுமோ! அளவுபடாதே. நீர் இந்த யாழைக்கொண்டே சுவாமியுடைய திருப்பதிகவிசையை இயன்றமட்டும் இதில் அமைத்து வாசியும்" என்று சொல்லி, திருநீலகண்டப்பெரும்பாணர்கையிலே யாழைக் கொடுத்தருளினார். பெரும்பாணர் பிள்ளையாரைத் தொழுது, யாழை வாங்கி, சிரமேற்கொண்டார்.

சிலநாட்சென்றபின், பிள்ளையார் தருமபுரத்தை அகன்று, திருநள்ளாற்றை அடைந்து, திருக்கோயிலிற் பிரவேசித்து, சுவாமியை வணங்கி, "போகமார்த்த பூண்முலையாள்" என்னுந் திருப்பதிகத்தை யாழ்நரம்பிலே இசை கூடும்படி பாடி முடித்து, புறத்தணைந்து, பெரும்பாணரை நோக்கி, யாழில் இட்டு வாசிக்கும்படி பணித்து; தாந் திருத்தாளங் கொண்டு பாடினர். பெரும்பாணர் அத்திருப்பதிகவிசையை யாழில் இட்டு வாசித்தார். அது கேட்டுப் பிள்ளையார் திருவுளமகிழ்ந்தருளினர். பின் பிள்ளையார் திருநள்ளாற்றினின்றும் நீங்கி, திருச்சாத்தமங்கைக்குச் சமீபித்து, அத்திருப்பதியினின்று வந்து தம்மை எதிர்கொண்டு வணங்கிய திருநீலநக்கநாயனரோடு சென்று, அயவந்தியென்னும் ஆலயத்திற்சென்று, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, திருநீலநக்கநாயனருடைய திருமாளிகைக்குப் போய்த் திருவமுது செய்து, அன்றிரவு அங்கே பள்ளிகொண்டார். மற்றநாள் பிராதக்காலத்தில் திருநீலநக்கநாயனரோடும் அயவந்தியிற் சென்று, சுவாமிதரிசனஞ்செய்து, திருநீலநக்கநாயனரைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடினர்.

சிலநாளாயினபின், திருநீலநக்கநாயனருக்கு விடைகொடுத்துத் திருச்சாத்தமங்கையை நீங்கி, திருநாகைக்காரோணம், கீழ்வேளூர் என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு, பிறதலங்களையும் வணங்கும்படி எழுந்தருளினர். அப்பொழுது திருச்செங்காட்டங்குடியில் இருக்கின்ற சிறுத்தொண்டநாயனர் அதனைக் கேள்வியுற்று ஓடிச் சென்று, பிள்ளையாரை எதிர்கொண்டு, தம்முடைய திருப்பதியில் அழைத்துக் கொண்டுபோனர். பிள்ளையார் அப்பதியிலிருக்கின்ற கணபதீச்சரமென்னுந் திருக்கோயிலை வணங்கி, சிறுத்தொண்டநாயனரைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடி, அந்நாயனருடைய வீட்டிலே போய்த் திருவமுது செய்துகொண்டு அங்கெழுந்தருளியிருந்தார். சிலநாளாயினபின், திருமருகலுக்குப் போய், சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு அங்கிருந்தார். அந்நாளிலே, ஒரு வணிகன் வழிச்செல்வோனுகி ஒரு கன்னியையும் உடன்கொண்டு கோயிலுக்குப் புறத்திலே

ஒருமடத்தில் இராத்திரியில் நித்திரை செய்யும்போது, பாம் பினாலே தீண்டப்பட்டு மாண்டான். அதுகண்டு, அக்கன்னி யானவள் தளர்ந்து, அவனைப் பாம்பு தீண்டியும் தான்தீண் டாமல், சமீபத்திலே வீழ்ந்து புரண்டு அழுதாள். அப்பொ ழுது விஷவைத்தியர் வந்து தீர்க்கவுந் தீராதாயிற்று. விடி யற்காலத்திலே அக்கன்னிகை மிக அயர்ந்து புலம்பி, திருக் கோயிலின் வாயிற்றிக்கை நோக்கிக் கைதொழுது, "தேவர் கள் உய்யும்பொருட்டு நஞ்சை அமுதாக்கிய கடவுளே, வெந்து பொடியாகிய மன்மதனுடைய உயிரை அவன் மனைவி யாகிய இரதி வேண்ட அருளிச்செய்த கருணைநிதியே, மார்க் கண்டேயர்பொருட்டு இயமனை உதைத்த திருவடித்தாமரை களையுடையவரே; திருமருகலில் வீற்றிருக்கும் பரமசிவனே, தேவரீர் இந்தக்கொடிய விஷம் நீங்கும்பொருட்டும் அடி யேன் துக்கசாகரத்தினின்று கரையேறும்பொருட்டும் அருள் செய்யும்" என்று பிரார்த்தித்தாள். அவ்வோசையைச் சுவாமிதரிசனஞ் செய்யும்படி எழுந்தருளிவருகின்ற திரு ஞானசம்பந்தமூர்த்திநாயனார் கேட்டு, திருவுளம் இரங்கி, அவளுக்கு அருள்செய்யும்பொருட்டு அடியார்களோடு எழுந் தருளிவந்து நின்று, அவளை நோக்கி, "பயப்படாதே. நிகழ் ந்த சமாசாரத்தைச் சொல்" என்று அருளிச்செய்தார். கன் னிகை கண்ணீர் சொரிய, பிள்ளையாருடைய திருவடியிலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று, வைப்பூரில் இருக் கின்ற தாமனென்னும் பெயரையுடைய என் பிதாவுக்குப் புத்திரிகள் எழுவர். அவர்களில் என்னை ஒழிய மூத்தோர் அறுவரையும் தன் மருமகனுகிய இவனுக்கே விவாகஞ் செய்து கொடுப்பேன் என்று சொல்லிச்சொல்லி, பிறரிடத் திலே திரவியம் வாங்கிக்கொண்டு, அவர்களுக்கு விவாகஞ் செய்து கொடுத்துவிட்டான். அது கண்டு மனவருத்தமுற்ற இவனுக்கே நான் மனைவியாதல்வேண்டும் என நினைந்து, என் பிதாமாதாக்களை மறைத்து இவனையே சார்ந்து வந் தேன். இவனும் பாம்பினாலே தீண்டப்பட்டு இறந்தான். அடியேன் கடனடுவே கலங்கவிழப்பெற்றார்போல நிற்கின் றேன். தேவரீர் எழுந்தருளிவந்து, அடியேனுடைய துன்ப மெல்லாம் நீங்க அருள்செய்தீர்" என்றாள். பிள்ளையார்

விஷம் நீங்கும்பொருட்டுத் திருமருகற்கடவுள்மேல் "சடை யாயெனுமால்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினர். உடனே வணிகன் விடந்தீர்ந்து எழுந்து பிள்ளையாரை நமஸ் கரித்தான். அது கண்ட திருத்தொண்டர்களெல்லாரும் ஆர வாரித்தார்கள். கன்னிகை மனமகிழ்ந்து, பிள்ளையாருடைய திருவடியிலே விழுந்து வணங்கினள். பிள்ளையார் அக்கன்னி கையையும் வணிகனையும் மணம் புணருமபடி செய்து அவர் களுக்கு விடைகொடுத்து, அங்கே எழுந்தருளியிருந்தார். இருக்குநாளிலே, சிறுத்தொண்டநாயனர் வந்து பிரார்த்திக்க; பிள்ளையார் மீண்டும் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருள விரும்பி, அடியாரோடும் அத்திருமருகற் கோயிலிற்சென்று வணங்க; பரமசிவன் தாந் திருச்செங்காட்டங்குடியிலிருக் கின்ற திருக்கோலத்தை அவருக்கு அங்கே காட்டியருளி னர். பிள்ளையார் அதுகண்டு மனமகிழ்ந்து, 'அங்கமும் வேத முமோது நாவர்" என்னுந் திருப்பதிகம் பாடி, அத்தத் திருப் பதியிலேதானே எழுந்தருளியிருந்தார்.

சிலநாட்சென்றபின் அத்திருப்பதியை நீங்கி, தம்மைத் தொடர்ந்த சிறுத்தொண்டநாயனருக்கு விடைகொடுத்து, சிவஸ்தலங்கள் பலவற்றை வணங்கிக்கொண்டு, திருப்புகலூ ருக்குச் சமீபித்து, அப்பதியினின்று வந்து தம்மை எதிர் கொண்டு வணங்கிய முருகநாயனர் முதலிய அடியார்களோடு சென்று, திருக்கோயிலை அடைந்து, சுவாமிதரிசனஞ்செய்து, முருகநாயனருடைய திருமடத்திற்குப் போய், அவர் உப சரிக்க அங்கே எழுந்தருளியிருந்தார். இருக்கு நாளிலே, வர்த்தமானீச்சரத்தை வணங்கி, முருக நாயனருடைய திருத்தொண்டைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடினர். அங்கே எழுந்தருளியிருக்குங் காலத்திலே, திருநாவுக்கரசு நாயனர் திருவாரூரை வணங்கிக்கொண்டு திருப்புகலூரை வணங்குதற்கு அடியார்களோடும் எழுந்தருளும் திருவார்த் தையைக் கேட்டு, பேராசையோடு அவரை எதிர்கொள்ளும் பொருட்டு, திருக்கூட்டத்தோடும் திருப்புகலூரின் எல்லை யைக் கடந்து சென்றார். திருநாவுக்கரசுநாயனரும் பிள்ளை யாருக்கு எதிரே வந்தார். இருவரும் ஒருவரை ஒருவர்

வணங்கி, நல்வரவு வினவி மகிழ்ந்தார்கள். அப்போது பிள்ளையார் அப்பமூர்த்தியை நோக்கி, "அப்பரே, நீர் வரு நாளிலே திருவாரூரிலே நிகழ்ந்த சிறப்பைச் சொல்லும்" என்று சொல்ல; அப்பமூர்த்தி திருவாதிரைச் சிறப்பைத் திருப்பதிகத்தினாலே சொல்லியருளினார். பிள்ளையார் அது கேட்டு, "நான் திருவாரூருக்குப் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு மீண்டு இவ்விடத்திற்கு வந்து உம்முடன் இருப்பேன்" என்று சொல்லியருளினார். அப்பமூர்த்தி திருப்புகலூருக்குப் போக, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சென்று, திருவிற்குடி வீரட்டத்தை வணங்கிக்கொண்டு, திருவாரூரை அடைந்து, வன்மீகநாதரை வணங்கித் திருப்பதிகம் பாடி, அப்பதியில் எழுந்தருளியிருந்தார். அங்குள்ள அரநெறியென்னும் ஆலயத்தையும் காலந்தோறும் பணிந்தார். அங்கெழுந்தருளியிருக்கு நாளிலே, திருவலிவலம், திருக்கோளிலி முதலிய ஸ்தலங்களுக்கும் போய், சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு, மீண்டும் அத்திருவாரூரில் வந்து இருந்தார். சிலநாளாயினபின், திருநாவுக்கரசுநாயனாரைக் காணுதற்கு விரும்பி, திருவாரூரை நீங்கி, திருப்பணையூரிற் சென்று, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, திருப்புகலூருக்குச் சமீபித்து, அப்பதியினின்று வந்து தம்மை எதிர்கொண்ட அப்பமூர்த்தி முருகநாயனார் முதலாகிய திருத்தொண்டர்களோடும் போய், சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, முருகநாயனாருடைய திருமடத்தை அடைந்து, அங்கே இருந்தருளினார். இருக்குநாளிலே, திருநீலநக்கநாயனாரும் சிறுத்தொண்டநாயனாரும் அவ்விடத்திற்கு வந்து அவர்களோடு இருந்தார்கள்.

சிலதினஞ்சென்றபின், பிள்ளையாரும், அப்பமூர்த்தியும் பிறதலங்களை வணங்க விரும்பிப் புறப்பட்டு, முருகநாயனாரை அங்கே இருக்கவும், திருநீலநக்கநாயனாரையும் சிறுத்தொண்டநாயனாரையும் தங்கள் தங்கள் ஊருக்குச்செல்லவும் விடுத்தார்கள். பிள்ளையார் அப்பமூர்த்தியை விட்டுப் பிரியாமல், முத்துச்சிவிகை பின் வர, வழிக்கொள்ளும்பொழுது, அப்பமூர்த்தி பிள்ளையாரை நோக்கி; "சிவபெருமான் தேவாரருக்கு

அருளிச்செய்த இம்முத்துச்சிவிகையின்மேலே எழுந்தரு ளும்'' என்று சொல்ல, பிள்ளையார் ''நீர் அடியார்களோடும் எங்களுக்கு முன் போவீரோ அங்கே நான் பின் வருவேன்'' என் றார். அப்பமூர்த்தி ''தேவரீர் அருளிச்செய்தபடியே செய் வேன்'' என்று சொல்லிக்கொண்டு, அன்றுமுதல் அவருடன் செல்லுநாள் எல்லாம் அப்படியே செய்வாராகி, நடந்து முன்னே அடியாரோடும் திருவம்பருக்குச் சென்றார். பிள்ளை யார் பரமசிவனுடைய திருவருள்வழியே நிற்பாராகி, முத் துச்சிவிகையில் ஏறி, திருப்புகலூரைக் கடந்து சென்று, ''அப்பமூர்த்தி எங்கே சென்றார்'' என்று வினவிப் போய், திருவம்பரை அடைந்து, மாகாளத்தில் இருக்கின்ற சுவா மியை வணங்கித் திருப்பதிகம் பாடி, அப்பமூர்த்தியோடும் அத்தத் திருப்பதியில் எழுந்தருளியிருந்தார். அங்கே கோச் செங்கட்சோழநாயனர் செய்த பெருந்திருக்கோயிலை அடை ந்து, சுவாமிதரிசனஞ்செய்து, அந்நாயனரைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடினார். சிலநாட்சென்றபின், திருவம்பரை நீங்கி, அப்பமூர்த்தியோடு திருக்கடவூருக்குச் சமீபித்து, அங்குநின்று வந்து எதிர்கொண்டு வணங்கிய குங்குலியக் கலயநாயனர் முதலாகிய அடியார்களோடு, திருவீரட்டானத் திற் சென்று சுவாமிதரிசனஞ்செய்து, திருப்பதிகம்பாடி, அக்குங்குலியக்கலயநாயனர் வீட்டில் திருவமுது செய்து, திருக்கடவூர் மயானத்தையும் வணங்கிக்கொண்டிருந்தார்.

சிலநாளாயினபின் திருக்கடவூரை நீங்கி, திருவாக்கூர், திருமீயச்சூர், திருப்பாம்புரம் என்னுந் தலங்களை வணங்கிக் கொண்டு, திருவீழிமிழலையை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடி, புறத்தணைந்து, அப்பமூர்த்தி ஒரு திருமடத்தை அடைய, தாம் வேறொரு திருமடத்திலே போயிருந்தார். அவ்விருவரும் பேணுபெருந்துறை, தில தைப்பதி என்னுந் தலங்களுக்கும் போய்த் தரிசனஞ் செய்துகொண்டு, மீண்டு திருவீழிமிழலையில் வந்திருந்தார் கள். இருக்குநாளிலே, சீர்காழியிற் பிராமணர்கள், திருஞான சம்பந்தமூர்த்திநாயனரைக் காணல்வேண்டும் என்னும் ஆசை செலுத்த, திருவீழிமிழலையை அடைந்து, தங்களை எதிர்

கொண்ட அவ்வூர்ப் பிராமணர்களோடு திருக்கோயிலிலே போய்ச் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, அந்நாயனார் எழுந்தருளியிருக்குந் திருமடத்திற் சென்று அவரை நமஸ்கரித்து, "சுவாமீ, தேவரீர் அடியேங்களோடு சீர்காழிக்கு எழுந்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். பிள்ளையார் அதுகேட்டு, "மிகநன்று. இன்று கழித்துத் திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் கடவுளுடைய அருளைப் பெற்றுக்கொண்டு, திருத்தோணியப்பரை வணங்குதற்கு உங்களோடு வருவேன்" என்றார். சீர்காழிப் பிராமணர்களுக்குத் திருவீழிமிழலைப் பிராமணர்கள் விருந்து செய்தார்கள். தோணியப்பர் அன்றிரவு பிள்ளையாருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "நாம் திருத்தோணியில் வீற்றிருக்குங் கோலத்தை இத்திருவீழிமிழலையிலே உள்ள விண்ணிழிந்த விமானத்திலே காட்டுவோம்; காண்" என்று சொல்லி, மறைந்தருளினர் பிள்ளையார் விழித்து எழுந்து, திருக்கோயிலிற்சென்று, அங்கே சுவாமியைத் தாம் முன்னே திருத்தோணியிற் கண்டபடியே கண்டு, திருவுளமகிழ்ந்து, "மைம்மருபூங்குழல்" என்னும் விளவுரைப்பதிகம் பாடிப்போந்து, சீர்காழிப் பிராமணர்களை நோக்கி, "திருத்தோணியப்பர் தாம் வீற்றிருக்கும் ஸ்தலங்களெங்குஞ் சென்று தரிசித்துத் திருப்பதிகம் பாடி வருதலின் மேற்கொண்ட என் விருப்பத்தைக் கண்டு, தாம் அங்கே அமர்ந்த திருக்கோலத்தை இங்கே எனக்குக் காட்டியருளினர், நீங்கள் சீர்காழிக்குப்போங்கள்" என்றார். அதைக்கேட்ட பிராமணர்கள் சீர்காழிக்குப் போய்விட்டார்கள்.

பிள்ளையார் அப்பமூர்த்தியோடும் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு திருவீழிமிழலையில் இருக்குநாளிலே, மழையின்மையாலும் காவேரிப்பெருக்கு இன்மையாலும் பஞ்சம் உண்டாக; அதனால் உயிர்களெல்லாம் வருத்தமுற்றன. சிவனடியார்களையும் பசிநோய் வருத்திற்று. அதுகண்டு, பாலராயராகிய பிள்ளையாரும் அப்பமூர்த்தியும் "சிவபெருமானது விபூதியைத் தரித்த அடியார்களுக்கும் கவலைவருமோ" எனத் திருவுளமிரங்கி, பரமசிவனுடைய திருவடிகளைச் சிந்தித்துக்

கொண்டு, அன்றிரவு துயின்றார்கள். துயிலும்போது, பரமசிவன் அவ்விருவருக்கும் சொப்பனத்திலே தோன்றி, "காலபேதத்திலேலே நீங்கள் மனவாட்டம் அடையீர்களாயினும், உங்களை வழிபடுகின்ற அடியார்களுடைய வருத்தத்தை நீக்கும்பொருட்டு, இப்பஞ்சம் நீங்கும்வரைக்கும் நாம் தினந்தோறும் திருக்கோயிலின் கிழக்குப்பீடத்திலும் மேற்குப்பீடத்திலும் ஒவ்வொரு காசு உங்களுக்குத் தருகின்றோம்" என்று சொல்லி, மறைந்தருளினார். பிள்ளையார் விழித்தெழுந்து; திருவருளைத் துதித்து, அப்பமூர்த்தியோடு திருக்கோயிலிற் புகுந்தபோது, கிழக்குப் பீடத்திலே காசு இருத்தலைக் கண்டு, விருப்பத்தோடுந் தொழுது, அதனை எடுத்து, "நாடோறும் சிவனடியார்களெல்லாரும் வந்து அமுது செய்யக்கடவர்கள்" என்று இரண்டு காலங்களிலும் பறைசாற்றித் தெரிவித்து, தம்முடைய திருமடத்தில் வரும் அடியார்களுக்குக் கறி நெய் பால் தயிரோடு அன்னம் இட்டுக்கொண்டு இருந்தார். அப்பமூர்த்தியும் மேற்குப்பீடத்தில் வைக்கப்படுங் காசை எடுத்து, அப்படியே அடியார்களைத் திருவமுது செய்வித்தார். இப்படி நிகழுநாளிலே, பிள்ளையார், அப்பமூர்த்தியுடைய திருமடத்திலே அடியார்கள் காலம்பெறத் திருவமுதுசெய்தலைக் கண்டு, தம்முடைய திருமடத்திற் பாகுகர்களை நோக்கி, "நீங்கள் காலம்பெற அமுது பாகம்பண்ணி இங்கேவரும் அடியார்களுக்குக் கொடாமைக்குக் காரணம்யாது" என்று விஞ்சியருளினார். பாகுகர்கள் பாலமுவாயரை வணங்கி நின்று, "சுவாமீ, தேவரீர் கடவுளிடத்திற் பெறும் படிக்காசைத் தினந்தோறும் பண்டம் வாங்குதற்குக்கொண்டு போனால் அதற்கு வாசிகேட்கிறார்கள். அப்பமூர்த்திபெற்ற காசையோ வாசியின்றி ஏற்றுக்கொள்கின்றார்கள். இதனாலே காலந்தாழ்க்கின்றது" என்றார்கள். பிள்ளையார் அதைக் கேட்டு, அப்பமூர்த்திகைத்தொண்டு செய்தலால் அவர் பெறுங்காசு வட்டமின்றி ஏற்கப்படுகின்றது என்று சிந்தித்து, "இனி வரும் நாட்களிலே தருங்காசு வாசி தீரும்பொருட்டுப் பாடுவேன்" எனத் திருவுளங்கொண்டார். மற்றநாள் திருக்கோயிலிலே புகுந்து சிவபிரானை வணங்கி, "வாசி தீரவே —காசு நல்கிடீர்—மாசின் மிமலியீ—சேசலீலையே

என்னுந் திருப்பதிகம் பாடி, நற்காசு பெற்றார். அந்தக்காசைப் பாகுகர்கள் கொண்டு போய்க் கடையிலே காட்ட, அங்குள்ளோர் "இக்காசு மிக நன்று, வேண்டுவனவற்றை நாந் தருவோம்" என்று கொடுத்தார்கள். அன்று தொடங்கிப் பாகுகர்கள் அடியவர்களைக் காலம்பெறத் திருவமுது செய்வித்தார்கள். இருவருடைய திருமட்டங்களிலும் நாடோறும் எண்ணிறந்த சிவனடியார்கள் வந்து திருவமுதுசெய்து மகிழ்ந்திருக்குங்காலத்திலே; எங்கும் மழைபெய்து தானியமுதலியவைகள் மிக விளைந்தமையால், உயிர்களெல்லாம் துன்பநீங்கி இன்பமுற்றன.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனரும் திருநாவுக்கரசுநாயனரும், சிலநாட்சென்றபின், திருவீழிமிழலையை அகன்று, திருவாஞ்சியம், திருத்தலையாலங்காடு, திருப்பெருவேளூர், திருக்கரவீரம், திருவிளமர், திருவாரூர், திருக்காறாயில், திருத்தேவூர், திருநெல்லிக்கா, திருக்கைச்சினம், திருத்தெங்கூர், திருக்கொள்ளிக்காடு, திருக்கோட்டூர், திருவெண்டுறை, திருத்தண்டலைநீணெறி, திருக்களர் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு, வேதாரணியத்தை அடைந்து, திருக்கோயிலிற் பிரவேசித்து வலஞ்செய்து, வேதங்கள் அருச்சித்துத் திருக்காப்புச்செய்த அந்நாண்முதல் இந்நாள்வரைக்கும் அடைக்கப்பட்டேயிருக்கின்ற திருவாயிலுக்கு முன் வந்து, வேதங்களாலே திருக்காப்புச் செய்யப்பட்ட அத்திருக்கதவை அவ்வேதங்களை ஓதும் அடியார்கள் நீக்கப்பெறுமையினால் வேறோர் பக்கத்தில் ஒருவாயிலிட்டு அதன்வழியே செல்கின்றார்கள் என்பதைக் கேட்டறிந்தார்கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அப்பமூர்த்தியை நோக்கி, "அப்பரே, நாம் எப்படியும் சுவாமியை அபிமுகத்திருவாயில் வழியே சென்று தரிசிக்கவேண்டும். ஆதலால் இந்தத் திருக்கதவு திறக்கப்படும் பொருட்டு நீரே திருப்பதிகம் பாடும்" என்றார். அப்பமூர்த்தி திருப்பதிகத்தைத் திருக்கதவு திறக்கப்படும்பொருட்டுப் பாட, அது திறக்கப்படாமல் தாழ்த்தது. அது கண்டு "இரக்கமொன்றிலீர்" என்று திருக்கடைக்காப்பிலே பாடி வணங்கினார். உடனே வேதாரணியேசுரருடைய திருவருளி

ஞலே திருக்கதவு திறக்கப்பட்டது. அப்பொழுது நாயன்மா ரிருவரும் விழுந்து நமஸ்கரித்தார்கள். அடியார்களெல்லா ரும் ஆனந்தகோஷஞ் செய்தார்கள். நாயன்மாரிருவரும் பேரின்பவெள்ளத்திலே அமிழ்ந்தி எழுந்து, உள்ளே புகுந்து, சுவாமிதரிசனஞ்செய்து, திருப்பதிகங்கள் பாடி, அரிதில் வெளியே வந்தார்கள். அப்பொழுது அப்பமூர்த்தி திரு ஞானசம்பந்தமூர்த்திநாயனரை நோக்கி, "எம்பெருமானு டைய திருவருளினலே இந்தத் திருக்கதவு திறக்கப்பட்டும் அடைக்கப்பட்டும் என்றும் வழங்கும்பொருட்டுத் தேவரீர் இது அடைக்கப்படும்படி திருப்பதிகம் பாடியருளும்" என் ருர். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் திருப்பதிகத்திலே, "சதுரம்மறை" என்னும் முதற்றிருப்பாட்டுப் பாடியமாத்தி ரத்தில் திருக்கதவு அடைக்கப்பட்டது. அதுகண்டு நாயன் மாரிருவரும் திருவருளே வியந்து களிப்புற்று வணங்கினர் கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் தாம் எடுத்த திருப் பதிகத்தை முடித்தருளினர். அன்று தொடுத்து அந்தத் திருக்கதவு திறத்தலும் அடைத்தலுமாகிய வழக்கம் என் றும் நிகழ்ந்தது. அங்கே நிகழ்ந்த அற்புதத்தைக் கண்ட அடியார்கள் சமஸ்தரும் ஆச்சரியங்கொண்டு, உரோமாஞ்சங் கொள்ள, கண்ணீர் சொரிய, நாயன்மாரிருவருடைய திருவடி களிலும் விழுந்து நமஸ்கரித்தார்கள்.

நாயன்மாரிருவரும் திருமடத்தை அடைந்தபின், திரு நாவுக்கரசுநாயனர், "சிவபெருமான் ஆதியிலே அருளிச் செய்த முதனூலாகிய வேதங்களின் தாற்பரியங்களே அமைத் துத் தமிழ்வேதஞ்செய்தருளும் சிவாநுபூதிப் பெருவாழ் வாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் தாமே அக்கடவு ளைப்போல அருட்செய்கை செய்யவல்லவர். அவரொழிந்த என்போலும் அடியார்களுக்கு அவ்வேதங்களோடு இடை யீடு பெரிதாகும். அவ்வேதங்களாலே திருக்காப்புச்செய்யப் பட்ட திருக்கதவு என் பாடலினல் அரிதிற்றிறக்கப்பட்ட தும், அவர் பாடலினல் எளிதில் அடைக்கப்பட்டதும், இத னலன்றே" ஏன்று சிந்தித்து, அருளித்திரை செய்தார். அப்பொழுது பரமசிவன் அவரிடத்திற் சென்று, "நாய்

வாய்மூரிலே இருப்போம் அவ்விடத்திற்குத் தொடர்ந்து வா'' என்று அருளிச்செய்து போக, அப்பமூர்த்தி அவருக்குப்பின் விரைந்து சென்றார். நெடும்போது சென்றும், அவரைச் சமீபிக்கப்பெற்றிலர். சுவாமி சமீபத்திலே காட்சிகொடுப்பவர்போல ஒரு திருக்கோயிலை எதிரே காண்பித்து, அதனுள்ளே புகுந்தருள; அப்பமூர்த்தியும் அவ்விடத்திலே விரைந்து தொடர்ந்தார். பிள்ளையாரும் அப்பமூர்த்தி திருவாய்மூருக்குப் போகின்றார் என்று கேள்வியுற்று, வந்து சேர்ந்தார். அப்போது பரமசிவன் பார்வதியாரோடு ஆடல் காட்ட; பிள்ளையார் தரிசித்துத் திருப்பதிகம் பாடினர். பின் அப்பமூர்த்தியோடு திருவாய்மூருக்குப் போய், சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்து, சிலநாளாயினபின், வேதாரணியத்துக்குத் திரும்பி வந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்தார். அது நிற்க.

பாண்டிநாட்டிலே, பாண்டியராஜன் தான் பூர்வஜென்மத்திலே செய்த தீவினையினால், உலகமெல்லாம் இப்படியே நித்தியமாய் இருக்கும் அருகேசுரன் குருத்துவமாத்திரத்திலே கருத்தாவாய் இருப்பன் எனப் பிதற்றுகின்ற கபடிகளாகிய சமணர்களுடைய தூற்போதனையை மெய்யென்று துணிந்து, சத்தியமார்க்கமாகிய சைவத்தை விட்டு, அவர்களுடைய அசத்திய மார்க்கமாகிய ஆருகதமதத்திலே பிரவேசித்தான். அரசன் அவ்வாறுயினமையால், ''மன்னனேப்படி மன்னுயிரப்படி'' என்னும் பழமொழிப்படி குடிகளும் அவ்வாறுயின. மயிர் பறிக்கப்பட்ட தலையையும், ஊத்தை வாயையும், உறிபொதிகலனும் மயிற்பீலியும் பொருந்திய கையையும், பாயுடையையும், மனம்போல மாசுண்ட சரீரத்தையும், நின்றுண்டலையும், வெற்றரையையும் உடைய சமணப்பதிதர்களே எங்கும் பரந்தார்கள். இங்ஙனம் பாண்டிநாடெங்கும் வைதிகமார்க்கமும் சைவமார்க்கமுமாகிய இரண்டுங்குன்றி, சமணசமயமே விருத்தியாகியும்; அப்பாண்டியனுடைய மனைவியாரும் சோழமகாராஜாவுடைய புதல்வியாருமாகிய மங்கையர்க்கரசியார் அவ்வரசனுடைய முதன்மந்திரியாராகிய குலச்சிறைநாயனார் என்கின்ற இருவரும், தாங்

களும் அப்பாண்டியனும் பாண்டிநாட்டாரும் மற்றயாவருஞ் செய்த புண்ணியத்தினாலே சைவர்களாயே இருந்தார்கள். அவர்கள் அப்பாண்டிநாட்டுள்ளோர் பொருட்டுக் கவலிகொண்டு, தாங்கள் சைவவொழுக்கத்தில் நிற்குந்தன்மை அரசனுக்கு விளங்காவண்ணம் ஒழுகினார்கள். இங்ஙனம் ஒழுகுநாளிலே, உலகமெல்லாம் உய்யும்படி திருவவதாரஞ் செய்தருளிய உயர்வொப்பில்லாத சைவசமயாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனருடைய அளவிறந்த மகிமைகளையும் அவர் வேதாரணியத்திற்சென்று எழுந்தருளியிருத்தலையும், பாண்டிநாடுசெய்த பெருந்தவத்தினாலே கேள்வியுற்றார்கள். கேள்வியுற்றபொழுதே, அளவிறந்த மகிழ்ச்சியோடு, சில பரிசனங்களை, திருஞானசம்பந்தமூர்த்திநாயனரிடத்திற்குச் செல்லும்பொருட்டு, ஏவினார்கள்.

ஏவப்பட்ட அப்பரிசனங்கள் பாண்டிநாட்டைக் கடந்து சென்று, வேதாரணியத்தை அடைந்து, திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் எழுந்தருளியிருந்த திருமடத்தை அணைந்து, தங்கள் வரவை வாயிற்காவலாளர்களுக்குத் தெரிவிக்க; அவர்கள் உள்ளே போய், நாயனரை வணங்கி நின்று, "சுவாமீ, பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியாரும் மந்திரியாராகிய குலச்சிறைநாயனரும் ஏவுதலால் தேவரீருடைய ஸ்ரீபாதாரவிந்தங்களை வணங்குதற்குச் சிலர் புறத்துவந்து நிற்கின்றனர்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். பிள்ளையார் திருவருள் சுரந்து, "அவர்களை இங்கே அழையுங்கள்" என்று அருளிச்செய்ய, வாயிற்காவலாளர்கள் அவர்களைக் கூவ; அவர்கள் உள்ளே புகுந்து, பிள்ளையாரை விழுந்து நமஸ்கரித்து எழுந்து, அஞ்சலியஸ்தராகி நின்றார்கள். பிள்ளையார் அவர்களை நோக்கி, "மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் க்ஷேமமாய் இருக்கின்றார்களா" என்று வினவியருள; அவர்கள் "ஓம்" என்று சொல்லி, பின் "ஏழுலகமும் உய்யும்படி திருவவதாரஞ் செய்தருளிய பரமகிருபாலுவே, சைவசமயாசாரியமூர்த்தியே, பாண்டியனும் பாண்டிநாட்டாரும் சமணர்களுடைய துர்ப்போதனையினாலே விபூதி சாதனங்களைவிட்டு ஊருகதமதத்திலே பிரவேசித்தமையால்

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறைநாயனாரும் மிகக் கவலை கொண்டிருந்தார்கள். பின்பு தேவரீருடைய மகிமையைக் கேள்வியுற்று, அந்தச்சமாசாரத்தைத் தேவரீருக்கு விண்ணப்பஞ் செய்யும்பொருட்டு, அடியேங்களை அனுப்பினர்'' என்று பிரார்த்தித்தார்கள். அதுகேட்ட சிவனடியார்கள் சமஸ்தரும் பிள்ளையாரை நமஸ்கரித்து எழுந்து நின்று, ''சுவாமீ, தேவரீர் பாண்டிநாட்டுக்கு எழுந்தருளி, நமது கடவுளாகிய பரமசிவனுடைய திருவடிகளை அடையாத அதி பாதகர்களாகிய சமணர்களை வாதிலே வென்று, வேதசிவாக மங்களால் உணர்த்தப்படுஞ் சைவசமயத்தை ஸ்தாபனம் பண்ணி, பாண்டியனையும் விபூதியிடுவித்து, உய்விக்கும்பொ ருட்டுத் திருவுளங்கொண்டருளவேண்டும்'' என்றார்கள். பிள் ளையார் அவர்களுக்கு அருள்புரிந்து, அப்பமூர்த்தியோடு திருக்கோயிலிற் சென்று, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, திருக்கோபுரத்துள் இருந்து, பாண்டிமாதேவியாரும் குலச் சிறைநாயனாரும் சொல்லியனுப்பிய வார்த்தையை அவருக் குச் சொல்லி, பாண்டிநாட்டுக்கு எழுந்தருளுதற்குத் துணிந் தருளினர்.

அப்பொழுது அப்பமூர்த்தி ''தேவரீர் சிறுபிள்ளையாய் இருக்கிறீர். அச்சமணர்களுடைய வஞ்சனைக்கோ ஓரெல்லை யில்லை. தேவரீருக்கு இப்போது கிரகங்கள் வலியில. ஆத லால் தேவரீர் அவ்விடத்திற்கு எழுந்தருளுதற்கு உடன்படு வது ஒண்ணாது'' என்று விண்ணப்பஞ் செய்ய, பிள்ளையார் ''பரமசிவன் நம்முடைய சிந்தையே கோயில் கொண்டு வீற் றிருத்தலினால் நமக்குத் தீங்கு வராது'' என்று சொல்லி, பரமசிவனுடைய திருவடிகளைத் துதித்து, ''வேயுறுதோளி'' என்னுங் கோளறுபதிகத்தைப் பாடியருளினர். அந்தத் திருப்பதிகத்தைக் கேட்டதன்பின், அப்பமூர்த்தியும் அதற்கு உடன்பட்டு, தாமும் அவர்முன்னே எழுந்தருள அமைந்தபொழுது; பிள்ளையார் ''அப்பரே, நீர் இந்தச் சோழமண்ட லத்திலேதானே எழுந்தருளியிரும்'' என்று சொல்லி, கைகு வித்துவணங்கித் தடுக்க; அப்பமூர்த்தியும் வணங்கி, அதற்கு ஒருவாறு அருமையாக உடன்பட்டார். பிள்ளையார் வேதத்தை

வளர்த்தற்கும் சைவத்தை விளக்குதற்கும் எழுந்து, வேதாரணியேசுரரை மீண்டும் போய், நமஸ்கரித்துப் பாடித் துதித்து, ஆநஞ்ஞை பெற்றுக்கொண்டு, புறப்பட்டு, அப்பமூர்த்தி மறுதவண்ணம் அவரை வணங்கி விடைகொடுத்து நீங்கி, முத்துச்சிவிகையில் ஏறி; ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதி, சுவாமியுடைய விபூதியணிந்த திருமேனியைச் சிந்தித்துக்கொண்டு சென்றார். திருவகத்தியான்பள்ளி, கோடிக்குழகர்கோயில், திருக்கடிக்குளம், திருவிடும்பாவனம், திருவுசாத்தானம் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு, சோழநாட்டைக் கடந்து, பாண்டி நாட்டை அடைந்து, திருக்கொடுங்குன்றத்திற் சென்று, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, மதுரைக்குச் சமீபித்தார். அது நிற்க.

எட்டுமலைகளிலும் வசிக்கின்ற சமணர்களெல்லாரும் துர்நிமித்தங்களும் துர்ச்சொப்பனங்களும் கண்டு, மதுரையிலே ஒருங்குவந்து கூடி, தாந்தாங் கண்ட சொப்பனங்களை ஒருவருக்கொருவர் சொல்லி, பாண்டியராஜனுக்குந் தெரிவித்து, தங்களுக்குத் தீங்கு விளைவது திடமெனக் கருதி, உணவின்றிக் கவலைகொண்டிருந்தார்கள். சைவர்களாகிய பாண்டிமாதேவியாரும் குலச்சிறைநாயனாருமோ அளவில்லாத மகிழ்ச்சியைக் காட்டுகின்ற நன்னிமித்தங்களைக் கண்டு, சமணசமயங்குன்றிச் சைவசமயம் விருத்தியாதல் திடமெனக் கருதி, மகிழ்ந்திருந்தார்கள். இருக்கும்பொழுது, "சர்வலோகங்களும் உய்யும்படி திருவவதாரஞ்செய்தருளிய பரமாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் எழுந்தருளிவருகின்றார்" என்று சிலர் அவர்களுக்குப் போய்ச் சொன்னார்கள். மங்கையர்க்கரசியார் அதைக்கேட்டு அவ்வார்த்தையைச் சொல்லியவர்களுக்கு அளவிறந்த திரவியங்களைக் கொடுத்து, எல்லையில்லாத மகிழ்ச்சியுடையராகி, தம்மை வணங்கி நின்ற குலச்சிறைநாயனாரை நோக்கி, "நமது தம்பிரானாராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை எதிர்கொள்ளும்" என்றார். குலச்சிறைநாயனார் பாண்டிமாதேவியாரை வணங்கிப் போந்து, "அரசனுக்கும் உறுதியே" என்று விரைந்து மதுரைக்குப் புறத்திலே போய், பிள்ளையாரை எதிர்

கொள்ளுதற்குச் செல்ல; பாண்டிமாதேவியாரும், தம்முடைய பரிசனங்கள் சூழ, ஆலயத்திற்சென்று,சொக்கநாதசுவாமியை நமஸ்கரித்து, பிள்ளையாருடைய நல்வரவை ஏற்றுநின்றார்.

ஆருகதம் பௌத்தமுதலிய பரசமயவிருளை நீக்குகின்ற ஞானதிவாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், தோற் கருவி துளைக்கருவி நரப்புக்கருவி கஞ்சக்கருவி என்னும் நால் வகை வாத்தியங்களும் ஒலிக்க, எண்ணிறந்த பிராமணர்கள் உதாத்த அநுதாத்த ஸ்வரிதப் பிரசயங்களோடு வேதகோ ஷஞ்செய்ய, அடியார்கள் ஹர ஹர என்று சொல்லும் ஓசையி னுலே திக்குகளெல்லாஞ் செவிடுபட, செந்தமிழ்மாருதமாகிய தென்றல் எதிர்கொண்டு எம்மருங்குஞ் சேவிக்க, விபூதியைத் தரித்த திருமேனியையுடைய திருக்கூட்டம் சர்வலோகத்தா ருஞ்செய்த சிவபுண்ணியங்களின் படையெழுச்சிபோலப் பொலிந்து விளங்க, சமணசமயம் பாழ்பட, சைவசமயம் தழைத்தோங்க, தம்முடைய திருநாமங்கள் பலவற்றையும் ஊதுகின்ற முத்துச்சின்னங்களெல்லாம் "பரசமய கோளரி வந்தார் பரசமய கோளரி வந்தார்" என்று பணிமாற, அடி யார்கள் பலர் உரோமஞ்சிலிர்ப்ப, ஆனந்தவருவிசொரிந்து எங்கும் பெருகி அலைப்பத் தம்முடைய மகிமைகள் எல்லாவற் றையும் பாடி ஆட, இவற்றைக் கண்ட கேட்ட சமணப்புல் லர்களெல்லாரும் ஓட்டெடுக்க, அற்புத சின்மயத் திருவருள் வடிவாகிய முத்துச்சிவிகையின்மேலே, முத்துக்குடை நிழ ற்ற, எழுந்தருளிவந்தார். சத்திய நிர்மல சிவஞானந்தவடி வாகிய பிள்ளையார் இப்படி எழுந்தருளிவரும்பொழுது, ஒப் பில்லாத முத்துச்சின்னம் உலகமெல்லாம் உய்யும்படி ஊது கின்ற அதிமதுரமாகிய பேரொலியானது குலச்சிறைநாயனு ருடைய திருச்செவிகளிலே திவ்வியாமிர்தம்போலப் புகுந்து சுவைக்க, உடனே அந்நாயனர் பூமியிலே விழுந்து நமஸ்கரி த்து, அளத்தற்கரிய பெருங்களிப்பினையுடையராகி எழுந்து, இரண்டு கைகளும் சிரசின்மேல் ஏறிக்குவிய, உரோமாஞ்சங் கொள்ள, எதிரே கடுகிநடந்தார். பிள்ளையாரோடு கூடிவரு கின்ற அடியார்கள் திருக்கூட்டத்தை நெடுந்தூரத்திலே கண்டு வணங்கி, எழுந்து விரைந்து சமீபத்திற்சென்று,

ஆனந்தபரவசராகி அடியற்ற மரம்போல நிலத்திலே விழுந்து கிடந்தார். அக்குலச்சிறைநாயனரை எதிரே வந்த அடியாகள் பலர் வணங்கி, அவர் பூமியினின்று எழாமையைக் கண்டு, திரும்பித் திருஞானசம்பந்தமூர்த்திநாயனரை அடைந்து வணங்கி, வாய்பொத்தி நின்று, "சுவாமீ, பாண்டியனுடைய மந்திரியாராகிய குலச்சிறையார் திருமுன்னே வந்து அடியற்ற மரம்போல விழுந்து கிடக்கின்றனர்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். சர்வசீவதயாநிதியாகிய பிள்ளையார் அதுகேட்டு, திருமுகத்தாமரை மலர்ந்து, முத்துச்சிவிகையினின்றும் இறங்கி, விரைந்து சென்று, அவரை அணைந்து, தம் முடைய அருமைத்திருக்கரங்களினாலே பற்றி எடுக்க; அத்திருக்கரங்கள் தீண்டுதற்குப் பூர்வசன்மங்களிலே அநந்தகோடி சிவபுண்ணியங்களைச் செய்திருந்த குலச்சிறைநாயனர், அப்பிள்ளையாருடைய திருமுகமண்டலம் பொழியாநின்ற பெருங் கருணை வெள்ளத்திலும் தம்முடைய கண்களினின்று பொழியாநின்ற ஆனந்தவெள்ளத்திலும் மூழ்கி, உரை தடுமாறி, உரோமஞ்சிலிர்ப்ப, சரீரம் நடுங்க, எழுந்து, கைகளைச் சிரமேற்குவித்து நின்றார். பிள்ளையார் அவர்மீது திருவருணோக்கஞ்செய்து, "அன்பரே, பாண்டிமாதேவியாருக்கும் உமக்கும் நமது கடவுளாகிய சிவபெருமானது திருவருள் பெருகும் நன்மைதான் வாலிதே" என்று சொல்லியருள; அம்மதுரவாசகத்தைக் கேட்ட குலச்சிறைநாயனர் வணங்கி நின்று, "அடியேங்கள் செய்த தவப்பயனே, அருட்குன்றே, சிவஞானதீபமே, அடியேங்களுக்குச் சென்ற காலத்திலே பழுதடையாத்திறமும் எதிர்காலத்திலே வருஞ் சிறப்பும் இந்நிகழ் காலத்திலே தேவரீர் இந்நாட்டில் எழுந்தருளுதலினாலே பெற்ற பெரும்பேறுகும். இதனால் அடியேங்கள் எக்காலத்துந் திருவருளுடையேம். அஃதன்றியும், பொய்ச்சமயமாகிய சமணசமயத்தில் அமிழ்ந்திய இந்நாடும் அரசனும் வெற்றி பொருந்திய விபூதிப்பிரகாசத்தினாலே விளங்கும் மேன்மையையும் பெற்றோம். பாண்டிமாதேவியார் தேவரீர் இங்கெழுந்தருளுதலைக் கேட்டு, பெருமகிழ்ச்சிகொண்டு, "நமது பெருவாழ்வு எழுந்தருளியது; நீர் போய் எதிர்கொண்டு திருவடிபணிவீர் என்ன அடியேனை ஏவினர்" என்று விண்ணப்

பஞ்செய்து, மிக்க களிப்பினாலே மீளவும் பணிந்து, தோத்திரம் பண்ணினார்.

பிள்ளையார் அங்ஙனம் பணிந்து துதித்த குலச்சிறை நாயனாருக்கு அருண்மொழி கூறியருளும்பொழுது, மதுராபுரி தோன்றுதலும், அடியாரை நோக்கி, "நமது சிவபெருமானுடைய திருவாலவாய் எம்மருங்கினது" என்று விளம்பியருள; அவ்வடியவர் பிள்ளையாருடைய திருவடிகளை வணங்கித் திருமுன்னே நின்று, கையினாலே காட்டி, "இங்கே கோபுரந் தோன்றுகின்றது. திருவாலவாய் இது" என்றார். அது கண்டு, பிள்ளையார் கைகுவித்து மிகுந்த அன்போடு பூமியின் மேலே விழுந்து நமஸ்கரித்து, "மங்கையர்க்கரசி" என்று எடுத்து, மங்கையர்க்கரசியாரும் குலச்சிறைநாயனாருமாகிய இவருடைய திருத்தொண்டுகளைக் கொண்டமையைச் சிறப்பித்து, திருப்பாட்டிறுதிதோறும் "ஆலவாயாலதுமிதுவே" என்பதை அமைத்து, திருப்பதிகம் பாடிக்கொண்டு, அடியார்களோடுந் திருவாலவாயை அணைந்து, கோபுரத்தை வணங்கி, உள்ளே புகுந்து வலஞ்செய்து, மந்திரியாரோடு சந்நிதானத்தை அடைந்தார். சொக்கநாதசுவாமியைத் தரிசித்து, அட்டாங்கபஞ்சாங்கமாகப் பலமுறை நமஸ்கரித்து, உரோமப்புளகங்கொள்ள ஆனந்தவருவி சொரிய நின்று, திருப்பதிகம்பாடி, திருமுன்றிலை அடைந்தார். முன்னே சுவாமிதரிசனஞ் செய்யும்பொருட்டுப் பிள்ளையார் உள்ளணையும்போது எதிர்செல்லாமல் ஒருபக்கத்திலே ஒதுங்கி நின்ற பாண்டிமாதேவியார் முன்னே வர; குலச்சிறைநாயனார் பிள்ளையாரை வணங்கி நின்று, "சுவாமீ, இங்கே சிரசின்மேற் கைகுவித்துக்கொண்டு வருகின்றவரே பாண்டிமாதேவியார்" என்று விண்ணப்பஞ் செய்ய; பிள்ளையார் பெருங்களிப்போடு விரைந்து எதிரே சென்றார். பாண்டிமாதேவியார் பிள்ளையாருடைய திருவடிகளை விழுந்து நமஸ்கரித்தார்; பிள்ளையார் திருவருள் சுரந்து, அவரைத் திருக்கரத்தினால் எடுத்தருளினார். பாண்டிமாதேவியார் தம்முடைய மனக்கருத்து முற்றியது என்று நினைந்து, கண்ணீர் சொரிய, வாய் குழறி, "அடியேனும் அடியேனுடைய பதியும் செய்த தவம் என்" என்று சொல்லி, வணங்கினார்.

பிள்ளையார் "பரசமயத்தார்களுளிருந்தும் சைவநெறியிலே வாழும் அன்பரே, உம்மைக் காணுதற்கு வந்தோம்" என்று சொல்லி அவரை விடைகொடுத்து அனுப்பிக்கொண்டு, அடியார்கள் சூழ எழுந்தருளினார். எழுந்தருளும்பொழுது, திருவாலவாயிலே திருத்தொண்டு செய்துகொண்டிருக்கின்ற அடியார்களெல்லாரும் வந்து, பிள்ளையாரை நமஸ்கரித்து, "ஞானதித்தராகிய சுவாமீ, சமணிருள் நீங்கும்படி தேவரீர் இங்கே எழுந்தருளிவருதற்கு அடியேங்கள் அளவிறந்த தவங்களைச் செய்திருந்தோம்" என்றார்கள். பாலறுவாயர் அவர்களுக்கு அருள்செய்து, புறத்தணைந்து, குலச்சிறை நாயனார் திருமடங் காட்ட, பரிசனங்களோடும் அதில் எழுந்தருளியிருந்தார். பாண்டிமாதேவியாருடைய ஆஞ்ஞையின்படி குலச்சிறைநாயனார் பிள்ளையாருக்கும் பரிசனங்களுக்கும் விருந்தளித்தார்.

பகலிலே பிள்ளையார் அடியார்களோடு எழுந்தருளி வரக் கண்ட சமணர்களெல்லாரும் மனங்கலங்கி, சூரியன் அஸ்தமயனமானபின், ஒருங்கு கூடினார்கள். பிள்ளையார் எழுந்தருளியிருக்கின்ற திருமடத்திலே திருத்தொண்டர்கள் ஓதுகின்ற திருப்பதிகவிசையின் பேரொலி செவிப்புலப்பட; சமணர்கள் அது பொறாராகி, "பாண்டியராஜனிடத்திற் சென்று சொல்லுவோம்" என்று துணிந்து அப்பாண்டியராஜனை அடைந்தார்கள். பாண்டியன் அவர்களுடைய மனத்துயரத்தைக் கண்டு, "நீங்கள் இங்ஙனந் திரண்டு வருதற்குக் காரணம் யாது" என்று பரிந்து வினவ; சமணர்கள் "மஹாராஜாவே, உம்முடைய மதுரையிலே சைவப்பிராமணர்கள் வருதலால், இன்றைக்கு நாங்கள் கண்டுமுட்டு" என்றார்கள். உடனே அரசன் "நானும் கேட்டுமுட்டு" என்று சொல்லிக் கோபித்து, "அந்தச் சிவனடியார்கள் இன்றைக்கு இங்ஙகரத்திற்கு வருதற்குக் காரணம் யாது? அவர்கள் யாவர்" என்றான். அதற்குச் சமணர்கள் சோழநாட்டிலே சீர்காழியிலிருக்கின்ற ஒரு பிராமணப்பாலன் சிவனிடத்திலே ஞானம் பெற்றவனென்று முத்துச்சிவிகை மேற்கொண்டு, எங்களூர்வாதிலே வெல்லும்பொருட்டு அடியார்களோடு வந்திருக்கின்

றன்'' என்றார்கள். பாண்டியன் மிகக்கோபித்து, ''இதற்கு நாம் யாது செய்வோம்'' என்று சொல்ல; தீயவர்களாகிய சமணர்கள் ''நாங்கள் அந்தப்பிராமணப்பிள்ளை இருக்கின்ற மடத்திலே மந்திரவித்தையினாலே அக்கினி பற்றச்செய்வோமாயின், அவன் இந்நகரத்திலே இராமல் போய்விடுவான்'' என்றார்கள். பாண்டியன் அதைக்கேட்டு, ''விரைந்து சென்று அங்ஙனஞ் செய்யுங்கள்'' என்று சொல்லி, அவர்களைப் போக்கி, யாதொரு பேச்சுமின்றி, மனக்கவலையோடு சயனத்திற் புக்கான். பாண்டிமாதேவியாரும் புகுந்தார். பாண்டியன் ஒன்றும் பேசாதிருக்க, மாதேவியார் ''என் பிராணநாயகரே, நீர் முன்னுள்ள மகிழ்ச்சியின்றி முகம்புலர்ந்திருக்கின்றீர். உம்முடைய மனசிலே வந்த கவலை யாது? சொல்லியருளும்'' என்றார். பாண்டியன் தேவியாரை நோக்கி, ''என் அதிப்பிரியையாகிய பிராணநாயகியே, சோழநாட்டிலே சீர்காழியிலிருக்கின்ற ஒரு பிராமணப்பிள்ளை சிவனுடைய அருளைப் பெற்று நம்முடைய ஆசாரியர்களை வாதிலே வெல்லும் பொருட்டு அடியார்களோடும் இங்கே வந்திருக்கின்றான். ஆசாரியர்கள் அவர்களைக் கண்டுமுட்டு; நான் கேட்டுமுட்டு. இதுவே யென்கவலைக்குக் காரணம்'' என்றான். மங்கையர்க்கரசியார் ''என் பிராணநாயகரே, நீர் கோபிக்கவேண்டுவதில்லை. இருபகூத்தாரும் வாதுசெய்தால், வென்றவர்பக்கஞ் சேர்ந்து அவர் அநுட்டிக்குஞ் சமயத்தையே அநுட்டித்தல் உறுதியாகும்'' என்று சொல்லிவிட்டு, பெருமகிழ்ச்சியோடு, தம்முடைய மாடத்திற் சென்றிருந்தார். குலச்சிறைநாயனார் அங்கே எய்த; பாண்டிமாதேவியார் இந்தச் சமாசாரத்தை அவருக்குச் சொல்லினார். குலச்சிறைநாயனார் கைகுவித்து நின்று, ''இன்றைக்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இங்கே எழுந்தருளிவரப் பெற்றுக்கொண்டோம். இனிச் சமணர்கள் செய்யும் வஞ்சனையை அறியேன்'' என்றார். பாண்டிமாதேவியாரும் அஞ்சி, வஞ்சகப்புலையராகிய சமணர்கள் தீத்தொழில் செய்ய வல்லவர்கள் என்செய்வோம்'' என்று நினைந்து ''திருஞானசம்பந்தமூர்த்திநாயனருக்கு யாதாயினும் ஒரு வருமாயின், நாமும் உயிர் துறந்து விடுவோம்'' என்றார். அது நிற்க.

தவமறைந்து அல்லனசெய்யுஞ் சமணர்கள், பிள்ளையார் எழுந்தருளியிருக்கின்ற திருமடத்திலே அக்கினிபற்றும்படி மந்திரஞ் செபித்தார்கள். உயர்வொப்பில்லாத ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதும் மகான்கள் பார்க்குந் திசையிலும் மற்றை மந்திரங்கள் பலிக்குமோ, பலியா. அடியாருடைய திருமடத்திலே தங்கள் மந்திரசாதனைகள் பலியாமையைக் கண்ட சமணர்கள் மனந்தளர்ந்து, "அரசன் இதனை அறியின் நம்மைச் சிறிதும் நன்குமதியான். நம்முடைய விருத்தியையும் ஒழித்துவிடுவான்" என்றுநினைந்து பயந்து, அக்கினியைக்கொண்டுபோய், திருமடப்புறச் சுற்றிலே கொளுத்தினர்கள். அத்தொழில் வெளிப்படுதலும்; பரிசனத்தவர்கள் மறுகிப் பதைப்புடனே சிதைத்து நீக்கி, அது செய்தவர்கள் பாதகர்களாகிய சமணர்களென்பதை உணர்ந்து சென்று, பிள்ளையாரை நமஸ்கரித்து நின்று, சமணர்கள் செய்த தீங்கை விண்ணப்பஞ்செய்தார்கள். உடனே பிள்ளையார் "சிவனடியார்கள் துயில்கின்ற இந்தத் திருமடத்திலே பாவிகள் பழுதுசெய்யலாமோ" என்று பரிந்தருளி, "அவர்கள் என்பொருட்டுச் செய்த தீங்காயினும், சிவனடியார்களுக்கு இப்படி வருமோ" என்று பின்னும் அச்சுற்று, மகாகோபங்கொண்டு, "இத்தீங்கு அரசனல் வந்தது" எனத் திருவுளங்கொண்டு, "செய்யனே திருவாலவாய்" என்னுந் திருப்பதிகத்தை, "அமணர்கொளுவுஞ்சுடர்—பையவேசென்று பாண்டியற் காகவே" என்று பாடியருளினர். சிவபத்தியிற் சிறந்த பாண்டிமாதேவியாருடைய திருமங்கலியத்தைப் பாதுகாத்தல் வேண்டினமையாலும், மந்திரியாராகிய குலச்சிறைநாயனருடைய அன்பினாலும், அரசனிடத்தில் அபராதம் உறுதலாலும், அவனுக்கு மீண்டு சைவமார்க்கத்தை அடையும் விதி உண்மையாலும், அவன் வெப்பு நீங்கும்படி தம்முடைய அருமைத் திருக்கரங்களினாலே தீண்டி விபூதி சாத்தும் பெடம்பேற்றை உடையனதலாலும், தீப்பிணியைப் "பையவே சென்று" என்று அருளிச்செய்தார். திருப்பதிகம் பாடியவுடனே, அக்கினி வெம்மை போய்ப் பாண்டியனை அடைந்தது.

சூரியன் உதித்தபின், பாண்டிமாதேவியார் இரவிலே சமணர்கள் செய்த தீங்கைக் குலச்சிறைநாயனாரோடு கேள்வியுற்று, "திருஞானசம்பந்தப்பிள்ளையாரை இந்தப்பாதகர்களுடைய நாட்டிலே வர அழைத்த நாங்கள் இறப்பதே திண்ணம்" என்று மனமயங்கி அச்சுற்றுப்பதைபதைத்தார். பின்பு திருமடத்திலே தீதின்மையைத் தெளிந்து, "சமணர்கள் செய்த தீங்கு இறுதியில் எப்படி முடியுமோ" என்று நினைக்கும்பொழுது; "அரசனுக்கு வெப்புநோய் அடுத்தது" என்று கஞ்சுகிகள் வந்து சொல்ல, மாதேவியார் பதைபதைத்துச் சென்றார். குலச்சிறைநாயனாரும் விரைந்து போனார். பாண்டியன் வெப்புநோயினாலே மிகவருந்தி, வைத்தியர்கள் வந்து பல வைத்தியங்களைச் செய்யவும், அந்நோய் சிறிதும் நீங்காமல் மேற்பட; அறிவிழந்து பேச்சின்றிக் கிடந்தான். சமணர்கள் அதனைக் கேள்வியுற்று, வெய்துயிர்த்து ஓடிவந்து, அந்நோயின்மூலம் இதுவென்று அறியாமல், தங்கள் மந்திரங்களைச் சொல்லி மயிற்பீலியினாலே தடவ; பீலிகள் பிரம்பி னோடு தீந்து, பொரி சிதறி வீழ்ந்தன. அவ்வெப்பின் அதிசயத்தை நோக்கி, தங்கள் கையிலே தூங்குகின்ற குண்டிகையி லுள்ள ஜலத்தை "அருகனே காவாய் அருகனே காவாய்" என்று சொல்லிப் பாண்டியன்மேலே தெளிக்க; அந்தச்சலம் மிகச் சுவாலிக்கின்ற அக்கினியிலே சொரிந்த நெய்போலாக; பாண்டியன் மிகவருந்திச் சமணர்களை நோக்கி, "நீங்கள் ஒருவரும் இங்கே இராமல் போய்விடுங்கள்" என்று சொல்லி அறிவு சோர்ந்தான். பாண்டிமாதேவியார் பயமெய்திக் குலச்சிறைநாயனாரை நோக்கி, "இராத்திரியிலே திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்குச் சமணர்கள் செய்த தீங்கு இப்படி முடிந்ததோ" என்றுசொல்ல; குலச்சிறைநாயனார் வணங்கி நின்று, "அசுரர்களுடைய முப்புரத்தையும் எரித்த சிவபெருமானுடைய அடியாராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்கு இவர்கள்செய்த தீங்கே அரசனிடத்திலே பலித்தது. இவர்கள் தீர்க்கப்புகின், அது முதிர்வதேயாகும்" என்றார். மாதேவியாரும் மந்திரியாரும் அரசனை வணங்கி நின்று, "திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்குச் சமணர்கள் செய்த தீங்கினாலேயே உமக்கு இந்த வெப்புநோய் அடுத்தது. ஆத

லால் இந்தப்பாதகர்கள் செய்யும் மாயம் இந்நோயை வளர்ப்பதேயன்றித் தீர்ப்பதில்லை. அந்தத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் திருவுளமிரங்கித் திருவருணோக்கஞ் செய்வாராயின், இந்த வெப்புநோய்மாத்திரமா எவர்களாலும் நீக்குதற்கரிய பிறவிநோயும் நீங்கிவிடும். இது சத்தியம்'' என்றார்கள். பாண்டியன், தன் செவியிலே, மெய்யறிவினையுடைய அவ்விருவருஞ் சொல்லிய, ''திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்'' என்கின்ற திருமந்திரம் புகுந்தவுடனே, அயர்வு நீங்க, ''இந்தச்சமணர்கள் செய்யுஞ் செய்கைகளெல்லாம் இந்நோய்க்கு ஏதுவாயேயிருக்கின்றன'' என்று நினைந்து, அவ்விருவரையும் நோக்கி, ''அந்தத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனரை இங்கே அழையுங்கள். என்னுடைய நோயை நீக்கி வென்றவர் எவரோ அவர்பக்கஞ் சேர்வேன்'' என்றான்.

மங்கையர்க்கரசியார் அதுகேட்டு, பெருங்களிப்புடையவராகி, சிவிகையிலேறி, பெண்கள் சூழ, குலச்சிறைநாயனார் குதிரையிலேறிக்கொண்டு முன்னே செல்ல, சென்று திருமடத்தை அடைந்தார். குலச்சிறைநாயனார் குதிரையினின்றும் இறங்கி, பரிசனங்களை நோக்கி, ''அடியேங்கள் வந்து நிற்றலைச் சுவாமிக்கு விண்ணப்பஞ் செய்யவேண்டும்'' என்றார். அவர்கள் உள்ளே புகுந்து, திருஞானசம்பந்தமூர்த்திநாயனரை வணங்கி நின்று, ''சுவாமீ, பாண்டிமாதேவியாரும் குலச்சிறைநாயனாரும் வந்து நிற்கின்றனர்'' என்று விண்ணப்பஞ்செய்ய; பிள்ளையார் ''அவர்களை இங்கே அழையுங்கள்'' என்று அருளிச்செய்தார். பரிசனங்கள் மீண்டுபோய் அழைக்க; அவர்கள் இருவரும் உள்ளே பிரவேசித்து, திருஞானசம்பந்தமூர்த்திநாயனரைக் கண்களிக்கக் கண்டு, சமணர்கள் செய்த கொடுந்தொழிலை நினைந்து, நெடிதுயிர்த்து, சோகபாஷ்பஞ் சொரிய, ஸ்ரீ பாதங்களின் கீழே விழுந்தார்கள். உரை குழற, சரீரம் நடுங்க, ஒன்றும் அறிந்திலராகி, நிலத்திலே புரண்டு அயர்ந்து, திருவடிகளைப் பற்றிக்கொண்டு, கவலைக்கடற்கு ஒரு கரைபற்றினர் போன்று மெய்யன்பிலே விடாது கிடந்தார்கள். பிள்ளையார் அது கண்டு, அவ்விருவரையும் திருக்கரத்தினால் எடுத்தருளித் தேற்றவும்,

அவர்கள் தெளியாராக அவர்களை நோக்கி, "அன்பர்களே, உங்களிடத்திலே யாதாயினும் தீங்கு உண்டா" என்று வினவியருளினர். அதற்கு அவர்கள் "அடியேங்கள் சமணர்கள் முன்செய்த வஞ்சனைக்கு மிக அஞ்சி வருந்தினேம். அது திருமேனிக்கு அடாது என்று உணர்ந்து, அது தீர்த்தோம். அவ்வஞ்சகர்கள் செய்த தீத்தொழில் வெப்புநோயாகி, அரசனை அடைந்து, மிக வருத்துகின்றது. சமணர்கள் அதனைத் தீர்க்கப் புக, அது வளர்கின்றது. ஆதலால், தேவரீர் அவ்வரசன்முன் அவர்களை வென்றருளின், அவனுயிரும் அடியேங்களுயிரும் உய்யும்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அப்பொழுது கருணைகராகிய பிள்ளையார் "நீங்கள் சிறிதும் அஞ்சவேண்டாம். நாம் மெய்யுணர்வில்லாத சமணர்களை இன்றைக்கு நீங்கள் மகிழும்படி சமஸ்தருங்காண வாதிலே வென்று, பாண்டியனை விபூதி அணிவிப்போம்" என்று சொல்லியருளினர். அவ்விருவரும் அதைக் கேட்டு, "தேவரீர் அடியேங்களைத் துன்பக்கடலினின்றும் எடுத்தருளும் பொருட்டு இவ்விடத்துக்கு எழுந்தருளிவரப் பெற்றுக் கொண்ட நாங்கள் என்பெறுமே" என்று விண்ணப்பஞ் செய்து, வணங்கினர்கள்.

ஆளுடையபிள்ளையார் "பாவிகளாகிய சமணர்களை நோக்கி வாதுசெய்து வெல்லுதற்குச் சொக்கநாத சுவாமியினுடைய திருவுள்ளத்தை அறிவேம்" என்று, திருமடத்தினின்றும் நீங்கி, திருக்கூட்டஞ் சூழச் சென்று, திருவாலவாயிலே புகுந்து, நோக்க விதியில்லாத சமணர்களை நோக்கி வாது செய்தற்குத் திருவுள்ளமோ என்பதை அறியும்பொருட்டு "காட்டுமோவதுரித்து" என்னுந் திருப்பதிகம் பாடி, சுவாமியுடைய திருவுள்ளத்தை அறிந்து, பின்னும் சமணர்களை வாதில் வென்று அழிக்கும்பொருட்டும், சிவநாமத்தையே பரப்பும்பொருட்டும், "வேதவேள்வியை" என்னுந் திருப்பதிகத்தைப் பாடி, திருவருள் பெற்று, திருவுளமகிழ்ந்து விடைகொண்டு, கோபுரவாயிலைக் கடந்து, முத்துச்சிவிகையின்மேல் ஏறி முத்துக்குடை நிழற்ற, அடியார்கள் சூழ, பலவகைப்பட்ட வாத்தியங்கள் தொனிக்க, முத்துச்சின்னங்

கள் ஊத, மங்கையர்க்கரசியார் சிவிகைமேலேறிக்கொண்டு பின்னுக வர, குலச்சிறைநாயனர் முன்னே அடியார் கூட்டத்திற் சேல்ல, பாண்டியனுடைய கோயிலுக்கு எழுந்தருளினர்.

குலச்சிறைநாயனர் முன்னே விரைந்து பாண்டியனிடத்திற் சென்று, திருஞானசம்பந்தமூர்த்திநாயனருடைய வரவைச் சொல்ல; பாண்டியன் தன்னுடைய துயரம் சிறிது நீங்கி, தன் முடியின் பக்கத்திலே இரத்தினாசனத்தை இடுவித்து, குலச்சிறைநாயனரைப் பின்னும் எதிர் செல்லும் பொருட்டு ஏவினன். குலச்சிறைநாயனர் மனமகிழ்ந்து எதிர் கொள்ளச் சென்றார். சமணர்கள் அரசனுடைய தன்மையைக் கண்டு, "மகாராஜாவே, நமது சமயத்தை ஸ்தாபிக்கும் நெறி இதுவோ" என்று சொல்லி, பின்னும் "உம்முடைய தருமநெறியை நீரே காத்தருளல்வேண்டும். ஆயின் அவரையிங்கே அழைத்தீர். உம்முடைய நோயை அவரும் நாங்களும் ஒருங்கு தீர்க்கும்படி சொல்லி, முழுமையும் அவராலேயே தீர்க்கப்பட்டதாயினும் எங்களாலுந் தீர்க்கப்பட்டதாகச் சொல்லும்" என்றார்கள். அதுகேட்ட அரசன், தான் பூர்வஜன்மத்திலே செய்த தவப்பயனே அடையுஞ்சமயம் சமீபித்தலால், சமணர்களை நோக்கி, "நீங்கள் இருபகூத்தீரும் உங்கள் உங்கள் தெய்வச்சார்பினலே தீருங்கள், நான் வஞ்சகம் பேசேன்" என்றான். அதைக்கேட்ட சமணர்கள் "என்செய்வோம்" என்று கவலைகொண்டிருந்தார்கள். அப்பொழுது தமிழ்நாடு செய்த தவக்கொழுந்துபோலும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் அரமனைவாயிலுள் அணைந்து, முத்துச்சிவிகையினின்றும் இறங்கி, குலச்சிறைநாயனர் முன் செல்ல, பாண்டிமாதேவியாரும் சிவிகையினின்றும் இறங்கி வர, உள்ளே எழுந்தருளினர். பாண்டியன், பிள்ளையாரைக் கண்டவுடனே, அஞ்சலி செய்து அவர் சமீபத்தில் வர, அவரை நோக்கி, தன் முடியின் பக்கத்தில் இருக்கின்ற இரத்தினாசனத்தைக் காட்ட; அவர் அதிலே வீற்றிருந்தருளினர். சமணர்களெல்லாரும் அச்சங்கொண்டார்கள். பாண்டியன் பிள்ளையாருடைய திருமேனியைத் தரிசிக்கப்பெற்றதனல் வெப்புநோய் சிறிது நீங்கி, "சுவாமீ, தேவரீருடைய வரு

யாது'' என்று விளவ, பிள்ளையார் ''பிரமனூர் வேணுபுரம்'' என்றெடுத்து, ''கழுமலநாம் பரவுமூரே'' என்று திருப்பதிகத்தினுலே உத்தரங் கொடுத்தருளினர்.

பிள்ளையார் இரத்தினசனத்தில் எழுந்தருளியிருந்த பொழுது, சமீபத்தில் இருந்த சமணர்கள் பொறுமைகொண்டு, தங்கள் உள்ளத்திலுள்ள அச்சத்தை மறைத்து, கோபாக்கினி சொலிக்கக் கண்கள் சிவந்து, பாலசூரியனைச் சூழ்கின்ற கருமுகிற்குழாங்கள்போலப் பிள்ளையாரைச் சூழ்ந்து, அவரை வாதினுல் வெல்லக் கருதி, தங்கள் சமயநூல்களை எடுத்துச் சொல்லிக் குரைத்தார்கள். பிள்ளையார் அதைக்கேட்டு, ''உங்கள் சமயநூற்றுணிவை உள்ளபடி கிரமமாகப் பேசுங்கள்'' என்று சொல்லியருள; சமணர்கள் துள்ளி எழுந்து, அநேகர்களாய்ச் சூழ்ந்து, பதறிக் கதறினர்கள். பாண்டிமாதேவியார் அதுகண்டு பொறுராகி, மன நடுங்கி, பாண்டியனை நோக்கி, ''சுவாமிகள் சிறுபாலர். இச்சமணர்களோ எண்ணில்லாதவர்கள். என் பிராணநாயகரே, எம்பெருமானுர் உம்முடைய நோயை நீக்கியருளுக. பின்பு இச்சமணர்கள் பேச வல்லவராயிற் பேசக்கடவர்கள்'' என்றூர். பாண்டியன் தேவியாரை நோக்கி, ''நீ வருந்தாதே'' என்று சொல்லி, சமணர்களை நோக்கி, ''நீங்களும் இந்தச் சிவபத்தரும் உங்களுங்கள் தெய்வத்தன்மையை என்னுடைய வெப்புநோயை நீக்குதலினுலே தெரிவியுங்கள்'' என்ருன். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் பாண்டிமாதேவியாரை நோக்கி, ''மாதேவியே, என்னை நீ பாலன் என்று அஞ்சவேண்டாம். திருவாலவாயரன் நிற்க நான் சமணர்களுக்கு எளியேனல்லேன்'' என்னுங் கருத்தினையுடைய ''மானி னேர்விழி மாதராய்'' என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினர். அதுகேட்ட அரசன் பிள்ளையாரையும் குரைத்தல் ஒழியாத சமணர்களையும் நோக்கி, ''நீங்கள் என்னுடைய நோயை இகலித் தீருங்கள். தீர்த்தவர் எவரோ அவரே வாதில் வென்றவர்'' என்று சொல்ல; சமணர்கள் ''மகாராஜாவே, உம்முடைய இடப்பாகத்து நோயை நாங்கள் எங்கள் சமயமந்திரத்தினுலே தீர்ப்போம். அவர் வலப்பாகத்து நோயைத் தீர்க்கக்கடவர்''

என்று சொல்லி, அரசனுடைய இடப்பாகத்தைப் பீலியி னாலே தடவினர்கள். அதினாலே வெப்புநோய் வளர; பாண் டியன் அதைப் பொறுக்கலாற்றாதவனாகி, பிள்ளையாரைப் பார்த்தான். பிள்ளையார் அரசனுடைய,நோக்கத்தைக் கண்டு, "மந்திரமாவது நீறு" என்னுந் திருநீற்றுப்பதிகத்தைப் பாடி, அவனுடைய வலப்பாகத்தை விபூதிகொண்டு திருக்கையி னாலே தடவியருள; அவ்வலப்பாகம் வெப்புநோய் நீங்கிப் பொய்கைபோலக் குளிர்ந்தது. இடப்பாகத்து வெப்புநோய் முன்னையிலும் இருமடங்காய் மிகுந்து பொங்க சமணர்கள் மனநடுக்குற்று, மயிற்பீலிதிய, அவ்வெப்புத்தீ தம்மேலுந் தாவ, சரீரமுங்கன்றி, செருக்கு அழிந்து, அருகுவிட்டுத் தூரத்திலே நின்றார்கள். பாண்டியன் சமணர்களை நோக்கி, "சமணர்களே, நீங்கள் தோற்றுப்போனீர்கள். என்னைவிட்டு அகலப்போய்விடுங்கள்" என்று சொல்லி, பின் பிள்ளையாரை நோக்கி, "அடியேனை ஒருபொருளெனக்கொண்டு உய்வித்த காருண்ணிய சாகரமாகிய சுவாமீ, இடப்பாகத்து வெப்பை யும் தேவரீரே நீக்கியருளும்" என்று, மனசிலை வணங்கிப் பிரார்த்தித்தான். பிள்ளையார் இடப்பாகத்தையும் முன் போல விபூதி கொண்டு தடவியருள; பாண்டியன் வெப்பு நோய் முழுதும் நீங்கி உய்ந்தான். அதுகண்ட பாண்டிமா தேவியாரும் குலச்சிறைநாயனரும் பிள்ளையாருடைய திரு வடிகளை விழுந்து நமஸ்கரித்து, "எங்கள் அரசர் பிறவா மேன்மை பெற்றனர்" என்று களிப்படைந்தார்கள். பாண்டி யர் சயனத்தை விட்டு எழுந்து, இரண்டு கைகளையும் சிரசின் மேலேறக் குவித்து, "பொய்யராகிய சமணர்கண்முன் அடி யேனுடைய நோயை நீக்கியருளிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனருடைய ஸ்ரீபாதங்களை அடைந்து உய்ந்தேன் உய்ந் தேன்" என்றார்.

சமணர்கள், பிள்ளையாருடைய சொல்வெற்றியை, அவர் தமிழ்ப்பதிகத்தினாலே பாண்டியனுடைய வெப்புநோயை நீக் கினமையால் அறிந்தபின், "தருக்கம் பேசி இவரை வெல்லு தல் கூடாது. அக்கினியினாலும் ஜலத்தினாலும் வெல்லல் வேண்டும்" என்று தங்களுள்ளே சிந்தித்தார்கள். பிள்ளை

யார் சமணர்களை நோக்கி, "இனி உங்கள் சமயநூற்றுணி வைப் பேசுங்கள்" என்று அருளிச்செய்ய: சமணர்கள் "தருக்கம்பேசி வெல்லவேண்டுவதில்லை. நாமிருபக்கத்தே மும் எங்கள் எங்கள் சமயவுண்மையை உள்ளபடி பிரத்தி யக்ஷமாகக் காட்டி வெல்லுவோம்" என்று ஓட்டினர்கள். அப்பொழுது பாண்டியராஜர் "என்னுடைய வெப்புநோயை நீங்கள் ஒழித்திலீர்கள். உங்களுக்கு என்னவாது" என்று சொல்ல; சமணர்கள் அரசர் உங்களுக்கு என்னவாது என்ற தையே விஞவாகக்கொண்டு, "நாங்கள் இருபக்கத்தேமும் எங்கள் எங்கள் சமயக்கருத்தை ஏட்டிலே தீட்டி, அக்கினி யில் இடக்கடவோம். வேவப்பெறுமையே வெற்றி" என் றார்கள். அப்போது அரசர் ஒன்று சொல்லுமுன், பிள்ளை யார் "நீங்கள் சொல்லியது நன்று. அரசனெதிரே அப்ப டியே செய்வோம், வாருங்கள்" என்று சொல்லியருளினர். பிள்ளையாருடைய ஆஞ்ஞையினலே பாண்டியர் சபைமுன்னே அக்கினி அமைக்கும்படி ஏவலாளர்களை ஏவ; அவர்களும் அக்கினி அமைத்தார்கள். பிள்ளையார் சமீபத்திலே எழுந் தருளி வந்து, பரமசிவனே மெய்ப்பொருள் என்று தாம் பாடியருளிய தமிழ்வேதத் திருமுறையை ஸ்தோத்திரஞ் செய்து "நம்முடைய சிவபெருமானே பரம்பொருள்" என்று சொல்லி வணங்கி, திருக்கரத்தினல் எடுத்து, சிரசின்மேற் கொண்டு, திருக்காப்பிட்ட கயிற்றை, அவிழ்த்து, அத்திரு முறையைத் தமது திருக்கரத்தினல் மறிக்க; திருநள்ளாற் றின் மேலதாகிய "போகமார்த்த பூண்முலையாள்" என்னுந் திருப்பதிகம் வந்து நேர்ந்தது. பிள்ளையார் அத்திருப்பதிகத் தையே விரும்பி திருநள்ளாறரை வணங்கி, அது எழுதப் பட்ட திருவேட்டைக் கழற்றி, திருக்கரத்திலே கொண்டு, பரமசிவனே மெய்ப்பொருள் என்பதைச் சமஸ்தருக்கும் உணர்த்தும்பொருட்டு, "இவை அக்கினியில் இடப்படுமாயிற் பழுதில்லை. இது சத்தியம்" என்னுங் கருத்தையுடைய "தளிரிளவளரோளி" என்னுந் திருப்பதிகத்தைப் பாடி, அந்தர்ள்ளார்களெல்லாருங் காண சமணர்களுடைய சிந்தை வேவ, அவ்வக்கினியிலே அவ்வேட்டை இட்டருளினர். இட்ட ஏட்டில் எழுதப்பட்ட திருப்பதிகம், பரஞானம் அபர

ஞானம் என்கின்ற இருதனங்களையுடைய உமாதேவியாகரும் அட்டமூர்த்தியுமாகிய பரமசிவனையே பொருளென உடைமையால், மிகச்சுவாலிக்கின்ற அக்கினியிலே பச்சையாய் விளங்கிற்று. சமணர்களும் தங்கள் நூற்பொருளை எழுதிய ஏட்டை, "இது உய்யுமோ" என்கின்ற கவலையோடு, நடுங்கி நின்று, அக்கினியில் இட்டார்கள். அது தகிக்கப்பட்டொழிந்தது. அது கண்டு பயத்தினாலே மனஞ் சோர்ந்து நின்றார்கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் தாம் அக்கினியில் இட்ட ஏட்டை, குறித்த நாழிகையிலே ஈனமின்மை கண்டு, யாவரும் வியக்கும்படி எடுத்தருளினர். அது முன்னையிலும் பசுமையும் புதுமையும் உடைத்தாய் விளங்கிற்று. பிள்ளையார் அவ்வேட்டைச் சபைமுன்னே காட்டி, திருமுறையிலே முன்போலக் கோத்தருளினர். அரசர் அத்தியந்த ஆச்சரியம் அடைந்து, சமணர்களை நோக்கி, "நீங்கள் இட்ட ஏட்டைக் காட்டுங்கள்" என்றார். சமணர்கள் தாங்கள் இட்ட ஏட்டை எடுக்கும்படி சென்றணையும்போது, அக்கினி மிகச் சுவாலித்தலைக் கண்டு, திரும்பிவிட்டார்கள். அது கண்ட அரசர் ஜலத்தினாலே அக்கினியைத் தணிப்பித்தார். சமணர்கள் அங்கே சாம்பருங் காரியமன்றி, மற்றொன்றுங் காணார்களாகி, செய்வதொன்றறியாது, திகைப்பினாலே, திரண்ட சாம்பரைக் கையினாலே பிசைந்து தூற்றிப் பார்த்தார்கள். அது கண்ட அரசர் புன்முறுவல் செய்து, "ஏட்டை இன்னும் அரித்துப்பாருங்கள். பொய்ந்நெறியையே மெய்ந்நெறியாகக்கொண்டு உலகின்றவர்களே, போங்கள். முன்நான் வெப்பாகிய தீயினின்றும் உய்ய, நீங்கள் அப்பொழுது தோற்றீர்கள். ஆதலால் அதுவே வழியாக இப்பொழுது அக்கினியில் இடப்பட்ட ஏடு உய்ந்ததில்லை என்றால், நீங்கள் தோற்றிலீர்கள்போலும்" என்றார்.

சமணர்கள், பாண்டியர் நகை உட்கொண்டு சொல்லிய சொற்பொருளை அறியாராகி, திரித்துணர்ந்து, "முன்னே இரண்டுதரம் வாது செய்தோம். இன்னும் ஒருதரம் செய்ய வேண்டும். மூன்றுதரத்தில் ஒருதரமாயினும் வெற்றி பெறுவோம்" என்றார்கள். பாண்டியர் "இது என்னவார்த்தை"

என்று மறுத்தபின்னும்; பிள்ளையார் சமணர்களை நோக்கி, "இனி என்னவாதுசெய்வோம்" என்று வினவியருள; சமணர்கள் "நாங்கள் இருபக்ஷத்தேழும் எங்கள் எங்கள் சமய வுண்மையை எழுதிய ஏட்டை ஓடுகின்ற வைகையாற்றிலே இடுவோம். எதிர்ந்து செல்லும் ஏடே மெய்ப்பொருளையுடையது" என்றார்கள். பிள்ளையாரும் "அப்படியே செய்வோம்" என்று அருளிச்செய்தார். அப்பொழுது குலச்சிறைநாயனார் சமீபத்தில் வந்து, "இனிச் செய்யப்படும் இவ்வாதிலே தோற்றவர்கள் செய்வது யாது" என்றார். அதைக் கேட்ட சமணர்கள் அவர்மேற் கோபங்கொண்டு, பொறுமை காரணமாக, தங்கள் வாய்சோர்ந்து, "நாங்கள் வாதிலே தோற்றோமாயின், எங்களை இவ்வரசர் கழுவில் ஏற்றக்கடவர்" என்றார்கள். அதைக் கேட்ட அரசர் "வைகையாற்றிலே ஏடு இடும் பொருட்டுப் புறப்படுங்கள்" என்றுசொல்ல; முன்னே பிள்ளையார் இரத்தினசனத்தினின்றும் இறங்கிப் போய், முத்துச் சிவிகைமேற்கொண்டு சென்றார். அவர் பின்னே பாண்டியர் குதிரைமேற் கொண்டு சென்றார். சமணர்கள் மயக்கமேற் கொண்டு சென்றார்கள். சமுத்திரத்தை நோக்கித் திரையெறிந்து அதிவேகத்துடன் பாய்கின்ற வைகையாற்றின் கரையை அடைந்தவுடனே; பாண்டியர் "இருபக்ஷத்தாரும் தங்கள் தங்கள் சமயவுண்மையை எழுதிய ஏட்டை இடக்கடவர்கள்" என்றார். அரிசியாகிய உள்ளீடில்லாத நெற்பதர் போல அறிவாகிய உள்ளீடு இல்லாத மக்கட்பதராகிய சமணர்கள் "அத்திநாத்தி" என்று எழுதிய ஏட்டை, நதி அதிவேகத்துடன் பாய்தலைக் கண்டும், அவாமேலீட்டினாலே இடுதலும்; அது விரைந்துகொண்டு கடலை நோக்கி ஓடிற்று. சமணர்கள் ஆறுகொண்டோடும் ஏட்டைத் தொடர்ந்து எதிரே அணைப்பவர்போலக் கரைமேல் ஓடிப்போனார்கள். அவ்வேடு நாறுவிற்கிடைக்கு அப்பாற்சென்றமையால், அதைக் காணுதற்கும் கூடாதவர்களாகி, வேறொரு செயலுமின்றி, தங்களுக்கு நாசகாலம் வந்தது என்று அஞ்சி நடுநடுங்கி, அரசருக்கு எதிரே வந்து, தங்கள் நெஞ்சில் அச்சம் வெளிப்படவெளிப்பார்போல, பிள்ளையாரை நோக்கி, "நீரும் உம்முடைய ஏட்டை இட்டால் அறியலாம்" என்றார்கள். பாண்டியராஜர்

அவர்களைவிட்டு, பிள்ளையாருடைய திருக்குறிப்பை நோக்க; தம்மை அடைந்த அன்பர்களுடைய சனன மரணங்களுக்கு ஏதுவாயிருக்கின்ற மலமாயாகர்மங்களை நீக்கியருளுந் தேசிகோத்தமராகிய திருஞானசம்பந்தப்பிள்ளையார், பாண்டிய ராஜர் தம்முடைய அருமைத்திருக்கரத்தினுலே தீண்டி விபூதி பூசப்பெற்று மல்பரிபாகமும் இருவினையொப்பும் உற்று நிற்றலால், அவருக்கும் அவர்போலப் பக்குவப்படும் சர்வான்மாக்களுக்கும் சைவசமயத்துண்மைப்பொருளை விளக்கும் உபதேச மொழியாகிய "வாழ்கவந்தணர்" என்னுந் திருப்பாசுரத்தைப் பாடி, ஏட்டில் எழுதி, அத்திருவேட்டைத் தமது திருக்கரத்தினுலே வைகை நதியில் இட்டருளினர். அத்திருவேடு நதியிலே எதிர்ந்து, ஜலத்தைக் கிழித்துக்கொண்டு, சர்வான்மாக்களுக்கும் இதுவே மெய்ப்பொருள் என்றி காட்டிக்கொண்டு சென்றது. பரமசிவனே எல்லாப் பொருளும் என்று எழுதிய திருவேட்டிலே "வேந்தனு மோங்குக" என்று பாடியருளியபடியால், பாண்டியராஜருடைய கூன் நிமிர்ந்தது. ஏடு எதிர்ந்து செல்லும்பொழுது, தேவர்களெல்லாரும் ஸ்தோத்திரஞ்செய்து, புஷ்பமாரிபெய்தார்கள். பாண்டியர் அற்புதங்கொண்டு நின்றார். சமணர்களெல்லாரும் அஞ்சிப் பதைபதைத்துத் தலை குனிந்து நின்றார்கள். குலச்சிறைநாயனர் அத்திருவேட்டைத் தொடர்ந்து எடுத்தற்கு விரும்பி, காற்றைப்போல அதிவேகத்தோடு செல்கின்ற குதிரைமேல் ஏறிக்கொண்டு, பின் சென்றார். பிள்ளையார் அவ்வேடு தங்கும்பொருட்டு, "வன்னியுமத்தமும்" என்னுந் திருப்பதிகம் பாட, குலச்சிறைநாயனர் சிவாலயத்துக்குப் பக்கத்தில் இருக்கின்ற நீர்நடுவிலே புகுந்து, அங்கே தங்கிய ஏட்டை எடுத்துச் சிரமேற்கொண்டு, பெருமகிழ்ச்சி பொங்க, கரையில் ஏறி, திருவேடகத்தில் எழுந்தருளியிருக்குங் கடவுளை வணங்கித் துதித்து, திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் சந்நிதியில் வந்து அவருடைய திருவடிகளை வணங்கிக்கொண்டு, பாண்டியர் முதலாயினோரெல்லாருக்குங் காட்டி; அடியார்கள் எல்லாரும் அத்தியந்த ஆனந்தத்துடனே ஹர ஹர என்று ஆரவாரித்தார்கள்.

பாண்டியராஜர் கண்டு, குலச்சிறைநாயனரை நோக்கி, "வாதிலே ஒட்டித் தோற்ற இந்தச்சமணர்கள் முன்னே எங்கள் பரமாசாரியராகிய சுவாமிகளிடத்திலே அநுசிதஞ்செய்தவர்கள் ஆதலால் இவர்களைக் கழுவிலே ஏற்றுக" என்று ஆஞ்ஞாபித்தார். கருணைகராகிய பிள்ளையார் அதைக் கேட்டும், தாம் அவர்கண்மேல் சிறிதும் பகையிலராயினும், அவர்கள் சிவனடியார்கள் வாழுந்திருமடத்திலே செய்த தீங்கு அதிபாதகமாதலாலும், அதிபாதகஞ்செய்தார் யாவராயினும் அவரைக் கொல்லல்வேண்டுமென்பது சிவாகமநூற் றுணிவாதலாலும், பாண்டியருடைய குற்றமற்ற செய்கையை விலக்காதிருந்தார். திடபத்தியையுடைய குலச்சிறைநாயனர், கழுத்தறிகளை நிரையாக நாட்டுவித்து அவைகளில் ஏற்ற, அதிபாதகர்களாகிய சமணர்கள் எண்ணுயிரரும் ஏறினர்கள். பிள்ளையார் பாண்டியராஜருக்கு விபூதி கொடுத்தருள, அவர் அவருடைய ஸ்ரீபாதங்களை விழுந்து நமஸ்கரித்து எழுந்து வாங்கி, அணிந்து நின்றார். பாண்டிநாட்டிலுள்ள சமஸ்தரும் விபூதி அணிந்துகொண்டார்கள். அரசர் சைவராயினமையால், சமணசமயம் பாழாக, சைவசமயமே தழைத்தோங்கிற்று. திருஞானசம்பந்தமூர்த்திநாயனருடைய திருப்புகழே எங்கும் பரந்தது. பிள்ளையார் சொக்கநாதசுவாமியைத் தரிசிக்கவேண்டும் என்று எழுந்து சென்று, முத்துச்சிவிகை மேற்கொண்டு போனார். பாண்டியரும் மங்கையர்க்கரசியாரும் அவரை ஸ்தோத்திரஞ்செய்துகொண்டு, உடன்சென்றார்கள். அடியார்கள் சமஸ்தரும் பெருமகிழ்ச்சி பொங்க, பிள்ளையாரைத் துதித்துக்கொண்டு கூடிப்போனார்கள். பிள்ளையார் திருக்கோயிலை அணைந்து, முத்துச்சிவிகையினின்றும் இறங்கி, பாண்டியராஜரும் மாதேவியாரும் மந்திரியாரும் தம்மைத் தோத்திரஞ்செய்துகொண்டு உடன்புகப் புகுந்து வலஞ்செய்து சந்நிதானத்தையடைந்து, சொக்கநாதசுவாமியை வணங்கி, "வீட லால வாயிலாய்" என்னுந் திருப்பதிகம் பாடினார். பாண்டியர் சொக்கநாதசுவாமியை நமஸ்கரித்து நின்று, "திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே, சமணர்களுடைய மாயையினாலே மயங்கித் தேவரீரை அறியாதிருந்த சிறியேனைப் பிணி நீக்கி ஆட்கொள்

ளும் பொருட்டுத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரைத் தந் தருளிய பெருங்கருணையை என்னென்று பேசுவேன்" என்று தோத்திரம் பண்ணினார். பிள்ளையார் சுவாமியை வணங்கி அருள்பெற்று, அங்குநின்று அரிதினீங்கித் திருமடத்திற் சென்று, எழுந்தருளியிருந்தார். பாண்டியரும் மாதேவியாரும் பிள்ளையாரை வணங்கி, அநுமதிபெற்றுக்கொண்டு, தங்கள் மாளிகைக்குப் போனார்கள். பிள்ளையார் "ஆல நீழலுகந்த திருக்கையே" என்னுந் திருவியமகத்திருப்பதிகத்திலே திருநீலகண்டப்பெரும்பாணருக்கு அருளிய திறத்தையும் துதித்து, அவரோடும் அளவளாவியிருந்தார்.

பிள்ளையார், பாண்டியரும் மாதேவியாரும் குலச்சிறை நாயனாரும் தினந்தோறும் வந்து தம்முடைய திருவடிகளை வணங்கித் துதிக்க, தாம் சொக்கநாதசுவாமியை வணங்கித் துதித்துக்கொண்டு எழுந்தருளியிருக்குநாளிலே; சீர்காழியிலிருந்த சிவபாதவிருதயர் "சமணர்களுடன் வாது செய்து வெல்லுதற்கும் பாண்டிநாடெங்கும் விபூதியைப் பரப்புதற்கும் போயருளிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரிடத்தில் நிகழ்ந்தவற்றை அறிவேன்" என்று புறப்பட்டு, மதுரையை அடைந்து, திருவாலவாயிற் சென்று, சொக்கநாதசுவாமியை வணங்கிக்கொண்டு, பிள்ளையார் எழுந்தருளியிருக்கின்ற திருமடத்தை அணைந்தார். பிள்ளையார் தந்தையார் வந்தமையை அடியார்கள் சொல்லக் கேட்டு, திருவுளமகிழ்ந்து எழுந்தருளி; சிவபாதவிருதயர் தொழுதுகொண்டு முன்சென்றணைய; பிள்ளையார் அவரை எதிர்தொழுது, தமக்குச் சிவஞானம் அருளிய திருத்தோணியப்பரை நினைந்து, சீர்காழிமேலே "மண்ணி னல்ல வண்ணம்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார்.

சிலநாளாயினபின், பிள்ளையார் அடியார்களோடு பிறதலங்களையும் வணங்கும்பொருட்டுப் புறப்பட்டு, பாண்டியரும் மாதேவியாரும் குலச்சிறைநாயனாரும் பிரிவாற்றுமையால் உடன் செல்லச் சென்று, திருப்பரங்குன்றம், திருவாப்பனூர், திருப்புத்தூர், திருப்பூவணம், திருக்கானப்பேர், திருச்சுழியல், திருக்குற்றாலம், திருக்குறும்பலா, திருநெல்

வேலி என்னுந் தலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடிக் கொண்டு, இராமேச்சரத்தை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடி, அங்கே இருந்தருளினார். அங்கிருந்தே, ஈழமண்டலத்தில் உள்ள திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் என்னுந் தலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடியருளினார். சிலநாட்சென்றபின் இராமேச்சரத்தை நீங்கி, திருவாடானை, திருப்புனவாயில் என்னுந் தலங்களை வணங்கி, குலச்சிறைநாயனாருடைய ஊராகிய மணமேற்குடியை அடைந்து, அங்கே எழுந்தருளியிருந்தார். இருக்குநாளிலே அதற்குச் சமீபத்திலுள்ள சிவஸ்தலங்களுக்குப் போய்ச் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு திரும்பிவிட்டார். சிலநாளாயினபின், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சோழநாட்டுக்கு மீண்டு செல்லுதற்குத் திருவுளங்கொண்டருள, பாண்டியரும் மாதேவியாரும் குலச்சிறைநாயனாரும் அவருடைய திருவடிகளைப் பிரியலாற்றுமையால் அவருடன் போதற்கு ஒருப்பட்டார்கள். பிள்ளையார் அதுகண்டு, "அன்பர்களே, நீங்கள் நம்முடைய சொல்லை மறுமல், சைவசமயத்தைப் பரிபாலனஞ் செய்துகொண்டு உங்கள் நகரத்திலேயே இருங்கள்" என்று அருளிச்செய்தார். அவர்கள் பிள்ளையாருடைய ஆஞ்ஞையை மறுத்தற்கு அஞ்சி, அவருடைய ஸ்ரீ பாதங்களை நமஸ்கரித்து, அநுமதி பெற்றுத் திரும்பி மதுரையை அடைந்து, அவரை ஒருபொழுதும் மறவாத சிந்தையுடன் சைவசமயபரிபாலனஞ் செய்துகொண்டிருந்தார்கள்.

பிள்ளையார் திருக்கூட்டத்தோடு பாண்டிநாட்டைக் கடந்து, சோழநாட்டை அடைந்து, திருக்களர், திருப்பாதாளீச்சரம் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு, முள்ளிவாய்க்கரையை அணைந்தார். அங்கே ஆறு மிகப் பெருகுதலால், நீர்வாணர்கள் ஓடத்தை ஓடக்கோல் நிலையில்லாமை பற்றிக் கரையிலே நிறுத்திப் போய்விட்டார்கள். பிள்ளையார் அதுகண்டு, கரையிலே எழுந்தருளி நின்றபோது, திருக்கொள்ளம்பூதூர் எதிரே தோன்ற, அங்கே சென்று சுவாமிதரிசனஞ் செய்தற்குத் திருவுளம் விரும்புதலால், அதிசீக்கிரம் ஓடத்தின் கட்டை அவிழ்த்து, சிவனடியார்களை அதிலே

ஏற்றி, நாவலமே கோலாக அதன்மேல் நின்று, "கோட்டமே கமழும்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார். பரம சிவனுடைய திருவருளினால் ஓடஞ் சென்று மற்றக்கரையை அடைந்தது. பிள்ளையார் அடியார்களுடனே இறங்கித் திருக் கோயிலை அடைந்து சுவாமிதரிசனஞ் செய்து, அங்கே எழுந்தருளியிருந்தார்.

சிலநாளாயினபின், வாதிலே அக்கினியில் வேவாத திருப்பதிகத்தையுடைய கடவுளை வணங்க விரும்பி, திருக் கொள்ளம்பூதூரை நீங்கி, திருநள்ளாற்றை அடைந்து, சுவாமிதரிசனஞ்செய்து, "பாடகமெல்லடி" என்னும் விரு வுரைப்பதிகம் பாடி, சிலநாள் அங்கெழுந்தருளியிருந்தார்.

பின்பு பிள்ளையார் திருத்தெளிச்சேரியை அடைந்து சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு செல்லும்போது, பௌத்தர் கள் இருக்கின்ற போதிமங்கை சமீபிக்க; அதனை அறிந்த அடியார்களெல்லாரும் கடலொலிபோலச் சங்கு தாரை முத லிய பலவகைப்பட்ட வாத்தியங்களையும் முழக்கி ஆரவாரித் தார்கள். முத்துச்சின்னங்களெல்லாம் "பரசமயகோளரி வந் தார்" என்று ஊதின. பௌத்தர்கள் ஒருங்கு கூடி, பிள்ளையார் தங்கள் எல்லையில் எழுந்தருளும்போது அடியார்கள் எடுத்த ஆரவாரத்தினாலும் திருச்சின்னவொலியினாலும் பொறுமை கொண்டு, தங்கள் சமயநூலிலே மகாபாண்டித்தியமுள்ள புத்தநந்தி முதலியோருக்குச் சொன்னார்கள். அவர்களுடைய சொல்லும் பிள்ளையார்முன் வருகின்ற திருச்சின்னவொலி யும் அடியார்களுடைய ஆரவாரமும் காதினுள்ளே புகுத்திய நாராசம்போலப் புகுந்தபோது, புத்தநந்தி மிகக் கோபித்து எழுந்து, பௌத்தர்கூட்டஞ் சூழச்சென்று, சிவனடியார்களை அணைந்து, "நீங்கள் எங்களைத் தருக்கத்தில் வென்றண்மை வெற்றிச்சின்னங்கள் ஊதல் வேண்டும்" என்று கோபங் கொண்டு விலக்கினன். அப்பொழுது திருத்தொண்டர்கள் மிகக்கோபித்து "இந்தக் கொடுஞ்செயலுக்கு இவர்களைக் கொல்லாது பொறுக்கின், இவர்கள் தங்கள் நிலையெடுப்பார் கள்" என்று முத்துச்சிவிகைமேல் எழுந்தருளியிருக்கின்ற திருஞானசம்பந்தப்பிள்ளையாரை அடைந்து வணங்கி, நிகழ்ந்

தனை விண்ணப்பஞ்செய்தார்கள். பிள்ளையார் "நாம் வரு மிடத்திலே இது நமக்கு அழகியதாய் இருக்கின்றது. புத்த நந்தி வாதுசெய்யப் புகுமிடத்து அவனுடைய பொய்ம்மேற் கோளை அறிகின்றோம்" என்று அருளிச்செய்தார். அதற்கு முன்னே, தேவாரத்திருமுறை எழுதும் அடியவர் பொரு மல், தேவாரத்திலே "புத்தர் சமண்கழுக்கையர் போய்கோ ளாச்—சித்தத் தவர்க டெளிந்து தேறின—வித்தக நீறணி வார்வி னைப்பகைக்—கத்திரமாவன வஞ்சே ழுத்துமே" என் னுந் திருப்பாட்டை ஓதி, "இப்புத்தனுடைய சிரம் உருண்டு விழும்படி இடியிடித்து விழக்கடவது" என்று சொல்லியரு ளினர். உடனே இடியிடித்துப் புத்தநந்தியுடைய சரீரத்தை யும் தலையையும் வேருகக் கூறுபடுத்தியது. அது கண்ட பௌத்தர் கூட்டம் அஞ்சிக் குலைந்தோடிற்று. பௌத்தர்க ளுடைய நிலைமையையும், புத்தநந்தியுடைய சரீரமும் தலை யும் அற்று விழும்படி தமிழ்வேதலேகர் தேவாரத்திருப் பாட்டினல் அறுத்ததையும் கண்ட அடியார்களெல்லாரும் ஓடிப்போய், பிள்ளையாருக்கு விண்ணப்பஞ்செய்தார்கள். பிள் ளையார் "அங்ஙனம் எதிர்ந்த விலக்கை நீக்கும் முறை அது வேயாம். நீங்களெல்லீரும் ஹரஹர என்று ஆரவாரியுங்கள்" என்று அருளிச்செய்ய; அவ்வொலி மிக்கோங்கிற்று. அஞ்சி ஓடிய பௌத்தர்களெல்லாரும் ஆச்சரியங்கொண்டு, மீண்டும் ஒருங்குகூடி, "இச்செய்கை வஞ்சனையோ அவர்களுடைய சைவசமயத்து உண்மையோ" என மருண்டு, "நீங்கள் எங்க ளோடு மந்திரவாதமின்றி, எதிர்ந்து தருக்கம் பேச வாருங் கள்" என்று, தங்களுக்குள்ளே தலைவனுகிய சாரிபுத்தனையே முன்கொண்டு, பின்னும் வந்தார்கள். பிள்ளையார் அதைக் கேட்டுத் திருவுளமிகமகிழ்ந்து, விரைந்து சென்று, முத்துச் சிவிகையினின்றும் இறங்கி, ஒரு சத்திரமண்டபத்தின்மேல் ஏறி, சைவர்கள் சூழ வீற்றிருந்துகொண்டு, திருமுன்னே நின்ற அடியார் சிலரை நோக்கி, "தருக்கம் பேசவிரும்பிய பௌத்தர்களை இங்கே அழையுங்கள்" என்று ஆஞ்ஞாபித் தருளினர். அடியார்கள் அவ்வாஞ்ஞையைச் சிரமேற்கொ ண்டு, பௌத்தர் கூட்டத்தை அணைந்து, "வேதசிவாகமாதி சமஸ்த சாஸ்திரங்களையும் ஓதாதுணர்ந்தவரும், முத்தமிழ்

வேந்தரும், பரசமயகோளரியும், எங்கள் பரமாசாரியரு மாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் உங்கள் விருப்பத் தின்படி வாது செய்தற்கு உங்களை மகிழ்ச்சியோடும் அழைக் கின்றார். வாருங்கள்" என்றார்கள். அது கேட்ட சாரிபுத் தன் பௌத்தர்களோடு வந்து, மண்டபத்திலே பிள்ளையா ருக்குச் சமீபத்தில் நின்றான். அப்பொழுது திருச்சின்னத் தைத் தடித்த புத்தநந்தியினுடைய சிரசைப்பொடிபடுத்திய தமிழ்வேதலோகர் பிள்ளையாருடைய திருவடிகளை வணங் கித் துதித்து, சாரிபுத்தனோடு வாதுசெய்து, பௌத்தசம யத்தை நிராகரணம்பண்ணி, அவனை வென்று, பிள்ளையா ருடைய திருவடிகளை நமஸ்கரித்தார். பௌத்தர்கள் தோற்று, தங்கள் சமயம் பொய்ந்நெறியென்று கண்டு, பிள்ளையாரை விழுந்து நமஸ்கரித்தார்கள். பிள்ளையார் சைவசமயமே சற் சமயமென்பதை அவர்களுக்கு ஐயந்திரிபற உணர்த்தி யருள; அவர்கள் அவருடைய கருணைநோக்கம் பெற்றமை யால், அதனை இனிதுணர்ந்து, அவரை வணங்கி, சைவர்க ளாயினர்கள்.

பிள்ளையார் அவ்விடத்தினின்று நீங்கி, திருக்கடவூ ரிலே சென்று, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, அங்கே எழுந்தருளியிருந்தார். சிலநாளாயினபின், திருநாவுக்கரசு நாயனர் திருப்பூந்துருத்தியில் இருத்தலைக் கேள்வியுற்று, அவரைக் காணவிரும்பிப் புறப்பட்டுச் சென்று, திருப்பூந் துருத்திக்குச் சமீபித்தார். அதைத் திருநாவுக்கரசுநாயனர் கேட்டு, மனமகிழ்ந்து, அவரை எதிர்கொண்டு வணங்கும்படி சென்று, அவர் வரும் எல்லையை அடைந்து, திருச்சின்னத் தின் ஓசையைக் கேட்டு அவரைத் தரிசிக்கும்படி சூழ்ந்த சனங்களுடைய நெருக்கத்தினாலே, தம்மை ஒருவரும் காணுதபடி உட்புகுந்து, அவர் ஏறிவரும் முத்துச்சிவிகை யைத் தாங்குகின்றவர்களோடு தாமும் ஒருவராய்த் தாங்கிக் கொண்டு வந்தார். பிள்ளையார் திருப்பூந்துருத்திக்கு மிகச் சமீபித்தவுடனே "அப்பர் எங்குற்றார்" என்று வினவ; அதைக் கேட்ட அப்பமூர்த்தி "அடியேன் தேவரீரைத் தாங்கிவரும் பெருவாழ்வைப் பெற்று இங்குற்றேன்" என்

ரூர். உடனே பிள்ளையார் சிவிகையினின்றும் இறங்கி, மனப் பதைப்போடும் அப்பமூர்த்தியை வணங்க; அப்பமூர்த்தியும் தம்மை அவர் வணங்குதற்கு முன் தாம் அவரை வணங்க; அது கண்ட அடியார்களெல்லாரும் வணங்கி ஆனந்தகோஷஞ் செய்தார்கள். பிள்ளையார் அப்பமூர்த்தியோடும் திருப்பூந்துருத்தியிற் சென்று, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்தார். பிள்ளையார் தாம் பாண்டிநாட்டிற் சென்று, சமணர்களை வாதில் வென்றதையும், பாண்டியனுடைய கூனை நிமிர்த்ததையும், அந்நாடெங்கும் விபூதியை வளர்த்ததையும், மங்கையர்க்கரசியார் குலச்சிறைநாயனார் என்கின்ற இருவருடைய பெருமையையும், அப்பமூர்த்திக்குச் சொல்லியருளினர். அப்பமூர்த்தி தாந் தொண்டைநாட்டுக்குச் சென்று அங்குள்ள சிவஸ்தலங்களை வணங்கியதைப் பிள்ளையாருக்குச் சொல்லியருளினர். அப்பமூர்த்தி விடைபெற்றுக்கொண்டு; பாண்டிநாட்டுக்குப் புறப்பட; பிள்ளையார் காவேரிக்கு வடகரையிற் சென்று திருநெய்த்தானம், திருவையாறு, திருப்பழனம் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு, சீர்காழியை அடைந்து, சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம் பாடிக்கொண்டிருந்தார்.

நெடுநாட் சென்றபின், பிள்ளையார் தொண்டைமண்டலத்துக்கு யாத்திரை செய்யத் திருவுளங்கொண்டு, தோணியப்பரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, அடியார்களோடு புறப்பட்டு, தம்மோடு உடன்வருதற்குத் துணிந்த தந்தையாராகிய சிவபாதவிருதயரை நோக்கி, "அப்பரே, நீர் இங்கேதானே யாகஞ்செய்து சிவதரிசனம் பண்ணிக்கொண்டிரும்" என்று சொல்லிச் சென்று, சிதம்பரம், திருத்தினைநகர், திருமாணிகுழி, திருப்பாதிரிப்புலியூர், திருவடிகூர், திருவக்கரை, திருவிரும்பைமாகாளம், திருவதிகை, திருவாமாத்தூர், திருக்கோவலூர், திருவறையணிநல்லூர், திருவண்ணாமலை என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு, தொண்டைநாட்டை அடைந்தார். அங்கே திருவோத்தூரிற் சென்று, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார். இருக்குகாளிலே, அந்தத் தலத்திலே உள்ள சிவனடியார் ஒருவர்

வந்து, பிள்ளையாரை வணங்கி நின்று; பரசமயங்களைப் பாற்றிச் சைவஸ்தாபனஞ் செய்தருளும் எம்பெருமானே மெய்க்கடவுளாகிய பரமசிவனுக்கு அடியேன் ஆக்கும் பணிகளெல்லாம் மிக உயர்வாக வளர்ந்தும், ஆண்பனைகளாகி, காயாவாயின. அது கண்ட சமணர்கள் "நீர் ஆக்கும் ஆண்பனைகளெல்லாவற்றையும் காய்க்கப்பண்ணுதல் கூடுமோ" என்று நகைசெய்து இகழ்ந்து சொன்னார்கள். "தேவரீர் திருவருள் செய்யவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தார். பிள்ளையார் அது கேட்டுப் பரிந்தருளி, எழுந்து விரைந்து திருக்கோயிலிற் சென்று, சுவாமியை வணங்கி, "பூத்தேர்ந்தாயன" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். அத்திருப்பதிகத்தின் திருக்கடைக்காப்பிலே "குரும்பை யாண்பனை யீன்குலையோத்தூர்" என்று அருளிச்செய்தார். அதனால் ஆண்பனைகளெல்லாம் குரும்பைக்குலைகளையுடையனவாய்ப் பெண்பனைகளாயின. அதனைக் கண்டவர்களெல்லாரும் ஆச்சரியங்கொண்டார்கள். பிள்ளையார் ஆண்பனைகள் காய்த்துப் பழுக்கும்படி அன்பர்க்கு அருள்செய்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு அங்கே எழுந்தருளியிருந்தார். சமணர்கள் பரசமயகோளரியாராகிய பிள்ளையாருடைய செய்கையைக் கண்டு, அந்நாட்டைவிட்டு ஓடினார்கள். அவர்களிற்சிலர் பரமசிவனே மெய்க்கடவுள் என்று துணிந்து, சைவர்களாகி உய்ந்தார்கள். பிள்ளையாருடைய திருவாக்கிலே பிறத்தலால், அப்பனைகளெல்லாம் தங்கள் காலத்தைக் கழித்து, ஒழியாப்பிறவியை ஒழித்துச் சிவத்தை அடைந்தன.

பிள்ளையார், சிலநாளாயினபின், அத்திருப்பதியை நீங்கி, திருமாகறல், திருக்குரங்கணின்முட்டம் என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு, காஞ்சிபுரத்தை அடைந்தார். அங்கே திருவேகம்பம், திருக்கச்சிநெறிக்காரைக்காடு, திருவனேகதங்காவதம், திருக்கச்சிமேற்றளி என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு அங்கெழுந்தருளியிருந்தார். பின்பு புறப்பட்டு, திருமாற்பேறு, திருவல்லம், திருவிலம்பயங்கோட்டூர், திருவிற்கோலம், திருஊறல் முதலாகிய தலங்களை வணங்கிக்கொண்டு, பழையனூர்த் திருவாலங்காட்டுக்குச் சமீபத்திலே

போனார். அது காரைக்காலம்மையார் திருத்தலையாலே நடந்த திருப்பதியாதலால், அதை மிதிக்க அஞ்சி, அதற்குச் சமீபத்திலே உள்ள ஓரூரிலே அன்றிரவு பள்ளிகொண்டருளினார். திருவாலங்காட்டில் எழுந்தருளியிருக்குங் கடவுள் அர்த்தயாமத்திலே அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "நம்மைப் பாடுதற்கு மறந்தனையோ" என்று அருளிச்செய்ய; உடனே பிள்ளையார் விழித்து எழுந்து, திருவருளைத் துதித்து, "துஞ்சவருவாரும்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். மற்றநாள் உதயத்திலே, திருக்கூட்டம் தம்மை அணைந்தபொழுது, இரவிலே நிகழ்ந்ததை அவர்களுக்குச் சொல்லியருளினார். பின்பு திருப்பாசூர், திருவெண்பாக்கம், திருக்காரிகரை முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு, திருக்காளத்திமலைக்குச் சமீபித்து, அதன்மேலே கண்ணப்பநாயனாருடைய திருத்தொண்டைச் சிறப்பித்து "வானவர்கடானவர்கள்" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு சென்று, மலைமேல் ஏறி, சந்நிதானத்தை அடைந்து, சுவாமியை வணங்கினார். அவ்வணக்கத்தாற் பெற்றபயனைக் காண்பார் போல அன்புருவமாகிய கண்ணப்பநாயனாரைக் கண்டு, ஆனந்தவருவி சொரிய விழுந்து நமஸ்கரித்தார். பின் மலையினின்றும் இறங்கி, ஒரு திருமடத்தில் எழுந்தருளியிருந்தார். காலந்தோறுந் திருக்காளத்தியப்பரை வணங்கிக்கொண்டு அங்கே எழுந்தருளியிருக்குநாளிலே வடதிசையிலும் மேற்றிசையிலும் தமிழ்மொழிவழக்கு இன்மையால், உத்தரகைலாசம், திருக்கேதாரம், திருக்கோகர்ணம், திருப்பருப்பதம், இந்திரநீலபருப்பதம் முதலிய தலங்களை அங்கிருந்தே வணங்கித் திருப்பதிகம் பாடினார். சிலதினங்கழிந்தபின், திருக்காளத்தியை நீங்கி, திருவேற்காடு, திருவலிதாயம் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு திருவொற்றியூரை அடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார். அது நிற்க.

திருமயிலாப்பூரிலே, வைசியர்குலத்திலே, சிவபத்தி அடியார்பத்திகளிற் சிறந்தவரும், பரசமயங்களைப் பாற்றல் வேண்டும் என்னுஞ் சிந்தையுடையவரும், பெருஞ்செல்வரு

மாகிய சிவநேசரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் திரு ஞானசம்பந்தமூர்த்திநாயனர் ஞானப்பால் உண்டமையையும், உலகம் உய்யும்பொருட்டுத் திருப்பதிகங்களிலே ஆரு கதத்தையும் பௌத்தத்தையும் இழித்துரைத்தலையும், சிவ னடியார்கள் சொல்லக் கேள்வியுற்று, மன மிக மகிழ்ந்து, அவருடைய திருவடிகளிலே பேரன்புடையராகி, அகோ ராத்திரம் அவருடைய திருவருட்டிறங்களையே பேசல் கேட்டலாகிய தொழிலினராயினர். அவர் பெருஞ்செல்வ முமம், பெருங்கீர்த்தியும் உடையராயினும், பிள்ளைப்பேறின் மையால் மிகக் கவலையுற்று, சிவபூசை மாகேசுரபூசைகள் செய்து, ஒரு பெண்பிள்ளையைப் பெற்றார். அப்பெண் செந் தாமரையாசனியாகிய இலக்குமிபோல மகா சௌந்தரியம் உடையளாதலால், அவளுக்குப் பூம்பாவை என்னும் பெயர் கொடுக்கப்பட்டது. அவளுக்குப் பதும்பைப்பருவம் வந்த பின், தந்தையார் அவளுடைய குணாதிசயங்களைக்கண்டு வியப் புற்று, மனமகிழ்ந்து, "இவளை விவாகஞ்செய்பவரே என்னு டைய அளவிறந்த திரவியங்களுக்கு உரியவர்" என்றார். அந் நாட்களிலே, திருஞானசம்பந்தப்பிள்ளையார் பாண்டிநாட்டிற் சென்று செய்தருளிய திருவருட்டிறங்களெல்லாவற்றையும் அறிந்தவர்கள் வந்து, சிவநேசருக்குச் சொன்னார்கள். சிவ நேசர் அதைக்கேட்டு மனமகிழ்ந்து, அவர்களெல்லாருக்கும் அளவிறந்த திரவியங்களைக் கொடுத்து, பிள்ளையாரைத் திக்கு நோக்கி நமஸ்கரித்து, எழுந்து நின்று, தம்முடைய சுற்றத் தார்கள் சமஸ்தருங்கேட்க; "அடியேன் என்னுடைய புத்திரி யாகிய பூம்பாவையையும் திரவியங்களையும் என்னையும் திரு ஞானசம்பந்தமூர்த்திநாயனருக்குக் கொடுத்துவிட்டேன்" என்று சொல்லிப் பேரானந்தம் அடைந்தார். ஒருநாள், பூம் பாவை சேடியரோடு கன்னிமாடத்துக்குப் பக்கத்தில் இருக் கின்ற பூஞ்சோலையிற் சென்று பூக்கொய்யும்பொழுது, ஒரு பாம்பு மல்லிகைப்பந்தரிலே மறைந்து வந்து, அவளுடைய விரலிலே காளி காளாத்திரி யமன் யமதூதி என்னும் நான்கு தந்தங்களும் எலும்பிலே தாவக்கடித்து, நஞ்சை உகுத்தி, மேலே படத்தை விரித்து நின்றாடி, அடங்கிற்று. பூம்பாவை மயங்கி விழ; சேடியர்கள் அக்கருவை வவிக்தாங்கி, கன்னி

மாடத்தினுள்ளே கொண்டுபோனார்கள். சிவநேசர் சுற்றத்தாரோடு மனங்கலங்கி அழுதார். விஷவைத்தியர்கள் அநேகர் தனித்தனியே மந்திரதியானபாவகங்கள் செய்தும், ஏண்ணிறந்த ஔஷதங்களைப் பிரயோகித்தும், விஷம் நீங்காமல் ஏழு வேசமும் முறையே பொங்கித் தலைக்கொண்டது. ஆவி தங்குதற்கு உரிய குறிகள் இல்லாமையால் விஷவைத்தியர்கள் கைவிட; சுற்றத்தார்கள் அவண்மேல் விழுந்து, அலறி அழுதார்கள். சிவநேசர் ஒருவாறு தெளிந்து, "இந்த விஷத்தை நீக்கினவர்களுக்கு என்னுடைய அளவிறந்த திரவியங்களைக் கொடுப்பேன்" என்று பறையறைவித்தார். மூன்றுநாளளவும் அரசரிடத்துள்ளோர் முதலாகிய மந்திரவாதிகள் சமஸ்தரும் வந்து, தங்கள் செய்கையினுலே தீராமையால் திரும்பிவிட்டார்கள். சிவநேசர் அதுகண்டு மயங்கி, பின்பு "இவளைப் பிள்ளையாருக்கு என்று சொல்லியதனால் நான் தூன்புற வேண்டுவதில்லை" என்று துன்பநீங்கி, "பிள்ளையார் வருமளவும் இவ்வுடலைத் தகனஞ்செய்து, எலும்பையும் சாம்பரையும் சேமித்து வைப்பேன்" என்று தணிந்து, அப்படியே தகனஞ்செய்து, எலும்பையும் சாம்பரையும் ஒரு குடத்தில் இட்டு, கன்னிமாடத்திலே வஸ்திரஞ்சாத்தி ஆபரணங்கள் அணிந்து, பஞ்சணைமேல் வைத்தார். தினந்தோறும் தலைமல் மஞ்சனம், மாலை, சந்தனம், அன்னம், விளக்கு முதலிய வைகளை அமைத்தார். அதனை அறிந்த யாவரும் வியப்புற்றார்கள்.

இப்படி நிகழுநாளிலே, "பிள்ளையார் திருக்கூட்டத்தோடு திருவொற்றியூரில் எழுந்தருளிவந்து சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருக்கின்றார்" என்று அவ்வூர்வர்கள் பலர் வந்து சிவநேசருக்குச் சொன்னார்கள். அவர் அவர்கள் எல்லாருக்கும் வஸ்திரங்களையும் பொன்களையும் கொடுத்து, பெருங்களிப்புடையராகி, திருவொற்றியூர் வரைக்கும் நடைப்பந்தல் இட்டு, வஸ்திரங்களால் விதானித்து, கமுகுகளும் வாழைகளும் நாட்டி, தோரணங்கள் நிரைத்து, கொடிகள் கட்டி, மாலைகள் தூக்கி அலங்கரிப்பித்தார். பின்பு "திருவொற்றியூரிற் சென்று திருஞானசம்பந்தப்பிள்ளையாருடைய

திருவடிகளே வணங்குவேன்'' என்று எழுந்து, அத்திருமயிலாப்பூரில் இருக்கின்ற சிவனடியார்களும் உடன்செல்லச் சென்று, திருவொற்றியூருக்குச் சமீபித்தார். அப்பொழுது பிள்ளையாரும் திருவொற்றியூரை அகன்று, திருமயிலாப்பூரை நோக்கி, அடியார் கூட்டத்தோடும் எழுந்தருளிவந்தார். சிவநேசரும் சிவனடியார்களும் அடியார்கூட்டத்தைத் தூரத்திலே கண்டு, சிவகுமாரராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் எழுந்தருளிவருகின்றார் என்று அளவில்லாத மகிழ்ச்சிகொண்டு, விழுந்து நமஸ்கரித்தார்கள். பிள்ளையார் முத்துச்சிவிகையினின்றுமிறங்கி அவர்களெதிரே தொழுது கொண்டெழுந்தருளி, சிவநேசருடைய செய்கையை அடியார்கள் சொல்லக் கேட்டு, திருமயிலாப்பூரை அடைந்தார்.

ஆளுடையபிள்ளையார் சிவநேசரிடத்து நிகழ்ந்ததைத் திருவுளத்தடைத்து, அவருடைய கருத்தை முற்றுவித்தற்கும் ஆருகதசமயத்தையும் பௌத்தசமயத்தையும் அழித்தற்கும் திருவுளங்கொண்டு, கபாலீச்சரம் என்னும் ஆலயத்திற் பிரவேசித்து, சிவபெருமானை வலஞ்செய்து, நமஸ்கரித்து, ஸ்தோத்திரஞ்செய்துகொண்டு, திருக்கோயிலுக்குப் புறத்திலே வந்து, சிவநேசரை நோக்கி, ''உம்முடைய மகளினது எலும்பை நிறைத்த குடத்தைத் திருக்கோயிற்புறமதிற்றிருவாயிலிலே கொண்டுவாரும்'' என்று அருளிச்செய்தார். சிவநேசர் பெருங்களிப்புடையராகி, விழுந்து நமஸ்கரித்து எழுந்து, தம்முடைய வீட்டை அடைந்து, கன்னிமாடத்திலே புகுந்து; வெந்த சாம்பரும் எலும்பும் நிறைந்த குடத்தை எடுத்து, மூடுகின்ற இரத்தினச் சிவிகையிலுள்ளே வைத்து, சேடியர்கள் சூழ்ந்து செல்லும்படி, எடுப்பித்துக்கொண்டு வந்து, திருக்கோபுரத்துக்கு எதிரே சிவிகையை நீக்கி அக்குடத்தை எடுத்து, சிவலிங்கப்பெருமானுக்கு அபிமுகத்திலே வைத்து, நமஸ்காரம் பண்ணினர். திருமயிலாப்பூரில் இருக்கின்றவர்களும், மற்றையூர்களில் உள்ளவர்களும், சமணர் முதலாகிய புறச்சமயிகளும், பார்க்கும்பொருட்டுப் பக்கத்திலே வந்து சூழ்ந்தார்கள். தேவர்கள் முதலியோர் ஆகாயத்திலே வந்து நெருங்கினர்கள். பசுகரணமின்றிச் சிவ

கரணமுடைய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சர்வான் மாக்களுக்கும் உறுதிபயப்பித்தற்பொருட்டு, அடியார் திருக் கூட்டம் பக்கத்திலே தம்மைச் சூழ்ந்து வரும்படி திருக் கோபுரவாயிலின் நேரே வந்து, பூம்பாவையினது அத்தி யிருக்கின்ற மட்குடத்தைக் கண்டு, சுத்த சாட்குண்ணிய பரி பூரணராகிய பரமசிவனுடைய திருவருளின் பெருமையைச் சிந்தித்து, இப்பூமியில் இறந்தவர்களுடைய எலும்பைப் பின்னும் நன்னெறிப்படுத்த அந்நன்மை அவ்வெலும்போடு தொடர்ச்சியாகும் என்று, திருவருணோக்கினாலே "பூம்பா வாய்" என்று விளித்து, பூமியிலே மானுடப்பிறப்பு எடுத்த வர்கள் பெறும்பயன் அன்புடனே சிவபெருமானுடைய அடி யார்களைத் திருவமுதுசெய்வித்தலும், சைவாகமவிதிப்படி செய்யப்படுகின்ற அவருடைய திருவிழாவைத் தரிசித்து ஆனந்தம் அடைதலுமே என்பது சத்தியமாயின், நீ இவ் வுலகர்முன் வருவாய்" என்று; "மட்டிட்டபுன்னை" என் னுந் திருப்பதிகத்தை எடுத்தருளினார். அதில் அருளிச்செய் யப்பட்ட "போதியோ" என்னுந் திருவாக்காகிய அமிர்தம் அவ்வங்கத்திலே பொருந்த; அது குடத்தினுள்ளே சீர மாய்ப் பரிணமித்தது. பூம்பாவை முதற்றிருப்பாட்டிலே வடிவுபெற்று, வேறெட்டுப்பாட்டிலே பன்னிரண்டு வயச டைந்து, குடத்தினுள் அடங்கியிருந்தனள். பின்பு பிள்ளை யார், சமணர்களும் பௌத்தர்களும் இச்செய்கையை ஏற்ற தன்று என்று எடுத்துச் சொல்வார்கள் என்னுங் கருத்தினாற் பத்தாந்திருப்பாட்டை அருளிச்செய்தார். அப்பொழுது பூம் பாவை தன்கை வெளியே தோன்ற, குடமுடைந்து எழுந் தாள். அது கண்டு பிள்ளையார் திருக்கடைக்காப்புச் சாத்தி யருளினார். அங்ஙனம் எழுந்து நின்ற பூம்பாவையைக் கண் டவர்களெல்லாரும் அற்புதம் எய்தினர்கள். சிவனடியார்க ளெல்லாரும் ஹர ஹர என்று சொல்லும் ஓசை மிக்கோங் கிற்று. தேவர்களும் முனிவர்களும் திருவருட்சிறப்பை நோக்கி, புஷ்பமாரி பொழிந்தார்கள். பூமியில் உள்ளவர்கள் "இது எம்பெருமானுடைய பெருங்கருணையே" என்று, கைகள் சிரசின்மேல் ஏறிக்குவிய ஆனந்தபாஷ்பராய் வீழ்ந் தார்கள். அவ்வற்புதத்தைக் கண்ட சமணர்கள் முதலிய

புறச்சமயிகளெல்லாரும் ஏங்கித் தள்ளாடி விழுந்தார்கள். எண்ணில்லாத வயசையுடைய பிரமதேவர், தம்மாலே படைக்கப்பட்ட திலோத்தமையினிடத்தே, அவளினது அழகின் வெள்ளத்தை நான்குமுகத்தினாலே கண்டார்; பதினாறு வயசையுடைய திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரோ, அத் திலோத்தமையினும் பார்க்க மிகுந்த சௌந்தரியத்தை யுடைய தம்மாலே படைக்கப்பட்ட பூம்பாவையினிடத்தே, பரமசிவனது பெருங்கருணை வெள்ளத்தை ஆயிரமுகத்தி னாலே கண்டார். பூம்பாவையைக் கண்ட தந்தையாராகிய சிவநேசர் பிள்ளையாருடைய திருவடிகளிலே விழுந்து நமஸ் கரித்தார். பூம்பாவை சிவபெருமானை வணங்கி, பின்பு பிள்ளையாரை நமஸ்கரித்து எழுந்து நின்றாள்.

பிள்ளையார் சிவநேசரை நோக்கி, "இனி உம்முடைய புத்திரியை வீட்டிற்குக் கொண்டுபோம்" என்று திருவாய் மலர்ந்தருளினர். சிவநேசர் பிள்ளையாருடைய திருவடிகளை வணங்கித் துதித்து, "சுவாமீ, அடியேன் அருமையாகப் பெற்ற இப்புத்திரியைத் தேவரீர் திருமணஞ்செய்தருளல் வேண்டும்" என்று பிரார்த்திக்க; பிள்ளையார் அவரைநோக்கி, "நீர் பெற்ற பெண் விஷத்தினால் இறந்தபின், நாம் சர் வான்மாக்களும் உய்யும்படி அவர்களுக்குச் சிவபெருமா னது திருவருண்மகிமை விளங்கும்பொருட்டு உற்பவிப்பித்த மையால் இவ்வார்த்தை தகாது" என்று மறுத்தருளினர். அது கேட்டுச் சிவநேசரும் அவர் சுற்றத்தார்களும் மயங்கி, பிள்ளையாருடைய திருவடிகளிலே விழுந்து அழ; பிள்ளையார் அவர்களுடைய பெருந்துயரம் தணியும்பொருட்டு, வேத சிவாகமத்துணிவை அவர்களுக்கு எடுத்துப் போதித்தருளி னர். அதுகேட்ட சிவநேசரும் சுற்றத்தார்களும் கவலைநீங்கி னர்கள். பிள்ளையார் திருக்கோயிலினுள்ளே எழுந்தருளினர். சிவநேசர் "பூம்பாவையை வேறொருவருக்கும் விவாகஞ் செய்து கொடுப்பதில்லை" என்று கொண்டுபோய், கன்னிமா டத்தில் வைத்தார். அவள் சிவத்தை அடைந்தனள். திருக் கோயிலினுள்ளே எழுந்தருளிய பிள்ளையார் சுவாமியை

வணங்கி, திருவருளைத் துதித்து, திருப்பதிகம் பாடிக் கொண்டு, புறம்போந்து எழுந்தருளியிருந்தார்.

சிலநாளாயினபின், பிள்ளையார் திருமயிலாப்பூரை அகன்று, அங்குள்ள திருத்தொண்டர்கள் விடை கொள்ள, சிவனேசருக்கு வருத்த நீங்கும்படி மதுரமொழி அருளி, விடை கொடுத்துச் சென்று, திருவான்மியூர், திருவிடைச்சுரம், திருக்கழுக்குன்று, திருவச்சிறுபாக்கம், திருவரசிலி, திருப்புறவார் பனங்காட்டூர் முதலாகிய தலங்களை வணங்கிக்கொண்டு, சிதம்பரத்தை அடைந்து, காலந்தோறும் சபாநாயகரைத் தரிசனஞ்செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார். சிவபாதவிருதயரும் சீர்காழியில் உள்ள மற்றைப்பிராமணர்களும் அடியார்களும் "பிள்ளையார் சிதம்பரத்தில் வந்து எழுந்தருளியிருக்கின்றார்" என்று கேள்வியுற்று, வந்து சேர்ந்தார்கள். பிள்ளையார் அவர்களோடு சபாநாயகரை வணங்கி, அருள்பெற்று, சிதம்பரத்தை அகன்று, சீர்காழியை அடைந்து, காலந்தோறும் தோணியப்பரை வணங்கிக்கொண்டு எழுந்தருளியிருந்தார். இருக்குநாளிலே, முருகநாயனர், திருநீலநக்கநாயனர் முதலாகிய திருத்தொண்டர்கள் சுற்றத்தார்களோடு சீர்காழியில் வந்து, பிள்ளையாரைச் சேவித்துக்கொண்டிருந்தார்கள்.

சிவபாதவிருதயரும் அவர் சுற்றத்தார்களும் ஒருங்கு கூடி, "திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் திருக்கல்யாணஞ் செய்தருளுதற்கு இதுவே பருவம்" என்று எண்ணி, பிள்ளையாரை அணைந்து, "சுவாமீ, தேவரீர் வைதிகச்சடங்கைப் பிறருக்குக் காட்டும்பொருட்டு, ஒரு கன்னியை விவாகஞ் செய்தருளல் வேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். பிள்ளையார் "அது கூடாது" என்று மறுத்தருள; பிராமணர்கள் பின்னுங் கைதொழுது, "தேவரீர் இப்பூமியின்கண்ணே வேதநெறியை ஸ்தாபிக்கப் புகுந்தீர். ஆதலால் அவ்வேதவிதிப்படி திருமணஞ்செய்தருளுதற்குத் திருவுளஞ் செய்தல் வேண்டும்" என்றார்கள். பிள்ளையார் வேதநெறி நிலைப்படும் பொருட்டு அதற்கு உடன்பட்டருளினர். அது கண்ட தந்தையாரும், மற்றைப்பிராமணர்களும் "இது சிவபெருமானு-

டைய திருவருள்'' என்று உருகி மனமகிழ்ந்து, ''திருநல் லூரிலிருக்கின்ற பிராமணர்கள் நம்பாண்டார்நம்பி என்பவரு டைய புத்திரியே திருஞானசம்பந்தப்பிள்ளையாருக்கு மணவி யாதற்குத் தகுதியுடையவள்'' என்று எண்ணினார்கள். தந் தையாராகிய சிவபாதவிருதயர் பிராமணர்களோடும் திருத் தொண்டர்களோடும் விவாகம் பேசுதற்குத் திருநல்லூரைச் சமீபித்து, அங்குநின்று சுற்றத்தாரோடு வந்து தம்மை எதிர் கொண்டு வணங்கிய நம்பாண்டார்நம்பியோடு அவர்வீட்டை அடைந்தார். நம்பாண்டார்நம்பி சிவபாதவிருதயரையும் மற் றையோரையும், உபசரித்து, ''நீங்கள் இங்கே எழுந்தருளி வந்தது என்னே'' என்று வினவ; அவர்கள் நம்பாண்டார்நம் பியை நோக்கி, ''நாங்கள் திருஞானசம்பந்தப்பிள்ளையாருக்கு உம்முடைய புத்திரியை விவாகம் பேசி வந்தோம்'' என்று சொல்ல; நம்பாண்டார்நம்பி பெருங்களிப்புடையராகி, சிவ பாதவிருதயரை நோக்கி, ''சுவாமீ, தேவரீருடைய பெருந் தவத்தினாலே திருவவதாரஞ் செய்தவரும், உலகமாதாவா கிய உமாதேவியாருடைய திருமுலைப்பாலே உண்டவருமாகிய திருஞானசம்பந்தப்பிள்ளையாருக்கு, அடியேன் யானும் என் குலமும் உய்யும்பொருட்டு, என் குலக்கொழுந்தை விவாகஞ் செய்து கொடுத்தற்கு என்னதவஞ் செய்தேனே'' என்றார். அதுகேட்ட சிவபாதவிருதயர் மற்றவர்களோடு மகிழ்ச்சி யுடன் சீர்காழிக்கு மீண்டு சென்று பிள்ளையாருக்கு அதனைத் தெரிவித்து, சோதிடர்களைக்கொண்டு விவாகத்திற்குச் சுப தினமும் சுபமுகூர்த்தமும் நிச்சயிப்பித்து, எங்குந் திருக் கல்யாணபத்திரம் பெருஞ்சிறப்பிலேடு அனுப்பி, திருக்கல் யாணத்துக்கு வேண்டும் முயற்சிகளைச் செய்வித்தார். நம் பாண்டார்நம்பியும் விவாகத்துக்கு வேண்டும் முயற்சிகளைச் செய்வித்தார்.

ஆளுடையபிள்ளையார், திருக்கல்யாணதினத்துக்கு முதற்றினத்திலே சமாவர்த்தனம்பண்ணி, ரக்ஷாபந்தனஞ்செய்து, மற்றநாட் காலையில் நித்தியகருமங்களைச் செய்து, திருத் தோணியப்பரை வணங்கிக்கொண்டு, முத்துச்சிவிகைமேல் வந்து, திருக்கல்யாணந் தரிசிக்க வந்த சமஸ்தருஞ்சூழ, மங்

கலவாத்தியங்கள் ஒலிக்க, குடைகள் சாமரங்கள் ஆலவட்டங்கள் முதலியன நெருங்க, முத்துக்குடை நிழற்ற, மகாலங்காரத்தோடு சென்று, திருநல்லூரைச் சமீபித்து, அங்கிருந்து வந்து அநேகர் எதிர்கொள்ளப் போய், அங்குள்ள திருப்பெருமணம் என்னும் ஆலயத்திற் பிரவேசித்து, சுவாமியை வணங்கித் திருப்பதிகம் பாடிக்கொண்டு, பிராமணர்களுடைய வேண்டுகோளின்படி திருக்கோயிலுக்குப் புறத்தில் இருக்கின்ற ஒரு திருமடத்திலே புகுந்தருளினார். பிராமணர்கள் பிள்ளையாரைப் பத்துத்துவரையும் ஓமாலிகை முப்பத்திரண்டும் விரை ஐந்துமாகிய இருவகை வாசனைத் திரவியங்களையும் வெவ்வேறு சேர்த்து அரைத்துத் திருமேனியிலே பூசி, திருமஞ்சனநீராட்டி, விலைமதிப்பில்லாத வஸ்திராபரணங்களாலே திருக்கோலஞ் செய்தார்கள். பின்பு பிள்ளையார் பரமசிவனது திருக்கண்ணினின்றும் உதிக்குந் திருவருட்குறியாகிய உருத்திராக்ஷமாலையைச் சர்வலோகத்தாரும் துதிக்கும்படி வணங்கித் தாமே எடுத்துத் தரித்து, பசுமலநீக்கத்துச் சிவத்துவக்குறியாகி அழகுக்கு அணியாய் விளங்குகின்ற திருவெண்ணீற்றைத் திருவைந்தெழுத்தோதிச் சாத்திக்கொண்டு, மிக அலங்கரிக்கப்பட்ட திருவீதியிலே எழுந்தருளிவந்து, பரமசிவனை வணங்கி, முத்துச்சிவிகைமேல் ஏறியருளினார். அப்பொழுது பலவகைப்பட்ட வாத்தியங்களும் ஒலித்தன. ஆகாயத்திலுள்ள தேவர்கள் கற்பகப்பூமாரி பெய்தார்கள். பிராமணர்கள் வேதகோஷஞ் செய்தார்கள். பிள்ளையார் முத்துக்குடை நிழற்ற, முத்துச்சின்னங்களெல்லாம் தம்முடைய எண்ணில்லாத திருநாமங்களை எடுத்து ஊத, எழுந்தருளிவந்தார். பூம்பந்தருக்குமுன் வந்தவுடனே, முத்துச்சிவிகையினின்றும் இறங்கி, பூக்களும் பொற்சுண்ணமும் பரந்த பாவாடைமேல் நடந்து, திருக்கல்யாண மண்டபத்துட்சென்று, இரத்தினாசனத்தின்மேல் வீற்றிருந்தருளினார். அப்பொழுது நம்பாண்டார்நம்பி, தம்முடைய மனைவியார் பசுப்பாலும் சுத்தசலமும் ஏந்திப் பின்வரவந்து, பிள்ளையாரைப் பரமசிவனெனப் பாவித்து, தம்முடைய மனைவியார் கரகநீரை வார்க்க, அவருடைய ஸ்ரீபாதங்களை விளக்கி, அங்ஙனஞ்செய்த தீர்த்தத்தைத் தம்முடைய சிர

சின்மேலே புரோக்ஷித்து, உள்ளும் பூரித்து, சுற்றத்தார் கண்மேலுந் தெளித்தார். பிள்ளையாருடைய திருக்கரத்திலே ஜலத்தை வார்த்து தம்முடைய கோத்திரத்தைச் சொல்லி, "என்னுடைய புத்திரியைத் திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்குக் கொடுத்தேன்" என்றார். விவாகமுகூர்த்தம் வர; மணமகளைக் கொண்டுவந்து பிள்ளையாருக்கு வலப்பக்கத்தில் இருத்தினார்கள். திருநீலநக்கநாயனார் திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருமுன்பே பரமசிவனைத் தியானித்துக்கொண்டு, வேதவிதிப்படி சடங்கு செய்ய; வேதங்கள் ஒலிக்க, திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருமங்கலியத்தைச் சாத்தி, பாணிக்கிரகணம் பண்ணி, பொரியை அக்கினியில் இட்டு, பரமசிவனைத் துதித்து, அக்கினியை வலஞ்செய்யவேண்டி, "அக்கினியாவார் பரமசிவனே" என்று திருவுளங்கொண்டு, திருப்பெருமணம் என்னும் சிவாலயத்திற் செல்லக் கருதி, வேதவிதிப்படி வளர்க்கப்பட்ட அக்கினியை வலஞ்செய்து, "இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்ததே. நான் இவளோடு சிவபெருமானது திருவடியை அடைவேன்" என்று திருவுளங்கொண்டு, சமஸ்தருஞ் சூழும்படி, மணவியாரோடு சென்று, அச்சிவாலயத்திற் பிரவேசித்து, தம்முடைய திருமணத்தைத் தரிசித்தவர்களுடைய பாசத்தை நீக்கத் திருவுளங்கொண்டு, "திருநல்லூர்ப்பெருமணத்தில் எழுந்தருளியிருக்குங் கடவுளே, தேவரீருடைய திருவடிகளை அடையும் பதம் இது" என்று, "கல்லூர்ப்பெருமணம்" என்னுந் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

அப்பொழுது கருணைநிதியாகிய சிவபெருமான் "நீயும் உன்மனைவியும் உன்னுடைய விவாகத்தைக் காணவந்தவர்கள் சமஸ்தரும் இந்தச் சோதியினுள்ளே வந்து நம்மை அடையுங்கள்" என்று அருளிச்செய்து, திருக்கோயில் உட்பட மேலோங்கிய சுத்தசோதிவடிவமாகி, அச்சோதிக்கு ஒரு திருவாயிலை வகுத்துக் காட்டியருளினார். திருபாசமுத்திரமாகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சோதிவடிவாய் நின்ற கடவுளை வணங்கித் துதித்து, உலகம் உய்யும்பொருட்டு அதனை அடையும் நெறியை அருளிச்செய்யத் திரு

வுளங்கொண்டு, யாவருக்கும் ஞான மெய்ந்நெறி நமச்சிவாய என்கின்ற மந்திரம் என்னுங் கருத்தையுடைய "காதலாகிக் கசிந்து" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகத்தைச் சம்ஸ்தருங் கேட்க அருளிச்செய்து, "இக்கலியாணங் காண்வந்த எல்லீரும் உங்கள் சனனநோய் தீரும்பொருட்டு, இந்தச் சோதியினுள்ளே பிரவேசியுங்கள்" என்று திருவாய்மலர்ந் தருளினர். பிறவிக்கடலிலே கரைகாணுது அழுந்தி அறிவின்றி மயங்குகின்றவர்கள், பிள்ளையாருடைய திருமணத்தைச் சேவிக்கப்பெற்றமையால், அந்தச் சோதியினுள்ளே புகுந்தார்கள். திருநீலநக்கநாயனார், முருகநாயனார், சிவபாதவிருதயர், நம்பாண்டார்நம்பி, திருநீலகண்டப்பெரும்பாணர் முதலிய திருத்தொண்டர்கள் தங்கள் தங்கள் மனைவியரோடும் சுற்றத்தாரோடும் புகுந்தார்கள். பிள்ளையாருடைய முத்துச்சிவிகை முதலியவற்றைத் தாங்கிச்சென்றவர்களும் மற்றைப் பரிசனங்களும் தொழுது புகுந்தார்கள். சைவர், பாசுபதர், மகாவிரதர், காளாமுகர், வாமர், வைரவர் என்கின்ற அறுவகை உட்சமயிகளும் வைதிகசைவர்களும் சைவசித்தாந்திகளும் ஆகிய சமஸ்தரும் அந்தச் சுத்தசோதியினுள்ளே புகுந்தபின்; சர்வான்மாக்களையும் உய்விக்கும்பொருட்டுத் திருவவதாரஞ் செய்தருளிய சைவசித்தாந்த சமயாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தம்முடைய மனைவியாரைக் கைப்பற்றிக்கொண்டு, அந்தச்சோதியை வலஞ்செய்து, அதனுள்ளே புகுந்து, சிவசாயுச்சியம் அடைந்தார். அதன்பின் அந்தச் சோதி மறைந்துவிட, திருப்பெருமணமாகிய திருக்கோயில் தோன்றுதலும் உலகத்திலே பேறில்லாதவர்களெல்லாருங் கவலிகொண்டார்கள். பிள்ளையார் சோதியுட் புகுந்தமையைத் தூரத்தே கண்டு நணுகப்பெறுத அரி பிரமேந்திராதி தேவர்களும் முனிவர்களும் கவலிதீங்க எடுத்துத் தோத்திரம் பண்ணினர்கள்.

திருச்சிற்றம்பலம்.

ஏயர்கோன்கலிக்காமநாயனார் புராணம்.

சோழநாட்டிலே, திருப்பெருமங்கலத்திலே, வேளாளர் குலத்திலே, சோழராஜாக்களிடத்திலே, பரம்பரையாகச் சேனாபதித்தொழில் பூண்ட ஏயர்குடியிலே, கலிக்காமநாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் குருலிங்க சங்கம பத்தியிலே சிறந்தவர். திருப்புன்கூரிலுள்ள சிவாலயத்திலே அளவில்லாத திருப்பணிகள் செய்தவர்.

அவர் சுந்தரமூர்த்திநாயனார் சிவபெருமானைப் பரவையாரிடத்திற்குத் தூதாக அனுப்பிய சமாசாரத்தைக் கேள்வியுற்று, வெம்பி மிகக்கோபித்து, "நாயனே அடியான் ஏவுங் காரியம் மிகநன்று. இப்படிச் செய்பவன் தொண்டனும். இது என்னபாவம்! பொறுக்கவொண்ணுத இந்தப் பெரும்பாதகத்தைக் கேட்டும் உயிரோடிருக்கின்றேனே" என்றார். "ஒருவன் பெண்ணைசமேலீட்டினல் ஏவ ஒப்பில்லாத கடவுள் தூதராய் ஓரிரவுமுழுதும் போக்கு வரவுசெய்து உழன்றாராம். அரிபிரமேந்திராதி தேவர்களாலும் அறியப்படாத கடவுள் இசைந்தாராயினும், அவன் அவரை ஏவலாமா! இதற்கு மனநடுங்காத அந்தத்துரோகியை நான் காணுநாள் எந்நாளோ? பெண் பொருட்டுக் கடவுளை இரவிலே தூதனுப்பிய பாதகனைக் காண்பேனையின் யாது சம்பவிக்குமோ" என்று சொல்லி மிகச் செற்றங்கொண்டிருந்தார்.

சுந்தரமூர்த்திநாயனார் அதனைக் கேள்வியுற்று அடியார்க் கெளியராகிய பரமசிவனுக்கு விண்ணப்பஞ்செய்ய; பரமசிவன் இருவரையும் கூட்டுதற்குத் திருவுளங்கொண்டு, கலிக்காமநாயனாரிடத்திலே சூலநோயை ஏவ; அது அக்கினியிலே காய்ச்சப்பட்ட வேல் குடைதல்போல மிக்க வேதனை செய்ய; கலிக்காமநாயனார் அதனல் மிகவருந்தி வீழ்ந்து, உயிர்த்துணையாகிய பரமசிவனுடைய திருவடிகளைச் சிந்தித்துத் துதித்தார். அப்பொழுது பரமசிவன் அவரிடத்தில் எழுந்தருளி, "சுந்தரனல லன்றி இந்நோய் தீராது" என்று அருளிச்செய்ய; அவர் "எம்பெருமானே, பரம்பரையாகத் தேவரீரே மெய்க்கடவுளென்று துணிந்து தேவரீருக்குத் திருத்தொண்டுகள் செய்து வருகின்ற குடியிலுள்ளோனுமிய

என்னை வருத்துகின்ற சூலநோயை, நீதனமாக ஆண்டு கொள்ளப்பட்ட ஒருவனு வந்து தீர்ப்பான். அவனாலே தீர்க்கப்படுதலினும் தீராதொழிந்து என்னை வருத்துதலே நன்று. தேவரீர் செய்யும்பெருமையை அறிந்தவர் யாவர்! வன்முரண்டனுக்கு ஆகும் உறுதியையே செய்யும்'' என்றார். உடனே பரமசிவன் அவர் முன்னே மறைந்து, சுந்தரமூர்த்திநாயனரிடத்திற் சென்று, ''நம்முடைய ஏவலாலே கலிக்காமனை வருத்துகின்ற சூலையை நீ போய்த் தீர்ப்பாய்'' என்றார். சுந்தரமூர்த்திநாயனர் அதைக் கேட்டுத் திருவுளமகிழ்ந்து, கலிக்காமநாயனரிடத்திற்குப் போம்படி புறப்பட்டு, சூலை தீர்க்கும்படி தாம் வருஞ் சமாசாரத்தை அவருக்குத் தெரிவித்தற்கு முன்னே ஆள் அனுப்பினர். அவ்வாளினாலே சுந்தரமூர்த்திநாயனருடைய வரவை அறிந்த கலிக்காமநாயனர் ''எம்பெருமானைத் தூதனுப்பியவன் சூலநோய் தீர்த்தற்கு வந்தால் நான் செய்வது என்னும்! அவன் இங்கே வந்து தீர்த்தற்கு முன்னே இச்சூலையை வயிற்றினோடுங் கிழிப்பேன்'' என்று உடைவாளினாலே தம் வயிற்றைக் கிழித்துக் கொண்டு இறந்துபோனார். அதுகண்ட அவர் மனைவியாரும் அநுமரணஞ்செய்யப் புகுந்தார். அப்போது, ''சுந்தரமூர்த்திநாயனர் சமீபத்தில் எழுந்தருளிவந்துவிட்டார்'' என்று முன்வந்தோர் சொல்ல; மனைவியார் ''ஒருவரும் அழாதொழிக'' என்று சொல்லி, பின்பு தம்முடைய நாயகரது செய்கையை மறைத்து, சுந்தரமூர்த்திநாயனரை எதிர்கொள்ளும்பொருட்டுத் தங்கள் சுற்றத்தாரனை ஏவ; அவர்கள் போய் எதிர்கொண்டு வணங்கினர்கள்.

சுந்தரமூர்த்திநாயனர் அவர்களுக்கு அருள்செய்து வந்து; கலிக்காமநாயனர் வீட்டிற்புகுந்து, ஆசனத்தில் எழுந்தருளியிருந்து, தமக்குச் செய்யப்பட்ட அருச்சனைகளை ஏற்றுக்கொண்டு, ''கலிக்காமநாயனருடைய சூலையை நீக்கி அவருடன் இருத்தற்கு மிக வருந்துகின்றேன்'' என்றார். அப்பொழுது மனைவியாரது ஏவலால் வீட்டுவேலைக்காரர் வணங்கி நின்று, ''சுவாமீ, அவருக்குத் தீங்கு ஒன்றும் இல்லை. உள்ளே பள்ளிகொள்கின்றார்'' என்று விண்ணப்பஞ்செய்ய;

சுந்தரமூர்த்திநாயனார் "நீங்கு ஒன்றும் இல்லை என்றீர். ஆயினும், என் மனந் தெளிந்திலது. ஆதலால் அவரை நான் காணல்வேண்டும்" என்றார். அவர்கள் அதுகேட்டு, கலிக்காம நாயனாரைக் காட்ட; சுந்தரமூர்த்திநாயனார் இரத்தஞ்சோரக் குடர் சொரிந்து உயிர் பொன்றிக் கிடந்தவரைக் கண்டு "புகுந்தவாறு நன்று. நானும் இவர்போல இறந்துபோவேன்" என்று சொல்லி, உடைவாளை எடுத்தார். உடனே பரமசிவனது திருவருளினால் கலிக்காமநாயனார் உயிர்த்து எழுந்து, அவர்கையில் வாளைப்பிடித்துக்கொள்ள; அவர் விழுந்து நமஸ்கரித்தார். கலிக்காம நாயனாரும் சுந்தரமூர்த்தி நாயனாரை நமஸ்கரித்தார்.

அதன்பின் இருவரும் அதிக நண்புள்ளவர்களாகித் திருப்புன்கூருக்குப்போய், சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, சிலநாட்சென்றபின்பு, திருவாரூரை அடைந்தார்கள். கலிக்காமநாயனார் சிலநாள் அங்கே சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்து, பின்பு சுந்தரமூர்த்திநாயனாரிடத்திலே அநுமதி பெற்றுக்கொண்டு, தம்முடைய ஊருக்குத் திரும்பி வந்து, திருத்தொண்டுசெய்துகொண்டிருந்து, சிவபதம் அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

திருமூலநாயனார் புராணம்.

திருக்கைலாசத்திலே, சிவபெருமானது ஆலயத்துக்கு முதற்பெருநாயகராகிய திருநந்திதேவருடைய திருவருளைப் பெற்ற மாணாக்கர்களாகிய சிவயோகிகளுள் ஒருவர். அகத்தியமகாமுனிவரிடத்தே பொருந்திய நண்பினாலே அவருடன் சிலநாள் இருத்தற்கு, அவர் எழுந்தருளியிருக்கும் பொதியமலையை அடைதற்பொருட்டு, திருக்கைலாசத்தை அகன்று வழிக்கொண்டு, திருக்கேதாரம், பசுபதிநேபாளம், காசி, ஸ்ரீசைலம், திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சிபுரம், திருவதிகை, சிதம்பரம் என்னுந் தலங்களை வணங்கிக்கொண்டு, திருவாவடுதுறையை அடைந்து, அங்கே சுவாமிதரிசனஞ் செய்துகொண்டிருந்தார்.

ஒருநாள் அந்தத்தலத்தை அகன்று செல்லும்பொழுது, காவிரியாற்றங்கரையிலுள்ள வனத்திலே பசுக்கூட்டங்கள் அழுதலே எதிரே கண்டார். சாத்தனூரில் இருக்கின்ற இடையனுகிய மூலனென்பவன் ஒருவன் அவைகளே மேய்க்கின்றவன். அவன் அத்தினத்திலே அவ்விடத்தில் இறந்து கிடந்தான். அப்பசுக்கூட்டங்கள் அவனுடைய சரீரத்தை வந்து மோந்து, சுற்றி மிகக் கதறிச் சுழன்று மோப்பனவாக; சிவயோகியார் கண்டு, "பரமசிவனது திருவருளினுலே இப்பசுக்களுடைய துயரத்தை நீக்கல்வேண்டும்" என்று ஆலோசித்து, "இவ்விடையன் உயிர்பெற்றெழுந்தாலன்றிப் பசுக்கள் துயரநீங்கா" என்று திருவுளங்கொண்டு, தம்முடைய திருமேனிக்குக் காவல்செய்து, தாம் அவ்விடையனுடைய சரீரத்தினுள்ளே பிரவேசித்து, திருமூலராய் எழுந்தார். எழுதலும், பசுக்களெல்லாம் நாத்தழும்ப நக்கிமோந்து, கனைத்து, மிகுந்த களிப்பினுலே வாலெடுத்துத் துள்ளி, பின்பு போய் மேய்ந்தன திருமூலநாயனர் அது கண்டு திருவுளமகிழ்ந்து, அவைகள் மேபுமிடத்திற்சென்று, அவைகளே நன்முக மேய்த்தார். சூரியன் அஸ்தமயனமாக; பசுக்கள் தத்தங் கன்றுகளே நினைந்து, தாமே முன் பைய நடந்து, சாத்தனூரை அடைந்தன. சிவயோகியார் அப்பசுக்களுக்குப் பின்சென்று, அவைகளெல்லாம் வீடுகடோறும் போகத் தாம் வெளியிலே நின்ருர்.

மூலனுடைய மனைவி "நாயகர் இன்றைக்கு மிகத்தாழ்த்தார்" என்று பயங்கொண்டு சென்று, சிவயோகியார் நின்ற இடத்தை அடைந்து, "இவருக்கு ஈனம் அடுத்ததுபோலும்" என்று, அவருடைய திருமேனியைத் தீண்ட; அவர் அதற்கு இசையாராயினர். அவள் அச்சுற்று மயங்கி, "என்செய்தீர்" என்று தளர; திருமூலநாயனர் "உனக்கு என்னேடு யாதொரு சம்பந்தமும் இல்லே" என்று மறுத்து, ஒரு பொதுமடத்தினுள்ளே புகுந்து, சிவயோகத்தில் இருந்தார். மனைவி அவ்விரவு முழுதிலும் நித்திரை செய்யாது கவலிகொண்டிருந்து, மற்றநாள் அதனே விவேகிகள் பலருக்குத் தெரிவிக்க; அவர்கள் வந்து பார்த்து, அவளே நோக்கி; "இது பைத்தியமன்று, வேறு சார்புள்ளது மன்று. இவர் கருத்துச் சிவயோகத்தி

னிடத்தேயாம். இனி இவர் உங்கள் சுற்றவியல்போடு கூடார்'' என்றார்கள். அவள் அது கேட்டுத் துயரம் எய்தி மயங்க; அவர்கள் அவளைக் கொண்டுபோய் விட்டார்கள்.

சிவயோகத்தில் இருந்த திருமூலநாயனர் எழுந்து, முதலிலே பசுக்கள் வந்த வழியே சென்று, தாஞ் சேமித்த சரீரத்தைக் காணாது, மெய்ஞ்ஞானத்தையுடைய சிந்தையினால் ஆராய்ந்து, சிவபெருமான் ஆதிகாலத்திலே தம்முடைய பஞ்சவத்திரத்தினின்றும் தோற்றுவித்த காமிகமுதலிய சைவாகமங்களிலே பேசப்பட்ட மெய்ப்பொருளைத் தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு உபயோகமாகும்பொருட்டுத் தமியேனைக் கொண்டு தமிழிலே ஒரு நூல் செய்வித்தற்பொருட்டு அச்சரீரத்தை மறைத்தருளினார்'' என்று தெளிந்து, திருவருளைத் துதித்து, திருவாவடுதுறையை அடைந்து, அங்குள்ள சிவாலயத்திலே பிரவேசித்து, சிவபெருமானை வணங்கி, அதற்கு மேற்குப்பக்கத்திலே இருக்கின்ற அரசின்கீழே போய், சிவயோகத்தில் இருந்தார். அவர் மூவாயிரம் வருஷமளவு அங்ஙனம் இருந்து, ஒவ்வொரு வருஷத்திற்கு ஒவ்வொரு திருப்பாட்டாக மூவாயிரந் திருப்பாட்டினால் சைவாகமங்களில் உணர்த்தப்பட்ட ஞானம் யோகம் கிரியை சரியை என்னு நான்கு பாதங்களையும் பேசுகின்ற திருமந்திரமென்னுந் தமிழ் நூலைப் பாடியருளி, பின் திருக்கைலாசத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

தண்டியடிகணயனர் புராணம்.

சோழமண்டலத்திலே, திருவாரூரிலே, தண்டியடிகணயனென்பவர் ஒருவர் இருந்தார். அவர் பிறவிக்குருடர். அவர் தம்முடைய அகக்கண்ணினாலே சிவபெருமானைத் தரிசித்துத் தோத்திரம் பண்ணுகின்றவர். எப்பொழுதும் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை மிகுந்த அன்பினோடு ஜபிக்கின்றவர். அந்தத் திருப்பதியிலுள்ள பூங்கோயிலைக் காலந்தோறும் வலஞ்செய்து வணங்குகின்றவர்.

இப்படியிருக்கு நாளிலே, அவ்வாலயத்துக்கு மேற்றி சையில் இருக்கின்ற திருக்குளம் பக்கமெங்கும் சமணர்களு டைய பாழிகளாகி இடத்தினுலே குறைவடைந்தமையால், தண்டியடிகள் அதனை அறிந்து அத்திருக்குளத்தைத் தாம் பெருகக் கல்லல்வேண்டும் என்று நினைந்து, அவ்விடத்திற் சென்று, திருக்குளத்தினுள்ளே கல்லுமிடத்தில் ஒருதறி நட்டு, அதிலே கயிறு கட்டி, கரையிலும் தறி நட்டு, அக் கயிற்றினுனியை அதனில் இசையக் கட்டி, மண்வெட்டியை யுங் கூடையையும் எடுத்து, அக்கயிற்றைத் தடவிக்கொண்டு சென்று, மண்ணைக் கல்லிக் கூடையில் எடுத்துக்கொண்டு, மீண்டும் அக்கயிற்றைத் தடவிப் போய்க் கரையிலே போடு வார். இப்படித் தினந்தோறும் மிகுந்த விருப்பத்துடன் திருக் குளங் கல்லும்பொழுது சமணர்கள் பொறுமைகொண்டு அவரை அணைந்து, "மண்ணைக் கல்லிற் பிராணிகள் இறந்து போம், வருத்தல்வேண்டாம்" என்று சொல்ல; தண்டியடி கள் "அவிவேகிகளே, இது மெய்க்கடவுளாகிய பரமசிவனுக் குச் செய்யுங் குற்றமற்ற புண்ணியம். இதனருமை உங்க ளுக்கு விளங்குமா" என்றார். அது கேட்ட சமணர்கள் "நாஞ்சொன்ன தருமமுறையைக் கேட்டாயில்லை. நீ கண் ணேயன்றிக் காதினையும் இழந்தனையோ" என்று சொல்ல, தண்டியடிகள் "மந்தபுத்தியும் காணக்கண்ணும் கேளாச்செ வியும் உங்களுக்கே உள்ளன" என்று சொல்லி, "திரிபுரதக னஞ்செய்த கடவுளுடைய திருவடிகளையேயன்றி வேறொன் றையும் நான் காணேன். அதனையறிதற்கு நீங்கள் யார்! அக் கடவுளுடைய திருவருளினுல் உலகமெல்லாம் அறியும்படி என் கண் காணவும் உங்கள் கண் குருடாகவும் பெற்றுல், நீங் கள் யாதுசெய்வீர்கள்" என்றார். சமணர்கள் "நீ உன் கடவு ளது அருளினுல் கண் பெற்றுயாகில், நாங்கள் இவ்வூரில் இரோம்" என்று சொல்லி, அவருடைய மண்வெட்டியைப் பறித்து, குறித்தறிகளைப் பிடுங்கி எறிந்தார்கள். தண்டியடி கள் மிகக்கோபங்கொண்டு, திருக்கோயில் வாயிலிலே சென்று நமஸ்கரித்து, "எம்பெருமானே, தேவரீரை நித்தனைசெய்யும் அதிபாதகர்களாகிய சமணர்கள் இன்றைக்குத் திருக்குளங்கல் லுதலாகிய சிவபுண்ணியத்தையும் அதனைச் செய்யப்பெற்ற

அடியேனையும் அவமானஞ்செய்தமையால், அடியேன் அது பொறுது மிக வருந்துகின்றேன். சர்வசாமர்த்தியமுடைய தேவரீர் இவ்வருத்தத்தை நீக்கியருளல்வேண்டும்'' என்று பிரார்த்தித்து, நமஸ்காரஞ்செய்து, தம்முடைய திருமடத்திற் சென்று, அழுதுகொண்டிருந்தார்.

அன்றிரவு அவர் நித்திரைசெய்யும்பொழுது, பரமசிவன் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, ''தண்டியே, உன் கவலையை ஒழி. நாளைக்கு உன் கண் காணவும் அந்தச் சமணர்களுடைய கண்கள் மறையவும் அருள்செய்வோம். பயப்படாதொழி'' என்று அருளிச்செய்து, சோழராஜாவுக்கும் சொப்பனத்திலே தோன்றி, ''தண்டியென்பவன் நமக்குக் குளங்கல்ல, சமணர்கள் அதுகண்டு பொறுது, அப்பணிக்கு விக்கினஞ்செய்தனர். நீ அவனிடத்திலே சென்று அவன் கருத்தை முடிப்பாய்'' என்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளினர். சோழராஜா விழித்து எழுந்து, பரமசிவனைத் தோத்திரஞ் செய்து, சூரியன் உதித்தபின் தண்டியடிகளை அடைந்து, தான் கண்ட சொப்பனத்தைச் சொல்ல; தண்டியடிகள் ''மகாராஜாவே, நான் திருக்குளங்கல்லும்போது, சமணர்கள் வந்து, அது தருமமன்றென்று பல சொல்லி, நான் நட்ட குறித்தறிகளைப் பிடுங்கி, என்னை வலிசெய்து, மண்வெட்டியைப் பறித்துக்கொண்டார்கள். இன்னும் ''நீ கண்ணையன்றிக் காதினையும் இழந்தனையோ'' என்றார்கள். அதற்கு நான் நம்முடைய சிவபெருமானது திருவருளினால் என் கண் காணவும் உங்கள் கண்கள் மறையவும் பெற்றால் நீங்கள் யாது செய்வீர்கள் என்று கேட்க; ''நாங்கள் இந்த ஊரில் இரோம்'' என்று ஓட்டினார்கள். இனி நிகழ்வதைக் கண்டு, நீர் இந்த வழக்கை முடித்தல்வேண்டும்'' என்றார். அப்பொழுது அரசன் சமணர்களை அங்கே அழைத்துக் கேட்க, அவர்கள் அதற்கு உடன்பட்டார்கள். அதுகண்டு தண்டியடிகள் முன் செல்ல; அரசன் பின்சென்று திருக்குளக்கரையிலே நின்று, தண்டியடிகளை நோக்கி, ''சிவபத்தரே, நீர் பரமசிவனது திருவருளினாலே கண்பெறுதலைக் காட்டும்'' என்று சொல்ல; தண்டியடிகள் ''சிவபெருமானே மெய்க்கடவுளும் சிறியேன்

அவருக்கு அடியானுமாயின், இவ்வரசனுக்கு முன்னே நான் கண்பெற்றுச் சமணர்கள் கண் இழப்பர்கள்'' என்று சொல்லி, ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டு, திருக்குளத்திலே முழுகிக் கண்பெற்றெழுந்தார். சமணர்களோ கண்ணிழந்து தடுமாறினர்கள். அது கண்ட அரசன் தன் னேவலாளரை நோக்கி, ''தண்டியடிகளுடனே ஒட்டிக்கெட்ட சமணர்களைத் திருவாரூரினின்றும் அகன்று போம்படி துரத் துங்கள்'' என்று ஆஞ்ஞாபிக்க; அவர்கள் அவ்வாறே துரத் தலும் சமணர்கள் கண்காணுமையால் மனங்கலங்கிக் குழி யிலே விழுவார்கள்; ''கோலும் இல்லையே'' என்பார்கள்; இது வழி என்று தூற்றை அடைவார்கள்; ''பொய்ப்பொ ருளை மெய்ப்பொருளெனக் கொண்டு அழிந்தோம்'' என்பார் கள்; பாய்களை இழப்பார்கள்; பீலிகளைத் தடவிக்காணுமல் திரும்புவார்கள்; மயங்கி நிற்பார்கள்; காலும் கையும் முறி யக் கற்களின்மேல் இடறி விழுவார்கள்; மிக நெருங்கி ஒரு வரை ஒருவர் முட்டிக்கொள்வார்கள்; ஓடுதற்கு வழியறி யாது மயங்குவார்கள்.

இந்தப்பிரகாரம் சமணர் கலக்கங்கண்டு அவர்களை ஓடத் துரத்தியபின்னர், சோழராஜா சமணர்களுடைய பாழிகளை யும் பள்ளிகளையும் பறித்து, திருக்குளத்துக்குக் கரை கட்டி, மனமகிழ்ந்து, தண்டியடிகளை வணங்கிக்கொண்டு போயி ஞன். அவர் பரமசிவனைத் தியானித்து, ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஜபித்து, திருத்தொண்டு செய்துகொண்டிருந்து, சிவபதம் அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

மூர்க்கநாயனார் புராணம்.

தொண்டைநாட்டிலே, திருவேற்காட்டிலே, வேளா ளர் குலத்திலே தலைமைபெற்ற ஒருவர், தினந்தோறும் சிவ னடியார்களைச் சிவனென வணங்கித் துதித்துத் திருவமுது செய்வித்துப் பின்பு தாம் உண்பவரும், அவர்கள் விரும் பும்பொருள்களையும் கொடுப்பவருமாய் இருந்தார். இப்படி

யிருக்குநாளிலே, அடியார்கள் அநேகர் எழுந்தருளிவருகின்ற மையால், அவர் தம்மிடத்துள்ள திரவியங்களெல்லாஞ் செலவாகியிட; அடிமைநிலம் முதலியனவற்றை விற்றும், மாகேசுரபூசையை வழுவாது மனமகிழ்ச்சியோடு செய்துவந்தார். அதன்பின், மாகேசுரபூசைச் செலவுக்குப் பொருள் இன்மையாற் கவலைகொண்டு, தாம் முன்னே பயின்ற சூதினாலே பொருள் சம்பாதிக்க நினைந்து, அவ்வூரிலே சூதாடுவோர் இல்லாமைபற்றி அவ்வூரை அகன்று, சிவஸ்தலங்களோறுஞ் சென்று, சுவாமிதரிசனஞ்செய்து, சூதாடலால் வரும் பொருளினாலே தம்முடைய நியதியை முடித்து, சிலநாளிலே கும்பகோணத்தை அடைந்தார். அங்கே சூதாடிப் பொருள்தேடி மாகேசுரபூசை செய்தார். சூதிலே முதலாட்டத்திலே தாந் தோற்று; பின்னாட்டங்களிலே பலமுறையும் வென்று, அதனாலே பொருள் ஆக்கி, சூதிலே மறுத்தவர்களை உடைவாளை உருவிக்குத்தி, நற்சூதர் மூர்க்கர் என்னும் பெயர்களைப் பெற்றார். சூதினாலே வரும்பொருளைத் திருவமுதாக்குவோர்கள் கொள்ள, தாந்தீண்டார். அடியார்கள் திருவமுது செய்தபின், தாங்கடைப்பந்தியிலே அமுதுசெய்வாராயினர். இவர் இப்படிச் சிலகாலம் மாகேசுரபூசை செய்துகொண்டிருந்து, அந்தமகத்தாகிய சிவபுண்ணியத்தினாலே சிவபதம் அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

சோமாசிமாறநாயனார் புராணம்.

சோழமண்டலத்திலே, திருவம்பரிலே, பிராமணகுலத்திலே, சோமாசிமாறநாயனென்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனது ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை மிகுந்த அன்பினோடு ஜபித்தலே நித்திய நியமமெனக் கொண்டவர். எந்தக் குலத்தினராயினும், எந்தக் குணத்தினராயினும், பரமசிவன்மேல் அன்புடையார்களாயின், அவர்களை நம்மை ஆள்பவர் என்னும் மெய்யறிவினையுடையவர். அவ்வன்பர்கள் தம்மு

டைய வீட்டுக்கு எழுந்தருளிவந்தால், அவர்களை எதிர் கொண்டு வணங்கித் திருவமுது செய்விப்பவர். பரமசிவனுக் குப் பிரீதியாகிய யாகங்களை, புகழ் பயன் முதலியன கரு தாது நிஷ்காமியமாக வேதவிதிப்படி செய்பவர். அவர் திரு வாரூரிற் சென்று, சைவசமயாசாரியராகிய சுந்தரமூர்த்தி நாயனரை அடைந்து, அவருடைய திருவடிகளிலே ப; பண்ணி, அதனாலே சிவபதத்தைப் பெற்றார்.

திருச்சிற்றம்பலம்.

வம்பறுவரிவண்டேச்சருக்க முற்றுப்பெற்றது.

ஆறுவது

வார்கொண்ட வனமுலையாள் சருக்கம்

சாக்கியநாயனார் புராணம்.

திருச்சங்கமங்கையிலே, வேளாளர் குலத்திலே உதித்த ஒருவர் சனனமரணத் துன்பங்களை நினைந்து நினைந்து கவலைகொண்டு, அவைகளினின்று நீங்கு நெறி யாது என்று ஆராய்வாராயினர். அந்நாளிலே காஞ்சிபுரத்தை அடைந்து, பௌத்தர்களை அணுகி, அவர்கள் அநுட்டிக்கும் பௌத்த சமயத்திலே பிரவேசித்து, அச்சமயநூல்களை ஓதி, அவற்றின் பொருள்களை ஆராய்ந்தார். ஆராய்ந்தபொழுது, அச்சமயம் சற்சமயமன்றென்பது அவருக்குத் தெள்ளிதிற் புலப்பட்டது. அதுபோல மற்றைச்சமய நூல்களையும் ஆராய்ந்து, அவைகளும் மெய்யல்லவெனத் தெளிந்து, பரமசிவனது திருவருள் கூடுதலால், அறிவிக்க அறியும் சித்தாகிய ஆன்மாக்களும் அவ்வான்மாக்களினாலே செய்யப்படும் சடமாகிய புண்ணியம் பாவம் என்னும் கர்மங்களும் அக்கர்மங்களாலே பெறப்படுஞ் சுகம் துக்கம் என்னும் பலங்களும் அப்பலங்களைக் கொடுக்கின்ற தானே அறியுஞ் சித்தாகிய பதியும் எனப்பொருள்கள் நான்கு என்றும், அவைகளைப் பூர்வோத்தர விரோதமின்றி யதார்த்தமாக உணர்த்தும் நூல் சைவ சமயநூலே என்றும், அந்நூல் உணர்த்தும் பதி பரமசிவனே என்றும், அறிந்துகொண்டார். எந்த நிலையிலே நின்றாலும் எந்த வேஷத்தை எடுத்தாலும் பரமசிவனுடைய திருவடிகளை மறவாமையே பொருள் என்று கருதி, தாம் எடுத்த பௌத்தவேஷத்தைத் துறவாமல் பரசிவனை மிகுந்த அன்பினோடு இடைவிடாது தியானஞ்செய்வாராயினர்.

சிவசாதாக்கியம், அமூர்த்திசாதாக்கியம், மூர்த்திசாதாக்கியம், கர்த்திருசாதாக்கியம், கர்மசாதாக்கியம் என்னும் பஞ்ச சாதாக்கியங்களுள், கர்மசாதாக்கியமாகிய சிவலிங்கத்தின் மகிமையை உணர்ந்து தினந்தோறும் சிவலிங்கதரிசனஞ் செய்துகொண்டே போசனம் பண்ணல்வேண்டும் என்று விரும்பி, சமீபத்தில் ஒரு வெள்ளிடையிலிருக்கின்ற சிவலிங்கத்தைத் தரிசித்து, பேரானந்தம் உள்ளவராகி, தாஞ்செய்யுஞ் செயல் இதுவென அறியாது, அருகிலே கிடந்த ஒரு செங்கல்லைக் கண்டு, அதைப் பதைப்புடனே எடுத்து, அச் சிவலிங்கத்தின்மேல் எறிந்தார். சிறுபிள்ளைகள் செய்யும் இகழ்வாகிய செய்கைகளும் தந்தையர்களுக்குப் பிரீதியாமாறுபோல, அந்தச் சாக்கியநாயனருடைய செய்கையும் பரமசிவனுக்குப் பிரீதியாயிற்று. அந்நாயனர் அன்று போய் மற்றைநாள் அந்நியமத்தை முடித்தற்கு அணைந்தபொழுது, முதலுளிலே தாஞ்சிவலிங்கத்தின்மேற் கல்லெறிந்த குறிப்பை நின்று ஆலோசித்து, "நேற்று எனக்கு இவ்வெண்ணம் வந்தது பரமசிவனது திருவருளே" என்று துணிந்து, அதனையே திருத்தொண்டாக நினைந்து, எப்பொழுதும் அப்படியே செய்யக் கருதினர். எல்லாச்செயல்களும் சிவன் செயல் என்றே தெளிந்தமையால், அந்நியதியைத் தினந்தோறும் வழுவாமல் அன்பினுடன் செய்ய, அது ஆன்மாக்கடோறும் வியாபித்திருந்து எல்லாவற்றையும் உணருஞ் சிவபெருமானுக்கு மிகச் சிறந்த திருத்தொண்டாகி முடிந்தது. ஒருநாள் அந்நாயனர் திருவருளினுலே மறந்து போஜனஞ்செய்யப் புகும்பொழுது, "இன்றைக்கு எம்பெருமானை எறியாமல் மறந்துவிட்டேன்" என்று எழுந்து, அத்தியந்த ஆசையுடன் மிக விரைந்து புறப்பட்டு, சிவலிங்கத்தை அணைந்து, ஒரு கல்லை எடுத்து அதன்மேல் எறிய, பத்திவலியிற் படுவாராகிய பரமசிவன் உமாதேவியாரோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றி, அவரைத் தமது திருவடியிலே சேர்த்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புலிநாயனார் புராணம்.

சோழநாட்டிலே, திருவாக்கூரிலே, பிராமணகுலத்திலே, சிறப்புலிநாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவனடியார்கள் எழுந்தருளிவந்தபொழுது, அவர்களை நமஸ்கரித்து இன்சொற்களைச் சொல்லி, அவர்களைத் திருவமுது செய்வித்து அவர்களுக்கு வேண்டுந் திரவியங்களெல்லாவற்றையுங் கொடுப்பவர். ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை அன்பினோடு ஜபிப்பவர். பரமசிவனைக் குறித்து, யாகங்கள் செய்பவர். அவர் இன்னும் பல சிவபுண்ணியங்களைச் செய்துகொண்டிருந்து, சிவபதம் அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

சிறுத்தொண்டநாயனார் புராணம்.

சோழமண்டலத்திலே, திருச்செங்காட்டங்குடியிலே, மகாமாத்திர குலத்திலே, பரஞ்சோதியாரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஆயுள்வேதங்களிலும் படைக்கலத்தொழில்களிலும் குதிரையேற்றம் யானையேற்றங்களிலும் மிகச் சிறந்தவர். வேதமுதலிய நூல்களை மெய்ப்பொருளை அறிதல்வேண்டுமென்னும் அவாவினோடு திருவருளை முன்னிட்டு ஓதியுணர்ந்தமையால், பரமசிவனே மெய்க்கடவுள் என்றும், அவருடைய திருவடிகளை அடைதலே முத்திநெறியென்றுந் தெளிந்து, அவருடைய திருவடிகளை அகோராக்கிரம் இடைவிடாது அன்பினோடு தியானிப்பவராயினர். சிவனடியார்களுக்கு எக்காலமும் திருத்தொண்டு செய்பவர்.

அவர் அரசனிடத்திலே அணுக்கராகி, அவன்பொருட்டு யானைசெலுத்திக்கொண்டு சென்று, அவனோடு மாறுபட்ட பலவரசர்களை வென்று, அவர்கள் தேசங்களைக் கைப்பற்றி, அவனால் நன்குமதிக்கப்பட்டவர். ஒருமுறை உத்தரதேசத்திலே வாதாவியென்னும் நகரத்திற் சென்று, அதனை வென்று, பலவகையிரத்தினங்களும் நிதிக்குவைகளும் யானைக்கூட்டங்களும் குதிரைக்கூட்டங்களும் அரசனுக்குமுன் கொண்டுவந்தார். அது கண்டு, அரசன் அவருடைய யானையேற்

றத்தின் வலிமையை அதிசயித்துப் புகழ்ந்து பேச; அவரை அறிந்த மந்திரிகள் அரசனை நோக்கி, "மகாராஜாவே, இவர் பரமசிவனுக்குத் திருத்தொண்டு செய்கையால் இவ்வுலகத்திலே இவருக்கு எதிராவார் ஒருவருமில்லை" என்றார்கள். அரசன் அதைக்கேட்டு, அஞ்சி நடுநடுங்கி, இரண்டு கண்களினின்றுஞ் சோகபாஷ்பஞ் சொரிய, "இவர் நமது கடவுளாகிய பரமசிவனுடைய திருத்தொண்டர் என்பதை உணராது, கொடிய போர்முனையிலே விட்டிருந்தேன். ஐயையோ! இது எவ்வளவு கொடியபாவம்" என்று சொல்லி, பின்பு பரஞ்சோதியாரை நோக்கி, "சுவாமீ, இக்குற்றத்தைப் பொறுத்தருளல்வேண்டும்" என்று பிரார்த்தித்து நமஸ்கரித்தான். பரஞ்சோதியார் அரசன் தம்மை நமஸ்கரித்தற்கு முன் தாம் அவனை நமஸ்கரித்து, "மகாராஜாவே, நான் எனது உரிமைத் தொழிற்கு அடுத்த திறத்தைச் செய்வேன். அதனாலே என்ன தீங்கு" என்றார். அரசன் அவருக்கு நிறைந்த நிதிக்குவைகளையும் விருத்திகளையுங் கொடுத்து, "நீர் உம்முடைய நிலைமையை நான் அறியாவண்ணம் நடத்திக்கொண்டுவந்தீர். இனி என் மனக்கருத்துக்கு இசைந்து, எனக்குப் பணிசெய்தலே ஒழிந்து, நீர் விரும்பியவாறே சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் வெளிப்படத் திருத்தொண்டு செய்யும்" என்று விடைகொடுத்தான். பரஞ்சோதியார் விடைபெற்றுக்கொண்டு, தம்முடைய திருப்பதியிற் சென்று, கணபதீச்சரத்தில், எழுந்தருளியிருக்கின்ற கடவுளை வணங்கி, அவருக்குத் திருத்தொண்டுகளை வழுவாது செய்வாராயினர். திருவெண்காட்டுநங்கையாரென்னும் மங்கையாரோடு கூடி, இல்லறத்தில் வாழ்ந்திருந்து, நாடோறும் முன்னே சிவனடியார்களைத் திருவமுது செய்வித்து, பின் தாம் உண்பார். சிவனடியார்களை மிகுந்த அன்பினோடு வழிபட்டு, அவர்கள் திருமுன்பே மிகச் சிறியராய் ஒழுகுகின்றமையால், அவருக்குச் சிறுத்தொண்டரென்னும் பெயர் கொடுக்கப்பட்டது. கணபதீச்சுரருடைய திருவருளினாலே அவருக்குத் திருவெண்காட்டு நங்கையாரிடத்திலே, சீராளதேவரென்னும் புத்திரர் அவதரித்தார். அப்பிள்ளைக்கு ஐந்துவயசிலே வித்தியாரம்பஞ் செய்வித்தார். அந்நாளிலே அத்திருப்பதிக்கு எழுந்தருளிவந்த திருஞான

சம்பந்தப்பிள்ளையாரை எதிர்கொண்டு அழைத்து, அவரை வணங்கித் துதித்து, அவராலே திருப்பதிகத்திலே சிறப்பித்துப்பாடியருளப்பட்டார்.

சிவபெருமான் சிறுத்தொண்டநாயனருடைய மெய்யன்பை நுகர்ந்தருளுதற்குத் திருவுளங்கொண்டு, உட்சமயங்களாறனுள் ஒன்றுகிய வைரவத்துக்கு உரிய திருவேடங்கொண்டு, திருக்கைலாசத்தினின்றும் நீங்கி, திருச்செங்காட்டங்குடியை அடைந்து, சிறுத்தொண்டநாயனருடைய வீட்டு வாயிலிற் சென்று, "சிறுத்தொண்டர் வீட்டில் இருக்கின்றீரோ" என்று வினவ; தாதியாராகிய சந்தனநங்கையார் முன் வந்து வணங்கி, "சுவாமீ, அவர் சிவனடியார்களைத் தேடிப் புறத்தே போய்விட்டார். தேவரீர் உள்ளே எழுந்தருளும்" என்றார். அதற்கு வைரவர் "பெண்கள் இருக்கும் இடத்தில் நாம் தனியே புகோம்" என்று அருளிச்செய்ய; திருவெண்காட்டுநங்கையார் அதைக் கேட்டு, "இவ்வடியவர் போய்விடுவார் போலும்" என்று பயந்து, விரைந்து வந்து, "சுவாமீ, அடியேனுடைய நாயகர் எப்போதும் சிவனடியாரைத் திருவமுது செய்விப்பவர். இன்றைக்கு ஒருவரையுங் காணுமையால் தேடிப்போயினர். தேவரீருடைய திருவேடத்தைக் கண்டாராயின் மிகமகிழ்வர். இனித் தாழ்க்கார், இப்பொழுதே வந்துவிடுவார். எழுந்தருளியிரும்" என்று விண்ணப்பஞ்செய்தார். வைரவர் "நாம் உத்தரதேசத்திலுள்ளோம். சிறுத்தொண்டரைக் காணவந்தோம். எப்படியும் அவர் இல்லாதபோது நாம் இங்கே இரோம். கணபதீச்சரத்தில் உள்ள திருவாத்திமரத்தின்கீழ் இருக்கின்றோம். அவர் வந்த மாத்திரத்தே அவருக்குத் தெரிவியுங்கள்" என்று சொல்லி, திருவாத்தியை அணைந்து, அதன்கீழ் இருந்தருளினர்.

சிறுத்தொண்டநாயனர் சிவனடியார்களைத் தேடி எங்குங் காணாது, வீட்டுக்குத் திரும்பிவந்து, மனைவியாருக்குச் சொல்லித் துக்கித்தார். மனைவியார் "உத்தரதேசவாசியாகிய ஒரு வைரவர் இங்கு வந்து, நாங்கள் இங்கே எழுந்தருளியிருக்கும்படி சொல்ல, அது கேளாது கணபதீச்சரத்தில் உள்ள திருவாத்தியின்கீழே போய் இருக்கின்றனர்" என்றார்

உடனே சிறுத்தொண்டநாயனார் மிகுந்த விருப்பத்தினோடு விரைந்து சென்று, அவரைக் கண்டு வணங்கி நிற்க; அவர் "பெரிய சிறுத்தொண்டர் நீரோ" என்று திருவாய்மலர்ந்தருளினார். சிறுத்தொண்டநாயனார் அவரை வணங்கி, "சுவாமீ, சிவனடியார்கள் தங்கள் கருணைமேலீட்டினாலே அடியேனையே அப்படி அருளிச்செய்வர்கள். அது நிற்க. இன்றைக்குத் திருவமுது செய்வித்தற்குச் சிவனடியார்களைத் தேடியுங் கண்டிலேன். இப்போது அடியேன் செய்த புண்ணியத்தினாலே தேவரீரைக் கண்டேன். தேவரீர் அடியேன் வீட்டுக்கு எழுந்தருளித் திருவமுது செய்யவேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தார். வைரவர் "அன்பரே, நாம் உத்தரதேசத்தில் உள்ளேம். உம்மைக் காணவந்தோம். நம்மை அமுதுசெய்வித்தல் உம்மால் முடியாது. அது மிக அருமை" என்றார். சிறுத்தொண்டநாயனார் "தேவரீர் திருவமுது செய்தருளும் இயல்பை அருளிச்செய்யும்; சிக்கிரம் பாகம்பண்ணுவிப்பேன். சிவனடியார்கள் தலைப்பட்டால் தேடுதற்கு அரியனவும் எளியனவாம்" என்று விண்ணப்பஞ்செய்ய; வைரவர் "நாம் ஆறுமாசத்துக்கு ஒருமுறை பசுவைக்கொன்று உண்போம். அதற்கு உரிய நாளும் இந்நாளேயாம். அப்படியூட்டுதல் உம்மாலியலாது" என்றார். சிறுத்தொண்டநாயனார் "மிகநன்று. அடியேன் அநேக பசுக்களையுடையேன். தேவரீருக்குப் பிரீதியாகிய பசு இன்னது என்று அருளிச்செய்வீராகில், அடியேன் விரைந்து சென்று பாகம் பண்ணுவித்துக் காலந்தாழ்க்காமல் வருவேன்" என்று சொல்ல; வைரவர் "நாம் உண்பது நரபசு. அது ஐந்து வயசினையுடையதாயும், அவயவப்பழுதில்லாததாயும், ஒருகுடிக்குத்தான் ஒன்றேயாயும் இருக்கவேண்டும். அவ்வியல்புடைய சிறுவனை மனமகிழ்ச்சியோடு தாய் பிடிக்கத் தந்தை அரிதல் வேண்டும். இப்படிச் சமைக்கப்பட்ட கறியே நாம் இட்டு உண்போம்" என்றார். சிறுத்தொண்டநாயனார் "தேவரீர் திருவமுதுசெய்வீராகில், அடியேனுக்கு இதுவும் அரிதன்று" என்று சொல்லி, அவரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குப்போயினர்

சிறுத்தொண்டநாயனருடைய வரவை நோக்கி நின்ற மனைவியார் அவருடைய மலர்ந்த முகத்தைக் கண்டு, அவரை வணங்கி, அடியாருடைய செய்கையை வினவ; அவர் மனைவியாரை நோக்கி, "ஒருகுடிக்கு ஒரே சிறுவனாகி ஐந்துவயசுடையனுமாய் அவயவப்பழுதில்லாதவனுமாய் இருக்கும் பிள்ளையை மனமகிழ்ச்சியோடு தாய்பிடிக்கத் தந்தையரிந்து சமைத்தால் திருவமுதுசெய்தற்கு உடன்பட்டருளினர்" என்றார். அப்பொழுது மனைவியார் "அவ்வடியவரை அவர் விரும்பியபடி திருவமுதுசெய்விக்கும்பொருட்டு ஒருகுடிக்கு ஒருவனுஞ் சிறுவனைப்பெறுவது எப்படி" என்று சொல்ல; சிறுத்தொண்டநாயனர் "என் பிராணநாயகியே, இத்திறத்துச் சிறுவனை வேண்டிய திரவியங்களைக் கொடுத்தால் தருவாருளராயினும், நேர்நின்று அச்சிறுவனை அரியத்துணியுந் தந்தை தாயரோ இல்லை. இனித் தாழ்க்காது நாம் பெற்ற சிறுவனையே அழைப்போம்" என்றார். மனைவியார் அதற்கு இசைந்து, "நம்மைக் காக்கும்பொருட்டு அவதரித்த புதல்வனைப் பள்ளிக்கூடத்தினின்றும் அழைத்துக்கொண்டு வாரும்" என்று சொல்ல; சிறுத்தொண்டநாயனர் மனமகிழ்ச்சியோடு பள்ளிக்கூடத்துக்கு விரைந்து சென்று தம்முடைய புதல்வராகிய சிராளதேவரை எடுத்துத் தோண்மேல் வைத்துக்கொண்டு, வீட்டுக்குத் திரும்பிவந்தார். மனைவியார் எதிர்வந்து புதல்வரை வாங்கி, திருமஞ்சனமாட்டி, கோலஞ்செய்து, நாயகர் கையிற் கொடுத்தார். அவர் அடுக்களையிற் செல்லாது உலகத்தவர்கள் அறியாவண்ணம் ஒருமறைவிடத்திற் கொண்டுபோனார். அப்பிள்ளையைப் பெற்ற தாயார் பாத்திரங்களைக் கழுவிக்கொண்டு வந்தார். தந்தையார் புதல்வரை யெடுத்து அவருடைய தலையைப் பிடிக்க; தாயார் அப்புதல்வருடைய இரண்டு கால்களையுந் தம்முடைய மடியிலே இடுக்கி, அவர் கைகள் இரண்டையும் தம்முடைய கைகளினுலே பிடிக்க, அப்புதல்வர் தம்முடைய தந்தைதாயர் மிக மகிழ்கின்றனரென்று மகிழ்ந்து நகை செய்ய, தந்தையார் மனமகிழ்ச்சியோடு ஆயுதத்தினுலே அவருடைய தலையை அரிதலாகிய அரிய செய்கையைச் செய்தார். திருவெண்காட்டுநங்கையார் அறுத்த தலையின் இறைச்சி திருவமுதுக்கு ஆகாது

என்று கழித்து, அதனை மறைத்து நீக்கும்பொருட்டுச் சந்தனநங்கையார் கையிற்கொடுத்துவிட்டு, மற்றையுறுப்புக்களின் இறைச்சிகளெல்லாவற்றையும் அறுத்துப் பாகம் பண்ணி, வேறு கறிகளும் அமைத்து, சோறுஞ் சமைத்துக் கொண்டு, நாயகருக்குத் தெரிவித்தார்.

நாயகராகிய சிறுத்தொண்டநாயனார் பெருங்களிப்புடையராகி, விரைந்து சென்று, திருவாத்தியின்கிழ் இருந்த வைரவரை வணங்கி, "சுவாமீ, தேவரீர் பிரீதிப்படி பாகம்பண்ணுவித்தேன். எழுந்தருளிவந்து திருவமுதுசெய்தருளல்வேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்து, அவரை வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய், ஆசனத்தில் இருத்தி, அவருடைய திருவடிகளை ஜலத்தினால் விளக்கி, அந்தத் தீர்த்தத்தைத் தங்கள் சிரசின்மேலே தெளித்து, வீடெங்கும் புரோக்ஷித்து, அவரைப் புஷ்பங்களினால் அருச்சித்துத் தூபதீபங் காட்டி வணங்கினர். வணங்கியபின், நாயனரும் மனைவியாரும் வைரவரை நோக்கி, "சுவாமீ திருவமுது படைக்கும் வகை எப்படி" என்று கேட்க; வைரவர் "அன்னத்துடன் கறிகளெல்லாம் ஒருங்கே படைக்கவேண்டும்" என்றார். மனைவியாராகிய திருவெண்காட்டுநங்கையார் பரிகலந்திருத்தி, அன்னமுங் கறியமுதும் படைத்தார். வைரவர் அதைப் பார்த்து, "நாஞ்சொல்லிய முறையே கொன்ற பசுவினது உறுப்புக்களெல்லாவற்றையும் பாகம்பண்ணினீரா" என்று வினவ; திருவெண்காட்டுநங்கையார் "தலையிறைச்சி மாத்திரம் திருவமுதுக்கு ஆகாது என்று கழித்துவிட்டோம்" என்றார். வைரவர் "அதுவும் நாம் உண்பது" என்றார். அதுகேட்டுச் சிறுத்தொண்டநாயனர் மனைவியாரோடுந் திகைத்து அயர; சந்தனநங்கையார் "நான் அத்தலையிறைச்சியை அடியவர் திருவமுது செய்யும்பொழுது நினைக்கவரும் என்று முன்னமே பாகம்பண்ணி வைத்தேன்" என்று சொல்லி எடுத்துக்கொடுக்க; திருவெண்காட்டுநங்கையார் முகமலர்ந்து, வாங்கிப் படைத்தார். அதன்பின் வைரவர் சிறுத்தொண்டநாயனரை நோக்கி, நாந்தனியே உண்ணேம். சிவனடியார்களைக் கொண்டுவாரும்" என்று

அருளிச்செய்ய; சிறுத்தொண்டநாயனார் ஏங்கி, "ஐயோ! அடியவர் திருவமுது செய்தற்கு இடையூறு இதுவோ" என்று நினைந்து, வீட்டுக்குப் புறத்திலேபோய் சிவனடியார்களைத் தேடிக் காணாது, துக்கத்தோடு திரும்பி வந்து, வைரவரை வணங்கி, "சுவாமீ, சிவனடியார்களைக் காணேன். அடியேனும் திருநீறிடுவாரைக் கண்டு அன்னங்கொடுப்பேன்" என்று விண்ணப்பஞ்செய்ய, வைரவர் சிறுத்தொண்டநாயனாரை நோக்கி, "உம்மைப்போலத் திருநீறிட்டார் உளரோ? நீர் இருந்து உண்ணும்" என்று சொல்லி, பின் திருவெண்காட்டுநங்கையாரை நோக்கி, "இவருக்கு வேறொரு பாகலந் திருத்தி, அன்னமும் இறைச்சியும் நமக்குப் படைத்ததில் எடுத்துப் படையும்" என்று அருளிச்செய்ய; அவரும் அப்படியே எடுத்துப் படைத்தார். சிறுத்தொண்டநாயனார் வைரவரை ஊட்டவேண்டி, உண்ணப்புகலும்; வைரவர் தடுத்தருளி, "ஆறுமாசத்துக்கு ஒருமுறை உண்ணுகின்ற நாம் உண்ணுமளவும் தரியாமல்; எப்பொழுதும் உண்கின்ற நீர் முன் உண்பது என்னே! நம்முடன் உண்ணும்பொருட்டு உமக்குப் புத்திரன் உண்டேல் அழையும்" என்றார். சிறுத்தொண்டநாயனார் "இப்போது அவன் உதவான்" என்று சொல்ல; வைரவர் "அவன் வந்தாற்றான் நாம் உண்போம். தேடி அழையும்" என்றார். சிறுத்தொண்டநாயனார் தரியாது எழுந்து, மனைவியாரோடு விரைந்து வீட்டுக்குப் புறத்திலேபோய், "புதல்வனே வா" என்று அழைக்க; மனைவியாரும் நாயகரது பணியில் நிற்பாராகி, சீராளனே, சிவனடியார் அடியேங்கள் உய்யும்பொருட்டு உடனுண்ண உன்னை அழைக்கின்றார், வா" என்று அழைத்தார். அப்பொழுது அப்புதல்வர் பரமசிவனது திருவருளினாலே பள்ளிக்கூடத்தினின்றும் ஓடிவருபவர்போல வந்தார். தாயார் அவரை எடுத்துத் தழுவி நாயகர்கையிற் கொடுக்க, அவர் "இனிச் சிவனடியார் திருவமுது செய்யப்பெற்றோம்" என்று மனமிகமகிழ்ந்து, அப்புதல்வரை விரைவிற்கொண்டு அடியவரைத் திருவமுது செய்வித்தற்கு உள்ளே வந்தார். அதற்குமுன் வைரவர் மறைந்தருள; சிறுத்தொண்டநாயனார் அவரைக் காணுமையால் மனங்கலங்கித் திகைத்து விழுந்தார். கலத்திலே இறைச்சிக்

கறியமுதைக் காணுமையால அச்சமுறறார். "வைரவா அடி யேங்கள் உய்யும்பொருட்டுத் திருவமுது செய்யாமல் எங்கே ஒளித்தனரோ" என்று தேடி மயக்கங்கொண்டு, புறத்திற் செல்ல; அச்சிறுத்தொண்டநாயனர் செய்தது நிஷித்தாநுட் டானமாயினும், அவர் சிவானந்தானுபவமேலிட்டு நிற்கை யால் கருவிகரணங்கள் தற்போதச் சீவிப்பாய் நின்று செய் யாது சிவபோதச் சீவிப்பாய் எழுந்து செய்தமைபற்றி அதனை விதிதானுட்டானமாகவே கொண்டருளிய சிவபெரு மான்; அரிபிரமேந்திராதிதேவர்கள் முனிவர்கள் முதலாயி னோர் சேவிக்க, உமாதேவியாரோடும் சுப்பிரமணிய சுவாமி யோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருளினர். சிறுத்தொண்டநாயனரும் மனைவியாரும் புதல்வரும் தாதி யாருமாகிய நால்வரும் அவர்களைத் தரிசித்து, ஆனந்தவருவி சொரிய, எலும்பும் மனமும் நெக்கு நெக்குருக, பரவசர்க ளாய் விழுந்து நமஸ்கரித்து, எழுந்து அஞ்சலியஸ்தர்களாகி நின்று, தோத்திரம்பண்ணினர்கள். பின்பு பரமசிவனும் பார் வதியம்மையாரும் சுப்பிரமணியசுவாமியும், அவர்கள் நால் வரையும், தங்களை எக்காலமும் பிரியாது வணங்கிப் பேரின் பத்தை நுகர்ந்துகொண்டிருக்கும்பொருட்டு, உடன்கொண்டு திருக்கைலாசத்தை அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

சேரமான்பெருமாணயனர் புராணம்.

மலைநாட்டிலே, இராஜதானியாகிய மகோதையென் னும் பெயரையுடைய கொடுங்கோளூரிலே, சேரர்குடியிலே, பெருமாக்கோதையாரென்னும் பெயரையுடைய ஒரு சற்புத் திரர் சைவநெறி வாழும்படி அவதரித்தார். அவர் பாலிய தசையிலேதானே, வியாதிபீடையினல் வருஞ் சனனவை ராக்கியம், தன்னுடைய தேகதோஷத்தைக் கண்டுவரும் தேகவைராக்கியம், சகலசம்பத்துக்களையும் குறைவற அனு பவித்து இனிப்போதும் என்று வரும் ஐசுவரியவைராக்கி யம், ஆன்மிக தைவிக உற்பௌதிகங்களினலே வரும் பிர

பஞ்ச வைராக்கியம், அருத்தத்தைத் தேடுதலினாலுங் காத்தலினாலுங் கள்ளர் கொண்டுபோதலினாலும் உண்டாகுந் துக்கம்பற்றி வருந் திரவியவைராக்கியம், தாய் தந்தை மனைவி மைந்தர் சுற்றத்தார் நண்பர் முதலாயினுரைப் பிரிந்த துக்கத்தினுலே கூட்டமெல்லாம் பிரிந்த காலத்திலே துக்கத்துக்கு ஏதுவென்று வருஞ் சங்கவைராக்கியம், காமுகனுயிருக்கின்றவன் தான் மோகிக்கப்பெற்ற ஸ்திரீயினிடத்திலே குணத்திலாயினும் தேகத்திலாயினும், வைராக்கிய கேதுவாகிய ஒருதோஷத்தைக் கண்டபோது வரும் ஸ்திரீவைராக்கியம், அன்னபானுதிகள் ஒருபொழுது இல்லாதிருக்கினும் தேகம் நில்லாது எத்தனைநாள் எத்தனைவகையாகப் புசித்தாலும் திருத்தியடையாது என்று வரும் போசன வைராக்கியம், தானத்துக்குப் போய்த் தள்ளுண்டதனுல் வரும் பிரதிக்கிரகவைராக்கியம், இதத்திலே இப்படிப்பட்டதொரு ஏதுவுமின்றிப் பூர்வஜன்ம சிவபூஜா புண்ணியபலத்தினுலே தேகாதியாகிய சர்வவஸ்துக்களிலும் வரும் வைராக்கியம் என்னும் பத்துவகை வைராக்கியங்களுள் இறுதியில் நின்ற நிருகேதுகமாகிய உத்தமவைராக்கியத்தையுடையவராகி, சிவபெருமானுடைய திருவடியை அடைதல்வேண்டுமெனக்கருதி, இராஜபுத்திரருக்குரிய தொழில்களைச் செய்தலின்றி, திருவஞ்சைக்களமென்னுஞ் சிவஸ்தலத்தை அடைந்து, "பரமசிவன் சுவதந்திரர், நாம் பரதந்திரர்" என்று உணர்ந்து, சிவாதீனமாய் நின்று, தினந்தோறும் பிராமமுகூர்த்தத்தில் எழுந்து, ஸ்நானம்பண்ணி அநுட்டானஞ் செய்துகொண்டு, திருநந்தனவனம் வைத்தல், பூக்கள்பறித்தல், திருமாலைகட்டல், திருவலகிடல், திருமெழுக்கிடல், திருப்பாட்டுப்பாடல் முதலிய திருத்தொண்டுகளைச் செய்வாராயினர்.

இப்படி நிகழுங்காலத்திலே, செங்கோற்பொறையன் என்னுஞ் சேரமகாராஜனுக்கு இது நித்தியம் இது அநித்தியம் என்கின்ற பகுத்தறிவும் அநித்தியமாகிய இம்மை மறுமையின்பங்களில் வெறுப்பும், பிறவித்துன்பங்களும், அவன் செய்த புண்ணியபலத்தினுலே தோன்றின. அவை தோன்றலே, நித்தியமாகிய மோக்ஷத்திலே ஆசை உண்டாயிற்று.

அதனால் அவன் பிறவிக்குக் காரணமாகிய யோகமுயற்சியைச் செய்யல்வேண்டுமென்று தெளிந்து, அரசியற்றுதலினின்று நீங்கி, தவஞ்செய்யும்பொருட்டுத் தபோவனத்தை அடைந்தான்.

மந்திரிமார்கள் சிலநாள் ஆலோசித்துத் தெளிந்து, திருவஞ்சைக்களத்திலே திருத்தொண்டு செய்துகொண்டிருக்கின்ற அச்சேரர்மரபிற்கு முதல்வராகிய பெருமாக்கோதையாரிடத்திலே போய், அவரை வணங்கி நின்று, "இம்மலை நாட்டை நீரே முடிசூடி அரசியற்றல்வேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாக்கோதையார் "இவர்கள் வார்த்தை இன்பமயமாகிய திருத்தொண்டுக்கு இடையூருயிருக்கின்றது. சிவபத்தியிலே சிறிதும் வழுவாது அரசியற்றுதற்குத் திருவருள் உளதாயின், இதனை எம்பெருமானுக்கு விண்ணப்பஞ் செய்து அறிவேன்" என்று, ஆலயத்தினுள்ளே பிரவேசித்து, சிவபெருமானை வணங்கி விண்ணப்பஞ்செய்து, அவருடைய திருவருளினாலே அவரிடத்தே வைத்த பத்திவழுவாது அரசியற்றுஞ் சத்தியையும், யாரும் யாவும் கழறினவைகளனைத்தையும் அறியும் அறிவையும், நாசமில்லாத மகாபராக்கிரமத்தையும், பெருங்கொடையையும், அரசருக்குரிய படை வாகனமுதலிய வெல்லாவற்றையும் கைவரப்பெற்று, நமஸ்கரித்துக்கொண்டு, புறத்தணைந்து, மந்திரிமார்களுடைய வேண்டுகோளுக்கு உடன்பட்டார். மந்திரிமார்கள் பெருங்களிப்புடையர்களாகி, அவரை நமஸ்கரித்தார்கள்.

கழறிற்றறிவாராகிய அப்பெருமாக்கோதையார், ஆன்மாக்களெல்லாம் உய்யும்பொருட்டுச் சுபதினத்திலே சுபமுகூர்த்தத்திலே முடி சூடி, சிவாலயத்தை வலஞ்செய்து, சந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து, யானைமேற்கொண்டு, கொற்றக்குடையும் வெண்சாமரமும் உரியவர்கள் தாங்க, மகா அலங்காரத்தோடு நகர்வலஞ் செய்தார். செய்யும்பொழுது, ஒரு வண்ணான் தோளிலே உவர்ப்பொதி சுமந்துகொண்டு தமக்கு முன்னே வரக்கண்டு, அவனுடைய சரீரம் மழையினாலே கரைந்த உவர் ஊறப்பெற்று வெளுத்திருத்தலால் விபூதியை உத்தூளனஞ்செய்த சிவனடியாரது

திருவேடம்போலுதலே உணர்ந்து, அந்தக்ஷணத்திலேதானே யானையினின்றும் இறங்கி, பேராசையோடு விரைந்துசென்று, கைதொழுதார். அது கண்டவுடனே அவ்வண்ணன் மனங் கலங்கி, அவரை விழுந்து நமஸ்கரித்து, "அடியேனே யார் என்று கொண்டது! அடியேன் அடிவண்ணன்" என்று சொல்ல; சேரமான்பெருமாணயனரும் "அடியேன் அடிச் சேரன். தேவரீர் திருநீற்றுவேடத்தை நினைப்பித்தீர். வருந் தாதே போம்" என்று சொல்லியருளினர். மந்திரிமார்கண் முதலாயினரெல்லாரும் சேரமான்பெருமாணயனருடைய சங்கமபத்தி மிகுதியைக் கண்டு, ஆச்சரியமடைந்து, சிரசின் மேலே அஞ்சலிசெய்து தோத்திரம் பண்ணினர்கள். சேர மான்பெருமாணயனர் யானைமேலேறி, நகரியை வலங்கொ ண்டு, மாளிகைவாயிலிலே புகுந்து, யானையினின்றும் இறங்கி, மண்டபத்தை அடைந்து, இரத்தினசிங்காசனத்திலேறி, வெண்கொற்றக்குடை நிழற்ற, வெள்சாமரம் வீச, அரசர் கள் மலர்தூவி வணங்கித் துதிக்க, வீற்றிருந்தருளினர். இங் ஙனமிருந்து, மனுநீதிநெறியை நடத்தி, எண்ணிறந்த அரசர் கள் திறைகொணர அகத்தும் புறத்தும் பகையை அறுத்து, சைவசமயம் அபிவிருத்தியாகும்படி அரசியற்றுவாராயினர்.

அந்நாயனர் தில்லையின்கணுள்ள திருச்சிற்றம்பலத் திலே ஆனந்ததாண்டவஞ் செய்தருளுஞ் சபாநாயகருடைய திருவடித்தாமரைகளே தாந்தேடும்பொருளும் தமக்குரிய பெருந்துணையுமென்று தெளிந்த மெய்யறிவினாலே, அத்திரு வடியை மிகுந்த அன்பினோடு சைவாகம விதிப்படி எந்நா ளும் பூசிப்பாராயினர். பூசைமுடிவிலே சபாநாயகர் அவ ரைத் தமது திருச்சிலம்பொலியைக் கேட்பிப்பாராயினர். சேரமான்பெருமாணயனர் சிவனடியார்களுக்குந் தரித்திரர் களுக்குங் கனகமாரி பொழிகின்றவராகி, பரமசிவனுக்கு உரிய பல யாகங்களைச்செய்தார்.

இப்படி நிகழுங்காலத்திலே, பாண்டிநாட்டிலே மதுரை யில் எழுந்தருளியிருக்குஞ் சோமசுந்தரக்கடவுள் தம்மை அன்பினோடும் இசைப்பாட்டினாலே துதிக்கின்ற பாணபத் திரருக்குப் பெருஞ் செல்வத்தைக் கொடுத்தருளுதற்குத்

திருவுளங்கொண்டு, இரவில் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "உனக்குப் பொன் இரத்தினம் பட்டாடை முதலியவைகளெல்லாவற்றையும் நீ வேண்டியபடி குறைவின்றித் தரும்பொருட்டு, நம்மேல் எப்பொழுதும் அன்புடையனாகிய சேரனுக்கு ஓலை தருவோம். தாழ்க்காமற்போய்வா" என்று அருளிச்செய்து, "மதிமலி புரிசை மாடக் கூடற்—பதிமிசை நிலவு பானிற வரிச்சிற—கன்னம் பயில்பொழி லால வாயின்—மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்—பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்—குரிமையி னுரிமையி னுதவி யொளிதிகழ்—குருமா மதிபுரை குலவிய குடைக் கீழ்ச்—செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க—பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்—றன்போ லென்பா லன்பன் றன்பாற்—காண்பது கருதிப் போந்தனன் –மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே" என்னுந் திருப்பாசுரத்தை வரைந்த திருமுகத்தைக் கொடுத்தருளினர்.

பாணபத்திரர் அத்திருமுகத்தைத் தலைமேற்கொண்டு, அப்பொழுதே புறப்பட்டு, மலைநாட்டிற்சென்று, கொடுங்கோளூரை அடைந்து, மாளிகைக்கு முன்வந்து, சேரமான்பெருமாணயனாருக்கு அறிவித்தார். உடனே அவர் சிரசின்மேலே கைகுவித்து, மிகுந்த அன்பினோடுங் கண்ணீர் சொரிய, எழுந்து மாளிகைக்குப் புறத்தில் வந்து, பாணபத்திரரைப் பல முறை வணங்கி, "சுவாமீ, தேவரீர் அடியேனை ஒருபொருளென மதித்துத் திருமுகங்கொண்டு வந்தீரே" என்றார். அப்பொழுது பாணபத்திரர் சிவபிரானுடைய திருமுகத்தைக் கையிலே கொடுத்து வணங்க, சேரமான்பெருமாணயனார் அதனை முடிமேற்கொண்டு கூத்தாடி, மொழி குழற, ஆனந்தவருவி சொரிய, பரவசராய்ப் பூமியிலே பலமுறை விழுந்தார். திருமுகத்தைப் பலதரம் வணங்கி, அதனை வாசித்து, திருவருளைத் துதித்து, மாளிகையினுள்ளே புகுந்து, மந்திரிமார்களை நோக்கி, "நம்முடைய குலமாளிகையில் இருக்கின்ற பண்டாரமுழுதையும் பொதிசெய்து ஆனின்மேல் ஏற்றிக்கொண்டு வாருங்கள்" என்று ஆஞ்ஞாபிக்க; அவர்கள் ஏற்றிக்கொண்டுவந்து வணங்கினர்கள். சேரமான்பெருமா

ணயனர் பாணபத்திரருக்கு அந்தத்தனங்களை வெவ்வேறுகக் காட்டி, "சுவாமீ, தேவரீர் இவைகளையும் யானை குதிரை தேர் காலாள் என்னுஞ் சதுரங்கங்களையும் அடியேனுடைய அரசையுங் கைக்கொண்டருளும்" என்று சொல்ல, பாணபத்திரர் தமக்குச் சேரமான்பெருமாணயனர் தந்ததனங்களெல்லாவற்றையுங் கண்டு, மனமகிழ்ந்து, அதிசயித்து, அவரை நோக்கி, சுவாமீ, அடியேன் எனக்கு வேண்டுவனவற்றைமாத்திரங் கொள்ளும்பொருட்டே சிவாஞ்ஞை. அரசையும் அரசுறுப்பையும் தேவரீரே கைக்கொண்டருளும்" என்று சொல்லி வணங்கினர். சேரமான்பெருமாணயனரும் சிவாஞ்ஞையை மறுத்தற்கு அஞ்சி, அதற்கு உடன்பட்டார். பாணபத்திரர் தனங்களெல்லாவற்றையும் யானை குதிரை உள்ளிட்டனவற்றுள் வேண்டுவனவற்றையுங்கொண்டு, ஒரு யானைமேல் ஏறிக்கொண்டுபோனர். சேரமான் பெருமாணயனர் பாணபத்திரருக்குப்பின், கண்ணீர்சொரிய, கைதொழுதுகொண்டு செல்ல, பாணபத்திரர் நகர்ப்புறத்தில் அவரிடத்திலே விடைபெற்றுக்கொண்டு போய், மதுரையை அடைந்தார்.

சேரமான்பெருமாணயனர், ஒருநாள் முன்போலப் பூஜாந்தத்திலே சபாநாயகருடைய திருச்சிலம்பொலி தமக்குக் கேளாதொழிய, மனமயங்கி, "அடியேன் யாது பிழை செய்தேனே" என்று பொருமி, "இனி இந்தத் தேகத்தினால் அடையும் வேறின்பம் யாது" என்று உடைவாளை உருவித் தமது மார்பிலே நாட்ட, சபாநாயகர் விரைந்து திருச்சிலம்பொலியைக் கேட்பித்தார். உடனே நாயனர் உடைவாளை அகற்றி நமஸ்காரம்பண்ணித் தோத்திரஞ்செய்து, "எம்பெருமானே, இத்திருவருளை முன்செய்யாதொழிந்தது என்னை" என்றார். அப்பொழுது சபாநாயகர் சைவசமயாசாரியராகிய சுந்தரமூர்த்திநாயனரை நினைப்பிக்கும்பொருட்டு, எதிர்நின்றருளாது, "வன்றொண்டனெனிய சுந்தரன் கனகசபையின்கண்ணே நமது ஆனந்த நிருத்தத்தை வந்து வணங்கிப் பதிகம் பாடுதலால், நீயும் நின்று அதனைக் கேட்டு வரத் தாழ்த்தோம்" என்னுந் திருவாக்கை அருளிச்செய்

தார். சேரமான்பெருமாணயனர் "அடியார்களுக்கு இவர் அருளுங்கருணை இருந்தவாறு என்னை" என்று வியந்து, கனகசபையை வணங்கி வன்மீகண்டரையும் தரிசித்தல் வேண்டும் என்று விரும்பி, சுபதினத்திலே திருவஞ்சைக் களத்தில் எழுந்தருளியிருக்குங் கடவுளை வணங்கிக்கொண்டு, சேனைகளோடு புறப்பட்டுப்போய்ச் சிதம்பரத்தை அடைந்து கனகசபையிலே திருநிருத்தஞ்செய்தருளுஞ் சபாநாயகரை வணங்கி, சிவானந்தக்கடலுள் அமிழ்ந்தி, பொன்வண்ணத் தந்தாதி பாடியருளினர். சபாநாயகர் அதற்குப் பரிசிலாகத் தமது குஞ்சிதபாதத்தினது திருச்சிலம்பின் ஓசையை எதிரே கேட்பித்தார். சேரமான்பெருமாணயனர் காலந்தோறுஞ் சபாநாயகரைத் தரிசனஞ்செய்துகொண்டு அத்திருப்பதியில் இருந்தார்.

சிலநாளாயினபின், சுந்தரமூர்த்திநாயனரைத் தரிசித்து வணங்குதற்கு விரும்பிப் புறப்பட்டு, இடையில் உள்ள சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு, திருவாரூரை அடைந்து தம்மை எதிர்கொண்ட சுந்தரமூர்த்திநாயனரை நமஸ்கரித்து, அவரோடு திருக்கோயிலிற்சென்று, வன்மீகநாதரை வணங்கி, திருமும்மணிக்கோவை பாடி, பரவையார் வீட்டிலே போய், சுந்தரமூர்த்திநாயனரோடும் இருந்தார். சிலதினஞ் சென்றபின், சுந்தரமூர்த்திநாயனரோடு திருவாரூரை அகன்று, வேதாரணியத்தை அடைந்து, சுவாமிதரிசனஞ்செய்து, திருவந்தாதிபாடினர். அதன் பின் பாண்டிநாட்டிற் சென்று, அங்குள்ள மதுரைமுதலாகிய திருப்பதிகளை வணங்கிக்கொண்டு, சுந்தரமூர்த்திநாயனரோடுந் திருவாரூருக்குத் திரும்பி வந்து, அவரோடுஞ் சுவாமிதரிசனஞ்செய்துகொண்டிருந்தார். யலநாட்சென்றபின், சுந்தரமூர்த்திநாயனரைத் தம்முடைய ஊருக்கு வரும்படி பிரார்த்தித்து, அழைத்துக்கொண்டு சென்று, தம்முடைய கொடுங்கோளூரை அடைந்து, அவரோடும் இருந்தார். ஒருநாள் சுந்தரமூர்த்திநாயனர் வன்மீகநாதரை நினைந்து உருகி, திருவாரூருக்குப் போம்படி எழுந்து செல்ல, சேரமான்பெருமாணயனர் பிரிவாற்றாதவராகி, எழுந்து அவரைப் பின்தொடர்ந்து, போகாதபடி தடுத்து,

அதற்கு அவர் உடன்படாமை கண்டு, மந்திரிகளைக்கொண்டு தம்முடைய திருமாளிகையில் உள்ள பண்டாரமுழுதையும் பொதிசெய்து ஆட்களின் மேலே ஏற்றுவித்து, சுந்தரமூர்த்திநாயனருக்கு முன் செல்லும்படி அனுப்பி, அந்நாயனரை விழுந்து நமஸ்கரித்தார். சுந்தரமூர்த்திநாயனர் சேரமான் பெருமாணயனரைத் தழுவி, விடைகொடுத்துச் சென்று, திருவாரூரை அடைந்தார். சுந்தரமூர்த்திநாயனரிடத்திலே விடைபெற்ற சேரமான்பெருமாணயனர் சுந்தரமூர்த்திநாயனரை மறவாத சிந்தையோடு, கொடுங்கோளூரிலே அரசு செய்துகொண்டிருந்தார்.

நெடுநாளாயினபின், சுந்தரமூர்த்திநாயனர் பின்னும் கொடுங்கோளூருக்கு வந்து, சேரமான்பெருமாணயனரோடும் எழுந்தருளியிருந்தார். பலநாளாயினபின், ஒருநாள் சேரமான்பெருமாணயனர் ஸ்நானம்பண்ணும்பொழுது, சுந்தரமூர்த்திநாயனர் திருவஞ்சைக்களத்துக்குப் போய், சுவாமி தரிசனஞ்செய்து, திருக்கைலாசத்தினின்றும் சிவபெருமானால் அனுப்பப்பட்ட வெள்ளையானையின்மேல் ஏறி, தம்முடைய தோழராகிய சேரமான்பெருமாணயனரை நினைத்துக்கொண்டு சென்றார். சேரமான்பெருமாணயனர் சுந்தரமூர்த்திநாயனருடைய செயலை அறிந்த, அந்தக்ஷணத்தில் அருகிலே நின்ற ஒரு குதிரையில் ஏறிக்கொண்டு திருவஞ்சைக்களத்துக்குப்போய், வெள்ளையானையின்மேற்கொண்டு ஆகாயத்திற் செல்லுஞ் சுந்தரமூர்த்திநாயனரைக் கண்டு, தாம் ஏறிய குதிரையின் செவியிலே ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதியருளினர். உடனே அந்தக் குதிரையானது ஆகாயத்திலே பாய்ந்து, சுந்தரமூர்த்திநாயனருடைய வெள்ளையானையை அடைந்து, அதனை வலஞ்செய்து அதற்கு முன்னேகச் சென்றது. சேரமான்பெருமாணயனருடைய படைவீரர்கள் குதிரையிற்செல்லும் அந்நாயனரைத் தங்கள் கண்ணுக்குப் புலப்படும் எல்லை வரைக்கும் ஆகாயத்திலே கண்டு, பின் காணுமையால், மிகுந்த திடபத்தியினாலே உருவிய உடைவாட்களினால் தங்கள் தங்கள் தேகத்தை வீழ்த்தி, வீரயாக்கையைப் பெற்றுப் போய், சேரமான்பெருமாணயனருக்கு முற்பட்டு, அவரைச்

சேவித்துக்கொண்டு சென்றார்கள். சேரமான்பெருமாணயனரும்சுந்தரமூர்த்திநாயனரும், திருக்கைலாசத்தின் தெற்குவாயிலுக்கு முன் போனவுடனே, குதிரையினின்றும் யானையினின்றும் இறங்கி, பலவாயில்களையும் கடந்து, திருவணுக்கன்றிருவாயிலை அடைந்தார்கள். அங்கே சேரமான்பெருமாணயனர் தடைப்பட்டு நிற்க; சுந்தரமூர்த்திநாயனர் உள்ளே போய்ச் சிவசந்நிதானத்திலே விழுந்து நமஸ்கரித்து எழுந்து ஸ்தோத்திரம்பண்ணி, "சுவாமீ, தேவரீருடைய திருவடிகளை அடையும்பொருட்டுச் சேரமான்பெருமாள் திருவணுக்கன்றிருவாயிலின் புறத்திலே வந்து நிற்கின்றார்" என்று விண்ணப்பஞ்செய்தார். பரமசிவன் சேரமான்பெருமாணயனரை உள்ளே அழைப்பிக்க; அவர் விரைந்து வந்து, சந்நிதானத்திலே நமஸ்கரித்துத் தோத்திரம்பண்ணினர். பரமசிவன் திருமுறுவல் செய்து, "இங்கே நாம் அழையாதிருக்க, நீ வந்ததென்னே" என்று அருளிச்செய்ய; சேரமான்பெருமாணயனர் அஞ்சலிசெய்து நின்று, "சுவாமீ, சுந்தரமூர்த்திநாயனருடைய திருவடிகளைத் துதித்து அவர் ஏறிய வெள்ளையானைக்குமுன் அவரைச் சேவித்துக்கொண்டு வந்தேன். தேவரீர் பொழிகின்ற பெருங்கருணைவெள்ளம் முன்கொண்டு புகுதலால், திருமுன்பு, வரப்பெற்றேன். இனி ஒரு விண்ணப்பம் உண்டு. அரிபிரமேந்திராதி தேவர்களாலும் முனிவர்களாலும் வேதங்களாலும் துதிக்கப்படுதற்கு அரியபெருமையையுடைய தேவரீர் மேல் அன்பினாலே தேவரீரது திருவருள்கொண்டு திருவுலாப்பாடினேன். அதனைத் தேவரீர் திருச்செவிசாத்தல் வேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்தார். அப்பொழுது சிவபெருமான் "சேரனே, அவ்வுலாவைச் சொல்லு" என்று திருவாய்மலர்ந்தருள; சேரமான்பெருமாணயனரும் அதனைக்கேட்பித்தார். சிவபெருமான் அதற்கு அருள்செய்து, "நம்முடைய கணங்களுக்கு நாதனாய் இரு" என்று திருவாய்மலர்ந்தருளினர். சேரமான்பெருமாணயனர் சிவகணநாதராகிச் சுவாமியைச் சேவிப்பாராயினர். அவர் அருளிச்செய்த திருக்கைலாச ஞானவுலாவைத் திருக்கைலாசகிரியிலே அன்று கேட்ட மாசாத்தானவர் அதனைத்

தரித்து, தமிழ்நாட்டில் உள்ள திருப்பிடவூரிலேவெளிப்படச் செய்ல்லி, பூமியிலே விளங்கும்பொருட்டு நாட்டியருளினர்.

திருச்சிற்றம்பலம்.

கணநாதநாயனர் புராணம்.

சோழமண்டலத்திலே, சீர்காழியிலே, பிராமணகுலத்திலே, கணநாதநாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருத்தோணியப்பருக்கு மிகுந்த அன்பினோடு தினந்தோறும் திருப்பணிகள் செய்பவர். தம்மை விரும்பிவந்து அடைபவர்களை, திருநந்தனவனம் வைத்தல், பூக்கொய்தல், திருமாலை கட்டல், திருமஞ்சனமெடுத்தல், திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கேற்றல், திருமுறையெழுதல், திருமுறை வாசித்தல் முதலாகிய திருத்தொண்டுகளுள் அவரவர்க்கு ஏற்ற திருத்தொண்டுகளிலே பயில்வித்து, அவர்களைச் சிவனடியார்களாக்குவார். கிருகத்தாச்சிரமத்தில் இருந்து சிவனடியார்களை வழிபடுவார். சமபதாரவராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனரைத் தினந்தோறும் முப்பொழுதினும் பேராசையோடு விதிப்படி பூசைசெய்துகொண்டு வந்தார். அந்தப் பூசாபலத்தினாலே திருக்கைலாசமலையை அடைந்து, சிவகணங்களுக்கு நாதராயினர்.

திருச்சிற்றம்பலம்.

கூற்றுவநாயனர் புராணம்.

களந்தையென்னும் பதியிலே, குறுநிலமன்னர் குலத்திலே, கூற்றுவநாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை விதிப்படி உச்சரிப்பவர். சிவனடியார்களுக்குத் திருத்தொண்டு செய்பவர். அவர் திருவருள் வலியினாலே பெருஞ்செல்வமுடையவராகி, கச ரத துரக பதாதியென்னுஞ் சதுரங்கங்கள் நிறைந்த வீரச்செருக்கில் மேலாயினர். பலவரசர்களோடு யுத்தஞ்செய்து, அவர்களைவென்று,

படும் கௌபீனமும் பத்தியிலே சிறிதுங் குறைவில்லாத அமர்நீதிநாயனருடைய அடிமைத்திறமும் பெருமையில் ஒத்திருந்தபடியால், துலாக்கோலின் இரண்டு தட்டுக்களும் ஒத்து நின்றன. அவ்வற்புதத்தைக் கண்டவர்களெல்லாரும் அமர்நீதிநாயனரை வணங்கி ஸ்தோத்திரஞ் செய்தார்கள். தேவர்கள் ஆகாயத்தினின்றும் கற்பகவிருக்ஷங்களின் புஷ்பங்களை மழைபோலப் பொழிந்தார்கள். திருக்கைலாசபதி தாங்கொண்டுவந்த பிரமசாரி வடிவத்தை ஒழித்து; ஆகாயத்திலே பார்வதிதேவியாரோடு இடபாரூடராய்த் தோன்றி, தம்மைத் தரிசித்து அந்தத் தராசுத்தட்டிலேதானே நின்றுகொண்டு ஸ்தோத்திரஞ்செய்கின்ற அமர்நீதிநாயனர் அவர் மனைவியார் புத்திரர் என்னு மூவர்மேலும் திருவருளைக் கஞ்செய்து, "நீங்கள் மூவிரும் நம்முடைய அருளாற் பெற்று, நம்முடைய சந்நிதானத்திலே நம்மை வணங்கிக்கொண்டிருங்கள்" என்று அருளிச்செய்து, மறைந்தருளினார். அமர்நீதிநாயனரும், அவர் மனைவியாரும், புத்திரரும், அக்கடவுளுடைய திருவருளினால் அந்தத் தராசுதானே தேவவிமானமாகி மேலே செல்ல, அவரோடு சிவலோகத்தை அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர்சருக்க மூற்றுப்பெற்றது.

ஏழாவது

பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம்.

பொய்யடிமையில்லாதபுலவர் புராணம்.

பாண்டிநாட்டிலே சிறந்து விளங்குகின்ற துவாதசாந்த புரமாகிய மதுராபுரியிலே, சோமசுந்தரக்கடவுளிடத்திலே, சதுரமாய் இரண்டுசாணளவினதாகி மெய்ப்புலவர்களுக்கெல்லாம் முழம் வளர்ந்து இருத்தற்கு இடங்கொடுக்கின்ற சங்கப்பலகையைப் பெற்று, அதனில் இருந்துகொண்டு தமிழ் மொழியை வளர்த்த கடைச்சங்கப்புலவர்கள் கபிலர் பரணர், நக்கீரர் முதலாக நாற்பத்தொன்பதின்மர். அவர்கள் விபூதி ருத்திராக்ஷதாரர்களாய், ஸ்ரீபஞ்சாக்ஷரஜபபரர்களாகி, அகத்தியம் தொல்காப்பியம் என்னும் இலக்கணநூல்களின்படி, ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னு நாற்கவிகளினாலும் மெய்யன்போடு பரமசிவனையே பாடி, பொய்யடிமையில்லாத புலவர்கள் எனப் பெயர்பெற்று, சிவபதம் அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

புகழ்ச்சோழநாயனர் புராணம்.

சோழநாட்டிலே, உறையூரிலே, புகழ்ச்சோழநாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் மற்றையரசர்கள் பணிகேட்க, உலகந் தம்முடைய செங்கோலின்முறை நிற்க, சைவசமயந் தழைக்க அரசியற்றினர். சிவாலயங்களெல்லாவற்றிலும் நித்திய நைமித்திகங்களை வழுவின்றி நடத்துவிப்பார். சிவனடியார்களுக்கு வேண்டுவனவற்றைக் குறிப்பறிந்து கொடுப்பார்.

இப்படியிருக்குநாளிலே, கொங்கதேசத்தரசரும் குடகதேசத்தரசரும் தருந்திறையை வாங்கும்பொருட்டு, தங்கள் குலத்தார்களுக்கு உரிய கருவூர் என்னும் இராஜதானியிலே அரசுரிமைச்சுற்றத்தோடு வந்தணைந்தார். அங்குள்ள ஆனிலை என்னுந் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற பரமசிவனை வணங்கி, மாளிகையிலே புகுந்து, அத்தாணிமண்டபத்திலே சிங்காசனத்தில் வீற்றிருந்துகொண்டு, கொங்கதேசத்தரசர்களும் குடகதேசத்தரசர்களுங் கொணர்ந்த திறைகளைக் கண்டு, அவர்களுக்கு அருள்புரிந்து, மந்திரிமாரை நோக்கி, "நம்முடைய ஆஞ்ஞாசக்கரத்துக்கு அமையாத அரசர்கள் இருக்கின்ற அரணங்கள் உளவாகில், தெரிந்து சொல்லுங்கள்" என்றார். இப்படி நிகழுநாளிலே, சிவகாமியாண்டார் கொணர்கின்ற புஷ்பங்களைச் சிதறிய தம்முடைய யானையையும் பாகர்களையும் கொன்ற எறிபத்தநாயனரை அணைந்து, "எஃகினையுங் கொன்றருளும்" என்று, தமது வாளைக் கொடுத்து, திருத்தொண்டிலே மிகச்சிறந்து விளங்கினர்.

மந்திரிமார்கள் புகழ்ச்சோழநாயனரை வணங்கி, 'திறை கொணராத அரசன் ஒருவன் உளன்" என்று சொல்ல, புகழ்ச்சோழநாயனர் வியப்பினாலே புன்முறுவல் செய்து, "அவன் யாவன்" என்று வினவ, மந்திரிமார் "அவன் அதிகன் என்பவன். அவன் சமீபத்திலே மலையரணத்துள்ளே இருப்பவன்" என்றார்கள். அதுகேட்ட புகழ்ச்சோழநாயனர் "நீங்கள் படைகொண்டு சென்று அவ்வரணத்தைத் துகளாகப் பற்றறுத்து வாருங்கள்" என்று ஆஞ்ஞாபிக்க, மந்திரிமார் சேனையோடு சென்று அம்மலையரணைப் பொடிபடுத்து, அதிகனுடைய சேனைகளை வதைத்தார்கள். அதிகன் அஞ்சி, ஓடிப்போய்ச் சுரத்தில் ஒளித்துவிட்டான். புகழ்ச்சோழநாயனருடைய படைவீரர்களிற் பலர் அதிகனுடைய படைவீரர்களின் தலைகளையும், மற்றவர்கள் நிதிக்குவைகளையும் யானை குதிரைகளையுங் கொண்டு, மந்திரிமாரோடு கருவூரிலே வந்து சேர்ந்தார்கள். புகழ்ச்சோழநாயனர் தமக்கு முன்னே படைவீரர்கள் கொண்டுவந்த தலைக்குவைகளுள் ஒருதலையின் கடையிலே ஒரு புன்சடையைக் கண்டார். கண்டபொழுதே நடுங்கி, மனங்

கலங்கி கைதொழுது, பெரும்பயத்தினுடனே எதிர்சென்று, அத்தலையிற் சடையைத் தெரியப்பார்த்து கண்ணீர் சொரிய அழுது, "நான் சைவநெறியைப் பரிபாலித்து அரசியற்றிய படி மிக அழகிது. சடைமுடியையுடையவர் பரமசிவன் அருளிச்செய்த மெய்ந்நெறியைக் கண்டவர். அவருடைய சடைத் தலையைத் தாங்கிவரக் கண்டும் அதிபாதகனுகிய நான் பூமியைத் தாங்குதற்கு இருந்தேனே" என்று சொல்லி, ஒன்று செய்யத் துணிந்து, மந்திரிமாரை நோக்கி, "பூமியைக் காத்து அரசளித்துப் பரமசிவனுக்கு வழித்தொண்டு செய்யும்பொருட்டு என்னுடைய குமாரனுக்கு முடிசூட்டுங்கள்" என்று விதித்து, அதனைக் கேட்டு அயரும் மந்திரிகளைத் தேற்றி அக்கினி வளர்ப்பித்து, விபூதியை உத்தூளனஞ் செய்து, சடைச்சிரத்தை ஒரு பொற்கலத்தில் வந்தி, தம் முடைய திருமுடியிலே தாங்கி, அவ்வக்கினியை வலஞ் செய்து உயிர்த்துணையாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை எடுத்து ஓதிக்கொண்டு, அதனுள்ளே புகுந்து, பரமசிவனது திருவடி நிழலிலே அமர்ந்திருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

நரசிங்கமுனையரையநாயனார் புராணம்.

திருமுனைப்பாடி நாட்டிலே, குறுநிலமன்னர் குலத்திலே, நரசிங்கமுனையரையநாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் தமக்குப் பெருஞ்செல்வமாவது விபூதியே என்னுஞ் சிந்தையுடையவர். சிவனடியார்களது திருவடியை அடைதலே தமக்குப் பெரும்பேறெனத் துணிந்தவர். அநித்தியமுந் துக்கமுமாகிய அரசியற்கையில் வைத்த விருப்பத்தாலன்று, சர்வான்மாக்களுஞ் சற்சமயமாகிய சைவத்தைக் கைக்கொண்டு முத்தியின்பத்தை அடைதல்வேண்டுமென்னும் பெருங்கருணையினுலே பல சத்திருமுனைகளைக் கடந்து, சைவநெறி வாழும்படி திருவருளை முன்னிட்டு நின்று அரசாள்வார். சிவாலயங்களோறும் நித்திய நைமித்திகங்களை ஒழுங்குபெற நடத்துவிப்பார். திருவாதிரை நக்ஷத்திரந்

தோறும் விசேஷபூசை செய்வித்து, தம்மிடத்தில் எழுந்தரு ளிவரும் சிவனடியார்களைத் திருவமுது செய்வித்து, அவர் களுக்குத் தனித்தனியே நூறுபொன் கொடுப்பார்.

ஒரு திருவாதிரை நக்ஷத்திரத்திலே அப்படியே அடி யார்களுக்குப் பொன் கொடுக்கும்பொழுது, தூர்த்தவேட முள்ள ஒருவர் விபூதி அணிந்துகொண்டு வந்தார். அவரு டைய வடிவு இருந்தபடியைக் கண்டு, பக்கத்தில் உள்ளவர் கள் இகழ்ந்து ஒதுங்க; நரசிங்கமுனையரையர் அதுகண்டு, எதிரே சென்று, அவரை அஞ்சலிசெய்து, அழைத்துக்கொ ண்டுபோய், அவரை மிக உபசரித்து, சிலம் இல்லாதவர்க ளாயினும் விபூதியை அணிந்தவர்களை உலகத்தார் இகழ்ந்து நரகத்தில் வீழாவண்ணம் அவருக்கு இருநூறு பொன்கொடு த்து, அவரை வணங்கி, இன்சொற்சொல்லி, விடைகொடுத்து அனுப்பினர். இந்தப்பிரகாரம் அருமையாகிய திருத்தொண்டு கள் பலவற்றைச் செய்து சிவபதமடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

அதிபத்தநாயனார் புராணம்.

சோழமண்டலத்திலே, நாகபட்டணத்திலே, சமுத் திரதீரத்திலே உள்ள நுளைப்பாடியிலே, பரதவர்குலத்திலே, அதிபத்தநாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரத வர்களுக்குத் தலைவராகி, அவர்கள் வலைப்படுத்துக் குவிக்கும் மீன்குவைகளைப் பெற்றுவாழ்வார். சிவபத்தியின் மிகச் சிறந்தவராதலால், அகப்படும் மீன்களிலே, ஒரு தலைமீனை "இது பரமசிவனுக்கு" என்று மிகுந்த அன்பினோடு எப் பொழுதும் விட்டுவந்தார். ஒருநாளிலே ஒருமீனே வரினும், அதனைப் பரமசிவனுக்கு என்றே விடுவார். இப்படி ஒழுகு நாட்களிலே, அடுத்தடுத்து அநேகநாட்களில் ஒவ்வொரு மீனே அகப்பட; அதனைக் கடலிலே விட்டுவந்தார். மீன் விலையினாலே மிகுஞ் செல்வம் மறுத்தமையால், தம்முடைய சுற்றத்தார்கள் உணவின்றி வருந்தவும்; தாம் வருந்தாது பட்டமீனைப் பரமசிவனுக்கு என்றே விட்டு மகிழ்ந்தார். இப்

படி நெடுநாள்வர; உணவின்மையால் திருமேனி தளரவும் தம்முடைய தொழிலிலே நிலைநின்றமையைப் பரமசிவன் அறிந்து, அவரது அன்பென்னும் அமுதை உண்பாராயினர்.

இப்படி நிகழுநாளிலே, வேறு ஒருநாள் பரதவர்கள் அவ்வொருமீனையும் அவ்வாறே விட்டு, விலைமதிப்பில்லாத மகா திவ்வியப்பிரகாசங்கொண்ட நவரத்தினங்களால் உறுப்பமைந்த அற்புதமயமாகிய ஒரு பொன்மீனை வலைப்படுத்து, கரையில் ஏறியபோது, அம்மீன் சூரியன் உதித்தாற்போல உலகமெல்லாம் வியக்கும்படி மிகப்பிரகாசிக்கக் கண்டு, அதனை எடுத்து, "ஒருமீன் படுத்தோம்" என்றார்கள். அதிபத்தநாயனார் அம்மீனைக் கண்டு, "இது ரத்தினங்களால் உறுப்பமைந்த பொன்மீனதலால், என்னை ஆட்கொண்டருளிய பரமசிவனுக்கு ஆகும்" என்று கடலிலே விட்டார். அப்பொழுது பரமசிவன் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருள; அதிபத்தநாயனார் ஆனந்தவருவி சொரிய மனங்கசிந்துருகி நமஸ்கரித்து, சிரசின்மேலே அஞ்சலிசெய்தார். சிவபெருமான் தமது உலகத்திலே அடியார்களோடு இருக்கும்படி அவருக்கு அருள்செய்தார்.

திருச்சிற்றம்பலம்.

கலிக்கம்பநாயனார் புராணம்.

நடுநாட்டிலே, திருப்பெண்ணாகடத்திலே, வைசியர் குலத்திலே, கலிக்கம்பநாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் அந்தத் திருப்பதியில் உள்ள திருத்தூங்கானை மாடமென்னுந் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் பரமசிவனுக்குத் திருத்தொண்டு செய்பவர். சிவலிங்கத்தை வழிபடினும் சிவனடியார்களை வழிபடாதொழியின் அவ்வழிபாடு சிறிதும் பயன்படாது என்று சிவாகமஞ் செப்புதலால், தினந்தோறுஞ் சிவனடியார்களைப் பேராசையோடு திருவமுது செய்வித்து, அவர்களுக்கு வேண்டுந் திரவியங்களெல்லாவற்றையுங் கொடுப்பார்.

இப்படி யொழுகுநாளிலே, ஒருநாள் தமது வீட்டிலே திருவமுதுசெய்யவந்த சிவனடியார்களெல்லாரையும் பழைய முறைப்படி திருவமுதுசெய்யத் தொடங்குவித்தற்கு, அவர்களை முன்பு அழைத்து, தமது மனைவியார் கரகநீர் வார்க்க அவர்களுடைய திருவடிகளை விளக்கும்பொழுது, முன்பு தமக்குப் பணிவிடைக்காரராய் இருந்து பணிவிடையை வெறுத்துச் சென்ற ஒருவர் சிவவேடந் தாங்கி வர; அவருடைய திருவடிகளையும் விளக்கப்புகுந்தார். மனைவியார் "இவர் எங்களிடத்திலே பணிவிடைக்காரராய் இருந்து போனவர்போலும்" என்று சிந்தித்தலால் கரகநீர் வார்க்கத் தாழ்க்க, கலிக்கம்பநாயனார் அது கண்டு, "இவள் இந்தச் சிவனடியாருடைய முந்திய நிலையைக்குறித்து வெள்கி நீர் வாராதொழிந்தாள்" என்று துணிந்து, வாளை எடுத்து, அம் மனைவியார்கையிற் கரகத்தை வாங்கி வைத்துவிட்டு, அக் கையைத் தறித்து, அக்கரகநீரை எடுத்து, தாமே அவருடைய திருவடியை விளக்கி, அத்தியந்த ஆசையோடு தாமே வேண்டுவனவெல்லாஞ்செய்து, அவ்வடியார்களைத் திருவமுது செய்வித்தார். அந்நாயனார் பின்னுஞ் சிலகாலந் திருத்தொண்டின்வழி நின்று, சிவபதத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

கலியநாயனார் புராணம்.

தொண்டை மண்டலத்திலே, திருவொற்றியூரிலே உள்ள சக்கரப்பாடியிலே, செக்கார் குலத்திலே, கலியநாயனென்பவர் ஒருவர் இருந்தார். அவர் பெருஞ்செல்வராகி செல்வ நிலையாமையையும் யாக்கைநிலையாமையையும் உணர்ந்து, சிவபுண்ணியஞ் செய்தல்வேண்டும் எனத் தெளிந்து, அந்தத் திருப்பதியில் உள்ள சிவாலயத்தின் உள்ளும் புறம்பும் அல்லும் பகலும் எண்ணிறந்த திருவிளக்கு ஏற்றுவாராயினர்.

பரமசிவன் நெடுங்காலம் இத்திருத்தொண்டைச் செய்துவரும் அவ்வடியாருடைய பத்திவலிமையைப் பிறர்க்குப்

புலப்படுத்தும் பொருட்டு, அவரிடத்து உள்ள செல்வமெல்லாங் குன்றும்படி அருள்செய்தார். அவர் தாம் வறுமையெய்தியும், தமது மரபில் உள்ளோர் தரும் எண்ணெயை வாங்கிக் கூறிவிற்றுக் கொணர்ந்து, கூலிபெற்று, தாஞ்செய்யுந் திருத்தொண்டை வழுவாது செய்தார். சிலநாளாயின பின் அவர்கள் கொடாதொழிய; அவர் மனந்தளர்ந்து, எண்ணெயாட்டும் இடத்திற் சென்று, தொழில்செய்து கூலி வாங்கி, திருவிளக்கிட்டார். பின்பு அத்தொழில்செய்வோர்களுக் பலராய்ப் பெருகினமையால், அத்தொழிலால் வரும் பேறுங் கிடையாது முட்ட, ஒருநாள் கவலிகொண்டு, தம் முடைய மனைவியாரை விற்பதற்கு நகரெங்குங் கூறி, வாங்குவார் இன்மையால் மனந்தளர்ந்து, ஆலயத்தை அடைந்து, திருவிளக்கேற்றுஞ் சமயத்திலே, "திருவிளக்குப்பணி மாறில் நான் இறந்துவிடுவேன்" என்று துணிவுகொண்டு, திரியிட்ட அகல்களைப் பரப்பி, எண்ணெய்க்குப் பிரதியாகத் தமது இரத்தத்தை நிறைக்கும்பொருட்டு ஆயுதத்தினாலே கழுத்தை அரிந்தார். அப்பொழுது கிருபாசமுத்திரமாகிய பரமசிவன் நேர் வந்து, அவருடைய கையைப் பிடித்து, அவருக்குமுன்னே இடபாரூடராய்த் தோன்றியருள; அவர் தாம் உற்ற ஊறு நீங்கி, சிரசின்மேல் அஞ்சலிசெய்துகொண்டு நின்றார். சிவபெருமான் அவரைத் தமது திருவடியிலே சேர்த்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

சத்திநாயனார் புராணம்.

சோழநாட்டிலே, வரிஞ்சியூரிலே, வேளாளர் குலத்திலே, சத்திநாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனுடைய திருவடித்தாமரைகளைச் சிறிதும் மறவாது திருத்தொண்டு செய்பவர். அவர் சிவனடியார்களை இகழ்ந்து பேசும் அதிபாதகிகளுடைய நாக்கைத் தண்டாயத்தால் இடுக்கித் தமது கையிற் கத்தியினால் அரிதலாகிய அருமைப்பெருமைத் திருத்தொண்டை நெடுங்காலம் அன்பி

படும் கௌபீனமும் பத்தியிலே சிறிதுங் குறைவில்லாத அமர்நீதிநாயனருடைய அடிமைத்திறமும் பெருமையில் ஒத்திருந்தபடியால், துலாக்கோலின் இரண்டு தட்டுக்களும் ஒத்து நின்றன. அவ்வற்புதத்தைக் கண்டவர்களெல்லாரும் அமர்நீதிநாயனரை வணங்கி ஸ்தோத்திரஞ் செய்தார்கள். தேவர்கள் ஆகாயத்தினின்றும் கற்பகவிருக்ஷங்களின் புஷ்பங்களை மழைபோலப் பொழிந்தார்கள். திருக்கைலாசபதி தாங்கொண்டுவந்த பிரமசாரி வடிவத்தை ஒழித்து; ஆகாயத்திலே பார்வதிதேவியாரோடு இடபாரூடராய்த் தோன்றி, தம்மைத் தரிசித்து அந்தத் தராசுத்தட்டிலேதானே நின்றுகொண்டு ஸ்தோத்திரஞ்செய்கின்ற அமர்நீதிநாயனர் அவர் மனைவியார் புத்திரர் என்னு மூவர்மேலும் திருவருளைக் கஞ்செய்து, "நீங்கள் மூவிரும் நம்முடைய அருளாற் பெற்று, நம்முடைய சந்நிதானத்திலே நம்மை வணங்கிக்கொண்டிருங்கள்" என்று அருளிச்செய்து, மறைந்தருளினார். அமர்நீதிநாயனரும், அவர் மனைவியாரும், புத்திரரும், அக்கடவுளுடைய திருவருளினால் அந்தத் தராசுதானே தேவவிமானமாகி மேலே செல்ல, அவரோடு சிவலோகத்தை அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர்சருக்க மூற்றுப்பெற்றது.

எட்டாவது

கறைக்கண்டன்சருக்கம்.

கணம்புல்லநாயனார் புராணம்.

வட வெள்ளாற்றுக்குத் தென்கரையில் உள்ள இருக்கு வேளூரிலே, சிவபத்தியிற் சிறந்தவரும் பெருஞ்செல்வருமாகிய ஒருவர் இருந்தார். அவர் செல்வம் பெற்றதினால் அடையும்பயன் இதுவே என்று, சிவாலயத்தினுள்ளே திருவிளக்கேற்றித் தோத்திரம்பண்ணுவாராயினர். நெடுங்காலஞ்சென்றபின், வறுமை எய்தி, சிதம்பரத்தை அடைந்து, சபாநாயகரைத் தரிசனஞ்செய்துகொண்டு, தம்முடைய வீட்டில் உள்ள பொருள்களை விற்று, அங்குள்ள திருப்புலீச்சரமென்னும் ஆலயத்திலே திருவிளக்கேற்றிவந்தார்.

இப்படியொழுகுநாளிலே, வீட்டுப்பொருள்களும் ஒழிந்துவிட; கணம்புல்லுக்களை அறிந்துகொண்டுவந்து விற்றுநெய் வாங்கித் திருவிளக்கெரித்தார். அதனால் அவருக்குக் கணம்புல்லநாயனார் என்னும் பெயர் உண்டாயிற்று. ஒருநாள் தாம் அரிந்துகொண்டு வந்த புல்லு விலைப்படாதொழியவும், தம்முடைய பணி தவறுமல் அப்புல்லையே மாட்டி விளக்கெரித்தார். முன்பு, விளக்கெரிக்கும் யாமம் வரையும் எரித்தற்கு அப்புல்லுப் போதாமையால் அடுத்த விளக்கிலே தம்முடைய திருமுடியை மடித்து எரித்தார். அப்பொழுது பரமசிவன் பெருங்கருணை செய்தருள; கணம்புல்லநாயனார் சிவலோகத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

காரிநாயனார் புராணம்.

திருக்கடவூரிலே, தமிழ்மொழியிலே மிகவல்ல காரிநாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் சொல்விளங்கிப்

பொருண்மறைந்து கிடைக்கும்படி தம்பெயரினாலே தமிழ்க் கோவைபாடி, தமிழ்நாட்டு மூவேந்தரிடத்துஞ் சென்றி, அவர்கள் மகிழும்படி, அதற்குப் பொருள் விளங்கச் சொல்லி அவர்களிடத்திற் பெற்ற திரவியங்களைக் கொண்டு, சிவாலயங்கள் பலவற்றைக் கட்டுவித்தும், சிவனடியார்களுக்கு வேண்டுந் திரவியங்களைக் கொடுத்தும், திருக்கைலாசமலையை மறவாத கருத்தினாகி, உலகமெங்குந் தம்முடைய சிவகீர்த்தியை நிறுத்தி, பரமசிவனது திருவருளைப் பெற்று, மனம்போல உடம்புந் திருக்கைலாசமலையை அடையப்பெற்றார்.

திருச்சிற்றம்பலம்.

நெடுமாறநாயனார் புராணம்.

பாண்டிநாட்டிலே, மதுராபுரியிலே, கூன்பாண்டியனென்பவர் ஒருவர் இருந்தார். அவர் சமணர்களுடைய தூர்ப்போதனையினாலே பொய்மார்க்கமாகிய ஆருகதமதத்திலே பிரவேசித்தும், சோழராஜாவுடைய புத்திரியாருஞ் சைவசிகாமணியுமாகிய மங்கையர்க்கரசியாரை மனைவியாராகவும் குலச்சிறைநாயனாரை மந்திரியாராகவும் பெற்றிருந்தமையால், சமயகுரவராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருக்கரத்தினாலே தீண்டி, விபூதிசாத்தப்பட்டு, அவர் அருளிய மெய்யுபதேசத்தைப் பெற்று, கூன் நிமிர்ந்து நெடுமாறநாயனெனப் பெயர்பெற்றார். தம்மோடு பொரவந்த வடபுலத்தரசர்களோடு திருநெல்வேலிப் போர்க்களத்திலே யுத்தஞ்செய்து வென்று, சைவசமயம் அபிவிருத்தியாகும்படி நெடுங்காலம் அரசியற்றிக்கொண்டிருந்து, சிவபதம் அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

வாயிலார்நாயனார் புராணம்.

தொண்டைநாட்டிலே, திருமயிலாப்பூரிலே, வேளாளர் குலத்திலே, வாயிலார்நாயனென்பவர் ஒருவர் இருந்தார்.

அவர் பரமசிவனே ஒருபொழுதும் மறவாத மனமாகிய ஆலயத்துள் இருத்தி, ஞானமாகிய திருவிளக்கை ஏற்றி, ஆனந்தமாகிய திருமஞ்சனமாட்டி, அன்பாகிய திருவமுதை நிவேதித்தலாகிய ஞானபூசையை நெடுங்காலஞ் செய்துகொண்டிருந்து, சிவபதத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

முனையடுவார்நாயனார் புராணம்.

சோழநாட்டிலே, திருநீடூரிலே, வேளாளர்குலத்திலே, சிவனடியார்களிடத்தே மிகுந்த பத்தியுடைய ஒரு பெரியவர் இருந்தார். அவர் சத்துருக்களுடைய போர்முனையிலே தோற்றவர்கள் தம்மிடத்தில் வந்து கூலி பேசினால், அவர்களுக்காகப் போய்ப் போர்செய்து வென்று, பொருள் சம்பாதித்து, சிவனடியார்களுக்குச் சொன்ன சொன்னபடியே நிரம்பக்கொடுத்து, அவர்களைத் திருவமுது செய்வித்துக்கொண்டிருந்தார். அதனால் அவருக்கு முனையடுவார் நாயனரென்னுந் திருநாமம் உண்டாயிற்று. அவர் நெடுங்காலம் இவ்வருமையாகிய திருத்தொண்டைச் செய்துகொண்டிருந்து, சிவபதம் பெற்றார்.

திருச்சிற்றம்பலம்.

கறைக்கண்டன்சருக்க முற்றுப்பெற்றது.

ஒன்பதாவது

கடல்சூழ்ந்தசருக்கம்

கழற்சிங்கநாயனார் புராணம்.

காடவர்குலத்திலே, பரமசிவனுடைய திருவடிகளையேயன்றி மற்றொன்றையும் அறியாத கழற்சிங்கநாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனது திருவருள் வலிமையினால் வடபுலத்தரசர்களைப் போரிலே வென்று, அவர்கள் நாடுகளைக் கவர்ந்து, எங்குஞ் சைவசமயந் தழைத்தோங்கும்படி அரசாண்டார்.

இப்படியொழுகுநாளிலே மாதேவியோடு சிவஸ்தலங்களோறுஞ் சென்று, சுவாமிதரிசனம் பண்ணித் திருத்தொண்டு செய்வாராகி, திருவாரூரை அடைந்து திருக்கோயிலிலே பிரவேசித்துச் சுவாமியை வணங்கினர். அப்பொழுது அவருடைய மாதேவி திருக்கோயிலை வலஞ்செய்து, அங்குள்ள சிறப்புக்களெல்லாவற்றையுந் தனித் தனியே பார்த்துக்கொண்டு வந்து, திருமாலைகட்டும் மண்டபத்தின் பக்கத்திலே விழுந்து கிடந்த ஒரு புதுப்பூவை எடுத்துமோந்தாள். உடனே செருத்துணைநாயனர் இதனைப் புஷ்பமண்டபத்துள் எடுத்து மோந்தாள் என்று நினைத்து, விரைந்து ஓடிவந்து, அவளைக் கூந்தலிலே பிடித்து இழுத்து வீழ்த்தி, அவளுடைய மூக்கைப் பிடித்துக் கத்தியினாலே அரிந்தார். அவள் சோர்ந்து புலம்பினாள். அப்பொழுது கழற்சிங்கநாயனரும் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு, அவளுக்குச் சமீபத்தில் வந்து, அவளைப் பார்த்து, மிகக் கோபித்து, "சிறிதும் அஞ்சாமல் இந்தக் கொடுஞ்செய்கையைச் செய்தவர் யாவர்" என்று வினவ; செருத்துணைநாயனர் "இவள் சுவாமிக்குச் சாத்தற்பாலதாகிய புஷ்பத்தை எடுத்துமோந்தமையால் நானே இப்படிச்செய்

தேன்'' என்றார். அப்பொழுது கழற்சிங்கநாயனார் அவரை நோக்கி, ''புஷ்பத்தை எடுத்த கையை யன்றே முன் துணிக்க வேண்டும்'' என்றுசொல்லி, கட்டிய உடைவாளை உருவித் தம் முடையீ மாதேவியினது புஷ்பமெடுத்த கையைத் துணித்தார். அது கண்டு, தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். இவ்வரிய திருத்தொண்டைச் செய்த கழற்சிங்கநாயனார் நெடுங்காலஞ் சைவநெறி தழைத்தோங்க அரசியற்றிக்கொண்டிருந்து, பரம சிவனுடைய திருவடிநீழலை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

இடங்கழிநாயனார் புராணம்.

சோணாட்டிலே, கொடும்பாளூரிலே குறுநிலமன்னர் குலத்திலே, கனகசபையின் முகட்டைக் கொங்கிற்செம்பொன் னால் வேய்ந்த ஆதித்தன்குடியிலே, இடங்கழிநாயனரென்ப வர் ஒருவர் இருந்தார். அவர் சைவநெறியும் வைதிகநெறியும் தழைக்க, சிவாலயங்களெங்கும் நித்திய நைமித்திகங்கள் சிவா கம விதிப்படி நடக்க, அரசியற்றுங் காலத்திலே; சிவனடியார் களைத் திருவமுதுசெய்விக்கும் ஓரடியவர் ஒருநாள் திருவ முது செய்வித்தற்குப் பொருள் எங்கும் அகப்படாமையால் மனந்தளர்ந்து, மாகேசுரபூசைமேல்வைத்த அத்தியந்த ஆசை யினால் விழுங்கப்பட்டமையால் செயற்பாலது இது என்பது தெரியாமல், அவ்விடங்கழிநாயனருடைய பண்டாரத்திலே நெற்கூட்டு நிரைகள் நெருங்கிய கொட்டகாரத்தில் அர்த்த ராத்திரியிலே புகுந்து முகந்து எடுத்தார். காவலாளர்கள் அதைக்கண்டு, அவரைப் பிடித்து, இடங்கழிநாயனருக்கு முன் கொண்டுவந்தார்கள். இடங்கழிநாயனர் அவ்வடியவ ரைப் பார்த்து, ''நீர் ஏன் நம்முடைய நெற்பண்டாரத்தைக் கவர்ந்தீர்'' என்று வினவ; அவ்வடியவர் ''நான் சிவனடியார் களைத் திருவமுது செய்வித்தற்குப் பொருள் இன்மையால் இங்ஙனஞ்செய்தேன்'' என்றார். இடங்கழிநாயனர் அது கேட்டு மிக இரங்கி, ''எனக்கு இவரன்றே பண்டாரம்'' என்று சொல்லி, ''சிவனடியார்களெல்லாரும் நெற்பண்டா

ரத்தைமாத்திரமன்றி மற்றை நிதிப்பண்டாரங்களையும் எடுத்துக்கொள்க'' என்று எங்கும் பறையறைவித்தார். பின்னும் நெடுங்காலம் திருநீற்றின் நெறி தழைக்கும்படி தண்ணளியோடு அரசியற்றிக்கொண்டிருந்து,சிவபதத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

செருத்துணைநாயனர் புராணம்.

சோழமண்டலத்திலே, மருகலூட்டிலே, தஞ்சாவூரிலே, வேளாளர்குலத்திலே சைவசிரோமணியாகிய செருத்துணைநாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் திருவாரூரை அடைந்து, காலந்தோறும் வன்மீகநாதரை வணங்கித் திருத்தொண்டுகள் செய்துகொண்டிருந்தார். இருக்குநாளிலே, அங்கே சுவாமிதரிசனஞ் செய்யவந்த கழற்சிங்கநாயனருடைய மாதேவி பூமாலை கட்டும் மண்டபத்தின் பக்கத்திலே விழுந்துகிடந்த ஒரு பூவை எடுத்து மோந்ததைக் கண்டு, அம்மண்டபத்தில் பூவை எடுத்து மோந்தாள் என்று நினைத்து, கத்தியினாலே அவளுடைய மூக்கை அரிந்தார். பின்னும் நெடுங்காலந் திருத்தொண்டின் வழி நின்று சிவபதத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

புகழ்த்துணைநாயனர் புராணம்.

செருவிலிபுத்தூரிலே, ஆதிசைவர்குலத்திலே, புகழ்த்துணைநாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவாகமவிதிப்படி பரமசிவனை அருச்சனைசெய்து வருங்காலத்திலே, பஞ்சம் உண்டாயினமைபால் பசி மிகப் பெற்றும், ''அருச்சனையை விடுவேனல்லேன்'' என்று, அல்லும் பகலும் அருச்சிப்பார். ஒருநாள் திருமஞ்சனமாட்டும்பொழுது, மிகுந்த பசிநோயினால் கைசோர்ந்து கலசந் திருமுடிமேல் விழ, தாந் திருவடியிலே விழுந்து அயர்ந்து, திருவருளினாலே நித்திரை

அடைந்தார். அப்பொழுது பரமசிவன் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, பஞ்சம் நீங்கும் வரைக்கும் உனக்குத் தினந்தோறும் இங்கே ஒவ்வொரு காசு வைப்போம்'' என்று அருளிச்செய்தார். புகழ்த்துணைநாயனார் விழித்து எழுந்து, பீடத்தின்கீழே ஒரு காசு இருக்கக் கண்டு, அதனைக் கைக்கொண்டு வாழ்ந்தார். அந்நாளிலே போல எந்நாளிலும் அப்படியே ஒவ்வொருகாசு பெற்று, பஞ்சநீங்கியபின்னும் நெடுங்காலம் மெய்யடிமைத்தொழில் செய்து, பரமசிவனது திருவடிநீழலை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

கோட்புலிநாயனார் புராணம்.

சோழநாட்டிலே, நாட்டியத்தான்குடியிலே, வேளாளர் குலத்திலே, சிவபத்தியிற்சிறந்த கோட்புலிநாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் அரசனிடத்திலே சேனாபதித்தொழில் பூண்டு, அதனாலே தமக்குக் கிடைக்கும் வேதனத்தைக் கொண்டு சிவாலயங்களுக்குத் திருவமுதின்பொருட்டு நெல்லு வாங்கிக் கட்டுதலாகிய திருப்பணியை நெடுங்காலஞ் செய்துவந்தார்.

இப்படி யொழுகுநாளிலே, அரசனது ஏவலினால் போர்முனையிற் செல்லவேண்டி, சுவாமிக்குத் திருவமுதின்பொருட்டுத் தாந் திரும்பிவரும் வரைக்கும் வேண்டும் நெல்லைக் கட்டி, தம்முடைய சுற்றத்தார்களெல்லாருக்குந் தனித் தனியே அதில் எடுத்துச் செலவழியாதிருக்கும்படி ஆணையிட்டுக்கொண்டு, போருக்குப் போயினர். சிலநாளிலே பஞ்சம் வந்தமையால், அந்தச் சுற்றத்தார்கள் ''நாங்கள் உணவின்றி இறப்பதினுஞ் சுவாமிக்குத் திருவமுதின் பொருட்டுக் கட்டப்பட்ட இந்நெல்லைக் கொண்டாயினும் பிழைத்து, பின் கொடுத்துவிடுவோம்'' என்று, நெல்லைக் கூடு குலைத்து எடுத்துச் செலவழித்தார்கள். கோட்புலிநாயனர் அரசனுடைய பகைஞரைப் போர்முனையிலே வென்று அவனிடத்திலே நிதிக்குவை பெற்றுக்கொண்டு, தம்முடைய ஊரை அடைந்து,

படும் கௌபீனமும் பத்தியிலே சிறிதுங் குறைவில்லாத அமர்நீதிநாயனருடைய அடிமைத்திறமும் பெருமையில் ஒத்திருந்தபடியால், துலாக்கோலின் இரண்டு தட்டுக்களும் ஒத்து நின்றன. அவ்வற்புதத்தைக் கண்டவர்களெல்லாரும் அமர்நீதிநாயனரை வணங்கி ஸ்தோத்திரஞ் செய்தார்கள். தேவர்கள் ஆகாயத்தினின்றும் கற்பகவிருக்ஷங்களின் புஷ்பங்களை மழைபோலப் பொழிந்தார்கள். திருக்கைலாசபதி தாங்கொண்டுவந்த பிரமசாரி வடிவத்தை ஒழித்து; ஆகாயத்திலே பார்வதிதேவியாரோடு இடபாரூடராய்த் தோன்றி, தம்மைத் தரிசித்து அந்தத் தராசுத்தட்டிலேதானே நின்றுகொண்டு ஸ்தோத்திரஞ்செய்கின்ற அமர்நீதிநாயனர் அவர் மனைவியார் புத்திரர் என்னு மூவர்மேலும் திருவருளைக் கஞ்செய்து, "நீங்கள் மூவிரும் நம்முடைய அருளாற் பெற்று, நம்முடைய சந்நிதானத்திலே நம்மை வணங்கிக்கொண்டிருங்கள்" என்று அருளிச்செய்து, மறைந்தருளினார். அமர்நீதிநாயனரும், அவர் மனைவியாரும், புத்திரரும், அக்கடவுளுடைய திருவருளினால் அந்தத் தராசுதானே தேவவிமானமாகி மேலே செல்ல, அவரோடு சிவலோகத்தை அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைவாழந்தணர்சருக்க மூற்றுப்பெற்றது.

பத்தாவது

பத்தராய்ப்பணிவார்சருக்கம்.

பத்தராய்ப்பணிவார் புராணம்.

சிவனடியார்களைக் கண்டால் அவர்களுடைய சாதியை விசாரியாமல் அவர்களைச் சிவபிரானெனப் பாவித்து நமஸ்கரித்து, குதுகுதுத்துக் கொண்டாடி மனமகிழ்ந்து அத்தியந்த ஆசையுடன் பசுவுக்குப் பின் கன்று அணைதல்போல அணைந்து, அவர்களுடன் பேசுங்காலத்து அவர்களைப் பேசும் பூச்சியவசனமும் தங்களைப் பேசும் நைச்சியவசனமுந் தப்புமோ என்னுங் கூச்சத்துடனே பேசி, அவர்களுக்கு வேண்டுங் கருமமே தங்களுக்கு வேண்டுங் கருமமாகச்செய்தலும், சிவபெருமானிடமிகுந்த அன்பினோடு எவ்விடத்தும் யாவர்களும் விதிப்படி அருச்சித்தலைக் கண்டால் மனமகிழ்தலும், சிவபெருமானையும் அவருடைய அடியார்களையும் தெவிட்டாத விருப்பத்தோடு சைவாகமவிதிப்படி அருச்சித்தலும், தங்கள் உடம்பினாலே செய்யும் புண்ணியங்களெல்லாவற்றையும் சிவபெருமானது திருவடிக்கே கொடுத்தலும், சிவசரித்திரங்களையே அன்பினோடு கேட்டலும், சிவபெருமானையே வணங்கி மனநெக்குநெக்குருகிச் சரீரநடுக்குற்று உரோமப்புளகம் உண்டாகமதகினிற் புறப்படுஞ் சலம்போல ஆனந்தபாஷ்பம் பொழியநாத்தழும்பப் பரவசமாதலும், நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் உண்டாலும் துயின்றாலும் விழித்தாலும் சிவபெருமானை ஒருபோதும் மறவாதிருத்தலும், சிவவேடந்தரித்துத் திருத்தொண்டர்போல் நடித்து அதனைச் சிவனஞ்செய்யாமையும், ஆகிய இவ்வெட்டினையும் உடையவர்களே பத்தராய்ப்பணிவாரென்று சொல்லப்படுவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

பரமனையேபாடுவார் புராணம்.

சம்ஸ்கிருதம் தமிழ் என்னும் பாடைகளைக் கற்று வல்லவர்களாகி, சனன மரணப்பட்டு உழல்கின்ற பசுக்களாகிய பிரம

விட்டுணு முதலிய தேவர்களையும் மனிதர்களையும் மதித்து அவர்களுக்குக் கர்மானுகூலமாகக் கிடைத்த அநித்தியமும் துக்கமுமாகிய வாழ்வை மெய்யெனக்கருதி அவர்களைப்போடி வாஞ்ஞை வீஞ்ஞளாகப் போக்காது, பதியாகிய சிவபெருமானது மகிமையை வேத சிவாகமபுராணவழியால் உள்ளபடி அறிந்து அவருடைய திருவடிகளை அடைந்து, மனங்கசிந்துருக உரோமஞ்சிலிர்ப்ப ஆனந்தவருவி சொரிய அவரையே மெய்யன்போடு பாடி, "நாம் சுவதந்திரராகிய பரமசிவனுக்கே ஆளாயினும். பரதந்திரராகிய மற்றுள்ளோர்களில் ஒருவருக்கும் குடியல்லேம். அவர்களெல்லாருக்கும் மேலானும்" என்று இறுமாப்பு அடைந்து திரிகின்றவர்களை பரமனையே பாடுவார் என்று சொல்லப்படுவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார்புராணம்.

உச்சுவாசம் நிச்சுவாசம் இரண்டையும் அடக்கி, சுழுமுனைமார்க்கத்திலே பிராணவாயுவை நிறுத்தி, விஷயங்களின் வழி மனசைப் போகவொட்டாமல் திருப்பி, ஒரு குறிப்பிலே நிறுத்தி, மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்கினையென்னும் ஆறுதாரங்களின் அந்தர்மாகிருகாக்கிரமத்தை அறிந்து, அவ்வவ்வாதாரங்களின் அதிதேவதைகளைத் தியானித்து, அவ்வாறுதாரங்களினும் அசபாசத்தி சிவான்மிகையாய் நிற்கும் முறைமையைப் பார்த்து, மூலாதாரந்தொடங்கி விநாயகர் முதலாகிய தேவதைகளைப் பொருந்தி அபிமுகம் பண்ணிக்கொண்டு ஆறுதாரத்துக்கும் மேலாகிய பிரமரந்திரமளவும் அசபையுடன் சென்றணைந்து, அந்தப் பிரமரந்திரத்திலே அதோமுகமாய்ச் சகஸ்ரதளமாய் இருக்கிற தாமரை முகையைச் சோதிசோதிபதோச்சாரணத்தாலே உதிக்குஞ் சிவார்க்கனுலே அலரச்செய்து, அந்தத் தாமரைப்பூவின் கேசராக்கிரத்திலே உள்ள சந்திரமண்டலத்தை ஆகுஞ்சனஞ்செய்தலினுலே மூலாக்கினியை அக்கினி பீசாக்கர உச்சாரணத்தினுலே எழுப்பி, நாடி சக்கரத்தைப் பேதித்து, அவ்வக்கினியினுலே சந்திரமண்டலத்தை இளகப்

பண்ணி, அந்த அமிர்தத்தைச் சர்வநாடிவழியாகநிரப்பி, அவ்விடத்தில் உண்டாகிய சுகோதயத்தில் அந்தமயமான ஞானமிர்தாவத்தையை அடைந்துநின்று, சோமசூரியாக்கினிப் பிரகாசாதிகளாகிய பிரத்தியேகப்பிரகாசங்களெல்லாஞ் சூரியோதயத்திலே நக்ஷத்திராதிப்பிரகாசங்கள் அடங்கினாற்போலத் தன்னிடத்தடங்கச் சர்வதோமுகமாய் ஸ்வயப்பிரகாசமாய் இருக்கின்ற பூரணப்பிரகாசத்தைப் பாவிக்கின்றவர்களே சித்தத்தைச் சிவன்பாலே வைத்தாரென்று சொல்லப்படுவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்ப்பிறந்தார் புராணம்.

பூர்வஜன்மத்திலே செய்த புண்ணியத்தினாலே திருவாரூரென்னுஞ் சிவஸ்தலத்திலே சைவமரபினராய்ப் பிறந்தவர்கள் பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் என்னும் நான்கு வருணத்தாராயினும், சங்கரசாதியாராயினும், பரமசிவனுடைய திருவருளே அடைதலால், சிவகணநாதர்களாய் இருப்பர்கள். திருவாரூர்ப்பிறந்தாரெல்லாருஞ் சிவகணநாதர்கள் என்று சிவபெருமானே நமிநந்தியடிகளுக்கு அருளிச்செய்தனர். அந்நாயனாரும் அவர்களெல்லாருஞ் சிவகணநாதவடிவினராய்த் தோன்றக் கண்டனர்.

திருச்சிற்றம்பலம்.

முப்பொழுதுந்திருமேனிதீண்டுவார் புராணம்.

சிருட்டிகாலத்திலே அநாதிசைவராகிய சதாசிவமூர்த்தியுடைய சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம் என்னும் பஞ்சவத்திரத்தினின்றுந் தோன்றிய கௌசிகர், காசிபர், பாரத்துவாசர், கௌதமர், அகத்தியர் என்னும் பஞ்சரிஷிகோத்திரத்திலே ஜனித்த சிவப்பிராமணர்கள் ஆதிசைவரென்று சொல்லப்படுவார்கள். அவர்களுள்ளே சமயதீக்ஷை விசேஷதீக்ஷை நிருவாணதீக்ஷை ஆசாரியாபிஷேகங்களைப் பெற்றவர்களே சர்வாதிகாரிகளென்றும்,

உத்தமோத்தமசிவாசாரியர்களென்றும், சிவாகமங்கள் செப்பும், பரார்த்தப்பிரதிட்டை பரார்த்தபூசைகள் செய்தற்கு அவர்களே உரியவர்கள். மற்றையர்கள் உரியர்களல்லர். அதனல் அவர்களே சிவாகம விற்பன்னர்களாகிக் கிருதகிருத்தியர்களாய் மூப்பொழுதினுஞ் சிவலிங்கத்தை அருச்சிப்பார்கள். ஆதலால் அவர்களே மூப்பொழுதுந் திருமேனிதீண்டுவாரென்று சொல்லப்படுவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

முழுநீறுபூசியமுனிவர் புராணம்.

உற்பத்தியினுலே கற்பம் அநுகற்பம் உபகற்பம் என மூவகைப்படும் விபூதியையாயினும், நித்தியாக்கினியில் எடுத்த விபூதியையாயினும், சிவபெருமான் முன்னும் அக்கினிமுன்னும் குருமுன்னும் அசுத்தநிலத்தும் வழிநடக்கும்போதும் பூசாது, உத்தூளனம் திரிபுண்டரம் பிறைவடிவம் முக்கோணம் வட்டமாகச் சிவாகமவிதிப்படி அன்பினேடு பூசுகின்றவர்கள் முழுநீறுபூசிய முனிவரென்று சொல்லப்படுவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

அப்பாலுமடிச்சார்ந்தார் புராணம்.

சேரசோழபாண்டியர் என்னும் மூவேந்தருக்கும் உரிய தமிழ்நாட்டுக்கு அப்புறத்திலே சிவபெருமானுடைய திருவடிகளை அடைந்தவர்களும், சுந்தரமூர்த்திநாயனருடைய திருத்தொண்டத்தொகையிலே சொல்லப்பட்ட திருத்தொண்டர்களுடைய காலத்துக்கு முன்னும் பின்னும் சிவபெருமானுடைய திருவடிகளை அடைந்தவர்களும், அப்பாலுமடிச்சார்ந்தாரென்று சொல்லப்படுவார்கள்.

திருச்சிற்றம்பலம்.

பத்தராய்ப்பணிவார்களுக்க முற்றுப்பெற்றது.

பதினைராவது

மன்னியசீர்ச்சருக்கம்.

பூசலார்நாயனர் புராணம்.

தொண்டைமண்டலத்திலே, திருநின்றவூரிலே, பிராமணகுலத்திலே, பூசலார்நாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவனடியார்களுக்கு வேண்டுவனவற்றை எப்படியுந் தேடிக்கொடுத்து, பரமசிவனுக்கு ஓராலயங் கட்டுதற்கு விரும்பி, எங்கும் வருந்திப் பொருள்தேடி, அற்பமுங் கிடையாமையால் நைந்து, "இதற்கு யாது செய்வேன்" என்று ஆலோசித்து, மனோபாவனையிலே ஆலயங் கட்டத்துணிந்து, மனசிலே அதற்கு வேண்டுந் திரவியங்களையும் உபகரணங்களையும் சிற்பரையுந்தேடி, சுபதினத்திலே அடிநிலைபாரித்து, இரவிலும் நித்திரையின்றி, நெடுநாட்கூடக் கோயில் கட்டிமுடித்து, பிரதிட்டை செய்தற்கு உரிய சுபதினத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். அது நிற்க.

காடவராஜாவானவர் காஞ்சிபுரத்திலே ஒரு சிவாலயங் கட்டுவித்தார். அதிலே பிரதிட்டை செய்ய நிச்சயித்த சுபதினத்துக்கு முதற்றினத்திலே பரமசிவன் பூசலார்நாயனருடைய அன்பை விளக்கும்பொருட்டு அவ்வரசருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "நின்றவூரில் இருக்கின்ற பூசலென்பவன் நமக்கு ஒரு கோயில் கட்டியிருக்கின்றான். அதிலே நாளைக்கு நாம் போவோம். உன் கோயிலில் பிரதிட்டையை நாளை ஒழிந்து பின் கொள்வாய்" என்று அருளிச்செய்து மறைந்தருளினர். காடவராஜா விழித்து எழுந்து, அந்தப் பூசலார்நாயனரை வணங்குதற்கு விரும்பி, திருநின்றவூரை அடைந்து அங்குவந்தார் சிலரை நோக்கி, "பூசலார்நாயனர் கட்டிய திருக்கோயில் எவ்விடத்தது" என்று வினவ; அவர்கள் "அவர்

இங்கே கோயில் கட்டிற்றிலர்'' என்றார்கள். உடனே காடவ ராஜா அவ்வூர்ப்பிராமணர்களை அழைப்பித்து, ''பூசலார் நாயனர் என்பவர் யாவர்'' என்று வினவ; அவர்களெல்லாரும் ''அவர் பிராமணர் இவ்வூரார் என்று சொல்லி, அவரை அழைத்தற்குப் புறப்பட்டார்கள். அப்பொழுது காடவராஜா அவரை அழைக்கவொட்டாமல், தாமே அவரிடத்திற்சென்று அவரை வணங்கி, ''சுவாமீ, நீர் ஒரு சிவாலயங்கட்டியிருக்கின்றீர் என்றும், பிரதிட்டை செய்யும் நாள் இன்று என்றும், சிவபெருமானால் அறிந்து, உம்மைத் தரிசித்து வணங்குதற்கு வந்தேன். அவ்வாலயம் யாது'' என்று விண்ணப்பஞ்செய்ய; பூசலார்நாயனார் மருண்டு நோக்கி, ''சிவபெருமான் என்னை ஒரு பொருளாகக்கொண்டு அருளிச்செய்தது நான் திரவியம் இல்லாமையால் மனோபாவனையினாலே கட்டிய கோயிலையே'' என்று நினைந்து, நிகழ்ந்ததை எடுத்துச் சொன்னார். காடவ ராஜா அதைக்கேட்டு வியந்து, அவரைச் சாஷ்டாங்கமாகநமஸ் கரித்துத் தோத்திரஞ்செய்து, அநுமதி பெற்றுக்கொண்டு, தமது ஊருக்குத் திரும்பிவிட்டார். பூசலார்நாயனார் தாம் மன சினாலே கட்டிய திருக்கோயிலிலே சுபமுகூர்த்தத்திலே பரமசி வனைப் பிரதிட்டைசெய்து, நெடுங்காலம் பூசைசெய்துகொண் டிருந்து, சிவபதத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

மங்கையர்க்கரசியார் புராணம்.

மதுரையில் இருந்த நெடுமாறநாயனாருக்கு மனைவியார் சோழராஜாவுடைய புத்திரியாராகிய மங்கையர்க்கரசியார். அவர் சமயகுரவராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரால் திருப்பதிகத்திலே சிறப்பித்துப் பாடப்பட்டவர். அந்தப் பர மாசாரியருடைய திருவருளினாலே நெடுங்காலம் தம்முடைய நாயகருக்குச் சைவவழித்துணையாகி, பாண்டிநாடெங்கும் சைவத்திருநெறியைப் பரிபாலனஞ்செய்துகொண்டிருந்து, அந்நாயகரோடு சிவபதத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

நேசநாயனார் புராணம்

காம்பிலிநகரத்திலே, சாலியர் குலத்துக்குத் தலைவராகிய நேசநாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் தம்முடைய மனத்தின் செய்கையைப் பரமசிவனுடைய திருவடிக்கு ஆக்கி, வாக்கின்செய்கையை ஸ்ரீபஞ்சாக்ஷரத்துக்கு ஆக்கி, கையின் செய்கையைச் சிவனடியார்களுக்கு ஆக்குவாராகி, வஸ்திரமுங் கீளுங் கோவணமும் நெய்து, தம்மிடத்தில் வருஞ் சிவனடியார்களுக்கு இடையறாது கொடுத்து, நாடோறும் அவர்களை வணங்கித் துதித்துக்கொண்டிருந்து, சிவபதத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

கோச்செங்கட்சோழநாயனார் புராணம்.

சோழமண்டலத்திலே, சந்திரதீர்த்தத்தின் பக்கத்திலே ஒருவனம் இருந்தது. அதிலே நின்ற ஒரு வெண்ணாவன்மரத்தின் கீழே ஒரு சிவலிங்கம் வெளிப்படலும், ஒரு வெள்ளானை அதைக் கண்டு, நாடோறும் புழைக்கையினாலே தீர்த்தம் முகந்து ஆட்டி, புஷ்பங்களைச் சாத்தி, வழிபட்டு ஒழுகுவதாயிற்று. அதனால் அந்த ஸ்தலத்துக்குத் திருவானைக்கா என்று பெயராயிற்று. அறிவினையுடைய ஒரு சிலந்தி, அந்தச் சிவலிங்கத்தின்மேலே சருகு உதிராவண்ணம், தன் வாய்நூலினாலே மேற்கட்டி செய்தது. சிவலிங்கத்தை வணங்க வந்த வெள்ளானை அதைக் கண்டு, அது அநுசிதம் என்று நினைந்து, அதைச் சிதைக்க; சிலந்தி மீளவும் மேற்கட்டிசெய்தது. வெள்ளானை மற்றநாளும் அதைச் சிதைத்தது. அது கண்டு சிலந்தி "எம்பெருமான்மேலே சருகு உதிராவண்ணம் நான் வருந்திச்செய்த மேற்கட்டியை இது அழிக்கலாமா" என்று கோபித்து, வெள்ளானையினது புழைக்கையினுள்ளே புகுந்து கடிக்க; வெள்ளானை கையை நிலத்திலே மோதிக்கொண்டு விழுந்து இறந்தது. கையை மோதியபோது, அதனுள்ளே புகுந்த சிலந்தியும் இறந்தது. வெள்ளானை சிவகணநாதராகித் திருக்கைலாசமலையை அடைந்து, சிவபெருமானைச் சேவித்துக்கொண்டிருந்தது.

சுபதேவனென்னுஞ் சோழமகாராஜன் தன் மனைவியாகிய கமலவதியுடன் சிதம்பரத்தை அடைந்து, சபாநாயகரை உபாசனை செய்துகொண்டிருக்குநாளிலே; கமலவதி பூர்த்திரபாக்கியம் இன்மையால் வரம் வேண்ட; அந்தச் சிலந்தி சபாநாயகரது திருவருளினாலே அவளுடைய வயிற்றிலே மகவாய் வந்து அடைந்தது. கமலவதிக்குப் பிரசவகாலம் அடுத்தபொழுது, சோதிடர்கள் "இந்தப் பிள்ளை ஒருநாழிகை கழித்துப் பிறக்குமாகில், முப்புவனங்களையும் அரசாளும்" என்றார்கள். கமலவதி "என்பிள்ளை இப்போது பிறவாமல் ஒருநாழிகைகழித்துப் பிறக்கும்படி என்னைத் தலை கீழாகக் கட்டித் தூக்குங்கள்" என்று சொல்ல; அங்குள்ளவர்கள் அங்ஙனங் கட்டித் தூக்கி, சோதிடர்கள் குறித்த காலம் அணையக் கட்டவிழ்த்துவிட்டார்கள். கமலவதி பிள்ளையைப் பெற்று, அது பிறக்குங்காலந் தாழ்த்தமையாற் சிவந்த கண்களையுடைத்தாய் இருத்தல்கண்டு, "என்கோச்செங்கண்ணனே" என்று சொல்லிக்கொண்டு, உடனே இறந்துவிட்டாள். சுபதேவன் அப்புதல்வரை வளர்த்து முடி சூட்டி, அரசை அவரிடத்தில் ஒப்பித்து, தான் தவஞ்செய்து சிவலோகத்தை அடைந்தான்.

கோச்செங்கட்சோழநாயனர் பரமசிவனது திருவருளினாலே பூர்வசன்மவுணர்ச்சியோடு பிறந்து, சைவத்திருநெறி தழைக்க அரசியற்றுவாராகி, சிவாலயங்கள் பலவற்றைக் கட்டுவிக்கத் தொடங்கினர். திருவானைக்காவிலே தாம் முன்னே அருள் பெற்றதை அறிந்து, அங்கே வெண்ணைவலுடன் பரமசிவனுக்குத் திருக்கோயில் கட்டுவித்தார். மந்திரிகளை ஏவி, சோழநாட்டில் வெவ்வேறிடங்களிலே சிவாலயங்கள் கட்டுவித்து, அவ்வாலயங்களோறும் பூசைமுதலியவற்றிற்கு நிபந்தங்கள் அமைத்தார். பின்பு சிதம்பரஸ்தலத்தை அடைந்து, சபாநாயகரைத் தரிசித்து வணங்கி, தில்லைவாழந்தணர்களுக்குத் திருமாளிகைகள் கட்டுவித்து, பின்னும் பல திருத்தொண்டுகளைச் செய்துகொண்டிருந்து, சபாநாயகருடைய திருவடிநீழலை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் புராணம்.

நடுநாட்டிலே, திருவெருக்கத்தம்புலியூரிலே, திருநீலகண்டயாழ்ப்பாணநாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் பரமசிவனுடைய திருப்புகழை யாழில் இட்டுப் பாடுவாராகி, சோழநாட்டில் உள்ள சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு சென்று, பாண்டிநாட்டிற்சேர்ந்து, மதுரையில் இருக்கின்ற சொக்கநாதசுவாமியினுடைய திருக்கோயில்வாயிலை அடைந்து நின்று, பரமசிவன் மேலனவாகிய பாணிகளை யாழில் இட்டு வாசித்தார். சொக்கநாதசுவாமி அதனைத் திருவுள்ளத்துக்கொண்டு, அன்றிரவிலே தம்முடைய அடியார்களெல்லாருக்கும் சொப்பனத்திலே தோன்றி ஆஞ்ஞாபிக்க; அவர்கள் மற்றநாள் திருநீலகண்டப்பெரும்பாணரைச் சுவாமிக்குத் திருமுன்பே கொண்டுவந்தார்கள். திருநீலகண்டப்பெரும்பாணர் அதுசுவாமியுடைய ஆஞ்ஞை என்று தெளிந்து, திருமுன்பே இருந்து யாழ்வாசித்தார். அப்பொழுது "இந்தப்பாணர் அன்பிலோடு பாடுகின்ற யாழ் பூமியிலே உள்ள சீதம் தாக்கினால் வீக்கு அழியும் ஆதலால் இவருக்குப் பொற்பலகை இடுங்கள்" என்று ஆகாயத்தினின்றும் ஓரசரீரிவாக்கு எழுந்தது. அதைக்கேட்ட அடியார்கள் பொற்பலகையை இட; திருநீலகண்டப்பெரும்பாணர் அதில் ஏறி, யாழ் வாசித்தார்.

பின்பு பலதலங்களையும் வணங்கிக்கொண்டு, திருவாரூரிற் சேர்ந்து, திருக்கோயில்வாயிலை அடைந்து, யாழ் வாசிக்க; பரமசிவன் வடதிசையிலே ஒரு திருவாயில் வகுக்க; திருநீலகண்டப்பெரும்பாணர் அதன்வழியாகப் புகுந்து, திருமூலட்டானப்பெருமானுகிய வன்மீகநாதரை வணங்கினர். நெடுநாளாயினபின், அவ்விடத்தினின்றும் நீங்கி, சீர்காழியை அடைந்து, சமயகுரவராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனருடைய திருவடிகளை வழிபட்டு, அவரை ஒருபொழுதும் பிரியாது அவர் பாடியருளுந் திருப்பதிகங்களை யாழில் இட்டு வாசிக்கும் பெரும்பேற்றைப்பெற்று, திருநல்லூர்ப்பெருமணத்திலே அவருடனே சிவபதத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

சடையநாயனார் புராணம்.

திருநாவலூரிலே, ஆதிசைவகுலத்திலே, சடையநாயனரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் உலகமெல்லாம் மெய்ஞ்ஞானவொளியைப் பெற்று உய்யும்படி சமயகுரவராகிய சுந்தரமூர்த்திநாயனரைப் புத்திரராகப் பெற்ற பெரும் பேற்றை உடையவர்.

திருச்சிற்றம்பலம்.

இசைஞானியார் புராணம்.

சடையநாயனருடைய மனைவியார் இசைஞானியாரென்பவர். எம்பிரான்றோழராகிய சுந்தரமூர்த்திநாயனரைப் பெற்றருளிய அவருடைய பெரும்புகழைச் சிறியேனுடைய புன்மொழியினலே புகழமுடியுமோ! முடியாது.

திருச்சிற்றம்பலம்.

மன்னியசீர்ச்சருக்க முற்றுப்பெற்றது.

என்று மின்பம் பெருகு மியல்பினி
லொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்.

திருத்தொண்டர்புராண மூற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

அருண்மொழித்தேவரடியிணைசரணம்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
உடி	கஉ	காதர்	காதர்
உஉ	உஎ	திருபதார்த்தல்	திரிபதார்த்தல்
உக	ச	வாழ்த்தணர்	வாழ்த்தணர்
கo	உo	கேட்கப்	கேட்டுப்
கஉ	கச	அறிந்தில்லே	அறிந்திலே
உஉ	கச	மூத்தி	மூர்த்தி
கச	உஎ	குறித்திப்	குறித்துப்
கஉச	ச	வேளை	வேளா
உஎச	கச	அறிந்து	அரிந்து